சாம்பசிவம் பிள்ளை

துப்பறியும் சம்பவங்கள்

முதல் பாகம்

வசித்தவர்கள்

மகாமகம். துரைஸ்வாமி ஐயங்கார், எ. கே. எ. வி.

துப்பறிதுறையும், துப்பறிதலாளர்

அவர்களால்

ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட

நான்கு பிரிவுகள் கொண்ட நூல்.

மூன்றாம் பதிப்பு.

மயிலை மாதர் சபையின்

சித்திரப் பதிப்பு.

ரூ. 3—4—0

SARNGADHARA SAMHITA

A MANUAL OF AYURVEDIC SYSTEM OF PRACTICAL MEDICINE

Translated from Sanskrit Original into Tamil

BY

VAIDYARATNA
PANDIT M. DURAISWAMI AIYANGAR, A.K.A.C.
AYURVEDABHUSHANA. AYURVEDACHARYA
AYURVEDIC MEDICAL PRACTITIONER

WITH

A GLOSSARY

"Sarngadhara Dipika"

4th Revised Edition.

Publishers:

THE VAIDYA KALANIDHI OFFICE
VEPERY, :: MADRAS.
1950.

சார்ங்கதர ஸம்ஹிதை

சார்ங்கதரன் இயற்றிய பிராசீன ஸம்ஸ்க்ருத வைத்திய நூலின்
மொழிபெயர்ப்பு.

அஷ்டாங்கஹ்ருதயம், மாதவநிதானம், இரஸரத்தினஸமுச்சயம் முதலிய
ஸம்ஸ்க்ருத வைத்திய நூல்களையும், காதம்பரி, மேகஸந்தேசம்,
ஹம்ஸ ஸந்தேசம், சாகுந்தளம் முதலிய ஸம்ஸ்க்ருத காவ்ய நாடகங்களையும்
மொழிபெயர்த்தவரும், ஜீவாநந்தநம் என்கின்ற ஸம்ஸ்க்ருத
வைத்திய நாடகத்தை அதற்கு சந்த்ரி வியாக்யானம் இயற்றி
பரிஷ்காரம்செய்து பதிப்பித்தவரும், ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை,
தந்த்ராஸாரஸங்க்ரஹம் முதலிய ஸம்ஸ்க்ருதக் க்ரந்தங்களைத்
திருத்திப் பதிப்பித்தவருமான

வைத்திய ரத்னம்
பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.
ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டது.

மேற்படியார் இயற்றிய
சார்ங்கதர தீபிகை
என்னும் டிப்பணி, விஷய அகராதி முதலியவை அடங்கியது.

சீர்திருத்தப் பெற்ற 4-ம் பதிப்பு.

"வைத்திய கலாநிதி" ஆபீஸ்.
வேப்பேரி :: சென்னை.
1950.

நூலியற்றிய முறை

1. ஸம்ஸ்க்ருத மூலக் கிரந்தத்திலுள்ள விஷயங்கள் யாவற்றையும் ஆதியோடந்தமாக லிபாகம் செய்ததும், பிறகு "கடவுள் வாழ்த்து," "நூலின் தன்மை," "ரோக பரீக்ஷையும் சிகிர்ஸையும்" என்ற வாறு மூற்றிலும் விஷயங்களுக்கொல்லாம் தலையங்கங்கள் இட்டதும் தமிழில் மொழி பெயர்த்த ஆசிரியரே.

2. சாஸ்த்ரீய பிரமாணங்களை அனுஸரித்துத் தமிழ் மொழி பெயர்ப் பாசிரியரே காரிகை தீபிகை என்கிற டிப்பணியையும் எழுதிச் சேர்த் திருக்கிறார்.

3. ஒவ்வொரு விஷயத்தின் இறுதியிலும் போடப்பட்டுள்ள இலக்கங் கள், ஸம்ஸ்கிருத மூலக் கிரந்தத்தின் அந்தந்த அத்தியாயத்தினுடைய அவ் வவ்விஷயங்களின் மொழிபெயர்ப்புக்கு ஆதாரமான ச்லோகங்களின் எண் ணிக்கைகளை முறையே குறிப்பிடுகின்றன.

4. பூர்வகண்டம் 7-ம் அத்தியாயம் ரோக நிதானங்களைக் குறிப்பது. அதில் மூலத்தில் ஸகல வியாதிகளுடைய பெயர்களும், அவற்றின் உட் பிரிவிலுள்ள பெயர்களும் மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளன. அவ்வியாதி களைப் பற்றிய மிகச் சுருக்கமான விவரணங்கள் டிப்பணியில் மொழி பெயர்ப்பாசிரியரால் கூறப்பட்டுள்ளன.

5. கிரந்தத்தின் இறுதியிலுள்ள ப்ராசீந-நவீந-மாநங்கள் என்கிற விஷயமும், முதல் இரண்டாவது அனுபந்தங்களும் (ரோகங்களும் சிகித் ஸைகளும், முக்கியமான ஔஷத குண விசேஷங்களும்), விஷய அகாதி யும் தமிழில் மொழி பெயர்த்த ஆசிரியராலேயே இயற்றி இணைக்கப் பெற்றுள்ளன.

6. நூலின் மற்ற அம்சம் மூலக் கிரந்தத்தின் மொழி பெயர்ப்பாகும். மேலே குறிக்கப்பட்டவாறு மொழி பெயர்ப்பாசிரியரால் அமைக்கப் பட் டுள்ள அம்சங்கள் இந் நூலைப் படிப்பவருக்குப் பல வகையிலும் ஸௌகரிய மளிக்கும் எனக் கருதுகிறோம்.

பொருளடக்கம்.

		பக்கம்.
பூர்வ கண்டம்.		1—62
1-வது அத்தியாயம்,	பரிபாஷை ...	1
2-வது ,,	ஔஷதம முதலியவற்றின் விவரம் ...	7
3-வது ,,	நாடீ பரீக்ஷை முதலியது ...	10
4-வது ,,	தீபந பாசநாதி குணங்கள் ...	12
5-வது ,,	சரீரம்-கலை முதலியவற்றின் விவரம்	14
6-வது ,,	உணவு ஜீர்ணமாகும் வகை முதலியது	22
7-வது ,,	ரோக நிதானம் ...	26
மத்யம கண்டம்.		63—152
1-வது அத்தியாயம்,	ஸ்வரஸ கல்பனை ...	63
2-வது ,,	க்வாத ,, ...	67
3-வது ,,	பாண்ட ,, ...	82
4-வது ,,	ஹிம ,, ...	83
5-வது ,,	கல்க ,, ...	84
6-வது ,,	சூர்ண ,, ...	86
7-வது ,,	குளிகா ,, ...	96
8-வது ,,	லேஹ்ய ,, ...	102
9-வது ,,	ஸ்நேஹ ,, ...	105
10-வது ,,	ஸந்தாந விதி ...	118
11-வது ,,	தாதுசுத்தி முறை ...	123
12-வது ,,	இரஸங்கள் ...	133
உத்தர கண்டம்.		153—220
1-வது அத்தியாயம்,	ஸ்நேஹபான விதி ...	153
2-வது ,,	ஸ்வேத ,, ...	156
3-வது ,,	வமந ,, ...	160
4-வது ,,	விரேசந ,, ...	163
5-வது ,,	வஸ்தி ,, ...	268
6-வது ,,	நிரூஹவஸ்தி ,, ...	174
7-வது ,,	உத்தர வஸ்தி ,, ...	178
8-வது ,,	நஸ்ய ,, ...	179
9-வது ,,	தூமபான ,, ...	185
10-வது ,,	கண்டூஷாதி ,, ...	188
11-வது ,,	லேபநாதி ,, ...	190
12-வது ,,	இரக்தமோக்ஷண ...	202
13-வது ,,	நேத்ர சிகித்ஸை ...	206
அனுபந்தம் 1.—ரோகங்களும் சிகித்ஸைகளும் ...		221
அனுபந்தம் 2.—முக்கியமான ஔஷத வகுப்புகளும் குண விசேஷங்களும்		
விஷய அகாரதி ...		...
ப்ராசீந-நவீந மாநங்கள் ...		...

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	23	$53\frac{1}{2}$	$35\frac{1}{2}$.
12	21	யாளுபனும்	யாளுபவனும்
16	40	தடிப்பதாக	தடிப்பாக
,,	,,	"ஸ்த்நூலா"	"ஸ்த்தூலா"
21	43	விருந்ததாறே	விருந்தவாறே
22	10	திற் இடை	திற்கும் இடை
,,	11	வவையாக	கலையாக
40	19	கபாலி	காபாலி
,,	22	விசார்ச்சிகா	விசர்ச்சிகா
43	16	மூலம்	மூகம்
50	22	சேஷம்	சோஷம்
72	23	க்வாதம்	க்வாதம் 2-வது
73	17	க்வாதம்	க்வாதம் 2-வது
77	10	பில்வாவதி	பில்வாதி
78	1	கோட	சாகோட
96	29,36	குனிகை	குளிகை
143	13	114	141
156	5	ஸ்திக்த்த	ஸ்நிக்த்த
171	34	வஸதி	வஸ்தி
194	15	வித்தார்த்தகாதி	2-வது வித்தார்த்தகாதி
196	13	மீஜபூர	பீஜபூர
206	38	"ஸ்நேஹம்"	"ஸ்நேஹநகம்"

முகவுரை.

(முதற் பதிப்பு.)

சார்ங்கதர ஸம்ஹிதையானது வடமொழியில் வைத்திய விஷயங்களைப் பொதுவாக விவரிக்கும் சரகஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை, அஷ்டாங்க ஸங்கிரஹம், அஷ்டாங்க ஹ்ருதயம் முதலியவைகளைப் போன்ற தோர் ஆயுர்வேத நூலாகும். பிராசீன வடமொழி வைத்திய நூல்களிலுள்ள பரிபாஷைகளும், பலவாறான பிணிகளின் பிரிவுகளும், ஔஷத முறைகளும், சிகித்ஸா க்ரமங்களும் கூடுமான வரையில் இதன் ஆசிரியரால் அங்கோபாங்கங்களோடு சுருக்கி விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இது மற்றக் கிரந்தங்களைவிட சுருக்கமானதும், வைத்தியர்களுக்குத் தொழில் முறையில் அதிக உபயோகமுள்ளதுமான வைத்திய நூலாகும். மிகப் பிரவித்திபெற்ற ஆயுர்வேத நூல்களுள் சார்ங்கதர ஸம்ஹிதையே வைத்தியம் படிக்க ஆரம்பிப்பவருக்கும் முதலிற் பலவகையிலும் உபயோகப்படக்கூடியதாம். தமிழில் எழுதிய இந் நூலைப்பற்றி சில விஷயங்களை விவரிப்பதற்கு முன், ஆயுர்வேதம் என்னும் விஷயத்தை இதனடியிற் சிறிது குறிப்பிடுவது அவசியமெனக் கருதுகின்றேன்; ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்த இப்புஸ்தகத்தைப் படிப்பவருக்கு ஆயுர்வேதம் இவ்விவ்விஷயங்கள் அடங்கியதென்றும், வடமொழியில் அபூர்வமான இவ்வளவு வைத்திய நூல்கள் இருக்கின்றன வெனவும் ஒருவாறு அறிய விருப்பமிருக்குமென்பதில் ஐயமில்லை.

அகில ஜீவராசிகளுடைய நன்மைக்காக ஆயுர்வேத சாஸ்திரம் ஆதியில் பிரம்மதேவனால் உணரப்பட்டதென்றும், அப்பால் அது இலக்ஷம் ச்லோகங்கள் அடங்கிய மிகப் பெரியதோர் கிரந்தமாக அவரால் இயற்றப்பட்டு தக்ஷப்பிரஜாபதிக்கு உபதேசிக்கப்பட்டதென்றும் ஸுச்ருத ஸம்ஹிதை முதலிய பண்டைக்காலத்திய வைத்திய நூல்கள் கூறுகின்றன. தக்ஷரிடமிருந்து அச்வினீதேவதைகளும், அவர்களிடமிருந்து இந்திரனும் அக்கலையைக் கற்றறிந்தனராம். பிறகு விஸ்தாரமான அச்சாஸ்திரத்தை, மஹேந்திரன், இவ்வுலகத்தோரால் எளிதில் உணரக்கூடிய வாறு எட்டுப் பகுதிகளாகப் பிரித்து,[1] பரத்வாஜர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்து, இவ்வுலகத்திலும் பரவச்செய்ததாக ஆயுர்வேத நூல்களில் சரித்திரத்திற்கு ஸம்பந்தப்பட்ட பாகங்கள் அறிவிக்கின்றன. மேலும் ஆயுர்வேதம் அனேத்தையும் சாரீரம் என்றும், நிதானம் என்றும், ஔஷதி விபாகம் என்றும், ஔஷத கல்பம் என்றும், சிகித்ஸாவிதி யென்றும் வேறுவித பல வகுப்புகளாகப் பிரித்து, இவ்வுலகில் இதைப் படிப்பவருடைய புத்திக்கு அதிக ஆயாஸமுண்டாகாதபடி அமைத்ததும் அவ்விந்திரனேயாம். அல்லாமலும் இச் சாஸ்திரமனேத்தையும் ஒரு மனிதன் குறுகிய ஒரு புருஷாயுஸ்வில் கற்

1. காயசிகித்ஸை, பாலசிகித்ஸை, கிரஹசிகித்ஸை, ஊர்த்வாங்க சிகித்ஸை, சல்யசிகித்ஸை, விஷசிகித்ஸை, இரஸாயநசிகித்ஸை, வாஜீகரணம் என்னும் இவை எண் வகையான ஆயுர்வேதாங்கங்கள் எனப்படும்.

றவனைப்போல் மிகக் கடினமெனக் கருதி, மிக விரிவான சிகித்ஸா முறையை இந்திரன் காயசிகித்ஸை யெனவும் [1] சல்ய சிகித்ஸை யெனவும் [2] இரண்டு பெரிய பாகங்களாகப் பகுத்து, அவற்றுள் முதலாவதை பரத்வாஜர் முதலியவர்களது பரம்பரையைக் கொண்டும், இரண்டாவதை தன்வந்தரியின் பரம்பரையைக்கொண்டும் இவ்வுலகிற் பிரசாரம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இவ்விரு விஷயங்களுக்கே சரீரம் முதலிய மற்ற எல்லா அம்சங்களும் அங்கங்களாய் அமைந்துள்ளன.

பிரம்மருஷியான பரத்வாஜர் மற்றைந்திரனிடம் காயசிகித்ஸையைப் பிரதானமாகக்கொண்ட சாஸ்திரத்தைக் கற்று, மேதினியில் அத்ரிபுத்ரான புநர்வஸு என்பவருக்கு அதை ஆதியோடந்தமாய் உபதேசித்ததாக இதிஹாஸம் கூறுகிறது. அப்புநர்வஸுவும் பாஞ்சால தேசத்திரத்தில் காம்பில்ய ராஜதானியில் பிரஹ்மவித்துக்களாக இருந்த அக்னிவேசர், பேளர், ஜதூகர்ணர், பராசரர், ஹாரீதர், க்ஷீரபாணி என்னும் ஆறு சிஷ்யர்களுக்கு அக்காயசிகித்ஸாப் பிரதானமான வைத்திய சாஸ்திரத்தைக் கற்பித்தார். க்ஷத்ரிய வம்சத்திற் பிறந்து தன்வந்தரியென்றும் திவோதாஸர் என்றும் பிரஸித்தி பெற்ற இராஜருஷி, காசிமாநகரில் ஸுச்ருதர், ஔபதேநவர், ஔரப்ரர், பௌஷ்கலாவதர், கரவீர்யர், கோபுரரக்ஷிதர் முதலிய சிஷ்யர்களுக்குச் சல்யசிகித்ஸையை ஆதாரமாகக்கொண்ட ஆயுர்வேதத்தை உபதேசித்தார். இவ்விருவிதமான ஸம்பிரதாயங்களுள், முதலிற் கூறப்பட்டது பாதீவாஜஸம்பிரதாயம் அல்லது ஆத்ரேயஸம்பிரதாயம் என்றும், மற்றொன்று தன்வந்தரி ஸம்பிரதாயம் அல்லது ஸுச்ருதஸம்பிரதாயம் என்றும் மொழியப்படுவது வழக்கம்.

அப்பால் இவ்விரு ஸம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் தனித்தனியே அநேகம் கிரந்தங்களை இயற்றினர். "காயசிகித்ஸாப் பிரதானமான வைத்திய நூல் முதன் முதல் அக்னிவேச முனிவரால் இயற்றப்பட்டது. எனினும் ஆத்ரேயரால் உபதேசிக்கப்பெற்ற விஷயங்களை அது மீறியதல்ல. அதன் பிறகு பேளர் முதலியவர்களும் தனித்தனியே காயசிகித்ஸாப் பிரதானமான நூல்களியற்றி தமது மாணாக்கர்களுக்கும் உபதேசித்தனர்" என்று சரக ஸம்ஹிதையில் கூறப்படுகிறது. அவ்விதமே "ஔபதேநவ தந்திரம், ஔரப்ர தந்திரம், ஸுச்ருத தந்திரம், புஷ்கலாவத தந்திரம் என்னும் கிரந்தங்கள் பிற்காலத்தில் எற்பட்ட சல்யசிகித்ஸாப் பிரதானமான மற்றெல்லா நூல்களுக்கும் மூலகாரணங்களாயின" என்றும் கூறப்படுகிறது.

ஆனால் தன்வந்தரி ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த ஸுச்ருத-ஔபதேநவ-ஔரப்ர-பௌஷ்கலாவத-போஜாதிகளால் [3] இயற்றப்பட்ட சல்யதந்திரங்களும், ஆத்ரேய ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த அக்னிவேச-ஜதூகர்ண-ஹாரீத-

1. ஔஷதப் பிரயோகங்களால் செய்யப்படும் சிகித்ஸை காயசிகித்ஸையாகும்.

2. யந்திரசஸ்திரங்களைக்கொண்டு செய்யப்படுவது சல்ய சிகித்ஸையாகும்.

3. போஜன் முதலானவர் சல்யதந்திரம் இயற்றியிருக்கின்றனர் என்பது டல்ஹணாசாரியர் இயற்றிய நிபந்த ஸங்கிரஹம் என்னும் ஸுச்ருத வியாக்யானம் முதலியவற்றால் பிரஸித்தம்.

க்ஷீரபாண்யாதிகளால் இயற்றப்பட்ட காயசிகித்ஸையை முக்கியமாயுடைய கிரந்தங்களும் இப்பொழுது லுப்தமாய் விட்டனவென்றே தெரிகிறது. அவற்றுள் பல நூல்கள் அநேக வைத்தியக் கிரந்தங்களுக்கு வியாக்கியானங்கள் இயற்றிய சக்ரபாணி, விஜயரக்ஷிதன், சிவதாஸன், டல்ஹணர் முதலானோரின் காலத்திலும் இருந்துவந்ததாக அவர்களால் ஆங்காங்கு எடுத்து உதஹரிக்கப்பட்ட அநேகம் பாடங்களைக்கொண்டு அதுமானிக்க வேண்டியிருக்கின்றது.

காயசிகித்ஸையையும், சல்யசிகித்ஸையையும் பிரதானமாகப் பெற்ற ஆயுர்வேத சாஸ்திரம் காலக்கிரமத்தில் உலகில் வேரூன்றி நன்முகச் செழித்து வருங்கால், எண் வகையான வைத்தியாங்கங்களில் ஒவ்வொன்றிலும் அநேகம் ஆசிரியர்கள் தனித் தனியே மிகவும் பிரவீணர்களென்று பிரஸித்திபெற்று வரலாயினர். அவர்களுள் சல்யசிகித்ஸையில் ஸுச்ருதர் முதலிய குரு பரம்பரையைச் சேர்ந்தவர்களும், கழுத்திற்கு மேற்பட்ட ஊர்த்வாங்கங்களிலுண்டாகும் கோளாறுகளுக் கேற்ற சாலாக்ய சிகித்ஸையில் ஜனகர், நிமி, காங்காயநர் முதலியவர்களும், காயசிகித்ஸையில் அக்னிவேசர், பேளர் முதலியவர்களது பரம்பரையில் வந்த சரகர் முதலியவர்களும், பூதவித்யையில் அதர்வருஷி முதலானவர்களும், கௌமாரப்ருத்யம் என்னும் பாலசிகித்ஸையில் விருத்த ஜீவகன் முதலானோரும், அகதமென்னும் விஷசிகித்ஸையில் காச்யபர் முதலியவர்களும் மேலான அறிவும் அநுபவமுள்ளவர்களாயிருந்து வந்தனராம்.

இவ்வாறு ஆயுர்வேதத்திலடங்கிய எட்டு அங்கங்கள் முதலில் அநேக விதச் சீர்பாடுகளையும் பெற்று அபிவிருத்தியடைந்து வருகையில், அப்பால் ஔஷதப் பிரயோகங்களில் சில புதிய முறைகளும் அறிவிற் சிறப்புற்ற ஆர்ய வைத்தியர்களுடைய அநுபவத்தில் வந்தொடங்கின. அவைகளே இரஸௌஷத முறைகள் அல்லது இரஸாயநங்கள் என மொழியப் படுகின்றன. ஔஷதிகள் முதலிய ஸ்தாவர ஜங்கம ஜீவராசிகளைச் சேர்ந்த சரக்குகளே, மனிதர் முதலியவர்களுடைய தாதுக்களில் ஸம்பவிக்கும் கோளாறுகளை அகற்றுவதற்கு அபாயம் நேரிடாவண்ணம் உபயோகிக்கக் கூடியவை யென்று கருதி, முற்காலத்திய வைத்தியர்கள் ஆதியில் ஆயுர்வேதக் கிரந்தங்களில் ஔஷதிவகைகளே அல்லது மூலிகைகளைக் கொண்டே பெரும்பாலும் ஔஷத முறைகளைக் கூறலாயினர். பிறகு காலம் செல்லச் செல்ல, வைத்தியசாஸ்திரவல்லோரால் பதார்த்த குணங்களும் பலவித உபாயங்களைக் கொண்டு பரிசீலிக்கப்பட்டு வரவே, ஜீவராசிகளைச் சேராத அயம் முதலிய லோஹவர்க்கங்களும், கந்தகம் முதலிய தாதுவர்க்கங்களும், பாரதம் என்னும் பாதரஸம் முதலிய இரஸவர்க்கங்களும் தகுந்தவாறு பக்குவம் செய்யப்படுமானால், அவற்றையும் ஔஷதமாகப் பிராணிகளின் தேஹத்தில் பிணிகளைப் போக்கப் பிரயோகிக்கலாமென்று நிச்சயித்தார்கள். மேலும் மூலிகை முதலியவற்றுல் பக்குவம் செய்யப்படும் ஔஷதங்கள் அளவில் அதிகமாய் உபயோகிக்கவேண்டியிருப்பதுடன், அநேக விதத்தில் அருசியைக் கொடுத்து, வியாதிகளை நீடித்த காலத்தில் போக்கக் கூடியவையாயிருக்க, அதற்கு நேர் மாறுக, இரஸௌஷதங்கள் அளவில் மிகச் சொற்பமாகப் பிரயோகிக்கத் தகுந்தவையாகவும், ஆகவே உட்கொள்வதற்கு அருவருப்பைத் தராதனவாகவும், சீக்கிரத்தில் ஆரோக்கிய மளிக்கவல்ல வீர்யமுள்ளனவாயும் இருப்பதால், மூலிகைகளாலான ஔஷதங்களைக் காட்டிலும் இர

வேண்டியவைகள் மேன்மை பொருந்தியவையெனக் கருதப்பட்டன. ஆயுர் வேதத்தைப் படித்தறிந்தவர் இதே பொருளைக் கூறுவதான ஒரு பத்திய முறை படிப்படுண்டு; அதாவது:—"ஸ்வல்பமாத்ரோபயோகித்வாத் அரு சோபாயங்கத:, க்ஷிப்ரமாரோக்யதாயித்வாத் பேஷஜேப்யோ திகேத மண:" என்பதேயாம். ஆதிமன், நித்யநாதன், சந்திரஸேனன், லோம சேவன், கோவிந்தன், நாகார் ஜுனன் முதலியவர்கள் அவ்வித இரஸாயநக் கிரந்தங்களே இயற்றி, அவ்விஷயமான அறிவுக்கு அதிகாரிகளாகவும் கருதப் பட்டிருந்தனர். இந்நூலில் இரஸ சாஸ்திரமும் சேர்ந்திருப்பது விசேஷம்.

வாஜிகரணம் என்னும் தந்திரம் ஒருவாறு காமகலையிற் பற்றுள்ள போகிகளுக்கே ஏற்றதென்று கருதி, முற்காலத்திய வைத்தியர் கள் அதைத் தகுந்தவாறு கௌரவிக்காமல், அதில் விசேஷப் பிரவ ருத்தி யில்லாதவரா யிருந்தனரென்றும், இவ்வுலகத்து இன்பங்களிலேயே விசேஷ விருப்பமுள்ளவரா யிருந்த யவநர்கள் அரசாண்ட காலத்தில் தமக்கு விருப்பமான இச் சாஸ்திரங் கற்றவரை அதிகமாக ஆதரித்து வந்தனர் என்றும், அதுமுதல் வாஜீகரணம் என்னும் விஷயத்தையே பிரதானமாகப் பெற்றதும், சிறிது காய சிகித்ஸையின் விஷயமடங்கியது மான திப்பி வைத்தியம் அல்லது யூனனி வைத்தியமென்று ஒருவாறு திரிபடைந்த யவந வைத்தியம் என்பதோர் பிரத்தியோசமான முறையும் ஏற்பட்டதென்றும் முகம்மதியர் அரசாண்ட காலத்து சரித்திரங்களைக் கொண்டு சிலர் அநுமானிக்கின்றனர். ஆகவே யவநவைத்தியர்கள் வாஜீகரணம் எனப்படும் வ்ருஷ்ய சிகித்ஸாப் பிரதானமான அங்கத்தில் ஒருவாறு புகழ் பெறலாயினர் எனக் கூறப்படுகிறது.

ஆயுர்வேதத்திலடங்கிய அகில அங்கங்களையும் அதனதன் பரிபா ஷைகளுடன் வெகு சுருக்கமாகத் தெளிவாய் அறிவதற்கு எவரேனும் விருப்பங்கொண்டால், அவர்களுக்கு இச்சார்ங்கதர ஸம்ஹிதை ஒன்றே அதுகூலமானதென்பதற்கு ஐயமில்லை. சார்ங்கதரன் சாஸ்த்ரீயமான விஷ யங்களே விவரிப்பதில் பிராசீன முனிவர் முதலான மஹான்கள் மொழிந் துள்ள தத்துவமார்க்கங்களினின்றும் சிறிதும் தவறினவரல்லர். என்றாலும் சரகர்-வ்ருத்தர்-வாக்படர் முதலான ஆதிகாலத்திய ஆசாரியர்களைப் போல் ஸூத்ர-சாரீர-நிதாந-சிகித்ஸாதி ஸ்த்தானங்கள் என்னும் பிரிவு களே இவர் இந்த ஸம்ஹிதையில் ஏற்படுத்தாமல், (1) பரிபாஷைகள், சரீரதத்வம், நாடீபரீக்ஷை, ரோகநிதானம் என்னும் முதலில் அறியவேண்டிய விஷயங்களே ஒரு பாகமாகச் சேர்த்து அதைப் பூர்வகண்டம் என்றும், (2) இதற்கு அடுத்தாற்போல் அறியவேண்டிய ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், லேஹ்யம், ஸ்நேஹம் முதலிய பற்பல வகையான ஔஷத முறைகளைப் பக்குவம் செய்யு முறைகளுடையவும் அவற்றின் உபயோ கங்களுடையவும் விஷயங்களே மற்றொரு பகுதியாகச் செய்து அதை மத்யமகண்டம் என்றும், (3) அவ்வித ஔஷதங்களைக்கொண்டு பூர்வ கண்டத்தில் குறிப்பிட்ட ரோகங்களுக்குச் செய்யவேண்டிய ஸ்நேஹநம், ஸ்வேத மோக்ஷணம் முதலான சிகித்ஸாக்ரமங்களைச் சேர்த்து உத்தர கண்டம் என்றும் ஆக மூன்று கண்டங்களே யமைத்தார். இவ்வாறு கண்டமுறையில் நூலமைத்து விஷய விபாகம் செய்து, படிப்பவருக்குக் கண்டமுறையில் ஞாபகசக்தியை இழக்கிறார்த்தை இயற்றியதும் ஒரு பெரிய

சீர்திருத்தமாகும். ஆகலே இப்புஸ்தகமானது கற்றறிந்த வைத்தியர் களுக்கு ஔஷத நிர்மாணங்களிலும், சிகித்ஸாக்ரமங்களிலும் உடனுக் குடன் உதவுமாறு சிறந்ததோர் கைச்சுவடியா யமைந்துள்ளது. இதில் சரீரதத்துவம் மிகச் சொற்பமாகவே கூறப்பட்டிருப்பதற்கும், வியாதிகளின் லக்ஷணைகளே யெல்லாம் முற்றிலும் மொழிந்து அவற்றின் பூர்வரூப-ரூப-ஸம்ப்ராப்தி-உபசயங்களின் தன்மைகளேச் சிறிதும் விவரிக் காமல் விட்டதற்கும் காரணம், வைத்தியர்கள் சிகித்ஸை செய்யும்பொழுது அத்தருணத்திற்கு அவசியமான ஔஷதாதிகளிலும், சிகித்ஸா க்ரமங்களி லும் மட்டும் கலக்கமுறுவண்ணம் வெகு சுருக்கமாக விஷயங்களே யுபதே சிக்க இந்நூல் உபயோகப்படவேண்டுமென்று இந்நூலாசிரியர் கருதினார் என்பதேயாம்.

சார்ங்கதரஸம்ஹிதை சரகஸுச்ருதாதி ஸம்ஹிதைகளுக்கு மிகப் பிற்காலத்தில் ஏற்பட்டது. இதன் ஆசிரியரான சார்ங்கதரன் என்பவர் கி.பி. பதிஞன்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜீவித்திருந்ததாகவும், இவ ருடைய பிதாவின் பெயர் "தாமோதரன்" என்பதாகவும் இதே கவியினால் இயற்றப்பட்டதோர் ஸம்ஸ்கிருதக்கலம்பக நூலான "சார்ங்கதரபத்ததி" என்னும் புஸ்தகத்தின் மூலம் தெரியவருகிறது. இச்சார்ங்கதர பத்ததிக்கு பீடர்ஸன் என்பவர் இயற்றிய முகவுரையிலும் இவ்வண்மை குறிக்கப்பட் டிருக்கின்றது. "ஸாளக்ராம நிகண்டு" என்கிற "ப்ருஹந்நிகண்டு ரத்நா கரம்" என்னும் வைத்திய நூலில் அதன் ஆசிரியரால் மொழியப் பட்டுள்ள விஷயங்களினிருந்தும் இச்சார்ங்கதரன், "விச்வப்ரகாசம்" என்கிற லம்ஸ்கிருத நிகண்டுவின் ஆசிரியர் ஜீவித்திருந்த காலத்திற்கு முன்னமே இருந்தாரென்று தெரியவருகிறது. விஜயநகரராஜ்யத்தை ஆண்டுவந்த வீரபுக்கன் ஆஸ்தானத்தில் இருந்த ஸாயணமாதவாசாரியருக்கு ஸமகாலத்தில் இச் சார்ங்கதரனும் அவ்விடங்களில் ஸம்பந்தம் பெற்றிருந்த தாகவும் கூறப்படுகிறது. பலவித ஜ்வரங்களுக்கு சிகித்ஸாக்ரமங்களே விவ ரிப்பதற்கென்று முன்னூறு ச்லோகங்கள் கொண்டதாய் இயற்றப்பட்ட "தீபிகா" என்னும் வைத்திய நூலுக்கும் சார்ங்கதரன் என்பவர் ஆசிரியர் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அச் சார்ங்கதரன், நாகவம்சத்திற் பிறந்த தேவராஜன் என்னும் அந்தணருடைய புத்திரரென்றும், வைகுண் டாச்ரமமென்னும் யதியினுடைய சிஷ்யரென்றும், கூர்ஜர தேசத்தில் வஸித்தவரென்றும் அந்நூலிலுள்ள சில பத்தியங்களால் அறியப்படுவ தால், நிஸ்சயமாக இந்த ஸம்ஹிதை இயற்றிய சார்ங்கதரனினும் வேறுபட்டவராவர்.

அக்ஸ்தியர், தேரையர், புலிப்பாணி முதலியவர்களும், மற்றும் வித்த முனிவர்கள் எனக் கூறப்படும் சில இரஸசாஸ்திரவல்லோரும் தமிழில் இயற்றியுள்ள வெவ்வேறு வைத்திய நூல்கள்கூட ஆயுர்வேத நூல்கள் என்று வழங்கப்படுவதை நாம் நன்கு அறிவோம். ஆயுர்வேதம் ருக்வேதத்திற்கும் அதர்வவேதத்திற்கும் உபவேதமென்னும் விஷயம் இச்சாஸ்திரத்திற் பிரவருத்தியுள்ள அனைவரும் அறிந்ததேயாம். வேதம் அநாதியென்று நாம் நம்பியிருக்கின்றோம்; அவ்விதமின்றி மேலுட்டார் சொல்லும் விதமாய் வேதமும் பண்டைக்காலத்தில் ஒருவரால் இயற்றப் பட்டதேயென்று சிலர் நினைத்தபோதிலும், உலகில் இப்பொழுதுள்ள வித்யைகளெல்லாம் ஏற்படுவதற்கு அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

ஸகல சாஸ்திரக் களஞ்சியமான வேதமென்னும் இந்துக்களின் மஹோ வித்யை புவியிற் பிரசாரத்திலிருந்ததென்று எவரும் அங்கீகரித்த உண்மை. அக்காலம் முதல் தேவர்களும், முனிவர்களும், வித்தர்களும், மற்றும் ஆசார்யர்களென்று ஆதரிக்கப்பட்டு வந்த மஹான்களும் வேதங்களிலடங் கிய வைத்திய ஸம்பந்தமான அம்சங்களைக் கிரஹித்து ஸம்ஹிதைகளையும் ஸங்கிரஹக் கிரந்தங்களையும் நூற்றுக் கணக்கா யியற்றலாயினர். அவற்றுள் பிரஜாபதி ஸம்ஹிதை, அச்வினீஸம்ஹிதை, வலபித்ஸம்ஹிதை, பாஸ்கரஸம் ஹிதை, வைத்யஸர்வஸ்வம், வியாதிவிநிர்ணயம், ஜீவதானம், ஸுவர்ணஸந்தேஹபஞ்ஜநம், த்வைதநிர்ணய தந்திரம் என்னும் இக் கிரந்தங்கள் முறையே பிரம்மதேவன், இந்திரன், அச்வினீ தேவதைகள், சூரியன், நகுலன், ஸஹதேவன், யமதர்ம ராஜன், சியவனமுனி, ஜனகர், அகஸ்தியர் இவர்களால் இயற்றப்பட்டவை யென்றும், இந்தக் கிரந்தங் களே உலகில் ஸகல சிகித்ஸா சாஸ்திரங்களுக்கும் ஆதாரங்களாய் ஏற் பட்டவை யென்றும் பிரஹ்மவைவர்த்த புராணத்தில் பிரஹ்மகண்டத்தின் பதினேழாவது அத்தியாயத்தில் பதினேழு பத்தியங்களில் கிரூபிக்கப்பட்டிருக் கிறது. ஆகவே முற்காலத்தில் கிரேக்கர்களும், அரேபியர்களும், யூனானி யெனப்படும் யவனர்களும், சீன தேசத்தவர்களும் வைத்திய சாஸ்திரத்திற் பரிசயம் பெற்றதற்கும், இது ஸம்பந்தமான நூல்கள் இயற்றியதற்கும் ஆயுர்வேதமே ஆதாரமா யிருந்ததென்பதற்கு அத்தாட்சிகளுண்டு. இவ் வாறு உலகில் ஸகல தேசத்து வைத்திய முறைகளுக்கும் ஸம்ஸ்கிருதத்தி லுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களே ஆதாரமானதுபோல், தமிழில் இயற்றி யுள்ள வைத்திய நூல்களுக்கும் இவையே மூலமாயேற்பட்டன வென்பதிலும் ஸந்தேஹமில்லை. தேசாந்தரங்களில் அல்லது த்வீபாந்தரங்களிலிருந்தவர்கள், பரதகண்டத்திற்கு யாத்திரையாக வந்து, இங்கிருந்து மற்றச் சாஸ்திரங் களைப்போலவே ஆயுர்வேத நூல்களையும் தமது தேசத்திற்குக் கொண்டு போய், தமது பாஷைகளில் மொழி பெயர்த்தும், அவற்றிலிருந்து விஷயங் களைக் கிரஹித்தும் வைத்திய நூல்களை யியற்றினர். ஆனால் ஆயுர்வேதத்தை ஆதாரமாகக்கொண்டு தம் தேசத்திய வைத்திய சாஸ்திரம் எழுதப்பட்ட தாகக் கூறுவதைப் பெருமையாகக் கருதாமல், தமது தேசத்தில் தமது அறிவைக்கொண்டே ஏற்படுத்திய சாஸ்திரமெனக் கூறும்படி அன்னிய நாட்டினர் அவற்றை இயற்றினர். ஆனால் பரதகண்டத்தியவரான நமது தமிழ் நாட்டார் வேதத்திலும் உபவேதமான ஆயுர்வேதத்திலும் அளவற்ற ஆதராதிசய முடையவர்களா யிருப்பது இயல்பே யாதலின், தமிழில் பிரத்தியேகமாக இயற்றப்பட்ட வைத்திய நூல்களையும் ஆயுர்வேத நூல்கள் என்றே வழங்குவது தமக்கும் தமது நூல்களுக்கும் மிகப் பெருமையைக் கருதினர் என்று கூறவேண்டும். மேலும் ஸம்ஸ்கிருதத்தில் ஆயுர்வேதக் கிரந்தங்களை இயற்றிய ஆதி புருஷர்களான அகஸ்தியர், தன்வந்தரி முத லானவர்களே முக்கியமான தமிழ் வைத்திய நூல்களுக்கும் ஆசிரியராயிருந் தனர் என்றும், ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத ஸூத்திரங்களுக்கு வியாக்கியானம் இயற்றிய யோகாநந்தநாதர் என்பவர், தமிழ் வைத்திய முறைப்படி கிரந்தங்கள் இயற்றிய வித்தர்களில் ஒருவர் என்றும் தெரிய வரு கிறது. இவை முதலான ஸம்பந்தங்களைக்கொண்டு தமிழிலுள்ள வைத்தியக் கிரந்தங்களுக்கும் ஆயுர்வேதம் என்னும் பெயர் வழக்கத்திலுண்டு. மேலும் அகஸ்தியர் வைத்திய காவியம், அகஸ்தியர் வைத்தியம், அகஸ்தியர் பரி

பூரணம், போகர் எழுனூறு, யூகமுனி ஆயிரம், உரோமருஷி ஐன்னூறு, புலிப்பாணி ஐன்னூறு முதலிய தமிழ் வைத்தியக் கிரந்தங்களைக் கவ னித்துப் பார்த்தோமாயின், அவற்றில் ஸம்ஸ்கிருத வைத்தியக் கிரந்தங் களில் வழங்கப்படும் பரிபாஷைகளும், விஷய விபாகங்களும் அப்படியே காணப்படுகின்றன. ஆகவே ஆயுர்வேதத்திற்கும் தமிழ் வைத்தியத்திற்கும் பேதமில்லை என்கிறோம். அல்லாமலும் சரீர தத்துவம், பிரஸவ சிகித்ஸை, வஸ்திகர்மம், இரத்தமோக்ஷணவிதி, சஸ்திர சிகித்ஸை, இரஸலோஹ தாது வர்க்கங்களை ஔஷத முறைப்படி பக்குவம் செய்வதற்கான சாஸ்த்ரீய பரிபாஷை கிரமங்கள் முதலிய வைத்திய சாஸ்திரத்திற்குப் பிரதான அங்கங்களான அம்சங்களைக் கூறும் பிராசீனமான தமிழ் வைத்திய நூல்கள் எங்கிருக்கின்றனவோ இதுவரைக்கும் ஒருவராலும் வெளியிட முடியவில்லை.

சரீர தத்துவம், பிரஸவ சிகித்ஸை யென்னும் இவ்விஷயங்களைத் தவிர்த்து மற்ற எல்லா பாகங்களும் சார்ங்கதர ஸம்ஹிதையில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. சரீர தத்துவம் முதலிய ஸகல அங்கங்களும் அடங்கிய வைத்திய நூல்கள் வடமொழியில் அநேகம் உண்டு. அவ்வித மான கிரந்தங்களை ஸம்ஸ்கிருதமறியாத தமிழ் வைத்தியர்களும், தமிழிற் பரிசயமுள்ள ஆங்கில வைத்தியரும் கற்றவரும், ஆயுர்வேதாபிமானிகளும் அறியவேண்டுமெனவும், இவ்வாறு ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தைத் தேசத்திற் பரவச்செய்வது ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் ஒருவாறு செல் வாக்கை யுண்டுபண்ணி, ஆங்கில வைத்தியர்களுடன் இவர்களுக்குத் தொழில்களில் ஒற்றுமையை ஸம்பாதித்து வைக்கவேண்டுமெனவும் கருதி, ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஆயுர்வேத நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க முயன்றேன். அவற்றுள் சார்ங்கதர ஸம்ஹிதையே பெரும் பான்மையான ஆயுர்வேத வைத்திய பரிபாஷைகளடங்கிய சிறிய ஸங்கிர ஹக் கிரந்தம். அன்றியும் லோஹ பாஷாணுதிகள், இரஸங்கள், தாளகம், மன்சிலை முதலிய தாதுவர்க்கங்கள் முதலிய இரஸவர்க்க ஔஷதங்களடங் கிய இரஸ சாஸ்திரமும் இதில் சுருக்கமாகவும் விளங்கவும் விவரிக்கப்பட் டிருக்கிறது. ஆயுர்வேதம் கற்க ஆரம்பிப்பவருக்கும், வைத்தியத்தில் தேர்ச்சி பெற்று சிகித்ஸை செய்துவரும் தொழிலாளிகளுக்கும் இது ஒருமிக்க உதவக்கூடிய சிறந்த நூலாகவும் இருப்பதைக் கண்டு, மொழி பெயர்க்க வேண்டிய வடமொழி வைத்திய நூல்களுள் இதையே முதலில் எழுதி வெளியிடுவது உசிதமென்ற நிச்சயித்து, அங்ஙனம் செய்ய முயன்று, வைத்ய கலாநிதியின் மூலமாக நேயர்களுக்கு இதைச் சிறுகச் சிறுக அளித்துவந்து மூற்றிலும் கடவுளருளால் கடை பிடிக்கலானேன்.

இதில் வடமொழியிலுள்ளபடியே வழங்கவேண்டிய பரிபாஷைகளை யும், மற்றும் ஸம்ஸ்கிருத வைத்தியத்திற் பரிசயமில்லாதவர் அறிவது கடினனெத் தோற்றும் பாகங்களையும் அவ்வப்போது நன்குணரும் பொருட்டு அவ்வவ்விடங்களில் விவரமாக டிப்பணியும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இதிலடங்கிய ஒவ்வொரு விஷயத்தையும் உடனுக்குடன் அவசியமான ஸமயங்களில் எடுத்துப் பார்ப்பதற்கு எளிதாயிருக்குமாறு இறுதியில் தெளி வாக விஷய அகாராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆகவே வட மொழியிலுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையின் மொழிபெயர்ப்பான இப்புஸ்த

கம் தமிழ் நாட்டிலுள்ள ஆயுர்வேத வைத்தியர்களுக்கும், வைத்திய நூல்களைப் படிப்பதிற் பிரியமுள்ள மற்றவருக்கும் கன்குதவுமென்று நம்புகிறேன்.

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
சென்னை.
1915ஆம் செப்டம்பர்மீ 7உ

மே. துரைஸ்வாமி ஐயங்கார்.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

வடமொழியில் ஆதிகாலத்தில் இயற்றிய ஆயுர்வேத நூல்கள் நூற்றுக் கணக்காயுண்டு. அவற்றில் எதுவும் இதுகாறும் தமிழில் மொழிபெயர்க்கப் பட வில்லை. ஆகவே அக்குறையை நீக்குவதற்கு முதன் முதல் இச் சார்ங்க தர ஸம்ஹிதையை நான் மொழி பெயர்த்து முடிக்க முன் வந்தேன். இதன் முதற் பதிப்பு வைத்திய கலாநிதி பத்திரிகையோடு சிறுகச் சிறுக அச்சிட்டு வெளியிடப்பட்டு நான்கு வருஷங்களுக்கு முன் முடிவு பெற்றதென்பது பலருக்கும் தெரிந்த விஷயம். ஸம்ஸ்கிருத ஆயுர்வேத நூல்களிலுள்ள பெரும்பான்மையான சாஸ்த்ரீய விஷயங்களெல்லாம் இச் சார்ங்கதர ஸம் ஹிதையில் சுருக்கி விவரிக்கப்பட்டிருப்பதாலும், விஷய விபாகங்களைச் செய்து ஒழுங்காகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு டிப்பணி முதலியவற் றோடு வெளியிடப்பட்டதாலும், வைத்திய சாஸ்த்ர வல்லோரும் மற்றும் அறிஞர்களும் இக் கிரந்தத்தை மிகவும் மதிப்புடன் ஏற்றுச் சிறப்பிக்கலாயி னர். ஆகவே முதலிற் பதிப்பித்த பிரதிகள் முற்றிலும் செலவழிந்து இங்ங னம் இரண்டாம் பதிப்பும் இப்பொழுது வெளியிட வேண்டியதாயிற்று. மூலிகை முதலியவற்றைக் குறிப்பிடும் சில அபூர்வமான வடமொழிச் சொற் களுக்குப் பொருள் எழுதுவதிலும், மொழி பெயர்ப்பின் முறையிலும், விஷயங்களை விபாகிப்பதிலும் இப்பதிப்பில் மேலான சீர் திருத்தம் செய்ய தற்கு அதிக சிரமமும் ஊக்கமும் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. அட்ட வணையும், "ரோகங்களும் ஔஷதங்களும்" என்கிற தலையங்கத்துடன் கூடிய பாகமும் இப்பதிப்பிற் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. முதற் பதிப் பின் முகவுரையிலேயே இக்கிரந்தத்தின் சிறப்பையும் உபயோகத்தையும் மற்றுமுள்ள வரலாறுகளையும் விளங்க விவரித்திருப்பதால் இனி இங்கு மொழியக்கூடிய விசேஷமேது மிலது.

வேப்பேரி,
8—4—1919.

மே. து.

மூன்றாம் பதிப்பின் குறிப்புரை.

ஆயுர்வேத வைத்திய சாஸ்திரம் கற்க முயல்பவருக்கு முற்றிலும் உபயோகமானதும் அவசியமாயுள்ளதும் இச் சார்ங்கதரஸம்ஹிதை. ஆயுர் வேத சாஸ்திராம்சங்கள் அனைத்தும் ஸாங்கோபாங்கமாகவும் மிக்க ஒழுங் காகவும் சுருக்கமாகவும் விவரிக்கப்பட்குருப்பதால், கற்றுத் தேர்ந்த வைத் தியர்களுக்கும் தொழில் முறையில் இன்றியமையாத் தோழனெனக்கூடி யதும் இச்சம்ஹிதையே. ஆகவே நான் இதை மூன்றாம் முறை இப்பொழுது மீண்டும் பதிப்பிக்க நேர்ந்தது.

எவ்விஷயமும் ஒரு முறைக்குப் பன்முறை பரிசீலனம் செய்யப் பட்டால் பெரிதும் சீர்மை பெறுமென்பது அனைவரும் அறிந்ததத்துவம். இரண்டாம் பதிப்பு வெளியான இவ்வெட்டு வருட காலத்தில் சிற்சில

அம்சங்கள் திருத்தப்படவேண்டியவையாய் தெரியவரவே, அவைகளை இப்பதிப்பில் திருத்தியமைக்க வைகரியம் நேர்ந்தது. மொழி பெயர்ப்பு பாகங்களில் சில சீர்திருத்தம் செய்யப்பட்டிருப்பதோடி, வேறு சில முக்கி யமான உபயோகமுள்ள அம்சங்களும் இப்பதிப்பில் விருத்தி செய்யப்பட்டும் விசேஷமாய் ஒழுங்குபடுத்தப்பட்டுமிருக்கின்றன. அவற்றுள் முதலில் இரண்டு அனுபந்தங்களைக் குறிப்பிடலாம். பிறகு குறிப்பிடக்கூடியவை விருத்தி செய்யப்பட்ட விஷய அகராதி முதலியன.

சார்ங்கதர ஸம்ஹிதையின் மத்யம கண்டத்தில் விவரித்துள்ள ஒவ் வொரு ஔஷதமுறையும், உத்தர கண்டத்தில் விளக்கியுள்ள ஒவ்வொரு சிகித்ஸாமுறையும் பற்பல ரோகங்களில் உபயோகிக்கக் கூடியவையென்று நூலில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வௌஷதங்கள் யாவும், அச்சிகித்ஸா முறைகள் அனைத்தும் எந்தெந்த வியாதிகளுக்கு உபயோகமாகின்றனவோ அவ்வியாதிகள் யாவும் அகராதி முறையில் பருக்கப்பட்டு, அவ்வியாதிக ளின் பெயர்களின் கீழ் அவ்வௌஷதங்களும் சிகித்ஸாமுறைகளும் வகுப்பு வகுப்பாக முதல் அனுபந்தத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. சார்ங்கதர ஸம்ஹிதையின் முதற்பதிப்பில் இவ்விஷயமே சேர்க்கப்படவில்லை. "ரோகங்களும் ஔஷதங்களும்" என்கின்ற பெயருடன் இரண்டாம் பதிப்பில் ஒருவாறு இவ்விஷயம் சேர்க்கப்பட்டது. அப்பதிப்பில் இவ் விஷயம் 18½ பக்கங்களில் அச்சிடப்பட்டது. இந்த மூன்றாவது பதிப்பில் "ரோகங்களும் சிகித்ஸைகளும்" என்கிற முதல் அனுபந்தமாக இது சேர்க்கப்பட்டு, பெரும்பாலும் ஸம்பூர்ணமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் 32 பக்கங்கள் கொண்டது. இதைக் கொண்டே இது எவ் விதம் விருத்தி செய்யப்பட்டிருக்கிறதென்னும் உண்மை விளங்கும்.

இரண்டாம் பதிப்பில் இல்லாத புதிய அம்சம் மற்றொன்று இரண் டாவது அனுபந்தமாக இப்பதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஔஷதங் களுக்குள்ள குணவிசேஷங்களை (Specific actions) அனுஸரித்து, சார்ங்க தரன் கூறியுள்ளபடியே ஔஷத-சிகித்ஸா முறைகளைக் கூறுபாடு செய்து இந்த பாகம் அமைக்கப்பட்டது. இது வைத்தியர்களுக்கும் இனிது உப யோகமாயிருக்கும். மேலும் "பிராசீநவீநமாநங்கள்" முதலிய சில சில் லறை விஷயங்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றொரு முக்கிய மான அம்சம் இதில் இறுதியில் இணைக்கப் பெற்றுள்ள விஷய அகராதி யாம். முதல் இரண்டாம் பதிப்புகளின் விஷய அகராதிக்கும் இப்பதிப்பி லுள்ள விஷய அகராதிக்கும் ஒழுங்கிலும் அளவிலும் மிக வித்தியாஸத் தைக் காணலாம். இப்பதிப்பிலுள்ள இவ்விஷய அகராதியை, வைத்தியர் களும் கற்றறிந்த ஏனையோரும் தனியான ஒரு சிறு "வைத்திய அகராதி" யென்றே கருதலாம்.

மேற் கூறிய சீர்பாடுகளையும் அபிவிருத்திகளையுட் செய்ய நான் எற்றுக் கொண்ட சிரமம் எத்தகையதென்பது இப்பதிப்பை சிரத்தையுடன் உற்று நோக்குபவருக்கு விளங்காமற்போகாது. அவ்வித சிரமங்கள் ஒரு புற மிருக்க, இந்நூலை மீண்டும் அச்சிடுவதற்குக் கைப்பொருளை விசேஷமாகச் செலவு செய்யும் சிரமமோ மிகப் பெரிது. இதில் பிரபுக்களின் தயவையோ, நண்பர்களின் உதவியையோ நாம் சிறிதும் நாடவில்லை. இப்புத்தகத்தைப் படிக்கும் விவேகிகளே நமது எல்லா சிரமத்திற்கும் ஈடுசெய்பவரென்பது எமது துணிபு.

வேப்பேரி,
15—2—1927.

மே. து.

நான்காம் பதிப்பின் குறிப்புரை.

முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இந்த அரிய ஆயுர்வேத நூலைத் தமிழில் முதன் முதல் மொழி பெயர்த்து வெளியிட்டேன். தமிழுலகம் ஒழுங்கான ஓர் ஆயுர்வேத நூலை அப்பொழுதுதான் காண நேர்ந்தது. இச் சார்ங்கதர ஸம்ஹிதை ஆயுர்வேத சாஸ்திரம் கற்பவருக்கும், அவ்வைத்திய முறைப்படி தொழில் புரிபவருக்கும் மிகவும் உபயோகமானதென்கிற உண்மை இது நான்கா முறை வெளிவாவதைக் கொண்டே பலருக்கும் விளங்கும்.

இந்நூலில் அநேகம் சொற்கள் ஸம்ஸ்க்ருத பதங்களாகக் காணப்படும். அவை ஸம்ஸ்க்ருதச் சொற்களாயினும் வைத்திய பரிபாஷைகளேயன்றி வேறல்ல. அவற்றிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அரிது. மேலும் அவ்விதை வைத்திய பரிபாஷை ஸம்பந்தமான சொற்களை வைத்தியர்கள் அறிந்து வழக்கத்திற்குக் கொண்டுவருவதும் விரும்பத்தக்கதெனக் கருதி, அப் பரிபாஷாபதம் முதலியவற்றை அப்படியே தமிழில் குறித்திருக்கிறோம். உதாரணமாய் ஸாத்மியம், வீர்யம், அபுநர்ப்பவம் போன்ற வைத்திய பரிபாஷைகளுக்குத் தமிழில் விளங்க உரை கூறுவது தகுமேயன்றி, ஒவ்வொரு தனிச் சொல் உற்பத்தி செய்வது உசிதமுமல்ல, இயலுமியலாது. லேஹ்யம், தைலம், க்ரிபலை முதலிய ஸம்ஸ்க்ருதச் சொற்களை வெகு தாராளமாகத் தமிழில் வழங்குவதுபோல், ஸாத்மியம் முதலிய மற்றப் பரிபாஷைகளையும் அடிக்கடி வைத்தியர்கள் வழங்கத் தொடங்கினால், அவையும் காலக்கிரமத்தில் தமிழ் வைத்தியர்களுக்கு வெகு ஸாதாரணமான வைத்தியச் சொற்களாகவே ஆய்விடும்.

வைத்திய பரிபாஷை ஸம்பந்தமான மொழிகளுக்கும், வேறு சாஸ்த்ரீய மான விஷயங்களுக்கும் பொருட்களை ஆங்காங்கு அடிப்பணியில் விளக்கி யிருக்கிறோம். இந்நூலில் வழங்கப்பட்டுள்ள சாஸ்த்ரீய விஷயங்கள் அனைத்துக்கும் நூலில் இறுதியில் உள்ள விஷய அகராதியிலுள்ள விஷயங்களை எளிதிற் பார்த்து, அவ்விஷயங்களுக்கு விவரங்களை அந்தந்தப் பக்கத்தில் படித்துத் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாய் யோகம், தூஷீவிஷம், நிரூஹவஸ்தி முதலிய பரிபாஷைகளைப் பற்றி விஷய அகராதியைக்கொண்டு புஸ்தகத்தின் 5-ம் பக்கத்திலும், 61-ம் பக்கத்திலும், 174-ம் பக்கத்திலும் முறையே பொருட்கள் விளக்கப்பட்டிருப்பதைப் படித்துத் தெரிந்துகொள்வது எளிது. இவ்விதமே நூற்றுக் கணக்கான மற்ற விஷயங்களையும் தெரிந்துகொள்க.

சார்ங்கதர ஸம்ஹிதையின் இப்பதிப்பை அச்சிடுவதற்கான செலவில் பெரும்பகுதிக்கு நமது சென்னை அரசாங்கத்தார் பொருள் உதவியதை நான் இங்கு குறிப்பிடவேண்டியது கடமை. இந்திய வைத்திய இலாகாவுக்கு ஆனரரி டைரக்டராயுள்ள டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார் அவர்களுக்கு இச் சார்ங்கதர ஸம்ஹிதையின் பெருமையும் உபயோகமும் நெடு நாட்களாகவே தெரியும். அவர்களுடைய மதிக்கத் தகும் வாக்கே அவ்வாறு அரசாங்கத்தார் இந்நூலுக்கு ஆதரவளிக்கக் காரணமாயிற்று என்பதையும் விருப்பமுடன் குறிப்பிடுகிறேன்.

ஆர்ய விருஹம்
மதராஸ்-7.
5-10-1950.

மே. து.

சார்ங்கதர ஸம்ஹிதை

பூர்வ கண்டம்.

முதல் அத்தியாயம்.

பரிபாஷை.

கடவுள் வாழ்த்து :—இமயமலையில் மாசற்ற சிலையில் ஒளி வீசும் மஹௌஷதியைப்போல் [1] பார்வதியானவள் எவரது திருமனியின் தேஜஸ்வினிடையிலிருக்கவளாய் பிரகாசிக்கின்றனளோ, அப்பரமேச்வரன் உங்களுக்கு எல்லாச் சிறப்பையும் அளித்தருள்வாராக. 1.

நூலின் தன்மை :—பிராசீன முனிவர்களால் பிரயோகிக்கப்பட்டு, வைத்தியர்களின் அனுபவத்தில் பன்முறையும் பயன்தரக்கூடியவென்று அறியப்பெற்ற வைத்திய முறைகளை கன்கு ஆராய்ந்து [2] ஸாரஸ்ரேஷ்டமானதைத் திருப்தியுறச் செய்யுமாறு இந்நூல் இயற்றப்படுகிறது. 2.

நோகளின்கைகளும் சிகித்ஸையும் :—வைத்தியன், நோகிகளுக்குண்டாகும் எல்லாப்பிணிகளையும், காரணம், பூர்வரூபம், ரூபம், ஸம்ப்ராப்தி, உபசயம் [3], மற்றும் அவற்றின் உட்பிரிவுகள் இவைகளால் கன்கு பரீக்ஷித்து [4] ப்ருஹ்மணம், கர்ஷணம் என்கிற இருவித சிகித்ஸா நிரமங்களையும் நிறைந்த ஞானத்த முறைகளைக் கொண்டு நடத்த வேண்டும். 3.

நூலின் உபயோகம்.—அறிவுடையோர், நேயர்களுக்கிருப்பது போல் நிறப்புற்ற ஜந்துகளுக்கும் பல பேதங்களிருப்பதை யுணர்ந்து, ஐயமின்றி அவற்றிற்குத் தேவர்களுக்கு இருப்பதுபோல் பிரபாவங்களையும் ஆராய்ந்தேற்கவேண்டும். இயற்கையானவையும், வெளிக்காரணங்களால் ஏற்படுபவையும், உடலைப் பற்றியவையும், மனதைப்பற்றியவையுமான நானாவித நோகங்களும் பூர்வஜன்ம கர்மங்களையும், வாத பித்த கபங்களென்னும் தோஷங்களையும் காரணமாகக்கொண்டு உற்பத்தி

---

1. சில ஓஷதிகள் இரவில் மின்மினியைப்போல் ஒளியுடன் பிரகாசிக்கும் குணமுடையவை. இது வைத்தியக்கிரந்தமானதால் இதற்கேற்றவாறு மஹௌஷதி உபமானமாகக் கூறப்பட்டது.

2. சரகர், வாக்படர் முதலிய ஆசிரியர்களுடைய கிரந்தங்களிலிருந்து திரட்டியெடுக்கப்பட்டு, பிற்காலத்திய பிரபல வைத்தியர்களால் உபயோகமுள்ளனவென்று அறிந்துகொள்ளப்பட்டவையுமான விஷயங்களே இந்நூலில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன என்று கருத்து.

3. காரணம் (வியாதி ஹேது), பூர்வரூபம் (ரோகத்தின் முற்குறிகள்), ரூபம் (ரோகத்தின் இயற்கைக் குறிகள்), ஸம்ப்ராப்தி (ரோகம் சரீரத்திற் பரவும் வகை), உபசயம் (ரோகம் உபசரிக்கியாகும் வகை) இந்த ஐந்துக்கும் பஞ்சலக்ஷணங்கள் என்று பெயர்.

4. ப்ருஹ்மணம்—புஷ்டிதரும் சிகிச்சை. கர்ஷணம்—வமன விரேசாதி ரூபமான உடலை இளைக்கச் செய்யும் சிகிச்சை.

யாகின்றன; [1] அவ்வித வியாதிகளே விலக்கப் பொல்லா வினைப்பயன்களைப் போக்குபவையும், நற்பயன் விளைவிப்பவையுமான சிறந்த வைத்திய முறைகளைப் பிரயோகிக்க வேண்டும். சாஸ்திரங்களில் சிறந்தவையென்று குறிக்கப்பட்ட அனேக முறைகளையும் பிரத்யக்ஷ அநுபவத்தைக்கொண்டும் அநுமானத்தைக்கொண்டும் தெரிந்துள்ள முறைகளையும் அனுபவரின் நன்மையின் பொருட்டு அதிக விரிவின்றி இதில் கூறுவோம். 4—6

நூலிலுள்ள பிரிவுகளே:—(1) பரிபாஷை, ஔஷதகம் முதலியவற்றின் விவரம், நாடீபரீக்ஷாதிவிதி, தீபநபாகநாதி குணங்கள், சரீரம், உணவு முதலியது உட்செல்லும் வகை, ரோகங்களின் லக்ஷணை இவ்விஷயங்களடங்கிய ஏழு அத்தியாயங்கள் முறையே பூர்வகண்டத்திலும், (2) ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், சூர்ணம், குளிகை, லேஹ்யம், ஸ்நேஹம், ஸக்தாகம், தாதுஸுத்தி, ரஸங்கள் இவ்விஷயங்களடங்கிய பன்னிரண்டு அத்தியாயங்கள் முறையே மத்யமகண்டத்திலும், (3) ஸ்நேஹபானம், ஸ்வேதவிதி, மைதம், விரேசகம், அநுவாஸநவஸ்தி, நிரூஹவஸ்தி, உத்தரவஸ்தி, நஸ்யம், தூமபானவிதி, கண்டூஷாதிவிதி, லேபநாதிவிதி, ரக்தமோக்ஷணவிதி, சேத்ரசிகித்ஸை இவ்விஷயங்களடங்கிய பதின்மூன்று அத்தியாயங்கள் முறையே உத்தரகண்டத்திலும் விவரிக்கப்படும். ஆக இந்த ஸம்ஹிதையில் முப்பத்திரண்டு அத்தியாயங்களும். இரண்டாயிரத்து அறுனூறு [2] ஸ்லோகங்களும் அடங்கியிருக்கின்றன. 7-13½.

மாத்ரா பரிபாஷை:—ஔஷதத்தில் வஸ்துக்களைப் பிரமாணமின்றியே உபயோகித்தால், அவை எங்கும் முறைப்படிச் சேராவாகையரல், ஔஷதமுறைகளுக்கும், அவற்றை ரோகிகளுக்குப் பிரயோகிப்பதற்கும் அவசியமான அளவுகள் இங்கு கூறப்படுகின்றன. 14½.

அளவுகளின் விவரம்:—சாளரம் முதலிய துவாரங்களினூடே சூரிய கிரணங்களில் காணப்படும் நுண்ணிய பொடித்ரஸரேணுவென்றும், அதில் மூப்பதில் ஒரு பாகம் பரமாணுவென்றும் வழங்கப்படும்.

30 பரமாணுக்கள் 1 த்ரஸரேணு. இதுவே வம்சீ.
6 த்ரஸரேணு 1 மரீசி.
6 மரீசிகள் 1 இராஜிகை.
3 இராஜிகை 1 ஸர்ஷபம்.
8 ஸர்ஷபம் 1 யவம்.
4 யவம் 1 குஞ்ஜா (குன்றுமணி.) இதுவே இரத்திகை.
6 குஞ்ஜாக்கள் 1 மாஷம். இதுவே தோலம், காமம்.

1. தோஷங்கள்—வாதம், பித்தம், கபம் என்கிற இம்மூன்றும், ரோகங்களைப் பிறப்பிக்கும் காரணங்களின்சேர்க்கையினால் கோளாறடைந்து பிறகு சரீரத்தைத் தூஷிப்பதால் தோஷங்களெனவு கூறப்படுகின்றன.

2. ப்ரக்ஷிப்தங்களென்று வழங்கப்படும் சில பத்தியங்களையும், 32 எழுத்துகளுக்கு அதிகமிருக்கும் பாகங்களையும், மந்திரம் முதலிய வாக்கியங்களையும் சேர்த்துக்கொண்டால் குறைவுள்ளதாகத் தோற்றும் பத்தியங்களும் சரியாய் விடும்.

3. இது த்வம்வி என்றும் கூறப்படுவதுண்டு.

4 மாஷங்கள் 1 சாணம். இதுவே தாரணம், டங்கம்.
2 சாணம் 1 கோலம். இதுவே கூந்த்ரகம், வடகம், த்ரங்கஷணம்.
2 கோலம் 1 கர்ஷம். இதுவே பாணிமாநிகை, அக்ஷம், பிசு, பாணிதலம், கிஞ்சித்பாணி, திந்துகம், பிடாலபதகம், ஷோடசிகா, கரமத்யம், ஹம்ஸபதம், ஸுவர்ணம், கவளக்ரஹம், உதும்பரம்.
2 கர்ஷங்கள் 1 அர்த்தபலம். இதுவே சுக்தி, அக்ஷ்டமிகா.
2 சுக்திகள் 1 பலம். இதுவே முஷ்டி, ஆமலம், சதுர்த்திகை, பாகுஞ்சம், ஷோடசி, பில்வம்.
2 பலங்கள் 1 ப்ரஸ்ருதி. இதுவே ப்ரஸ்ருதம்.
2 ப்ரஸ்ருதிகள் 1 அஞ்ஜலி. இதுவே குடவம், அர்த்த சராவம், அக்ஷ்டமாகம்.
2 அஞ்ஜலிகள் 1 மாநிகை. இதுவே சராவம், புஷ்கலம்.
2 மாநிகைகள் 1 ப்ரஸ்த்தம்.
4 ப்ரஸ்த்தங்கள் 1 ஆடகம். இதுவே பாஜநம், காம்ஸ்யபாத்ரம் (அறுபத்துநான்கு பலம்.)
4 ஆடகங்கள் 1 த்ரோணம். இதுவே கல்வணம், உன்மணம், உரி, மாகம், கடம், இராசி, கலசம்.
2 த்ரோணங்கள் 1 சூர்ப்பம். இதுவே கும்பம் (அறுபத்து நான்கு சராவம்).
2 சூர்ப்பங்கள் 1 த்ரோணி. இதுவே வஹம், கோணீ.
4½ த்ரோணிகள் 1 காரீ. (நாலாயிரத்துத் தொண்ணூற்றாறு பலம்.)
2000 பலங்கள் 1 பாரம்.
100 பலங்கள் 1 துலாம்.

மாஷம், சாணம், கர்ஷம், பலம், அஞ்ஜலி, ப்ரஸ்த்தம், ஆடகம், த்ரோணம், த்ரோணீ, காரீ இவை ஒவ்வொன்றும் முறையே மேன் மேலுள்ள நான்கு நான்கு பாகம் அளவில் அதிகமானவையாம். 15—32½.

பதார்த்தங்களின் தன்மைகளை அநுஸரித்து பிரமாணபேதங்கள்:—(1) குஞ்ஜா என்கிற அளவு முதற்கொண்டு குடவம் வரையிலுள்ள அளவுகளிலடங்கி த்ரவபதார்த்தத்தையாவது, ஈரம் அல்லது உலர்ந்த எவ்வித பதார்த்தத்தையாவது ஔஷத முறைகளில் உபயோகிக்கும்போது அவற்றையெல்லாம் முறைகளிற்கூறிய அதே அளவில் உபயோகிக்க வேண்டும். (2) த்ரவ பதார்த்தம் அல்லது ஈர பதார்த்தங்களை மாநிகை ப்ரஸ்த்தம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவுகளில் பிரயோகிக்கும்போது, உலர்ந்த வஸ்துக்களுக்குக் கூறப்பட்டுள்ள அளவைவிட நாலைலொரு பங்கு அதிகமாய்ச் சேர்க்கவேண்டும். [1] (3) ஆஞல் துலா பிரமாணங்கொண்ட அளவில் த்ரவம் அல்லது ஈர வஸ்துக்களை அவ்விதம் நாலைலொரு பங்காகச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. 33,—34½.

1. "சுஷ்கங்கள் என்கிற உலர்ந்த சரக்குகளுக்கு ஔஷதங்களில் கூறப்பட்ட அளவைவிட ஆர்த்ரங்கள் என்கிற ஈர வஸ்துக்களை நாலைலொரு பங்காக உபயோகிக்க வேண்டும். உலர்ந்த வஸ்துக்கள் ஈர வஸ்துக்களின் குணத்தில் குருவாகவும் தீக்ஷ்ணமாகவும் இருப்பதே இதற்குக் காரணமாம்" என்று பரிபாஷை.

அளவுபாத்திரம்:—சுற்றளவிலும், உயரத்திலும் கான்கு அங்குலம் கொண்டதாய் மண் மரம் மூங்கில் உலோஹம் முதலியதால் செய்யப்பட்ட பாத்திரத்தின் அளவானது குடவம் [1] எனப்படும். $35\frac{1}{2}$.

ஔஷதங்களுக்குரிய பொதில்:—ஔஷத முறைகளில் எந்தபதார்த்தம் முதலிற் கூறப்படுகின்றதோ, அப்பதார்த்தத்தின் பெயரைக்கொண்டே அந்த ஔஷதத்தின் பெயரும் வழங்கப்படும். [2] $36\frac{1}{2}$.

காளிங்க பரிமாணம்:—நிறை அல்லது அளவானது காளிங்கம் மாகதம் என்று இருவகைப்படுமென்றும், காளிங்கத்திலும் மாகதம் மாகமே சிறந்ததென்றும் இவ்விஷயமறிந்தவர் கூறுவர். காலம், ஜாடராக்னி, வயது, சக்தி, பிரக்ருதி, [3] தேசம், இடம் இவற்றின் தன்மைகளை உற்று நோக்கித் தகுந்தவாறு மாத்திரைகள் ஏற்படுத்த வேண்டுமேயன்றி, வேறுவிதமாய் அனைத்துக்கும் நிச்சயமான நிறை அல்லது அளவுகளைக் கூறுவதற்கில்லை. கலியுகத்தில் மனிதர் மந்தாக்னிகளாகவும், வலியிற் குறைந்தவராகவும், உருவத்திற் குன்றியவராகவும் இருப்பதால், அவர்களுக்குத் தகுந்த அளவுகளை அறிஞர் அங்கீகரிக்குமாறு கூறுகின்றோம். 37, $39\frac{1}{2}$.

காளிங்க அளவுகள் [4] :—

12 கௌரஸர்ஷபம் [5] (அல்லது ஸர்ஷபம்) 1 யவம்,
2 யவங்கள் 1 குஞ்ஜா,
2 குஞ்ஜா 1 வல்லம்,
8 குஞ்ஜா 1 மாஷம் [6]
4 மாகதம் 1 சாணம். இதுவே நிஷ்கம், டங்கம்.
6 மாஷங்கள் 1 கத்யாகம்,
10 மாஷங்கள் 1 கர்ஷம்,
4 கர்ஷம் 1 பலம். (16 சாணங்கள்),
4 பலம் 1 குடவம்,

பிரஸ்தம் முதலிய மற்ற அளவுகளெல்லாம் மாகதமாகத்திற் கூறியமாதிரியே. 40—43.

---

1. குடவத்தைப்போலவே அதற்குக் குறைந்தவையும் அதிகமுமான அளவுகளுக்குப் பாத்திரங்களே நிர்மிக்கலாம்.

2. காளிங்கரஜி சூர்ணம், ஜாத்யாதிக்ருதம் முதலியவற்றைப்போல். ஆனால் சுயவ்யபதேசம், வஸந்தகுஸுமாகரம் முதலியவை அதனதனுடைய குணம், பிரபாவம் முதலியதை அனுஸரித்து வழங்கப்படும் பெயர்கள்.

3. வாதப் பிரக்ருதி, பித்தப் பிரக்ருதி, சிலேஷ்மப் பிரக்ருதி என்று பிரக்ருதிகள் முக்கியமாய் மூன்று, த்வந்த்வப் பிரக்ருதிகள் மூன்று, ஸங்கீர்ணப்பிரக்ருதி ஒன்று ஆக 7-பிரக்ருதிகள்.

4. முன்னுல் காளிங்கதேச முறைப்படி வழங்கிய அளவுகளுக்குக் 'காளிங்கம்' என்றும், மகததேச முறையில் வழங்கியவற்றிற்கு 'மாகதம்' என்றும் பெயர் வந்ததாக இதனுல் அறியப்படுகிறது.

5. கௌரஸர்ஷபம் (வெள்ளைக்கடுகின் நிறை). இதற்குக் குறைந்த சிறிய அளவுகள் மாகத அளவுகளேப் போன்றவையே.

6. குஞ்ஜாக்கள் 7 கொண்டது 1 மாஷம் என்று சிலர்.

பதார்த்தங்களோ யுபயோகிக்கும் வகைகள்:— வாய்விடங்கம், திப்பிலி, வெல்லம், நெய், கோத்தமல்லிவிதை, தேன் இவற்றைத் தவிர மற்ற வஸ்துக்களே எல்லாக் காரியங்களிலும் புதிதாகவே உபயோகிக்க வேண்டும். சீந்தில், வெட்பாலே, ஆடாதோடை, பூசுணி, தண்ணீர் விட்டாங்கிழங்கு, அமுக்கிரங்கிழங்கு, மருதோன்றி, சதகுப்பி, முதியார் கூந்தல் இவற்றை ஈரமாகவே உபயோகிக்க வேண்டும்; ஆனால் முன் ஈரவஸ்துக்களுக்குக் கூறிய முறைக்கேற்பட்ட அளவைவிட இரு மடங்காகச் சேர்க்கக்கூடாது. உலர்ந்த பதார்த்தம் புதிதாயிருந்தால் ஸகலகாரியங்களிலும் உபயோகிக்கலாமென்றும், ஈரமான வஸ்துவை யோகத்தில் [1] விதித்ததைவிட இரண்டு மடங்காகச் சேர்க்க வேண்டுமென்றும் சொல்லப்படும் விதி எங்கும் பொதுவாம். 44—$46\frac{1}{2}$.

ஔஷத முறைகளில் விவரம் கூறவிடின் கையும் வகை:—ஔஷத முபயோகிக்க வேண்டிய வேளையைக் குறிப்பிடாமலிருந்தால் காலநேரமும், ஔஷதிகளிலிருந்து கிரஹிக்கும் பாகம் குறிக்காமலிருந்தால் அவற்றின் சேரும், ஔஷதங்களில் சேரும் சர்க்கரைகளுக்கு அளவுகள் கூறவிட்டால் எல்லாவற்றிற்கும் ஸம பாகமும், ஔஷதங்களேப் பக்குவம் பண்ணப் பாத்திரம் குறிப்பிடாவிட்டால் மட்பாத்திரமும், கஷாயம் முதலியவற்றிற்குத் திரவ பதார்த்தம் கூறப்படாதவிடத்தில் ஜலமும், தைலம் முதலியதைப் பக்குவம் செய்ய இவ்விதஎண்ணெயென்று விவரிக்காவிட்டால் நல்லெண்ணெயும் கிரஹிக்கப்பட வேண்டும். ஏதேனும் ஒரு யோகத்தில் ஒரே பதார்த்தம் இரு முறை கூறப்பட்டிருந்தால், அதை அந்த முறையில் இரு மடங்காகச் சேர்க்கவேண்டுமென்பது கருத்தாம். சூர்ணம், ஸ்நேஹம், ஆஸவம், லேஹ்யம் இவற்றில் சந்தனம் சேர்க்கவேண்டியதானுல் பெரும்பாலும் வெண்சந்தனமும், கஷாயம், லேபம் [2] இவைகளிலாயின் செஞ்சந்தனமும் சேர்க்கவேண்டும். 47—50

காலபேதத்தினுல் பதார்த்தங்களுக்கும் குணபேதம்:—மூலிகை முதலியவைகளே சூர்ணித மருந்துகளாக மாற்றுமல் ஒரு வருஷத்திற்கு மேல் வைத்திருந்தால் அவை குண ஹீனங்களாய்விடும். சூர்ணங்களின் வீர்யமும் இரண்டு மாதங்களுக்குப் பின் குறைவடையும். குளிகைகளும் லேஹ்யங்களும் ஒரு வருஷத்திற்கப்பால் ஸத்துவமிழந்துவிடும். நெய், தைலம் முதலியவை நான்கு மாதங்களுக்குப் பிறகு குணம் குன்றியவையாகும். இலகுபாகமான [3] ஔஷதம் முதலியவை ஒரு வருஷத்திற்குப்பின் வீர்யமற்றவையாய் விடும். ஆஸவங்கள், தாதுத் திரவியங்கள், ஜாஸவர்க்கங்கள் [4] இவற்றிற்குக் காலம் செல்லச் செல்ல குணங்களும் அதிகமாகும். 51—53.

---

1 யோகம்—ஔஷதமுறை.

2. ஸ்நேஹம், ஆஸவம், லேபம் முதலிய பரிபாஷைகளின் பொருள் முதலான விவரங்களேப் பின்னுல் அந்தந்த அத்தியாயத்திற் காண்க.

3. இலகுபாகம்—சிறு ஜ்வாலையில் எளிதில் பண்ணப்படும் இளம் பாகம்; கோதுமை வாற்கோதுமை எள் முதலியனவும் ஔஷதி முதலியவை என்பதால் குறிக்கப்படுகின்றன.

4. தாதுத்திரவ்வியங்கள் ஜாஸவர்க்கங்கள் இவற்றைப்பற்றி மத்யம கண்டம் 11, 12 அத்தியாயங்களேப் பார்க்க.

ஒரு யோகத்தில் தகாததை விலக்குவதும் தகுந்ததைச் சேர்ப்பதும் :—ஒரு யோகத்தில் சொல்லியிருக்கும் பதார்த்தங்களில் ஏதேனும் பொருள், குறிப்பிட்ட வியாதிக்குத் தகாததாயிருந்தால், அறிந்தவன் அப் பதார்த்தத்தை விலக்கிவிடலாம்; வியாதிக்கு ஏற்றதான பொருள் மற் றொன்றிருந்தால், முறையில் மொழியப்படாவிடினும் அதைச் சேர்த்துக் கொள்ளலாம். 54.

ஔஷதிகளுண்டாதும் இடங்களும் அவற்றைக் கிரஹிக்கத் தகுந்த காலங்களும் :—விந்தியம் முதலிய பர்வதங்கள் சூழ்ந்துள்ளவை எனவும், இமாலயம் போன்ற மலை குளிர்ந்ததென்றும் கருதப்படுகின்றன; ஆகவே அவற்றில் உற்பத்தியாகும் ஔஷதிவகைகளும், அவற்றிற்குக் காரணமா யுள்ள அப்பிரதேசங்களுக்கேற்ற குணமுள்ளனவாகும். காடுகள், தோட்டங் கள் முதலான வேறிடங்களிலும் இவ்வௌஷதிகள் பயிராகின்றன. சுத்த மான சித்தத்துடனும், சரீரத்துடனுங் கூடிய புருஷன் நல்ல சுபதினத் தன்று விடியற்காலத்திலேயே சூரியனுக்கு எதிர்முகமாயிருந்து சிவபெரு மானுக்கு வந்தனம்செய்வதாக மனதில் தியானித்து, ஸாதாரண பூமியில் [1] வடபாகத்திலிருக்கும் ஔஷதியை மௌனமாகவே இருந்து கிரஹிக்க வேண்டும். புற்று அல்லது பாழிகள், மனதுக்கு வெறுப்பைத் தரும் இடங்கள், எப்பொழுதும் ஈரமாயிருக்கும் பள்ளத்தாக்குகள், மயானபூமி, சவர்நிலம், அனேகரும் செல்லும் பாதை இவ்விடங்களிலுண்டானவையும், கிருமி முதலிய ஜந்துக்கள், அக்னி, பனி இவற்றினால் எரிக்கப்பட்டவையு, மான ஔஷதிகள் பயன்படா. சரத்காலத்தில் ஔஷதிகளில் ரஸம் கிரம்பியிருக்குமாகையால் [2] அப்பொழுது ஸகல காரியங்களுக்கும மூலி கைகளைக் கிரஹிக்கவேண்டும். ஆனால் விரேசம், வமநம் [3] இவ்விரண்டுக் கும் உபயோகமாகக்கூடிய பதார்த்தங்களை வஸந்தகாலத்தின் இறுதியில் கிரஹிக்கவேண்டும். 55—59.

அந்தந்த பதார்த்தங்களிலிருந்து கிரஹிக்கவேண்டிய அம்சங்கள்:—எவற்றிற்கு வேர்கள் மிகவும் பெரிதோ, அச் செடிகளின் வேர்களிலுள்ள பட்டையையே கிரஹிக்கவேண்டும். ஔஷதிகளின் தன்மையறிந்தவன் சிறிய வேர்களையுடைய மூலிகைகளை அறிந்து அவற்றை ஸமூலமாய் எடுத் துக்கொள்ளவேண்டும். ஆலமரம் முதலியதைப்போன்ற விருக்ஷங்களி லிருந்து பட்டையும், வேங்கையைப் போன்றதிலிருந்து ஸாரமென்னும் பிசினும், தாளிசம் போன்றதிலிருந்து இலைகளும், த்ரிபலை [4] முதலியதி லிருந்து பலங்களும், காட்டாத்தி முதலியதிலிருந்து புஷ்பங்களும், கள்ளி முதலானதிலிருந்து பாலும் கிரஹிக்கக்கூடியன. 60—61½.

---

1. பூமி ஜாங்கலம், ஆனூபம், ஸாதாரணம் என்று மூன்று விதம்; அவற்றில் வெயிலாலும் காற்றாலும் விசேஷமாய் வறண்டுள்ள பூமி ஜாங் கலம், சதுப்பான பூமி ஆனூபம், இரண்டுக்கும் பொதுத்தன்மையாயுள்ளது ஸாதாரண பூமி.

2. வருஷ ருதுவில் பெய்யும் மழையினால் சரத்ருதுவில் செடி கொடி மரங்களெல்லாம் செழித்து ரஸம் நிரம்பியிருப்பதினால்.

3. வமநம்—வாந்தியாதல். விரேகம்—குடலிலிருந்து கீழ்நோக்கி மலங்கழிதல்.

4. த்ரிபலை—கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இம்மூன்று.

இரண்டாம் அத்தியாயம்.

ஔஷதம் முதலியவற்றின் விவரம்.

ஔஷதங்களை உபயோகித்தும் விலங்கிய :—ஔஷதத்தை அதி லும் விசேஷமாக சுகதாயங்களைப் பெரும்பாலும் காலை நேரத்தில் உட்கொள் வதே உத்தமம். மனிதர் மருந்துண்பதற்கு மூன்று வித காலங்களுண்டென் றறிக. அவையாவன—சிறிது சூர்யோதயமாகையிலும், பகற் போஜன ஸமயத்திலும், மாலையில் போஜனமுண்ணும் நேரத்திலும், அடிக்கடியும், இரவிலும் ஆக ஐந்து வேளைகளில் ஔஷதம் புஜிக்கலாம். (1) பித்தம், கபம் இவை அதிகமான ஸமயத்திலும், விரேகம் வமநம் லேகநம் [1] என் றிவற்றிற்காகவும் பெரும்பாலும் விடியற்காலத்தில் ஔஷத முண்ண வேண்டும். ஔஷதம் உபயோகிப்பதற்கு இதுவே முதற்காலமாகும். (2) அபாநவாயு விகாரமடைந்திருந்தால் போஜனத்திற்கு முன்பு ஔஷத மும் உபயோகிப்பது நலம். அரோசகமாயிருக்கையில் சுவையுண்டுபண்ணக் கூடிய மருந்தை கற்சுவையுள்ள பற்பல ஆஹாரங்களுடன் கலந்து எடுத் துக கொள்ளலாம். ஸமாநவாயு [2] விகாரமடைந்திருந்தால், ஜாடராக்னி யும் மந்தமாயிருக்குமானால் ஸமர்த்தனை வைத்தியன் பசியை உத்தீபகம் செய்யக்கூடிய ஔஷதத்தை போஜனத்தின் இடையில் உபயோகிக்கச் செய்யவேண்டும். வியாநமென்னும் [3] வாயு பிரகோபமடைந்தால் போஜ னம் செய்த வுடனேயும், விக்கல் ஆக்ஷேபகவாதம் [4] நடுக்கல் இவ்வித ரோகங்களில் போஜனத்திற்கு முன்னும் பின்னுமாகவும் ஔஷதம் உப யோகிக்கவேண்டும். ஔஷதமுபயோகிக்க இவ்விதம் இரண்டாவது கால மும் கூறப்படுகிறது. (3) உதாநவாயு [5] பிரகோபமடைந்து சூரல் முதலிய தைக் கெடுத்தால் மாலையில் போஜனம் செய்யும்பொழுது ஒவ்வொரு கப ளத்திலிடையிலும் ஔஷதத்தைக் கொடுக்கவேண்டும் பிராணவாயு [6] கோளாறடைந்தால் பெரும்பாலும் மாலையில் போஜனம் செய்தபின் ஔஷத மும் உபயோகிக்கலாம். இதை மூன்றாவது காலமாகக் கருதவேண்டும். (4) தாஹம், வாந்தி, விக்கல், ச்வாஸரோகம், விஷதோஷம் இவற்றில் ஔஷதத்தை அடிக்கடியும், ஆஹாரத்துடன் கலந்தும் கொடுக்கலாம். இது நான்காவது காலமாகும். (5) கழுத்திற்கு மேற்பட்ட அவயவங்களில்

---

1. விரேசநம், லேகநம் முதலியவற்றின் விவரங்களை 4-வது அத்தி யாயத்தில் பார்க்கவும்.

2. ஸமாநவாயு—நாபிக்குக் கீழுள்ள அவயவங்களின் வேலைகளை நடத்தும் வாயு.

3. வியாநவாயு—ஸர்வ அவயவங்களையும் வியாபித்துச் சரீர காரியங் களையெல்லாம் நடத்தும் வாயு.

4. ஆக்ஷேபகவாதம்—கை கால் கண் முதலிய அவயவங்களை மூலக்குமூலையிழுக்கும் ஒருவித வாதரோகம்.

5. உதாநவாயு—கண்டத்திலிருந்து கொண்டு அவ்விடத்திலுள்ள வேலையை நடத்தும் வாயு.

6. பிராணவாயு—சரீரம் உயிருடனிருப்பதற்கு முக்கியமான வாயு; இதற்குச் ஹிரஸ்ஸு முக்கிய ஸ்தானமாம்.

உற்பத்தியாகும் பிணிகளிலும், குமட்டலே யுண்டாக்குவதிலும், ப்ருஹ்மணம் செய்வதிலும் இரவில் உணவு உட்கொள்ளாமலிருந்து வெறும் வயிற்றிலேயே பாசநம் சமநம் என்னும் சிகித்ஸைகளைச் செய்யவேண்டும். மருந்துகளை உபயோகிப்பதில் இது ஐந்தாவது வேலையாகும். 1—12.

பதார்த்தங்களுக்கு ஐந்து நன்மைகள் :—பதார்த்தங்களில் இரஸம், குணம், வீர்யம், விபாகம், ப்ரபாவம் என்று ஐந்து விதமான தன்மைகள் அநுபவ க்ரமத்தைக்கொண்டு [1] கூறப்படுகின்றன. 13.

இரஸங்கள் :—இனிப்பு, புளிப்பு, உப்பு, காரம், கைப்பு, துவர்ப்பு இவை ஆறும் இரஸங்கள் அல்லது சுவைகளெனப்படும்; இவை பல பதார்த்தங்களில் பலவகையில் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ப்ருதிவீ ஜலம் இவ்விரண்டு பூதங்களின் அம்சங்களால் புளிப்பும், ஜலம் அக்னி இவற்றின் அம்சங்களால் உப்பும், வாயு ஆகாசம் இவற்றின் அம்சங்களால் காரமும், வாயு அக்னி இவைகளின் அம்சங்களால் கைப்பும், பூமி வாயு இவற்றின் அம்சங்களால் துவர்ப்பும், இவ்வாறு இரண்டிரண்டு பூதாம்சங்களால் முறையே அறு சுவையும் உற்பத்தியாகின்றன. 14, 15.

குணங்கள் :—குரு, ஸ்நிக்தம், தீக்ஷ்ணம், ரூக்ஷம், இலகு என்கிற இவ்வைந்தும் க்ரமமாக ப்ருதிவீ, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் இவ்வைந்து பூதங்களாலான வஸ்துக்களின் குணங்களாகக் கருதப்படுகின்றன. ஐந்து வகையான இக்குணங்களிலேயே மற்ற எல்லாக்குண ஸமூஹங்களும் அடங்கியனவாம். [2] 16, 16½.

வீர்யங்கள் :—தீரவியங்களே உஷ்ணவீர்யமுள்ள வீர்யங்கள் பெரும்பாலும் சீதம் உஷ்ணம் என்று இருவகைப்படும்; ஆகையினால் உலகமெங்கும் வியாபித்துள்ள வஸ்துக்களெல்லாம் காங்கை அல்லது குளிர்ச்சியுள்ளனவாகக் காணப்படுகின்றன. வேறு வீர்யங்கள் எவையாகிலும் உண்டானால் அவையும் ஒருவாறு இவ்விரண்டிலேயே உட்பட்டனவையாகும். 17, 18.

விபாகங்கள் :—உணவுப் பொருட்கள் குடலிற் சென்றதும் மதுரம், அம்லம், கடு ஆக மூன்றுவித விபாகங்களே (பரிணாமங்களே) அடைகின்றன; பெரும்பாலும் மதுரமும் இலவண ரஸமுமுள்ள பதார்த்தங்கள் மதுரமாகவும், அம்லம் அம்லமாகவும், துவர்ப்பு, காரம், கைப்பு இவை கடுவாகவும் விபாகத்தை அடைகின்றன. இப்படி பதார்த்தங்களின் மதுர பாகத்திலுள் கபமும், அம்ல பாகத்தால் பித்தமும், கடு பாகத்திலுள் வாயுவும் விருத்தியாவதுண்டு. [3] 19,—20½.

1. "ஸம்பந்தேந க்ரமாதேகா" என்னும் பாடத்தில் இவ்வைந்தும் பதார்த்தங்களே ஆகாரமாகக்கொண்டுள்ளன எனப் பொருள்.

2. குரு—பாரமானது; ஸ்நிக்தம் — பசையுள்ளது; தீக்ஷ்ணம்—வைசேஷிகத்தில் வேலைசெய்யும் சுருக்குள்ள தன்மை; ரூக்ஷம்—வறட்சி; இலகு—இலேசு. [குரு, இலகு, மந்தம், தீக்ஷ்ணம், சீதம், உஷ்ணம், ஸ்நிக்தம், ரூக்ஷம், ச்லக்ஷ்ணம், கரம், ஸாந்த்ரம், த்ரவம், ம்ருது, கடினம், ஸ்தூலம், ஸரம், ஸூக்ஷ்மம், ஸ்த்தூலம், விசதம், பிச்சிலம் என்ற குணங்கள் இருபது விதங்களென்பது வாக்படன் முதலியவரது கொள்கை.]

3. உட்கொள்ளப்படும் பதார்த்தங்கள் எவ்விதச் சுவையுள்ளனவாயினும், குடலுக்குள் சென்றபின் க்ரமமாக மேலே சொன்ன விதமாய் மூன்றாய் ஆள்ள ஜடராக்னியின் சேர்க்கையினால் மூன்றுவிதமாகப் பக்குவமாய் மாறுபாடடையும்.

ப்ரபாவம்:— (1) நெல்லிக் கனியானது கொடியெலுமிச்சம் பழத்திற் கேற்ற இரஸம், குணம், வீர்யம், விபாகம் இவைகளுடன் கூடியதாயிருந்தும், கொடியெலுமிச்சையைப் போல் இரஸாதிகளுக்குத் தகுந்த பயனைத் தராமல், மூன்று தோஷங்களுக்கும் ஒருமிக்கக் காணும் கோளாறுகளைப் போக்குவதும், அவ்விதமே ஸஹதேவீ யென்னும் [1] செடியின் வேரை சிரஸ்ஸில் கட்ட ஜ்வரல் உபசாந்தி யடைவது போல் சில திரவ்யம் உட்கொள்ளப் படாமலே பரிசம் முதலானதாலேயே சில ஸமயத்தில் பயனளிப்பதும் ப்ரபாவம் [2] எனப்படும். (2) ஔஷத பதார்த்தங்களில் சில அவற்றிற்குள்ள இரஸத்திற்கும், வேறு சில குணங்களுக்கும், சில வீர்யத்திற்கும், சில விபாகத்திற்கும், வேறு சில ப்ரபாவத்திற்கும் எற்றவாறு வேலை செய்யக்கூடியன. 21—23½.

நதுகூநரும் அவற்றில் தோஷங்களுக்குண்டாகும் மாறுபாடுகளும்:— வாத பித்த கபங்கள் எந்த காலங்களில் சயம், ப்ரகோபம், உபசமம் என்கிற மூன்று நிலைமைகளை யடைகின்றனவோ அந்தக் காலங்கள், சூரியன் மேஷம் முதலிய ராசிகளிற் சேருவதால் ஆறு ருதுக்களாக வகுக்கப்பட்டுள. சூரியன், மேஷம் விருஷபம் இவ்விரு ராசிகளில் இருக்கும்போது கிரீஷ்ம ருதுவும், மிதுனம் கடகம் இவற்றிலிருக்கையில் ப்ராவ்ருட் ருதுவும், சிங்கம் கன்னி இவற்றிலிருக்கையில் வர்ஷருதுவும், துலாம் விருச்சிகங்களிலிருக்கும்போது சரத்ருதுவும், தனுஸ் மகரங்களிலிருக்கையில் ஹேமந்த ருதுவும், கும்ப மீனங்களிலிருக்குங்கால் வஸந்தருதுவுமாகும். [3] வாயுவானது கிரீஷ்மருதுவில் சயத்தை அடைந்து, ப்ராவ்ருட்காலத்தில் ப்ரகோபித்து, சரத்ருதுவில் தானே உபசமமடைகின்றது. பித்தத்திற்கு வர்ஷாகாலத்தில் சயமும், சரத்காலத்தில் ப்ரகோபமும், வஸந்தத்தில் உபசமமும் உண்டாகும். கபத்திற்கு ஹேமந்தத்தில் சயமும், வஸந்தத்தில் ப்ரகோபமும், ப்ராவ்ருட் காலத்தில் உபசமமும் ஏற்படுகின்றது. [4] கார்த்திகைமாதத்தின் இது நியிலுள்ள எட்டு நாட்களும், மார்கழிமாதத்தின் முதலிம் எட்டு நாட்களு

1. ஸஹதேவீ—பேராமுட்டியைச் சேர்ந்த ஒருவித செடி.

2. ஒரு பதார்த்தமானது, அதற்குள்ள இரஸம் குணம் வீர்யம் விபாகம் இந்த நான்கு விதமான தன்மைகளுக்கும் மாறுன வேலையைச் செய்தால், அந்த சக்தியே ப்ரபாவம்.

3. இருதுக்களே இவ்விதம் வகுத்திருப்பது மற்ற ஆயுர்வேத நூல்களுக்கும், உலகத்தில் வழங்கப்படுவதற்கும் விரோதியாஸமாயிருப்பதுடன், தோஷங்களுக்கு உபசமமும் மற்ற வைத்தியக்கிரந்தங்களைப் போலில்லாமல் வெவ்வேறு ருதுவில் சொல்லப்பட்டிருக்கிறது; மேலும் ப்ராவ்ருட் என்பது வர்ஷருதுவுக்கே மற்றொரு பெயரா யிருக்க, அதைப் ப்ரத்தியேகமாக ஒரு ருதுவாகவும் கூறியிருப்பது வடநாட்டு சில வைத்தியாசார்யர்களுடைய அபிப்ராயத்தையும் வழக்கத்தையும் அனுஸரித்ததாகும்.

4. வாத பித்த கபங்களுக்கு ஸ்த்தானங்களே விவரமாக 5-ம் அத்தியாயத்தில் காண்க; ஒவ்வொரு தோஷமும் அதற்குள்ள முக்கியமான ஸ்த்தானத்திலேயே விருத்தியடைந்தால் சயம் என்றும், அதற்கும் மேலாக விருத்தியாய் இதர தோஷங்களின் இடத்தையும் வியாபித்தால் ப்ரகோபம் என்றும், அவ்விதமான நிலைமைகளிலிருந்து குறைந்து தன் ஸ்த்தானத்தை வந்தடைந்தால் உபசமம் என்றும் வழங்கப்படும். சயம் ப்ரகோபம் இரண்டு நிலைமை

மாக இப்பிரிவுறு திணங்களும் யம தமஷ்ட்ரைகள் [1] எனப்படுமாகையால், அக்காலத்தில் அற்பமாக உணவுகளையுண்டு ஜாக்கிரதையாயிருப்பவரே ஆரோக்கியக்குறை வின்றி ஸுகமாய் வாழ்வர். 21—29½.

ஆஹாராதிகளால் தோஷங்களுந்த மாறுபாடுகள்:—வாத பித்த கபங்கள், அதற்கு ஏற்ற குணமுள்ள ஆஹாரங்களாலும் செயல்களாலும் அகாலத்திலுங்கூட சமப் பிரகோபங்களைப் பெறக்கூடும்; அவற்றிற்கு எதிரிடையான குணமுள்ள ஆஹாரவிஹாரங்களால் உபசமத்தை அல்லது க்ஷயத்தையடையும். (1) இலகுவும் ரூக்ஷமுமான குணங்களுடையதும் அளவில் மிகக் குறைந்ததுமான உணவாலும், அதிக சைத்தியத்தாலும், ஆயாஸத்தாலும், மாலை நேரத்திலுலும், காமம், சோகம், பயம், சிந்தை இவைகளாலும், இரவில் நித்திரையின்மையாலும், அபிகாதத்தாலும், [2] நீர்ந்து வதாலும், சரீரதாதுக்கள் க்ஷீணமடைவதாலும், உணவு ஜீர்ணமான பின்பும் வாயு பிரகோபமடையும் இவற்றிக்கு நேர் விபரீதகுணமுள்ளவை களால் அது தணியும். (2) காரமும் அம்லமுமான ரஸங்களையுடைதும் மிகக் காங்கையுள்ளதும் காந்தலுமான உணவுகளையுண்பது, அதிக உஷ்ணமான இடங்களிலிருப்பது, உஷ்ணத்தை விருத்தியாக்கும் காரியங்களைச் செய்வது, பசி தாஹங்களை அடக்குவது இவற்றாலும் நடுப்பகலிலும், உணவு ஜீர்ணமாகுந் தருணத்திலும் பித்தம் பிரகோபிக்கும்; இவற்றிற்கு விபரீத குணங்களால் பித்தம் சாந்தியடையும். (3) மதுரமும் ஸ்நிக்தமும் குளிர்ந்ததுமான ஆஹாரங்களைப் புஜிப்பது, பகலில் நித்திரை செய்வது, பசி மந்தித்தல், காலைநேரம், ஆயாஸமின்றி ஸுகமாயிருப்பது இவைகளாலும், உணவு உட் கொண்டஸமயத்திலும் கபம் பிரகோபமாகும்; விபரீத குணங்களால் அது தணியும். 30—53½.

மூன்றாம் அத்தியாயம்

நாடீ பரீக்ஷை முதலியது.

நாடியின் நிலை:—சரத்தில் பெருவிரலின் அடியில் ஜீவ நிலைமைகளைக் குறிக்கும் ஒரு சமநியுண்டு [3] அதன் அசைவுகளைக் கொண்டு சரீரத்தின் ஆரோக்கிய அநாரோக்கிய நிலைமைகளைப் பண்டிதர் அறியலாம். 1.

பலவித நிலைமைகளில் நாடியின் மாறுபாடுகள்:—நாடியானது, வாயுவின் பிரகோபத்திலுல் ஸர்ப்பத்தைப் போலவும் அட்டையைப் போல வும் அசையும். பித்தம் பிரகோபமடைந்தால் கள்ளிக்காக்கை, காசம், தவளை இவற்றைப்போல் அசையும். கபம் பிரகோபித்தால் ஹம்ஸம் போலவும் புரு வைட்போலவும் அசையும். ஸந்நிபாதத்திலுல் செங்குருவி, தித்திரி, விச்சுள்ளி

களில் சரீரக் கோளாறும், உபசயத்தில் அக்கோளாறுக்குத் தணிவும் உண்டாகும்.

1. யமதம்ஷ்ட்ரை—யமனது கோரப்பல். (அதைப்போல் பயங்கரமானது எனக் கருத்து.)

2. அபிகாதம்—அடி முதலியது தாக்குவது; அலைந்து கஷ்டப் படுவது.

3. தமனி—சுத்த ரத்தமோடும் இரத்தக்குழாய்; இது வே நாடி.

இப் பறவைகளைப்போல் செல்லும். ஸம் யோகங்களால் [1] சிறிது நேரம் வேகமாகவும் சிறிது நேரம் மந்தமாகவும் நாடி நடக்கும். வாத பித்த கபங்கள் அதற்குற்ற இடம் விட்டுப்புறண்டசைந்தாலும், நாடி சற்று நேரம் விட்டு விட்டசைந்தாலும், அதிக க்ஷீணகதியாகவோ சீதமாகவோ இருந்தாலும் உயிருக்கே அபாயம் நேரிடுமென்றறியவும். ஜ்வரம் வலுத்திருக்கையில் நாடி வெகு உஷ்ணமாகவும் வேகமகவும் இருக்கும். கோபம் காமம் இவை யுண் டாயிருக்கையில் வேகமாகவும், சிந்தையும் பயமு முண்டானபோது க்ஷீண கதியாகவும், பசியின்மையிலும் சரீரதாதுக்கள் மெலிவடைந்திருக்கையி லும் மிகவும் மந்தகதியாகவும், ஆமதோஷம் அதிகரித் திருந்தால் இரத் தம் நிறைந்து சிறிது உஷ்ணம் தணிந்து திரண்டிருக்கும், பரிதாபனம் நன் குண்டா யிருப்பவனுக்கு வேகத்துடன் சலமாகவும், பசி தணிந்து சுகித் திருப்பவனுக்கு வலியுடன் நிடமாகவும் அசையும். 2—8½.

அகுபஸ்வபினாலன்களும் பரிஹாரங்களும்:-ஸ்வப்னங்களில் வஸ்திர மணியாபரணும், மொட்டைத் தலையாகவும், சிவப்பு அல்லது கறுப்பான துணியைத் தரித்துக்கொண்டும், அங்கஹீனமாகக் கறுத்து விகாரமாகவும், பாசம் அல்லது ஏதேனும் ஆயுதத்தைக் கையிலேந்தியும், கட்டியழித்து வதைத்த வண்ணமும், தென் திசை நோக்கிச் சென்றவாறும், எருமை, ஒட்டை, கழுதை இவற்றிலேறிக்கொண்டுபோகும் ஆண்களாயோ பெண் களையோ யாதொருவன் காண்கிறானே, அவனும் ஆரோக்கியநிலைமை தவறி பிணியாளியாய் ஆயுளையும் இழப்பான். மேலும் உயரத்திலிருந்து கீழே விழுவதாகவும், நீரிலோ கெருப்பிலோ மறைவதாகவும், உஷ்ட விலங்கு களால் வதைக்கப் படுவதாகவும், மத்ஸ்யம் முதலியவற்றால் விழுங்கப்படுவ தாகவும், நேத்திரங்களும் தீபமும் அவிந்து விடுவதாகவும், தைலத்தையும் கள் ளையும் குடிப்பதாகவும், இரும்பையோ எள்ளையோ பெறுவதாகவும், பக்குவ மான அன்னத்தைப் புஜிப்பதாகவும், கிணற்றில் அல்லது பாதாளத்தில் விழு வதாகவும் கனவு காண்பவனும் அவசியம் ரோகியாகப் போய் உயிர் துறப் பான். இவை முதலிய துஸ்வப்னங்களைக் கண்டவன் அவற்றை வேறெவரிட மும் சொல்லாமலே, காலையி லெழுந்து ஸ்நானம் செய்து, பொன், எள், இரும்புஇவற்றை தானம் செய்ய வேண்டும். இவ்விட தைவங்களைத் துதித்து, தேவாலயத்திலும் வலம்பிப்பது நலம். இவ்விதம் மூன்று நாட்கள் செய்தபின் துஸ்வப்னத்திலுலாகும் தீமைகளின்றும் மீட்சி பெறுவான். 9—16.

சுப ஸ்வப்னங்கள்:—ஸ்வப்னங்களில் தேவர்கள், அரசர், மித்திரர்கள், பிராம்மணர்கள், பசு, ஸமித்து, அக்னி, தீர்த்தம் இவைகளைக் காண்பவனும், கலங்கிய ஜலங்களைத் தாண்டுவதாகவும் பகைவரை ஜயிப்பதாகவும் மாட மாளிகையிலும் விருக்ஷத்தின்மீதும் பர்வதத்தின்மேலும் யானையின்பேரி லும் ஏறி யிருப்பதாகவும் பார்ப்பவனும், வெளுத்த புஷ்பங்கள் வஸ்திரங்கள் மாம்ஸம் மத்ஸ்யம் கனிகள் இவற்றைப் பெறுவதாகக் காண்பவனும் ஆரோக் கியமடைவதுடன் செல்வவானாகவும் ஆவான். தகாதவருடன் கூடுவது, மலத்தைப் பூசிக்கொள்வது, புலம்புவது, இறப்பதுபோல் தோற்றுவது,

---

1. ஸம்யோக தோஷம்—இரண்டிரண்டு தோஷங்களின் கோளாறு, தோஷஸம்யோகம் என்றும் கூறலாம். [வாத பித்தம், வாத சிலேஷ்மம், பித்த சிலேஷ்மம் என்று தோஷஸம்யோகம் மூன்று விதம்.]

சமைக்காத இறைச்சியை யுண்பது, அட்டை வண்டு ஸர்ப்பம் தேனீ இவைகளால் கடிக்கப்படுவது, ஆகிய தோற்றங்கள் ஸ்வப்னத்திலுண்டாலும் அவன் நோயால் வருந்தினாலும், சீக்ரத்தில் சுகமடைந்து ஆரோக்யமுள்ள வனுய் செல்வத்துடன் வாழ்வான். 17—21.

தூத பரீக்ஷையும் சகுனமும் :—ரோகியின் தூதர்கள் தன்னைச்சேர்ந்தவராகவும், நிறமையுள்ளவராகவும், தூய ஆடையுடுத்தவராகவும், ஆரோக்யமுள்ளவராயும், குதிரையிலாவது விருஷபத்திலாவது ஏறிக்கொண்டு வெளுத்த புஷ்பம் கனி இவற்றையுடையவராயும், நல்ல குலத்தில் பிறந்து நண்படக்கையுள்ளவராகவும், பிராணனுக்காதாரமான வாயு வரும் திசை நோக்கி நிற்பவராகவுமிருந்து [1], வைத்தியரிடம் தகுந்த ஸமயத்தில் சென்றால், அந்த ரோகிகள் சுகம் பெறுவர். ரோகியின் பெருட்டு வைத்தியரை அழைத்துவருவதற்காகச் செல்லும் தூதனுக்கு நற்சகுனமாவது சுபமல்ல; ஆனால் வெகு விரோதமாக இருப்பதுபோல் தோற்றும் க்ரூரமான சகுனமே நன்மை தரும். ரோகிக்கு சிகித்ஸை செய்வதற்காகப் புறப்படும் வைத்தியனுக்கு யாத்திரையில் சுபசகுனமே நன்று. வைத்தியனிடம் சிகித்ஸைக்காகப் புறப்படும் ரோகிக்கோ க்ரூரமாகத் தோற்றும் சகுனத்தைபே சுபமாகவும், சுபமாகத் தோற்றுவதையே அபசகுனமாகவும் கருதவேண்டும். 22—25½.

சிகித்ஸைக்குத் தகுந்த ரோகிகள்:—அவனவனது சுபாவத்திற்கேற்ற பிரக்ருதியொடும், வர்ணத்தோடும் கூடி, தகுந்த வலிவுள்ளவனும், இந்தரியங்களையடக்கியாளுபனும், வைத்தியரிடம் விச்வாஸமுள்ளவனுமான ரோகிக்கே வைத்தியன் சிகித்ஸை செய்யவேண்டும். 26—26½.

நான்காம் அத்தியாயம்

தீபந பாசநாதி குணங்கள்.

தீபநம்:—பசியை உத்தீபகம் செய்வதும், ஆனால் அபக்குவமான உணவை ஜீர்ணம் செய்யவல்லமையற்றதுமான பதார்த்தம்அல்லது குணம் 'தீபநம்' எனப்படும் அது [2] ஜடராமாம்வியைப் போன்றது. ½.

பாசநமும், தீபநபாசநமும்:—ஆமமென்கிற அபக்குவ உணவை நன்கு ஜீர்ணம் செய்யக் கூடியதும், ஆனால் பசியை உத்தீபகம் செய்ய வல்லமையற்றதுமான பதார்த்தம் அல்லது குணம் 'பாசநம்' எனப்படும். அது நாககேஸரம் போன்றது. மேற்கூறிய இரண்டுவித குணங்களுமுடைய பதார்த்தங்கள் 'தீபபாசநம்' என்று கூறப்படுமாம். அது சித்ரமூலம் போன்றது. 1½.

சமநம்:—ஸம நிலைமையிலுள்ள வாத பித்த கப தோஷங்களுக்குக் கோளாறுண்டுபண்ணுமலும், பிரகோபமடைந்த தோஷங்களைக் கழியச் செய்யாமலும், வைஷம்யப்பட்ட தோஷங்களை மட்டும் ஸமநிலைமைக்குக் கொண்டுவரத் தகுந்தவையான பதார்த்தம் அல்லது குணம் 'சமநம்' எனப்படும். அது சீந்திற்கொடி முதலியதாம். 2½.

---

1. 'யஸ்யாம் ப்ராணமருத் வாதி ஸ நாடீ ஜீவஸம்யுதா' என்கிற ஸம்பந்தமில்லாத அரை ச்லோகம் எவராலேயோ இங்கு நடுவில் அநாவச்யமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. ஜிஞ்சி என்று சதகுப்பிக்கும் பெயர். அதுவும் இக்குணமுள்ளதே.

அநுலோமநம்:—குடலிலுள்ள மலங்களைப் பக்குவம் செய்து, மலச்சிக்கலைப் போக்கி, அம்மலங்களை ஆஸன வழியினால் தள்ளும் குணத்தை 'அநுலோமநம்' என்று அறிக. அது கடுக்காயைப் போன்றது. 3½.

ஸ்ரம்ஸநம்:—பக்குவமாகவேண்டிய மலம் முதலியது குடலில் சிக்கிக் கொண்டிருந்தால் அதைப் பக்குவம் செய்யாமலே கீழ்நோக்கித் தள்ளும் பதார்த்தம் அல்லது குணம் 'ஸ்ரம்ஸநம்' எனப்படும். அது சரக்கொன்றை போன்றது. 4½.

பேதநம்:—வாதாதி தோஷங்களால் இறுகிப்போய் குடல்களில் சிக்கிக்கொண்டும், அல்லது சிக்கிக்கொள்ளாமலும் உள்ள மலத்தை உடைத்துக் கீழ்நோக்கித் தள்ளுங் குணமுடைய பதார்த்தம் 'பேதநம்' எனப்படும். அது கடுகரோஹிணியைப் போன்றதாம். 5½.

ரேசநமும் அல்லாத விரேசநம்:—பக்குவமானதும் பக்குவமாகாததுமான எல்லா மலத்தையும நிரவமாகச் செய்து வெளியில் கழித்து விடுங் குணமுடைய வஸ்துவானது 'ரேசநம்' எனப்படும். அது சிவதை வேரைப் போன்றது. 6½.

வமநம்:—கோளாறடைந்த பித்தத்தையாவது, கபத்தையாவது வலிய மேல்நோக்கி வெளிப்படுத்தும் குணம் அல்லது பொருள் 'வமகம்' என்றறியவும். அது மதநபலம் (மருக்காரை) போன்றதாம். 7½.

ஸம்ஸோதநம்:—குடலில் சேர்ந்திருக்கும் மலத்தை மேலாகவோ கீழாகவோ வெளிப்படுத்தும் குணம் அல்லது பதார்த்தம் 'தேஹ ஸம்ஸோதநம்' எனப்படும். அது தேவதாரிக் கனி போன்றது. 8½.

சேதநம்:—சரீரத்தினுள் தகாத விதமாகப் பற்றிக்கொண்டுள்ள கபாதி தோஷங்களை நன்கு வலிய அறுத்து நிவ்ருத்தி செய்வது 'சேதநம்' எனப்படும். அவை யவக்ஷாரம், மிளகு, சிலாஜது முதலியன. 9½.

லேகநம்:—தேஹத்திலுள்ள தாதுக்களையாவது தோஷங்களையாவது சோஷணம் செய்து கல்லி வெளிப்படுத்துவது 'லேகநம்' என்று கூறப்படும். அவை தேன், வெண்ணீர், வசம்பு, யவதானியம் முதலியன. 10½.

க்ராஹி:—உஷ்ண வீர்யத்தினால் தீபநம் பாசநமென்னும் குணங்களுடன் கூடியதாய், குடலிலுள்ளத் திரவ பதார்த்தங்களுக்கு வறட்சியை யுண்டாக்குவது 'க்ராஹி' எனப்படும். அவை சுக்கு, ஜீரகம், யானைத் திப்பிலி முதலியவை. 11½.

ஸ்தம்பநம்:—வறட்சி, சீதவீர்யம், கஷாய ரஸம், இலகுத்தன்மை இவற்றால் வாதத்தை விருத்தி செய்யும் பொருள் 'ஸ்தம்பநம்' எனப்படும். அவை வெட்பாலை, பெருவாகை முதலியவையாம். 12½.

ரஸாயநம்:—நிழத்தனத்தைத் தடுத்து வலிமையைக் கொடுத்து இதர ரோகங்களை யொழிக்கக்கூடியதை 'ரஸாயநம்' என்றறிக. அவை சீந்தில், ருத்ரஜீ யென்னும் அழுகண்ணி, குங்கிலியம், கடுக்காய் முதலியவை. 13½.

வாஜீகரம்:—ஸ்த்ரீகளிடம் விருப்பம் அதிகரிக்கச் செய்யும் வஸ்து 'வாஜீகரம்' எனப்படும். அவை பேராமுட்டி, காஞ்சோறி போன்றவை யாம். 14½.

---

1. வாஜீகரம் - இதையே வ்ருஷ்யம் என்றும் கூறுவர்.

சுக்கிலம் :—எந்த திரவ்யத்திலுல் சுக்ரம் விருத்தி யடையுமோ அது 'சுக்ரலம்' [1] எனப்படும். அவையாவன :—அமுக்கிரங்கிழங்கு, நிலப் பனங்கிழங்கு, சர்க்கரை, தண்ணீர்விட்டாங்கிழங்கு, பால், உளுந்து, சேராங்கொட்டை ; இவை சுக்ரத்தை விருத்தி பண்ணுவதுடன், அதை வெளிப்படுத்துங் குணமுமுடையன. 15—16½.

ஆர்த்தவ ஜநகமும், ஸ்தம்பநமும் :—கனிந்த கண்டங்கத்தரிக்காயானது ஸ்த்ரீகளுக்கு ஆர்த்தவத்தை உண்டுபண்ணி வெளிப்படுத்தும் ; ஜாதிக்காய் அதைக் குறைக்கும்; கடுக்காய் சோஷணம் பண்ணிவிடும். 17½.

ஸ்ரோக்ஷணம் :—தேஹத்தில் நுண்ணிய துவாரங்களிலும் ஊடுருவிச் செல்லும் குணமுடையது 'ஸ்ரோக்ஷணம்' எனப்படும். அவை இந்துப்பு, தேன், வேம்பு, ஆமணக்கெண்ணெய் முதலியன. 18½.

வ்யவாயி :—எதை உபயோகித்தவுடனே அதன் சக்தி உடலெல்லாம் வியாபித்து, பிறகு அப்பதார்த்தம் ஜீர்ணமாகுமோ, அது 'வ்யவாயி' எனப்படுகிறது. அவை கஞ்ஜா, அபிணி முதலியன. 19½.

விகாஸி :—எது ஸந்தி பந்தங்களே நெகிழச் செய்து, ஓஜஸ் என்னும் வீர்யத்தையும் தாதுக்களிலிருந்து விலக்கிவிடுங்குணமுடையதோ, அப் பொருள் 'விகாஸி' எனப்படும். அது பாக்கு, கோத்ரவம் முதலியதைப் போன்றது. 20½.

மதகாரி :—தமோ குணம் மேலிட்டு புத்தியைப் போக்குந்தன்மையதான வஸ்து 'மதகாரி' எனப்படும். அது மத்யம், கள் முதலியதைப் போன்றது; மேலும் வ்யவாயி, விகாஸி, ஸ்ரோக்ஷணம், சேதநம் என்னும் குணமுடைய வஸ்துக்களும் மதகாரியாம். 21, 22.

யோகவாஹி :—மிக உஷ்ண வீர்யமும் உயிரைப் போக்குங் குணமுமுடைய விஷபதார்த்தம் 'யோக வாஹி' எனப்படும். 22½.

ப்ரமாதி :—தன் வீர்யத்திலுல் நாடிகளிற்சேர்ந்துள்ள தோஷங்களே வெளிப்படுத்துங் குணமுடைய வஸ்து 'ப்ரமாதி' எனப்படும். அது மிளகு, வசம்பு முதலியதைப் போன்றதாம். 23½.

அபிஷ்யந்தி :—பசையிலுலும், குருகுணத்திலுலும் இரஸமென்னும் அன்னப்பசை ஒடுவதற்கான குழாய்களே அடைத்து, சரீரத்திற்குச் செழிப்டைத் தரும் வஸ்து 'அபிஷ்யந்தி' எனப்படும். அது தயிர் முதலியதைப் போன்றது. 24½.

ஐந்தாம் அத்தியாயம்.

சரீரம்—கலை முதலியவற்றின் விவரம்.

கலை :—தாதுக்களிலும் ஆசயங்களிலும் தேஹத்தைச் சுட்டிலுல் பக்குவ மாய் பசைபோன்றுள்ள பதார்த்தம் 'கலை' எனப்படும். 1.

தாதுமுதலியவற்றின் எண்ணிக்கைகள் :—மனித சரீரத்திலுள்ள தாது முதலியவற்றின் எண்ணிக்கைகள் பின்வருமாறு :—கலைகள் ஏழு,

1. சுக்ரம் அல்லது சுக்லம் – புருஷரது இந்ரியதாது.
2. ஆர்த்தவம் – ஸ்த்ரீகளது சோணிததாது. [சுக்ரதாது சோணித தாது இவ்விரண்டின் சேர்க்கையால் கர்ப்பம் ஏற்படுகிறது.]

ஆசயங்கள் ஏழு, காதுக்கள் ஏழு, தாது மலங்கள் ஏழு, உபசாதுக்கள் ஏழு, சர்மங்கள் ஏழு, சோஷங்கள் மூன்று, ஸ்ராயுக்கள் தொள்ளாயிரம், ஸந்திகள் இரண்டாயிரத்திப்பத்து, எலும்புகள் முன்னூறு, மர்மங்கள் நூற்றேழு, சிரைகள் எழுநூறு, இரஸவஹங்களான தமனிகள் இருப்பத்திலுலு, மாம்ஸபேசிகள் புருடருக்கு ஐன்னூறு, ஸ்திரீகளுக்கு ஐன்னூற்றிருபது, மாம்ஸகண்டாங்கள் பதிலுறு; புருடருக்குச் சரீரத்தில் பத்து ஸ்ரோதஸ் லுகள். சுருங்கக் கூறிய இவைகளேயே விவரமாகக் கூறுகிறேரும். 2—6.

ஏழு கலைகள் :—மாம்ஸதரா, ரக்ததரா, மேதோதரா, யக்ருத்தரா அல்லது ப்லீஹதரா, அந்த்ரதரா, அக்னிதரா, சுக்ரதரா என்று கலைகள் ஏழுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன.[1] 7½.

ஏழு ஆசயங்கள் :—மார்புக்குள் கபாசயமும், அதற்குக் கீழ் ஆமாசயமும், நாபிக்குமேல் சிறிது இடது பாகத்தில் உக்ன்யாசயமும், அதற்கு மேலுள்ள நிலமென்னும் பித்தாசயத்திற்குக் கீழ் வாதாசயமும், அதற்கும் கீழ் மலாசயமும், அதன் கீழ் வஸ்திபென்னும் மூத்ராசயமும், மார்புக்குள் ஹ்ருதாதாரமான இரத்தாசயமும் ஆக ஏழுவிதங்களாக ஆசயங்கள் வகுக்கப் பட்டுள. கர்ப்பம் தரிக்கும் அவயவம் கர்ப்பாசயமென்றும், மூலப்பாலுண் டாகும் அவயங்கள் இரண்டும் ஸ்தன்யாசயங்களென்றும், ஸ்த்ரீகளுக்குப் புருடரைவிட மூன்று ஆசயங்கள் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன.[2] 8–11.

ஏழு தாதுக்கள் :—ரஸம்,[3] ரக்தம், மாம்ஸம், மேதஸ்,[4] எலும்பு, மஜ்ஜை,[5] சுக்லம் என்கிற இவ்வேழும் தாதுக்கள் எனப்படும். இவை யெல்லாம் பாசகமென்னும் பித்தத்தின் காங்கையிலுல் பக்குவம் பண்ணப் பட்டு, ஒன்றிலிருந்தொன்றாய் உற்பத்தியாகின்றன; அதாவது—ரஸத்திலி ருந்து ரக்தமும், ரக்தத்திலிருந்து மாம்ஸமும், மாம்ஸத்திலிருந்து மேதஸ் லுமும், மேதஸ்லிலிருந்து எலும்பும், எலும்பிலிருந்து மஜ்ஜையும், மஜ்ஜையி லிருந்து சுக்லமும் உண்டாகின்றன. 12, 13.

ஏழு மலங்கள் :—(1) நாக்கு, கண், தவடையின் உட்பாகம் இவ் விடங் களிலுண்டாகும் நிரவதார்த்தங்கள்; (2) அன்னரஸம் இரக்தமாக மாறும் பொழுது அதற்குச் சென்னிறம் தரும் இரஞ்ஜகம் என்கிற பித்தம்; (3) தாது களுக்குள் உண்டாகும் குறும்பி; (4) நகக்கு பற்கள் அக்குள் இவற்றில் சேரும் மலம்; (5) நகங்களிலும் நேத்திரங்களிலும் சேரும் அழுக்கு; (6) வாயிலுண் டாகும் பசை; (7) சரீரத்திலுண்டாகும் கட்டிகள்; இவை முறையே ஏழு தாதுக்களிலிருந்துமுண்டாகும் ஏழு மலங்களாகும். 14, 15.

---

1. ஒவ்வொரு தாதுவின் நுண்ணிய அம்சங்களேயும் போர்த்துள்ள மிக மெல்லிய சர்மம்போன்ற பசையுள்ள பாகம் கலையெனப்படுகிறது.
2. கபம் முதலியது உண்டாய் நிலைத்திருக்கவும் உணவு முதலியன தங்கவும் ஆதாரமான பாகங்கள் ஆசயங்களெனப்படும். உணவுகள் நன்றுகப் பக்குவமாவதற்கு வேண்டிய பித்தம் அக்னியென்றும், அது தங்கு மிடம் அக்னியாசயம் அல்லது பித்தாசயமென்றும் சொல்லப்படும்.
3. குடலில் வெண்மையாயும் திரவமாயும் இரத்தமாக மாறக் கூடிய நிலைமையிலுமுள்ள பக்குவமான உணவின் ஸாராம்சம் இரஸமெனப்படும்.
4. மேதஸ் — கொழுப்பு.
5. மஜ்ஜை — எலும்புகளுக்குள் இருக்கும் புரசலான தாது.

ஏழு உபதாதுக்கள்:—(1) ஸ்திரீகளுக்கு அந்தந்த காலத்தில் உற்பத்தியாய், பின்னர் தானே க்ஷீணிக்கும் ஸ்தன்யம், (2) மாதவிடாயில் வெளியாகும் இரஜஸ் என்கிற திரவம், (3) சுத்த மாம்ஸங்களிலிருந்துண்டாகும் வஸை என்னும் தைலம்போன்ற பதார்த்தம், (4) வியர்வை, (5) பற்கள், (6) மயிர்கள், (7) ஓஜஸ் இவை முறையே ஏழு தாதுக்களிலிருந்து உற்பத்தியாவதால் ஏழு உப தாதுக்கள் எனப்படுகின்றன, இவற்றுள் 'ஓஜஸ்' என்னும் உப தாது உடலெங்கும் பரவியது, சீதவீர்யமானது, பசையுள்ளது, உடலமைப்புக்கு வேண்டிய வைரப்பொருளடங்கியது, ஸௌம்யகுணமுள்ளது, தேஹத்திற்கு வலிவையும் புஷ்டியையும் கொடுக்கக் கூடியது. 16—18

ஏழு சர்மங்கள்:—மாம்ஸங்களை மூடிய 'அவபாஸினீ' என்கிற முதல் சர்மம் விரணம் என்கிற தோஷலுண்டாவதற்கு ஆதாரமானது. 'லோஹிதா' என்கிற இரண்டாம் சர்மம் நிலகாலகமென்னும் பரு உற்பத்தியாவதற்கு ஆதாரமானது. 'ச்வேதா' என்கிற மூன்றாம் சர்மம் சர்மதளமென்கிற படை உண்டாவதற்கு ஆதாரமாம். நான்காவது 'தாம்ரா' எனப்படுகிறது; அது நிலாஸம் ச்வித்ரம் என்கிற வெண்குஷ்டமுண்டாகுமிடமாகும். ஐந்தாவது 'வேதநீ' என்றும், எல்லாவித குஷ்டங்களும் உண்டாவதற்கு அதுவே ஆதாரமென்றும் கூறப்படுகிறது. 'ரோஹிணீ' என்கிற ஆறாவது சர்மம் கிரந்தி, கண்டமாலை, அபசீ இவை உற்பத்தியாவதற்கு ஆதாரமாம். ஏழாவது சர்மம் 'ஸத்தாலா' எனப்படுகிறது; வித்ரதி முதலியவை இதை ஆச்ரயித்துண்டாகும். இவ்விதம் ஏழு சர்மங்களும் சேர்ந்து இரண்டு கெல்லளவு கனமுள்ளனவாம். 19—22.

மூன்று தோஷங்கள்:—வாய, பித்தம், கபம் என்கிற இம்மூன்றும் 'தோஷங்கள்' என்றும், 'தாதுக்கள்' என்றும், 'மலங்கள்' என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வொவ்வொன்றும் ஐந்துவிதமாகப் பிரிக்கப்படும். இவை முதலில் விகாரமடைந்தே, பிறகு சரீரம் தூஷிக்கப்படுமாகையால் 'தோஷங்கள்' என்றும், சரீரத்தைத் தங்குவதற்கு ஆதாரமாயிருப்பதால் 'தாதுக்கள்' என்றும், மலங்கள் சரீரத்தில் சேருவதற்குக் காரணமாயிருப்பதால் 'மலங்கள்' என்றும் மொழியப்படுவதாயறியவும். பித்தம் சுதந்திரமில்லாதது; கபமும் சுதந்திரமற்றது; அவ்விரண்டும் ஏழு தாதுக்களும் ஸ்வேதம் முதலிய மலங்களும் பராதீனமான செயல்களையுடையவை; ஆகையால் இவையனைத்தும் வாயுவால் இழுக்கப்படும் மேகம் போல் வாதமென்கிற தோஷத்தினால் எவ்விதம் செலுத்தப்படுமோ அவ்விதமெல்லாம் செல்லுந் தன்மையுடையனவாம். 23—25.

---

1. சரீரத்தில் அவ்வவ்விடங்களுக்கு இயற்கையாயுள்ள வர்ணங்களை விளக்கக்கூடியதாயிருப்பதால் 'அவபாஸினீ' என்றும், நிறத்தில் சிவந்திருப்பதால் 'லோஹிதா' என்றும், அவ்விதமே வெண்மையாயிருப்பது 'ச்வேதா' என்றும், வெண்சிவப்பு கலந்தது 'தாம்ரா' என்றும், பரிசம் முதலியவற்றால் விஷயங்களைப் புத்திக்கு உணர்த்துவது 'வேதநீ' என்றும், வீக்கங்கொள்வதற்கும் ஆறுவதற்கும் தகுந்ததாயிருப்பதால் 'ரோஹிணீ' என்றும், தடிப்பதாக இருப்பதால் 'ஸத்தூலா' என்றும் க்ரமமாக பெயர்கள் ஏற்பட்டன. இங்கு 'ஸத்தூலா' எனப்படுவது ஸுச்ருதஸம்ஹிதையில் 'மாம்ஸதரா' எனக் கூறப்படுகிறது.

வாயு அல்லது வாதம்:—வாயுவானது, தாதுக்களும் அவயவங்களும் தோஷம் முதலியவைகளும் செய்ய வேண்டிய காரியங்களை ஒழுங்காக வகுத்து நடத்தும் சுதந்திர சக்தி யுடையதாயிருப்பதால், சரீரத்திலடங்கிய தோஷ - தாதுக்களுள் இதுவே மிகச் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இது தமோகுணம், ஸூக்ஷ்மம், சீதவீர்யம், லகுத்வம், இலகு, சலகம் ஆகிய தன்மையுள்ளது. இவ்வாயு அபாநம், ஸமாநம், ப்ராணம், உதாநம், வ்யாநம் என்று ஐந்து வகையானது; இவற்றுள் அபாந வாயுவுக்குக் குடலுக்குள் மலாசயமென்னும் பாகமும், ஸமாநத்திற்குப் பக்வாசயமும், ப்ராண வாயுவுக்கு இருதயமும், உதாநவாதத்திற்குக் கண்டமும், வ்யாநவாதத்திற்கு ஸர்வசரீரமும் முக்கிய ஸ்தானங்களாகக் கூறப்படுகின்றன. 26—28

பித்தம்:—பித்தமானது உஷ்ணவீர்யம் திரவத்தன்மை, மஞ்சள் அல்லது நீலப்பசுமை நிறம், இரஜோகுணம், கசப்பும் காரமுமான இரஸம் இத்தன்மைகளுடையது; எரிக்கப்பட்டபின் புளிப்பு ரஸத்தைப் பெறக் கூடியது. குடலில் பக்வாசயமென்கிற இடத்திற்கருகில்[2] எள்ளிலே போன்ற நிலமென்கிற பித்தாசயத்திலடங்கிய பித்தமானது 'பாசகம்' என்றும், லேபகமென்னும் பூச்சுக்களையும் அப்யங்கத்தி லுபயோகிக்கப்படும் தைலம் முதலியவற்றையும் பக்குவம் செய்யவல்லதும், தேஹத்திற்கு ஒருவித காந்தியுண்டுபண்ணுவதுமான பித்தம் 'ப்ராஜகம்' என்றும், யக்ருத் என்னும் கலஸ்ரஸுக்குள் உண்டாவதும், அன்னரஸத்திற்கு நிறத்தைக் கொடுத்து இரத்தமாகச் செய்வதுமான பித்தம் 'ரஞ்ஜகம' என்றும், இரண்டு நேத்திரங்களுக்கும் ரூபங்களைப் பார்க்கக்கூடிய சக்தியைக் கொடுக்கும் பித்தம் 'ஆலோசகம்' என்றும், அறிவையும், விசேஷமான புத்தியையும் உண்டாக்கக்கூடியதாய் இருதயத்திலிருக்கும் ஒருவித பித்தம் 'ஸாதகம்' என்றும், ஆக பித்தம் ஐந்து விதமாகப் பகுக்கப்படுகின்றது. 29—32.½

கபம் அல்லது ச்லேஷ்மம்:—கபம் குழகுழப்பானது, பாரமுள்ளது, வெண்மையானது, பசையுள்ளது, சீதவீர்யமுடையது, ஸ்நிக்தகுணம் மேலிட்டது, இயற்கையில் மதுரரஸமுள்ளது, தவிர்க்கப்பட்டால் இலவண ரஸமுடையது. இதில் 'க்லேதகம்' என்கிற கபம் ஆமாசயமென்னும் இரைப்பையிலும், 'ஸ்நேஹநகம்' என்பது சிரஸ்ஸிலும், 'ரஸகம்' என்பது கண்டத்திலும், 'அவலம்பகம்' எனபது இருதயத்திலும், 'ச்லேஷகம்' என்பது ஸந்திகளிலும் இருந்துகொண்டு, தேஹத்திற்கு வன்மையையும் எல்லா அவயவங்களுக்கும் திறமையையும் உண்டுபண்ணும்,[3] 33—35½.

ஸ்நாயு, ஸிரை, எலும்பு:—தேஹத்தில் மாம்ஸம், எலும்பு, மேதஸ் இவைகளை ஒன்றோடொன்று பிணைத்துக் கட்டுவதற்குபயோகமான பந்தந

---

1. மலாசயம்—உணவின் கழிவுப்பொருட்கள் சேர்ந்திருக்கும் குதத்திற்கு மேலுள்ள குடலின் ஒரு பாகம்.

2. உணவுகள் பித்தம் முதலியவைகளுடன் கூடி ஜீர்ணமாகுமிடமான சிறுகுடலைச் சேர்ந்த ஓர் பாகம் பக்வாசயம் எனப்படும்.

3. காக்படன் கூறும் 'தர்ப்பகம்' என்பதற்குப் பதிலாக ஸ்நேஹகமும், 'போதகம்' என்பதற்குப் பதிலாக ரஸகமும் இங்கு கூறப்படுகின்றன. ரஸகம் என்பதற்கு இங்கே கண்டம் ஸ்தானம். போதகத்திற்கு அங்கே நாக்கு ஸ்தானம்.

வஸ்து 'ஸ்நாயு' என்றும், தனித்தனி அவயவங்கள் ஒன்றோடொன்று சிலேஷ்ம வஸ்துவுடன் சேர்ந்து கட்டுண்டிருக்கும் சரீரபாகங்கள் 'ஸந்திகள்' என்றும் சொல்லப்படுகின்றன. சரீரத்திலுள்ள இதர தாதுக்களெல்லாவற்றிற்கும் ஆகாரமாய் தேஹம் திடமாய் நிற்பதற்கு 'எலும்புகள்' உபயோகமாயிருக்கின்றன. 36—37.

மர்மம், ஸிரை, தமநி, மாம்ஸபேசீ முதலியவை :—பெரும்பாலும் ஜீவாதாரமான ஸ்தானங்கள் 'மர்மங்கள்' என்று முனிவர்கள் அறிந்து மொழிந்திருக்கின்றனர். ஸந்திகளே பந்தம் செய்யும் நார்கள் 'ஸ்நாயுக்கள்' என்றும்,[1] வாத பித்த கபங்களென்னும் தோஷங்கள் அல்லது தாதுக்கள் ஓடுவதற்கேற்ற நாடிகள் 'ஸிரைகள்' என்றும் வழங்கப்படுகின்றன. இரஸமென்கிற தாதுவையும் விசேஷமாய் வாயுவையும் தேஹமெங்கும் வேகத்துடன் பரவச்செய்யும் குழல்கள் 'தமநிகள்' எனப்படும்.[2] பிராணிகளின் அவயவங்களுக்கு வன்மையையும் வேலைகளைச் செய்வதற்கேற்ற பிடிமானமும் உண்டுபண்ணும் தாதுக்களே 'மாம்ஸபேசிகள்' என்பார்கள்.[3] அவைகளே வேண்டியவிதமாகநீட்டவும்சுருக்கவும் உபயோகமாகும்படி ஒருமிக்கச்சேர்ந்த மாம்ஸபேசிகளின் நார்கள் 'கண்டரங்கள்' என்று கூறப்படுகின்றன. மூக்கு, நேத்திரங்கள், காதுகள் இவற்றின் இரண்டிரண்டு துவாரங்களும், மேஹநம் அல்லது யோனி. அபாநதேசம், முகம் இவற்றின் ஒவ்வொரு துவாரமும், சிரஸ்ஸில் ஒரு துவாரமும். ஸ்த்ரீகளுக்கு விசேஷமாக ஸ்தனங்களில் இரண்டும், கருப்பையின் வழியில் மற்றொன்றும் ஆக இப்பதின்மூன்று துவாரங்களும் 'ஸ்ரோதஸ்ஸுகள்' என்று சொல்லப்படுகின்றன. பிராணிகளுக்குச் சர்மத்தில் தூண்ணிய வேறு துவாரங்களும் அளவிறந்தவையுண்டு. 38—42.

புப்புஸம், பிலீஹம், யக்நத் :—'புப்புஸம்' என்கிற அவயவம் உதாந வாயுவுக்கு ஆதாரமாய், மார்பின் உட்புறத்தில் இடது புறமாயமைந்திருக்கிறது.[5] இரத்தம் ஓடுவதற்கு ஆதாரமான ஸிரைகளென்னும் நாளங்களுக்கு ஒருவாறு மூலமாயிருக்கும் 'ப்லீஹம்' என்கிற அவயவம் வயிற்றினுள் இடது பக்கத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.[6] வயிற்றினுள் வலது பாரிசத்தில் அமைந்துள்ள 'யக்ருத்' அல்லது கல்லீரல் என்ற அவயவம்

1. ஸ்நாயு—மாம்ஸபேசிகளே எலும்புகளுடன் சேர்த்துப் பிணைப்பதற்குபயோகமான வன்மையும் வெண்மை நிறமுமுள்ள நார்.

2. ஸிரைகள்—தாதுக்களிலிருந்து (தோஷங்கள்) கழிவுப் பொருட்கள் வெளிப்பட்டு ஓடுவதற்கேற்ற குழாய்கள்.

3. தமநிகள்—சுத்த ரத்தம் ஓடும் இரத்தக் குழாய்கள்.

4. மாம்ஸபேசிகள்—தசைநார்கள்.

5. புப்புஸம் என்பதே ச்வாஸாசயம். மார்பினுள் இடது புறத்திலிருக்கும் ச்வாஸாசயம் புப்புஸமென்றும், வலது புறத்திலிருப்பது உண்டுகென்றும் சிலர். ஆனால் ச்வாஸாசயம் இரண்டுக்கும் புப்புஸமென்றே பொதுக்கொள்கை.

6. ப்லீஹத்தில் அநேகம் இரத்தக்குழாய்கள் பரவியிருப்பதுடன், அதில் இரத்தத்திலுள்ள 'சோணிததாது' விசேஷமாய் உற்பத்தியாவதால் அதை இரத்த நாளங்களுக்கு மூலமென்று கருதினர்போலும்.

இரஞ்ஜகமென்னும் பசுமை நிறமுண்டாகக்கூடிய பித்தத்தை யுண்டாக்கும்; முதலில் இரத்தம் ஊடுருவிச் செல்வதற்கும் ஆதாரமாயுள்ளது. 43—44.

தீலம், பிருக்கம், ஹ்ருதயம் முதலியன :—வயிற்றினுள் ஒரு வித திரவம் ஓடுவதற்கான நாளங்களுக்கு மூலமாகவும், நீர்வெட்டையைத் தணிக்கக் கூடியதுமான அவயவம் 'தீலம்'[1] என்றும், 'வ்ருக்கங்கள்' என்கிற இரண்டு ஸந்திகள் வயிற்றினடியில் மேஸ் என்னும் நிணநீரைப் பொசிக்க நிரப்புவதற்காக அமைத்திருக்கின்றன வென்றும் கூறப்படுகிறது.[2] வ்ருக்கங்கள் அல்லது 'ப்ரோஜங்கள்' என்கிற இரண்டு ஸந்திகள் வீர்யவாஹி யென்கிற சுக்லம் ஓடுவதற்கேற்ற நாடிக் குழல்களும், சுக்லமுண்டாக்குவதற்கும் ஆதாரமானவை. சுக்லமும் மூத்ரமும் வெளிவருவதற்கு வழியாகவும் கர்ப்பத்தையுண்டாக்கும் உபகாணமாகவும் ஏற்பட்டிருக்கும் அவயவம் லிங்கமென்று கூறப்படுகிறது. 'ஹ்ருதயமானது' சைதன்யமென்கிற உணர்ச்சிக்கு ஒருவிகஸ்தானமென்றும், ஓஜஸ் என்னும் தாதுவுக்கு ஆச்ரய மென்றும் கருதப்படுகிறது.[4] 45—46½.

ஸிரை முதலியவற்றில் தரீரம் போஷிக்கப்படுவது :—ஸிரைகளும் தமநிகளும் நாபியிலிருந்து கிளம்பி,[5] சரீரமெங்கும் பரவுகின்றன. அந்த ஸிரை முதலியவை, வாயுவினால் தூண்டப்பட்டு, அந்தந்த அவயவங்களுக்கு வேண்டிய காதுப்பொருட்களை யின்றுக் கொடுத்து எப்பொழுதும் சரீரத்தைப் போஷிப்பிக்கும் இயல்புடையன. நாபியில் வந்து சேரும் பிராண வாயு இருதயகமலத்தின் இடையிலுள்ள பாகத்தைப் பரிசித்து, பிறகு ஆகாயத்திலுள்ள அமுதமெனத் தகும் சுத்தவாயுவைச் சரீரம் உட்கொள்வதற்காக, உள்ளடங்கிய வாயுவானது கண்டத்தை விட்டு வெளி வருகின்றது; அவ்விதம் ஆகாயத்திலுள்ள அமிருதவாயுவானது உச்சுவாஸ ரூபமாய் உறிஞ்சப்பட்டு வேகமாக உட்செல்லுகின்றது இவ்வித வாயுவே தேஹ மனஸ்தையும் செழிக்கச்செய்து, ஜாடராக்கினியையும் விருத்தி செய்கின்றது. 47—49½.

ஆயுளும், இறப்பும் :—சரீரத்திற்கும் முற்கூறிய பிராணவாயு முதலியவற்றிற்கும் உள்ள ஸம்பந்தத்திலேயே ஆயுள் ஏற்படுகிறதென்றும், காலக்கிர

1. இரத்தம் ஊடுருவிச் செல்வதற்கு ஆதாரமானதென்று கூறுவதால், குடலிலிருந்து அன்னரஸத்தை நிரஞ்சித்துக்கொண்டு யக்ருத்கண்டத்தில் நுழைந்துபோகும் ஒருவித முக்கிய இரத்தக்குழாய் குறிக்கப்படுகிறதென்க

2. 'தீலம்' என்பதை சிலர் பித்தாசயம் அல்லது பித்தப்பை என்கின்றனர். சார்ங்கதரன் கொள்கைப்படி எள்ளிலேபோல் நீண்டிருக்கும் க்லோமா அல்லது கணையமே தீலம் எனத் தெரிகிறது.

3. 'வ்ருக்கங்கள்' மூத்ரக்காய்களென்று வழங்கப்படுகின்றன. ஆனால் இவை மூத்ரத்தை யுண்டுபண்ணுபவைகளேயன்றி மேதஸ்ஸை உண்டாக்குபவையல்ல.

4. இருதயமானது இரத்தக்குழாய்களுக்கெல்லாம் நாபிஸ்தானம் போல் இருந்துகொண்டு இரத்தத்தை உடல்முழுதும் எப்பொழுதும் பரவச் செய்கிறது; ஆனால் உணர்ச்சிக்கும் இது ஆதாரமெனப்படுகிறது.

5. இங்கு இரத்தக்குழாய் முதலியவைகளுக்கு மூலஸ்தானமான இடமே நாபியெனப்படுகிறது.

மத்தில் அவைகளுக்குண்டான ஸம்பந்தம் விலகி அவை வெவ்வேறாகப் பிரித்து விடுவதாலேயே மரணமென்பது உண்டாகிறதென்றும் அறிஞர் கூறுகின்றனர். பூமியில் எக்காலும் என்றைக்கும் இறக்காமலிருக்கக் கூடிய பிராணி ஒன்றுண்டாவதில்லை. ஆகையால் மரணம் தடுக்கக் கூடாதது. என்றாலும், ரோகங்களை வரவிடாமல் தடுக்கலாம். 50—51½.

வியாதிகளை விலக்குதல் :—வியாதி சேர்ந்திருக்கையில் அதற்குப் பரிஹாரம் செய்யாமலிருந்தால், சிகித்ஸையினால் நிவருத்திக்கக் கூடிய ரோகங்களும் சிகித்ஸைக்கு வசப்படாமல் 'யாப்பம்' என்ற நிலைமையை யடைந்துவிடும். யாப்பமாயிருக்கும் ரோகம் அஸாத்யமாகவும், அவ்விதமே அஸாத்யமான ரோகம் சீக்கிரத்தில் பிராணஹரமாகவும் ஆகும். ஆகையால், மனிதன் கர்மவிபாகங்களை[2] தன்னறிந்து பிணிகள் அணுகாமல் சரீரத்தை இரக்ஷித்து வரவேண்டும். எனெனில் அறம் பொருள் இன்பம் வீடு என்கின்ற நான்குவித புருஷார்த்தங்களுக்கும் உடலே முதற் கருவியாகிறது. 52—53½.

ரோகாரோக்கியங்களின் காரணம் :—தாதுக்கள், மலங்கள், தோஷங்கள் இவை சமானாவஸ்தைகளடைந்தால் சரீரத்திற்கு அழிவுண்டாகும்; அவை இயற்கையான குறித்த அளவிலே இருந்துவந்தால் சரீரத்திற்கு வலிவையும் விருத்தியையும் இன்பத்தையும் அளிக்குமென்றறிக. 54.

ஸ்ருஷ்டி கிரமம்.

மூலப்பிரக்ருதி முதலியது :—உலகத்திற்கு முதற்காரணமாயிருப்பவனும், விருப்பு வெறுப்புகளொழிந்தவனும், ஞானனந்தைகஸ்வரூபியுமான பரமபுருஷனது அதீனத்தில், சூரியனுக்குப் பிரதிச்சாயையைப்போல் 'மூலப் பிரக்ருதி' என்று ஒன்றுண்டு. இந்தப் பிரக்ருதி சுயம் அசேதனமாயிருந்தாலும், பரமாத்மாவுக்குள்ள சைதன்யத்தின் ஸம்பந்தத்தினால், ஒருவித நாடகம்போல் அபித்தியமான இவ்வுலக மனைத்தையும் படைத்தது. ஸர்வ ஜகத் காரணமான இச்சப்பிரக்ருதி இச்சாமயமானதும் மஹத்தென்னும் மற்றொரு பெயருள்ளதுமான 'புத்தி' யென்னும் தத்துவத்தை முதலில் உண்டாக்கிறது. இந்த புத்தியிலிருந்து 'அஹங்காரம்' என்னும் தத்துவம் பிறகு உண்டாயிற்று. பின்னர், இது ஸாத்விகாஹங்காரம் இராஜஸாஹங்காரம், தாமஸாஹங்காரம் என்று மூன்று விதமாகப் பிரிந்தது. 55—58.

---

1. ஸாத்யம், கஷ்ட ஸாத்யம், யாப்பம், அஸாத்யம் என்று வியாதி நிலைமை நான்கு விதம். (1) சிகித்ஸையினால் எளிதில் பரிஹரிக்கக்கூடிய ரோகம் ஸாத்யம். (2) விசேஷமான சிகித்ஸைகளால் வெகு கஷ்டப்பட்டு நிவருத்தி வெய்யக்கூடியது கஷ்ட ஸாத்யம். (3) சிகித்ஸை செய்தும் ரோகம் நிச்சேஷமாக சாந்தியடையாமல் சிகித்ஸாபலத்தினால் சீக்கிரம் மரணம் நேரிடாமல் காலங்கழித்துவரும் ரோகம் யாப்யம். (4) எவ்வித சிகித்ஸையினாலும் சிறிதும் நிவருத்திக்க முடியாதது அஸாத்ய ரோகம்.

2. பூர்வஜன்மத்திற் செய்த கர்மங்களுக்குத் தகுந்த விதமே இந்த ஜன்மத்தில் ரோகங்கள் உண்டாகுமென்று கர்மவிபாகம் என்கிற சாஸ்திரம் கூறுகின்றது. எவ்வெவ்வித கர்மங்களால் எவ்வெவ்வித ரோகங்கள் உண்டாகக்கூடுமென்று 'வீரவிஹ்ரமாவலோகநம்' முதலிய கர்மவிபாக கிரந்தங்களில் விவரங்கள் கூறப்பட்டுள.

ஏகாதசேந்திரியங்கள் :—ஸாத்விக - ராஜஸாஹங்காரங்களின் சேர்க்கையினால் பதினொரு இந்திரியங்கள் உண்டாயின. அவற்றுள் செவி, சர்மம், நேத்திரம், நாக்கு, நாசி என்னும் இவ்வைந்தும் ஞானேந்திரியங்களென்றும், வாக்கு, கரம், பாதம், உபஸ்தம், குதம் என்கிற இவ்வைந்தும் கர்மேந்திரியங்களென்றும், மனதென்னும் பதினொன்றாவது இந்திரியம் இரு விதமான தன்மையையும் பெற்றதென்றும் வழங்கப்படும். 59—60½.

பஞ்சதன்மாத்திரைகள் :—பிறகு, ஸாத்விக தாமஸ அஹங்காரங்களின் சேர்க்கையினால் தன்மாத்திரைகள் என்னும் ஐந்து துணுக்கிய தத்துவங்கள் உண்டாயின. அவை :—சப்த தன்மாத்திரை, ஸ்பர்ச தன்மாத்திரை, ரூப தன்மாத்திரை, ரஸ தன்மாத்திரை, கந்த தன்மாத்திரை என்பவைகளே. 61—62½.

பஞ்சபூதங்கள் முதலியன :—அப்பஞ்ச தன்மாத்திரைகளிலிருந்து முறையே ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருதுவீ என்று ஐந்து பூதங்கள் உண்டாயின. ஸ்தூல ரூபமான இந்த ஐந்து பூதங்களுடையவும் இயற்கைக் குணங்களான சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற ஐந்தும் பஞ்ச தன்மாத்திரைகளின் 'விசேஷங்கள்' எனப்படும். சப்தம் முதலிய இந்த ஐந்து 'விசேஷங்களையும்' ஐந்து ஞானேந்திரியங்களுக்கு ஸம்பந்தமான ஐந்து 'விஷயங்கள்' என்றும் வழங்குவர். வாக்கு, கரம், பாதம், உபஸ்தம், குதம் என்கிற ஐந்து கர்மேந்திரியங்களுக்கும் முறையே பேசுதல், கிரஹித்தல், ஸஞ்சரித்தல், இன்பமனுபவித்தல், மலவிஸர்ஜநம் செய்தல் என்று ஏற்பட்டுள்ள ஐந்து கர்மங்கள் அவற்றின் 'விஷயங்கள்' எனப்படும். 63—66.

ஒருபதினொரு தத்துவங்கள் :—ஈச்வரனை ஆச்ரயித்திருக்கும் மூலப் பிரக்ருதிக்கு பிரதாநம், பிரக்ருதி, சக்தி, அவிக்ருதி என்று வேறு பெயர்களுமுண்டு. மஹத் அல்லது புத்தி, அஹங்காரம், பஞ்சதன்மாத்திரைகள் ஆகிய ஏழு தத்துவங்களும் தனித்தனியே ஒருவகையில் பிரக்ருதிகளாகவும், மற்றொரு வகையில் விக்ருதிகளாகவும் நேரிடுவதால், இவை 'பிரக்ருதி விக்ருதிகள்' என்று மொழியப்படும். பதினேந்திரியங்களும், பஞ்சமஹாபூதங்களும், ஆக இப்பதினொறு தத்துவங்களும் 'விக்ருதிகள்' அல்லது 'விகாரங்கள்' எனப்படும். ஆக மூலப்பிரகருதி ஒன்று, பிரக்ருதி விக்ருதிகள் ஏழு, விக்ருதிகள் பதினொறு; இவையெல்லாம் சேர்ந்து இருபத்தினொரு தத்துவங்களென்றும், உலகமனைத்திலும் வியாபித்திருப்பவை இவைகளேயென்றும் அறிஞர் கூறுகின்றனர். 67—69.

ஜீவாத்மாவும் அதன் நிலைமையும் :—அழிவில்லா நித்யபுருஷனான ஜீவாத்மா இவ்விருபத்தினொரு தத்துவங்களாகிய சரீரமென்னும் கிருஹத்தினுள், மனதாகும் தனது தூதனுடன் சேர்ந்து வாஸம் செய்கிறான். ஆதலால், இந்த ஜீவாத்மாவே நல்வினை தீவினைகள், இன்ப துன்பங்கள் முதலியவற்றால் சூழப்பட்டு, மனதாலும் கர்மங்களென்னும் மாயக்கயிறுகளாலும் கட்டப்பட்டு சரீரியென்றும் வழங்கப்படுகிறான். காமம், சினம், லோபம், மோஹம், அஹங்காரம், புத்தி அல்லது மஹத், பத்து இந்த்ரியங்கள் இவைகளெல்லாம் சரீரியென்கிற ஜீவாத்மாவைக் கட்டும் கருவிகளாயேற்பட்டிருக்கின்றன. இந்த ஜீவாத்மா அஜ்ஞானத்தினால் பந்தத்தையும், சரீரத்திலிருந்தாறே தனது ஸ்வரூபத்தையறியும் ஞானத்தையும்

பெறுவதால் மோக்ஷத்தையுமடைகிறான். இவ்விதம் கட்டுண்டிருக்கையில் ஜீவாத்மாவுக்கும் சரீரத்திற்கும் தன்பங்களே ரோகமே விலகிக்கின்றது. ஆரோக்யம் அவற்றின் இன்பத்திற்குக் காரணமாகும். 70—73.

ஆறாம் அத்தியாயம்.

உணவு ஜீர்ணமாகும் வகை முதலியது.

ஆஹாரம் ஜீர்ணமாவது :—உணவு முதலில் பிராணவாயுவினால் தள்ளப்பட்டு 'ஆமாசயம்' என்னும் இரைப்பையில் விழுந்து, அது அறு சுவையுடையதாயிருந்தாலும், முதலில் மதுரரஸமாக மாறி, நுரைத்துத் திரவத் தன்மையையும் பெறும். பிறகு, 'பாசகம்' என்கிற பித்தத்தினால் சமைக்கப்பட்டு, அம்லரஸமாக மாறும். பக்வாசயத்திற்கும் ஆமாசயத்திற இடையிலிருப்பதும், பித்ததராவென்கிற ஆறுவது சுவையாகக் கூறப்படுவதுமான 'கிரஹணீ' என்கிற இடத்தில் அவ்வுணவு விழுகின்றது. குடலினுளள 'ஜாடராக்னி' என்னும் பித்தத்தினால் பக்குவம் செய்யப்பட்டு, கடுரஸமாய் மாறுகிறது. இவ்விதம் உணவு க்ரமமாகப் பக்குவமாய் வந்தால் 'இரஸம்' என்னும் திரவமாகவும், பக்குவமாகாமற்போனால் 'ஆமம்' என்கிற ஒருவித தோஷமாகவும் பரிணமிக்கும். அங்குள்ள ஜாடராக்னியின் பலத்தினால் மறுபடியும் அந்த இரஸம் இனிய சுவையுள்ளதாகவும் அதிக எண்ணெய்ப் பசையுடையதாகவும் ஆய்விடும். நன்முகக் குடலில் பக்குவமான உணவின் இரஸம் அமுதத்திற்கு ஒப்பிடக்கூடியதாய் அகில தாதுக்களையும் போஷித்துவரும். ஜாடராக்னி மந்தமாயிருந்து உணவு தகுந்தவாறு பக்குவமாகாமற்போனால், அதன் இரஸம் கடுவும் அம்லமுமான இரஸத்தைப் பெற்று, விஷதன்மையையுமடைந்து, பலவித பிணிகளையும் உண்டாக்கும். 1—6.

மலங்கள் :—இவ்வாறு நன்கு ஜீர்ணமான உணவின் ஸாராம்சம் 'இரஸம்' ஆகவும், நிஸ்ஸாரமான கழிவுப் பொருள் 'மலம்' என்பதாகவும், சில திரவமான கழிவுகளாகவும் மாறிவிடுகின்றன. அந்த நீர்மயமான கழிவுப் பொருள் விரைகளென்கிற காரிரத்தக் குழாய்களின் மூலமாய் மூத்திராசயத்தையடைந்து மூத்திரமாக மாறி வெளிவருகின்றது. உணவின் திப்பியான மலம் பக்வாசயத்தின் அடியில் சேர்ந்து, அதற்குக் கீழே குதத்துவாரத்தில் அமைந்துள்ள மூன்று வலயங்களைப்போன்ற 'வலிகள்' என்று சொல்லப்படும் அவயவங்களால் வெளிப்படுத்தப்படும்; அவற்றுள் மேலுள்ள வலயம் 'பிரவாஹிணீ' என்றும், மத்தியிலுள்ளது 'ஸர்ஜகீ' என்றும், இறுதியிலிருப்பது 'கிராஹிகா' என்றும் கூறப்படும். 7—8½.

---

1. சிறுகுடலும், இரப்பையும் ஸந்திக்கும் இடத்திலுள்ள கபாடம் போன்ற பாகம் 'கிரஹணீ' எனப்படும். குடலில் பக்குவமாவதற்குத் தகுந்த உணவெல்லாம் ஒருவித திரவமாகும் வரையில் அதைச் சிறுகுடலில் புகவிடாமல் கிரஹித்து வைத்திருப்பதால் 'கிரஹணீ' என்று பெயர். இவ்விடம் கெடுவதால் உண்டாகும் ஒருவித அஜீர்ணரோகியும் 'கிரஹணீ' எனப்படும்.

2. குதம் என்கிற மலத்துவாரத்தில் மூன்றுவித தசைநார்களால் மூன்றுவித வலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இவற்றுள் மலத்தை வழுத்தித்

இரஸம் இரத்தமாக மாறுதல் :—உணவுகளின் ஸாரமான இரஸம் என்ற தாது முதலில் ஸமாநவாயுவினால் தள்ளப்பட்டு இருதயத்தையடைந்து, பிறகு இரஞ்ஜகம் என்கிற பித்தத்தினால் சென்னிறமடைந்து நல்ல இரத்தமாய் விடுகிறது. இரத்தம் சரீரமெங்கும் வியாபித்து உயிருக்கு உத்தம ஆதாரமாக ஆகிறது; அது சுபாவத்தில் குருகுணமும், பசையுள்ளதும், இடைவிடாது அசைந்தோடுந் தன்மையதாயும், சிறிது இனிய சுவையுடையதாயும் இருக்கும். ஏதேனும் காரணத்தினால் முறிவு பெறுமானால் பித்தம் போல் பசுமை நிறங்கொள்ளும். 9—10½.

தாதுக்களின் பரிணமம் :—இரஸம் முகலிய தாதுக்கள் பாசக பித்தத்தினால் பக்குவம் செய்யப்பட்டு, முற்கூறியபடி முறையே ஒரு தாது மற்றொரு தாதுவாக மாறி, ஒரு மாஸத்தில் சக்ரமாக ஆய்விடுகின்றன; ஸ்த்ரீகளுக்கும் அவை அவ்விதமே திரிபடைந்து, கடைசியில் இரஜஸ் என்கிற தாதுவாக மாறுகின்றன. ஆண் பெண்கள் காதலித்துப் புணருங்கால், அவர்களுடைய தோஷமற்ற சுக்லமும் இரஜஸ்ஸும் ஒன்றோடொன்று கலந்தால், கருப்பையில் கர்ப்பம் சோன்றி காலக்கிரமத்தில் சிசுவாக வெளிவருகின்றது. இதில் ஸ்த்ரீயினுடைய இரஜஸ் அதிகமாயிருந்தால் பெண் சிசுவும், சுக்ரம் அதிகமானால் ஆண் சிசுவும், இரண்டும் ஒரே அளவாயிருந்தால் நபும்ஸகமும் பிறக்குமென்று அறிக. 11—13½.

வயதுக்குத் தகுந்தவாறு ஔஷதபீ பிரமாணங்கள் :—சிசுக்களுக்கு முதல் மாஸத்தில் ஸாதாரணமாய் ஔஷதங்களே பால், தேன், சர்க்கரை, நெய் இவை சேர்த்து லேஹ்யமாகச் செய்து ஒரு குஞ்ஜா அளவு கொடுக்கலாம். ஒரு வருஷம் பூர்த்தியாகிற வரையில் மாஸம் ஒன்றுக்கு ஒரு குஞ்ஜா பிரமாணம் அதிகமாகக் கொடுத்து வரலாம். பிறகு பதினாலு வயதுவரையில் வருஷம் ஒன்றுக்கு ஒரு மாஷம் வீதம் அதிகப்படுத்தலாம். அதற்கு மேல் எழுபது வயதுவரையில் ஒரே அளவில் ஔஷதங்களை உபயோகித்து வரவேண்டும். எழுபது வயதுக்குமேல் பாலர்களுக்குக் கொடுக்கும் விதமாக ஔஷதப்பிரமாணங்களைச் சிறுகச் சிறுகக் குறைத்துவரவேண்டும். மேற்கூறிய அளவுகள் கல்கம், சூர்ணம் இவ்விரு விதமான ஔஷதங்களை உபயோகிப்பதற்கேயாம். பலவித கஷாய ஔஷதங்களை அதிலும் நாலு மடங்கு அதிகமாய் உபயோகிக்கவேண்டும். 14—17.

வயதுக்கேற்றவாறு சிகித்ஸாமுறை முதலியது :—அஞ்ஜகம், லேபம், ஸ்நாநம், அப்யங்கம், வமநம், பிரதிமர்சம் [1] என்கிற இச்சிகிச்ஸா முறைகள் மனிதனுக்குப் பிறந்தது முதல் என்றைக்கும் பயன் தரும். கவளம் ஐந்து வயதுக்குப் பிறகும், நஸ்யம் எட்டு வயதிற்கு மேலும், விரேகம் பதினாறு வயதிற்குப் பிறகும், புனர்ச்சி இருபது வயதுக்கு மேலும் ஏற்றவையாம். 18—19.

தள்ளுவது 'பிரவாஹிணீ' என்றும், அதை மெல்ல நெகிழச்செய்வது 'ஸர்ஜகீ' என்றும், மேலிருந்து வரும் மலத்தைத் தாங்கிக்கொள்வது 'கிராஹி' என்றும் கூறப்படுகின்றன. இம்மூன்று வகை தசைநார்களால் குதம் என்னும் அவயவம் ஆக்கப்பட்டிருக்கிறது.

1. அஞ்ஜநம்—மைதீட்டுவதுபோல் கண்களில் ஔஷதமிடல்; லேபம்—பூச்சிடல்; ஸ்நாநம்—கஷாயாதிகளால் செய்யப்படும் நீராட்டம்;

ஆயுள் அழிதல் :—வாலிபவயது விருத்தியாய்வருவதாலும், தேஹத்தின் ஒளி, புதிது புதிகான விஷயங்களை ஆலோசிக்கும் மேதை என்னும் மதிவிசேஷம், சர்மம், திருஷ்டி, சுக்ரம், விக்ரமச்செய்கை, ஸாதாரண புத்தி, கர்மேந்திரியங்கள், மனது என்கிற இப்பத்து தத்துவங்களும் கிரமமாக மூர்ச்சியடைந்து வருவதாலும் ஆயுளும் குறைந்து வரும். 20.

வாதப் பிரக்ருதி முதலியதன் குறிகள்.[1]

வாதப் பிரக்ருதி :—மிகச் சொற்பமான கேசம், மெலிந்து வறட்சியுள்ள தேகம், மிகவிஞ்சி பேசுந் தன்மை, சபலசித்தம், ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதாகக் கனவு காணும் தன்மை இக்குணமுள்ளவன் 'வாதப்பிரக்ருதி' எனப்படுவான். 21.

பித்தப் பிரக்ருதி :—வாலிப வயதிலேயே நரைத்தல், மதியிற் சிறப்பு, அடிக்கடி வியர்த்தல், வெகு ரோஷம், கனவுகளில் பல ஒளியுள்ள உருவங்களைக் காண்பது இக்குணமுள்ளவன் 'பித்தப் பிரக்ருதி' என்றறிக. 22.

கபப் பிரக்ருதி :—சம்பீர கொள்கையுடையும், திரண்டு வலிவுள்ள சரீரமும், செழித்து நிகிகிப்பான தலைமயிரும் பெற்று, ஸ்வப்னங்களில் பல நீரோடைகளைக் காண்பவன் 'கபப் பிரக்ருதி' எனப்படுவான். 23.

மிச்ரப் பிரக்ருதிகள் :—வாத பித்த கபங்களில் இரண்டிரண்டு அல்லது மூன்று தோஷங்கள் சேர்ந்து பிரக்ருதியாக ஏற்படுமாலுல் அவர்களிடம், முன் தனித்தனி தோஷத்திற்குக் கூறிய குறிகள் பலவாறு கலந்து காணப்படும்; அம்மனிதர்கள் 'மிச்ரப்பிரக்ருதிகள்' எனப்படுவர்.[2] 23½.

நித்ரை முதலியவை உண்டாகும் வகை :—தமோகுணம், கபதோஷம் இவற்றின் ஸம்பந்தத்தினுல் நித்ரையும், தமோகுணம், பித்தம் இவற்றுல் மூர்ச்சையும், ரஜோகுணம் வாத பித்தங்கள் இவற்றுல் பிராந்தி என்கிற புத்திமாறுட்டமும், வாத கபங்கள், தமோ குணம் இவற்றினுல் சோம்பலும், ஒஜஸ் என்கிற உபதாது க்ஷயமடைவது, மனநோய், அஜீர்ணம், அதிகரிமம் இவற்றுல் சரீரத்திற்கு இளைப்பும் உண்டாகும். 24—25.

ஆலஸ்யம் முதலியன :—கார்யங்களைச் செய்வதில் நிறையிருந்தும் உத்ஸாஹமற்றிருந்தால் அது 'ஆலஸ்யம்' எனப்படும். புத்திக்கு மழுக்கம்

அப்யங்கம்—தைலாதிகளைச் சிரஸ்ஸு முதலானவற்றில் தேய்த்தல்; கவளம்—வாந்திக்குக் கொடுத்தல்; பிரதிமர்சம்—இரண்டு பிந்து அளவில் தைலத்தை நஸ்யமிடல்; கவளம்—ஔஷதங்களால் வாய்க்கொப்புளித்தல்; கண்டூஷம்—மூக்கில் ஔஷதமிடுதல்; விரேகம்—பேதிக்குக் கொடுத்தல். இவைகளைப் பற்றி உத்தரகண்டத்தில் விசேஷ விவரம் காணலாம்.

1. சிசுக்கள் கர்ப்பத்தில் உற்பத்தியாகும்போதே, மாதா பிதாக்களுடைய சரீரத்தின் வாத பித்த கபங்களின் நிலைமைகளுக்கேற்றவாறு, இம்மூன்று தோஷங்களில் ஒன்றோ இரண்டோ மூன்றுமோ சிறிது மேலோங்கியிருக்கக்கூடுமாகையால், அவற்றிற்கேற்ப சிசுக்களுக்கும் வாதாதிப் பிரக்ருதிகள் ஏற்படுகின்றன.

2. மிச்ரப் பிரக்ருதிகள்—வாத பித்தப்பிரக்ருதி, வாத கபப் பிரக்ருதி, பித்த கபப் பிரக்ருதி (த்வந்த்வப்ரக்ருதிகள்), வாத பித்த கபப் பிரக்ருதி (ஸங்கிபாதப்ரக்ருதி) என்று நான்கு வகை.

சிறிது கோரிட்டு, ஒரு முறை ச்வாஸத்தை உட்கொண்டு மறுபடி வாயை நன்றுகத் திறந்து வெளியிடப்படும் நீண்ட ச்வாஸம் 'ஜ்ரும்பா' (கொட்டாவி) என்று சொல்லப்படும். உதாந வாயு பிராணவாயு இரண்டும் சேர்ந்து மேல் நோக்கிச்செல்ல, அப்பொழுது சிரஸ்ஸுக்கு ஸமீபத்திலுள்ளகபமும் பொசிந்துவருமாலுல், மூக்கிலிருந்து வேகமாய் சப்தம் வெளியாகும்; அது 'க்ஷவது' (தும்மல்) எனப்படும். வேண்டியவளவு ஆஹாரம் குடலில் விழுந்து நிரம்பியிருப்பதாலும், உதாநவாயு பிரகோபமடைவதாலும் வயிற்றிலிருந்து மேலோங்கிவரும் ஒருவித வாயு 'உத்காரம்' (ஏப்பம்) எனப்படுகிறது. 26—28½.

ஏழாம் அத்தியாயம்.

ரோக நிதானம்.

வியாதிகளைப்பற்றிய முன்னுரை :—முன்னுல் முனிவர்கள் மொழிந்துள்ள ரோகங்கள் அவ்வளவையும் நாம் இங்கு சுருக்கமாகக் கூறுகின்றோம்; அநேகவிதமான வியாதிகள் ஏற்பட்டிருப்பதுடன், அவற்றுள் ஒவ்வொன்றும் பலவித பேதமுடையதாகவும் இருக்கின்றது.[1]

ஜ்வரங்கள் :—ஜ்வரம் இருபத்தைந்து வித்ம்; அவற்றின் விவரம் பின்வருமாறு :—வாதம், பித்தம், கபம் இம்மூன்று தோஷங்கள் கோளாறடைவதால் மூன்றுவித ஜ்வரங்களும், வாத பித்தம், வாத கபம், பித்த கபம் என்று இரண்டிரண்டு தோஷங்கள் கோளாறடைவதால் மூன்று வித த்வந்த்வ ஜ்வரங்களும், மூன்று தோஷங்களும் ஒருமிக்கக் கோளாறடைவதால் ஸந்நிபாதம் என்கிற ஜ்வரமும் உண்டாகின்றன. இவற்றில் உட்பிரிவுகள் அநேகம் உண்டு. விஷம ஜ்வரங்கள்[1] பெரும்பாலும் ஸந்நிபாதத்திலுல் உண்டாகின்றன; அவை—ஸந்ததம், ஸததம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்று ஐந்து வகைப்படும்.[2] 'ஆகந்துகம்'[3] என்று வேறுவகை ஜ்வரமும் உண்டு. இது ஒன்றே பதின்மூன்று வித்மாம். இப்பதின்மூன்றையும் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கலாம். அவற்றுள் முதற் பகுதியைச் சேர்ந்தவை : அபிசாரம், கிரஹாவேசம், சாபம் இக்காரணங்களால்[4] மூன்றுவித ஜ்வரங்கள்; உண்டாகும் 'அபிகாதஜ்வரங்கள்' இரண்டாவது பகுதியைச் சேர்ந்தவை; அவை—சிரமம், அவயவங்கள் அறுபடுதல்,

1. 'விஷம ஜ்வரங்கள்' முறைக்காய்ச்சல்; விட்டுவிட்டு காலம் மாறி வருவதால் விஷமம் எனப்படுகிறது.

2. ஸந்ததம்—விடா ஜ்வரம்; ஸததம்—ஒரே நாளில் இரண்டு முறை விட்டுவிட்டு வருவது; தீருதீயகம்—நடுவில் ஒருநாள் விட்டு மூன்றும் நாள் வருவது; சாதுர்த்திகம்—நடுவில் இரண்டு நாள் விட்டு நான்காம் தினம் வருவது.

3. ஆகந்துகம்—பூர்வரூபம் முதலியவையில்லாமலே திடீரென்று உண்டாகும் ஜ்வரம். அபிகாதம் முதலிய வெளிக்காரணங்களால் உண்டாவது.

4. அபிசாரம்—பிசாசம் முதலியவற்றை ஏவுதல்; கிரஹாவேசம்—யக்ஷர் கந்தர்வர் மற்றும் க்ஷுத்ரதேவதைகள் முதலியவற்றின் ஆவேசம். சாபம்—முனிவர் முதலியவர்களால் இடப்பட்டது.

சல்யம் முதலியவை சரீரத்திற்குள் பாய்தல், அக்னி முதலியவற்றால் எரிக்கப்படுதல் என நான்கு காரணங்களால் உண்டாகின்றன. 'அபிதாங்க ஜ்வரங்கள்' மூன்றுவது பகுதியைச் சேர்ந்தவையாம்; அவை—காமம், பயம், மனநோய், கோபம், மஹத்தான வியஸனம், ஔஷதசங்கலனின் வாயுவே என்கிற ஆறு காரணங்களால் உண்டாகும். இவ்வாறு இருபத்தைந்து விதஜ்வரங்களையும் அறிந்துகொள்க. 2—6½.

அதிஸாரம் :—மூன்று தோஷங்கள் தனித்தனி கோளாறடைவதாலும், ஸந்நிபாதத்திலுலும், சோகத்திலுலும், ஆமமென்கிற அஜீர்ணத்திலுலும், பயத்தாலும் முறையே எழுவித 'அதிஸாரம்' உண்டாகும். 7½.

கிரஹணீ :—'கிரஹணீ' என்கிற குடலின் பாகம் விகாரமடைந்து, புஜித்த உணவு ஜீர்ணமாகாமல் பேதியாலுல்; அதற்கு 'கிரஹணீ' என்று பெயர். தனித்தனி தோஷத்தால் மூன்று கிரஹணீ ரோகமும், ஸந்நிபாதத்திலுல் ஒன்றும், ஆமதோஷத்திலுல் ஒன்றும் ஆக ஐந்து விதம். 8.

பிரவாஹிகா :—'பிரவாஹிகா'[2] என்று மற்றொரு அதிஸாரம் தனித்தனி தோஷத்தாலும் இரத்தத்திலுலும் நான்கு விதமாய் உண்டாகும். 8½.

அஜீர்ணம் :—மூன்று தோஷங்களால் தனித் தனியே மூன்றுவித 'அஜீர்ணம்' உண்டாகும்; இவற்றுள் வாதத்திலுலான அஜீர்ணம், 'விஷ்டப்தம்' என்றும், பித்தத்திலுலாவது 'விதக்தம்' என்றும், கபத்திலுலுண்டாவது 'ஆமம்' என்றும் வழங்கப்படும்.[3] ஒன்றுக்கொன்று விரோத குணமுள்ள உணவுகளை யுண்பதால் ஏற்படும் இரஸதாது விஷத்தன்மையடைந்து, 'விஷாஜீர்ணம்' என்றோர் அஜீர்ணரோகம் உண்டாகும். 'அலஸகம்' என்று மற்றொரு அஜீர்ணவியாதி வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்றுவிதமாயுண்டாம்.[4] மூன்று தோஷங்கள்ளின் கோளாறுல் ஏற்படும் சில அஜீர்ணத்திலுல் மூன்றுவித 'விஷூசி ரோகங்களும்' உண்டாகும்.[5] 'தண்டகாலஸகம்' என்றும், 'விளம்பிகா'

1. அபிந்யாஸ ஜ்வரம் என்கின்ற ஒருவித கொடிய ஜ்வரமும், ஸப்ததாதுகதமான ஏழு ஜ்வரங்களும், ஆமஜ்வரம் ப்க்வஜ்வரம் என்கின்ற சில ஜ்வரங்களும், ஆக வேறுவித பல விசேஷ ஜ்வரங்கள் 'மாதவநிதானம்' முதலியவற்றில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஜ்வரங்களுக்கும் பிறகு கூறப்படும் ஸகல ரோகங்களுக்கும் குறிகள் பூர்வரூபம் முதலிய விவரங்கள் இந்த ஸங்கிரஹ கிரந்தத்தில் விசேஷமாய் விவரிக்கப்படமாட்டா.

2. பிரவாஹிகா—சீதபேதி எனப்படுவது.

3. விஷ்டப்தம்—உணவு ஜீர்ணமாகக் கூடாமலும், வெளிவரவிடாமலும் குடலிலேயே தகையப்பட்ட தெனப் பொருள்; விதக்தம்—பித்தத்தின் சூட்டிலுல் மிகவும் எரிக்கப்பட்டது; ஆமம்—கபம் பிரகோபமடைவதால் உணவு சிறிதும் பக்குவமாகாமல் தங்கிவிடுவது.

4. ஆஹாரம் குடலில் பக்குவமாகாமல் அடைபட்டு வெளிவர முடியாமல் உண்டாகும் வயிற்றுப்பொருமல் 'அலஸகம்' எனப்படுகிறது.

5. வாந்திபேதி யென்கிற வியாதி விஷூசியெனப்படும்.

என்றும் வேறிரண்டு வியாதிகளும் அஜீர்ணரோகத்தைச் சேர்ந்தவையாம். 9—11.

அர்சோரோகம் :—அர்சஸ் என்கிற மூலரோகம் வாதார்சஸ், பித்தார்சஸ், கபார்சஸ், சந்நிபாதார்சஸ், ஸம்ஸர்கஜார்சஸ், ரக்தார்சஸ்[3] என்று ஆறுவிதம். இவை ஸஹஜார்சஸ், உத்தரகாலஜார்சஸ் என்று பொதுவாக இரண்டு விதமாகப் பிரிக்கப்படும்.[4] இவற்றில் சுஷ்கார்சஸ், ஆர்த்தார்சஸ் என்று வேறிரண்டு வகைகளுமுண்டு.[5] 12½.

ஸ்ரீமதீலகம் :—இது[6] வாதம், பித்தம், கபம் இம் மூன்றுல் மூன்று வகைப்படும். 13.

கிருமிரோகம் :—இருபத்தோருவித கிருமிகள் சரீரத்தில் உற்பத்தியாகின்றன; அவையெல்லாம் 'பாஹ்யகிருமிகள்' 'ஆப்யந்தரகிருமிகள்' என்று இருவகைப்படும்.[7] அவற்றுள் யூகம், லிக்ஷா என்கிற இரண்டும்[8] 'பாஹ்யகிருமிகள்'. மற்றவையெல்லாம் 'ஆப்யந்தர கிருமிகள்'. அவையாவன :—ஔருதயாதம், அந்த்ராதம், உதரவேஷ்டம், சுரு, மஹாகுஹம் ஸுகந்தம், கர்பகுஸுமம், ரக்தம், மாதரம், ஸௌரஸம், லோமவித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், கேசாதம் என்கிற இப்பதிஞ்ஞன்கும் பெரும்பாலும் கபத்தைப்பற்றி விருத்தியாகக்கூடியவை. மகேருகம், லேலிஹம், ஸஹாநம், ஸௌஸுராதம், ககேருகம் என்கிற வேறு ஐந்துவித கிருமிகள் மலங்களில் உற்பத்தியாகும். இக்கிருமிகளன்றி வேறு சில கிருமிகளுண்டு; அவற்றுள் கபரக்தங்களைப்பற்றி உண்டாவது 'ஸ்நாயுகம்'[9] எனப்படும்;

1. விஷத்தன்மையுள்ள இரஸதாது சரீரமெங்கும் பரவுவதால் தேஹம் விறைத்துப்போய் குத்தல் குடைத்தலேற்பட்டால அது தண்டகாலஸகம் என்றும், விறைத்தலின்றி மற்றக் கோளாறுகளிருந்தால் விளம்பிகா என்றும் கூறப்படும்.

2. ஸம்ஸர்கம்—இரட்டை தோஷங்களின் கோளாறு. ஸந்நிபாதம்—மூன்று தோஷங்களின் கோளாறு.

3. ரக்தார்சஸ்—இரத்தம் பெரியும் மூலம்.

4. பிறப்பிலேயே உள்ளது ஸஹஜார்சஸ் என்றும், பிற்காலத்தில் வாதாதிதோஷங்கள் கோளாறடைவதால் உண்டாவது உத்தரகாலஜ அர்சஸ் என்றும் சொல்லப்படும்.

5. மூலத்திலிருந்து இரத்தம் முதலியது பொழிந்துகொண்டிருந்தால் அது ஆர்த்தார்சஸ் என்றும், பொழிவில்லாமலிருந்தால் சுஷ்கார்சஸ் என்றும் கூறப்படும்.

6. குதத்வாரத்திலுண்டாகும் ஒருவித கட்டி ஸ்ரீமதீலகம் எனப்படும். இதைத் தமிழ் வைத்தியர்கள் கிரந்தி என்பார்கள்.

7. பாஹ்ய கிருமிகள்—வெளியில் ரோமம் முதலியவற்றிலுள்ள தோஷங்களால் உண்டாகும் பேன் முதலியன; ஆப்யந்தர கிருமிகள்—குடல், இரத்தம் முதலியவற்றைச் சார்ந்து சரீரத்தின உட்புறத்திலியாகும் கிருமிகள்.

8. யூகம்—பேன்; லிக்ஷா—ஈர் எனப்படும் பேன் முட்டை; (மலினமான வஸ்திரம் முதலியவற்றில் லிக்ஷா என்கிற வெண்மையான பேனகள் உண்டென்று சிலர்.)

9. ஸ்நாயுகம்—உணர்ச்சி நரம்புகளுக்கு ஸ்நாயு என்று பெயர்; அவ்வித நரம்புபோன்ற கிருமியும் 'ஸ்நாயுகம்' எனப்படும். ஸ்நாயுகம் என்கிற

வெளிதோஷங்களைக் காரணமாகக்கொண்டு வீரணங்களில் உற்பத்தியாகும் வேறு வகையான கிருமிகளும் உண்டு.[1] 14—18.

பாண்டுரோகம் :—வாதம், பித்தம், கபம், ஸந்நிபாதம் இவற்றால் தனித்தனியே ஒவ்வொருவிதமும், மண் உண்பதால் மற்றொரு விதமும் ஆக ஐந்துவித பாண்டுரோகங்களாம். 19.

காமலா தும்பகமலா ஹலீமகம் :—ஸாதாரண காமலா ரோகம்[2] ஒரு விதம். கும்பகாமலா[3] என்பது மற்றொருவிதம். ஹலீமகம்[4] என்னும் வியாதியும் ஒரேவிதம். $19\frac{1}{2}$.

இரத்த பித்தம் :—இரத்த பித்தம் என்கிற ரோகம் ஊர்த்வகம், அதோகம், உபயமார்க்கம் என்று மூன்று வகை; அவற்றுள் வாய், மூக்கு செவி முதலிய மேல் வழிகளால் இரத்தம் வெளிவருவது 'ஊர்த்வகம்'. கீழே குதம், மூத்திரமார்க்கம் முதலியவற்றால் வெளிப்படுவது 'அதோகம்'. இரண்டு வழிகளாலும் அல்லது மயிர்க்கால்கள் மூலமாகவும் வெளிப்படுவது 'உபயமார்க்கம்'. ஊர்த்வகரக்தபித்தம் கபதோஷத்தினாலும், அதோகரக்த

கிருமியானது, இரத்தத்தையும், நிணநீர் என்னும் ஒருவித கபத்தையும் விகாரப்படுத்தி 'நாடீவிரணம்' போன்ற ரோகத்தை யுண்டுபண்ணுகிறது; இது நரம்புச்சிலந்தி எனப்படும்.

1. மாதவகரனுடைய கொள்கை இவ்விஷயத்தில் பின்வருமாறு :—கிருமிகள் இருபதுவிதம். அவை பொதுப்பட பாஹ்யங்கள், ஆப்யந்தரங்கள் என்று இருவகைப்படும். (1) வெளி தோஷங்களைப்பற்றியவை, (2) கபத்தில் விருத்தியாகுபவை, (3) இரத்தத்தில் விருத்திவாகுபவை, (4) மலத்திலுண்டாகுபவை என்று. அவற்றை மீண்டும் நாலுவிதமாகப் பிரிக்கலாம்; வெளி தோஷங்களாலுண்டாகுபவை :—யூகம், லிக்ஷா என்பவையாம். குடலில் கபத்தைப் பற்றிய கிருமிகள் :—அந்த்ராதம், உதரா வேஷ்டம், ஹ்ருதயாதம், மஹாகுதம், சூரு, தர்ப்பகுஸுமம், ஸுகந்தம் என்கிற கிருமிகள், நாகப்பூச்சி, அட்டை, தானிய முனைகள் இவைகளைப் போன்றவையாம். இரத்தத்தில் கண்களால் பார்க்கக்கூடாதவாறு வெகு சூட்சுமமாயுள்ளவை கேசாதம், ரோமவித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், ஸௌரஸம், மாத்ரு என்பனவாம். குடலில் மலாசயத்தில் உண்டாகும் கிருமிகள் சகேருகம், மகேருகம், ஸௌஸுராதம், லேலிஹம் என்பவை. இக்கிருமிகளால் ஆன ரோகங்களும் அங்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. காமலாயென்பதையே காமாலை என்றும் வழங்குகிறோம்.

3. காமலா ரோகத்தில், இரத்தத்தில் பித்தம் அதிகம் சேர்ந்து உடலெல்லாம் மஞ்சள் நிறமாகக் காணப்படும். காமலாரோகமே மிகவும் முதிர்ந்துபோனால், மூத்திரம் முதலியவை மிகக் கறுநிறங்கொண்டு, உடல் வீங்கி, மல மூத்திரங்களில் சில சமயம் இரத்தமும் விழுத்தொடங்கி, தாஹமும் அதிகரிக்கும்; அச்சமயம் 'கும்பகாமலா' எனப்படும். இதை 'வறட்காமாலை' என்றும் கூறுவதுண்டு.

4. பாண்டுரோகத்தில் சரீரம் வாத பித்தங்களின் பிரகோபத்தினால் நிறைந்த மஞ்சள் அல்லது இலைப்பசுமை நிறமாக மாறி, வலிமையும் உத்ஸாஹமும் குறைந்து, பசியின்மையுடன் மெதுவான ஜ்வரமும், உடல் சோவும் உண்டாகுமானால் அவ்வித ரோகம் 'ஹலீமகம்' எனப்படுகிறது.

பித்தம் வாதத்தினாலும், வாதகபங்களுடைய சேர்க்கையினால் உபயமார்க்கமான இரத்தபித்தமும் உண்டாகின்றன. $20\frac{1}{2}$.

காஸம் :—காஸரோகம் ஐந்துவிதம்; அவற்றில் வாத பித்த கபங்களால் மூன்றுவித காஸங்களும், ச்வாஸாசயத்தினுள் அபிகாதம் முதலியவற்றால் வீரணமுண்டாவதால் 'க்ஷதகாஸம்' என்கிற காஸமும், தாதுக்கள் க்ஷீணிப்பதால் வேறொருவித காஸமும் உண்டாகும்.[1] $21\frac{1}{2}$.

க்ஷயம் :—க்ஷயரோகம் ஐந்துவிதம்; தனித்தனி தோஷத்தினால் மூன்றுவித க்ஷயமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், வீரணங்களிலிருந்து இரத்தம் அபரிமிதமாய் வெளிவருவதால் மற்றொன்றும் உண்டாகிறது. $22\frac{1}{2}$.

சோஷம் :—சோஷரோகம் ஆறுவிதம்; சிற்றின்பத்தில் மிக ஈடுபடுவதினாலும், சோகத்தினாலும், உபவாஸம் முதலிய வீரணத்தினாலும், அதிகமாய் ஓடி விழுந்தடிப்பதாலும், மிகுமிஞ்சிய வியாயாமத்தாலும், கிழத்தன்மையினாலும் அவை உற்பத்தியாகின்றன.[2] $23\frac{1}{2}$

ஸ்வாஸரோகம் :—க்ஷுத்ரச்வாஸம், தமகச்வாஸம், ஊர்த்வச்வாஸம், மஹாச்வாசம், சிந்நச்வாஸம் என்று ச்வாஸரோகம் ஐந்து விதம்.[3] $24\frac{1}{2}$.

ஹிக்காரோகம் :—விக்கல் என்று வழங்கப்படும் ஹிக்காரோகம் க்ஷுத்ரஹிக்கா, அன்னஜஹிக்கா, கம்பீரஹிக்கா, யமளஹிக்கா, மஹாஹிக்கா என்று ஐந்துவிதம்.[4] $25\frac{1}{2}$.

---

1. சுதந்திரமான சில காரணங்களாலும், முதலில் கூறப்பட்ட நான்கு காஸங்களும் சிகித்ஸை செய்யப்படாமல் உபேக்ஷிக்கப்பட்டாலும் 'க்ஷதகாஸம்' உண்டாகக்கூடும்.

2. க்ஷயத்திற்கும் சோஷத்திற்கும் அதிக பேதமில்லை. ஆயினும் வாத பித்த கபங்களின் கோளாறுகளால் உண்டாவது க்ஷயமென்றும், ஸ்த்ரீப்ரஸங்கம் முதலிய மற்ற வேறுதுக்களால் உண்டாவது சோஷம் என்றும் சார்ங்கதர் கருத்து. இவ்விரண்டுக்கும் இராஜயக்ஷ்மா என்று பெயர்.

3. (1) கடுமையான வெலைகளாலும், வறட்சியினாலும் அடிக்கடி சிறுகச் சிறுக மேலோங்கி வரும் மூச்சு க்ஷுத்ரச்வாஸம் எனப்படும். (2) ச்வாஸமார்க்கங்களில் அடைபட்டுள்ள கபத்தை வெகு கஷ்டத்துடன் வெளிப்படுத்துகையில், கழுத்தும் நெஞ்சையும் சேர்ந்த மற்ற அவயவங்களும் விம்மிக்கொண்டு இரும்பவும் முடியாமல் அடிக்கடி மயக்கத்தைக் கூடிய ச்வாஸம் தமகச்வாஸம்; தமகச்வாஸமே பிரதமகம், ஸந்தமகம் என்று இருவகைப்படும் என்றும் மாதவநிதானம். (3) ஒருமுறை இருமல் வரும்போது மூச்சு ஒரே இழுப்பாய் மேலுக்கு வருமேயன்றி, மறுபடியும் நீக்கிரத்தில் உள்ளுக்கு ச்வாஸம் வாங்கமுடியாமல் முகமெல்லாம் வெளுத்துத் திணறிப்போகும் நிலைமையுண்டாவது ஊர்த்வச்வாஸம், (4) தூரத்திலிருப்பவரும் கேட்குமாறு விருஷபம்போல் வேகமாகப் பிரயாசப்பட்டு விடப்படுவது மஹாச்வாஸம். (5) வெகுநேரம் மூச்சுத்திணறி உடம்பெல்லாம் வலியுண்டாய் வயிறுப்பலுடன் வியர்வையும்விட்டு பிராணன் போய்விடுவதுபோல் தோற்றுவது சிந்நச்வாஸம்.

4. (1) வெகுநேரம் விட்டுவிட்டு கண்டத்தின் அடியிலிருந்து வருவதுபோல் தோற்றுவது க்ஷுத்ரஹிக்கா. (2) மிதமிஞ்சிய அன்னபானத்தினால் வயிற்றிலடங்கிய வாயு நெருக்கப்பட்டு உண்டாகும் விக்கல் அன்னஜ

அக்னிவிகாரம் :—உணவுகளைப் பக்குவம் செய்யும் பித்தம் கோளாறடைவதாலான பிணி 'அக்னிவிகாரம்' எனப்படுகிறது; இதில் அக்னியானது விஷமம், தீக்ஷ்ணம், மந்தம், பஸ்மகம் என்று நான்குவித கோளாறுகளைப்பெறும்; விஷமம் என்பது வாதத்திலும், தீக்ஷ்ணம் பித்தத்திலும், மந்தம் கபத்திலும், பஸ்மகம் என்பது வாத பித்தங்களாலும் உண்டாகின்றன.[1] $26\frac{1}{2}$.

அரோசகம் :—வாத பித்த கபங்களால் தனித்தனியே ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும், மனதுக்கு உண்டாகும் அருவருப்பு அல்லது ஸங்கடங்களால் ஒன்றும் ஆக ஐந்து அரோசகங்கள் உண்டாகின்றன. $27\frac{1}{2}$.

சர்தி :—சர்தி எழு விதம்; மூன்று தோஷங்களால் ஒவ்வொன்றும், குடலில் கிருமிகள் சேருவதால் ஒன்றும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும், அருவருப்பான பதார்த்தங்களைக் காண்பதால் மற்றொன்றும், கர்ப்பந்தரிப்பதால் ஸ்த்ரீகளுக்கு ஒருவித சர்தியும் உண்டாகும். $28\frac{1}{2}$.

ஸ்வாபேதம் :—ஸ்வரபேதம்[3] வாத பித்த கபங்களால் மூன்று விதமும், மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிப்பதால் ஒருவிதமும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும், தாதுக்கள் க்ஷீணிப்பால் ஒன்றும் ஆக ஆறு வகையில் உண்டாகும். $29\frac{1}{2}$.

த்ருஷ்ணரோகம் :—த்ருஷ்ணரோகமும் ஆறுவகைப்படும்;[4] வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும், தாதுக்கள் க்ஷயமடைவதால் ஒன்றும், சில ரோகங்களுக்கு உபத்ரவரூபமாக[1] மற்றொன்றும் உண்டாகும். $30\frac{1}{2}$.

ஹிக்கா. (3) நாபியிலிருந்து மேலோங்கி வருவதுபோலவும் கம்பீரமான தொனியுடன் கூடியதும் பல உபத்திரவங்களுண்டுபண்ணுவதுமான விக்கல் கம்பீரஹிக்கா. (4) சிறிது நேரத்திற்கொரு முறை ஈரஸ்லையும் கழுத்தையும் நடுங்கச்செய்து இரட்டையாக வருவது யமளஹிக்கா. (5) மர்மஸ்தானங்களைப் பீடித்துக்கொண்டும் உடலை நடுக்கிக்கொண்டும் இமைபொழுதும் விடாமல் உண்டாவது மஹாஹிக்கா.

1. ஒரு ஸமயம் நல்ல பசியும் மற்றொரு ஸமயம் பசி மந்தித்தும் இருந்தால் 'விஷமாக்னி' யென்றும், பசியுண்டாகும்போது அது தாங்கமுடியாதிருந்தால் 'தீக்ஷ்ணாக்னி' என்றும், பசியே யில்லாமல் ஆஹாரத்தில் விருப்பமற்றிருந்தால 'மந்தாக்னி' என்றும், ஒரு தினத்தில் அடிக்கடி உணவுகள் விசேஷமாய் புஜிக்கப்பட்டபோதிலும் அவையெல்லாம் பஸ்மீகரிக்கப்படுவதுபோல் எப்பொழுதும் உண்ணவேண்டுமென்கின்ற அவா அதிகமாலல் 'பஸ்மகாக்னி' என்றும் கூறப்படும்.

2. சர்தி—வமநம அல்லது வாந்தியாதல்.

3. ஸ்வரபேதம்—கண்டத் தொனி மாறுபடல்; தொண்டைக் கம்மல்.

4. த்ருஷ்ணரோகம்—நீர் வெட்கையிலல் உண்டாகும் வியாதி.

[மாதவநிதானத்தில மூன்றுதோஷங்களாலும், விரணங்களிலிருந்து இரத்தம் அபரிமிதமாய் வெளிப்படுவதாலும், மற்ற தாதுக்கள் க்ஷீணிப்பதாலும், ஆமம் என்கிற ஒருவித அஜீர்ணதோஷத்திலலும், உப்பு புளிப்பு முதலியவை மேலிட்ட உணவுகளை யுண்பதாலும ஆக ஏழு விதமான த்ருஷ்ணரோகம் கூறப்படுகிறது. ஸந்நிபாதத்திலல உண்டாவதையே ஆமதோஷத்திலல் எற்படும் த்ருஷ்ணை யென்றும் குறிப்பிட்டிருக்கிறது.]

ஸ்ரீசரோகம் :—மூர்ச்சாரோகம் வாதஜம், பித்தஜம், கபஜம், ஸந்நிபாதஜம் என்று நான்கு விதமாகும். $31\frac{1}{2}$.

பிரமம் முதலியன :—பிரமம் என்னும் கலேச்சுற்றல், நித்திரை, தந்த்ரை யென்னும் சோம்பல், ஸந்நியாஸரோகம்,[2] க்லாநி என்கின்ற இவைப்பு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமேயாம். 32.

மதம் :—வாத பித்த கபங்களால் மூன்று மதங்களும்,[3] ஸந்நிபாதத்திலல் ஒன்றும், இரத்தத்திலல் ஒன்றும்,[4] மதபானத்திலல் மற்றொன்றும், விஷவேகத்திலல் வேறொன்றும் உண்டாகும். 33.

மதாத்யயம் முதலியன :—மதாத்யயம்[5] என்கிற ரோகம் தனித்தனி தோஷத்திலல் ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும் ஆக நான்கு வகைப்படும். பரமதம்,[6] பாநாஜீர்ணம்,[7] பாநவிப்ரமம்,[8] பாநாத்யயம்[9] இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமேயாம். $34\frac{1}{2}$.

தாஹரோகம் :—தாஹம் என்கிற காங்கை இரத்த-பித்தங்களாலும் இரத்த விகாரத்திலலும், நாவறட்சியாலும், கேவல பித்தத்திலலும், தாதுக்கள்க்ஷீணிப்பதாலும், மர்மஸ்தானங்களில் அடிபடுவதாலும், வயிற்றில் இரத்தம் நிரம்புவதாலும் ஆக ஏழு காரணங்களால் உண்டாகும். 35—36.

உன்மாதம் :—மூன்று தோஷங்களால் தனித்தனியே ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்திலல் ஒன்றும், விஷப்ரயோகத்திலல் ஒன்றும், மனநோய்களால் மற்றொன்றும் ஆக ஆறு உன்மாத ரோகங்கள் உண்டு. 37.

1. உபத்திரவம்—ஒரு ரோகத்தைக் காரணமாகக்கொண்டு உற்பத்தியாகும் வேறு வியாதி.

2. ஸந்நியாஸம்—சிரஸ்ஸுக்குள் உஷ்ணம் அல்லது பித்தம் அதிகரித்து, ஸந்நிபாதத்திலல் உண்டாகும் ஒருவித மூர்ச்சாரோகம்.

3. மதம்—வெறி.

4. இரத்தமதம் :—இரத்தத்தைப் பார்ப்பதால் அல்லது குடிப்பதாலுண்டாகும் வெறி.

5. மிகமிஞ்சிய மதுபானத்திலல் ஆகும் கோளாறு மதாத்யயம்.

6. கபம் மிகவும் அதிகரித்து, ருசிகளை யறியவல்லமையற்று சோம்பலும் மேலிட்டு, மலமூத்திரங்கள் பக்கமடைந்து, சரீரம் பளுவாயிருப்பதுடன் ஸந்திரிகளிலும் தலையிலும் ஸஹிக்கக்கூடாத நோயுண்டாலல், அது பரமதம் எனப்படும்.

7. பானம் பண்ணிய மது ஜீர்ணமாகாமல் பொறுக்க முடியாத வயிற்றுப் பொருமலும், வாந்தியும் தொண்டையில் எரித்தலும் உண்டாலல் அது பாநாஜீர்ணம் எனப்படும்.

8. இருதயம், தொண்டை, மற்றும் பல அவயவங்கள் இவற்றில் அழற்சியும், மூக்கு முதலான அவயவங்களிலிருந்து கபம் அதிகமாய் பெருகுவதும், மூர்ச்சையும் வாந்தியும், ஜ்வரமும், தலைநோயும், மத்ய ஸம்பந்தமான உணவு வகைகளில் வெறுப்பும் உண்டாகும் வியாதி பாநவிப்ரமம்.

9. பாநாத்யயம் என்பது மதாத்யயத்திலல் நேரிடக்கூடிய அபாயகரமான ஒருவகை நிலைமையாகும்.

பூதோன்மாதம் :—தேவர், அஸுரர், கந்தர்வர், கிண்ணரர், யக்ஷர், பித்ருதேவதைகள், குருசாபம், பிசாசம்,[1] குஹ்யகர்,[2] விருத்தர், ஸித்தர், பூதங்கள், பிசாசங்கள், ஜலதேவதைகள், நாகங்கள், பிரும்ம ரக்ஷஸ்ஸுகள், இராக்ஷஸர், கூஷ்மாண்டதேவதை,[3] எவலெனப்படுமிம் க்ருத்யை, வேதாளம் இவற்றால் இருபது பூதோன்மாதங்கள் உண்டாகின்றன. 38—39½.

அபஸ்மாரம் :—அபஸ்மாரம்[4] வாத பித்த கபங்களாலும், ஸந்நிபாதத்தினாலும் ஆக நான்கு காரணங்களால் உண்டாகின்றது. 40½.

ஆமவாதம் :—நில்வாய எனப்படும் ஆமவாதரோகமும் வாத பித்த கபங்களாலும், ஸந்நிபாதத்தினாலும் ஆக நான்கு விதமாம். 41½.

சூலை :—சூலையென்னும் வயிற்றுநோய் வாத பித்த கபங்களால் மூன்றும், த்வக்த்வ தோஷங்களால்[5] மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆம தோஷத்தினால் ஒன்றும் ஆக எண்வகைப்படும். 42½.

பரிணாம சூலை முதலியன :—உணவு ஜீர்ணமாகுங்கால் உண்டாகும் சூலை பரிணாமசூலை; இதுவும் ஸாதாரண சூலைக்குண்டான காரணங்களாலேயே எட்டுவிதமாயேற்படும்; மேலும் அன்னத்ரவசூலை. ஜ்வர பித்தசூலை[6] என்கிற இவ்விரண்டும் ஒவ்வொரு விதமேயாம். 43—44.

உதாவர்த்தம் :—உதாவர்த்தம்[7] என்னும் ரோகம் பதின்மூன்றுவகை; அவற்றுள் பசியை அடக்குவதால் உண்டாவது ஒன்று; நாவறட்சியை அடக்குவதால் இரண்டாவது; நித்திரையைத் தடுப்பதால் மூன்றுவது; ச்வாஸத்தை அடக்குவதால் காண்பது நான்காவது; வாந்தியை அடக்குவதால் ஐந்தாவது; தும்மலைத் தடுப்பதால் ஆறுவது; கொட்டாவியை அடக்குவதால் ஏழாவது; எப்பொழுதென்னும் தேக்கெறிவைத் தடுப்பதால் எட்டாவது; கண்ணீரை அடக்குவதால் ஏற்படுவது ஒன்பதாவது; சுக்ரத்தை அடக்குவதால் பத்தாவது; மூத்ரத்தைத் தடுப்பதால் பதினொன்றுவது; மலத்தைக் கட்டுவதால் பன்னிரண்டாவது; அபாநவாயுவை அடக்குவதால் ஆவது பதின்

---

1. அபரிமிதமான பாபங்களைச் செய்து இறந்தபின், உத்தரக்ருத்யங்களும் ஒருவனுக்கு நடவாமற்போனால், நரகானுபவம் முடிந்த பிறகு நல்ல ஜன்மமுமில்லாமல் அவன் தவிக்க நேரிடும்; அவன் ஆத்மா பிரேதம்.

2. குஹ்யகர்—நிதிகளைக் காக்கும் பூதங்கள்.

3. கூஷ்மாண்ட தேவதை—சிவனுடைய பிரமதகணத்தில் இருக்கும் கூமாண்டம்போன்ற வயிற்றையுடைய பூதங்கள்.

4. அபஸ்மாரம்—கார்க்கைவலி.

5. வாதபித்தம், வாதகபம். பித்தகபம் என்றவாறு இரட்டைப்பட்ட தோஷங்கள் த்வந்த்வங்கள் எனப்படும்.

6. (1) பத்தியமும் அபத்தியமுமான உணவுகளைக் கலந்துண்பதால் ஆஹாரம் ஜீர்ணமான பிறகோ, ஜீர்ணமாகும்போதோ, ஜீர்ணமாகாமலிருக்கையிலேயோ ஏற்படும் சூலை அன்னத்ரவ சூலை எனப்படும். (2) கடுமையான ஜ்வரத்தால் குடலில் பித்தம் அதிகரித்து உண்டாகும் சூலை ஜ்வர பித்தசூலை [மாதவநிதானம் முதலிய நூல்களில் இந்த சூலை குறிப்பிடப்படவில்லை]

7. குடலுக்கும், துவாரமூளை மூத்திரநாளம் முதலிய மற்ற அவயவங்களுக்கும் இயற்கையில் உள்ள கீழ் நோக்கிய அசைவு அநுலோமசலநம்,

மூன்றுவது;[1] இந்த உதாவர்த்தங்களுள் நிறுத்தியில் கூறிய மூன்றும் பல நோய்களுக்குக் காரணமான உபத்ரவங்களை யுண்டுபண்ணும். 45—48.

ஆநாஹம் :—(1) வயிற்றுப் பொருமலெனப்படும் ஆநாஹரோகம் இருவகைப்படும்; குடலில் பக்வாசயம் என்கிற பாகத்தில் உற்பத்தியாகும் பொருமல் ஸிராநாண ஆநாஹம் என்றும், இரைப்பை யென்கிற ஆமாசயத்தில் உண்டாவது ப்ரகாண்டாநாஹம் என்றும் கூறப்படும். (2) மாரடைப்பு என்னும் உரோகாநாஹரோகம் ஒரே விதம்.[2] 49.

ஹ்ருத்ரோகம் :—இருதயத்தைப்பற்றிய ரோகம் வாத பித்த கபங்களால் மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, நிருபிகளால் ஒன்று ஆக ஐந்து வகையாம். 50.

உதரரோகம் :—உதரரோகம்[3] வாத பித்த கபங்களால் மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, வயிற்றில் ஒருவித நீர் சேருவதால் மற்றொன்று, மண்ணீரல் என்னும் ப்லீஹம் வீங்குவதால் ஒன்று, குடலில் மூள் முதலியவை சேர்ந்து குத்தப்பட்டு துவாரம் விழுவதால் ஒன்று, மலபந்தத்தினால் ஒன்று ஆக எட்டு விதம். 51½.

குன்மம் :—குன்மரோகம் வாத பித்த கபங்களால் மூன்றும், த்வந்த்வ தோஷங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும்,[4] இரத்தத்தினால் ஒன்று ஆக எட்டு விதமாகும். 52½.

ஷ்ரோகாதீ :—நீரடைப்பு என்கிற மூத்ராகாத ரோகம் பதின்மூன்று விதம்; அவற்றுள் வாதகுண்டலிகா என்பது மூத்ராவாதம்; இரண்டாவது வாதாஷ்டிலா; மூன்றுவது வாதவஸ்தி; மூத்ராதீதம் நான்காவது; மூத்ரஜடரம் ஐந்தாவது; மூத்ரக்ஷயம் ஆறுவது; ஏழாவது மூத்ரோத்ஸங்கம்; இதற்கு மாறான மேல் நோக்கிய அசைவாக உண்டாகும் ரோகம் உதாவர்த்தம்.[5] குடலுக்கு இயற்கையான தெரியுந்தன்மை ஆவர்த்தம் (Peristaltic motion) என்றும், மேல்நோக்கி யுண்டாகும் அவ்வசைவு உதாவர்த்தம் என்றும் சொல்லப்படுகிறது.

1. பசி, தாஹம், மல மூத்ர விஸர்ஜநத்தின் நிமித்தம் உண்டாகும் உணர்ச்சி முதலியவை வேகங்களாம் எனப்படும்.

2. உரோகரஹஸ்யம்—ச்வாஸகாளத்தில் உண்டாகும் ஒருவித வாத ரோகம். மாதவகரஹஸ்யில் இது குறிப்பிடப்படவில்லை. ஆனால் உரோகாநாதம் என்று மற்றொரு வியாதி அங்கு குறிக்கப்படுகிறது.

3. உதரம்—மற்றொரு ரோகம்; [வயிற்றுக்குள் குடலுக்கு வெளியில் நீரூறி வயிறு மிகவும் மூடியிருந்தால் அது ஜலோதரம் என்று சொல்லப்படும். வயிற்றின் இடதுபக்கத்திலுள்ள மண்ணீரல் வீங்குவதால் ப்லீஹோதரம் உண்டாவது போல், வலது புறத்தில் கல்லீரல் என்கிற யக்ருத் வீங்குவதால் யகிருதுதரம் என்கிற கல்லீரல் வயிறு உண்டாகிறது.]

4. இரத்த குன்மம்—இந்த ரோகம், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாயில் ஏற்படும் கோளாறுகளால் கருப்பையினுள் உண்டாகின்றது; ஆகவே ஸ்த்ரீகளுக்கே இவ்வியாதி உண்டாகலாமென்றும் புருடருக்கு உண்டாகாதென்றும் கூறப்படுகிறது; ஏழு தாதுக்களில் ஒன்றான இரத்தம் விகாரமடைவதால் புருடருக்கும் இரத்த குன்மம் உண்டாகலாமென்று சிலர்.

[illegible]; மூன்பதாவது மூத்ரசுக்ரம்; மலாகாதம் பத்தாவது; [illegible] பதின்மூன்றாவது; உஷ்ணவாதம் பன்னிரண்டாவது; வஸ்தி அண்ட விகார பதின்மூன்றாவதாம்;[1] இவற்றுள் இறுதியிற் கூறிய மூத்திர ரோகங்கள் மூன்றும் மிகவும் கொடியவையாம். 53—56.

மூத்ர கீருச்சீரம் :—நீர்ச் சுருக்கு எனப்படும் மூத்ரக்ருச்சிரம் எட்டு விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்று விதமும், ஸந்நிபாதத்தி

---

1. (1) வஸ்தியெனப்படும் மூத்திரப்பையினுள் வாயு பிரகோப மடைந்து அதனுள் ஓடுவதால் மூத்திரம் அடிக்கடியும் வெகு சொற்பமாகவும் வெளிவரும்; அது வாதாண்டலிகா எனப்படும். (2) வாயு வஸ்தியையும், குதமார்க்கத்தையும் அடைந்து, வஸ்தியில் பொருமலே யுண்டாக்கி வீங்கச் செய்தால் அது அஷ்டிலா எனப்படும்; கூழாங்கல் எனப்படும் அண்ட வடிவமான வழுக்கைக் கல் அஷ்டிலா என்று வழங்கப்படும்; கல்லைப்போலவே இவ்வீக்கமும் காணப்படும். ஆகவே இது அஷ்டிலா என்று பெயர் பெற்றது. (3) மூத்திரவேகத்தை அடக்குபவனுக்கு வஸ்தியினுள் வாயு பிரோகோபித்து அப்பையின் துவாரம் அடைந்து மூத்திரம் வெளிவராது; அந்த ரோகம் வாதவஸ்தி எனப்படும். (4) மூத்திரத்தை அடக்குவதால் சிலருக்கு மூத்திரம் வேகமாய் வெளிவராமல் வெகு மந்தமாய் வரும்; அது ழத்திரா தீதம் எனப்படும். (5) மூத்திரவேகத்தை அடிக்கடியும் தடுப்பதால் வஸ்தியின் கீழ் துவாரம் அடைபட்டு வஸ்தியில் பொருமலுண்டாய் அவ்வவயவம் நாபிக்கு மேல் திளம்பினுல் அது ழத்ராஜடாம் எனப்படும். (6) சரீரவாட்சியுடன் பலம் குன்றியவனுக்கு வஸ்தியில் வாயு பித்தம் இரண்டும் பிரகோபித்து மூத்திரத்தை வற்றச்செய்தால் அது ழத்ராக்ஷயம் எனப்படும். (7) வஸ்தியிலோ, நாளத்திலோ, லிங்கத்தின் முனையிலோ பிரகோபமடைந்த வாதத்தினுல் மூத்திரம் தடைபடுவதுடன் இரத்தமும் மூத்திரத்தோடு வந்தால் அது ழத்ரோத்ஸங்கம் எனப்படும். (8) வஸ்தியின் அடித்துவாரத்தில் உருண்டை வடிவாக ஒரு நிரந்தி உண்டாய் தீடீரென்று மூத்திரத்தைத் தடுத்தால் அது மூத்ரக்ரந்தி எனப்படும். (9) மூத்திரத்துடன் ரேதஸ் கலந்து வருவதால் சாம்பல் கலந்ததுபோல் மூத்திரம் வெளியாகும்; அது மூத்ரசுக்ரம் எனப்படும். (10) மலத்தின வேகத்தைத் தடுப்பவனுக்கு உதாவர்த்த ரோகம் உண்டாய், அதன் மூலமாய் மூத்திரத்திலும் மலம் நிற்குண்டான நாற்றம் முதலியது தோன்றும்; அது மலாகாதம் எனப்படும். (11) வாயுவினுல் பித்தமாவது கபமாவது இரண்டுமாவது இறுகிப்போய், மூத்திரம் மஞ்சள் நிறமாகவோ வெண்மையாகவோ சென்னிறமாகவோ எரிச்சலுடன் வெளி வந்தால் அது ழத்ரஸாதம் எனப்படுகிறது. (12) மிகமிஞ்சின சரீரவுழைப்பினுல் பிரகோபமான பித்தம் வஸ்தியை யடைந்து, மஞ்சள் நிறமாகவும் இரத்தம் கலந்ததுமாய் மூத்திரத்தை கஷ்டத்துடன் எரிச்சலே யுண்டாக்கி வெளிப்படுத்தினுல் அது உஷ்ணவாதம் எனப்படும். (13) வெகு வேகமாய் ஓடுவது முதலிய ஆயாஸ கரமான காரியங்களால் தீடீரென்று வஸ்தி இடம் புரண்டு கர்ப்பத்தைப் போல் நாபிக்குமேல் தூக்கிக்கொண்டு நின்றால் அது வஸ்திருண்டலிகா எனப்படும்.

னுல் நான்காவதும், சுக்ரத்தினுல் ஐந்தாவதும்,[1] மலபந்தத்தினுல்[2] ஆறாவதும், அபிகாதத்தினுல்[3] ஏழாவதும், அச்மரீ என்கிற கல் அடைபடுவதால் எட்டாவதும் உண்டாகிறது. 57—58.

அச்மரீ :—[4] வாத பித்த கபங்களால் மூன்றுவித அச்மரீ ரோகங்களும், சுக்ரத்தினுல் ஒன்றும் ஆக நான்கு அச்மரீ ரோகம் உண்டாகும். 59.

மேஹமும் அல்லது பிரமேஹமும் :—மேஹரோகம் இருபது விதம். அவை :—இக்ஷுமேஹம், ஸுராமேஹம், பிஷ்டமேஹம், ஸாந்த்ரமேஹம், சுக்ரமேஹம், உதகமேஹம், லாலாமேஹம், சீதமேஹம், விகதாமேஹம், சனைர்மேஹம், மாஞ்ஜிஷ்டமேஹம், ஹாரித்ரமேஹம், நீலமேஹம், இரத்த மேஹம், கிருஷ்ணமேஹம், க்ஷாரமேஹம், ஹஸ்திமேஹம், வஸாமேஹம், மஜ்ஜாமேஹம், மதுமேஹம் என்பனவாம்;[5] இவற்றுள் இக்ஷுமேஹம், மூதல் சனைர்மேஹம் ஈறுகப் பத்து மேஹங்களும் கபத்தினுலும், மாஞ்ஜிஷ்டமேஹம் முதல் க்ஷாரமேஹம் வரையிலுமுள்ள ஆறும் பித்தத்தினுலும், மற்ற நான்கும் வாதத்தினுலும் உண்டாகின்றன. 60—62½.

---

1. ஏதேனும் தோஷத்தால் விகாரமடைந்த ரேதஸ்ஸானது மூத்திர நாளத்தினுள் வந்து தங்கியிருந்து மூத்திரத்திற்குத் தடையையுண்டுபண்ணி, வஸ்தியிலும் லிங்கத்திலும் வலியைத் தரும்.

2. மலமானது மலாசயத்தில் சிக்கிக்கொண்டு, மேன்மேலும் அவ்விடத்திலேயே விருத்தியாவதால், மலாசயத்திற்கு அருகிலுள்ள மூத்திராசயமும் தாக்கப்பட்டு, மூத்திர நாளமும் தாக்கப்பட்டு, மூத்திர நாளமும் அதனுல் சிறிது அடைப்பட்டு மூத்ரக்ருச்சிரம் உண்டாகும்.

3. ஏதாவது அடிபட்டு, சல்லியம் ஏதேனும் உட்புகுந்து மூத்திரமார்க்கத்தைத் தடுக்குமாயின் அபிகாதஜ ழத்ரக்ருச்சிரம் உற்பத்தியாகும்.

4. வாயு மூத்திர மார்க்கங்களிலுள்ள கப பித்தங்களையும், மூத்திரத்தின் திரவ பாகத்தையும், சுக்ரத்தையும் சோஷணம் செய்து மணல்களைப் போன்ற கடின பதார்த்தங்களை உண்டாக்கும்; அவை 'அச்மரீ' எனப்படும்; இப்பதார்த்தங்கள் சிறிய பருக்காங்கற்களைப் போல் இருந்தால் சர்க்கரா எனப்படும்.

5. மேஹரோகத்தில் மூத்திரமானது நிறம், மணம், சுவை முதலிய வைகளால் இக்ஷுரஸம் முதலியவற்றிற்குச் சமமாயிருந்தால் அதற்குத் தகுந்த பெயரால் அந்தந்த மேஹரோகமும் வழங்கப்படுகிறது. இக்ஷு—கருப்பஞ்சாறு; ஸுரா-கள்; பிஷ்டம்-அரிசி முதலியவற்றின் மாவு; ஸாந்த்ரம்-தோய்ந்துபோன பால் முதலியதைப்போன்றது; சுக்ரம்-ரேதஸ்; உதகம்-ஜலம்; லாலா-உமிழ்நீர்; சீதம்-வெகு குளிர்ந்தது; விகதா-பருக்காங்கல் அல்லது மணல்; சனைர் மேஹம்-வெகு சிறிய அளவில் அடிக்கடியும் போகும் மூத்திரரோகம்; மஞ்ஜிஷ்டை-ஓர் சாயமிடும் வேர்; ஹரித்ரா-மஞ்சள்; நீலம்-நீலநிறம் அல்லது நீலியைப்போன்றது; ரக்தமேஹம்-இரத்த நிறமானதும் இரத்தத்துடன் கூடியதுமான மேஹம்; கிருஷ்ணம்-மிகவும் கருப்பானது; க்ஷாரம்-உப்பு முதலிய சில காரபபொருள; ஹஸ்திமேஹம்-யானையைப் போல் அதிகமாக மூத்திரம் வெளிவிடுதல்; வஸா-மாமஸம் கழுவியநீர், போன்றது; மஜ்ஜா-மஜ்ஜை யென்னும் எலும்புக்குள்ளடங்கிய ஓர் தாது; மது-தேன்.

ஸோம ரோகம் :—ஸ்த்ரீகளுக்கு சில ஸமயம் கருப்பையிலிருந்து வெண்ணிற திரவம் வெளிவருவதுண்டு; இவ்விதமேஹரோகம் 'ஸோம ரோகம்' என்று சொல்லப்படும்; இது [1] ஒரே விதமாம். 63.

பிரமேஹ பிடகைகள் :—பிரமேஹபிடகை [2] பத்துவிதம்; அவை யாவன :—சாரவிகா, கச்சபிகா, புத்ரிணீ, விததா, அலஜீ, மஸூரிகா, ஸர்ஷபிகா, ஜாலிநீ, விதாரிகா, வித்ரதி என்பவையாம்; [3] இவை மேஹரோகத்திற்கு உபத்திரவங்களாய் உண்டாவதியல்பு. $64\frac{1}{2}$.

மேதோ ரோகமும் சோதையும் :—மேதோ விருத்தி [4] யென்னும் அதிஸ்த்தூலரோகம் ஒரே விதம். சோபம் அல்லது சோதை என்கிற நீர்க்கோவை ஒன்பது வகையாம்; அவற்றுள் தனித்தனி தோஷத்தினுல் உண்டாவது மூன்று; ஸந்நிபாதத்தினுல் ஒன்று; அபிகாதத்தினுல் ஒன்று; விஷ ஸம்பந்தத்தினுல் மற்றொன்றுமாம். $65\frac{1}{2}$.

வ்ருத்தி, அண்டவ்ருத்தி, கண்டமாலை, கண்டாலஜீ :—வ்ருத்திரோகம் ஏழுவிதமாம்; அவற்றுள் வாதம், பித்தம், கபம் இவற்றால் மூன்றும், இரத்தத்தினுல் ஒன்றும், மேதஸ் என்னும் கொழுப்பினுல் ஒன்றும், மூத்திரத்தினுல் ஒன்றும், குடலிறக்கத்தினுல் ஒன்றும் உண்டாகின்றன. [5] அண்டவ்ருத்தி என்பது ஒரே விதம். கண்டமாலை, கண்டாலஜீ என்கிற ரோகங்களும் ஒவ்வொரு விதமாம். 66—67$\frac{1}{2}$.

---

1. ஸோமரோகம்—இதை மாதவகரன் கூறவில்லை. ஆனுல் மாதவ நிதானத்தின் இறுதியில் (சில அச்சுப்பிரதிகள்) அனுபந்தத்தில் இது சேர்க்கப்பட்டிருக்கிறது. பாவ ப்ரகாசமும் இதைக் குறிப்பிடுகிறது.

2. பிரமேஹ பிடகை :—மேஹரோகிகளுக்குண்டாகும் இராஜப் பிளவை என்னும் கட்டி.

3. சாரவிகா—சாரவம் என்கிற அகல்போன்றது சாரவிகா; கச்சபிகா—ஆமையைப்போன்றது; புத்ரிணீ—சுற்றிலும் சிறிய கொப்புளங்களுடன் கூடிய பிளவை; விததா—வெகு ஆழமுள்ளதும் விசேஷ வலியுண்டு பண்ணுவதுமான பிளவை; அலஜீ—பல பருக்களுடன் கூடியதும், வெளுப்பும் சிவப்புமான வர்ணமுடையதும், வெகு துன்பந்தருவதுமான சிலந்தி; மஸூரிகா—கடலைகளுக்கு ஒப்பானது; ஸர்ஷபிகா—வெண் கடுகுக்குச் சமமாயிருப்பது; ஜாலிநீ—வரிசையாய் வீங்கியெழும்பிய மாம்ஸஜாலங்களுடன் கூடியது; விதாரிகா—நிலப்பனங்கிழங்குக்கு ஒப்பானது; வித்ரதி—விப்புருதியென்று வழங்கப்படும் சீழ்க்கட்டி.

4. கொழுப்பு மிகவும் அதிகரிப்பதால் உண்டாகும் ரோகம் மேதோ விருத்தி எனப்படும்.

5. விருத்தி—அண்டம் என்கிற பீஜம் பருத்துப்போவது. [மூத்திர வேகத்தை அடக்குபவனுக்கு அண்டத்தில் அவ்விதத் திரவம் ஒன்று சேர்ந்து மூத்திர விருத்தி உண்டாகும். அண்டவிருத்தி யென்று தனியாக ஒரு விருத்திரோகம் மாதவகரன் முதலியவர்களால் கூறப்படவில்லை. கழுத்துக்கு மேல் சில வ்ரணங்கள் வரிசையாக உண்டாவதுண்டு; ச்வாஸாசய ஸம்பந்தமான கழலைரோகமுள்ளவருக்கு இவ்வித கட்டிகள் முக்கியமாய் உற்பத்தியாகும்; இவை கண்டமாலை என்று சொல்லப்படுகின்றன. ஒரு கட்டி உண்டாய் அது உடைந்துபோய் ஆறிய பிறகு அதன் பக்கத்தில்

கிரந்தி :—[1] மூன்று தோஷங்களால் மூன்றுக் கிரந்திகளும், இரத்த தோஷத்தினுல் ஒன்றும், விரைகளின் [2] தோஷத்தால் ஒன்றும், மேதோ தோஷத்தினுல் [3] ஒன்றும், விரணத்தினுல் ஒன்றும், அஸ்த்தி தோஷத்தினுல் ஒன்றும், மாம்ஸதோஷத்தினுல் ஒன்றும் ஆக ஒன்பது கிரந்திகள் உண்டாகின்றன. $68\frac{1}{2}$.

அர்புதம், யானைக்கால் :—அர்புதரோகம் [4] வாதார்புதம், பித்தார்புதம், கபார்புதம், மாம்ஸார்புதம், மேதோர்புதம், இரத்தார்புதம் என்று ஆறுவிதம். ஸ்லீபதம் என்கிற யானைக்கால் வாதஜம், பித்தஜம், கபஜம் என்று மூன்று விதமாம். $69\frac{1}{2}$.

வித்ரதி :—வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று வித்ரதிகளும், இரத்த தோஷத்தினுல் ஒரு வித்ரதியும், அடிபடுவதால் ஒரு விதமும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும் ஆக ஆறு வித்ரதிகளாம். $70\frac{1}{2}$.

விரணங்கள் :—விரணங்கள் [5] பதினேந்து விதம். அவை :—வாத விரணம், பித்தவிரணம், கபவிரணம், இரத்தவிரணம்; வாத பித்தவிரணம், வாத ச்லேஷ்மவிரணம், பித்த கபவிரணம், ஸந்நிபாதவிரணம், வாதரக்த விவரணம், கபரக்த விரணம், வாத பித்தரக்தவிரணம், வாத கப ரக்தவிரணம், பித்த கபரக்த விரணம், ஸந்நிபாத ரக்த விரணம் என்பவையாம்; இந்த விரணங்கள் யாவும் ஆகந்துகங்கள், சாரீரங்கள், சுத்தமானவை, அசுத்தமானவை என்று மீண்டும் நான்கு விதமாகப் பிரிக்கப்படுகின்றன. 71—75.

ஸத்யோவிரணம் :—ஸத்யோவிரணம் [6] எண் வகைப்படும்; அவை யாவன :— அவிக்ஷுப்தம், விலம்பிதம், சிந்நம், பிந்நம், ப்ரசலிதம், க்ருஷ்டம் வித்தம், நிபாதிதம் என்பவையாம். 76.

மற்றொன்று உண்டாவது கண்டாலஜீ எனப்படும். இதற்கே அபசீ என்றும் பெயர்.]

1. கிரந்தி—மாம்ஸம் கொழுப்பு இவை முதலியவை கெட்டுப்போய் உண்டாகும் ஒருவித கடினமான கட்டி; இரத்தக்கிரந்தி, விரணக்கிரந்தி, அஸ்த்திக்கிரந்தி, மாம்ஸக்கிரந்தி என்னும் கிரந்திகள் மாதவ நிதானத்தில் கூறப்படவில்லை.

2. விரைகள்—காரீரத்தக் குழாய்கள்—அதிக வேலை செய்யும் சிலருடைய கை கால்களிலுள்ள விரைகள் பருத்து முடிச்சு கட்டிக்கொள்வது இயல்பு; அவை ஸிராக்கிரந்தி எனப்படும்.

3. மேதஸ்—கொழுப்பு; கொழுப்பானது சிலருக்கு ஒவ்வொரு அவயவத்தில் அதிகமாகச் சேர்ந்து கட்டிகள் உண்டாகக் கூடும்; அவ்விதக் கட்டிகள் மேதோக்ரந்தி எனப்படும்.

4. அர்புதம்—புரைகுழல்.

5. விரணங்கள்—இவை, இரத்தம் முதலிய தாதுக்களில் தோஷங்கள் சேர்ந்து சரீரத்தில் தானுகவே உண்டாகக்கூடிய கட்டி முதலியன.

6. ஸத்யோவிரணம்—ஏதாவது அடிபடுவதால் உண்டாகும் விரணம். இதில் அவிக்ஷுப்தம் என்றால் அவயவம் அறுபடாமல் உள்காயம்படுதல்; விலம்பிதம்—சதைகள் அறுபட்டுத் தொங்கும் காயம்; சிந்நம் ஸாதாரணமாய் சிறிது அறுபடுதல்; பிந்நம்—கோடரிகொண்டு பிளக்கப்பட்டது போன்ற காயம்; ப்ரசலிதம்—அவயவம் நெகிழ்ந்து போதல்; க்ருஷ்டம்—

கோஷ்ட பேதம் :—கோஷ்ட பேதம் [1] என்பது சிங்நாந்திரம், நிஸ்ஸ்ருதாந்திரம் என்று இருவகைப்படும். 76½.

அஸ்த்தி பங்கம், தக்த்த வ்ரணம் :—(1) அஸ்த்தி பங்கம் [2] எட்டு விதமாம். அவையாவன :—பக்நப்ருஷ்டம், விதாரிதம், விவர்த்திதம், விச்லிஷ்டம், தீர்யக் க்ஷிப்தம், அதோகதம், ஊர்த்வகதம், ஸந்தி பக்நம் என்பனவாம். (2) அக்னியினால் எரிக்கப்படுவதால் [3] ப்லுஷ்டம், விதக்த்தம், துர்த்தக்த்தம், ஸம்யக்தக்த்தம் என்று நாலுவித வ்ரணங்கள் உண்டாகின்றன. 77.

நாடீ வ்ரணம் :—நாடீ வ்ரணம் [4] ஐந்து விதம்; அவற்றுள் வாத பித்த கபங்களால் மூன்று நாடீ வ்ரணங்களும், ஸந்நிபாதத்தினால் ஒரு வ்ரணமும், சல்யத்தினால் ஒன்றும் உண்டாகின்றன. 78, 79.

பகந்தரம் :—'பகந்தரம்' [5] என்கிற குதத்துவாரத்திற்கு அருகில் உண்டாகும் பிளவை எண வகைப்படும்; அவற்றுள் வாயுவினால் உற்பத்தியாவது 'சதபோநகம்', பித்தத்தினால் ஆவது 'உஷ்ட்ரக்ரீவம்', கபத்தினால் ஆவது 'பரிஸ்ராவி', வாத கபங்களால் ஆவது 'ருஜு', வாத பித்தங்களால் உண்டாவது 'பரிக்ஷேபீ', கப பித்தங்களால் ஆவது 'அர்சோஜம்' அல்லது 'மூலபகந்தரம்', ஆகந்துகமான பகந்தரம் 'உன்மார்கீ', ஸந்நிபாதத்தினால் உண்டாவது 'சங்காவர்த்தம்' என்றும் வழங்கப்படுகின்றன [6]. 80—81½.

சர்மம் வழுன்று போதல்; வித்தம்—ஆணி முதலியவற்றால் குத்தப்படுதல்; நிபாதிதம்—அடித்து நசுக்கப்படுதல்.

1. கோஷ்டம்—குடல்; குடலுக்குண்டாகும் சிதைவு 'கோஷ்ட பேதம்'; அதில் குடல் அறுபடுமானால் 'சிங்நர்ந்திரம்' என்றும், ஆஸந்த வாராதி மூலமாய் வெளியே சரிந்துபோமானால் நிஸ்ஸ்ருதாந்திரம் என்றும் கூறப்படும்.

2. அஸ்த்தி பங்கம்—எலும்பு முரிதல். பக்நப்ருஷ்டம்—இடுப்பு முரிதல்; விதாரிதம்—எலும்பு பிளந்துபோதல்; விவர்த்திதம்—எலும்புகள் திரும்பிப்போதல்; விச்லிஷ்டம்—நழுவுதல்; தீர்யக்க்ஷிப்தம்—குறுக்காகச் சாய்தல்; அதோகதம்—மேலிருந்து கீழ்முகமாக நழுவுதல்; ஊர்த்வகதம்—கீழிருந்து மேலே எறி விடுதல்; ஸந்தி பக்நம்—ஸந்திகள் ஒடிந்து அல்லது விலகிப்போதல்.

3. ப்லுஷ்டம்—கொப்புளிக்கச் செய்தல்; விதக்த்தம்—அதிகமாக எரிந்துபோகுதல்; துர்தக்த்தம்—நன்றாகச் சுடப்படாமை; ஸம்யக்தக்த்தம்—நன்றாக முறைப்படி சுடப்பட்டது.

4. நாடீ வ்ரணம்—நாம்புச் சீலந்தி. மற்றும் புரையோடும் வ்ரணம்.

5. பகந்தரம்—இதைத் தமிழில் பவுத்திரம் என்கிறார்கள்.

6. (1) சதபோநகம்—அனேக முகங்களுடன் கூடியதும், நுரை போன்ற இரத்தம் வடிவதுமான பிளவை. (2) உஷ்ட்ரக்ரீவம்-ஒட்டையின் கழுத்தைப்போல் நீண்டு வளர்ந்த வ்ரணம்; (3) பரிஸ்ராவீ-அதிக சீழ் வடியக்கூடிய வ்ரணம்; (4) ருஜு-ஆஸன துவாரத்திற்கு முன்புறத்தில் குறுக்காக நீண்டு வளர்ந்திருப்பது; (5) பரிக்ஷேபீ-மிகவும் வலிபுண்டுபண்ணும் வ்ரணம்; (6) அர்சோஜம்-மூல முளையினால் ஆன கட்டி; (7) உன்மார்கீ-குதத் துவாரத்தினுள் எதாவது சல்லியம் தாக்கி குதத்வாரச்சுவரில் துவாரம்

உபதம்சம்:—ஆண்குறியிலுண்டாகும் 'உபதம்சம்' [1] என்கிற வியாதி வாத பித்த கபங்களால் ஒவ்வொன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்த தோஷத்தினால் ஒன்றும் ஆக ஐந்து விதமாம். 82.

சூக தோஷம் :—சூக தோஷம் [2] என்னும் மர்மஸ்த்தாநத்திலுண்டாகும் வ்ரணம் இருபத்து நாலு விதமாம் : அவை :—லிங்கார்சஸ், க்ரந்திதம், நிவ்ருத்தம், அவமந்தம், ம்ருகித்சம், சதபோநகம், அஷ்டீலா, ஸர்ஷபிகா, த்வக்பாகம் அவபாடிகா, மாம்ஸபாகம், ஸ்பர்சஹாநி, விருத்தமணி, உத்பவம், மாம்ஸார்புதம், புஷ்கரிகா, ஸம்மூடபிடகா, அலஜீ, இரத்தார்புதம், வித்ரதி, கும்பிகா, நிலகாலகம், நிருத்தப்ரகசம், பரிவர்த்திகா [3] என்பவையாம். 83—86.

எற்பட்டு உண்டாகும் சீழ்க்கட்டி; (8) சங்காவர்த்தம்-சங்கின் உட்பக்கத்துச் சுழியைப்போல் இருப்பது. [மாதவநிதாநத்தில் ருஜு, பரிக்ஷேபீ, அர்சோஜம் என்கிற ஸம்யோகஜ பகந்தரங்கள் மூன்றும் கூறப்படவில்லை.]

1. உபதம்சம்—லிங்கப்புற்று என்று சொல்லப்படுவது.

2. சூக தோஷம்—மர்மஸ்த்தாநத்தில் உண்டாகும் ஒருவகை மேஹ வ்ரணம்; இதில் இரத்தமும் விகாரமடைந்து தோலைப்பற்றிய சில மேஹப் படைகளும் உண்டாகும்; சர்மத்தைப்பற்றி உண்டாகும் முள்ளுகளைப் போன்ற சில முளைகள் சூகங்கள் எனப்படும்.

3. (1) லிங்கார்சஸ்—மர்மஸ்த்தாநங்களில் மூல முளைகளைப்போல் ஒன்றன்மேல் ஒன்றாக வளர்ந்து துன்பமளிக்கும் முளைகள்; (2) க்ரந்திதம்-சூகம் என்கிற முளைகளால் லிங்கம் நிரம்பியிருக்கும் வியாதி; (3) நிவ்ருத்தம்-அடிக்கடி புண்டாவதும் மறைவதுமான சூக தோஷம்; (4) அவமந்தம்-மிக வேதனை புண்டாக்குபவையும், வெகு நீண்டு எண்ணிக்கையில் அதிகமாயிருப்பவையுமான கொப்புளங்களைப் போன்ற சூகங்கள்; இதையே அதிமந்தம் என்று மாதவகரன்; (5) ம்ருகித்சம்-தினவெடுத்துத் தேய்ப்பதால் வீங்கிப் போய்விடும் சூகம்; (6) சதபோநகம்-ஸூக்ஷ்மமான அனேக துவாரங்களுடன் கூடியது; (7) அஷ்டீலிகா-சிறிதும் பெரிதுமாய் நீண்டு வளர்ந்திருப்பது; (8) ஸர்ஷபிகா-வெள்ளைக் கடுகுபோன்றது; (9) த்வக் பாகம்-எரித்தலுடன் கூடிய ஜ்வரத்தை புண்டாக்கும் சூகம்; (10) அவபாடிகா-லிங்கத்தின் மேல் பிளவுகளை புண்டுபண்ணுவது; (11) மாம்ஸ பாகம்-மாம்ஸத்தைக் கெடுத்து நெநிழச்செய்யும் சூகம்; (12) ஸ்பர்சஹாநி-பரிசித்தால் உணர்ச்சியில்லாத சூகம்; (13) விருத்தமணி-மணியென்னும் முளையை மூடிவிடும் வியாதி; (14) உத்பவம்-பயறுகள் போன்ற சூக தோஷம்; இதையே மாதவகரன் உத்தமா என்கிறார்; (15) மாம்ஸார்புதம்-லிங்கத்தின் மாம்ஸம் கெட்டுப்போய் குழல்போல் உண்டாகும் வ்ரணம்; (16) புஷ்கரிகா-பலசிறிய கொப்புளங்களுடன் கூடிய தாமரைப் பூவின் தாது போன்றகட்டி; (17) ஸம்மூடபிடகா-சுணையுள்ள வஸ்துக்களால் தேய்க்கப்படுவதால் லிங்கம் வீங்கிப்போய் உண்டாகும் சூக தோஷம்; (18) அலஜீ-சிவப்பும் கருப்புமான பல சிறிய வ்ரணங்களுடன் கூடியது; (19) இரத்தார்புதம்-சிவப்பும் கருப்புமான அனேக பெரிய கொப்புளங்களுடன் கூடிய ஸஹிக்கக்கூடாத வேதனையைத் தரும் சூகதோஷம்; (20) வித்ரதி-அனேக வர்ணமான சீழ் இரத்தங்கள் வெளியாகும் கட்டி; (21) கும்பிகா-நாவற் கொட்டைபோல் கருப்பாயிருக்கும் வ்ரணம்; (22) நிலகாலகம்-மாம்ஸங்களைக் கறுக்கச்செய்து சிதறப்பண்ணும் வியாதி; (23) நிருத்த ப்ரகசம்-லிங்கத்வாரத்தை அடைத்து

குஷ்டமும் வெண்குஷ்டமும் :—(1) குஷ்டரோகம் பதினெட்டு விதமாம்; அவற்றுள் வாதத்தினால் காபாலிகம் என்கிற குஷ்டமும், பித்தத்தினால் உதும்பரம் என்பதும், கபத்தினால் மண்டலம் விசர்ச்சிகா என்பவையும், வாத பித்தங்களால் ருஷ்ஜிஹ்வமும், வாத கபங்களால் விபாதிகா-ஸித்மம்-ஏககுஷ்டம்-கிடிபம்-அலஸம் என்பவைகளும், கப பித்தங்களால் தத்ரு-பாமா-ஸ்போடம்-மஹாகுஷ்டம்-சர்ம தளம்-புண்டரீகம்-சதாருகம் இவைகளும், ஸந்நிபாதத்தினால் காகணமும் உண்டாகின்றன. (2) கீவித்ராம் என்கிற வெண்குஷ்டம் வாதஜம், பித்தஜம், கபஜம் என்று மூன்று விதம். 87—90.

க்ஷுத்ர ரோகங்கள் :—இவை [1] அறுபது விதம்; அவையாவன :—சர்க்கரார்புதம், இந்த்ரவ்ருத்தா, பஹுவிதா, விவ்ருதா, அதிக்ராலஜீ, வராஹ தம்ஷ்ட்ரா, வல்மீகம், கச்சபீ, நிலகாலகம், கர்தபீ, ரகஸா, யவ ப்ரக்யா,

விடும் சூக தோஷம்; (24) பரிவர்த்திகா-மணியின் மேலுள்ள சர்மசதை மடித்துத் தோலுடன் தோலாய் சுருங்கிவிடும் சூக தோஷம். [இவற்றுள் லிங்கார்சஸ் என்பதை மாதவகரன் உபதம்சரோகத்தில் சேர்த்திருக்கிறார்; நிவ்ருத்தம், அவபாடிகா, விருத்தமணி, நிருத்தப்ரகசம், பரிவர்த்திகா இந்த ஐந்தும் மாதவநிதானத்தில் இப்பிரகணத்தில் கூறப்படவில்லை; ஆகவே மாதவ நிதானத்தின்படி சூக ரோகம் பதினெட்டுவிதமேயாம்.]

1. (1) கபாலிகம்—சர்மமானது இதில் வறட்சியுடன் கறுஞ்சிவப்பான மண் ஓடுபோல் ஆய்விடும்; (2) உதும்பரம்—அத்திப்பழம் போன்றது; (3) மண்டலம்—வெளுப்பும் சிவப்பும் நிறைந்திருப்புமுள்ள வீக்கம்போல் சிறிது மேலுக்குக் கிளம்பிய அடர்த்தியான படை; (4) விசர்ச்சிகா—கருப்பாயும், தினவுள்ளதும், ஒருவித நீர் பொசிந்துகொண்டிருப்பதுமான படை; (5) ருக்ஷஜிஹ்வம்—சுற்றிலும் சிவந்து நடுவில் மேக வர்ணமுள்ள வெகு தடிப்பான குஷ்டம்; இதையே ருக்ஷயஜிஹ்வம் என்றும் சொல்வர்; (6) விபாதிகா—கை கால்களில் வெடிப்புகளே அதிகமாய் உண்டாக்குவது; (7) ஸித்மம்—சொரியும்போது வெளுப்பும் சிவப்புமான மெல்லிய தோல் களே உதிரச்செய்வதும், சுரைப்பூ போன்றதுமான படை; இது பெரும் பாலும் மார்பில் உண்டாகிறது; (8) ஏகதுஷ்டம்—மீன்செதிள் போன்ற தாய் உடலெங்கும் பரவியிருக்கும் குஷ்டம்; (9) கிடிபம் அல்லது கிடிமம்—காய் காய்த்ததுபோல் கடினமும் கறுவலுமான படை; (10) அலஸம்—தினவுடன் கூடிய சிவந்த கட்டிகளையுடைய படை; (11) தத்ரு—படர்தேமல் எனப்படும் படை; (12) பாமா—ஸாதாரண சிரங்கு; (13) ஸ்போடம்—கொப்புளம்; (14) மஹா குஷ்டம்—இதுவரையில் சொன்ன எல்லா இலக்ஷணங்களுடன் கூடியது; (15) சர்மதளம்—தினவு வலிகளுடன் கூடிய சிவந்த கொப்புளங்களையுடைய விரணம்; (16) புண்டரீகம்—தாமரைப்பூ போன்றது; (17) சதாருகம்—கறுஞ்சிவப்பான அனேக வர்ணங்களுடன் கூடிய அதிக எரித்தலைத் தரும் வியாதி; (18) காகணம்—காக்கணம் பூவுக்கு ஸமமான குஷ்டம்.

2. காரணம், குறிகள், சிகித்ஸை முதலியவை எவற்றிற்கு அற்பமாயிருக்கின்றனவோ அவை 'க்ஷுத்ரரோகங்கள்' எனப்படுகின்றன. புலி முதலிய கொடிய விலங்குகள் க்ஷுத்ரமிருகங்கள் எனப்படுவதுபோல், மிகத்தீய ரூபமுள்ள சர்க்கரார்புதம் முதலியவைகளும் 'க்ஷுத்ரரோகங்கள்' என்று கூறப்படும்.

விதாரிகா, கதரம், மஷகம், நீலிகா, ஜாலகர்தபம், இரிவேல்லீ, ஜதுமணி, குதப்ரம்சம், அக்னிரோஹிணீ, ஸந்நிருத்தகுதம், கோடம், குநகம், அருசயீ, பத்மினீ கண்டகம், சிப்பம், அலஸம், முகதூஷிகா, கஸ்ரூ, விருஷண கச்சு, கந்தம், பாஷாணகர்சபம், ராஜிகா, வ்யங்கம், விஸ்போடம், மஸூரிகை என்பவைகளும் இவற்றின் பிரிவுகளுமாம். இவற்றுள் வ்யங்கமானது வாதஜம், பித்தஜம், கபஜம், ரக்தஜம் என்று நாலுவிதம்; விஸ்ப்போடமானது வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்றுவிதமும், த்வந்த்வதோஷங்களால் மூன்றும், இரத்தத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக எண் வகைப்படும்; மஸூரிகையானது மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்று விதமும், த்வந்த்வதோஷங்களால் மூன்றுவிதமும், ஸந்நிபாதத்தினால் ஒரு விதமும், சர்மம்-இரத்தம்-மாம்ஸம்-மேதஸ்-அஸ்த்தி-மஜ்ஜா-சுக்ரம் இந்த தாதுக்களே ஆச்ரயித்து ஏழு விதமும் ஆகப் பதினொரு விதமாக உண்டாகின்றன; மேதஸ் என்கிற கொழுப்பு - அஸ்த்தி - மஜ்ஜா-சுக்ரம் இவற்றைபற்றிய மஸூரிகாரோகம் காண்பரும் அஸாத்தியம். 91—99½.

1. (1) கபாலிகாபுதம்—வாதம் கபம் இரண்டும் பிரகோபித்து மாம்ஸ-ஸிரா ஸ்நாயு இவைகளை உலர்த்தியும், அவற்றில் சீழ்க்கட்டிகளையும், பளிங்கு போன்ற கட்டிகளையும் உண்டுபண்ணி தூர்க்கந்தமான சீழ் முதலியவற்றை வெளிப்படுத்தும் வியாதி. (2) இந்த்ரவ்ருத்தா—தாமரைக் கிழங்கு போன்ற சீழ்க்கட்டி; இந்த்ரவிருத்தா என்றும் சொல்லப்படும்; (3) பஹுவிதா—காதுகளுக்குச் சமீபத்தில் அதிக வேதனையை யுண்டுபண்ணிக் கொண்டு உற்பத்தியாகும் கட்டி. (4) பழுத்த அத்திப்பழம் போன்றதாய் அகன்ற முகத்துடன் கூடிய விரணம் விவ்ருதா என்று கூறப்படும். (5) அதிக்ராலஜீ—அடி சிறுத்து மேல்பாகம் விசாலித்து முகம் காணப்படாமல் உன்னதமாகக் கிளம்பிய அதிக சீழில்லாத கட்டி. (6) வராஹதம்ஷ்ட்ரா—இரத்த வர்ணமான மட்டத்துடன்கூடியதும், சர்மத்தை வேகச் செய்வதும், கொடிய வேதனையைத் தருவதுமான விரணம் (7) வல்மீகம்—கழுத்து, அக்குள், துடையிடுக்கு முதலிய விடங்களில் பிரந்திகள் வீங்கிப்போய் பல துவாரங்களுடன் கூடியுண்டாகும் புற்றுபோன்ற சீழ்க்கட்டி. (8) கச்சபீ—வரிசையாக ஐந்தாறு இடங்களில் உற்பத்தியாகும் ஆமையைப் போன்ற கட்டி. (9) நிலகாலகம்—தோலோடு தோலாய் எள்ளுகள் போல் கறுப்பாக உண்டாகும் சர்மரோகம். (10) கர்தபீ—அனேக சிறிய கட்டிகளுடன் கூடிய வீக்கம். (11) ரகஸா—வேதனையின்றியே சர்மத்தின்மேல் சிவப்பாகவே மேலோங்கி வந்திருக்கும் சர்மவிவாதி; இதற்கே மாதவநிதானம் முதலியதில் நியச்சம் எனப் பெயர். (12) யவப்ரக்யா—மாம்ஸத்தை ஆச்ரயித்து சாமையென்னும் தானியம்போல் கடினமாயுண்டாகும் பரு. (13) விதாரிகா—அக்குள் துடையிடுக்கு முதலான விடங்களில் இரத்தவர்ணமாய் நிலப்பனங்கிழங்குபோல் உண்டாகும் சிலந்தி. (14) கதரம்—கல்லுகள் அல்லது முள்ளுகள் தாக்குவதால் பாதங்களில் உண்டாகும் ஒருவித காய்ப்பு; ஆணிவிழுதல் என்றும் சொல்லுவது வழக்கம். (15) மஷகம்—வேதனை யுண்டுபண்ணுமல் உளுந்துருவங்கொண்டு உண்டாகும் பரு (16) நீலிகா—கறுத்தவர்ணமான பிறவி மறு. (17) ஜாலகர்தபம்—சீக்கிரம் பக்குவமாகாமல் ஜ்வரத்துடன் உண்டாகும் அக்னியம்மைபோன்ற விரணம். (18) இரிவேல்லீ—உலையில் உருண்டையாயுண்டாகும் வெகு வேதனையைத் தரக்

விஸர்ப்பம், உதர்தம், சீதபித்தம் :—விஸர்ப்பரோகம் [1] வாதபித்த கபங்களால் மூன்று விதமும், த்வக்த்வ தோஷங்களால் மூன்று விதமும், ஸந்திபாதத்திலுல் ஒன்றும், அக்னி தாஹத்திலுல் ஒரு விதமும், அபிகாதத்திலுல் ஒருவிதமும் ஆக ஒன்பது விதம். பித்த ச்லேஷ்மங்களால் 'உதர்தம்' என்கிற ரோகமும்[2], வாதபித்தங்களின் ஸம்பந்தத்தால் 'சீதபித்தம்' என்கிற ரோகமும் [3] உண்டாகின்றன. 100—102.

கூடிய கட்டி. (19) ஜந்துமணி அல்லது ஜதுமணி—தோலுடன் தோலாய் நோவில்லாமல் உண்டாயிருக்கும் பிறவித்தேமல். (20) குதப்ரம்சம்—சீதபேதி அதிஸாரம் முதலியவற்றுல் வெகு தூர்பலமான மனிதனுக்கு குதம் வெளிவருதல். (21) அக்னிரோஹிணீ—மஹத்தான ஜ்வரத்தையும் அக்னியைப்போல் உள்ளும் புறமும் தாபத்தையும் உண்டாக்கிக் கொண்டும், மாம்ஸத்தைப் பிளக்கச் செய்துகொண்டும் அக்குள் முதலான விடத்தில் உண்டாகும் பிளவை; இந்த நோய் ஒரு வாரத்திலாவது பத்து நாட்களிலாவது பதினேந்து நாட்களிலாவது மனிதனைக் கொன்றுவிடும். (இதுதான் ப்ளேக் என்று சொல்லப்படுவதாகச் சிலர் கருத்து). (22) ஸந்நிருத்ததுதம்—குதம் என்கின்ற ஆஸனத்வாரம் வாயுவின் பிரகோபத்தால் சுருங்கிப்போய் மலம் தாராளமாய் வெளிவர முடியாமற்போய்விடுதல். (23) கோடம்—சரீரமெங்கும் தினவை யுண்டுபண்ணிக்கொண்டு வியாபிக்கும் சிவந்த படை. (24) நகம்—நகம் கறுத்தும் கடினமாகவும் ஆய்விடுவது. (25) அநுசயீ—பாதத்தின் உட்புறத்தில் ஆழமாக மாம்ஸங்களை ஆச்ரயித்து அதிக வலியைத் தராமல் உண்டாகும் ஒருவித வீக்கம். (26) பத்மிநீ கண்டகம்—தாமரைத்தண்டிலுள்ள முள்ளுகளைப்போல் உண்டாகும் சர்ம வியாதி. (27) சீப்பம்—நகத்திற்குச் சுற்றிலுமுள்ள மாம்ஸத்தை ஆச்ரயித்து உண்டாகும் ஒருவித வீரணம்; இதையே நகசுற்று என்பார்கள். (28) அலஸம்—சேற்றுப்புண். (29) ழகநூஷிகா—முகத்திலுண்டாகும் ஒருவிதமான தழும்பு. (30) கக்ஷா—அக்குளிலுண்டாகும் கறுநிறமான இரத்தக்கட்டி. (31) விநுஷணகசீரு—லிங்கத்திலும் துடை யிடுக்குகளிலு முண்டாகும் தினவுள்ள படை. (32) கந்தம்—ககூஷா என்னும் விரணத்தைப்போல் சரீரத்தில் வேறெங்கேயாவது காணும் பிளவை; இதையே கந்தமாலா என்றும் கூறுவர். (33) பாஷாணகர்தபம்—முகவாய்க்கட்டையின் பூட்டிலுற்பத்தியாகும் ஒரு கட்டி. (34) ராஜிகா—கடுகைப் போன்ற பரு; இதையே யுவாநபிடகா அல்லது யௌவனப் பரு என்பார்கள். (35) வ்யங்கம்—ஒரு விதமான தேமல். (36) விஸ்போடம்—கொப்புளம். (37) மஸூரிகா—அம்மை. [இவற்றுள் கோடம், விஸ்போடம், மஸூரிகா என்பவற்றை மாதவகரன் க்ஷுத்ரரோகத்தில் சேர்க்கவில்லை. வ்யங்கம் முதலியவை வாதாதி பேதங்களைக்கொண்டு பிரிக்கப்படுவதால் மற்ற 23 விதங்களான க்ஷுத்ரரோகங்களும் கணக்கிடப்படும்.]

1. விஸர்ப்பம்—அக்கி அல்லது அகினியமைமை. மாதவநிதானத்தில் விஸர்ப்பம் எழுவிதமென்று சொல்லப்படுகிறது.

2. உதர்த்தம்—எப்பொழுதும் தினவுடனும் வீக்கத்துடனும் கூடிய சென்னிறமான படை

3. உதர்த்தமென்னும் படையில் எரித்தலும் வறட்சியும் அதிகரித்தால் அது 'சீதபித்தம்' எனப்படும்.

அம்ல பித்தம், வாத ரக்தம் :—(1) 'அம்லபித்தம்' [1] என்பது வாதத்திலுல் ஒன்றும், கபத்திலுல் ஒன்றும், வாத கபங்களால் ஒன்றும் ஆக மூன்று விதம். (2) 'வாதரக்தம்' என்பது [2] வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்று, ஸந்திபாதத்திலுல் ஒன்று, த்வக்த்வ தோஷங்களால் மூன்று, இரத்த தோஷத்திலுல் ஒன்று ஆக எட்டு விதம். 103—104.

வாதரோகங்கள் :—முனிவர்கள் கூறியபடி எண்பதுவித வாதரோகங்கள் இங்கு குறிக்கப்படுகின்றன ; அவையாவன—[3] ஆக்ஷேபகம், ஹநுஸ்தம்பம், ஊருஸ்தம்பம், சிரோக்ரஹம், பாச்வர்யாயாமம், அந்தராயாமம், பார்ச்வ சூலம், கடிக்ரஹம், தண்டாபதானகம், கல்லீ, ஜிஹ்வாஸ்தம்பம், அர்திதம், பக்ஷாகாதம், கிரோஷ்டுக சீர்ஷம், மன்யாஸ்தம்பம், பங்கு, கலாயகஞ்ஜம், தூநீ, பிரதிதூநீ, கஞ்ஜம், பாதஹர்ஷம், க்ருத்ரஸீ, விச்வாசீ, அபபாஹுகம், அபதாநகம், விஷ்ணுயாமம், வாதகண்டகம், அபதந்த்ரகம், அங்கபேதம், அங்கஸோஷம், பிங்மிகம், கத்கதம், அஷ்டீலா, பிரத்யஷ்டீலா, வாமநம், குப்ஜத்வம், அங்கபீடை, அங்கசூலம், ஸங்கோசம், ஸ்தம்பம், ரௌக்ஷ்யம், அங்கபங்கம், அங்கவிப்ரம்சம், விட்க்ரஹம், பத்தவிட்கம், மூலம், அதிஜ்ரும்பா, அத்யுத்காரம், அந்த்ரகூஜகம், வாதப்ரவ்ருத்தி, ஸ்புரணம், விராபூரணம், சும்பம், கார்ச்யம், ச்யாவம், ப்ரலாபம், க்ஷிப்தஹ்ருத்ரோகம், நித்ராநாசம், ஸ்வேதநாசம், தூர்பலம், பலக்ஷயம், சுக்ரா திப்ரவ்ருத்தி, சுக்ரகார்ச்யம், சுக்ரநாசம், சித்தாந வஸ்த்திஜி, சித்தகாடிந்யம், ஆஸ்யவைரஸ்யம், கஷாய வக்த்ரம், ஆத்மாநம், பிரத்யாத்மாநம், சைத்யம், ரோமஹர்ஷம், பீருத்வம், தோதம், கண்டி, ரஸாஜ்ஞதா, சப்தாஜ்ஞத்வம், பிரஸுப்தி, கந்தாஜ்ஞத்வம், தேத்திரக்ஷயம் என்பவையாம். 105—114½.

1. அம்லபித்தம்—நெஞ்செரிவு அல்லது தூல பொரிவு. மாதவநிதானத்தில் பித்தகபங்களால் நான்காவது அம்லபித்தம் ஒன்று கூறப்படுகிறது.

2. வாதரக்தம்—குஷ்டத்தைச் சேர்ந்த ஒரு ரோகம்.

3. (1) ஆக்ஷேபகம்—வலி அல்லது இசிவு. (2) ஹநுஸ்தம்பம்—மோவாய்க்கட்டைப் பிடிப்பு. (3) ஊருஸ்தம்பம்—துடைகளில் வெகு வேதனையுண்டு பண்ணுவதான ஜ்வரத்துடன் கூடிய வாத நோய். (4) சிரோக்ரஹம்-தலையை அசைக்கமுடியாத பிடிப்பு. (5) பார்ச்வாயாமம்-முதுகுப் பக்கமாய் வளையச்செய்யும் வலி. (6) அந்தராயாமம்-வயிற்றுப் பக்கமாய் வளையச்செய்யும் வலி. (7) பார்ச்வசூலம்-பக்கச்சூலை. (8) கடிக்ரஹம்-இடுப்புப் பிடித்தல். (9) தண்டாபதானகம்-கொம்பைப்போல் சரீரத்தை விறைக்கச் செய்யும் வலி. (10) கல்லீ-அல்லது கல்வீ-பாதம், துடை, கை இவற்றை முடக்கிவிடும் வாயு. (11) ஜிஹ்வாஸ்தம்பம்-நாக்கு அசைக்கக் கூடாமற் போய்விடுவது. (12) அர்திதம்-முகத்தை அல்லது வாயை ஒரு பக்கமாக இழுக்கும் பார்ச்வவாயு. (13) பக்ஷாகாதம்-பார்ச்வவாயு. (14) கிரோஷ்டுகசீர்ஷம்—முழங்கால் வீங்கிப்போய் நோவையுண்டுபண்ணும் வாதரோகம் ; இதை நரித்தலைவாயு வென்றும் சொல்வர். (15) மந்யாஸ்தம்பம்-கழுத்து நரம்புச்சுளுக்கு. (16) பங்து-வாயுவினுல் இரண்டு காலும் ஸ்வாதீனமில்லாமல் முடவனுய் விடுதல். (17) கலாயகஞ்ஜம்-கால்களுடைய பூட்டுகள் தளர்ந்துபோய தடுமாறிக்கொண்டே நடத்தல். (18) தூநீ-குடலின் மேற்புறத்தில் ஆரம்பித்து ஆஸனத்வாரம் முதலியவற்றைப் பிளப்பதுபோல் கீழ் நோக்கிக் செல்லும் வாதநோய். (19) பிரதிதூநீ-ஆஸனத்வாரத்திலிருந்து ஆரம்பித்து குடலில் மேல்பக்கம்

நோச்கி நோவை யுண்டுபண்ணும் வாதரோகம். (20) கதூரும் நுரையில் ஸம்பந்தப்பட்ட வாயுவானது துடையிலுள்ள கண்டரங்களே நிரந்து காலை அசைக்கக்கூடாமற் செய்வது. (21) பாதஹர்ஷம்-பாதங்களில் பரிச உணர்ச்சியற்று ஒருவித சிலிர்க்கையுண்டாவது. (22) கீருத்தலை நுரையி லிருந்து ஆரம்பித்து தொடை, முழங்கால், பாதம் இவற்றைநோக்கிக் கிரமமாக நோவை யுண்டுபண்ணிக்கொண்டு செல்லும் ஒருவித வாயு. (23) ஸ்ரீவைதீக்ருத்வஸீ மாதிரியே கையிலுண்டாகும் வாயு. (24) அபபாஹுகம்-கைகளி லுள்ள இரத்த நாடிகள் சுருங்கிப்போய் கை ஸ்வாதீனமற்றுப் போவது. (25) அபதாநகம் - இருதயம், சிரஸ், கண்ணம் முதலிய அவயவங்களில் வெகு வேதனையுண்டாய், கண்களும் மற்ற அவயவங்களும் அசையாமற்று, ஞாபகம் தடுமாறி, கூக்குரலுடன் விழச்செய்யும் ஒருவித வலி. (26) விரணயாமம்-விரணவேதனையைப் பொறுக்க முடியாமலுண்டாகும் வலி. (27) வாதகண்டகம்-தொலியில் தடக்கப் போகாமல் குதிகால்களில் உண்டாகும் நோய். (28) அபதந்த்ரகம்-அபதாகத்திற்குள்ள குறிகளே சிறிது குறைவாகக் காணும் ரோகம்; (29) அங்குலேதம்-ஒவ்வோரவயவத்தையும் பிளப்பதுபோல் உண்டாகும் நோய். (30) அங்குலகோஷம் - அவயவங்கள் போஷணைகளைக் கிரஹிக்கமுடியாமல் சுஷ்டித்தல். (31) மீந்மீந்து வாய் குளறுதல். (32) கத்கதம்-தெற்று வாய். (33) அஷ்டீலா-குடலுக்குள் நாபிக்குக் கீழே வாதம் அதிகரித்து குண்மத்தைப்போல உண்டாகும் வருத்தி கட்டி. (34) பிரதியஷ்டீலா-குடலில் குறுக்காக நீண்டுள்ள கட்டி. (35) வாமதம்-குள்ளம். (36) கூபஜம்-கூன். (37) அங்குபீடா-உடம்பிலெல்லாம் முறுக்கிப் பிழியப்படுவதுபோன்ற நோய். (38) அங்குசூலம்-ஊசியினால் குத்தப்படுவதுபோன்ற நோய். (39) ஸங்கோசம்-அவயவங்கள் முறுகிப் போதல். (40) ஸ்தம்பம்-அவயவங்கள் அசைக்க முடியாமற்போகும் திமிர்வாயு. (41) ஸ்ரஸ்தயம்-சரீரத்தில் பசை யற்றுப்போதல். (42) அங்கபங்கம்-அவயவம் நைதலுறுதல். (43) அங்கவிப்ரம்சம்-அவயவம் இடம்விட்டு நழுவிப்போதல். (44) விட்பேதம்-மலபந்தம். (45) பித்த விட்கம்-மிகவும் முதிர்ந்துபோன மலபந்தம். (46) மூகம்-ஊமை. (47) அதிஜ்ரும்பா-மிகமிஞ்சிய கொட்டாவி. (48) அத்யுத்காமி-மிகமிஞ்சிய எப்பம். (49) அத்யாகூஜநம்-வயிற்றிலுண்டாகும் இரைதல். (50) வாதப்ரவ்ருத்தி-குடலிலிருந்து மேலும் கீழுமாய் வாயு வெளி வருதல். (51) ஸ்புரணம்-கை கால் முதலிய அவயவங்களின் அடிப்பு. (52) ஸிராபூரணம் விரைகளென்னும் இரத்தக்குழாய்களில் இரத்தம் மிதமிஞ்சி நிரம்பியிருத்தல். (53) கம்பம்-சரீரநடுக்கம். (54) தாம்யம்-இளைத்தல். (55) சீர்யாவம்-கறுத்தல். (56) பிலாபம்-தன்னையும் அறியாமல் பிதற்றல். (57) க்ஷிப்தமூத்ரம்-தனக்குத் தெரியாமல் அல்லது அடக்கச் சக்தியில்லாமல் மூத்திரம் வெளிவருதல். (58) நித்ராநாசம்-தூக்கமின்மை. (59) ஸ்வேதநாசம்-வியர்வையின்மை. (60) நஷ்டபலம்-பலஹீனம். (61) பலக்ஷயம்-பலம் அடியோடு அழிதல். (62) தூஷிதிப்ரவ்ருத்தி-இரேதஸ் அதிகமாய் வெளிவருதல். (63) சுக்ரகார்சீம்யம்-இரேதஸ் குறைவுபடுதல். (64) சுக்ரநாசம்-சுக்ரம் அடியோடு அழிந்துபோதல். (65) சித்தாநவஸ்திதி-சித்தப்பிரமை. (66) சித்தகாடிந்யம்-எவ்வளவு கவ்டத்திலும் மனமிளகாமை. (67) ஆஸ்யவைரஸ்யம்-அரோசகம். (68)

பித்த ரோகங்கள் :—பித்தத்தினுலுண்டாகும் நாற்பது விதரோகங்கள் கூறப்படுகின்றன; அவை-தூமோத்காரம், விதாஹம், உஷ்ணாங்கத்வம், மதி பிரமம், காந்திஹாநி, கண்டசோஷம், முகசோஷம், அல்பசுக்ரத்வம், திக்தாஸ்யதா, அம்லவக்த்ரத்வம், ஸ்வேதஸ்ராவம், அங்கபாகதா, க்லமம், ஹரிதவர்ணத்வம், அதிருப்தி, பீததேஹத்வம், ரக்தஸ்ராவம், அங்கதாரணம், லோஹகந்தாஸ்யதா, தூர்க்கந்தத்வம், பீதமூத்ரத்வம், அரதி, பீதமலத்வம், பீததர்சநம், பீதநேத்ரதா, பீததந்தத்வம், சீதேச்சை, பீதநகத்வம், தேஜோத்வேஷம், அல்பநித்ராத்வம், கோபம், கார்ச்யம், பிங்கமலத்வம், ஆந்த்யம், உஷ்ண உச்சுவாஸம், உஷ்ண மூத்ரத்வம், உஷ்ணமலத்வம், தமோதர்சநம், பீதமண்டலதர்சநம், பித்தநிஸ்ஸரணம் என்பனவையாம். 115—121.

கஷாயவக்த்ரம்-எக்த சுவையும் துவர்ப்புபோல் உணரப்படுதல். (69) ஆந்மாநம்-வயிற்றுப்பொருமல். (70) பிரத்யாத்மாநம்-நாபிக்கு அருகில் உண்டாகும் பொருமல். (71) சைத்யம்-உடலில் உஷ்ணம் குறைந்துவிடுதல். (72) ரோமஹர்ஷம்-மயிர்க்கிலிர்க்கை. (73) பிரதிஷ்யம்-திடீரென்று பயப்படுந்தன்மை. (74) தோதம்-குத்தல். (75) கண்டு-தினவு. (76) ஸ்ராஸ்ஞதா-சுவையறியக்கூடாமை. (77) கபப்ரஸேகதா-சப்தமுணரக்கூடாமை. (78) ப்ரஸுப்தி-பரிசவுணர்ச்சியிழத்தல். (79) கந்தாஜ்ஞதா-மணமறிய முடியாமை. (80) நேத்ரோஷ்மம்-கண்தெரியாமை.

1. (1) தூமோத்காரம்-புகைவதுபோல எப்பம் விடுதல். (2) விதாஹம்-எரிவு. (3) உஷ்ணாங்கத்வம்-சரீரம் சூடாயிருத்தல். (4) பிரமம்-தலைசுற்றல். (5) காந்திஹாநி - சரீரத்தில் ஒளி மழுங்குதல். (6) கண்டசோஷம்-தொண்டைக்கம்மல். (7) முகசோஷம்-முகம் உலர்ந்துபோதல். (8) அல்பசுக்ரத்வம்-இரேதஸ் மிகக் குறைவுபடுதல். (9) திக்தாஸ்யதா-வாய்க் கசப்பு (10) அம்லவக்த்ரத்வம்-வாய்ப்புளித்தல். (11) ஸ்வேதஸ்ராவம்-வியர்வை அதிகமாகக் கசிதல். (12) அங்கபாகதா-சரீர வேக்காடு. (13) க்லமம்-சோர்வு. (14) ஹரிதவர்ணத்வம்-தேஹம் இலைப்பசுமை நிறங்கொள்ளல். (15) அதிருப்தி-எதிலும் திருப்தியின்மை. (16) பீததேஹத்வம்—தேஹம் மஞ்சள் நிறமாதல். (17) ரக்தஸ்ராவம்-சரீரத்திலிருந்து இரத்தங் கசிதல். (18) அங்கதாரணம்-சரீரம் பிளவுபடுதல். (19) லோஹகந்தாஸ்யதா-வாயில் இரும்பு வாஸனையுண்டாவது. (20) தூர்கந்தத்வம்-சரீரத்தில் துர்க்கந்தமுண்டாவது. (21) பீதமூத்ரத்வம்-மூத்ரம் மஞ்சள் நிறமாயிறங்குதல். (22) அரதி-புரட்டல். (23) பீதமலத்வம்-மலம் அதிக மஞ்சள் நிறமாவது. (24) பீததர்சநம்-பார்க்கப்படுவதெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோற்றல். (25) பீதநேத்ரதா-கண் மஞ்சள் நிறமாயிருப்பது. (26) பீத தந்தத்வம்-பற்கள் மஞ்சள் நிறமாதல். (27) சீதேச்சை-குளிர்ச்சியில் விருப்பம் அதிகரித்தல். (28) பீதநகத்வம்-நகங்கள் மஞ்சள் நிறமாவது. (29) தேஜோத்வேஷம்-பிரகாசமான வெளிச்சங்களில் வெறுப்பு. (30) அல்ப நித்ராத்வம்-தூக்கம் குறைந்து போதல். (31) கோபம்-இனம். (32) கார்ச்யம்-இளைத்துப்போதல். (33) ஆந்த்யம்-திரவமாக விரேசனமாகுதல். (34) ஆந்த்யம்-குருட்டுத்தனம். (35) உஷ்ணச்வாஸம்-வெகு சூடாக மூச்சுவிடுதல். (36) உஷ்ண மூத்ரத்வம்-வெகு சூடாக மூத்திரம் வருதல். (37) உஷ்ணமலத்வம்-மலம் மிகச் சூடாகப் போதல். (28) தமோதர்சநம்-கண்பார்வை இருளடைதல். (39) பீத

கப ரோகங்கள் :—கபத்தினுல் இருபதுவித ரோகங்கள் உண்டாகின்றன. அவையாவன :—தந்த்ரா, அதிநித்ரை, கௌரவம், முகமாதுர்யம், முகலேபம், ப்ரஸேகம், ச்வேதாவலோகநம், ச்வேதமலம், மூத்ரஸௌக்ல்யம், ச்வேதாங்கம், சைத்யம், உஷ்ணேச்சை, திக்தகாமிதா, மலாதிக்யம், சுக்ர பாஹுல்யம், பஹுமூத்ரம், ஆலஸ்யம், மந்தபுத்தி, த்ருப்தி, ஸ்வப்நாயாக்யம் [1] என்பவையாம். 122—124½.

இரத்த வியாதிகள் :—இரத்த தோஷத்தினுல் பத்துவித ரோகங்கள் உண்டாகின்றன. அவை :—கௌரவம், ரக்தமண்டலம், ரக்தநேத்ரம், ரக்தமூத்ரம், ரக்தஷ்டீவநம், ரக்தபிடகா, ஔஷ்ண்யம், பூதிகந்தம், பீடை, பாகம் [2] என்பவையாம். 125—126½.

முக ரோகங்கள் :—முகத்தினுள் எழுபத்தினுலு வியாதிகள் உண்டாவதாகக் கூறப்படுகின்றது; அவற்றுள் (1) உதடுகளில் பதினேழு ரோகங்கள் உண்டாகின்றன; அவை :—வாத பித்த கபங்களால் தனித்தனியே மூன்றும், ஸங்கிபாதத்தினுல் ஒன்றும், இரத்தத்தினுல் ஒன்றும், க்ஷதம், மாம்ஸார்புதம்,

---

மண்டல தர்சநம்-ஆகாயத்தில் மஞ்சள் நிறமான வட்டங்கள் காணப்படுதல். (40) பித்தநிஸ்ஸாணம்-பித்தம் அதிகமாகச் சுரப்பது.

1. (1) தந்த்ரா-சோம்பல். (2) அதிநித்ரை-மிதமிஞ்சிய தூக்கம். (3) கௌரவம்-தன் சரீரம் தனக்கே பாரமாகத் தோற்றல். (4) முகமாதுர்யம்-எப்பொழுதும் வாய் இனிப்பாயிருத்தல். (5) முகலேபம்-வாய் குழ குழப்பாயிருத்தல். (6) ப்ரஸேகம்-உமிழ்நீர் அதிகமாதல். (7) ச்வேதாவலோகநம்-எப்பொருளும் வெண்மையாக இருப்பது போலத் தோற்றுதல். (8) ச்வேதமலம்-மலம் வெளுப்பாயிருத்தல். (9) ச்வேத மூத்ரம்-மூத்திரம் வெளுத்துப்போதல். (10) ச்வேதாங்கம்-உடல் வெளுத்தல். (11) சைத்யம்-உடலில் சீதம் அதிகரித்தல். (12) உஷ்ணேச்சை—சூட்டில் விருப்பம். (13) திக்தகாமிதா-கசப்பில் விருப்பம். (14) மலாதிக்யம்-மலம் அதிகமாதல். (15) சுக்ரபாஹுல்யம்-சுக்ரம் அதிகமாகச்சுரத்தல். (16) பஹுமூத்ரம்-மூத்திரம்-அதிகமாயிறங்குதல். (17) ஆலஸ்யம்-மந்தமாகக் காரியம் செய்தல். (18) மந்த புத்தி-மிக்கருறை வான புத்தி. (19) த்ருப்தி-வயிறு நிரம்ப ஆஹாரமுண்டது போல் எப் பொழுதும் உணர்ச்சி. (20) தூர்க்தா வாக்யம்-குரகுருவென்கிற ரூபமுடன் பேசுதல்.

2. (1) கௌரவம்:—உடல் பருத்து பாரமாயிருப்பதாய் உணர்ச்சி. (2) ரக்தமண்டலம்—உடலில் இரத்த வர்ணமான படைகள் உண்டாவது. (3) ரக்தநேத்ரம்—கண் இரத்தவர்ணமாக ஆவது. (4) ரக்தமூத்ரம்—மூத்திரத்துடன் இரத்தம் கலித்தல். (5) ரக்தஷ்டீவநம்—உமிழ்நீரில் ரத்தம் வருதல். (6) ரக்தபிடகா—இரத்தக் கட்டி. (7) ஔஷ்ண்யம்—தேஹத்தில் சூடு அதிகரித்தல். (8) பூதிகந்தம்—சரீரத்தில் துர்கந்தமுண்டாவது. (9) பீடை—சரீரத்தில் நோவுண்டாவது. (10) பாகம்—சரீரவேக்காடு. [வாத பித்த கபங்களைப் போல் இரத்தமும் நான்காவதான ஒரு தோஷமென்று சிலரது கருத்தானதால், இரத்தத்தினுலும் ஸ்வதந்த்ரமாய் சில வியாதிகள் உண்டாகின்றன என்று இங்கு கூறப்பட்டது.]

கண்டோஷ்டம், ஜலார்புதம், மேதோர்புதம், அர்புதம் என்பவையுமாம். [1] (2) பற்களில் பத்துவித வியாதிகள் உண்டாகும்; அவை : தாளநம், க்ருமிதந்தம், தந்தஹர்ஷம், கராளம், தந்தசாலம், சர்க்கரா, அதிதந்தம், ச்யாவதந்தம், தந்தபேதம், கபாலிகா என்பனவாம். [2] (3) பல்லீறுகளில் பதின்மூன்று வியாதிகள் உண்டாகும்; அவை சீதாதம், உபகுசம், தந்தவித்ரதி, புப்புடம், அதிமாம்ஸம், விதர்ப்பம், ஸௌஷிரம், மஹாஸௌஷிரம், வாதநாடி, பித்தநாடி, கபநாடி, ஸங்கிபாதநாடி, ரக்தநாடி என்பவையாம். [3] (4) நாக்கிலுண்டாகும் வியாதிகள் ஆறு; அவை வாதஜம், பித்தஜம், கபஜம், அலஸம், அதிஜிஹ்வா, உபஜிஹ்வா என்பவையாம். [4] (5) அர்புதம், தாலுபிடகா, கச்சபீ, தாலு ஸம்ஹதி, களசுண்டி, தாலுசோஷம், தாலுபாகம், புப்புடம் என்று தவடையில் எட்டு வியாதிகள் உண்டாகும். [5] (6) வாதரோஹிணீ,

---

1. க்ஷதம்:—அடிபடுவதால் உண்டாகும் விரணம். மாம்ஸார்புதம்-புரை குழலைப்போல் உதடு வீங்கி விடுவது. கண்டோஷ்டம்—உதடு வெடித்துப்போதல். ஜலார்புதம்—உள்ளே தூர்நீர் தங்கிய புரை குழல். மேதோர்புதம்—கொழுப்பு தங்கிய புரை குழல். அர்புதம்—ஸாதாரண புரை குழல்.

2. (1) தாளநம் :—பல் பிளக்கப்படுவதுபோன்ற வேதனை. (2) தந்தமிதந்தம்-பற்களில் நெருடியுண்டாதல். (3) தந்தஹர்ஷம்-பற்சிலிர்க்கை. (4) கராளம்-கோரப்பற்களைப் போல் பல் ஒழுங்கீனமாதல். (5) தந்தசாலநம்-பற்கள் ஆட்டங்கொள்ளல். (6) சர்க்கரா-பற்களில் கறள் கட்டுதல். (7) அதிதந்தம்-பற்கள் ஒன்றுமேல் ஒன்றுய் முளைத்தல். (8) ச்யாவதந்தம்-கறுத்த பற்கள். (9) தந்தபேதம்-பற்களில் இடிப்பது போன்ற நோய். (10) கபாலிகா-சர்க்காரவே விருத்தியாய் பற்களை விட்டுக் கழன்றுவிடும் நிலைமைக்கு வருவது.

3. சீதாதம்—பல்லீறுகளிலிருந்து இரத்தமும், மிருதுவான சிறிய துர்க்கந்த மாம்ஸங்களும் அடிக்கடி சிதறுதல். உபகுசம்-பல்லீறுகளில் எரிச்சலெடுத்து பற்கள் ஆட்டங்கொள்ளும் நோய். தந்த வித்ரதி-பல்லீறுகளின் குழிப்புண். புப்புடம்-இரண்டு அல்லது மூன்று பற்களின் ஈறுகள் வீக்கங்கொள்ளும் ஒரு கட்டி. அதிமாம்ஸம்-கடைவாய்ப் பல்லில் அதிக நோவை யுண்டாக்கி உமிழ் நீரை வீசேஷமாகச் சுரப்பிக்கும் பெரிய கட்டி. விதர்ப்பம்-பற்களின் அடியிலுள்ள மாம்ஸங்கள் தேய்ந்து ஈறுகளில் அதிக வலியை யுண்டாக்கும் வியாதி. ஸௌஷிரம்-ஈறுகளின் அடியில் புரையோடும் கட்டி. மஹாஸௌஷிரம்-ஸௌஷிரமே விருத்தியாய் ஈறுகளிலிருந்து பற்கள் சிதறிப் போகும் நிலைமைக்கு வந்து தவடைகள் பிளக்கப்படுவது போன்ற நோய். வாதநாடி, பித்தநாடி, ரக்தநாடி—இவைகள் அந்தந்த தோஷத்தினுல் பல்லீறுகளில் உண்டாகும் புரையோடு கூடிய விரணங்கள்.

4. அலஸம் அல்லது அலாஸம் :—நாக்கின்மேல் உண்டாகும் ஒருவித கட்டி. அதிஜிஹ்வா-உள்நாக்கு வளருதல். உபஜிஹ்வா-நாக்கின் அடியில் அதைப்போல் உண்டாகும் ஒருவித கட்டி.

5. (1) அர்புதம்-தவடையின் மத்தியில் தாமரைப்பூ போல் உண்டாகும் வீக்கம். (2) தாலுபிடகா-தவடையிலுண்டாகும் கட்டி. (3) கச்சபீ-ஆமையுருவமான அதிக வலியில்லாத வீக்கம்; புட்டாளம்மை யென்று வழங்குவர். (4) தாலு ஸம்ஹதி-தாடையினிடையில் வலியில்லாமல் மாம்ஸம்

பித்தரோஹிணீ, கபரோஹிணீ, ஸந்நிபாதரோஹிணீ, பிரதாபரோஹிணீ, ப்ருந்தம், களேகம், களவித்ரதி, ஸ்வரபங்கம், தண்டிகேர், ஸ்தப்தி, சாலுகம், அர்புதம், களாய, வலயம், வாதகண்டம், கபகண்டம், பித்தகண்டம் என்று தொண்டையில் பதினெட்டு வியாதிகள் உண்டாகும். [1] (7) வாத பித்த கபங்களாலும், இரத்தத்தினாலும், ஸந்நிபாதத்தினால் நான்கு ஆஸ்ய பாகங்களும், பூத்யாஸ்யம் என்கிற ஒரு வியாதியும், உபர்யகம், அர்புதம் என்கிற இரண்டும் ஆக எட்டு வியாதிகள் முகத்தினுள் உண்டாகின்றன. [2] இவ்விதம் முகவியாதிகள் எழுபத்தினான்காகும். 127—141.

கர்ண ரோகங்கள் :—(1) செவிகளுக்குள் வாதம், பித்தம், கபம், இரத்தம், ஸந்நிபாதம் இவற்றால் ஐந்துவித ரோகங்களும், வித்ரதி, பிரதாபம், அர்புதம், பூதிகர்ணம், கர்ணார்சஸ், கர்ணஹல்லிகா, பாதிர்யம், கண்டூ, சஷ்குலீ, க்ருமிகர்ணம், கர்ணநாதம், ப்ரதீநாஹம் என்று பதினைந்தும் ஆகப்பதினெட்டு வியாதிகள் உண்டாகும். [3] (2) கர்ணபாலி என்கிற

பருத்துப் போவது. (5) களகர்ணம்-தாடையின் அடியில் கழுத்தினியைப் போல் உண்டாகும் நீண்ட வீக்கம். (6) தாலு சோஷம்-வாயின் மேல் உலர்ந்து போவது; இதில் நோவுமுண்டு. (7) தாலுபாகம்-தாடையில் வெயில்காடு. (8) புப்புடம்-தாடையில் இலந்தங்கொட்டையைப் போல் உண்டாய் மீடித்திருக்கும் சிறிய வீக்கம்.

1. (1) ரோஹிணீ:—அநேக சிறிய முளைகளுடன் பிரவண வாயின் துவாரத்தை மறைத்து விடுமாறு வளரும் கிரந்தி ஸம்பந்தமான வீக்கம். ப்ருந்தம்—அந்த வீக்கத்திலேயே விசேஷ எரிச்சலும், அடிக்கடி நீர்வடியும் தொடருமானால் ப்ருந்தம் எனப்படும். களேகம்—அல்லது வாயில் வாய்க்கள் வாயு இவை போகும் மார்க்கத்தைத் தடுக்கும் ஜ்வரத்துடன் கூடிய வீக்கம். களவித்ரதி—தொண்டையினத்திலும் வியாபித்த சீழ்க்கட்டி. ஸ்வரபங்கம்-மூச்சுவிட முடியாத தொண்டைக் கம்மல். தண்டிகேர்—வாயின் கூடிய தொண்டைப் புண். ஸ்தப்தி—மாம்ஸ ஸம்பந்தமான முளைகள் விருத்தியாய் தொண்டையினுள் வர்த்தியைப் போலுண்டாகும் பிரவேதனை யுண்டு பண்ணும் வீரணம். சாலூகம்—சிறிய முளைகளும் கூடிய கிரந்தி. அர்புதம்—குழல்போன்ற வீரணம். களாய—கண்ட த்தினுள் கடினமாயுண்டாகும் நெல்லிக்காய்களைப் போன்ற வீக்கம். வலயம்—கபம் பிரகோபமடைவதாலான வலயம் போன்ற வீக்கம். கண்டம்—தொண்டை யிலுண்டாகும் மிகப் பெரிதான ஒருவித கட்டி.

2. ஆஸ்யபாகம் :—வாயின் உட்புறத்திலுண்டாகும் பிலகம். பூத்யாஸ்யம்—வாயிலுண்டாகும் துர்நாற்றம். ஊர்த்வகதம்—வாயின் மேற்புறத்திலுண்டாகும் வேக்காடு.

[பற்களில் எட்டுவித வியாதிகளும், உதடுகளில் எட்டு வியாதிகளும், பல்லீறுகளில் பதினைந்தும், தாடையில் ஒன்பதும், நாக்கில் நான்கும், கண்டத்தில் பதினேழும், முகத்தினுள் எல்லா இடத்திலும் சேர்ந்து மூன்றும் ஆக 65 வியாதிகளே முகத்தினுள் உற்பத்தியாவதாக மாதவநிதானத்தில் கூறப்படுகிறது.]

3. சோதை :—ஸாதாரணமான வீக்கம். பூதிகர்ணம்—செவிக்குள் சீழ்க்கொள்ளல். கர்ணார்சஸ்—காதுக்குள் உண்டாகும் முளைகள். கர்ணஹல்

லிகை—காதின் உட்புறத்திலுண்டாகும் இரத்தக்கட்டி; குறும்பியென்று சிலர். பாதிர்யம்—செவிட்டுத்தனம். தந்த்ரிகா—வீணையின் த்வனியைப் போல் எப்பொழுதும் செவியில் மெல்லிய சப்தம் உண்டாவது. கண்டூ—அதிகமான தினவு. சஷ்குலீ—காதின் சங்குபோன்ற உள்ளவயவத்திலுண்டாகும் விரணம். க்ருமிகர்ணம்—காதுக்குள் க்ருமிகள் உற்பத்தியாவது. கர்ணநாதம்—எப்பொழுதும் காதுக்குள் கோஷமுண்டாவது. ப்ரதீநாஹம்—காதிலுண்டான குறும்பி மிகத்திரவமாகப்போய் மூக்கு வழியாக வெளிவருவது; அப்பொழுது ஒரு பக்கத்தில் அதிக விலியுண்டாகும். [மாதவநிதானத்தில் ரக்தஜகர்ணரோகம் இல்லை; அங்கு குறிப்பிட்டுள்ள கர்ணசூலை, கர்ணக்ஷ்வேடம், கர்ணஸ்ராவம், கர்ணகூதம், காதில் குளவி முதலியவை நுழைதல், கர்ணபாகம் இவைகளுக்குப் பதிலாக இங்கு சோதை, அர்புதம், கர்ணார்சஸ், கர்ணஹல்லிகா, தந்த்ரிகா, சஷ்குலீ இவை கூறப்பட்டுள்ளன.]

1. உத்பாதம் :—கனமான ஆபரணங்களைப் பூணுவதால் அல்லது அடிபடுவதால் காதுகள் கன்றிப்போயுண்டாகும் வீக்கம். பாலி சோஷம்-பாலியென்கிற வெளிக்காது மிகவும் வறண்டு போதல். விதாரீ-காது வெடித்துப்போயுண்டாகும் விரணம். துக்கவர்த்தநம்—த்வாரமுண்டாக்கி வளர்க்கும்போது உண்டாகும் வீக்கம். பரிபோடம்—காதில் கருஞ்சிவப்பாக உண்டாகும் வீக்கம். லேஹீ—காதிலுள்ள மாம்ஸங்களை அழித்து விடும் விரணம். பிப்பலீ—காதின் மேற்புறத்தில் காடு மூடாடாக உண்டாகும் சர்மவியாதி. [மாதவநிதானத்தில் பாலிசோதை, பரிபோடம், உத்பாதம், உன்மந்தகம், லேஹீ அல்லது பரிலேஹீ என்று ஐந்துவித பாலீ விரணங்கள் கூறப்பட்டுள. காதின் அடிப்புறத்தில் ஐந்துவித வியாதிகள் அதில் மொழியப்படவில்லை; ஆகவே மாதவநிதானத்தில் இருபத்திரண்டு கர்ணரோகங்களும், இந்த கிரந்தத்தில் முப்பது கர்ணரோகங்களும் மொழியப்படுகின்றன.]

2. பிரதிச்யாயம் :—சிரஸ்ஸுக்குள் வாயு பிரகோபமடைந்து, நாசியின் அடியிலுள்ள கபம், பித்தம் முதலியது சிரஸ்ஸை நோக்கி இழுக்கப்படுவதால் உண்டாகும் வியாதி. மூக்கில் எப்பொழுதும் கபம் சீழ் முதலியது கசிந்து, எரித்தலும், மூக்கினுள் பொருமலும், வாஸனையறிவதில் உணர்ச்சியின்மையுமுண்டாதலால் பீநஸம் எனப்படும். பூதி நஸ்யம் — மூக்கில் சீழுண்டாவது, அல்லது துர்நாற்றமுண்டாவது. நாஸார்சஸ்—மூக்கினுள் உண்டாகும் முளைகள். ப்ரம்சது—சிரஸ்ஸுக்கு அடியில் சேர்ந்து தோய்ந்திருக்கும் கபம் வெலியின் வெப்பத்தினால் திரவமாகவும் முறிந்தும் போய்

சிரோ ரோகங்கள் :—சிரஸ்ஸைப்பற்றிய வியாதிகள் பத்து ; அவற்றுள் வாதத்தினால் அர்த்தாவபேதகமும், பித்தத்தினால் சிரஸ்தாபமும், பித்த பீடை என்கிற நோயும், கபத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், ஸூர்யாவர்த்தம் என்பது ஒன்றும், தலையின் அதிர்ச்சியினால் ஒன்றும், கிருமியினால் ஒன்றும், சங்கசம் என்பது ஒன்றுமாம்.[1] 149—150½.

கபால ரோகங்கள் :—மண்டையில் உபசீர்ஷகம், அரும்ஷிகா, விதர்தி, தாருணம், பிடிகா, அர்புதம், இந்த்ரலுப்தம், கலதி, பலிதம் என்று ஒன்பது வியாதிகள் உண்டாகும்.[2] 151—152.

நேத்ர ரோகங்கள் :—கண்களில் தொண்ணூற்று நாலு வியாதிகள் தோன்றும்; அவற்றுள் (1) வர்த்மா என்கிற கண் சவ்வில் உண்டாவது இருபத்தி நான்கு; அவை.—க்ருச்சிரோன்மீலகம், பக்ஷ்மபாதம், கபோத்க்லிஷ்டம், லோஹிதம், அருங் நிமேஷம், ரக்தோத்க்லிஷ்டம், குகூணகம், பக்ஷ்மார்சஸ், பக்ஷ்மரோதம், பித்தோத்க்லிஷ்டம், போதகீ, க்லிஷ்டவர்த்மா, பஹலம், பக்ஷ்மோத்ஸங்கம், அர்புதம், கும்பிகா, லிகதாவர்த்மா, லகணம், அஞ்ஜ நாமிகா, கர்தமம், சியாவ வர்த்மா, பிஸவர்த்மா, அலஜீ, உத்க்லிஷ்ட வர்த்மா என்பனவாம்.[3] (2) வர்த்மாவும் வெள்ளை விழியும் சேரும் ஸந்தி

நாசியின் வழியாகப் பெருகும் வியாதி ; வெயிலில் செல்லுவதால் ஜல தோஷமுண்டாவதாகக் கூறுவதற்குக் காரணம் இதுவே. க்ஷவம்—தும்மல். நாஸாநாஹம்—நாசியின் பொருமல். பூதிரக்தம்—சீழும் இரத்தமும் கலந்து நாசியின் மூலமாய்க் கசிதல். துஷ்ட பீநஸம்-மூக்கிலிருந்து தோஷங்கள் கசிவதும் உலர்வதுமாயிருந்து மூக்கில் பொருமலும் துர்நாற்றமும் அதிகரிக்கும் வியாதி. நாஸாசேஷ்ட-நாசியில் பசையற்றுப் போவது. நாஸாபாகம்-நாசி வெப்பங்கொள்வது. பூயஸ்ராவம்-சீழ் வெளிவருதல். தீப்தகம்-மூக்கில் அழற்சி அதிகரித்து சுவாஸமும் வெகு சூடாக வெளிவருதல். [பீநஸம், பூதிநஸ்யம், நாஸாபாகம், ஆகந்துபூயரக்தம், தோஷஜ பூயரக்தம், தோஷஜ க்ஷவது, ஆகந்து க்ஷவது, ப்ரம்சது, தீப்தகம், பிரதீநாஹம், நாஸாஸ்ராவம், நாஸாசோஷம், ஐந்துவித பிரதிச்யாயம், ஆகந்துக பிரதிச்யாயம், எழுவித அர்புதம், நான்கு சோதைகள், நான்குவித அர்சஸ் நான்குவித இரத்த பித்தங்கள் ; ஆக மூப்பத்தேழுவித நாஸா ரோகங்கள் மாதவநிதானத்தில் கூறப்பட்டுள.]

1. அர்த்தாவபேதகம்—ஒற்றைத் தலைவலி. சிரஸ்தாபம்-தலையில் உண்டாகும் அழற்சி. ஸூர்யாவர்த்தம்—ஸூர்யன் உதயமாகும்போது ஆரம்பித்து மத்தியான்னம் வரையில் கிரமமாக அதிகரித்து வெயில் தாழத் தாழ குறைந்துவரும் தலைவலி. சங்கசம்-கன்னத்தில் ஸஹிக்கக் கூடாமலுண்டாகும் வலி.

2. உபசீர்ஷகம்—தலையின்மேல் உண்டாகும் ஒருவித வளர்ச்சி. அருர்வீகா—ஊன் ஜலத்தைப் பெருக்கும் அநேக கண்களையுடைய தலையிலுண்டாகும் புண்கள். தாருணம்-மண்டையிலுள்ள சர்மம் வெடித்துப் போதல். பிடிகா-சிறிய கட்டி. இந்த்ரலுப்தம்-தலை மயிர் உதிர்ந்து போதல். கலதி—வழுக்கைத் தலை. பலிதம்-மயிர் நரைத்தல்.

3. கிருச்சிரோன்மீலநம்—இமைகளை ஒட்டிக்கொள்ளச் செய்யும் வியாதி; பக்ஷ்மபாதம் — இமைகளில் தினவெடுத்து அதின் மயிர்கள் உதிர்ந்து விவது; கபோத்க்லிஷ்டம்—கபம் பிரசோபமடைந்து கண்கள்

யில் ஜலஸ்ராவம், கபஸ்ராவம், ரக்தஸ்ராவம், பர்வணீ, பூயஸ்ராவம், க்ருமிக்கிரந்தி, உபநாஹம், அலஜீ, பூயாலஸம் என்று ஒன்பது வியாதிகளுண்டாம்[1]. (3) சுக்லம் என்கிற வெண்மடலில் விரோத்பாதம், விராஹர்ஷம், விராஜாலம், சுக்லிகா, சுக்லார்மம், அதிமாம்ஸார்மம், ப்ரஸ்தார்யர்மம், பிஷ்டகம், விராபிடிகா, கபக்கிரந்தி, அர்ஜுனம், ஸ்நாய்வர்மம், சோணிதார்மம் எனப்

கலங்கிப் போதல்; லோஹிதம்—வர்த்மா என்கிற சவ்வில் மிருதுவாகவும் சிவப்பாகவும் உண்டாகும் மூலை; இதுவே சோணிதார்சஸ்; அநுந்மேஷம்-வாயு பிரகோபித்து கண்ணிமைகள் தானே எப்பொழுதும் அசைவது; ரக்தோத்க்லிஷ்டம்-வர்த்மாவில் இரத்தம் அதிகரித்து உண்டாகும் வீக்கம்; குகூணகம் அல்லது குஞ்சநம்—வர்த்மா சுருங்கிப்போவதால் கண் திறக்கக் கூடாமல்போவது; பக்ஷ்மார்சஸ்—வெள்ளரிக்காய் விதைகள் போன்ற சிறிய மூலைகள்; இதுவே அர்சோவர்த்மா; பக்ஷ்மரோதம்—இமையின் உட்புறத்தில் மயிர் மூலைத்து கண்ணில் அரிப்பையும் வீக்கத்தையும் உண்டு பண்ணும் வியாதி; இதற்கே பக்ஷ்மகோபம் என்றும், உபபக்ஷ்மா என்றும் பெயர். பித்தோத்க்லிஷ்டம்—பித்தத்தினால் கண்ணில் உஷ்ணம் அதிகரித்தல்; போதகீ—தண்ணீர் தினவு இவற்றுடன் கடுகுகளைப் போலுண்டாகும் சிறிய கொப்புளங்கள்; க்லிஷ்டவர்த்மா—அதிக வேதனையின்றி சிவப்பாக திடீரென்று காணும் மிருதுவான ஸாதாரண வீக்கம்; பஹலம்—வர்த்மாவின் வர்ணமாகவே அதில் முற்றிலும் பரவிய கடினமான கொப்புளங்கள்; பக்ஷ்மோத்ஸங்கம்—வர்த்மாவுக்கு உட்புற வெளிப்புறங்களில் உண்டாகும் புரைகள் போன்ற முகங்களுடன் கூடிய தினவுள்ள பெரிய கொப்புளம்; கும்பிகா—மாதுளம் விதைகளைப்போன்ற கொப்புளம்; லிகதாவர்த்மா—கடினமான சிறிய பிடகைகள்; லகணம்—கடினமான பழுக்காத பெரிய வேதனையற்ற கொப்புளம்; இதற்கு நகணம் என்றும் பெயர்; அஞ்ஜநநாமிகா—குத்தல் அழற்சியுடன் கூடிய சிவந்த சிறிய கொப்புளம்; கர்தமம்-க்லிஷ்டவர்த்மாவைப் போன்று துர்நீர் விசேஷமாகக் கசிந்துகொண்டிருக்கும் வியாதி; சியாவவர்த்மா—வர்த்மாவுக்கு வெளிப்புறஉட்புறங்களில் கன்றிப் போனதுபோல் கறுஞ்சிவப்பாயுண்டாகும் வீக்கம்; பிஸவர்த்மா—வர்த்மாவுக்கு உட்புறத்தில் துவாரங்களும் வெளிப்புறத்தில் வீக்கமும் உண்டாய் ஒருவித நிரவத்வைக் கசியச்செய்யும் வியாதி; அலஜீ—சிவந்த கோடுகளுடன் கூடியதாய் வர்த்மாவில் உண்டாகும் வியாதி; உத்க்லிஷ்டவர்த்மா—வேதனையில்லாமல் வெளிப்புறத்தில் வீக்கத்துடன் கூடி ஒருவித துர்நீரைக் கசியச் செய்யும் வியாதி.

1. ஜலஸ்ராவம்—ஸந்தியின் இடையிலிருந்து மஞ்சள் நிற நீர்வடிதல்; இதை பித்தஸ்ராவம் என்று மாதவநிதானம்; கபஸ்ராவம்—பிசுபிசுப்புள்ள வெண்மையான நீர் வடிதல்; ரக்தஸ்ராவம்—இரத்தம் வடிதல்; பர்வணீ—குத்தல் அழற்சிகளுடன் கூடிய கொடி கொடியாகப் படர்ந்திருக்கும் வியாதி; பூயஸ்ராவம்—சீழ் போன்ற துர்நீர் வடிதல்; க்ருமிக்கிரந்தி—வர்த்மாவிலும், இமைகளிலும் தினவை யுண்டாக்கும் ஸூக்ஷ்ம கிருமிகள் சேர்ந்து ஸந்தியில் கிரந்தியைப் போலுண்டாகும் வீகம்; உபநாஹம்—ஸந்தியிலுள்ள கிரந்திகள் வலியில்லாமல் வீக்கம்கொள்வது; அலஜீ—வர்த்மாவிலுண்டாகும் அலஜியைப் போன்றதே; பூயாலஸம்—ஸந்தியிலுண்டான வீக்கம் பக்குவமானபின் சூத்தலுடன் சீழைப் பொசியச் செய்யும் வியாதி.

பதின்மூன்று வியாதிகளுண்டாகும்[1]. (4) கருவிழியில் சுத்தசுக்லம், விராசுக்லம், க்ஷதசுக்லம், அஜகா, விராஸங்கம் என்று ஐந்து வியாதிகள் உண்டாகும்.[2] (5) கண்களில் காசம் என்கிற ரோகம் வாதம், பித்தம், கபம், ஸம்ஸர்கம், ஸந்நிபாதம், இரத்தம் இவற்றால் ஆறுவிதமாக உற்பத்தியாகிறது.[3] (6) திமிரரோகமும் வாத பித்த கபங்களாலும், ஸம்ஸர்கத்தினாலும், இரத்தத்தினாலும் ஆறு விதமாக உற்பத்தியாகும்.[4] (7) லிங்கநாசம் என்பது வாத பித்த கபங்களால் மூன்று விதமும், ஸம்ஸர்கத்தினால் ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்தத்தினால் ஒன்றும், மற்றொரு ரோகத்திற்கு உபத்திரவமாக ஒன்றும் ஆக ஏழுவிதமாம்.[5] (8) த்ருஷ்டி பாகத்தில் பித்தவிதக்த்த த்ருஷ்டி, அம்ல விதக்த்தத்ருஷ்டி, உஷ்ண விதக்த்த த்ருஷ்டி, நகுலாந்த்யம், தூஸராந்த்யம், ராத்ரியாந்த்யம், ஹ்ருஸ்வ

---

1. விரோத்பாதம்—வேதனையுடன் அல்லது வேதனையில்லாமல் சென்னிறமாயுண்டாகும் கொடிபோன்ற மாசுகளால் கண் சிவப்பு நிறங் கொள்ளல்; ஸிராஹர்ஷம்—விரோத்பாதம் முதிர்ந்துபோவதால் கண்களிலிருந்து சென்னிற நீர் வடிதல்; ஸிராஜாலம்—இரத்தநாடிகள் பருத்துப்போய் வெண்மடலில் வலையைப்போல் காணப்படுவது; சுக்லிகா—சிறிது கறுநிறமாகவும் மாம்ஸவர்ணமாகவும் அல்லது வெண்ணிறமாகவும் உண்டாகும் பொட்டுகள்; இதையே சக்திகா என்று மாதவகான் முதலியவர்; சுக்லார்மம்—மிருதுவாகவும் வெண்மையாகவும் உண்டாகும் ஒருவித பிந்து; அதிமாம்ஸார்மம்—பெரிதாகவும் மிருதுவாகவும் கறுநிறமாகவும் கல்லீரலைப் போலுண்டாகும் வியாதி; ப்ரஸ்தார்யார்மம்—கறுஞ்சிவப்பாக முதலில் உற்பத்தியாய் அப்பால் கிரமமாக நேத்திரம் முடிய வியாபிக்கும் பிந்து; பிஷ்டகம்—சாம்பல் பூத்ததுபோன்ற மாசுகள் உண்டாவது; ஸிராபிடிகா—இரத்தநாடிகள் பருத்துப்போய் கொப்புளங்களைப்போலுண்டாகும் வியாதி; கபக்கிரந்தி—வெண்கல நிறமாகவோ வெண்ணிறமாகவோ உண்டாகும் மிருதுவான கிரந்தி; அர்ஜுனம்—முயல் இரத்த நிறமுடையதாய் உண்டாகும் ஒரு பிந்து; ஸ்தாய்வர்மம்—கடினமானதும், மாம்ஸத்தில் வியாபித்ததும், பசையற்றதுமான ஒரு பொட்டு; சோணிதார்மம்—வெண்மடலில் தாமரைப்பூவைப்போல் மிருதுவாக உண்டாய் மாம்ஸவர்ச்சியைத்தரும் வியாதி.

2. சுத்த சுக்லம்—வெண்ணிறமாகப் பூவிழுதல்; விரா சுக்லம்—விரைகள் சிறுத்துப்போவதாலுண்டாகும் வெண்ணிற மாசு; க்ஷதசுக்லம்—காயப்படுவதாலுண்டாகும் குறி; அஜகா—பிசுபிசுப்புள்ள கண்ணீரை வடியச் செய்வதும், சென்னிறமானதும், ஆட்டுப் புழுக்கையைப்போன்றதுமான காய்ப்பு; இதையே அஜகாஜாதம் என்றும் கூறுவர்; ஸிராஸங்கம்—விரைகளென்னும் நாடிகள் ஒன்றுமேலொன்று சேர்ந்து வளர்தல்.

3. காசம்—காய்காய்ப்பது. அல்லது பூவிழுதல்.

4. திமிரம்—திருஷ்டியை மறைத்துவிடும் வியாதி,

5. லிங்கநாசம்—தர்சனசக்தியை அடியோடு அழித்திவிடும் வியாதி.

த்ருஷ்டி, கம்பீர த்ருஷ்டி என்று எட்டுவிதமாம்.[1] (9) அதிமந்தம்[2] என்பது வாதஜம், பித்தஜம், கபஜம், ரக்தஜம் என்று நான்கு விதம். (10) அபிஷ்யந்தமும்[3] வாத பித்த கப ரக்தங்களால் நான்கு விதமாயுண்டாகும். (11) நேத்திரத்தில் எல்லா பாகங்களிலும் பொதுவாக உண்டாகக் கூடிய ரோகங்கள் எண்வகைப்படும்; அவை—வாத விபர்யயம், அல்ப சோபம், அந்யதோ வாதம், பாகாத்யயம், சுஷ்காக்ஷிபாகம், சோபம், அத்யுஷிதம், ஹதாதிமந்தம் என்பனவாம்.[4] 153—170½.

---

1. பித்த விதக்த்த த்ருஷ்டி—பிரகோபமடைந்த பித்தம் நேத்திரத்தின் மத்தியில் பரவி த்ருஷ்டியை மஞ்சள் நிறமாக்கி பார்க்கப்படுவதையெல்லாம் மஞ்சள் நிறமாகத் தோற்றச்செய்வது; அம்ல விதக்த்த த்ருஷ்டி—கண்களில் அம்லமான நீருண்டாய் த்ருஷ்டிபாகம் அழற்சி கொள்வது; உஷ்ணவிதக்த்த த்ருஷ்டி—அதிக உஷ்ண வஸ்துக்களை அல்லது அதிக தாபமான வெயிலைப் பார்ப்பதால் த்ருஷ்டி பாகம் கெட்டுப்போவது; நகுலாந்த்யம்—பகலில் பற்பல வர்ணமண்டலங்கள் ஆகாயத்தில் தோற்றுவதும், கீரிப்பிள்ளையின் கண்ணைப்போல் காணப்படுவதுமான த்ருஷ்டி; தூஸராந்த்யம்—பார்க்கப்படுவதெல்லாம் புகைபடிந்ததுபோல் தோற்றுவது; ராத்ரியாந்த்யம்—இரவிற் கண் தெரியாமை; ஹ்ருஸ்வ த்ருஷ்டி—வெகு ஸமீபத்திலிருப்பதைத் தவிர தூரத்திலிருப்பவை காணமுடியாமற்போவது; பகலில் எந்த வஸ்துவும் வெகு சிறியதாகக் காணப்படுவதென்றும் சிலர்; கம்பீர த்ருஷ்டி—வாயு பிரகோபமடைந்து த்ருஷ்டி பாகம் சிறுத்துப்போய், ஆழமான பிரதேசத்திலிருந்து வேதனையுண்டாகும் வியாதி. த்ருஷ்டி—கருவிழிக்கு நடுவில் பாபா என்று சொல்லப்படும் பாகம்.

2. அதிமந்தம்—ஒற்றைத் தலைவலியுடன் நேத்திரகோளம் பிடுங்கப்படுவதுபோல் துன்பமளிக்கக் கூடிய நோய்.

3. அபிஷ்யந்தம்—கண்களில் பலவித துர்நீர்கள் வடிதல்.

4. வாத விபர்யயம்—வாயு பிரகோபித்து நேத்திரங்களிலும் புருவங்களிலும் மாற்றி மாற்றி வலியை உண்டுபண்ணுவது. அல்பசோபம்—கண்களில் உஷ்ணம் அதிகரித்து சிறிது வீக்கமுண்டாவது. அந்யதோவாதம்—காது, செவியின் மூலபாகம், சிரஸ், மோவாய்க்கட்டை, இன்னும் வேறு இடங்களிலும் கோளாறடைந்த வாயுவானது கண்களிலும் புருவங்களிலும் அதிக வேதனையுண்டுபண்ணும் வியாதி. பாகாத்யயம்—அரிப்பு, அதிக வீக்கம், வேதனை, வேக்காடுடன் கூடியதாய் நேத்திரம் கனிந்த அத்திப்பழம்போல் ஆய்விடுவது. சுஷ்காக்ஷிபாகம்—பார்வை மங்கலாகப் போய், வர்த்மா என்கிற சவ்வு வறண்டுபோவது. சோபம்—ஸாதாரண வீக்கம். அத்யுஷிதம்—கண்ணைச் சுற்றிலும் கறுஞ்சிவப்பான நிறம் படர்ந்து, கண் முடியவும் அழற்சி அதிகரித்து அதிக கண்ணீரைப் பெருக்கும் வியாதி. ஹதாதிமந்தம்—வாயுவின் பிரகோபத்தாலுண்டான அதிமந்தம் என்கிற வியாதி முதிர்ந்து, மஹத்தான வேதனைகள் நேத்திரத்திலுண்டாகும்; இது அஸாத்திய வியாதி.

[வர்த்மாவில் இருபத்தோரு வியாதிகளும், சுக்லமென்கிற வெண் மடலில் பதிஞென்றும், ஸந்திகளில் ஒன்பதும், கிருஷ்ணமென்கிற கருவிழியில் நான்கும், நேத்திரம் முழுமையிலும் பதினேழும், த்ருஷ்டிபாகத்தில் பன்னிரண்டும், கண்களுக்கு வெளிப்புறத்தில் இரண்டும் ஆக எழுபத்தாறு நேத்திர ரோகங்கள் மாதவகான் முதலியவர்களால் கூறப்படுகின்றன.]

நபும்ஸகரோகங்கள் :—புருஷர்களுக்கு உண்டாகும் நபும்ஸகதோஷம் ஐந்து விதம்; அத் தோஷமுள்ளவர் ஈர்ஷ்யகன், ஆஸேக்யன், கும்பீகன், ஸுகந்தி, ஷண்டன் என்று கூறப்படுவர். [1] 171½.

சுக்ரதோஷங்கள் :—சுக்ரதோஷங்கள் எண் வகைப்படும்; அவை.—வாத பித்த கபங்களால் மூன்றும், ஸம்ஸர்க தோஷங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும், இரத்தத்தினுல் ஒன்றுமாம்; இவற்றுள் இரத்தத்தினுல் உண்டாவதற்கு குணபகந்தி யென்றும், வாத பித்தங்களால் ஆவதற்கு க்ஷீணதோஷமென்றும், வாத கபங்களால் ஆவதற்கு கிரந்திலம் என்றும், ஸந்நிபாதத்தினுலுண்டாவதற்கு மலதோஷமென்றும் பெயர். [2] 172-173½.

நது தோஷங்கள் :—இனி பிராசீன சாஸ்திரப்படி ஸ்த்ரீ ரோகங்கள் கூறப்படுகின்றன :—(1) ருது காலத்தில் வெளியாகும் சோணிதம் என்கிற உதிரத்தைப் பற்றிய வியாதிகள் வாத பித்த கபங்களால் மூன்றும், பூயகந்தி, குணபகந்தி, கிரந்திலம், க்ஷீணம், புரீஷதுல்யம் என்று ஐந்தும் ஆக எண் வகைப்படும் [3]. (2) 'பிரதரம்' அல்லது 'ரக்தப்பிரதம்' [4] என்கிற வியாதி வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும் ஆக நான்கு விதமாம். 174—176.

யோனி ரோகங்கள் :—(1) வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும், இரத்தம் கெட்டுப் போவதால் ஒன்றும், இரத்தம் க்ஷீணித்துப்போவதால் ஒன்றும், சுஷ்கம், வாமநம், ஷண்டிதம், அந்தர்முகம், ஸுசீமுகம், விப்லுதம், புத்ரக்நம், பரிப்லுதம், உபப்லுதம், ப்ராக்சரணம், மஹாயோனி, கர்ணினீ, அத்யாநந்தி, அதிசரணம் என்று பதிநான்கும்

1. ஈர்ஷ்யகன்—தனக்குச் சுயம் வீர்யமில்லாது பிறர் புணர்வதை யறிந்து பொறுமையால் பிரவ்ருத்திப்பவன்; ஆஸேக்யன்—மிகவும் சொற்ப சுக்ரசோணிதமுள்ள தாய் தந்தையருக்குப் பிறந்ததால் சுக்ரமில்லாமலிருப்பவன்; கும்பிகன்—சொற்ப சுக்ரமுடையவனுயிருந்தும் இந்த்ரியநிக்ரஹம் பண்ணச் சக்தியற்றவனுய் புருஷரிடமும் புணரவிரும்புபவன்; ஸுகந்தி அல்லது ஸௌகந்திகன்—பல ரோகங்களால் கோளாறடைந்த கருப்பையிலிருந்து பிறந்தவன்; ஷண்டன்—ருதுகாலத்தில் ஸ்த்ரீஸம்போகத்தினுல் பிறக்கும் நபும்ஸகன்.

2. குணபகந்தி—சவத்திற்கேற்ற துர்நாற்றமுள்ளது; பூயதோஷம்-சீழ்போன்றது; கிரந்திலம்—தோய்ந்துபோய் கட்டியானது.

3. பூயகந்தி—முதல் புரீஷதுல்யம் வரையிலுள்ள ஐந்து வியாதிகளின் விவரங்களைப்பற்றி சுக்ர தோஷ விவரங்களைப் பார்க்கவும்.

4. பிரதரம்—பெரும் பாடு.

ஆக இருபது வித யோனி ரோகங்களாம். [1] (2) யோனிகந்தம் [2] என்கிற ரோகம் நான்கு விதம்; வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றுமாம். 177—180.

கர்ப்ப வியாதிகள் :—உபவிஷ்டகம், நாகோதரம், மக்கல்லம், மூடகர்ப்பம், விஷ்கம்பம், கூடகர்ப்பம், ஜராயுதோஷம், கர்ப்பபாதம் என்று கர்ப்பத்தைப் பற்றிய கோளாறுகள் எண் வகைப்படும். [3] 181—181½.

ஸ்தன ரோகங்களும், ஸ்தன்ய ரோகங்களும் :—(1) வாத பித்த கபங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும், அடிபடுவதால் ஒன்றும் ஆக ஸ்தன ரோகங்கள் ஐந்து. (2) ஸ்தன்யம் என்கிற முலைப்பாலைப்பற்றி முன்போலவே வாத பித்த கப ஸந்நிபாதங்களாலும், காயம் படுவதாலும் ஐந்துவித வியாதிகள் ஏற்படும் 182—183.

பால ரோகங்கள் :—(1) திறமையில்லாத புருஷனுல் உண்டான சிசு, (2) இரு மனைவிகளிருந்தால் அவ்விரு வரில் எவருக்கேனும் பிறக்கும் பலங் குன்றிய பிள்ளை, (3) ஸ்த்ரீ புருஷர்களுக்குப் புத்திரோத்பான சக்தியில்

1. சுஷ்கம்—வறட்சியுள்ளது; வாமநம்—துஷ்டமலங்களைக் கசியச் செய்வது; ஷண்டிதம்—நபும்ஸகதோஷத்தில் கூறிய ஷண்டன் என்கிற குணமுள்ள யோனி: அந்தர்முகம்—யோனியின் முகம் உட்புறமாக மடிந்திருப்பது; ஸுசீமுகம்—ஊசியைப்போல் வெகு மெல்லிய த்வாரமுடையது; விப்லுதம்—எப்பொழுதும் வேதனையுடன் கூடியது; புத்ரக்நம்—அடிக்கடி கரு அழியச் செய்யும் தன்மையுள்ளது; பரிப்லுதம்—புணர்கையில் விசேஷ நோயுண்டுபண்ணுவது; உபப்லுதம்—ஆர்த்தவமென்னும் உதிரத்தை நுரைத்து சஷ்டத்தோடு வெளியிடுவது; இதற்கே உதாவர்த்தயோனி என்று மாதவகரன்; ப்ராக்சரணம்—ஸம்போகத்தில் முன்னதாக ஸ்த்ரீக்குப் பிரவ்ருத்தியை யுண்டுபண்ணக்கூடியது; கர்ணினீ—யோனியில் ஒருவிதக் கிரந்தி உண்டாவது; அத்யாநந்தி—மிதமிஞ்சிய ஆவலுள்ளது; அதிசரணம்—பல முறை சேர்க்கையிலும் திருப்தியடையாதது.

2. யோனிகந்தம்—யோனிப்புற்று என்கிற ஒருவித வ்ரணம்.

3. உபவிஷ்டகம்—கர்ப்பத்தில் சிசு நன்கு வளராமல் சிறுத்துப் போதல்; நாகோதரம்—சுக்ரசோணிதங்கள் கருப்பையில் சேரும்போது வாயுவினுல் கோளாறடைந்து வயிற்றுப்பொருமலை யுண்டுபண்ணி, கர்ப்பக் குறிகளைக் காட்டி, பிறகு சிறிது காலத்தில் தானே கரைந்துவிடுவது; மக்கல்லம்—பிரஸவித்த உடனே கர்ப்பாசயத்திலுள்ள அழுக்குள்ள இரத்தம் அவ்விடத்தில் பிரகோபமடைந்த வாயுவினுல் தகையப்பட்டு ஒருவித கட்டியை உண்டுபண்ணி, காபிக்கு ஸமீபத்திலும் இடுப்பிலும் விசேஷமாக வேதனை யுண்டுபண்ணி வயிற்றுப்பொருமலையும் தரும் வியாதி; மூடகர்ப்பம்-பிரஸவகாலத்தில் வாயுவினுல் கருப்பையின் வாய் தகையப்பட்டு சிசு வெளிவரமுடியாமல், மூத்திரமும் விருத்தியாய் இடுப்பு முதலான விடங்களில் நோயுண்டாதல்; விஷ்கம்பம்—கர்ப்பாசயத்திற்கு அடியில் பிரஸவ காலத்தில் சிசு உழல் மரம்போல் குறுக்காயிருப்பது; இதற்கே 'பரிகம்' என்றும் பெயர்; கூட கர்ப்பம்—கருத்தரித்திருந்தும் கர்ப்பக் குறிகள் காணப்படாமை; ஜராயு தோஷம்—கர்ப்பாசயத்தினுள் சிசுவுக்குப் போர்வையைப் போலிருக்கும் பை கோளாறடைவது; கர்ப்பபாதம்—5-மாதங்களுக்குப் பிறகு 7-மாதங்களுக்கு முன் அகாலத்திலுண்டாகும் பிரஸவம்.

லாமலிருந்தும் தைவச் செயலாகப் பிறக்கும் குழந்தை; இம்மூன்றும் பெற் றோர்களின் தோஷத்தால் பிறந்தவையாம். (4) அன்றியும் வேறு வகை யன பால ரோகங்கள் இருபத்திரண்டு; அவற்றுள் வாத பித்த கபங்களின் தோஷத்தினுல் கோளாறடைந்த முலைப்பாலால் முறையே மூன்று வியாதி கள் உண்டாகும்; தந்தோத்பேதம், தந்தாகாதம், தந்த சப்தம், அகாலதந் தம்—என்று பற்களைப்பற்றி யுண்டாகும் ரோகங்கள் நான்கு;[1] மேலும் (5) அஹிபூதநம், முகபாகம், முகஸ்ராவம், குதபாகம், உபசீர்ஷகம், பத்மாரு ணம், தாலுகண்டகம், விச்சிந்நம், பாரிகர்ப்பிகம், தெளர்பல்யம், காத்ர சோஷம், சய்யாமூத்திரம், குகூணகம், ரோதநம், அஜகல்லீ என்று பதி னைந்து வியாதிகளும் உற்பத்தியாகின்றன.[2] (6) வாத பித்த கபங்களின் கோளாறுல் ஜ்வரம் முதலிய மூன்று ஸாதிகா ரோகங்களும் உண்டாகின் றன;[3] அந்தந்த தோஷங்களுக்கும் அவரவரது பலங்களுக்கும் தகுந்த வாறு சிகித்ஸை செய்தால் அவை எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியவை யாம். 184—188.

---

1. தந்தோத்பேதம்—பற்கள் புதிதாக முளைக்கும்போது உண்டாகும் வேதனை; தந்த சப்தம்—பற்களில் நோய் அதிகரித்து விண்விண் என்பது போன்ற சப்தம் உண்டாவது; அகால தந்தம்—அகாலத்திலுண்டாகும் பல்.

2. அஹிபூதநம்—பற்கள் முளைக்கும்போது வாந்தி, ஜ்வரம், வாயி லும் உடம்பிலும் ஒருவகை தூர்நாற்றம், அதிக அழுகை இக்குறிகளுள்ள வியாதி; இது ஸாமான்ய பால ரோகத்தில் சேர்ந்தது. முகபாகம்—வாயில் புண் உண்டாவது; முகஸ்ராவம்—வாயிலிருந்து எப்பொழுதும் சொள் ஒழுகுவது; குதபாகம்—ஆஸனத்வாரம் புண்ணுய்விடுவது; உபசீர் ஷகம்—சிரஸ்ஸின்மேல் மற்றொரு தலையைப்போல் உண்டாகும் வீக்கம்; பத்மாருணம்—தேஹம் தாமரைப் பூவைப்போல் வெண் சிவப்பாக ஆவது; தாலுகண்டகம்—தவடையின் மேற்புறத்தில் ஒரு பள்ளம் விழுந்து, தவடை அசைக்க முடியாமல், ஸ்தந்யபானத்தில் குழந்தைக்கு வெறுப்பு உண்டாவது; விச்சிந்நம்—மூத்திரப்பையின் ஸமீபத்தில் உண்டாகும் ஒருவித விஸர்ப்ப ரோகம்; பாரிகர்ப்பிகம்—தாய் கர்ப்பிணியாகப் போன பின்பு குழந்தை அவளிடத்தில் ஸ்தன்யபானம செய்த, காஸம், அஜீர்ணம், வாந்தி, இளைப்பு முதலியவற்றுல் பீடிக்கப்படும் நோய்; தெளர்பல்யம்—பலஹீனம்; காத்ர சோஷம்—சரீரம் நாளுக்குநாள் இளைத்துப்போதல்; சய்யா மூத்திரம்—. படுக்கையிலேயே மூத்திரம் விட்டுக்கொள்வது; குகூணகம்—பாலின் தோஷத்தினுல் கண்களின் வர்த்மாவில் ஒருவகை அரிப்பு உண்டாகும் வியாதி; ரோதநம்—எப்பொழுதும் மிதமிஞ்சி அழுதல்; அஜகல்லி—அக் கியைப்போன்ற ஒரு சர்மவியாதி.

3. பிரஸவித்த ஸ்த்ரீக்குக் காணும் ஜ்வராதிகள் ஸாதிகாரோகங்கள்.

பால கிரஹங்கள்:-(1) பன்னிரண்டு பாலகிரஹங்கள்[1] உண்டென்று மாமுனிகள் கூறுகின்றனர்; அவை ஸ்கந்த கிரஹம்[2], விசாக கிரஹம்[3] சவ கிரஹம்[4], பித்ரு கிரஹம்[5], கைகமேய கிரஹம்,[6] சகுனி கிரஹம்,[7]

---

1. முன்னுல் ஞாழற்காட்டிற் பிறந்த ஸுப்ரமண்யனைக் காப்பதற் குச் சிவபெருமான் ஐந்து புருஷ கிரஹங்களையும், ஏழு ஸ்திரீ கிரஹங்களை யும் படைத்தாகக் கூறுகின்றனர்.

2. ஸ்கந்த கிரஹபீடை—இதில் குழந்தைக்கு ஒரு கண்ணில் நீர்வடி யும், தலையை அடிக்கடி புரட்டும், தேஹத்தில் ஒரு பாரிசம் விழுந்து போகும், உடல் அசைவற்றிருக்கும், வியர்வை அதிகமாகும், தலை வணங்கி விடும், பற்களைக் கடிக்கும், முலையுண்பதில் விருப்பமிராது, பயந்து வீரிட்டு அழும், வாய் ஒரு பக்கமாய் இழுக்கப்படும், சொள் அதிகமாய் பெருகும், உயர விழித்துப் பார்க்கும், உடலில் சவர்நாற்றமும் வீசும், முகம் திகைத்திருக் கும், மலம் இறுகிவிடும், கையை கெட்டியாக மூடிக்கொள்ளும், ஒரு கண் ணும் புருவமும் அசையும், கண்கள் சிவந்திருக்கும்; சரீரத்தில் ஏதாவது சாச்வதமான கோளாறு நேரிடும்; மரணமாவது உண்டாகும்.

3. விசாக கிரஹ பீடை:—நினைவு தவறுதல், மயிர்களைப் பிச்சிக் கொள்ளுதல், கழுத்து மடங்கிக் கொள்ளல், வாயிலிருந்து நுரை வருதல், கைகால்கள் உதறுதல், தாயின் ஸ்தனம் தனது நாக்கு இவைகளைக் கடித் தல், ஜ்வரம், தூக்கமின்மை, உடம்பில் துர்க்கந்தம் இவை குறிகளாம்.

4. சவ கிரஹ பீடை:—நடுக்கல், மயிர்ச்சிலிர்கை, வியர்வை, கண் களை எப்பொழுதும் மூடிக் கொள்ளல், பஹிராயாமம் என்கிற வலி, நாக் கைக் கடித்துக்கொள்ளல், கூக்குரலிடல், ஓடுதல், உடம்பில் மலத்தின் நாற்றம், கதறுதல் இக்குறிகள் காணும்.

5. பித்ருகிரஹ பீடை:—மயிற்சிலிர்க்கை, அடிக்கடி அச்சமுறுதல், திடீரென்று அழுதல், ஜ்வரம், இருமல், அதிஸாரம், வாந்தி, அதிக கொட் டாவி, தாஹம், உடலில் சவத்தின் நாற்றம், வலி, உடல் அசைவற்றுப் போதல், கறுநிறமாகுதல், கைகளை கெட்டியாக மூடிக்கொள்ளுதல், கண்ணீர் விடுதல் இவை குறிகளாம்.

6. கைகமேய கிரஹ பீடை:—வயிற்றுப்பொருமல், கை கால் வாய் இவை துடித்தல், நுரை கக்குதல், தாஹம், அதிஸாரம், குரல் கம்மல், தேஹ நிறம் மாறுபடுதல், கூக்குரலிடல், வாந்தி, இருமல், தூக்கமின்மை, உதட் டைக் கடித்துக்கொள்ளுதல், அவயவங்கள் சுருங்குதல், விழித்துப் பார்த்துச் சிரித்தல், இடுப்பு வளைதல், ஜ்வரம், ஒரு கண் வீங்குதல், மயக்கம் இக் குறி கள் காணப்படும்; இது கைகமேஷ கிரஹபீடை என்றும் கூறப்படும்.

7. சகுனி கிரஹம்:—இரவில் எல்லா அவயவங்களும் வீழ்ந்து விடுதல், அதிஸாரம், வாய்க்குள்ளும் தொண்டையிலும் விரணம், வெடிப்புகள், ஸந்தி களில் எரிச்சல்; பகலில் அவையனைத்தும் மறைந்துபோய் வாயும் குதமும் அழன்றுவிடும்; ஜ்வரமும் அதிகமாகும்-

சீதபூதநா கிரஹம்,[1] முகமண்டிகா கிரஹம்,[2] பூதநா கிரஹம்,[3] அந்த பூதநா கிரஹம்[4] ரேவதீ கிரஹம்,[5] சுஷ்கரேவதீ கிரஹம்[6] என்பனவாம். (2) கால் வெடிப்பு, வாதரக்தம் முதலிய வேறு நாற்பத்திரண்டு வியாதிகளும்[7] குழந்தைகளுக்குண்டாகுமென இருஷிகள் கூறியிருக்கிறார்கள். 188-191½.

தோஷங்களின் பலவகையான கோளாறுகள் :--வாத பித்த கபங்கள் சரீரத்தில் ஏற்றக்குறைவான நிலைமையை அடைவதால், தனித்தனியான நிலைமையிலும், இரண்டிரண்டு தோஷங்களின் சேர்க்கையிலும், ஒருமிக்க மூன்று தோஷங்களின் சேர்க்கையிலும் அறுபத்திரண்டு வகையான வேற்று மைகளைப் பெறும்; அவ்விதமான மாறுபாடுகளும் ரோகங்களென எண்ணப்பட்டும், ஆகிலும் அவற்றை எங்கும் தனியாக வியாதியென்று விவரிப்பதில்லை.[8] 192½.

---

1. சீதபூதநா கிரஹ பீடை :—உடல் நடுக்கம், அழுகை, மூலப் பார்வை, தாஹம், குடல் இரைதல், அதிஸாரம், உடலில் துர்நாற்றம், சரீரத்தில் ஒரு பாரிசம் முடிய குளிர்ந்துபோதல், மற்றொரு பாரிசம் சூடாயிருத்தல் என்பவை இதன் குறிகளாம்.

2. முகமண்டநிகா கிரஹ பீடை :—கைகால்கள் மஞ்ஞரமாகத் தோற்றும்; வயிற்றில் கறுநிறமான ரேகைகள் பரவியிருக்கும்; ஜ்வரம், அரோசகம், சரீரவாட்டம், சோமய நாற்றம் இக்குறிகளும் காணப்படும்.

3. பூதநா கிரஹ பீடை :—வாந்தி, நடுக்கம், சோம்பல், தூக்கமின்மை, விக்கல், வயிற்றுப் பொருமல், பேதி, தாஹம், மூத்திரம் கட்டிப்போதல், சரீரம் சக்தியற்று விழுந்துபோதல், மயிர்ச்சிலிர்க்கை என்பவை இதன் குறிகளாம்.

4. அந்த பூதநா கிரஹபீடை :—ஜ்வரம், காஸம், வாந்தி, பேதி, சரீர இளைப்பு, த்ருஷ்டி மந்தமாதல், அதிக வேதனை, மயக்கம், திகில், முலையுண்பதில் விருப்பமின்மை, நடுக்கம் முதலியவை இதில் காணப்படும்.

5. ரேவதீ கிரஹபீடை :—சரீரம் பசுமையாகவும் கறுப்பாகவும் மாறுதல், காது கண் முதலியவற்றைத் தேய்த்துக்கொள்ளல், இருமல், வாயினுட்புறம் இரத்தவர்ணமாதல், ஜ்வரம், திரவமாகவும் மஞ்சளாகவும் மலம் இறங்குதல் என்பவை இதன் குறிகள்.

6. சுஷ்கரேவதீ கிரஹம் :—சரீரத்தில் க்ரமமாக எல்லா அவயவங்களும் க்ஷீணித்து வரும்.

7. சாரீர வ்ரணம் 15 விதம், ஸ்நாயுவ்ரணம் 8 விதம், விஸர்ப்பம் 9 விதம், உதர்த்தம் ஒன்று, வாத ரக்தம் 8 விதம், கால் வெடிப்பு ஒன்று; ஆக 42 விதங்களாம்.

8. தோஷங்கள் ஸ்வபாவ நிலைமையினும் அதிகமாவதினாலேயோ, க்ஷீணிப்பதாலேயோ அவற்றிற்கு ஏற்படும் பிரிவுகள் பின்வருமாறு :—வாதம் விருத்தியாதல், பித்தம் விருத்தியாதல், கபம் விருத்தியாதல் என்று தனித்தனியே 3 விதமாக விருத்திரூபமான கோளாறு. ஸம்ஸர்கத்தினால் 9 வித விருத்திவண்டு :—வாத பித்தங்கள் ஸமமாக விருத்தியாதல், வாத கபங்கள் ஸமமாக விருத்தியாதல், பித்த கபங்கள் ஸமமாக விருத்தியாதல்; வாதம் வ்ருத்தம், பித்தம் வ்ருத்ததரம்; பித்தம் வ்ருத்தம் வாதம் வ்ருத்ததரம், கபம் வ்ருத்தம், வாதம் வ்ருத்ததரம்; வாதம் வ்ருத்தம், கபம் வ்ருத்ததரம், பித்தம் வ்ருத்தம், கபம் வ்ருத்ததரம்,

பஞ்ச கர்மஜ ரோகங்கள் :—பஞ்ச கர்மங்களைச்[1] செய்கையில் ஒவ்வொன்றிலும் நேரிடும் ஹீநயோகம், மித்யா யோகம், அதியோகம் என்கிற

கபம் வ்ருத்தம், பித்தம் வ்ருத்ததரம் என்பனவாம். ஸங்நிபாதத்தினால் நேரிடும் விருத்திகள் 13 விதங்கள் :—கபம் வ்ருத்தம்-வாத கபங்கள் வ்ருத்ததரங்கள், பித்தம் வ்ருத்தம்—வாத கபங்கள் வ்ருத்ததரங்கள், வாதம் வ்ருத்தம்—பித்த கபங்கள் வ்ருத்ததரங்கள்; பித்த கபங்கள் வ்ருத்தங்கள்-வாதம் வ்ருத்ததரம்; வாத கபங்கள் வ்ருத்தங்கள்-பித்தம் வ்ருத்ததரம், வாத பித்தங்கள் வ்ருத்தங்கள்-கபம் வ்ருத்ததரம் என்று ஆறுவிதம். மூன்றும் ஒரே அளவாக வ்ருத்தியாவது ஒருவிதம். வாதம் வ்ருத்தம்-பித்தம் வ்ருத்ததரம்-கபம் வ்ருத்ததமம்; வாதம் வ்ருத்தம், கபம் வ்ருத்ததரம், பித்தம் வ்ருத்ததமம்; பித்தம் வ்ருத்தம்-கபம் வ்ருத்ததரம்-வாதம் வ்ருத்ததமம்; பித்தம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம்-கபம் வ்ருத்ததமம்; கபம் வ்ருத்தம்-வாதம் வ்ருத்ததரம், பித்தம் வ்ருத்ததமம்; கபம் வ்ருத்தம்-பித்தம் வ்ருத்ததரம்-வாதம் வ்ருத்ததமம் என்று ஆறு விதங்களும் சேர்ந்து ஸங்நிபாதத்தினால் 13 வகைகளாம். இவ்வாறு வ்ருத்தி ரூபமான கோளாறின் மூலமாய் தோஷங்கள் 25 வித நிலைமைகளை அடையும். க்ஷீணரூபமான கோளாறின் மூலமாகவும் வ்ருத்திக்குச் கூறிய க்ரமப்படியே 25 வித நிலைமைகள் தோஷங்களுக்கு நேரிடும். ஸங்நிபாதத்தில் ஒரு தோஷம் தன்நிலைமையில் இருப்பது, ஒன்று வ்ருத்தியாவது, மற்றொன்று க்ஷீணிப்பது என்கிற க்ரமத்தில் ஆறுவிதமாம்; அது எவ்விதமெனில் :—வாதம் ஸமம்-பித்தம் வ்ருத்தம்-கபம் க்ஷீணம்; பித்தம் ஸமம்-வாதம் வ்ருத்தம்-கபம் க்ஷீணம்; கபம் ஸமம்-பித்தம் வ்ருத்தம்-வாதம் க்ஷீணம்; வாதம் ஸமம்-கபம் வ்ருத்தம்-பித்தம் க்ஷீணம்; பித்தம் ஸமம்-கபம் வ்ருத்தம்-வாதம் க்ஷீணம்; கபம் ஸமம்-வாதம் வ்ருத்தம்-பித்தம் க்ஷீணம் என்றவாறு. ஒரு தோஷம் கூடியித்து இரண்டு தோஷங்கள் வ்ருத்தியாவதாலும், இரண்டு கூடியித்து ஒன்று வ்ருத்தியாவதாலும் ஆறு பேதங்களுண்டு; அவையாவன :—வாதம் க்ஷீணம்-பித்த கபங்கள் வ்ருத்தங்கள்; பித்தம் க்ஷீணம்-வாதகபங்கள் வ்ருத்தங்கள்; கபம் க்ஷீணம்-வாத பித்தங்கள் வ்ருத்தங்கள்; வாதபித்தங்கள் க்ஷீணங்கள்-கபம் வ்ருத்தம்; வாத கபங்கள் க்ஷீணங்கள் பித்தம் வ்ருத்தம்; பித்த கபங்கள் க்ஷீணங்கள்-வாதம் வ்ருத்தம் என்று 6 வகைகளாம். ஆக இவை 12 விதங்களாயின. இவை அனைத்தும் சேர்ந்து தோஷங்களில் 62 விதமான கோளாறுகள் எனப்படும். 63-வது விதம் தோஷங்களின் ஸமமான இயற்கை நிலைமையேயாம்; அது ஆரோக்கியத்திற்குக் காரணமாம்.

1. பஞ்ச கர்மங்கள்—வமநம், விரேகம், நிரூஹவஸ்தி, அநுவாஸந வஸ்தி, நஸ்யம் என்கிற ஐந்துவித சிகித்ஸா முறைகளுக்கும் இப்பெயர். [வமநம்-வாந்தியாவதற்காகச் செய்யப்படும் சிகித்ஸை. விரேகம்-பேதியாவதற்காகச் செய்யப்படுவது. நிரூஹவஸ்தி-கஷாயங்களை குதத்தின் வழியாகச் செலுத்தி மலங்களைக் கழித்தல். அநுவாஸந வஸ்தி-தைல ஸம்பந்தமான ஔஷதங்களை குதமார்க்கத்தினால் செலுத்தி சிகித்ஸை செய்தல். நஸ்யம்-மூக்கில் மருந்திடல். ஸ்நேஹம், ஸ்வேதம், வமநம், விரேகம், வஸ்தி என்பவை பஞ்ச கர்மங்களென்று வேறு சிலரின் கொள்கை.]

பேதங்களைக்[1] கொண்டு பதினைந்து கோளாறுகள் உண்டாகும்[2]; அவை யும் ரோகங்களாகவே கருதப்படுகின்றன. 193½.

ஷட்கர்மஜ ரோகங்கள் :—ஸ்நேஹம், ஸ்வேதம், கண்வேஷம், தூமம், அஞ்ஜநம், தர்ப்பணம்[3] என்கிற ஆறுவித சிகித்ஸைகளைச் செய்கையில் ஒவ்வொன்றிலும் ஹீநயோகம், மித்யாயோகம், அதியோகம் என்கிற மூன்று வித தவறுதல்கள் நேரிடலாமாகையால், அவற்றால் பதினெட்டு வித கோளாறுகள் உண்டாகலாம்; அவற்றையும் ரோகங்களாகவே கூற வேண்டும். 194½.

சைத்தியம் முதலியவற்றால் உண்டாகும் ரோகங்கள் :—அதிக சைத்தி யத்தினால் உண்டாகிற பாதை ஒரு ரோகமாகவும், அவ்விதமே அதிக உஷ்ண த்தினால் ஒரு ரோகமும், சல்யங்கள்[4] சரீரத்திற் புகுவதால் ஒரு ரோக மும், க்ஷாரங்களைக்[5] கொண்டு அஜாக்கிரதையாக சிகித்ஸை செய்வதால் ஒரு ரோகமும் உண்டாவதுண்டு. 195½.

ஸ்த்தாவர ஜங்கமாதி விஷங்கள் :—ஸ்த்தாவரம்,[6] ஜங்கமம்,[7] க்ருத்ரிமம்[8] என்று விஷம் மூன்று விதம். அவற்றுள் காலகூடம் முத

1. பஞ்ச கர்மங்களைச் செய்கையில் ஔஷதங்களை உபயோகிக்க வேண்டியதைவிட குறைந்த அளவில் உபயோகிப்பதும், சிகித்ஸையைச் செய்யவேண்டிய கால அளவுப்படி செய்யாமல் குறைந்த கால அளவில் செய்து முடிப்பதும் அந்தந்த முறைக்கு ஹீநயோகம் என்றும், எந்த சிகித்ஸை எந்த ஸமயத்தில் செய்யக்கூடியதோ அதை விட்டு வேறுவித சிகித்ஸையை வேறுவித ஸமயத்திற் செய்வது மித்யாயோகம் என்றும், எந்த கர்மமும் அளவுமீறி செய்யப்படுவது அல்லது அளவு கடந்த காலத்திற் செய்வது அதியோகம் என்றும் கூறப்படும்.

2. வமநத்தில் ஹீநயோகம், மித்யாயோகம், அதியோகம் என்றும், விரேகத்தில் ஹீநயோகம், மித்யாயோகம், அதியோகம் என்றும் ஒவ்வொன் றிலும் 3 பேதங்கள் உண்டு. அவ்விதமே நிரூஹவஸ்தி, அநுவாஸந வஸ்தி, நஸ்யம் இவற்றிற்கும் தனித்தனியே மும்மூன்று வித்யாஸங்கள் உண்டு. ஆகக்கூடி ஹீநயோகாதிகளால் 15 ரோகங்கள் உண்டாகலாம்.

3. ஸ்நேஹம்—சரீரத்தில் உள்ளும் புறமும் பற்பல தைலம் நிருதம் முதலியவற்றால் செய்யப்படும் சிகித்ஸை. ஸ்வேதம்—வியர்வை யுண்டா குமாறு செய்யப்படும் சிகித்ஸை. கண்டூஷம்—வாய்க் கொப்புளிக்கும் முறை. தூமம்—பற்பல ஔஷதங்களால் தூமபாநம் செய்தல். அஞ்ஜ நம்—மையிடுதல். தர்ப்பணம்—தலையில் சில ஔஷத கல்கத்தால் வரம்பு கட்டி, தைலம் முதலியதைத் தலையில் தேங்கவைத்து செய்யும் சிகித்ஸை.

4. சல்யங்கள்-சரீரத்திற் புகுந்து பாதையுண்டுபண்ணும் முள், ஆணி, கல், மண் முதலிய வெளிப்பொருட்கள்.

5. க்ஷாரம்—எரித்தலை யுண்டாகிக் கொப்புளிக்கச் செய்யும் கார மான உப்புவகை.

6. செடி கொடி விருக்ஷம் முதலியவற்றைச் சேர்ந்த விஷங்கள் ஸ்த்தாவரவிஷங்கள்.

7. ஸர்ப்பம், தேள், சிலந்தி, நாய் முதலியவற்றின் விஷங்கள் ஜங்கம விஷங்கள்.

8. ஸாதாரண சில ஔஷதிகளை அல்லது ஔஷதங்களைக்கொண்டு செய்யப்படும் விஷம் க்ருத்ரிமவிஷம்.

லிய ஸ்த்தாவர விஷங்கள் ஒன்பது விதமாகும்[1]. ஜங்கம விஷமும் அனேக விதம். சிலந்திவிஷம், ஸர்ப்பவிஷம், தேள்விஷம், எலிவிஷம், குளவி விஷம் முதலானவை ஜங்கம விஷங்களாம். இந்த விஷங்களில் ஒவ்வொன் றும் வாதப்ரகோபகாரி, பித்தப்ரகோபகாரி, கபப்ரகோபகாரி, ஸந்நிபாத காரி என்று மீண்டும் நான்கு விதமாம். விஷம் சில ஜந்துக்களுக்குக் கோரப்பற்களிலும், சிலவற்றிற்கு நகங்களிலும், சிலதுக்கு மயிர்களிலும், சிலதுக்குக் கொம்புகளிலும், சிலவற்றிற்கு எலும்புகளிலும், சிலதுக்கு மூத் திரத்திலும், சிலவற்றிற்கு மலத்திலும், சிலதுக்கு சுக்ரத்திலும், சிலதுக்கு த்ருஷ்டியிலும், சிலதுக்கு நிச்வாஸம் என்கிற வெளிவரும் மூச்சுக் காற்றி லும், சிலவற்றிற்கு உமிழ்நீரிலும் இருக்கும்; வேறு சில ஜந்துக்கள் பரிசிப் பதாலும் விஷதோஷங்கள் ஏற்படுவதுண்டு. ஏதோ தோஷம் சரீரத்தில் பற்றி விட்டதாக சங்கை அதிகரிக்குமானால், அவ்வித சங்கையினாலேயும் விஷத்திற்குண்டான துர்க்குணங்கள் தோன்றுவதுண்டு. 196—199.

க்ருத்ரிமவிஷம் முதலியன :—க்ருத்ரிமவிஷமானது கரவிஷம்,[2] தூஷீ விஷம்[3] என்று இரண்டு விதமாகப் பிரிக்கப்படுகிறது. தாது விஷங்கள் எழுவிதம்[4]. உபதாது விஷங்கள் எழுவிதம்[5]. அவ்விதமே உபவிஷங்களும் எழுவிதங்களெனப்படுகின்றன.[6] கெட்டுப்போன தண்ணீரால் ஒருவித விஷம் உண்டாகின்றது. அம்பு முதலிய ஆயுதங்களின் முனைகளில் தீட் டப்பட்டிருக்கும் ஒருவித விஷம் 'திக்த விஷம்' எனப்படும்.[7] 200—201.

1. ஒன்பது விதமான ஸ்த்தாவர விஷங்கள்,—மூலவிஷம், பத்ர விஷம், பலவிஷம், புஷ்பவிஷம், சர்மவிஷம், க்ஷீரவிஷம், ஸாரவிஷம், நிர்யாஸவிஷம், கந்தவிஷம் என்பவையாம். [மூலம்-வேர்; பத்ரம்-இலை; பலம்-கனி; சர்மம்-தோல்; க்ஷீரம்-பால்; ஸாரம்-மரத்தின் உட்புறத்திலுள்ள வைரம் அல்லது சாறு; நிர்யாஸம்-பிசின்; கந்தம்-மணம்; தாதுவிஷம் என் பது பத்தாவது என்று ஸுச்ருதர்.]

2. கரவிஷம்—சத்ருக்களாவது, புருஷர்களை பாசமுள்ளவராக்க விரும்பிய ஸ்த்ரீகளாவது உணவு முதலியதில் இடும் ஒருவித விஷம். இது விஷகுணமற்ற பதார்த்தங்களைச் சேர்த்துச் செய்யப்படும்.

3. தூஷீவிஷம்-விஷகுணமுள்ள சில பதார்த்தங்கள், அவற்றின் தன் மைக்குத் தகாத இடங்களின் ஸம்பந்தத்தாலோ, காலவித்யாஸத்தினாலோ, விஷஹரமான ஔஷதிகளின் சேர்க்கையினாலோ, தீ வாயு வெய்யில் முதலி யவற்றாலோ, அல்லது இயற்கையினாலேயோ வீர்யத்தில் குன்றிப் போகு மானால் 'தூஷீவிஷம்' எனப்படும். தாதுக்களைப் பலவாறு தூஷிப்பிக்கும் தன்மை யுடையதாலும் தூஷீவிஷம் என்று சொல்லப்படுகிறது.

4. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வங்கம், துத்தநாகம், காரீயம் இவை ஸப்த தாதுக்கள் எனப்படுகின்றன. இவற்றை முறைப்படி சுத்தம் செய்யாவிட்டால், இவை விஷத்தன்மையடைந்து தாது விஷங்களாகும்.

5. பொன் நிமிளை, வெள்ளி நிமிளை, மயில் துத்தம், வெண்கலம், பித்தளை, கிரி விந்தூரம் என்னும் காவி, சிலாஜது இவை ஸப்த உபதாதுக்கள். இவற்றையும் அசுத்தமாய் உபயோகித்தால் விஷத்தன்மையைக் காட்டும்.

6. எருக்கம்பால், கள்ளிப்பால், சிவனார்கிழங்கு, அலரி, குன்றி, அபினி, ஊமத்தை இவ்வேழும் ஸப்த உபவிஷங்களாம்.

7. முற்காலங்களில் எதிரிகளின்மேல் அம்பு முதலிய ஆயுதங்களைப் போடும்போது, அவற்றால் அவர் தவறாமல் உயிர் துறக்க வேண்டுமென்று

காஞ்சொறி முதலியதாலாதும் விஷகுணங்கள் :—காஞ்சொறியிலை, கெட்டுப்போன தண்ணீர், காருங் கருணைக் கிழங்கு முதலியவற்றின் ஸம்பந்தத்தினால் சர்மத்தில் எரித்தலுண்டாகும். சேராங்கொட்டையின் பாலாலும் எரித்தலுடன் வீக்கமும் உண்டாகும். 202.

மயக்கம்:—கொட்டைப்பாக்கு, கஞ்ஜா, தான்றிக்காய், கோத்ரவம்[1] இந்த நான்கு வஸ்துக்களால் நான்கு விதமான மதம் அல்லது மயக்கம் உண்டாகும். சில ஔஷதிகளுடைய கனி, சர்மம், வேர், இலை இவற்றாலும் நான்குவித மயக்கம் ஸம்பவிக்கும். 203.

நிதாந அத்தியாயத்தின் முடிவுரை :—இவ்வாறு உடலில் இதர பதார்த்தங்களின் ஸம்பந்தத்தால் பிரவித்தமாக உண்டாகக்கூடிய பற்பல உபத்திரவங்களும் கூறப்பட்டன; தாதுவர்க்கங்கள், ஔஷதிகளின் மூலவர்க்கங்கள், ஜீவவர்க்கங்கள் முதலியவைகளால் ஸம்பவிக்கக்கூடிய வியாதிகள் இன்னும் எண்ணிறந்தவையுண்டு. 204.

எண்ணி, அவ்வாயுதங்களின் முனையில் விஷங்களைப் பூசுவது வழக்கம். அது தீக்ஷ்ண விஷம் எனப்படும்.

1. கோத்ரவம்—ஒருவித மயக்கந்தரும் தானியம்; வாகுதானியம் என்று சிலர்.

மத்யம கண்டம்

முதல் அத்தியாயம்

ஸ்வரஸ கல்பனை.

பஞ்ச கஷாயங்கள் :—இனி ஸ்வரஸம், கல்கம், க்வாதம், ஹிமம், பாண்டம் என்னும் ஐந்துவித கஷாயங்கள் கூறப்படுகின்றன; இவற்றுள் ஸ்வரஸத்தைவிட கல்கமும், கல்கத்தினும் க்வாதமும், க்வாதத்தினும் ஹிமமும், ஹிமத்தைவிட பாண்டமும் மூறையே இலகு குணம் மேலிட்டவையாம்.[1] 1.

சுத்த ஸ்வரஸம் :—பதனழியாத ஔஷதிகளைப் புதிதாகக் கொண்டு வந்து உடனே இடித்து, வஸ்திரத்திலிட்டுப் பிழிந்தெடுப்பதால் வரும் சாரூனது ஸ்வரஸம் எனப்படும். 2.

நிசோஷித ஸ்வரஸம்:—முற்கூறிய ஸாதாரண ஸ்வரஸத்திற்குபயோகமான வஸ்துக்கள் உலர்ந்திருந்தால் அவற்றைச் சூர்ணம் செய்து, நான்கு பலம் சூர்ணத்தை இரு மடங்கு ஜலத்திற் போட்டு, ஓர் இராப்பகல் முடிய ஊறவைத்து, அப்பால் வடிக்கட்டி யெடுத்தாலும் சுத்தஸ்வரம்போன்றிருக்கும். இது இரவெல்லாம் ஊறவைப்பதால் நிசோஷித ஸ்வரஸம் எனப்படும். 3.

பக்வ ஸ்வரஸம் :—ஸ்வரஸத்திற்கான மூலிகைகள் ஈரமாகவே கிடைக்காவிட்டால், உலர்ந்தவைகளைக் கிரஹித்து, எட்டு மடங்கு ஜலத்தில் இடித்துச் சேர்த்து, பக்குவம் செய்து, நாலில் ஒரு பங்காக வற்றவைத்து, வடிக்கட்டி ஸ்வரஸத்திற்குப் பதிலாயுபயோகிக்கலாம். 4.

ஸ்வரஸங்களை யுபயோகிக்கும் அளவு :—ஸ்வரஸம் வெகு குருகுணமுள்ளதாகையால் அதைப் பொதுவாக அரைப்பலம் உபயோகிக்கலாம். நிசோஷிதஸ்வரஸத்தையும், பக்வஸ்வரத்தையும் ஒரு பலப்பிரமாணம் உட்கொள்ளலாம்.[2] 5.

ஸ்வரஸத்தில் சேர்க்கக்கூடிய சில வஸ்துக்களின் பிரமாணம்:—தேன், சர்க்கரை, க்ஷாரம், ஜீரகம், உப்பு, நெய், தைலம், மற்றும் பலவித சூர்ணங்கள் இவை முதலியவற்றை அவசியமானால் ஸ்வரஸத்தில் தனித்தனியே அரைக்கால் பிரமாணம் சேர்க்கலாம்.[3] 6.

---

1. திரவியங்களுக்கு இலகு, குரு என்று குணம் இரண்டு; அவற்றுள் எளிதில் ஜீர்ணமாகக்கூடிய பதார்த்தங்கள் இலகு குணமுள்ளவை; சிறிது அல்லது அதிக பிரயாஸத்தின்பேரில் நீடித்து ஜீர்ணமாகக் கூடிய அல்லது ஜீர்ணமாகக் கூடாத வஸ்துக்கள் குரு குணமுள்ளவை.

2. பிறகு கூறப்படும் பற்பல ஸ்வரஸங்களை உட்கொள்வதற்குத் தனித் தனியே பிரமாணம் பெரும்பாலும் கூறப்படமாட்டா; அவற்றை உட்கொள்ளுவதற்குப் பொதுவான பிரமாணம் இதுதான் என்றறிக.

3. ஸ்வரஸங்களில் தேன் முதலியவற்றையும் சூர்ணவகைகளையும் சேர்ப்பதற்கு இதுவே பொது அளவு; ஆகவே பிறகு ஒவ்வொரு ஸ்வரஸத்திலும் தனித்தனியே இதர சரக்குகளைச் சேர்க்க பெரும்பாலும் பிரமாணம் கூறப்படமாட்டாது.

அம்ருதா ஸ்வாஸம்[1]—சீந்திற்கொ யிலிருந்து ஸ்வரஸம் பிழிந்தெ டுத்து, அதில் தேன் கலந்து உட்கொள்ள ஸகல பிரமேஹங்களும் தீரும். $6\frac{1}{2}$.

தாத்ரீ ஸ்வாஸம் :—நெல்லிக்கனியிலிருந்து ஸ்வரஸமெடுத்து, அதில் மஞ்சளின் சூர்ணத்தைக் கலந்தாவது, தேன் சேர்த்தாவது பிரமேஹரோகங் கள் தீருவதற்கு உட்கொள்ளலாம். 7.

வாஸா ஸ்வாஸம் :—ஆடாதோடையின் ஸ்வரஸத்தில் தேன் சேர்த்து உட்கொண்டால் இரத்தபித்தம், ஜ்வரம், காஸம், க்ஷயம், காமாலை, சிலேஷ்ம ரோகம், பித்தப்பிரகோபம் இவை நீங்கும். 8.

தீபிபலா ஸ்வாஸம் முதலியன :—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய் இம்மூன்றின் ஸ்வரஸத்தையும் ஒருமிக்கச் சேர்த்துத் தேன் கலந்து உட்கொண்டாலும், மரமஞ்சள் ஸ்வரஸம், வேப்பிலை ஸ்வரஸம், சீந்திற் கொடி ஸ்வரஸம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் தேன் விட்டு உபயோகித் தாலும் காமாலை தணியும். 9.

துளஸி ஸ்வாஸம் முதலியது :—துளஸியிலைச் சாற்றிலாவது, பெரு வாகையின் ஸ்வரஸத்திலாவது மிளகுப் பொடியைக் கலந்துபோகித்தால் முறைக்காய்ச்சலென்னும் விஷமஜ்வரங்கள் தீரும். 10.

ஜம்பூபல்லவ ஸ்வாஸம் முதலியது :—நாவல், மா, நெல்லி இவற்றின் தளிர்களிலிருந்து ஸ்வரஸம் பிழிந்தெடுத்து, அவற்றில் ஏதேனுமொன்றில் தேன், நெய், பால் இவற்றுள் எதையாவது சேர்த்து உட்கொள்ள உக்கிர மான இரத்தாதிஸாரமும் நிவருத்தியாகும். 11.

பப்பூலாதி ஸ்வாஸம் :—கருவேலந்தளிர் ஸ்வரஸமாவது, பெரு வாகை, வெட்பாலை இவற்றின் பட்டைகளின் சாறுவது உட்கொள்ளப்படு மாஞல் ஸகல வித அதிஸாரங்களும் தீரும். 12.

ஆர்த்ரக ஸ்வாஸம் :—இஞ்சியின் ஸ்வரஸத்தில் தேன் கலந்து உட்கொள்ள வ்ருத்தி யென்கிற அண்டவாயு நீங்கும். ச்வாஸம், காஸம், அரோசகம், பிரதிச்யாயம் இவையும் தீரும். 13

பீஜபூர ஸ்வாஸம் :—கொடிமாதளம் பழத்தின் ஸ்வரஸத்துடன் தேன் அல்லது யவக்ஷாரம் கலந்து உபயோகிக்க பார்ச்வசூலம், இருதய நோய்கள், மூத்ராசய வியாதிகள், கடுமையான குடலேப்பற்றிய வாயு இவை நிவ் ருத்தியாகும். 14.

சதாவரீ கந்யா ஸ்வாஸங்கள் :—(1) தண்ணீர் விட்டாங் கிழங்கின் ஸ்வரஸத்தோடு தேன் கலந்துபயோகிக்க வயிற்றில் பித்த சூலை போகும். (2) சோற்றுக் கற்றாழைச் சாற்றில் மஞ்சட்பொடி சேர்த்து உட்கொள்ள ப்லீஹரோகம், அபஸ் இவ்விரண்டும் தீரும். 15.

1. அம்ருதா-சீந்திற் கொடி; இவ்விதமே பிறகு கூறப்படும் எல்லா ஔஷதமுறைகளிலும் முதற்சரக்கின் பெயரைக்கொண்டு, ஸம்ஸ்கிருதத்தில் ஔஷதங்களுக்குக் குறிக்கப்படும் பெயரை முறைகளில் முதன் முதல் குறிப் பிடப்படும் தமிழ்ப் பெயரைக்கொண்டு 'தாத்ரீ' எனபது நெல்லிக்கனி யென் றும், 'வாஸா' என்பது ஆடாதோடை யென்றும் கிரமமாய் அறியவும். அவ்விதம் முதலிற் குறிக்கப்படுவது பெரும்பாலும் அந்தந்த முறையின் தாயிச் சாக்காதும்,

அலம்புஷா ஸ்வாஸம் :-பேய்ச்சுரையின் ஸ்வரஸத்தை இரண்டு பலம் அளவில் பருகினுல் அபஸ், கண்டமாலை, காமாலை இவை நீங்கும். 16.

சசமுண்ட ஸ்வாஸம் :—சசமுண்ட மென்னும் பச்சிலைச் சாற்றை இளஞ்சூடாகக் காய்ச்சி, மிளகுப் பொடியும் தூவி ஏழு நாட்கள் உபயோ கித்துவர ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேதமென்கிற ஒற்றைத்தலை நோய் இவை நிவருத்தியாகும். 17.

பிராஹ்மீ ஸ்வாஸம் முதலியது :—பிரமியிலை, கூஷ்மாண்டம், வசம்பு, சங்கங்குப்பி இவற்றின் ஸ்வரஸங்களுள் ஏதேனுமொன்றில் தேன், கோஷ் டம் இவற்றைச் சேர்த்து உட்கொள்ள ஸகல உன்மாத ரோகங்களும் தீரும். 18

கூஷ்மாண்ட ஸ்வாஸம் :—நீற்றுப் பூசினிக்காய் ஸ்வரஸத்தை வெல் லம் கலந்து உபயோகித்தால், பதனழிந்த கோத்ரவ தானியத்தாலான உணவுகளை யுட்கொண்டதால் நேரிட்ட வெறி நிவருத்தியாகும். 19.

காங்கேநுகீ ஸ்வாஸம் :—பேய்ப்பீர்க்கம் வேரின் ஸ்வரஸத்தை சுத்தி முதலியவற்றுல் வெட்டுண்ட அவயத்திலுள்ள விரணத்தின் துவாரத்தில் விட்டால், வலியைச் சிறிதும் உணராமலிருக்கலாம். 20.

புடபாக ஸ்வரஸங்கள்[2].

புடபாக முறை :—சில ஔஷதிகளைப் புடமிட்டு பக்குவம் செய்து, அப் பால் அதன் கல்கத்தைப் பிழிந்து ஸ்வரஸம் கிரஹிப்பதுண்டு; அவ்வித புட பாக முறைகள் சில இங்கு மொழியப்படுகின்றன. ஸ்வரஸம் கிரஹிக்க வேண்டிய ஔஷதிகளை யெடுத்து, அவற்றின்மேற் சில இலைகளையோ மரப்பட்டைகளையோ சுற்றவேண்டும்; அவை பெருங்குமிழன், ஆல், நாவல் முதலிய மரங்களின் இலைகளாயிருந்தால் உத்தமம். அதன்மேல் இரண்டு அங்குல கனம் மண் முதலியவற்றைப் பூசி, பிறகு மேற் பூச்சு தழல்போல் சென்னிறமாகும் வரையில் ஔஷதத்தைப்புடமிடவேண்டும். இதுதான் புடபாகம் செய்வதற்கு ஸாதாரண முறையாகும். 21-22$\frac{1}{2}$.

புடபாக ஸ்வாஸ்த்தை உட்கொள்வதற்கும் அதில் சேர்க்கும் பதார்த் தங்களுக்கும் அளவுகள் :—(1) புடபாகத்தில் பக்குவம் செய்தெடுத்த ஸ்வர ஸங்களைப் பொதுவாய் ஒரு தடவைக்கு ஒரு பலம் விதம் உட்கொள்ளலாம். (2) இவ்வித ஸ்வரஸத்தில் தேன் சேர்க்கவேண்டுமானுல் கால் பலம் சேர்க்கலாம்; கல்கம், சூர்ணம், திரவ பதார்த்தங்கள் முதலியவைகளை ஸாதாரண ஸ்வரஸத்திற்கு உபயோகிக்கும் விதமே சேர்க்கவேண்டும். 23$\frac{1}{2}$.

தடஜ புட பாகம் :—வெட்பாலையின் பட்டையை அரிசி கழுவிய நீரால் பச்சையாக அரைத்து, அக்கல்கத்தில் நான்கு பலம் உருட்டி யெடுத்து, அதன்மேல் நாவலிலையைச் சுற்றி, நூலால் நன்முகக் கட்டி, கோதுமை

1. சசமுண்டம் என்பதும் சசசிம்பீ யென்பதும் ஒரே வஸ்துதா னென்றும், அதுதான் ஜீவந்தீ அல்லது பாலக்கீரை யென்றும் சிலர்.

2. சில பதார்த்தங்களிலிருந்து ஸ்வரஸமேடுப்பது பிரயாஸமாயிருந் தாலும், அல்லது பக்குவம் செய்யாமல் அவ்வித ஸ்வரஸங்களை உபயோகிப் பது பிசகெனக் கருதினுலும், அப்பொழுது அவ்வஸ்துக்களைப் புடபாகம் செய்து, பிறகு அவற்றிலிருந்து ஸ்வரஸம் பிழிந்துபயோகிப்பது நலமாகு மென்பது கருத்து; அவ்வித புடபாகவிதி விஷயம் இங்கு விவரிக்கப்படுகிறது.

மாவை அதன்மேல் பூசி, அதற்குமேல் கனமாக மண்ணைத் தடவி, பசுஞ் சாணத்தினுலான வறட்டிகளுக்கு இடையில் எரிக்கவும்; மேலே பூசிய மண் தழலேப்போல் சென்னிறமாகக் காணப்படும்போது அதை வெளியி லெடுத்து, மேலுள்ள கவசங்களே விலக்கி, பக்குவமாயுள்ள கல்கத்தைப் பிழிந்து ஸ்வரஸம் எடுக்கவும். அந்த ஸ்வரஸம் குளிர்ந்தபின் தேன் கலந்து உட்கொள்ளலாம். இவ்வௌஷதம், சிகித்ஸைக்கு வசப்படாமல் வெகு நாட்களாகத் துன்பமளிக்கும் ஸகஸ அதிஸாரங்களையும் போக்கும். ஒரு பலம் அரிசியை உடைத்துக் கழுவி, எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து, ஒரு நாள் ஊறவைத்து, அந்த ஜலத்தை வடித்து இவ்விதமான எல்லா சிகித்ஸை களிலும் அனுபானமாகக் கொடுப்பது நலம். 24—28.

அரூத்வகீ புட பாகம்:—பெருமரப்பட்டையையும் முன்போல் புட பாகம் செய்து ஸ்வரஸமெடுத்து உபயோகிக்க, ஜாடராக்னி விருத்தியாகும்; அதில் தேனையும் இலவம்பிசினையும் சேர்த்து உட்கொண்டால் எல்லா அதி ஸாரங்களும் தீரும். 29.

நீயக்ரோதாதி புடபாகம்:—[1] ஆலமரம் முதலியவற்றின் பட்டைகளை அரைத்து கல்கம் செய்யவும்; நித்நிரி யென்கிற பசுவியின் வயிற்றைக் குடைந்து குடல் முதலியவற்றை விலக்கி, அக்கல்கத்தை அவ்வயிற்றினுள் நிரப்பி, அக்னியிலிட்டுப் புடபாகத்தில் பக்குவம் செய்து, அப்பால் அதைப் பிழிந்தெடுத்த ஸ்வரஸத்தில் தேன் சேர்த்து உபயோகித்தால் எல்லா அதி ஸாரங்களும் நிவருத்தியாகும். $30\frac{1}{2}$.

தாடிம புடபாகம்:—நன்றாகக் கனிந்த மாதுளம்பழத்தைப் புடபாக விதிப்படி சமைத்து, அதன் ஸ்வரஸத்தைத் தேனுடன் உட்கொண்டாலும் அகில அதிஸாரங்களும் தீரும். $31\frac{1}{2}$.

பீஜபூர புடபாகம் முதலியது:—கொடிமாதுளை, மா, நாவல் இவற் றின் தளிர்களைத் தனித்தனியே புடபாகம் செய்து, இரஸம் பிழிந்து, அந்த இரஸங்களில் ஒன்றைத் தேனுடன் பருகினுல், ஸந்நிபாதத்தினுலான மிகத் துன்பமளிக்கும் வாந்தியும் நின்றுவிடும். 32—33.

வ்ருஷபத்ர புடபாகம்:—ஆடாதோடை யிலைகளை அரைத்து, புடபா கம் பெய்து, ஸ்வரஸமெடுத்து, குளிர்ந்த பின்னர், தேன் கலந்து உபயோ கித்தால், இரத்த பித்தம், காஸம், ஜ்வரம், க்ஷயரோகம் இவை குண மாகும். 34.

க்ஷுத்ரா புடபாகம்:—கண்டங்கத்திரியின் வேர், இலை, பட்டை, புஷ்பம், காய் இவ்வைந்தையும் இடித்து புடபாகத்தினுல் பக்குவம் செய்து, ஸ்வரஸம் பிழிந்து, அதில் திப்பிலியின் சூர்ணத்தைச் சேர்த்து உட்கொண் டால் காஸம், ச்வாஸம், கபப்ரகோபம் இவையனைத்தும் தீரும். 35.

விபீதக புடபாகம்:—பசுமையான தான்றிக்காய்களை யெடுத்து, அவற்றின் மேல் நெய் தடவி, கோதுமைமாவை மேலே பூசி, தழலிலிட்டு புட

1. ஆல், அரசு, அத்தி, வெள்ளிலோத்தி, செவ்விலோத்தி, சிறுநா வல், பெருநாவல், மருதை, வஞ்சி, கருங்காலி, பூவரசு, மா, கீர் வஞ்சி, பலாசு, மணிப்புங்கு, இலந்தை, கடம்பு, தும்பை, அதிமதுரம், இலுப்பை இவை யாவும் "ஆலமரம் முதலியவற்றின்" என்பதால் குறிக்கப் படுகின்றன; இவற்றின் கூட்டுக்கு "ந்யக்ரோதாதி கணம்" என்று பெயர்.

பாகம்போல் பக்குவம் செய்து, பின்னர் வெளியிலெடுத்து மேலுள்ள கவசங் களைப் போக்கி, அதன் தோலைச் சிறிதளவு புஜித்தால் காஸம், ச்வாஸம், பிர திச்யாயம், தொண்டைக்கம்மல் இவை நீங்கும். 36—37.

சுண்டீ புடபாகம்:-(1) சுக்குப் பொடியில் சிறிது நெய் சேர்த்து, அதை ஆமணக்கிலையில் சுற்றி, மந்தாக்கினியிலிட்டு புடபாகம் செய்து, வெளியி லெடுத்து அச்சூர்ணத்துடன் ஸமபாகம் சர்க்கரை சேர்த்து, காலை வேளையில் புஜித்து வரலாம்; அதனுல் ஆமாதிஸாரத்தினுலான கஷ்டங்கள் தீரும். (2) மேலும் சுக்குத்தூளை ஆமணக்கு வேரின் சாற்றில் கலந்து, புடபாகம் செய்து, அந்த இரஸத்துடன் தேன் கலந்து உட்கொள்ள, கஷ்ட ஸாத்ய மான ஆமவாத ரோகத்தினுலான துன்பங்கள் தீரும். 38—$40\frac{1}{2}$.

ஸ்ரோண புடபாகம்:—காருங்கருணைக் கிழங்கைப் புடபாகம் செய்து, ஸ்வரஸம் பிழிந்து, தைலம் உப்பு இவற்றை அத்துடன் கலந்து உட்கொள்ள அர்சஸ் என்னும் மூலரோகம் தீரும். $41\frac{1}{2}$.

சிருங்க புடபாகம்:—மான்கொம்பை ஓர் மண் அகலில் வைத்து, அதன் மேல் மற்றொரு அகலை மூடி, சீலை செய்து புடம்போட்டு, அப்பால் அதிலிருந்துண்டாகும் பஸ்மத்தைப் பசுவின் நெய்யிற் கலந்து உபயோகிக்க, இருதயத்திலுண்டாகும் நோய் நிச்சயமாய் நிவருத்தியாகும். $42\frac{1}{2}$.

இரண்டாம் அத்தியாயம்

க்வாத கல்பனை.

க்வாதம்:—[1] கஷாயத்திற்கு உபயோகமான ஒரு பலம் திரவியத்தை இடித்துப் பதினறு மடங்கு ஜலத்தில் சேர்த்து, மட்பாத்திரத்தில் ஒரு பங் காகச் சுண்டக் காய்ச்சி, வடிக்கட்டி யெடுக்கவேண்டும்; இக்கஷாயத்தைக் கமலாக்னியிட்டு எரிக்கவேண்டும்; இக்கஷாயத்தை இளஞ்சூடாயிருக்கையி லேயே உட்கொள்ளவும்; இவ்விதம் பக்குவம் செய்யப்படும் முறை 'க்வாதம்', 'ச்ருதம்', 'கஷாயம்', 'நிர்யூஹம்' என்கிற பெயர்களால் வழங்கப்படும். 1,2.

க்வாதத்தை உட்கொள்ளும் அவது:—வயது முதிர்ந்து அநுபவம் பெற்ற வைத்தியருடைய உபதேசப்படி க்வாதத்தை நன்றாகப் பக்குவம் செய்து, அதற்கு முன் புஜித்த ஆஹாரத்தின் இரஸம்[2] நன்கு ஜீர்னமான பிறகு க்வாதங்களைப் பொதுவாக ஒரு பலம் அளவில் உட்கொள்ளலாம். 3.

க்வாதத்தில் பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டிய பிரமாணம்:— க்வாதத்தில் சர்க்கரை சேர்க்கவேண்டுமானுல், வாத தோஷத்தாலுண் டாகிய வியாதிகளுக்கான க்வாதத்தில் நான்கில் ஒரு பாகமும், பித்தாதிக மான வியாதிகளில் க்வாதத்திற்கு எட்டில் ஒரு பங்கும், கபாதிகமான

1. உலர்ந்த அல்லது பசுமையான ஓஷதிகளைக் காய்ச்சி வடிக்கட்டி யெடுக்கப்படும் கஷாயம் 'க்வாதம்' எனப்படும். மூலிகை முதலியதைக் காய்ச்சி யெடுக்கப்படுவதே கஷாயமென்று ஸாமானியமாய் வழங்கப்பட்டா லும், ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், சீதகஷாயம், கல்கம் என்கிற ஐந் துக்குமே கஷாயம் என்பது பொதுப் பெயர்.

2. உணவுகளையுண்ட பின்பு, அவற்றின் திப்பிகளெல்லாம் கீழ்க் குடலில் மலமாக்கப்பட்ட பின், இரத்தத்திற சேருவதற்கேற்றதாய் மிகுந் துள்ள வெண்மையான திரவபதார்த்தம் 'இரஸம்' எனப்படும்.

ரோகத்தில் க்வாதத்திற்குப் பதினறில் ஒரு பங்கும் சேர்க்கலாம். தேன் சேர்க்கவேண்டுமானல், வாதாதிகமான வியாதியிலுபயோகிக்கக்கூடிய க்வாதத்தில் பதினறில் ஒரு பங்கும், பித்த வியாதியில் எட்டில் ஒரு பங்கும், கபவியாதியில் நான்கில் ஒரு பங்குமாக முறையே முற் கூறியதற்கு மாறுகச் சேர்க்கவேண்டும். ஜீரகம், குங்கிலியம், க்ஷாரங்கள், உப்புகள், சிலாஜது, பெருங்காயம், த்ரிகடுகம்[1] இவற்றை க்வாதங்களில் சேர்ப்பதானல் ஏழு சாணப்பிரமாணம்[2] உபயோகிக்கலாம். பால், நெய், வெல்லம், தைலம், மூத்திரம் இவைகளையும், இதர திரவ பதார்த்தங்களையும், கல்கம், சூர்ணம் முதலியவற்றையும் க்வாதத்தில் கல் பலம் வீதம் சேர்க்கலாம். 4—6.

க்வாதத்தைத் தயார் செய்வதற்கான குறிப்பு :—பாத்திரத்தின் முகத்தை மூடிவிட்டுக் காய்ச்சினுல் அதில் சேர்த்துள்ள ஜலம் நன்முகச் சுண்டாது; ஆகவே க்வாதம் முதலியவற்றைக் காய்ச்சும்போது பாத்திரத்தின் வாயை மூடாமலிருக்க வேண்டுவது அவசியம். 7.

குடேசியாதி க்வாதம்:—சிந்திற்கொடி, தனியா, வேம்பு, செஞ்சந்தனம், பத்மகம்[3] இவற்றிற்கு 'குடேசியாதி கணம்' எனப் பெயர்; இச்சரக்குகளைக் கொண்டு பக்குவம் செய்யப்படும் க்வாதத்தை யுபயோகிக்க ஸகல ஜ்வரங்களும் தீருமெனப்படுகிறது; மேலும் நாவறட்சி, ஹ்ருல்லாஸம்,[4] சரீரவேர்காடு, வாந்தி, அருசி இவையும் தீரும்; தீபனகுணமும் இதற்குண்டு. $8\frac{1}{2}$.

சுண்ட்யாதி க்வாதம் :—சுக்கு, தேவதாரு, தனியா, கண்டங்கத்திரி, வெண் கண்டங்கத்திரி இவற்றை க்வாதம் செய்து, ஜ்வரத்தினுல் வருந்துபவர் முதன் முதலில் பருகினுல் ஆமதோஷத்தைப் பக்குவம்செய்து ஜ்வரத்தையும் போக்கும். $9\frac{1}{2}$.

க்ஷுத்ராதி க்வாதம் :—கண்டங்கத்திரி, நிலவேம்பு, சுக்கு, ஆடாதோடை, தாமரைக்கிழங்கு இவற்றின் கஷாயத்தை யுட்கொள்ள எட்டுவித ஜ்வரங்கள்[5] சமனமாகும். $10\frac{1}{2}$.

குடேசியாதி க்வாதம் இரண்டாவது :—சிந்திற்கொடி, மோடி, சுக்கு இவற்றின் க்வாதத்திற்கு நல்ல பாசந சக்தியுண்டு; எல்லாக் குறிகளுடனும் பூர்ணமாய் உண்டான வாதஜ்வரத்தில், அது கண்ட ஏழாம் நாள் இக்கஷாயம் உபயோகிக்கத் தகுந்தது. $11\frac{1}{2}$.

சாலிபர்ண்யாதி க்வாதம் :—சிறுமல்லி, சிற்றரமுட்டி, திராக்ஷை, சிந்திற்கொடி, நன்னரிவேர் இவற்றைக் கஷாயமிட்டு இளஞ்சூடாயிருக்கையிலேயே பானம் செய்தால் கடுமையான வாத ஜ்வரம் தீரும். $12\frac{1}{2}$.

1- சுக்கு, திப்பிலி, மிளகு இம்மூன்றுக்கும் ஒருமிக்க 'த்ரிகடுகம்' என்றும், 'த்ரியூஷணம்' என்றும் பெயர்.

2. சாணம்—3-வது பக்கம் பார்க்க.

3. பத்மகம்—இதை ஓரிலைத் தாமரையென்பர்.

4. ஹ்ருல்லாஸம்—இருதயம் இயற்கையிலும் அதிகமாய் படபடவென்று அடித்துக்கொள்ளல்.

5. வாதஜ்வரம், பித்தஜ்வரம், கபஜ்வரம், வாத பித்த ஜ்வரம், வாத கபஜ்வரம், பித்த கபஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம், ஆகந்துக ஜ்வரம் ஆக ஜ்வரம் எட்டு விதங்களாம். [இந்நூலில் ரோகங்களின் ஸங்க்யையைக் குறிப்பிடும் அத்தியாயத்தில் ஜ்வரம் இருபத்தைந்து விதமென்று ஸாமான்ய ஜ்வரங்களையும் விசேஷ ஜ்வரங்களையும் சேர்த்துக் கணக்கிடப்பட்டதென்க.]

காச்மர்யாதி க்வாதம் :—பெருங்குமிழன், நன்னரிவேர், திராக்ஷை, கழற்சி, சிந்திற்கொடி இவற்றின் க்வாதத்தில் வெல்லம் சேர்த்து உட்கொண்டால் வாதஜ்வரம் நீங்கும். $13\frac{1}{2}$.

கட்பலாதி க்வாதம் :—சிறுதேக்கு, வெட்பாலரிசி, வட்டத்திருப்பி, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த க்வாதம் தீவிரமான பித்த ஜ்வரத்தில் தோஷங்களைப் பக்குவம் செய்வதற்காக ஜ்வரமுண்டான பத்தாம் நாள் உபயோகிக்கத் தகுந்தது. $14\frac{1}{2}$.

பர்ப்படாதி க்வாதம் :—பர்ப்படகம், ஆடாதோடை, கடுகரோகிணி, நிலவேம்பு, காஞ்சொறி, ஞாழல் இவற்றினுல் செய்த கஷாயத்துடன் சர்க்கரையும் சேர்த்து உட்கொள்ள நாவறட்சி, தேகவேக்காடு, இரத்தபித்தம் இவ்வித உபத்திரவங்களுடன் கூடிய பித்த ஜ்வரம் நிவாரணமாகும். 15, 16.

திராக்ஷாதி க்வாதம் :—திராக்ஷை, கடுக்காய், கோரைக்கிழங்கு, கடுகரோகிணி, பச்சிலை, பர்ப்படகம் இவற்றின் கஷாயம் பித்தஜ்வரத்தை நிவாரணம் செய்யும்; நாவறட்சி, மூர்ச்சை, சரீரதாபம், இரத்தபித்தம் இவற்றையும் போக்கும். $17\frac{1}{2}$.

பர்ப்படாதி க்வாதம் இரண்டாவது :—பித்தஜ்வரத்தைப் போக்குவதற்கு பர்ப்படகம் ஒன்றே சிறந்த ஔஷதமாகும்; அதை சந்தனம், வெட்டிவேர், குருவேர் இவற்றுடன் சேர்த்து க்வாதம் செய்து பானம் பண்ணினுல் பித்தஜ்வரம் எளிதில் நிவருத்தியாகும். $18\frac{1}{2}$.

பீஜபூராதி க்வாதம்:—கொடி மாதுளை வேர், ஜடாமாம்ஸி, கடுக்காய், சுக்கு, கிரந்திதகரம் இவற்றுல் காய்ச்சிய கஷாயத்தில் யவக்ஷாரம் சேர்த்து, கபஜ்வரத்தில் அது உண்டான பன்னிரண்டாம் நாளில் உட்கொள்வது நலம்; இதற்குள்ள பாசந குணத்தினுல் ஆமதோஷம் நீங்கி ஜ்வரம் நிவருத்தியாகும். $19\frac{1}{2}$.

பூநீம்பாதி க்வாதம் :—நிலவேம்பு, வேம்பு, திப்பிலி, கிச்சிலிக்கிழங்கு, சுக்கு, தண்ணீர்விட்டான், சிந்தில் இவற்றின் க்வாதம் கபஜ்வரத்தைப் போக்கும். $20\frac{1}{2}$.

படோலாதி க்வாதம் :—பேய்ப்புடல், த்ரிபலை, கடுகரோகிணி, கிச்சிலிக்கிழங்கு, ஆடாதோடை, சிந்தில் இவற்றின் க்வாதத்தில் தேன சேர்த்து உட்கொண்டாலும் கபஜ்வரம் நீங்கும். $21\frac{1}{2}$.

பஞ்சபத்ர க்வாதம்:—பர்ப்பாடகம் கோரைக்கிழங்கு, சிந்தில், சுக்கு, நிலவேம்பு இவ்வைந்துக்கும் பொதுவாக 'பஞ்சபத்ரம்' எனப்பெயர்; இவற்றுலான கஷாயம் வாத பித்த கங்களாலுண்டான ஜ்வரத்தைத் தீர்க்கும். $22\frac{1}{2}$.

க்ஷுத்ராதி க்வாதம் இரண்டாவது :—கண்டங்கத்திரி, சுக்கு, சிந்தில், அல்லிக்கிழங்கு இவற்றின் கஷாயத்தை கபவாதங்களின் பிரகோபத்தினுலுண்டான ஜ்வத்திலாவது ஸந்நிபாத ஜ்வரத்திலாவது பானம் செய்யலாம்; காஸம், ச்வாஸம், அருசி, பார்ச்வசூலை இவ்வுபத்திரவங்களை யுண்டுபண்ணும் ஜ்வரத்திலும இக்கஷாயம் நற்பயன் விளைவிக்கும். 23, 24.

ஆரக்வதாதி க்வாதம் :—கொன்றை, மோடி, கோரைக்கிழங்கு, கடுகரோகிணி, கடுக்காய் இவற்றைக்கொண்டு பக்குவம் செய்த கஷாயம் வாத கபஜ்வரத்தை சீக்கிரத்திற் போக்கும்; ஆமதோஷத்தினுலுண்டான சூலத்தையும் போக்கும்; இக்கஷாயத்திற்கு தீபநபாசநம், பேதநம் என்கிற குணங்களும் உண்டு. $25\frac{1}{2}$.

அம்ருதாஷ்டக க்வாதம் :—சீந்தில், வேம்பு, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி, சுக்கு, பேய்ப்புடல், வெண் சந்தனம் இவ்வெட்டுக்கும் சேர்ந்து 'அம்ருதாஷ்டகம்' எனப் பெயர்; அம்ருதாஷ்டகத்தை, க்வாதமிட்டு, திப்பிலிப்பொடியையும் சேர்த்து உட்கொள்ள பித்தகபங்களாலுண்டான ஜ்வரம் நிவ்ருத்தியாகும்; வாந்தி, அருசி, இருதயத்தின் படபடப்பு, சரீரதாபம், நாவறட்சி இவையும் தீரும். 26—27½.

படோலாதி க்வாதம் இரண்டாவது:—பேய்ப்புடல், இரத்த சந்தனம், மருளங்கிழங்கு, கடுகரோகிணி, வட்டத்திருப்பி, சீந்தில் இவற்றின் க்வாதம் பித்தகபஜ்வரம், வாந்தி, தாபம், சொறி, சிரங்கு, சில விஷக்கோளாறு இவற்றைப் போக்கும். 28½.

கண்டகார்யாதி க்வாதம் :—கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சுக்கு, கொத்தமல்லிவிதை, தேவதாரு இவற்றின் க்வாதம் ஸர்வ ஜ்வரங்களையும் போக்கும்; பாசநம் என்கிற குணத்திலும் இது சிறந்தது. 29½.

தசமூல க்வாதம்;—சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, நெரிஞ்சி, பில்வம், தழுதாழை, பெருவாகை, பெருங்குமிழன், பாதிரி இம்மூலிகைகள் பத்துக்கும் 'தசமூலம்' எனப் பெயர்; இத்தசமூலத்தைக் கொதிக்கவைத்து வடிக்கட்டி, அதில் திப்பிலிப் பொடியைச் சேர்த்து உட்கொள்ளலாம். இதனால் வாதஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம், ஸோதி காதோஷம், கூடியம், மிதமிஞ்சிய சைத்யம், தலைச்சுற்றல், அதிக வியர்வை, காஸம், ச்வாஸம், ஹ்ருக்கிரஹம்,[1] கண்டக்கிரஹம்,[2] பார்ச்வசூலை, சோம்பல், தலைவலி இவை தீரும். 30—33.

ஹரீதக்யாதி க்வாதம் :—கடுக்காய், கோரைக்கிழங்கு, கொத்தமல்லிவிதை, சென்சந்தனம், தாமரைக்கிழங்கு, ஆடாதோடை, வெட்பாலரிசி, வெட்டிவேர், சீந்திற்கொடி, பச்சிலை, வட்டத்திருப்பி, சுக்கு, கடுகரோகிணி இவற்றைக் கஷாயமிட்டு வடிக்கட்டி, அதில் திப்பிலிச் சூர்ணத்தைச் சேர்த்து உட்கொள்ள ஸந்நிபாத ஜ்வரம் தீரும். நாவறட்சி, காஸம், தேஹதாபம், வாய் தழுதழுத்துப் பிதற்றல், ச்வாஸம், சோம்பல், வாந்தி, கூடியம், அருசி இவையும் சமனமாகும்; மலம், மூத்திரம், அபாநவாயு இவை கட்டுப்பட்டிருப்பதையும் அகற்றும்; தீபந பாசநகுணமும் உண்டு. 34—36.

பிப்பல்யாதி க்வாதம் :—திப்பிலி, மோடி, சவியம், சித்திரமூலம், சுக்கு, வசம்பு, அதிவிடயம், சோம்பு, வட்டத்திருப்பி, வெட்பாலரிசி, அரேணுகம், நிலவேம்பு, மருளங்கிழங்கு, கடுகு, மிளகு, கடுகரோகிணி, அல்லிக்கிழங்கு, கண்டுபாரங்கி, வாய்விடங்கம், கர்க்காடக சிருங்கி, எருக்கம்வேர், கண்டங்கத்திரி, கடுக்காய், காஞ்சொறி, ஓமம், ஜீரகம், பெருவாகை, பெருங்காயம் இவ்விருபத்தெட்டு பதார்த்தங்களையும் ஸமமாகச் சேர்த்து, க்வாதமிட்டு உட்கொள்வதால் கப-வாதஜ்வரம் நீங்கும்; வாதரோகம், அதிக சைத்தியம், பிரபலமான கபம் இவற்றைக் கண்டிக்கும்; வாய்ப்பிதற்றுதல், அநித்திரை, மயிர்ச்சிலிர்த்தல், அரோசகம், உக்கிரமான வாதநோய்கள்,

1. ஹ்ருத்க்ரஹம்—இருதயப்பிடிப்பு; அதாவது இருதயநடை தடைபடுதல்.

2. கண்டக்ரஹம்—கழுத்தை அசைக்கமுடியாத பிடிப்பு.

அபதந்த்ரகம், உணர்ச்சியின்மை இவற்றையும், ஸகலஜ்வரங்களையும், பதின்மூன்று ஸந்நிபாத ஜ்வரங்களையும் [1] போக்கும். 37—42.

கீராதாதி க்வாதம் :—நிலவேம்பு, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு, தனியா, வெட்பாலரிசி, சுக்கு, தசமூலங்கள், மரமஞ்சள், யானைத்திப்பிலி இவற்றின் கஷாயம் பக்கசூலை, ஸந்நிபாத ஜ்வரம், காஸம், ச்வாஸம், வாந்தி, விக்கல், சோம்பல், ஹ்ருத்க்ரஹம் இவற்றைப் போக்கும். 43—44.

கட்பலாதி க்வாதம் இரண்டாவது :—சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கண்டுபாரங்கி, தனியா, காவட்டம்புல், பர்ப்பாடகம், வசம்பு, கடுக்காய், கர்க்காடகசிருங்கி, தேவதாரு, சுக்கு இவற்றின் கஷாயம் காஸம், ஜ்வரம், ச்வாஸம், கபப்பிரகோபம், கண்டக்கிரஹம் இவற்றைத் தீர்க்கும். 45½.

துரீச்சியாதி க்வாதம் மூன்றவது :—சீந்திற்கொடியையும் திப்பிலியையும் சேர்த்து பக்குவம்செய்த க்வாதத்தையுபயோகித்தால் வெகு நாட்களாய் தொடர்ந்துவரும் ஜ்வரம் நிவ்ருத்தியாகும். 46.

பர்ப்படாதி க்வாதம் மூன்றவது :—பர்ப்படாகத்தைச் சேர்த்து க்வாதம் செய்து உபயோகித்தால் பித்த ஜ்வரம் நன்முக நிவ்ருத்தியாகும்; செஞ்சந்தனம், குருவேர், சுக்கு இவற்றையும் மேற்கூறிய சரக்குகளுடன் சேர்த்து க்வாதம் செய்தால் பித்த ஜ்வரம் நிச்சயமாய் நிவ்ருத்தியாகும். 47.

நீதிகீதிகாதி கீவாதம் :—கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, சுக்கு இவற்றை க்வாதமிட்டு திப்பிலிப்பொடியை அக்கஷாயத்தில் சேர்த்து பானம் பண்ணலாம்; இதனால் ச்வாஸரோகம், காஸம், அர்திதம், பீநஸம், அருசி, தொண்டைக்கம்மல், சூலநோய், அஜீர்ணம், ஜ்வரம் இவை நிவ்ருத்தியாகும். 48½.

தேவதாரீவாதி க்வாதம் :—தேவதாருப்படை, வசம்பு, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, சிறு தேக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கடுகரோகிணி, தனியா, கடுக்காய், யானைத்திப்பிலி, பூனைக்காலி, நெரிஞ்சி, பெருங்காஞ்சொறி, கண்டங்கத்திரி, அதிவிடயம், சீந்திற்கொடி, கர்க்காடக சிருங்கி, கருஞ்ஜீரகம் இவற்றை இடித்து எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து, எட்டில் ஒருபங்காகக் காய்ச்சி வடிகட்டி, பிரஸவித்த ஸ்ரீகளுக்குக் கொடுத்தால், அவர்களுக்குண்டாகும் பக்கசூலை, காஸம், ச்வாஸம், ஜ்வரம், மூர்ச்சை, உடல் நடுக்கம், தலைநோய் இவை தீரும். 49—51½.

கூஷ்மாண்டாதி கீவாதம் மூன்றவது :—கண்டங்கத்திரி, தனியா, சுக்கு, சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, செஞ்சந்தனம், நிலவேம்பு, பேய்ப்புடல், ஆடாதோடை, தாமரைக்கிழங்கு, கடுகரோகிணி, வெட்பாலரிசி, வேம்பு, கண்டுபாரங்கி, பர்ப்பாடகம் இவற்றின் க்வாதத்தை காலையில் உட்கொண்டுவர, எல்லா குளிர்ஜ்வரங்களும் தீரும். 52—53½.

முஸ்தாதி கீவாதம் :—கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, சுக்கு, செல்லிக்காய் இவற்றைக் கஷாயமிட்டு, திப்பிலிச் சூர்ணத்தையும் தேனையும் சேர்த்துப் பருகினால் விஷமஜ்வரம் நீங்கும். 54½.

படோலாதி கீவாதம் மூன்றவது :—பேய்ப்புடல், வெட்பாலரிசி, தேவதாருப்பட்டை, த்ரிபலை, கோரைக்கிழங்கு, திராக்ஷை அதிமதுரம்,

1. எல்லா விஷமஜ்வரமும் ஸந்நிபாதத்திலுள் உற்பத்தியாவதாகக் கூறப்படுவதால், அவ்விஷம ஜ்வரங்கள் பதின்மூன்றுமே இங்கு ஸந்நிபாத ஜ்வரங்கள் என்று குறிக்கப்படுவதாயறிக.

சீந்திற்கொடி, ஆடாதோடை இவற்றின் க்வாதத்தில் தேன் சேர்த்து உட் கொண்டால் ஸந்ததம், த்ருதீயகம், அந்யேத்யுஷ்கம் என்கிற விஷம ஜ்வரங் களும், முதலில் தாபம் அதிகரித்து அப்பால் சீதளமுண்டாக்கக்கூடிய ஜ்வ ரமும், கவஜ்வரமும் [1] தீரும். 55—56½.

படோலாதி கீவாதம் நான்காவது :—பேய்ப்புடல், த்ரிபலை, வேம்பு, திராக்ஷை, கோரைக்கிழங்கு, ஆடாதோடை இவற்றின் க்வாதத்தில் தேனை யும் சர்க்கரையையும் சேர்த்து உட்கொள்ள அந்யேத்யுஷ்கஜ்வரம் நிவா ரணமாம். 57½.

துடீசீயாதி கீவாதம் நான்காவது :—சீந்திற்கொடி, தனியா, கோரைக்கிழங்கு, செஞ்சந்தனம், வெட்டிவேர், சுக்கு இவற்றைக் கஷாய மிட்டு, தேனும் சர்க்கரையும் கலந்து, த்ருதீயக ஜ்வரம், நாவறட்சி, சரீர தாபம் முதலியவற்றைப் போக்க உபயோகிக்கலாம். 58, 59.

தேவதார்வாதி கீவாதம் இரண்டாவது.—தேவதாரு, கடுக்காய், ஆடா தோடை, சிறுமல்லிகை, சுக்கு, நெல்லிக்காய் இவற்றைக் கஷாயமிட்டு, சர்க்கரை சேர்த்து, சாதுர்த்திகஜ்வரம், ச்வாஸம், காஸம், அக்னி மாந்த்யம் இந்த ரோகங்களிற் கொடுக்கலாம். 60½.

துடீசீயாதிகீவாதம் ஐந்தாவது :—சீந்திற்கொடி, தனியா, வெட்டி வேர், சுக்கு, விளாமிச்சை வேர், பர்ப்பாடகம், பில்வவேர், அதிவிடயம், வட்டத்திருப்பி, செஞ்சந்தனம், ஆடாதோடை, நிலவேம்பு, கோரைக் கிழங்கு, வெட்பாலரிசி இவற்றைக் கஷாயம் போட்டு, வடிக்கட்டி, ஆறிய பிறகு தேன் சேர்த்து உட்கொள்ளலாம்; அதனல் இரத்த பித்தம், ஜ்வரம், அதிஸாரம் இவை நிவ்ருத்தியாகும். 61—62½.

சுண்டயாதி கீவாதம் :—சுக்கு, வெட்பாலரிசி, கோரைக்கிழங்கு, சீந் திற்கொடி, அதிவிடயம் இவற்றின் க்வாதத்தைப் பருகினல் ஜ்வராதிஸா ரம் [2] ஒழிந்துவிடும். 63½.

(1) தாதீயகாதி கீவாதம்:-தனியா, குருவேர், பில்வவேர், கோரைக் கிழங்கு, சுக்கு இவற்றின் க்வாதம் நன்கு ஜீர்ணமாகாத உணவுகளாலுண் டாகும் சூலத்தைப் போக்கும்; க்ராஹி, தீபநம், பாசநம் என்கிற குணங்களையும் விசேஷமாயுடையது. (2) தாதீயகாதி கீவாதம்:—தனியா, சுக்கு இவற்றினுலான கஷாயத்திற்கும் தீபநம் பாசநம் என்கிற குணங்க ளுண்டு; ஆமணக்கு வேரையும் சேர்த்து இக்கஷாயத்தைப் பக்குவம் செய் தால் ஆமவாதத்தினுலுண்டாகும் பாதையும் நிவ்ருத்தியாகும் 64--65½.

வத்ஸகாதி கீவாதம் :—வெட்பாலரிசி, அதிவிடயம், பில்வவேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர் இவற்றைக் கஷாயம் காய்ச்சி யுபயோகித் தால் அஜீர்ணத்துடன் கூடிய அதிஸாரமும், நாட்பட்ட சூலையுடன் கூடிய இரத்தாதிஸாரமும் சமனமாகும். 66½.

குடஜாவ்ஷ்டக கீவாதம் :—குடசப்பாலை, அதிவிடயம், வட்டத் திருப்பி, நெல்லிப்பருப்பு, வெள்ளிலோத்தி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், மாதுளை இவ்வெட்டு வஸ்துக்களின் சேர்க்கைக்கு 'குடஜாவ்ஷ்டகம்' எனப் பெயர்.

1. கவஜ்வரம்—ஜ்வரம் உற்பத்தியானது முதல் 8 நாள் வரையில் கவஜ்வரம் எனப்படும்; அது ஆமஜ்வரம் என்றும் கூறப்படும்.

2. ஜ்வராதிஸாரம்—ஜ்வரத்துடன் அதிஸாரமும் தொடர்ந்திருத்தல்.

இவற்றின் கஷாயத்தில் இலவம் பிசின் சேர்த்து உட்கொண்டால் குடலில் எரித்தல், இரத்தப்போக்கு, சூலை, அஜீர்ணதோஷம் இவற்றுடன் கூடிய தும் வேறுவித சிகித்ஸைக்கு வசப்படாததுமான அதிஸாரங்கள் நீங்கும். 67—68½.

ஹ்ரீபேராதி கீவாதம் :—குருவேர், காட்டாத்திப்பூ, வெள்ளிலோத்தி, வட்டத்திருப்பி, நாகப்பூ, வெட்பாலை, கொத்தமல்லி விதை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, பில்வவேர், சுக்கு இவற்றைக் கஷாய மிட்டு உட்கொள்ள, நாட்பட்ட அதிஸாரம், அரோசகம், அஜீர்ணசூலை, இரத் தாதிஸாரம், ஜ்வரம் இவை குணமாகும்: இக் கஷாயத்திற்குப் பாசந சக்தியும் உண்டு. 69—70½.

தாதகீயாதி கவாதம் :—காட்டாத்திப்பூ, பில்வவேர், வெள்ளிலோத்தி, குருவேர், யானைத்திப்பிலி இவற்றை க்வாதம் செய்து சிறிது குளிரச் செய்து, தேன் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்; அல்லது இக் கஷாயத்தை மீண்டும் காய்ச்சி சர்க்கரையும் தேனும் கலந்து லேஹ்யமாகச் செய்தும் சிறுவர்களுக்கு உபயோகிக்கலாம்; எல்லா அதிஸாரங்களும் குணமாகும். 71—72.

சாலிபர்ண்யாதி கீவாதம் :—சிறு மல்லிகை, சிற்றரமுட்டி, பில்வம், தனியா, சுக்கு இவற்றின் கஷாயம் வயிற்றுப் பொருமல், வயிற்றுவலிக ளுடன் கூடிய வாத க்ரஹணீரோகம் நிவ்ருத்தியாக்கும். 73.

துடீசீயாதி கீவாதம் ஆறவது —சீந்திற்கொடி, அதிவிடயம், சுக்கு, கோரைக் கிழங்கு இவற்றின் கஷாயம் ஆமதோஷத்துடன் கூடிய க்ரஹணீ ரோகத்தைப் போக்கும். ஆகவே க்ராஹி, தீபநபாசநம் என்கிற குணங்கள் இக்கஷாயத்திற்கு உண்டு. 74.

யவாதி-பில்வாதி கீவாதம் :—(1) யவதானியம், பேய்ப்புடல், தனியா இவற்றைக் கஷாயமிட்டு, அத்துடன் தேனும் சர்க்கரையும் சேர்த்து உபயோ கித்தாலும், (2) பில்வவேர், மாங்கொட்டை இவற்றைக் கஷாயமிட்டு அதில் தேன் சர்க்கரை சேர்த்து உட்கொண்டாலும் ஸகல அதிஸாரங்களும் நீங்கும். 75.

(1) த்ரிபலாதி கீவாதம்:-த்ரிபலை, தேவதாரு, கோரைக்கிழங்கு, ஔவை யார் கூந்தல், முருங்கை இவற்றைக் கஷாயம் செய்து, அதில் திப்பிலிப் பொடியையும், வாய்விடங்கப் பொடியையும் சேர்த்து உட்கொள்ளலாம்; 'க்ருமிக்நம்' என்கிற குணமுள்ள இது வயிற்றுக் கிருமிகளை வெளிப் படுத்த உபயோகமாகும். (2) த்ரிபலாதி கீவாதம்:-த்ரிபலை, சீந்திற்கொடி, கடுகரோகிணி, வேம்பு, நிலவேம்பு, ஆடாதோடை இவற்றின் கஷாயத்தில் தேன் சேர்த்து காமாலை, பாண்டுரோகம் இவற்றைப் போக்க உபயோகிக்க லாம். 76—77½.

புனர்நவாதி கீவாதம்:—சாறடை, கடுக்காய், வேம்பு, மரமஞ்சள், கடுகரோகிணி, பேய்ப்புடல், சீந்திற்கொடி, சுக்கு இவற்றைச் சேர்த்து பக்கு வம் செய்த க்வாதத்துடன் கோமூத்ரமும் சேர்த்து உபயோகிக்க பாண்டுரோகம், காஸம், மஹோதரம், ச்வாஸரோகம், வயிற்றுவலி, ஸர்வாங்கங்களிலுமுண்டாகும் வீக்கம் இவை நிவ்ருத்தியாகும். 78—79.

வாஸாதி கீவாதம் :—ஆடாதோடை, திராக்ஷை, கடுக்காய் இவற்றின் க்வாதத்தில், தேன் சர்க்கரை சேர்த்து உட்சொண்டால் உக்கிரமான இரத்தபித்தம், ச்வாஸம், காஸம் இவை நீங்கும். 80.

கேவல வாஸா கீவாதம் :—ஆடாதோடையை மட்டும் கஷாயமிட்டு, தேன் சேர்த்து உபயோகித்தால் இரத்தபித்தம், க்ஷயம், காஸம், கபபித்த ஜ்வரம் இவை குணமாகும். 81.

(1) **வாஸாதி கீவாதம் மூன்று :**—ஆடாதோடை, கண்டங்கத்தரி, சிந்திற்கொடி இவற்றின் கஷாயத்தைத் தேன் கலந்து உட்கொண்டால் ஜ்வரம், காஸம் இவை தீரும். (2) **வாஸாதி கீவாதம் நான்கு :**—ஆடாதோடையையும், கண்டங்கத்திரி வேரையும் சேர்த்துக் கஷாயமிட்டு, அதில் திப்பிலிப் போடியையும் தூவி யுபயோகித்தால் காஸரோகம் தீரும். 82.

க்ஷுத்ராதி கீவாதம் நான்காவது :—கண்டங்கத்திரி, கொள், ஆடாதோடை, சுக்கு இவற்றினுல் பக்குவம் செய்த க்வாதத்தில் அல்லிக்கிழங்கின் பொடியைத் தூவி உட்கொண்டால் ச்வாஸ காஸம் நிவ்ருத்தியாகும். 83.

ரேணுகாதி கீவாதம் :—அரேணுகம், திப்பிலி இவற்றை க்வாதம் செய்து, பெருங்காயத்தைப் பொரித்துச் சேர்த்து உட்கொள்ள ஐந்துவித விக்கல்களும் உடனே நீங்கும். 84.

(1) **பில்வ கீவாதம்** முதலியது இரண்டாவது :—பில்வவேர்ப் பட்டையையாவது, சீந்திற்கொடியையாவது க்வாதமிட்டு, அதில் தேனையும் கலந்து உட்கொள்வதால் ஸ்நிபாதத்தினுண்டாகும் வாந்தி நீங்கும். (2) அவ்விதமே பர்ப்பாடக க்வாதத்தைப் பக்குவம் செய்துட்கொண்டால் பித்தத்தினுலுண்டான சர்த்தியும் தீரும். 85.

இரண்டாவது தசமூல கீவாதமும் சேபாலிகா கீவாதமும் :—தசமூலங்களைக்கொண்டு பக்குவம் செய்த க்வாதத்தில் பெருங்காயம், அல்லிக்கிழங்கு இவற்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டால் க்ருத்ரஸீ ரோகம் நீங்கும். பெருங்காயம் முதலியதைச் சேர்க்காமல் கருநாச்சிலியை மட்டும் க்ஷாயமிட்டு உபயோகித்தாலும் க்ருத்ரஸீ ரோகம் தீரும். 86.

(1) **ராஸ்நாதி கீவாதம் :**—சிற்றரத்தை, சிந்திற்கொடி, பெருமரம், சுக்கு, ஆமணக்கு விதை இவற்றுல் காய்ச்சிய கஷாயத்தை எழு தாதுக்களையும் ஆச்ரயித்து உண்டான ஸர்வாங்க வாதரோகத்திலும், ஆமவாத ரோகத்திலும் உட்கொள்ளலாம். (2) **ராஸ்நாதி கீவாதம் :**—சிற்றரத்தை, நெரிஞ்சி, ஆமணக்கின் வேர், தேவதாரு, வெள்ளைச்சாறடை, சிந்திற்கொடி, கொன்றை இவற்றின் கஷாயத்தில் சுக்கைப் பொடித்துச் சேர்த்து உட்கொள்ள கால் பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, பக்கசூலை, பின்புறச்சூலை, தூடை வலி, வெகுகடினமான ஆமவாதம் ஆகிய வாத ரோகங்கள் நீங்கும். 87 89.

மஹா ராஸ்நாகி கீவாதம் :—சிற்றரத்தை, காஞ்சொறி, சிற்றமுட்டி, ஆமணக்கு, தேவதாரு, கிச்சிலிக்கிழங்கு, வசம்பு, ஆடாதோடை, அக்ரூ, கடுக்காய், சவியம், கோரைக்கிழங்கு, சாறடை, சீந்திற்கொடி, கடற்பாலை, சதகுப்பி, நெரிஞ்சி, அமுக்கிரங்கிழங்கு, அதிவிடயம், பச்சிலை, தண்ணீர் விட்டாங்கிழங்கு, திப்பிலி, மருதோன்றி, கொத்தமல்லி விதை, கண்டங் கத்தரி, சிறுவழுதுணை இவற்றின் க்வாதத்தில் சுக்குத்தூள் சேர்த்து உட்

கொள்ளலாம்; இவற்றுள் சிற்றரத்தை மட்டும் இரண்டு பாகமும், காஞ்சொறி முதலிய மற்றவையெல்லாம் ஒவ்வொரு பாகமும், சேர்க்கவேண்டும்; இக் கஷாயத்தில் சுக்குப் பொடிக்குப் பதிலாகத் திப்பிலிப்பொடியைச் சேர்க்கலாம்; அல்லது யோக ராஜகுக்குலு [1] என்பதையாவது, அஜமோஜாதி சூர்ணத்தையாவது,[2] ஆமணக்கெண்ணெயையாவது சேர்த்து உட்கொள்ளலாம்; இதற்குப் பெயர் 'மஹாராஸ்நாதி க்வாதம்' என்றும், கர்ப்போத்பத்தி செய்யக்கூடிய சக்தி இவ்வெளஷதத்திற்கு உண்டென்றும் பிரம்மாவினுலேயே கூறப்பட்டிருக்கிறது. மேலும் இது ஸர்வாங்கங்களிலும் நடுக்கமுண்டாவது, கூன் விழுதல், பார்ச்வவாயு, அபபாஹுகம், க்ருத்ரஸீ, ஆமவாதம், யானைக்கால், அபதாநகம், அந்த்ரவ்ருத்தி யென்னும் குடலிறக்கம், வயிற்றுப்பொருமல், கால் முழங்கால் இவற்றைப் பற்றிக்கொண்டு உண்டாகும் வாதரோய்கள், அர்திதம், சுக்ல ஸம்பந்தமான ரோகங்கள், ஆண்குறியைப் பற்றிய வியாதிகள், மலட்டுத்தனம், யோனிஸம்பந்தமான பிணிகள் இவற்றைப் போக்கும். 90—96.

ஏரண்ட மூலாதி கீவாதம் :—ஆமணக்கு, மாதுளை, நெரிஞ்சி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, கல்லுருவி, பில்வம் இவற்றின் வேர்களால் பக்குவம் செய்த கஷாயத்தில் ஆமணக்கெண்ணெய், பெருங்காயம், யவக்ஷாரம், இந்துப்பு இவற்றைச் சேர்த்து உபயோகித்தால் ஸ்தனங்கள், தோள்கள், இடுப்பு, ஆண்குறி, இருதயம் இவற்றிலுண்டாகும் வலி நிவ்ருத்தியாகும். 97, 98.

மூன்றவது சுண்ட்யாதி கீவாதம் முதலியது :—சுக்கு, ஆமணக்கு வேர் இவற்றின் க்வாத்தத்திலாவது, வெட்பாலரிசியின் க்வாதத்திலாவது பெருங்காயத்தையும் கல்லுப்பையும் சேர்த்து உட்கொண்டால் வாத சூலை நிவ்ருத்தியாகும். 99.

தீரிபாலாதி கீவாதம் மூன்றவது :—தரிபலை, கொன்றை இவற்றின் கஷாயத்தில் சர்க்கரையும் தேனும் கலந்துபயோகித்தால் இரத்த பித்தம், சரீரவேக்காடு, பித்தசூலை இவை நிவ்ருத்தியாகும். 100.

ஏரண்ட மூல கீவாதம் இரண்டாவது :—இரண்டு பலம் ஆமணக்கு வேரை எட்டு பங்கு ஜலத்தில் சேர்த்து க்வாதம் காய்ச்சி, யவக்ஷாரமும் கூட்டி உட்கொள்ள, பக்கசூலை, இருதய சூலை இவை நீங்கும். 101.

தசமூல கீவாதம் மூன்றவது :—தசமூலங்களைச் சேர்த்து செய்த க்வாதத்தில் யவக்ஷாரமும் இந்துப்பும் சேர்த்து உட்கொண்டால் இருதய சூலை, குன்மம், வயிற்றுநோய், காஸம், ச்வாஸம் இவை தீரும். 102.

ஹரீதகியாதி கீவாதம் இரண்டாவது:—கடுக்காய், காஞ்சொறி, பச்சிலை, நெரிஞ்சி, கல்லுருவி இவற்றைக் கஷாயமிட்டு, தேன் சோத்து உட்கொண்டால் மலபந்தம், எரிச்சலுடனும் வலியுடனும் கூடிய நீர்ச்சுருக்கு இவை நிவ்ருத்தியாகும். 103½.

---

1. **யோகராஜகுக்குலு :**—இதைப்பற்றி இந்த கண்டம் 7-ம் அத்தியாயம் பார்க்க.

2. **அஜமோதாதி சூர்ணம் :**—இதே கண்டத்தில் 6-வது அத்தியாயத்தில் விவரம் பார்க்க; அஜமோதாதி மாத்திரையும் செய்யலாம்.

வீரதர்வாதிகண கீவாதம் :—விளாமிச்சை,[1] புல்லுருவி, ஞாழல், செங்குறிஞ்சி, மஞ்சட்குறிஞ்சி, வாடாக்குறிஞ்சி, தர்ப்பை, நெட்டிக்கோரை, கொறுக்கை, பேய்க்கரும்பு, கொக்குமந்தாரை, முன்னை, மருள், கல்லுருவி, பெருவாகை, நெரிஞ்சி, நாயுருவி, தாமரை, பிரமியிலை இல்வோஷதிகளின் சேர்க்கை 'வீரதர்வாதி' என்னும் சிறந்ததோர் கணமாகக் கூறப்படும்; இவற்றின் க்வாதம் சர்க்கரா, அச்மரீ, மூத்திரக்ருச்சிரம், மூத்திராகாதம் என்கிற மூத்திர வியாதிகளையும், ஸகல வாதரோகங்களையும் போக்கும். 104—106½.

ஏலாதி கீவாதம் :—ஏலக்காய், அதிமதுரம், நெரிஞ்சி, அரேணுகம், ஆமணக்கு வேர், ஆடாதோடை, திப்பிலி, கல்லுருவி இவற்றைச் சேர்த்து நன்றாக க்வாதம செய்து, சிலாஜது பஸ்மமும் சேர்த்து உட்கொண்டால் சர்க்கரா, அச்மரீ, மூதத்திர க்ருச்சிரம் இவை நீங்கும். 107—108.

கோக்ஷுர க்வாதம் :—நெரிஞ்சியை ஸமூலமாக க்வாதம் செய்து சர்க்கரை, தேன் இவற்றைச் சேர்த்து உட்கொள்ள மூத்திர க்ருச்சிரங்களும், உஷ்ணவாதமும் நிவருத்தியாகும். 109.

த்ரிபலாதி கீவாதம் நான்காவது :—த்ரிபலை, மரமஞ்சள், கோரைக் கிழங்கு, தேவதாரு இவற்றின் க்வாதம் தேன் கலந்து உட்கொள்ளப்படி மாஞல் பிரமேஹங்களைப் போக்கும். 109½.

வத்ஸகாதி கீவாதம் இரண்டாவது :—வெட்பாலரிசி, த்ரிபலை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கொடிமாதுளை இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயத்திலும் தேன் கலந்து உட்கொண்டால் பிரமேஹங்கள் தீரும். 110.

த்ரிபலாதி கீவாதம் ஐந்தாவது :—த்ரிபலை, கோரைக்கிழங்கு, மரமஞ்சள், பேய்த்தும்மட்டி இவற்றைக் கஷாயமிட்டு, மஞ்சட்பொடியைத் தூவி யுபயோகித்தால் ஸகலப் பிரமேஹங்களும் நீங்கும். 111.

தார்வ்யாதி கீவாதம் :—மரமஞ்சள், இரஸாஞ்ஜநம்,[2] கோரைக் கிழங்கு, சேராங்கொட்டை,[3] பில்வம், ஆடாதோடை, நிலவேம்பு இவற்றைக் கஷாயமிட்டு வடிக்கட்டி, ஆறியபிறகு தேன் கலந்து உட்கொண்டால் மஞ்சள், வெண்மை, கறுப்பு, சிவப்பு இவ்வித நிறங்களுடன் கூடியதும் வெகு வேதனையைத் தருவதுமான பிரதரம் என்கிற பெரும்பாடு நிவருத்தியாகும். 112½.

ந்யக்ரோதாதி கண கீவாதம் :—ஆல், பூவரசு, காட்டுமாமரம், வஞ்சி, இலந்தை, படுகரணை, அதிமதுரம், ப்ரியாளம், வெள்ளிலோத்தி, உதியமரம்,

1. 'வீரதரு' அல்லது 'வீரதாரம்' என்பது விழல், சேங்கொட்டை மரம், ஒரு வகை பில்வம், மருதை இவற்றிற்கும் பெயர்.

2. இரஸாஞ்ஜநம்—காசதுத்தம் அல்லது பாற்றுத்தம் என்று சிலர் கூறுகின்றனர். [மரமஞ்சங்களைக் கஷாயம்போல் காய்ச்சி அதிலிருந்து ஸத்துவம்போல எடுக்கப்படும் ஒருவித அஞ்ஜநம் இரஸாஞ்ஜநம் எனப்படுகிறது; ஆனல் மரமஞ்சளும் இக்கஷாய முறையில் தனியாகக் கூறப்பட்டிருப்பதால், இரஸாஞ்ஜநம் என்பது இங்கு வேறொரு பொருள்.]

3. இங்கு சேராங்கொட்டையை முதலில் சுத்தி செய்தே ஔஷதத முறையில் சேர்க்கவேண்டும். [கொட்டைகளை சாணிப்பாலில் மூன்றுநாள் ஊறவைத்து, கழுவி, பிறகு புதிய சாணிப்பாலில் இரண்டு மூன்று யாமங்கள் கொதிக்கவைத்து பிறகு நன்றாகக் கழுவி உலர்த்தி யெடுக்கவும்.]

அத்தி, அரசு, இலுப்பை, கல்லாலை, யானை கொந்தி, தும்பை, சிறுநாவல், பெருநாவல், மா, கடுக்காய், கடம்பு, மருதமரம், சேராங்கொட்டை இவற்றின் கூட்டுக்கு 'ந்யக்ரோதாதி கணம்' என்று பெயர்; இவையனைத்தையுமோ அல்லது இவற்றுள் கிடைக்கக்கூடியவைகளையோ சேர்த்து க்வாதம் செய்து உபயோகிக்கலாம். க்ராஹீ என்கிற குணம் இக்கஷாயத்திற்கு மிகுதியாயுண்டு; வ்ரண்யமாகவும்[1] உபயோகமாகும்; ஒடிந்துபோன அவயவங்களைக் கூட்டி அங்குள்ள விரணத்தையும் ஆற்றும்; யோனி ஸம்பந்தமான தோஷங்கள், அழற்சி, மேதோரோகம், மேஹரோகங்கள், விஷ ஸம்பந்தமான கோளாறுகள் இவற்றையும் நீக்கும். 113—116½.

பில்வாவதி கீவாதம் மூன்றவது :—பில்வம், முன்னை, பெருவாகை, பெருங்குமிழன், பாதிரி இவற்றைக் கஷாயமிட்டு, அதில் தேன் கலந்து உட்கொள்ள மேதோ தோஷம் தீரும். 117½.

ஆறவது த்ரிபலா கீவாதம் முதலியது :—த்ரிபலாக்வாதத்தில் தேன் கூட்டிப் பருகினலும், ஜலத்தை கொதிக்கவைத்து ஆற்றி, அதில் தேன் கூட்டிப் பருகினலும் மேதோரோகம் தீரும். 118½.

சவ்யாதி கீவாதம் :—சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, தேவதாரு இவற்றைச் சேர்த்துக் கஷாயமிட்டு, சிவதை வேர்ப்பொடியைத் தூவி, பசு மூத்திரம் சேர்த்து உபயோகித்தால் மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய வியாதிகளும் நீங்கும். 119½.

புனர்நவாதி கீவாதம் இரண்டாவது :—சாறடை, சீந்தில், தேவதாரு, கடுக்காய், சுக்கு, இவற்றின் க்வாதத்தில் பசு மூத்திரம் சேர்த்து, குங்கிலியத் தூளையும் தூவி உபயோகித்தால் உடலெங்குமுள்ள வீக்கமும், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகளும் நீங்கும். 120½.

ஹரீதகியாதி கீவாதம் மூன்றவது :—கடுக்காய், செம்மரம் இவற்றை க்வாதம் செய்து, யவக்ஷாரம, திப்பிலி இவற்றைப் பொடித்துச் சேர்த்து விடியற்காலத்தில் உட்கொண்டுவந்தால், யக்ருத்தரம்,[2] ப்லீஹோதரம்[3], குன்மம், மஹோதரம் இவை நிவருத்தியாகும். 121½.

புனர்நவாதி கீவாதம் மூன்றவது :—சாறடை, மரமஞ்சள், மஞ்சள், சுக்கு, கடுக்காய், சீந்தில், சித்திரமூலம், கண்டுபாரங்கி, தேவதாரு இவைகளைக்கொண்டு பக்குவம் செய்த க்வாதமானது கை, கால், வயிறு, முகம் இவற்றிற் பரவிய வீக்கத்தைப் போக்கும். 122—123.

தீரிபலா கீவாதம் ஏழாவது :—த்ரிபலா க்வாதத்தில் பசு மூத்திரம் கூட்டி உட்கொள்ள வாத கபங்களாலான அண்ட வீக்கம் தீரும். 124.

ராஸ்நாதிகீவாதம் மூன்றவது :—சிற்றரத்தை, சீந்தில், சிற்றமுட்டி, அதிமதுரம், நெரிஞ்சி, ஆமணக்குவேர் இவற்றைக் கஷாயமிட்டு, ஆமணக்கெண்ணெயைச் சேர்த்து உபயோகித்தால் அந்த்ர வ்ருத்தி யென்னும் பீஜத்திலுண்டாகும் குடலிறக்கம் தீரும். 125.

காஞ்கீநார கீவாதம் முதலியது :—செம்தமந்தாரப் பட்டையின் க்வாதத்தை சுக்குப்பொடியுடன் உபயோகித்தாலும், மாவலிங்கம் பட்டையின் க்வாதத்தில் தேன் கலந்துபயோகித்தாலும் கண்டமாலை தீரும். 126.

1. வ்ரண்யம்—விரணங்களை ஆற்றும் குணம்.
2. யக்ருத்தரம்—கல்லீரல் வீங்கிப்போயுண்டாகும் வியாதி.
3. ப்லீஹோதரம்—மண்ணீரல் வீங்கிப்போயுண்டாகும் வியாதி.

கோட கீவாதம் :—பிராய்மரப்பட்டையின் க்வாதத்தைப் பசு மூத்திரத்துடன் உட்கொள்ள யானைக்காலும் மேதோரோகமும் தீரும். 127.

நான்காம் புநர்நவாதி கீவாதமும் சிக்கு கீவாதமும் :—சாறடை, மாவலிங்கை இவற்றின் க்வாதம் அந்தர்விர்தியைப் போக்கும்; முருங்கப்பட்டையின் க்வாதத்தில் பெருங்காயம், இந்துப்பு, இவற்றைப் பொடித்துச் சேர்த்து உட்கொண்டாலும் அந்தர்விர்தி நிவாரணமாகும். 128.

வருணாதி கண கீவாதம் :— வருணதிகணக்வாதத்தில் ஊஷகாதி கணத்தின் கல்கத்தைச் சேர்த்து, பக்குவமாகாமல் கடுநிலைமையிலிருக்கும் அந்தர்விர்தியை குணப்படுத்துவதற்காக உட்கொள்ளலாம். வருணதி கணமாவது :—மாவலிங்கை, கொக்குமந்தாரை, பில்வம், நாயுருவி, சித்திரமூலம், முன்னை, அரணி, வெண் முருங்கை, கறுமுருங்கை, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, செங்குறிஞ்சி, வெண்குறிஞ்சி, கறுங்குறிஞ்சி, மருள், ஆடுதீண்டாப்பாளை, நிலவேம்பு, வேலிப்பருத்தி, கோவை, புங்கு, தண்ணீர்விட்டான். இந்த கணத்தின் க்வாதம் அந்தர்விர்தியைப் போக்குவதோடு கபத்தின் கோளாறுகளையும், மேதோரோகத்தையும், குன்மத்தையும், தலைநோயையும் நிவருத்தி செய்யும். 129—132.

கதிராதி கீவாதம் :—கருங்காலி, திரிபலை இவற்றின் க்வாதத்தில் எருமை நெய்யும் வாய்விடங்கப் பொடியும் சேர்த்து உபயோகித்தால் பகந்தரம் தீரும். 133.

படோலாதி கீவாதம் ஐந்தாவது :—பேய்ப்புடல், திரிபலை, வேம்பு, கருங்காலி, நிணிசை இவைகளை க்வாதம் செய்து, குங்கிலியம் சேர்த்து உபயோகிக்க ஸகலவித உபதம்சங்களும் குணமாகும். 134.

சுடீச்சியாதி கீவாதம் ஏழாவது :—சீந்திற்கொடி, ஆமணக்குவேர், ஆடாதோடை இவற்றின் க்வாதத்தில் ஆமணக்கெண்ணெயைச் சேர்த்து உட்கொண்டால் தேஹமெங்கும் பரவியிருக்கும் வாதரக்தம் தீரும். 135.

படோலாதி கீவாதம் ஆறாவது :—பேய்ப்புடல், திரிபலை, கடுகரோகிணி, சீந்திற்கொடி, தண்ணீர்விட்டான் இவற்றின் க்வாதத்தை யுட்கொண்டால் அழற்சியுடன் கூடிய வாதரக்தம் போகும். 136.

தாத்ரியாதி கீவாதம் :—நெல்லிப்பருப்பு, காசுக்கட்டி[3] இவற்றின் க்வாதத்தில் காட்டுஜீரகப் பொடியைச் சேர்த்து[3] தினந்தோறும் உட்கொண்டு, பத்தியமான உணவுகளையும் புஜித்து வந்தால் வெண்குஷ்டம் தீரும். 137.

மஞ்ஜிஷ்டாதி கீவாதம் :—மஞ்ஜிஷ்டி, திரிபலை, கடுகரோகிணி, வசம்பு, மரமஞ்சள், சீந்தில், வேம்பு இவற்றின் கஷாயம் வாதரக்தத்தைப் போக்

1. ஊஷகாதிகணம்—பூநீறு, மயில்துத்தம், பெருங்காயம், பசுமையான அன்னபேதி, வெண்மையான அன்னபேதி, இந்துப்பு, சிலஜாது இவற்றின் சேர்க்கை.

2. 'கதிரஸாரத்தை' காசுக்கட்டியென்றும், சிலர் கருங்காலிப் பிசினென்றும் கூறுவர்.

3. அவல்குஜம் என்பதைக் காட்டுஜீரகம் (vernomia anthel mintica) என்றும், கார்ப்போகரிசி யென்றும் கூறுவர். ஆட்லாங்கொடி யென்றும் சிலர்.

கும்; சிரங்குகள், கபாலிகமென்ற குஷ்டநோய், ரக்தமண்டலமென்னும் குஷ்டம் இவைகளும் குணமாகும். 138½.

மஞ்ஜிஷ்டாதிகண கீவாதம் :—மஞ்ஜிஷ்டி, கோரைக்கிழங்கு, குடசப்பாலையிலை, சீந்தில், கோஷடம், சுக்கு, கண்டுபாரங்கி, கண்டங்கத்திரி, வசம்பு, வேம்பு, மஞ்சள், மரமஞ்சள், திரிபலை, பேய்ப்புடல், கடுகரோகிணி, மருள், வாய்விடங்கம், நிணிசை, சித்திரமூலம், தண்ணீர்விட்டான், கொன்றை,[1] திப்பிலி, வெட்பாலரிசி, ஆடாதோடை, கரிசிலாங்கண்ணி, தேவதாரு, வட்டத்திருப்பி, கருங்காலி, செஞ்சந்தனம், சிவதை, மாவலிங்கை, நிலவேம்பு, கார்போகரிசி, பச்சிலை, பிராய், மஹாநிம்பம்,[2] புங்கு, அதிவிடயம், குருவேர், தும்மட்டி, அறுகம்புல், கன்னரி, பர்ப்பாடகம் இவற்றின் சேர்க்கைக்கு "மஞ்ஜிஷ்டாதி கணம்" என்று பெயர்; இக்கணத்திற் கூறியுள்ள பதார்த்தங்களைச் சேர்த்து பக்குவம் செய்த க்வாதத்தை திப்பிலிப்பொடியையும், குங்கிலியப் பொடியையும் சேர்த்து உட்கொண்டால் பதினெட்டு வித குஷ்டங்கள், வாதரக்தம், அர்திதம், உபதம்சம், யானைக்கால், ப்ரஸுப்தியென்னும் உர்ணச்சியின்மை, பார்ச்வவாயு, மேதோரோகம், நேத்திரரோகங்கள் இவை குணமாகும்- 139—144½.

ஷடங்க கீவாதம் :—திரிபலை, நிலவேம்பு, மஞ்சள், வேம்பு, சீந்தில், வெல்லம் இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த கஷாயம் 'ஷடங்க க்வாதம்' எனப்படும்; இது தலை, புருவம், கன்னம், காது இவற்றிலுண்டாகும் வலி, ஒற்றைத்தலைவலி, ஸூர்யாவர்த்தம், சங்கபேதம், தந்தபாதம், மற்றும் சில பல் நோய்கள், இராக்கண், படலரோகங்கள், சுக்லம், மற்றுமுள்ள கண்ணோய்கள் இவற்றை நிவருத்தி செய்யவல்லது. 145—147.

வாஸாதி கீவாதம் ஐந்தாவது :—ஆடாதோடை, சுக்கு, சீந்தில், மரமஞ்சள், செஞ்சந்தனம், சித்திரமூலம், நிலவேம்பு, வேம்பு, கடுகரோகிணி, பேய்ப்புடல், திரிபலை, கோரைக்கிழங்கு, யவதானியம், வெட்பாலரிசி, குடசப்பாலையிலை இவற்றின் க்வாதம் ஸகல நேத்திர ரோகங்களையும் போக்கும்; மேலும் தொண்டைக்கம்மல், பீநஸம், ச்வாஸரோகம், உரக்ஷதம் இவ்வியாதிகளையும் தீர்க்கும். 148—149.

தூதீச்சியாதி கீவாதம் எட்டாவது:—சீந்திற்கொடி, திரிபலை இவற்றை க்வாதம் செய்து, திப்பிலிப் பொடியைச் சேர்த்து, தேன் கலந்து தினந்தோறும் உட்கொள்ள ஸகல நேத்திர ரோகங்களும் நீங்கும். 150.

அச்வத்நாதி கீவாதம்:-அரசு, அத்தி, பூவரசு, ஆல், நீர்வஞ்சி இவற்றின் க்வாதத்தை விரணங்களைக் கழுவ உபயோகிக்கலாம்; இதனால் ஸாதாரண விரணங்கள், வீக்கம், உபதம்சம் இவையும் நிவருத்தி யாகும். 151.

ப்ரமத்யா முதலிய கஞ்சி வகைகள்.

ப்ரமத்யா முறை:—ஒரு பலம் சரக்கை சூர்ணம் செய்து, எட்டு பங்கு ஜலத்தில் க்வாதம்போல் காய்ச்சி யெடுக்கவும்; இதற்கு 'ப்ரமத்யா' எனப் பெயர். இதை உபயோகிக்கும் அளவு இரண்டு பலம். 152.

1. 'த்ராயமாணை' என்பதை ஹிமாலயத்திலுண்டாகும் அப்பெயர் கொண்ட செடியென்று சிலரும், கழற்சிச் செடியென்று சிலரும் கூறுவர். கொன்றையென்றும் சிலர்.

2. மஹாநிம்பம்—ஒருவித வேம்பு. (நூற்றுக்கணக்கான வயதுள்ள வேப்பமரம் என்று கூறுகிறார்கள்.)

முஸ்தாதி பீமாத்யா:—கோரைக் கிழங்கும் வெட்பாலரிசியும் சேர்த்து *பீமத்யா* என்கிற கஞ்சி பக்குவம் செய்யவும்; இதை ஆறவைத்து, தேன் சேர்த்து இரண்டு பலம் அளவில் உட்கொள்ள இரக்தாதிஸாரம் நீங்கும். 153.

யவாகூ முறை:—நாலு பலம் உணவு அல்லது ஔஷதச் சரக்கை அறு பத்திஞலு பலம் ஜலத்தில் சேர்த்து, அரைவாசி குறையுமளவும் காய்ச்சி யெடுக்கப்படும் குழம்பான திரவம் 'யாவகூ' எனப்படும். 154.

ஆம்ராத்யவாதி யவாகூ:—மாம்பட்டை, ஆம்ராதக மரப்பட்டை,[1] நாவற்பட்டை இவற்றைக் கஷாயமிட்டு, அதில் சம்பா அரிசியை உடைத்துச் சேர்த்து யவாகூவாகப் பக்குவம் செய்து உட்கொள்ள கிரஹணீரோகம் தீரும். 155.

யூஷம் செய்யும் முறை:—ஒரு கஷாயத்தில் பிரதான வஸ்து ஒரு பலமும், சுக்கு, திப்பிலி இவை அரைக்கால் பலமும், ஒரு பிரஸ்தம் ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி யெடுக்கப்படும் கஞ்சி 'யூஷம்' எனப்படும். 156.

ஸப்தமூஷ்டிக யூஷம்:—கொள், யவதானியம், இலந்தம் பழம், பயறு, முள்ளங்கி, கிரந்திதகரம், சுக்கு, தனியா இவற்றுலான யூஷத்தை யுபயோகிக்க கபம், வாதங்களின் கோளாறுகள், ஸந்நிபாத ஜ்வரம், ஆமவாதம் இவை தீரும்; தொண்டை, வாய், மார்பு இவற்றிலுள்ள மலங்களே வெளிப்படுத்தி அவற்றிற்கும் சுத்தியைத் தரும்; இக் கஷாயத்திற்கு 'ஸப்தமுஷ்டிக யூஷம்' என்று பெயர். 157—158.

பேயா:—ஒரு பலம் பதார்த்தத்தைப் பொடித்து, அறுபத்திஞலு பலம் ஜலத்தில் பக்குவம் செய்து, அரைவாசி குறையும்படி காய்ச்சி யெடுத்து, உணவு முதலியதுடன் உட்கொள்ளலாம்; இதை 'பேயா' எனக் கூறுவர். 159.

உசீராதி பேயா:—வெட்டிவேர், பர்ப்பாடகம், விளாமிச்சை வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, சந்தனம் இவற்றுல் பேயாவைப் பக்குவம் செய்து, குளிர்ந்த பிறகு, தாஹமும் ஜ்வரமும் நிவருத்தியாவதற்கு உபயோகிக்கலாம். 160.

உஷ்ணோதகம்:—ஜலத்தை எட்டில் ஒரு பங்காகவாவது, நாலில் ஒரு பங்காகவாவது, அரைவாசியாகவாவது, கொதிவரும் வரையிலுமாவது காய்ச்சி யெடுக்க அது 'உஷ்ணோதகம்' எனப்படும். உஷ்ண ஜலத்தை இரவில் பருகிவர கபவிகாரம், ஆமவாதம், மேதோரோகம், காஸம், ச்வாஸம், ஜ்வரம் இவை நீங்கும்; மூத்திரப்பையிலுள்ள தோஷங்களையும் இது போக்கும்; தீபநசக்தியும் இதற்குண்டு. 161—162.

க்ஷீரபாகவிதி:-ஔஷதச் சரக்குக்கு எட்டு மடங்கு பாலும், பாலுக்கு நான்கு மடங்கு ஜலமும் சேர்த்து, சேர்க்கப்பட்ட பால் மாத்திரம் மிகுந்திருக்குமாறு காய்ச்சி யெடுக்கவும். ஔஷதங்கள் சேர்க்காமல் வெறும் பாலை மாத்திரம் மேற் கூறியபடி ஜலம் சேர்த்துக் காய்ச்சி, அன்னம் முதலியதற்குப் பதிலாக ஆஜீர்ண வயிற்றுவலியில் உட்கொள்ளலாம். 163.

---

1. *ஆம்ராதகம்*—தமிழில் மரிமாஞ்செடி யென்கிறார்கள். ஆங்கிலத்தில் Spondias Mangifera என்று கூறப்படுகிறது.

பஞ்சமூலீ க்ஷீரம்:—பஞ்சமூலங்களைச்[1] சேர்த்து முன்போல் பாலைப் பக்குவம் செய்து உட்கொண்டுவந்தால், அதுவே நாட்பட்ட ஜ்வரங்களையும், ச்வாஸம், காஸம், தலைநோய், பக்கச்சூலை, பீநஸம் இவ்வுபத்திரவங்களுடன் கூடிய ஜ்வரத்தையும் நிவருத்தி செய்யும். 164—164½.

த்ரிகண்டகாதி க்ஷீரம்:—சிறுவழுதுணை, சிறுகாஞ்சொறி, பூனைக்காலி, சிற்றரமுட்டி, கண்டங்கத்திரி, வெல்லம், சுக்கு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த பால் கபஜ்வரம், மலபந்தம், நீர்ச்சுருக்கு இவற்றை நீக்கும். 165½.

அன்னம் பக்குவம் செய்யும் வகை

இனி அந்தந்த ரோகங்களுக்கு ஏற்ற உணவுகளைப் பக்குவம் செய்யும் வகைகளும் இங்கு சுருங்கக் கூறப்படும்.

யவாகூ அல்லது க்ருஸரா:—அரிசி, பயறு, உளுந்து, எள் இவற்றில் எதையாவது எடுத்துப் பொடித்து, அதற்கு ஆறு பங்கு ஜலம் சேர்த்துக் குழம்பாகக் காய்ச்சவேண்டும்; இதற்கு 'யாவகூ' அல்லது 'க்ருஸரா' எனப் பெயர். ரோகிகளுக்கு இது அனுகூலமானது; க்ராஹி, பல்யம், தர்ப்பணம், வாதஹரம் என்கிற குணங்களுடையது. 166—167½.

விலேபீ:—முன்போலவே அரிசி முதலியதை யுபயோகித்து, அவற்றிற்கு நாலு பங்கு ஜலம் சேர்த்து, யவாகூவைவிட இன்னும் கனமாகப் பக்குவம் செய்ய, அவ்வுணவு 'விலேபீ' எனப்படும்; இதற்கு ப்ருஹ்மணம், தர்ப்பணம், ஹ்ருத்யம், மதுரமாயிருப்பதால் பித்தஹரம் என்கிற குணங்களுண்டு. 168½.

பேயாவும் யூஷமும்:—அதிக திரவமாகவும் சொற்ப அவிழுமுள்ளதுமான பேயாவென்கிற மற்றொரு விதம் கஞ்சியுண்டு; முற் கூறிய அரிசி முதலிய பதார்த்தங்களில் ஒன்றை பதிஞலு பங்கு ஜலம் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; யூஷமென்னும் கஞ்சி பேயாவைப் பார்க்கினும் சிறிது கனமாயிருக்கும். பேயா யூஷத்தினும் குணத்தில் இலகுவானது; க்ராஹி என்கிற குணமும், தாதுபுஷ்டியைத் தரும் சக்தியும் அதற்குண்டு; யூஷமும் எளிதில் ஜீர்ணமாகும்; இலகு குணமுள்ளது; பல்யம், கண்ட்யம்,[2] கபஹரம் என்கிற குணங்களுமுடையது. 169—170½.

மண்டம்:—நாலு பலம் அரிசியைப் பதிஞலு மடங்கு ஜலத்தில் பக்குவம் செய்து, அதிலிருந்து அவிழைத் தவிர்த்து கஞ்சியை மாத்திரம் வடித்துக் கொள்ளவேண்டும்; அவ்வாறு பக்குவம் செய்து வடித்தெடுத்த கஞ்சி வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமாகும்; மதுரமாகவுமிருக்கும். இதற்கு 'மண்டம்' எனப் பெயர். இந்த மண்டத்தில் சுக்கும் இந்துப்பும் சேர்த்துபயோகித்தால் சிறந்த பாசந தீபநமாகவு மிருக்கும். 171—172½.

அஷ்டகுண மண்டம்:—தனியா, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு இவற்றையும், மோரையும் மேற்கூறிய மண்டத்தில் சேர்த்து, பெருங்காயமும் எண்ணெயும் பொரித்துச் சேர்த்து பக்குவம் செய்தால் அதற்கு

---

1. சிறுமல்லி, பெருமல்லி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெரிஞ்சில் இவ்வைந்தும் 'பஞ்சமூலம்' எனப்படும்.

2. *கண்ட்யம்*—தொண்டைக் கம்மல் முதலியதைப்போக்கி, அதற்கு பலந்தரக் கூடியது.

'அஷ்டகுணமண்டம்' என்று பெயர். இதற்கு தீபநம், வஸ்திசோதநம்,[1] ரக்தவர்த்தநம், ஆயாஸம் தீர்த்தல், ஜ்வரஹரம், ஸந்நிபாதஹரம் என்கிற குணங்களுண்டு. 173—174½.

வாட்யமண்டம் :—யவதானியத்தை நன்றாகக் கழுவியுலர்த்தி, நன்கு வறுத்து, முன்போலவே பக்குவம் செய்ய அதற்கு 'வாட்யமண்டம்' எனப் பெயர்; அதற்கு கபபித்தஹரம், கண்ட்யம், ரக்தபித்த சோதநம் என்கிற குணங்களுண்டு. 175½.

லாஜமண்டம் :—நெற்பொறிகளாலாவது, வறுத்த அரிசியிளுலாவது முன்போல் பக்குவம் செய்தால் அதற்கு 'லாஜமண்டம்' என்று பெயர்; இதுவும் கபபித்தஹரம், க்ராஹி, தாஹ ஹரம், ஜ்வர ஹரம் என்னும் குணங்களுடையது. 176.

மூன்றும் அத்தியாயம்

பாண்ட கல்பனை

பாண்டம் :—ஒருபலம் கஷாயச் சரக்கை நன்றாக இடித்து, நாலு பலம் கொதிக்கும் ஜலத்தில் சேர்த்து, சிறிது மூடிவைத்து, வஸ்திரத்தினுல் மட்பாத்திரத்தில் வடிக் கட்டவேண்டும். இது 'பாண்டம்' அல்லது சூர்ணத்ரவம் எனப்படும். இதை உட்கொள்ளும் அளவு இரண்டு பலம். க்வாதத்தில் சேர்த்த மாதிரியாகவே பாண்டத்திலும் தேன், சர்க்கரை, வெல்லம் இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். 1—2.

மதூக புஷ்பாதி பாண்டம் :—இலுப்பைப்பூ, அதிமதுரம், சந்தனம், ஈச்சம் பழம், தாமரைத்தண்டு, தாமரைப்பூ, வெள்ளிலோத்தி, பெருங்குமிழன், நாககேஸரம், த்ரிபலை, நன்னரி, திராக்ஷை, நெற்பொரி இவற்றை இடித்து, வெந்நீரில் சேர்த்து, சிறிது நேரத்திற்கெல்லாம் வடிக்கட்டி, சர்க்கரையும், தேனும் கலந்து உட்கொள்ளலாம்; இது 'மதூகபுஷ்பாதி பாண்டம்' என்படும். அல்லது மேற்கூறிய சரக்குகளைச் சேர்த்தே சீதகஷாயமும்[2] பக்குவம்பண்ணி உட்கொள்ளலாம். இவ்வஸ்துக்களை இவ்வாறு பாண்டமாகவோ சீதகஷாயமாகவோ செய்து உபயோகிப்பதால் வாதபித்த ஜ்வரம், சரீர வேக்காடு, நாவறட்சி, மூர்ச்சை, மனக்கோளாறு, தலைச் சுற்றல், இரத்தபித்தம், வெறி இவை நிவருத்தியாவது நிச்சயம். 3—5.

ஆம்ரகீஸலயாதி பாண்டம் :—மாங்கொழுந்து, நாவற்கொழுந்து, ஆலம்விழுது, வெட்டிவேர் இவற்றாலான பாண்டத்தில் தேன் சேர்த்து உட்கொள்ள ஜ்வரம், நாவறட்சி, வாந்தி, அதிஸாரம், பலமான மூர்ச்சை இவை குணமாகும். 6½.

மதூக புஷ்பாதி பாண்டம் இரண்டாவது :—இலுப்பைப்பூ, பெருங்குமிழன், செஞ்சந்தனம், வெட்டிவேர், தனியா, திராக்ஷை இவற்றாலான பாண்டத்தை ஆறிய பிறகு சர்க்கரை சேர்த்து உபயோகிக்க நாவறட்சி, பித்தப்பிரகோபம், சரீரவேக்காடு, மூர்ச்சை இவை போகும். 7, 8.

---

1. வஸ்திசோதநம்—மூத்திரப்பையிலுள்ள தோஷங்களையும், மூத்திரம் சிக்கிக்கொள்வதையும் போக்கக்கூடியது.
2. சீதகஷாயம்—அடுத்த அத்தியாயத்தில் விவரம் காண்க.

மந்த கல்பனை[1] :—மந்தம் என்கிற பாகமும் பாண்டத்தைச் சேர்ந்ததே யாம்; ஆகவே அவ்விஷயமும் இவ்வத்தியாயத்திலேயே கூறப்படுகிறது. பக்குவம் செய்யவேண்டிய ஒருபலம் பதார்த்தத்தைப் பொடிசெய்து, நான்கு பலம் குளிர்ந்த ஜலம் சேர்த்து, ஒரு மட்பாத்திரத்தில் நன்றாகக் கடைய வேண்டும்; மந்தத்தை இரண்டு பலம் அளவில் உட்கொள்ளலாம். 9½.

கார்ஜ்ஜராதி மந்தம் :—பேரீச்சங்காய், மாதுளம்பழம், திராக்ஷை, புளி, புளியாரத்தை, நெல்லிக்கனி, ஈச்சம்பழம் இவற்றால் பக்குவம் செய்த மந்தம் மதுபானத்தினுலான எவ் விகாரங்களையும் போக்கும். 10½.

மஸூராதி மந்தம் :— சிறுகடலைமாவில் தேனையும், மாதுளம் பழச் சாற்றையும் விட்டுக் கடைந்து உட்கொள்வதால் ஸந்நிபாதத்தினுலான வாந்தியும் சீக்கிரத்தில் நிவருத்தியாகும். 11½.

யவ மந்தம் :—வாற்கோதுமை மாவில் நெய்யும் குளிர்ந்த ஜலமும் சேர்த்துக் கடைந்து அதிகத் திரவமாசாமலும், அதிகக் கட்டியாயில்லாமலும் பக்குவம் செய்து உட்கொள்ள நாவறட்சி, தேஹவேக்காடு, இரத்தபித்தம் இவை தீரும். 12½.

நான்காம் அத்தியாயம்

ஹிம கல்பனை.

ஹிமம் அல்லது சீதகஷாயம் :—கஷாயத்திற்குபயோகமான பதார்த்தங்களைப் பொடித்து, ஒரு பலத்துக்கு ஆறு பலம் ஜலம் சேர்த்து, இரவில் ஊறவைத்து எடுக்கப்படும் கஷாயம் 'ஹிமம்' எனப்படும்; இதற்கு 'சீதகஷாயம்' என்றும் பெயர்.[2] எல்லா ஹிமகஷாயங்களையும் உட்கொள்ளும் அளவு பாண்டத்திற்குக் கூறியிருப்பது போலவே என்றறிக. 1½.

ஆம்ராதிஹிமம் :—மாம்பட்டை, நாவற்பட்டை, மருதம்பட்டை இவற்றை இடித்து, இரவில் ஜலத்தில் ஊறவைத்து, விடியற்காலத்தில் தேன் கலந்து உட்கொள்ள இரத்தபித்தம் தீரும். 2½.

மரிசாதி ஹிமம் :—மிளகு, அதிமதுரம், பேயகத்திக் கொழுந்து, கருநெய்தல் இவற்றாலான ஹிமகஷாயம் நாவறட்சியையும் வாந்தியையும் போக்கும். 3½.

நீலோத்பலாதி ஹிமம் :—கருநெய்தல், சிற்றாமுட்டி, திராக்ஷை, இலுப்பைப்பூ, அதிமதுரம், வெட்டிவேர், அல்லிகிழங்கு, பெருங்குமிழன், ஈச்சம்பழம் இவற்றின் ஹிமம் வாதபித்த ஜ்வரங்கள், பிதற்றல், தலைச் சுற்றல், வாந்தி, மூர்ச்சை, நாவறட்சி இவற்றைத் தீர்க்கும். 4—5½.

அம்ருதா ஹிமம் :—சீந்திற்கொடியினுலான ஹிமத்தைப் பருக நாட்பட்ட ஜ்வரம் நிவருத்தியாகுமெனக் கூறப்படுகிறது. 6.

வாஸா ஹிமம் :—ஆடாதோடையின் ஹிமகஷாயமானது காஸம், இரக்தபித்தம், ஜ்வரம் இவற்றைப்போக்கும். 6½.

(1) **தான்யக ஹிமம்** :—தனியாவின் ஹிமத்தைச் சர்க்கரை சேர்த்து, விடியற்காலத்திலுட்கொள்ள உடலின் உட்புற வேக்காடு, நாவறட்சி இவை

---

1. கடைந்து பக்குவம் செய்யப்படுவதால் மந்தம் எனப்படுகிறது.
2. தீயில் காய்ச்சாமல் குளிர்ந்த ஜலத்திலேயே பக்குவம் செய்யப் படுவதால் 'ஹிமம்' என்றும், 'சீதகஷாயம்' என்றும் பெயர்.

குணமாகும்; ஸ்ரோதஸ்ஸுகளும் சுத்தமாகும்.[1] (2) தான்யகாதி ஷிமம்:- தனியா, நெல்லிப்பருப்பு, ஆடாதோடை, திராக்ஷை, பர்ப்பாடகம் இவற்றின் ஷிமம் இரக்த பித்தம், ஜ்வரம், நாவறட்சி, க்ஷயம், இவற்றைப் போக்கும். 7—8½.

ஐந்தாம் அத்தியாயம்

கல்க கல்பனை.

கல்கம்:—ஈரமான அல்லது உலர்ந்த வஸ்துக்களை கல்லில் அரைத்தெடுத்தால் அது 'கல்கம்' எனப்படும்; இதற்கே 'ப்ரக்ஷேபம்', 'ஆவாபம்' என்றும் பெயர்; கல்கங்களை கால் பலம் அளவில் ஜலத்துடன் உட்கொள்ளலாம். 1.

கல்கத்தில் சாக்குகளைச் சேர்க்க அளவுகள்:—கல்கத்தில் தேன், நெய், எண்ணெய் இவற்றை இரு மடங்கு சேர்க்கவேண்டும்; சர்க்கரை, வெல்லம் இவற்றை கல்கத்திற்கு ஸமயெடை சேர்க்கவேண்டும்; வேறு திரவ பதார்த்தங்களை கல்கத்தினும் நான்கு மடங்காகச் சேர்க்கலாம். 2.

பிப்பலீவர்த்தமாநகம்:—முதல் நாள் மூன்று திப்பிலிகளையும், இரண்டாம் நாள் ஆறு திப்பிலிகளையும், மூன்றும் நாள் ஒன்பது திப்பிலிகளையும் கல்கமாக அரைத்து உபயோகிக்கலாம்; இவ்விதமே பத்தாம் நாள் வரையில் தினத்திற்கு மூன்று திப்பிலி விதமாக உயர்த்திக்கொண்டே வரவேண்டும்; சிலர் தினம் ஐந்து திப்பிலிகள் விதமும், சிலர் ஏழு திப்பிலிகள் விதமும் பத்து நாள் வரையில் அதிகப்படுத்தி வரலாம் என்பர்; இதை நிறுத்த வேண்டுமானலும், முதலில் உபயோகித்த கிரமப்படியே தினம் ஒன்றுக்கு மூன்று திப்பிலி விதமாகவோ, ஐந்து திப்பிலி விதமாகவோ, ஏழு திப்பிலி விதமாகவோ முறையே குறைத்துக்கொண்டுவரவேண்டும். இவ்விதம் முதல் பத்து நாட்கள் வரையில் தினந்தோறும் மூன்று மூன்றுகவோ, ஐந்தைந்தாகவோ திப்பிலிகளை அதிகமாயுபயோகித்து வந்து, அப்பால் பத்து நாட்கள் வரையில் கிரமமாகக் குறைத்து, இவ்வெளஷதப் பிரயோகத்தை இருபது நாட்களில் முடிக்கலாம்; இம் முறைக்கு 'பிப்பலீ வர்த்தமாநகம்' என்று பெயர். இதனால் பாண்டு ரோகம், வாதரக்தம், காஸம், ச்வாஸம், அரோசகம், ஜ்வரம், மஹோதரம், அர்சஸ், க்ஷயம், கபத்தின் கோளாறுகள், வாதரோகம், உரோக்கிரஹம் இவை நிவருத்தியாகும். 3-4½.

நிம்ப பத்ர கல்கம்:—வேப்பிலையை கல்கமாக அரைத்து, அதைத் தடவினால் விரணங்களிலுள்ள தோஷங்களைப் போக்கி அவற்றை ஆற்றும். இதே கல்கத்தை உட்கொள்ள வாந்தி, குஷ்டம், பித்தச்லேஷ்மக் கோளாறுகள், கிருமிகள் இவை தீரும். 5½.

மஹா நிம்ப ஜடாகல்கம்:—மிகவும் முதிர்ந்த வேப்பம் வேரின் பட்டையை யெடுத்து கல்கம் செய்துபயோகித்தால் க்ருத்ரஸீ என்கிற வாத ரோகம் குணமாகும். 6.

(1) ரஸோநகல்கம்:—வெங்காயத்தை மாத்திரம் கல்கமாகச்செய்து, நல்லெண்ணெயோடு கலந்து உட்கொள்ள உக்ரமான வாதரோகங்களும், விஷமஜ்வரங்களும் தீரும். 7.

1. ஸ்ரோதஸ்ஸுகள் 18-ம் பக்கம் பார்க்க.

(2) ரஸோநாதி கல்கம்:— நன்கு முதிர்ந்த வெங்காயத்தின் மேலுள்ள புறணிகளை விலக்கிப் பிளந்து, மத்தியிலுள்ள மூளையையும் விலக்கி, அதற்குள்ள துர்நாற்றத்தைப் போக்க இரவில் புளித்த மோரில் ஊறவைத்து, மறு நாள் அறைத்து, அட்டுப்பு, ஓமம், பொரித்த பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி, சுக்கு, மிளகு, ஜீரகம் இவற்றை ஸமயெடை சூர்ணம் செய்து, முற் கூறிய கல்கத்துக்கு ஐந்திலொரு பங்கு சூர்ணத்தை அக்கல்கத்துடன் கூட்டி, வேளைக்கு கால் பலம் வீதம் உட்கொள்ள ஜாடராக்னி விருத்தியாகும்; ஸ்திரீகளுக்கு மாதவிடாயிலுண்டாகும் கோளாறுகளும் நீங்கும்; தினந்தோறும் இக்கல்கத்தையுட்கொள்கையில் ஏரண்ட மூலக்வாதத்தை அநுபானமாகப் பருகிவந்தால் ஸர்வாங்கவாதமொகம், ஏகாங்கவாதரோகம், அர்திதம், அபதந்த்ரகம், அபஸ்மாரம், உன்மாதம், ஊருஸ்தம்பம், க்ருத்ரஸீ, மார்வலி, இடுப்புவலி, வயிற்றுவலி, கிருமிரோகம் இவை தீரும். அஜீர்ணமுண்டாகக்கூடிய உணவு முதலியவை, வெயில், கோபித்தல், அதிக ஜலபானம், பால், வெல்லம் இவையனைத்தையும் ரஸோநாதி கல்க முபயோகிப்பவர் எப்பொழுதும் விலக்கி விடவேண்டும்; மதுபானம், மாம்ஸபோஜனம், புளிப்பான உணவுகள் இவை பிரதிதினமும் உபயோகிக்கத்தகுந்தவையாம். 8-15.

பிப்பல்யாதி கல்கம்:—திப்பிலி, மோடி, சுத்தி செய்த சோரங் கொட்டை இவற்றின் கல்கத்தைத் தேனுடன் உபயோகித்தால் ஊருஸ்தம்பம் தீரும். 16.

விஷ்ணுக்ராந்த ஜடா கல்கம்:—விஷ்ணுக்கிராந்தி வேரின் கல்கத்தை சர்க்கரை, தேன், நெய் இவற்றில் கலந்துட்கொண்டு வந்தால் ஏழு நாட்களில் பரிணமசூலை நிவருத்தியாகும். 17.

சுண்ட்யாதி கல்கம்:—சுக்கு, எள், வெல்லம் இவற்றின் கல்கத்தைப் பாலுடன் உட்கொள்ள பரிணசூலையும் ஆமவாதமும் குணமாகும். 18.

அபாமார்கபீஜ கல்கம்:—நாயுருவி விதைகளின் கல்கத்தை அரிசி கழுவிய நீருடன் உட்கொண்டு வந்தால் இரக்தார்சஸ் என்னும் மூலரோகம் நிச்சயமாய் நிவருத்தியாகும். 19.

பதரீ மூலாதி கல்கம்:—இலந்தைவேர் கல்கத்தையும், எள்ளின் கல்கத்தையும் கலந்து தேனையும் பாலையும் சேர்த்து உபயோகிக்க இரக்தாதிஸாரம் தீரும். 20.

லாக்ஷா கல்கம்:—செவ்வரக்கை கல்கம் செய்து, கூஷ்மாண்ட ரஸத்துடன் கால் பலம் அளவில் உட்கொள்ள இரத்தக்குறைவு, உரக்ஷதம், க்ஷய ரோகம் இவை நிவாரணமாகும். 21.

தண்டீலீய ஜடா கல்கம்:—முள்ளுக்கீரையின் வேரை கல்கம் செய்து, அத்துடன் பால்தயிர்தமும் தேனும் கலந்து அரிசி கழுவிய நீரோடு உட்கொள்ள மாதவிடாயில் உண்டாகும் அதிதமான இரத்தப் பெருக்கு நிவருத்தியாம். 22

அங்கோல மூல கல்கம்:—அழிஞ்சில் வேரின் கல்கத்தைத் தேன் கலந்து அரிசி கழுவிய நீரோடு உபயோகித்தால் அதிஸாரமும் விஷஸம்பந்தமான தீங்குகளும் போகுமென்று அறியப்படுகிறது. 23.

---

1. ஏரண்ட மூலக்வாதம்—75-வது பக்கம் பார்க்க.

வந்த்யாகர்க்கோடகீ கல்கம் முதலியது :—பேய்த்தும்மட்டி வேர், பாதிரி வேர், பில்வவேர் இம்மூன்றில் ஏதேனும் ஒன்றை கல்கமாகச் செய்து, நெய்யுடன் உபயோகித்தால் ஸ்த்தாவரம் ஜங்கம் என்கிற இரண்டு வித விஷங்களாலுண்டாகும் [1] தீங்குகள் நிவாரணமாகும். 24.

அபயாதி கல்கம் :—கடுக்காய், இந்துப்பு, திப்பிலி, சுக்கு இவற்றின் கல்கத்தை யுபயோகித்தால் ஸந்நிபாதத்திலுண்டாகும் கெடுதிகள் தீரும். **அபயாதி கல்கம் இரண்டாவது** :—கடுக்காய், இந்துப்பு, சுக்கு இம்மூன்றையும் கல்கமாகச் செய்துட்கொள்ளலாம். இதற்கு தீபந பாசந குணங்களுண்டு. 25.

தீர்வ்ருதாதி கல்கம் :—கருஞ்சிவிதைவேர், பலாசம் விதை, குராசர்ஜி யோம், கம்பில்லம் என்கிற தாதுப்பொருள், [2] வாய்விடங்கம், வெல்லம் இவற்றை ஸமபாகமாகச் சேர்த்து கல்கமாகச் செய்து, புளித்த மோரோடு உட்கொள்ள வயிற்றில் சேர்ந்துள்ள எல்லா கிருமிகளும் ஒழியும். 26--26½.

நவநீதாதி கல்கம்,—வெண்ணெயையும் எள்ளையும் சேர்த்து கல்கம் செய்துபயோகித்தாலும், வெண்ணெய், சர்க்கரை, நாககேஸரம் இவற்றின் கல்கத்தையுட்கொண்டாலும் இரத்தார்சஸ் தீரும். 27½.

சுண்டீசலாடு கல்கம் முதலியது:—(1) இஞ்சியின் கல்கத்தை கடலைப் பருப்பின் யூஷத்துடனுவது, (2) கண்டங்கத்திரிக்காயின் கல்கத்தை மோருடனுவது உட்கொள்ள கிரஹணீ ரோகம் தீரும். 28½.

ஆறும் அத்தியாயம்

சூர்ண கல்பனை.

சூர்ணம் :—நன்கு உலர்த்தி யெடுத்த வஸ்துக்களை நன்றாகப் பொடி செய்து வஸ்திரகாளிதம் பண்ணி யெடுக்க அது 'சூர்ணம்' எனப்படும்; அதற்கே ரஜஸ், க்ஷோதம் என்றும் பெயர். சூர்ணங்களை யுபயோகிக்கும் பொதுப் பிரமாணம் கால் பலமாம். 1.

சூர்ணத்தில் சேர்க்க பதார்த்தங்களின் பொது அளவு :-சூர்ணத்தில் வெல்லத்தை ஸமயெடையாகவும், சர்க்கரையை இரண்டு மடங்காகவும் சேர்க்கவேண்டும்; சூர்ணங்களில் பெருங்காயத்தைப் பொரித்துச் சேர்த்தால் உபயோகிப்பவருகுக் குமட்டல் உண்டாகாமலிருக்கும். 2.

சூர்ணங்களுக்கு அநுபானம் பாவனை முதலியன :-சூர்ணங்களை லேஹ்யம்போல் உட்கொள்ள வேண்டுமானால், அவற்றுடன் நெய் முதலிய எந்தத் திரவபதார்த்தங்களையும் இரண்டு மடங்காக உபயோகிக்க வேண்டும்; சூர்ணங்களை திரவ பதார்த்தங்களில் கரைத்துப் பருகவேண்டுமானால், அத் திரவ பதார்த்தங்களைச் சூர்ணங்களினும் நான்கு மடங்கு அதிகமா யுபயோகிக்க வேண்டும். சூர்ணம், லேஹ்யம், குளிகைகள், கல்கம் இவற்றிற்கு அநுபானமாக உபயோகிக்கும் திரவ பதார்த்தங்களை வாதரோகங்களில் மூன்று பலமாகவும், பித்த ரோகங்களில் இரண்டு பலமாகவும், கபரோகங்களில் ஒரு பலமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரில் விடப்

1. ஸ்த்தாவர ஜங்கம விஷங்கள் 60—61-வது பக்கங்கள் பார்க்க.
2. கம்பில்லத்தை டாக்டர் நாட்கர்ணி என்பவர் குங்குமம் என்று எழுதுகிறார். குங்குமப்பூ என்று அவரது கருத்துப் போலும்.

பட்ட தைலம் நொடிப்பொழுதில் அந் நீரிலெங்கும் பரவி விடுவதுபோல் ஔஷதமும் அதுபான பலத்தினால் அங்கங்களில் நன்கு பரவுகின்றது. சூர்ணங்களை சில திரவபதார்த்தங்களில் ஊறவைப்பதுண்டு; அதற்கு பாவனையெனப் பெயர்; பாவனை செய்வதற்கான சூர்ணமனைத்தும் அமிழ்ந்து ஊறக்கூடிய அளவு திரவத்தில் அதைச் சேர்க்கவேண்டும்; இது சூர்ணங்களை பாவனை செய்ய பொதுப் பிரமாணமாம். 3—6.

ஆமலகாதி சூர்ணம்:-நெல்லிக்காய், கத்திரமூலம், கடுக்காய், திப்பிலி, இந்துப்பு இவற்றைக் கூட்டி சூர்ணம் செய்யவும். இது ஸர்வ ஜ்வரங்களையும், அரோசகத்தையும் நிவ்ருத்தி செய்யும்; கபஹரமாகவும், பேதநமாகவும், தீபந பாசநமாகவும் வேலை செய்யும். 7½.

பிப்பலி சூர்ணம் :—திப்பிலியை மாத்திரம் சூர்ணம் செய்து, தேன் கலந்து லேஹ்யம்போல் உட்கொள்ள காஸம், ஜ்வரம், விக்கல், ச்வாஸம், ப்லீஹரோகம் இவை தீரும்; கண்டத்திற்கு நல்ல வலிமை தரும். பாலர்களுக்கு மேற்கூறிய ரோகங்களில் இச் சூர்ணத்தை உபயோகிக்கலாம். 8½.

த்ரிபலா சூர்ணம் :—ஒரு கடுக்காய், இரண்டு தான்றிக்காய், நான்கு நெல்லிக்காய் இவற்றின் கூட்டுக்கு 'த்ரிபலை' எனப் பெயர். இந்த த்ரிபலையை சூர்ணம் செய்து உபயோகிக்க மேஹரோகங்கள், விக்கம், விஷம ஜ்வரம், குஷ்டம் இவை தீரும்; தீபநம், கபஹரம், பித்தஹரம், இரஸாயநம் என்கிற குணங்களும் இதற்குண்டு. இதே சூர்ணம் நெய் அல்லது தேனுடன் கலந்து உபயோகிக்க நேத்ர ரோகங்களையும் போக்கும். 9-11.

த்ரியூஷண சூர்ணம் :—திப்பிலி, மிளகு, சுக்கு இவற்றின் கூட்டுக்கு 'த்ரியூஷணம்' அல்லது 'த்ரிகடு' எனப் பெயர். இச் சூர்ணம் மேதோரோகம், குஷ்டம், பீநஸம், அரோசகம், ஆமதோஷம், மேஹரோகம், குன்மம், தொண்டைநோய்கள் இவற்றைப் போக்கும். கபஹரம், தீபநம் என்கிற குணங்களும் இதற்குண்டு. 12½.

பஞ்ச கோல சூர்ணம் :—திப்பிலி, சவ்வியம், சுக்கு, மோடி, சித்திரமூலம் இவ்வைந்தின் கூட்டுக்கு 'பஞ்ச கோலம்' என்று பெயர். இப்பஞ்ச கோல சூர்ணம் வயிற்றுப் பொருமல், ப்லீஹரோகம், குன்மம், வயிற்றுவலி, கபரோகங்கள், மஹோதரம் இவற்றை குணப் படுத்தும்; ருசிகரம், பாசந தீபநம் என்கிற குணங்களுமுண்டு. 13,14.

த்ரி ஜாத-சதுர்ஜாத சூர்ணம் :—ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவற்றின் கூட்டுக்கு "த்ரிகந்தம்" அல்லது "த்ரி ஜாதம்" என்றும், இம்மூன்று சரக்குகளோடு நாககேஸரம் சேர்ந்தால் "சதுர்ஜாதம்" என்றும் பெயர். த்ரிகந்தத்தையாவது, சதுர்ஜாதகத்தையாவது சூர்ணம் செய்துபயோகித்தால் சரீரத்திற்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும்; அரோசகத்தைப் போக்கும்; விஷங்களையும், கபரோகங்களையும் நிவ்ருத்தி செய்யும்; இக் கூட்டுகளுக்கு ரூக்ஷம், உஷ்ணம், இலகு, தீக்ஷ்ணம் என்கிற குணங்களும், [1] பித்தத்தை அபிவ்ருத்தி செய்யும் தன்மையும் உண்டு. 15½.

ஜீவநீயகண சூர்ணம்:—காகோலீ, க்ஷீரகாகோலீ, ஜீவகம், ரிஷபகம், மேதா, மஹாமேதா, ஜீவந்தீ, மதுகம், முத்கபர்ணி, மாஷபர்ணி என்கிற

1. ரூக்ஷம் முதலியவிஷயங்களைப்பற்றி 8-ம் பக்கம் பார்க்க.

இவற்றின் கூட்டுக்கு 'ஜீவநீய கணம்' [1] என்று பெயர். இந்த கணத்திற்கு மதுரமான சுவை, கர்ப்போத்பாதநசக்தி, குருகுணம், ஸ்தன்யத்தை யுற்பத்தி செய்யுந்தன்மை, ப்ருஹ்மணம், வ்ருஷ்யம், ஸ்நிக்த்தம், சீதம் என்னும் குணங்களுமுண்டு; இவற்றின் சூர்ணம் நாவறட்சி, இரத்தபித்தம், க்ஷதகாஸம், க்ஷயம், ஜ்வரம், சரீரதாபம், வாதரோகங்கள் இவைகளைப் போக்கும். 16—18½.

அஷ்டவர்க சூர்ணம்:—மேதா, மஹாமேதா, க்ஷீரகாகோலீ, ஜீவகம், ரிஷபகம், ருத்தி, வ்ருத்தி இவற்றின் கூட்டுக்கு 'அஷ்டவர்கம்' என்று பெயர். இவ்வஷ்டவர்க சூர்ணத்திற்கும் ஜீவநீயகணத்திற்குள்ள குணங்களேயாம். 19, 20.

பஞ்சலவண சூர்ணம்:—இந்துப்பு, சவுட்டுப்பு, அட்டுப்பு, கறியுப்பு, வேலயவுப்பு இவ்வைந்திற்கும் சேர்த்து பஞ்ச லவணம் எனப் பெயர். இவற்றுள் இந்துப்பு மாத்திரம் ஏக லவணம் என்றும், இந்துப்பு சவட்டுப்பு இரண்டும் த்வி லவணம் என்றும், அவ்விரண்டுடன் அட்டுப்பையும் சேர்த்தால் த்ரி லவணம் என்றும், த்ரிலவணத்துடன் கறியுப்பையும் சேர்த்தால் சதுர் லவணம் என்றும் முறையே பெயர் வழங்கப்படும். இவற்றுள் இந்துப்பு முக்கியமான லவணமாகும்; ஏதேனும் ஔஷத முறைகளில் விவரம் கூறுமல் உப்பைக் கூறியிருந்தால் இந்துப்புதான் சேர்க்கக்கூடியதாம். பஞ்சலவணங்களைச் சேர்த்து செய்யப்பட்ட சூர்ணத்திற்கு சிறிது மதுரமான சுவை, ஸ்நிக்த்தம், ஸுஷ்ணம், உஷ்ணவீர்யம், தீபநம், தீக்ஷ்ணம் என்கிற குணங்களுண்டு. ஆகவே இச்சூரணத்தை யுபயோகித்தால் சரீரவன்மை சிறிது குறைவடையும். இது கபம், பித்தம் இத்தோஷங்களை விருத்தி செய்யும். மல மூத்திரங்களையும் நன்றாக வெளிப்படுத்தும். 21—23.

க்ஷாரத்வய சூர்ணம்:—ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவ்விரண்டும் 'க்ஷாரத்வயம்' எனப்படும். இவ்விரண்டும் அக்னிக்கு ஸமானமான குணங்களுடையவையாம். இவ்விரண்டையுந் தவிர வேறு சில க்ஷாரவகைகளுமுண்டு. இவையனைத்தும் குன்மரோகம், அர்சோரோகம், கிரஹணீ ரோகம், கிருமிரோகம், சர்க்கரா அச்மரீ யென்னும் மூத்திரரோகங்கள் இவற்றைப் போக்கும்; மலத்தை மெதுவாக வெளிப்படுத்தல், பாசநம் என்கிற குணங்களுமுண்டு; முறைதவறி யுபயோகித்தால் இவை புருஷருக்குள்ள ஆண்மையைப் போக்கிவிடும். 24, 25.

ஸுதர்சந சூர்ணம்:—த்ரிபலை, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, கிச்சிலிக்கிழங்கு, த்ரியூஷணம், கிராந்திகரம், மருளங்கிழங்கு, சீந்தில், காஞ்சொறி, கடுகரோகிணி, பர்ப்பாடகம், கோரைக்கிழங்கு, கழற்சிக்காய், வெட்டிவேர், வேம்பு, அல்லிக்கிழங்கு, அதிமதுரம், வெட்பாலரிசி, குராசாணியோமம், குடசப்பாலை, கண்டுபாரங்கி, முருங்கவிதை, பூநீறு, வசம்பு, கருவாப்பட்டை, தாமரைக்கிழங்கு, குருவேர், வெண்சந்தனம், அதிவிடயம், சிற்றரமுட்டி, சிறுமல்லி, பெருமல்லி, வராய்

1. ஜீவநீயகணத்தின் பதார்த்தங்களுக்கு இதர பாஷைகளில் பெயர் கிடைப்பது அரிது. [ஜீவகம்-திருநீற்றுப் பாலை, ரிஷபகம்-கதிர்ப்பச்சை, காகோலீ-இரளி, க்ஷீரகாகோலீ-வெளுத்த இரளி, முத்கபர்ணீ-நரிப்பயறு, மாஷபர்ணீ-பெருவீடு கொள்ளி என்று சிலர்.]

விடங்கம், தகரவிதை, சித்திரமூலம், தேவதாரு, சவ்வியம், பேய்ப்புடல், ஜீவகம், ரிஷபகம், இலவங்கம், மூங்கிலுப்பு, வெண்தாமரை, காகோலி, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி இவையனைத்தையும் ஸமயெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்யவும். இச்சூர்ணம் அனைத்துக்கும் பாதி பாகம் நிலவேம்புச் சூர்ணத்தையும் சேர்த்துக் கலக்கவேண்டும். இது 'ஸுதர்சந சூர்ணம்' எனப்படும். இந்த சூர்ணம் ஸந்நிபாத ஜ்வரம், த்வந்த்வ ஜ்வரம், பூதாவேசாதிகளாலான ஆகந்துக ஜ்வரம், தாதுகத ஜ்வரங்கள், அந்யேத்யுஷ்கம் முதலிய விஷம ஜ்வரங்கள், மனதின் கோளாறுகளால் ஹண்டாகும் ஜ்வரங்கள், நளிர் ஜ்வரம், சோம்பல் அல்லது திமிர், தலைச் சுற்றல், நாவறட்சி, ச்வாஸம், காஸம், பாண்டுரோகம், இருதயத்தைப் பற்றிய ரோகம், காமாலை, இடுப்புவலி, முதுகுவலி, முழங்கால்வலி, பக்கசூல இவையனைத்தையும் போக்கும். இதை குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்வது நலம். ஸுதர்சந மென்னும் சக்கிராயுதம் அஸுரர் அனைவரையும் அழிப்பதற்கு ஏற்ற கருவியாயிருந்ததுபோல், ஸகல ஜ்வரங்களையும் அகற்றுவதற்கு இச் சூர்ணம் தகுந்த ஸாதநமாகிறது. 26—36.

த்ரிபலாதி சூர்ணம் இரண்டாவது:—த்ரிபலை, திப்பிலி இவற்றைச் சூர்ணம் செய்து, தேன் கலந்து லேஹ்யம்போல் உட்கொள்ள காஸம், ச்வாஸம், ஜ்வரம் இவை நீங்கும்; தீபநம் ரேசநம் என்கிற குணங்களும் உண்டு. 37.

(1) கட்பலாதி சூர்ணம்:—சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கடுகரோகிணி, கிச்சிலிக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, தாமரைக்கிழங்கு இவற்றின் சூர்ணத்தைத் தேனுடனாவது இஞ்சிச் சாற்றுடனாவது கலந்து உட்கொள்ளலாம்; இது தொண்டைக்கு நல்ல வன்மை தரும்; ஜ்வரம், காஸம், ச்வாஸம், அரோசகம், வாதரோகங்கள், வாந்தி, வயிற்றுவலி, க்ஷயம் இவ்வியாதிகளும் போகும். (2) கட்பலாதி சூர்ணம்:- சிறுதேக்கு, தாமரைக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, கோரைக்கிழங்கு, த்ரிகடு, கிச்சிலிக்கிழங்கு இவற்றைத் தனித்தனியாகவோ ஒருமிக்கவோ சூர்ணம் செய்து தேன் அல்லது இஞ்சி ஸ்வரஸத்தில் குழைத்து உட்கொள்ள கபம், வயிற்றுவலி, மேஹரோகம், அரோசகம், வாந்தி, காஸம், ச்வாஸம், க்ஷயம் இவை குணமாகும். (3) கட்பலாதி சூர்ணம்:— சிறுதேக்கு, தாமரைக்கிழங்கு, திப்பிலி, கர்க்காடகச்ருங்கி இவற்றின் சூர்ணத்தைத் தேனில் குழைத்து லேஹ்யம் போல் உட்கொள்ள ச்வாஸம், காஸம், ஜ்வரம் இவையும், மற்றுமுள்ள கபரோகங்களும் தீரும். 38—42.

கர்க்காடக சீருங்காதி சூர்ணம்:—(1) கர்க்காடகச்ருங்கி, அதிவிடயம், திப்பிலி இவற்றின் சூர்ணத்தைத் தேனில் குழைத்து குழந்தைகளுக்குக் கொடுக்க, காஸம், ஜ்வரம், வாந்தி இவை நிவருத்தியாகும். (2) அல்லது அதிவிடயத்தை மாத்திரம் சூர்ணம்செய்து தேனுடன் கொடுத்தாலும் அப்பயனுண்டாகும். 43.

யவக்ஷாராதி சூர்ணம்:—யவக்ஷாரம், அதிவிடயம், கர்க்காடகச்ருங்கி, திப்பிலி, தாமரைக்கிழங்கு இவற்றின் சூர்ணத்தைத் தேனில் குழைத்துக் கொடுத்தால் குழந்தைகளின் ஐந்து வித காஸங்களும் [1] தீரும். 44.

1. ஐந்துவித காஸங்கள் 29-ம் பக்கத்தில் 'காஸம்' என்பதைப் பார்க்க.

சுண்ட்யாதி சூர்ணம் :—சுக்கு, அதிவிடயம், பெருங்காயம், கோரைக் கிழங்கு, குடசப்பாலே, சித்திரமூலம் இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத் துடன் உட்கொள்ள அஜீர்ணத்திலுலுண்டாகும் அதிஸாரம் தீரும். 45.

ஹரீதக்யாதி சூர்ணம் :—கடுக்காய், அதிவிடயம், இந்துப்பு, சவுட்டுப்பு, வசம்பு, பெருங்காயம் இவற்றைச் சூர்ணம்செய்து உஷ்ண ஜலத்துடன் உட் கொள்ளவும்; தீபநம், க்ராஹி என்னும் குணங்கள் இதற்குண்டு; ஆகவே இது ஆமாதிஸாரத்தை நிவ்ருத்தி செய்யும். $46\frac{1}{2}$.

இலது கங்காதர சூர்ணம் :—கோரைக்கிழங்கு, வெட்பாலரிசி, பில்வ வேர், வெள்ளிலோத்திப்பட்டை, இலவம்பிசின், காட்டாத்திப்பூ இவற் றைச் சூர்ணம் செய்து, புளித்த மோர் வெல்லம் இவற்றில் ஏதேனும் ஒன் றுடன் உட்கொள்ளலாம். இதற்கு க்ராஹிகுணம் விசேஷமாயுண்டு; ஆகை யிஞல் ஸகலவித அதிஸாரங்களையும், சீதபேதியையும் நிவ்ருத்தி செய்யும்; இதற்கு "இலகு கங்காதர சூர்ணம்" என்று பெயர். $47—48\frac{1}{2}$.

வ்ருத்த கங்காதர சூர்ணம்:—கோரைக்கிழங்கு, பெருவாகை, சுக்கு, காட்டாத்திப்பூ, வெள்ளிலோத்தி, குருவேர், பில்வம், இலவம்பிசின், வட்டத்திருப்பி, வெட்பாலரிசி, குடசப்பாலையிலை, மாம்பருப்பு, அதிவிடயம், வறட்சுண்டி.[1] இவற்றின் சூர்ணத்தைத் தேன் அல்லது அரிசி கழுவிய நீருடன் உட்கொள்க; இதற்கு க்ராஹி யென்கிற குணம் அதிகமாயுண்டு; இது ப்ரவாஹிகா, ஸகலவித அதிஸாரங்கள், க்ரஹணி இவற்றை எளிதில் தீர்க்கும்; அதிக பலமான அதிஸாரத்திற்குச் சிறந்த ஔஷதம்; இதற்கு "வ்ருத்தகங்காதர சூர்ணம்" என்று பெயர். $49—51\frac{1}{2}$.

மரீசாதி சூர்ணம் :—மிளகு, சித்திரமூலம், சவுட்டுப்பு இவற்றின் சூர் ணத்தைப் புளித்த மோரோடு தினந்தோறும் உட்கொள்ள கிரஹணி ரோகம், மஹோதரம், ப்லீஹோதரம், அக்னிமாந்த்யம், குன்மம், அர்சஸ் இவை குணமாகும். 52, 53.

கபித்தாஷ்டக சூர்ணம்:—உலர்ந்த விளாம் பழம் எட்டு பாகம், உலர்ந்த மாதுளை, உலர்ந்த புளியம்பழம், உலர்ந் பில்வப்பழம், காட்டாத்திப்பூ, ஓமம், திப்பிலி இவற்றில் ஒவ்வொன்றும் மும்மூன்று பாகம்; மிளகு, ஜீரகம், தனியா; கிரந்திதகரம், விளாமிச்சை வேர், சவுட்டுப்பு, குராசானி யோமம், சதுர்ஜாதம், சித்திரமூலம், சுக்கு இவை ஒவ்வொரு பாகம்; இவற்றை நன்றுய் சூர்ணம் செய்து, ஆறு பாகம் சர்க்கரை சேர்த்து, தொண்டை நோய், அதிஸாரம், க்ஷயம், குன்மம், கிரஹணி இந்த வியாதிகளில் உபயோ கிக்கிலாம்; இதற்கு 'கபித்தாஷ்டக சூர்ணம்'[2] எனப் பெயர். 54—57.

(1) தாடிமாஷ்டக சூர்ணம் :—உலர்ந்த மாதுளம்பழம் இரண்டு பலம், கற்கண்டு எட்டு பலம், த்ரிகந்தம் ஒரு பலம், த்ரிகடு மூன்று பலம், இவற்றை இடித்துச் செய்யப்படும் சூர்ணம் 'தாடிமாஷ்டகம்' என்று சொல்லப்படும்; இச் சூர்ணம் காக்குக்கு நற்சுவையைத் தரும்; தீபநம், கண்ட்யம், க்ராஹி என்கிற குணங்களும், காஸம், ஜ்வரம் இவற்றை ஸ்வஸ்தம் செய்யும் தன்

1. 'லஜ்ஜாலு' என்பதை வறட்சுண்டி யென்றும், தொட்டாற் சுணங்கி யென்றும் வழங்குவர்.

2. கபித்தம்—விளாம்பழம்; இந்த யோகத்தில் விளாம்பழம் மற்ற வைகளைவிட எட்டு மடங்கு இருப்பதால் 'கபித்தாஷ்டகம்' எனப் பெயர்.

மையும் உடையது. (2) தாடிமாஷ்டக சூர்ணம்:- உலர்ந்த மாதுளம் பழம் எட்டு பலம், திப்பிலி, மோடி, குராசானி யோமம், மிளகு, தனியா, ஜீரகம், சுக்கு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், மூங்கிலுப்பு கால் பலம், கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நாககேஸரம் இவை ஒவ் வொன்றும் அரைக்கால் பலம்; இவற்றையெல்லாம் ஒன்முகச் சூர்ணம் செய்து, அதில் எட்டுப்பலம் சர்க்கரையும் கலந்து உபயோகிக்கவும்; இதற் கும் 'தாடிமாஷ்டக சூர்ணம்' எனப் பெயர். அதிஸாரம், க்ஷயம், குன்மம், கிரஹணி, தொண்டைக் கம்மல், அக்னிமாந்த்யம், பீநஸம், காஸம் இவற் றைப் போக்கும். $58—62\frac{1}{2}$.

பிப்பல்யாதி சூர்ணம் இரண்டாவது:—திப்பிலி, கண்டங்கத்திரி, சிறு வழுதுணை, யவக்ஷாரம், குடசப்பாலே, சித்திரமூலம், நன்ஞரி, வட்டத் திருப்பி, கிச்சிலிக்கிழங்கு, பஞ்சலவணம்; இவற்றின் சூர்ணத்தைத் தயிர், ஸுரை யென்னும் மத்தியம், வென்னீர் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு உட்கொள்ள வாதரோகங்களும், கிரஹணி தோஷமும் தீரும். 63, 64.

இலவங்காதி சூர்ணம் :—இலவங்கம், கர்ப்பூரம், ஏலம், இலவங்கப் பட்டை, நாககேஸரம், ஜாதிக்காய், வெட்டிவேர், சுக்கு, கருஞ்சீரகம், அகிற் கட்டை, மூங்கிலுப்பு, ஜடாமாம்ஸி, கருநெய்தல், திப்பிலி, சந்தனம், கிரந்தி தகரம், குருவேர், தக்கோலம் இவ்வனைத்தையும் ஸமயெடை சேர்த்து சூர் ணம் செய்து, சூர்ணத்தில் பாதிபாகம் சர்க்கரையும் கலந்து உபயோகிக்கவும். 'இலவங்காதி சூர்ணம்' என்கிற இது பசியை உத்தீபகம் செய்யும்; மனதுக்கு உத்ஸாஹமூட்டும்; அரோசகம், ஸந்திபாத தோஷம், இருதயத் தைப்பற்றிய வியாதிகள், கண்டதோஷங்கள், காஸம், விக்கல், பீநஸம், க்ஷயம், தமகச்வாஸம், அதிஸாரம், உரஸ்தம், பிரமேஹம், குன்மம், கிரஹணி இவற்றைப் போக்கும். வ்ருஷ்யகுணமும் பலத்தை விருத்தி செய்யும் சக்தியுமுண்டு. 65—$69\frac{1}{2}$.

ஜாதீபலாதி சூர்ணம்:—ஜாதிக்காய், இலவங்கம், ஏலக்காய், இலவங்கப் பத்திரி, இலவங்கப்பட்டை, நாககேஸரம், கர்ப்பூரம், சந்தனம், எள், மூங்கிலுப்பு, கிரந்திதகரம், நெல்லிப்பருப்பு, தாளிசப்பத்திரி, திப்பிலி, கடுக்காய், சோம்பு, சித்திரமூலம், சுக்கு, வாய்விடங்கம், மிளகு இவற்றை ஸம யெடை சூர்ணம் செய்து, சுத்திசெய்த கஞ்ஜாவையும் மற்றச்சரக்கு களுக்கு ஸமமாகக் கலந்து, சூர்ணம் எவ்வளவோ அவ்வளவு சர்க்கரையும் சேர்த்து, தேனில் அதைக் கால் பலம் குழைத்து உட்கொள்ள கிரஹணீ ரோகம், காஸம், ச்வாஸம், அரோசகம், க்ஷயம், வாதரோகங்கள், கபரோகங் கள், ப்ரதிச்யாயம் இவை சீக்கிரத்தில் தீரும். 70—74.

மஹாகாண்டவ சூர்ணம் :—மிளகு, நாககேஸரம், தாளிசப்பத்திரி, பஞ்சலவணம் இவற்றில் ஒவ்வொரு பாகம்; மோடி, சித்திரமூலம், இலவங் கப்பட்டை, திப்பிலி, உலர்ந்த புளி, ஜீரகம் இவை ஒவ்வொன்றும் இரண் டிரண்டு பாகம்; கொத்தமல்லி விதை, புளிவஞ்சி, சுக்கு, ஏலக்காய், இலந்தம் பழம், ஓமம், கோரைக்கிழங்கு இவை ஒவ்வொன்றும் மூன்று பாகம்; இவை யனைத்திலும் நாலில் ஒரு பங்கு மாதுளம்பழம் சேர்த்து இடித்து, சூர்ணத் தில் சரிபாதி சர்க்கரையும் கலந்து உபயோகிக்கலாம்; 'மஹாகாண் டவ சூர்ணம்' என்கிற இது நற்சுவை யளிப்பதிற் சிறந்தது; இருதயத் திற்கு வலிவைத் தரும்; தீபனகுணமுண்டு; காஸம், அதிஸாரம், கண்ட

ரோகங்கள், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், முக ரோகங்கள், விஷூசி, வயிற்றுப் பொருமல், அர்சஸ், குன்மம், கிருமி ரோகம், ஐந்து வித சர்த்திகள், ச்வாஸம் இவைகளையும் தீர்க்கும். 75—80.

நாராயண சூர்ணம் :—சித்திரமூலம், த்ரிபலை, த்ரிகடு, ஜீரகம், வசம்பு, கொட்டைக் கரந்தை, குராசாணி யோமம், மோடி, சதகுப்பி, இராம துளசி, ஓமம், கிச்சிலிக்கிழங்கு, தனியா, வாய்விடங்கம், சோம்பு, நாககே ஸரம், தாமரைக்கிழங்கு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், பஞ்சலவணம், கோஷ்ட இவை ஸமமெடை ; பேய்த்தும்மட்டி இரண்டு பங்கு, கருஞ்சிவதை, நேபாளம் இரண்டும் மூன்று பங்கு, இலக்கள்ளி நான்கு பங்கு சேர்த்து சூர்ணம் செய்யவும்; பாசகம், ஸ்நேஹநம் இக்குணமுள்ள ஔஷதங்களால் ரோகியின் குடலை ஸ்நிக்தமாகச் செய்து, மேற்கூறிய சூர்ணத்தை விரே சனத்திற்காகக் கொடுப்பது நலம் ; இதை ஹ்ருத்ரோகம், பாண்டுரோகம், குஷ்டம், கிரஹணீ, களக்ரஹம், காஸம், ச்வாஸம், பகந்தரம், அக்னி மாந்தி யம், ஜ்வரம் இவற்றில் அதற்குத் தகுந்த அநுபானத்துடன் உட்கொள்ள லாம் ; மேலும் வயிற்றுப் பொருமலில் ஸுரை யென்னும் மத்யத்தோடும், குன்மத்தில் இலந்தம்பழ ஸ்வரஸத்துடனும், மலபந்தத்தில் தயிரின் மேலுள்ள தெளிவு நீரோடும், அஜீர்ணத்தில் உஷ்ண ஜலத்தோடும், ஆஸனக்கடுப்பில் புளியம்பழரஸத்துடனும், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதி களில் ஒட்டகத்தின் பாலோடு அல்லது பசுவின் மோருடனும், வாதரோ கங்களில் அன்னத்தின் புளித்த நீரோடும், அர்சோ ரோகத்தில் மாதுளம் பழச் சாற்றோடும், இரண்டுவிதமான விஷங்களிலும் நெய்யுடனும் இச்சூர் ணத்தை யுட்கொள்ளலாம்; இது மற்றும் பல கஷ்ட ரோகங்களையும் போக்கும்; இதற்கு 'நாராயண சூர்ணம்' எனப் பெயர். 81—89.

ஹபுஷாதி சூர்ணம் :—கொட்டைக்கரந்தை, த்ரிபலை, கழற்சிக்காய், திப்பிலி, பிரமதண்டு, சிவதைவேர், இலக்கள்ளி, கடுகரோகிணி, வசம்பு, அவுரி, இந்துப்பு, கிருஷ்ணலவணம், கரியுப்பு இவற்றின் சூர்ணத்தை உஷ்ணஜலம், பசு மூத்திரம், மாதுளம்பழ ஸ்வரஸம், த்ரிபலா க்வாதம், மாம்ஸ ரஸம் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு உட்கொள்ள அஜீர்ணம், ப்லீஹோதரம், குன்மம், சோதை, அர்சஸ், ஹலீமகம், காமாலை, பாண்டு, குஷ்டம், வயிற்றுப் பொருமல் இவைகள் தீரும். 90—92½.

பஞ்ச ஸம சூர்ணம்:—சுக்கு, கடுக்காய், திப்பிலி, சிவதை வேர், சவுட் டுப்பு இவற்றை ஸமமெடையாகச் சேர்த்து சூர்ணம் செய்யவும் ; 'பஞ்ச ஸம சூர்ணம்' என்கிற இது வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், மஹோ தரம், அர்சஸ், ஆமவாதம் இவற்றைப் போக்கும். 93—94½.

பிப்பல்யாதி சூர்ணம் மூன்றுவது :—கால் பலம் திப்பிலியும், ஒரு பலம் கற்கண்டும் சேர்த்து சூர்ணம்செய்து கால் பலம் அளவில் தேனில் குழைத்து உட்கொள்ள வயிற்றுப் பொருமல், மலபந்தம், மஹோதரம், கபரோகங்கள், சூலை இவை தீரும். 95—96½.

லவணத்ரயாதி சூர்ணம் :—இந்துப்பு, அட்டுப்பு, சவுட்டுப்பு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், குப்பைமேனி, சதகுப்பை, வசம்பு, ஓமம், இராஸ்நாதுளவி,

1. ஸ்நேஹங்கள், ஸ்நேஹ விதிகள் இவற்றின் விவரங்களை உத்தர கண்டம் முதல் அத்தியாயத்திற் காணலாம்.

கொட்டைக்கரந்தை, ஜீரகம், கருஞ்ஜீரகம், மிளகு, மோடி, திப்பிலி, யானைத் திப்பிலி, பெருங்காயம், இங்குபத்திரி, கிச்சிலிக்கிழங்கு, வட்டத் திருப்பி, சித்தேலம், சுக்கு, சித்திரமூலம், சவ்வியம், வாய்விடங்கம், புளி வஞ்சி, மாதுளம்பழம், புளி, சிவதைவேர், நேபாளம், தண்ணீர்விட்டாங் கிழங்கு, பேய்த்தும்மட்டி, கண்டுபாரங்கி, தேவதாரு, குராசாணியோமம், கொத்தமல்லிவிதை, முருங்கை, தாமரைக் கிழங்கு, இலந்தம்பழம், கடுக்காய், ஸம பாகமாய்க் கூட்டி சூர்ணம் செய்து, இஞ்சிஸ்வரஸத்திலும், கொம்மட்டி மாதளம்பழ ஸ்வரஸத்திலும் தனித்தனியாக பாவனை செய்து, நெய், நன்ரு கப் பழ கிய மத்யம், உஷ்ணஜலம், இலந்தங்கொட்டையின் க்வாதம், மோர், ஒட்டகப் பால், புளித்த அன்னரஸம் இவற்றுள் ஏதேனும் ஒன்ரோடு உட் கொள்ள, யக்ருதுதரம், ப்லீஹோதரம்,[1] இடுப்புவலி, ஆஸனக்கடுப்பு, வயிற்று நோய்கள், ஹ்ருத்ரோகம், அர்சஸ், மலபந்தம், அக்னி மாந்தியம், குன்மம், விக்கல், வயிற்றுப் பொருமல், ச்வாஸகாஸம் இவை தீரும். மேற் கூறிய பதார்த்தங்களைக் கொண்டே க்ருதமும்[2] பக்குவம்செய்து முற் கூறிய வியாதிகளில் உபயோகிக்கலாம். 97—104½.

தும்புர்வாதி சூர்ணம் :—முருங்கவிதை, த்ரிலவணம், குராசாணி யோமம், தாமரைக்கிழங்கு, யவக்ஷாரம், கடுக்காய், பெருங்காயம், வாய்வி டங்கம் இவை ஸமபாகம் ; சிவதை வேர் மூன்று பாகம்; இவற்றை நன்ரு கச் சூர்ணம் செய்து உஷ்ண ஜலத்தோடாவது, யவதான்ய க்வாதத்துட னாவது உட்கொள்ள ஸகலவித சூலைகள், குன்மம், வயிற்றுப் பொருமல், மஹோதரம் இவை தீரும். 105—107.

சீத்ரகாதி சூர்ணம் :—சித்ரமூலம், சுக்கு, பெருங்காயம், திப்பிலி, மோடி, சவ்வியம், ஓமம், மிளகு இவை ஒவ்வொன்றும் கால் பலம் ; சவுட் டுப்பு, யவக்ஷாரம், இந்துப்பு, ஸர்ஜக்ஷாரம், வேலையுப்பு, அட்டுப்பு, கரியுப்பு இவை ஒவ்வொன்றும் கால்பலம் ; இவற்றை ஒருமிக்கச் சேர்த்து சூர்ணம் செய்து கொம்மட்டி மாதுளம் பழ ரஸத்திலாவது, மாதுளம்பழ ரஸத்திலா வது பாவனை செய்து, வெயிலில் உலர்த்தி யெடுக்கவும். இச் சூர்ணம் குன்மம், கிரஹணீ ரோகம், ஆமவாதம், அக்னிமாந்தியம், கபப்பிரகோபம், அரோசகம் இவற்றைப் போக்கும். 108—111.

படபாநல சூர்ணம் :—இந்துப்பு ஒருபாகம், மோடி இரண்டு பாகம், திப்பிலி மூன்றுபாகம், சவ்வியம நான்கு பாகம், சித்திரமூலம் ஐந்து பாகம், சுக்கு ஆறு பாகம், கடுக்காய் ஏழு பாகம் சேர்த்து சூர்ணம் செய்யவும் ; 'படபாநல சூர்ணம்' என்கிற இது நன்ரு க அக்னி தீபநம் செய்யும். 112½.

அஜமோதாதி சூர்ணம் :—ஓமம், வாய்விடங்கம், இந்துப்பு, தேவதாரு, சித்திரமூலம், மோடி, சதகுப்பி, திப்பிலி, மிளகு இவை ஒவ்வொன்றும் கால் பலமும், கடுக்காய் ஒன்றேகால் பலமும், நிலக்கடம்பு இரண்டரைப் பலமும், சுக்கு இரண்டரைப் பலமும் சேர்த்து சூர்ணம் செய்து உஷ்ண ஜலத்துடன் உட்கொள்ளலாம் ; ஸர்வாங்க சோதை, ஆமவாதம், கீல்வாயு, க்ருத்ரஸீ, இடுப்புவலி, பக்கவலி, ஆஸனக்கடுப்பு, தூநீ, ப்ரதிதூநீ, விச்வாசீ, கபரோகங்கள் இவை தீரும். இந்த சூர்ணம் எவ்வளவு எடை யிருக்

1. ப்லீஹோதரம், யக்ருதுதரம் 33-ம் பக்கம் உதரரோகம் பார்க்க.
2. க்ருதபாகம்—மத்யமகண்டம் 9-ம் அத்தியாயம் பார்க்க.

கின்றதோ அவ்வளவு வெல்லம் சேர்த்து மாத்திரைகளாகவும் செய்து உபயோகிக்கலாம். 113—117½.

இரண்டாம் சுண்ட்யாதி சூர்ணம் :—சுக்கு, சவுட்டுப்பு, பெருங்காயம், மாதுளை, புளிவஞ்சி இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்துடன் உட்கொள்வதால் ச்வாஸமும், ஹ்ருத்ரோகமும் தீரும். 118½.

ஹிங்க்வாதி சூர்ணம் அல்லது துளிகை :—பெருங்காயம், வட்டத்திருப்பி, கடுக்காய், தனியா, மாதுளை, சித்திரமூலம், கிச்சிலிக் கிழங்கு, ஓமம், த்கரிடு, கொட்டைக்கரந்தை, புளிவிஞ்சி, இராம துளஸி, புளி, ஜீரகம், தாமரைக் கிழங்கு, வசம்பு, சவியம், க்ஷாரத்வயம், பஞ்சலவணம் இவற்றைச் சூர்ணம் செய்து, இதை ஆஹாரத்திற்கு முன்பாவது, ஆஹாரத்திற்கு இடையிலாவது பழைய மது, மோர், உஷ்ணஜலம் இவற்றுள் ஏதேனும் ஒன்றின் அநுபானத்துடன் உபயோகிக்கலாம். இத்துடன் வாதகபங்களாலுண்டான குன்மம், ஹ்ருத்ரோகம், அஷ்டீலா, வஸ்திசூலை, பார்ச்வசூலை, யோநிசூலை, ஆஸனக்கடுப்பு, மூத்திரக்ருச்சிரம், வயிற்றுப் பொருமல், பாண்டு, அரோசகம், விக்கல், கல்லீரலையும் மண்ணீரலையும் பற்றிய வியாதிகள், காஸம், ச்வாஸம், களக்ரஹம், கிரஹணீ, அர்சஸ் இவற்றைப் போக்கும். இதே சூர்ணத்தை கொம்மட்டி மாதுளையின் ஸ்வரஸத்தில் பாவனை செய்து, மாத்திரைகளாகச் செய்து உபயோகித்தால் வாதஜ்வரமும், கபஜ்வரமும் தீரும். 119—125.

யவாநீகாண்டவ சூர்ணம் :—குராசாணியோமம், மாதுளை, சுக்கு, புளி, புளிவஞ்சி, இலந்தம்பழம் இவை ஒவ்வொன்றும் கால்பலம், மிளகு மூவீசம் பலம், திப்பிலி அரையே அரைக்கால் பலம், இலவங்கப்பட்டை, சவுட்டுப்பு, தனியா, ஜீரகம் இவை ஒவ்வொன்றும் அரைக்கால் பலம் கூட்டி சூர்ணம் செய்து, நான்கு பலம் சர்க்கரையும் கலந்திடவும். 'யவாநீ காண்டவ சூர்ணம்' எனப்படும் இது பாண்டுரோகம், ஹ்ருத்ரோகம், கிரஹஜ்வரம், வாந்தி, க்ஷயம், அதிஸாரம், ப்லீஹோதரம், வயிற்றுப் பொருமல், மலபந்தம், அரோசகம், வயிற்று வலி, அக்னிமாந்தியம், அர்சஸ், நாக்கு தொண்டைகளில் உண்டாகும் வியாதிகள் இவற்றைத் தீர்க்கும். 126—129½.

தாளிசாதி சூர்ணமும் துளிகையும்:—(1) தாளிசப்பத்திரி ஒரு பங்கு, மிளகு இரண்டு பங்கு, சுக்கு மூன்று பங்கு, திப்பிலி நான்கு பங்கு, மூங்கிலுப்பு ஐந்து பங்கு, ஏலக்காயும் இலவங்கப்பட்டையும் தனித்தனியே அரைப்பங்கும் சேர்த்து சூர்ணம் செய்து முப்பத்திரண்டு பங்கு சர்க்கரையும் கலக்கவேண்டும்; 'தாளிசாதி சூர்ணம்' எனப்படும் இதற்கு பாசநசக்தி யுண்டு; அரோசகத்தைப் போக்கும்; காஸம், ச்வாஸம், ஜ்வரம், வாந்தி, அதிஸாரம், க்ஷயம், வயிற்றுப் பொருமல், ப்லீஹோதரம், கிரஹணீ, பாண்டுரோகம் இவற்றையும் போக்கும். (2) சர்க்கரையைச் காய்ச்சி பாகு செய்து அதில் சூர்ணத்தையும் கலந்து மாத்திரையாகச் செய்தும் உபயோகிக்கலசம். 130—133½.

ஸிதோபலாதி சூர்ணம்:—கற்கண்டு பதினாறு பங்கும், மூங்கிலுப்பு எட்டு பங்கும், திப்பிலி நாலு பங்கும், ஏலக்காய் இரண்டு பங்கும், இலவங்கப்பட்டை ஒரு பங்கும் சேர்த்து சூர்ணம் செய்யவும்; 'ஸிதோபலாதி சூர்ணம்' எனப் படும். இதை தேன் அல்லது நெய்யோடு கலந்து

உட்கொள்ள ச்வாஸம், காஸம், க்ஷயம், கை கால் எரித்தல், அக்னிமாந்தியம், நாக்கின் திமிர், பார்ச்வசூலை, அரோசகம், ஜ்வரம், இரத்தபித்தம் இவை எளிதில் தீரும். 134—137.

பாஸ்கரலவண சூர்ணம் :—கறியுப்பு எட்டு பங்கு, சவுட்டுப்பு ஐந்து பங்கு, அட்டுப்பு, இந்துப்பு, தனியா, திப்பிலி, மோடி, கருஞ்ஜீரகம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், தாளிசப்பத்திரி, புளிவஞ்சி இவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு பங்கு, மிளகு, ஜீரகம், சுக்கு இவை ஒவ்வொரு பங்கு, இலவங்கப்பட்டை, ஏலம் இரண்டும் தனித்தனியே அரைப் பங்கு, இவற்றை யெல்லாம் சேர்த்து செய்த சூர்ணம் 'பாஸ்கரலவணம்' எனப் படும். இதை அரைக் கால் பலம் வீதம் புளித்த அன்ன ரஸத்திலாவது, மோரிலாவது, ஸுரை யென்னும் மத்தியத்திலாவது, ஆஸவங்களிலாவது கலந்து உட்கொள்ளலாம்; இது வாதகபங்களிலுளான குன்மங்கள், ப்லீஹோதரம், மஹோதரம், க்ஷயம், அர்சஸ், கிரஹணீ, குஷ்டம், மலபந்தம், பகந்தரம், சோதை, சூலை, ச்வாஸகாஸம், ஆமவாதம், ஹ்ருத்ரோகம், அக்னிமாந்தியம் இவற்றைப் போக்கும்; தீபநபாசந குணங்கள் இதற்கு விசேஷமாயுண்டு; ஸகல ஜனங்களுடைய நன்மையின் பொருட்டு முன்பு பாஸ்கரனுல் இது கண்டறியப்பட்டது. 138—144.

ஏலாதி சூர்ணம் :—ஏலக்காய், ஞாழல், கோரைக்கிழங்கு, இலந்தங் கொட்டை, திப்பிலி, வெண்சந்தனம், நெற்பொரி, இலவங்கம், நாககேஸரம் இவற்றைச் சூர்ணம் செய்து சர்க்கரை சேர்த்து, தேனில் குழைத்து உட்கொள்ள, ஸந்நிபாத வாந்தி வெகு சீக்கிரம் நின்றுவிடும். 145—146.

வ்யாக்ரியாதி சூர்ணம் :—கண்டங்கத்திரி, ஜீரகம், நெல்லிக்காய் இவற்றைச் சூர்ணம் செய்து தேனிற் குழைத்து உபயோகிக்க ஊர்த்வச்வாஸமும், மஹாச்வாஸமும் உடனே சமனமாகும். 147.

பஞ்ச நிம்ப சூர்ணம் :—வேப்பமரத்தின் வேர், இலை, புஷ்பம், பழம், பட்டை இவற்றை மும்மூன்று பலம் எடுத்து சூர்ணம் செய்யவும்; லோஹரஸ்மம்,[1] கடுக்காய், தகாவிதை, சித்திரமூலம், சேராங்கொட்டை, வாய்விடங்கம், நெல்லிக்காய், மஞ்சள், திப்பிலி, மிளகு, சுக்கு, ஆட்டலாங் கொடி, பச்சிலை, நெரிஞ்சில், சர்க்கரை ஒவ்வொன்றும் ஒவ்வொருபலமாகக் கூட்டி, கரிசலாங் கண்ணிச் சாற்றில் முதலில் பாவனை செய்து, அப்பால் கருங்காலி, தினிசை இவற்றை எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து, எட்டில் ஒரு பாகமாகக் காய்ச்சி, அதில் மேற்கூறிய சூர்ணத்தை மீண்டும் பாவனை செய்யவும். அதில் சூர்ணமெல்லாம் ஊறி உலர்ந்த பிறகு, அதைக் கால் பலம் அளவில் கருங்காலி தினிசை இவற்றின் கஷாயத்தோடாவது, பாலுடனாவது உட்கொண்டு வரலாம்; இது சிறந்த ரஸாயனமாகும்; ஒரு மாதகாலம் உபயோகிக்க ஸகல குஷ்டங்களும் சாந்தமாகும்; பல இதர ரோகங்களும் நிவ்ருத்தியாகும். இது 'பஞ்சநிம்ப சூர்ணம்' என்று கூறப்படும். 148—153.

சதாவர்யாதி சூர்ணம் :—தண்ணீர்விட்டான், நெரிஞ்சில், பூனைக்காலி விதை, பீர்க்கு, பேராமுட்டி, நீர்முள்ளிவிதை இவற்றைச் சூர்ணம் செய்து, இரவில் பசும்பாலுடன் உட்கொள்ளலாம்; இந்தச் சூர்ணத்தின்

1. லோஹரஸ்மம்:-இதே கண்டம் 11-ம் அத்தியாயம் பார்க்க.

பிரபாவத்தினால் புருஷருக்கு ஸ்த்ரீகளிடம் பிரவ்ருத்திக்க விசேஷ திறமையுண்டாகும். 154—155.

அச்வகந்தாதி சூர்ணம் :—அமுக்கிரங்கிழங்கு பத்து பலமும், கடற்பாலை பத்து பலமும் சேர்த்து சூர்ணம் செய்து, நெய் வைத்துப் பழகிய மட்பாத்திரத்திரத்தில் எடுத்து வைத்து, கால்பலம் அளவில் பாலோடு உட்கொள்ள, முன்போலவே ஆண்மையதிகமாகும். ஸ்த்ரீகளிடம் சேராமல், இவ்வௌஷதத்தை யுட்கொண்டு வருபவன் நரைதிரை யேது மின்றி திட சரீரியாய் வாழ்வான். 156—157.

முஸலீ கந்தாதி சூர்ணம் :—நிலப்பனங்கிழங்கின் சூர்ணம், சிந் திற்கொடியின் ஸத்துவம், நீர்வஞ்சிக்கொடி,[1] நெரிஞ்சில், இலவம் பிசின், சர்க்கரை, நெல்லிக்கனி இவற்றின் சூர்ணம் அனைத்தையும் ஒன்று சேர்த்து நெய் அல்லது பாலுடன் உட்கொண்டால் சிற்றின்பத்திற்கு வேண்டிய சக்தியுண்டாகும். 158½.

சித்திராகாதி சூர்ணம் இரண்டாவது:—சித்திரமூலம், த்ரிபலை, கோரைக் கிழங்கு, வாய்விடங்கம், த்ரிகடு இவற்றை ஸமயெடையாகச் சூர்ணித்து, லோஹபஸ்மம் ஒன்பதில் ஒருபங்காகக் கலந்து, தேன் அல்லது நெய்யோடு உட்கொள்ளலாம். இதற்கும் பசு மூத்திரம் அல்லது மோர் அநுபானமாக உபயோகிக்கலாம். இது உக்ரமான பாண்டுரோகம், ஹ்ருத்ரோகம், பகந்தரம், சோதை, குஷ்டம், மஹோதரம், அர்சஸ், அக்னி மாந்தியம், அரோசகம், கிருமிகள் இவற்றைத் தீர்க்கும். 159-161½.

ஆகாரகாபாதி சூர்ணம்:—அக்கராகாரம், சுக்கு, தக்கோலம், குங்குமப்பூ, திப்பிலி, ஜாதிக்காய், இலவங்கம், சந்தனம் இவை ஒவ்வொன் றும் கால்பலம், அபினி ஒரு பலம் சேர்த்து சூர்ணம் செய்து, இதை ஒரு மாஷப்பிரமாணம் தேனோடு கலந்து இரவில் உட்கொள்ளலாம்; இது சுக்ரத்தை ஸ்தம்பநம் செய்யும்; புருஷருக்கும் ஸ்த்ரீகளுக்கும் அன்னி யோன்னியம் ப்ரீதியை யுண்டுபண்ணும். 162—164½.

ஏழாம் அத்தியாயம்

குளிகா கல்பனை.

குளிகை :—இனி குளிகைகள் செய்யும் வகை கூறப்படுகிறது; குளிகைக்கே வடகம், வடி, மோதகம், வடிகா, பிண்டி, குடம், வர்த்தி என்று வேறு பெயர்களுண்டு. வெல்லம், சர்க்கரை, மைஸாக்ஷி இவற்றில் ஏதாவது ஒன்றை அக்னியின்மீதேற்றி இளகச் செய்து, அதில் அவசிய மான சரக்குகளின் சூர்ணத்தைச் சேர்த்து, இளறி குளிகை செய்யலாம். சில ஸமயம் மைஸாக்ஷியைக் காய்ச்சாமலே, தேன் முதலிய திரவ பதார்த் தங்களைச் சேர்த்து குளிகை செய்யலாம். 1—3.

குளிகைகளில் சேரும் பதார்த்தங்களின் அளவு முதலியன :—குளி கைகளில் சர்க்கரை சேர்க்க வேண்டி வந்தால், அதைச் சூர்ணத்தினும் நான்கு மடங்காகவும், வெல்லமானால் இரண்டு மடங்கும், மைஸாக்ஷி, தேன் இவற்றை ஸம பாகமாகவும், இதர திரவ பதார்த்தங்களை இரண்டு மடங்

1. 'வாரீர' எனகிற பாடத்தில் நீர் வஞ்சி யென்றும்; 'வாரரீ' என்கிற பாடத்தில் பூனைக்காலி யென்று பொருள்.

காகவும் சேர்க்கவேண்டும். அவரவருடைய சரீர பலத்துக்குத் தகுந்த வாறு கர்ஷப்பிரமாணத்திற்கு அதிகப்படாமல் குளிகைகளுக்கு அளவுகள் ஏற்படுத்தவேண்டும். 4—5.

பாஹுசால தடம் :—பேய்தும்மட்டி, கோரைக்கிழங்கு, சுக்கு, நேபா ளம், கடுக்காய், சிவதைவேர், கிச்சிலிக்கிழங்கு, வாய்விடங்கம், நெரிஞ்சில், சித்திரமூலம், வாலுழுவை, இவற்றில் ஒவ்வொன்றும் அரை பலமும், கரு ணைக்கிழங்கு எட்டு பலமும், கடற்பாலை நாலு பலமும், சேராங்கொட்டை நாலு பலமும் சேர்த்து க்வாதம் காய்ச்சவேண்டும்; இந்த க்வாதத்திற்கு ஜலம் ஒரு திரோணம் சேர்த்து, அதை நாலில் ஒருபங்காகச் சுண்டக் காய்ச் சவும். கஷாயச் சரக்குகளின் மொத்த எடைக்கு மூன்று பங்கு வெல்லம் சேர்த்து, மறுபடியும் தீயிலேற்றிக் கிளறவேண்டும்; சூர்ணமும் கஷாய மும் ஒன்றுகக் கலந்து பக்குவமாகிற ஸமயத்தில் சித்திரமூலம், சிவதைவேர், நேபாளம், வாலுழுவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமும், த்ரிகடு, ஏலம், மிளகு, இலவங்கப்பட்டை இவை மும்மூன்று பலமும் சூர்ணித்துச் சேர்த்து பக்குவம் செய்து இறக்கி, சிறிது ஆறியதும் ஒரு பிரஸ்தம் தேனையும் சேர்த்து அனைத்தையும் ஒன்றுகக் கலந்து குளிகைகளாகச் செய்யவும்; குணத்திற் சிறந்த குளிகை யென்று வைத்தியர்கள் கொண்டாடும் 'பாஹு சாலகுடம்' எனப்படும் இது ஸகல அர்சோரோகங்கள், குன்மம், வாத ஸம்பந்தமான உதரரோகம், ஆமவாதம், பிரதிச்யாயம், க்ரஹணி, க்ஷயம், பீநஸம், ஹலீமகம், பாண்டு, பிரமேஹம் இவற்றைப் போக்கும்; சிறந்த ரஸாயனமுமாம். 6—12½.

மரிசாதி குளிகை :—மிளகும், திப்பிலியும், கர்ஷப்பிரமாணம், யவக்ஷா ரம் அரைகர்ஷம், மாதுளை இரண்டு கர்ஷம் இவற்றைச் சூர்ணம் செய்து, எட்டு கர்ஷங்கொண்ட வெல்லத்துடன் கலந்து, ஒவ்வொரு சாண அளவு குளிகைகள் உருட்டலாம்; இந்த குளிகையை வாயில் அடக்கிக்கொண்டிருந் தால் எவ்வித காஸமும் தீரும். 13—15.

சுண்டீயாதி குளிகை :—சுக்கு, கடுக்காய், வெல்லம், கோரைக்கிழங்கு இவற்றையாவது, தான்றிக்காயை மாத்திரமாவது குளிகை செய்து வாயில் அடக்கிக்கொண்டிருந்தால் எல்லா ச்வாஸ-காஸங்களும் குறையும். 16.

ஆமலகாதி குளிகை :—நெல்லிப்பருப்பு, தாமரைக்கிழங்கு, கோஷ்டம், நெற்பொரி, ஆலம் விழுது இவற்றை அரைத்துத் தேன்விட்டு குளிகைகளா கச் செய்து, வாயில் அடக்கிக்கொண்டு வந்தால் மிகுந்த ரக்தபட்சி நிவ் ருத்தியாகும். 17½.

ஸஞ்ஜீவநீ குளிகை :—வாய்விடங்கம், சுக்கு, திப்பிலி, கடுக்காய், நெல் லிக்காய், தான்றிக்காய், வசம்பு, சிந்திற்கொடி, சேராங்கொட்டை, நாபி இவற்றை ஸமயெடை சேர்த்து, பசுமூத்திரத்தினால் அரைத்து, குன்று மணியளவில் குளிகை செய்யவும். இந்த மாத்திரையை இஞ்சி ஸ்வரஸத் துடன் அஜீர்ணத்திலும் குன்மத்திலும் ஒரு குளிகையும், விஷூசியில் இரண்டு குளிகைகளும், ஸர்ப்பம் கடித்தால் மூன்று குளிகைகளும், ஸந்நிபாத ரோகங்களில் நான்கு குளிகைகளும் உட்கொள்ள மனிதரை அபாயகரமான நிலைமையிலிருந்து உயிர்ப்பிக்கும். இது 'ஸஞ்ஜீவநீ குளிகை' என்று வழங்கப்படும். 18—21.

வ்யோஷாதி குளிகை :—த்ரிகடு, புளிவஞ்சி, சவியம், தாளிசப்பத்ரி, சித்திரமூலம், ஜீரகம், புளி ஒவ்வொன்றும் கர்ஷ பரிமாணமும், இலவங்கப் பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி இவை ஒவ்வொன்றும் மூன்று சாண பரிமாணமும், வெல்லம் ஐந்து பலமும் சேர்த்து செய்யப்படும் மாத்திரை 'வ்யோஷாதி குளிகை'[1] எனப்படும். இது ஆமதோஷமுள்ள பீநஸ ரோகம், ச்வாஸகாஸம், அரோசகம், தொண்டைக்கம்மல், ப்ரதிச்யாயம் இவற்றைப் போக்கும். 22—23½.

சுண்டி குளிகை முதலியது:-(1)சுக்கு, வெல்லம் இவற்றை மாத்திரை செய்து ஆமதோஷங்களிலும், (2) திப்பிலி, வெல்லம் இவற்றை குளிகை செய்து அஜீர்ணத்திலும், (3) ஜீரகம், வெல்லம் இவற்றை குளிகை செய்து மூத்ர க்ருச்சிரத்திலும், (4) கடுக்காய், வெல்லம் இவற்றை குளிகை செய்து அர்சோரோகத்திலும் உபயோகிக்கலாம். 24½.

வ்ருத்ததாரீவாதி குளிகை :—கடற்பாலை, சேராங்கொட்டை, சுக்கு இவற்றின் சூர்ணத்துடன் வெல்லம் சேர்த்து மாத்திரை செய்துபயோகிக்க ஆறுவித அர்சோரோகங்களும் போகும். 25½.

(1) ஸ்ரோணீ குளிகை :—உலர்ந்த கருணைக்கிழங்கு மூப்பத்திரண்டு பாகம், சித்திரமூலம் பதினாறு பாகம், சுக்கு நான்கு பாகம், மிளகு இரண்டு பாகம் இவற்றைச் சூர்ணம் செய்து, போதுமான வெல்லம் சேர்த்து குளிகை செய்து அர்சோரோகத்தில் உபயோகிக்கலாம். (2) ஸ்ரோணீ குளிகை :—கருணைக்கிழங்கு, கடற்பாலை இவ்விரண்டும் தனித்தனி பதினாறு பங்கு, நிலப்பனங்கிழங்கு, சித்திரமூலம் இவை தனித்தனி எட்டு பங்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வாய்விடங்கம், சுக்கு, திப்பிலி, சேராங்கொட்டை, மோடி, தாளிசப்பத்திரி இவை ஒவ்வொன்றும் நான்கு பங்கு, இலவங்கப்பட்டை, ஏலம் மிளகு இவை ஒவ்வொன்றும் இரண்டு பங்கு; இவற்றைச் சேர்த்து சூர்ணம் செய்து, எல்லாவற்றிற்கும் இரண்டு மடங்கு வெல்லம் சேர்த்து இடித்து குளிகைகள் செய்யவும். இந்த மாத்திரைக்கு தீபநசக்தி விசேஷமாயுண்டு; அர்சஸ், வாதகபங்களாலான கிரஹணீ ரோகம், ச்வாஸம், காஸம், ப்லீஹரோகம், யானைக்கால், சோதை, விக்கல், மேஹரோகம், பகந்தரம், மயிர் நரைத்தல் இவற்றையும் போக்கும்; வ்ருஷ்யம், இரஸாயனம், மேத்யம்[2] என்கின்ற குணங்களுமுண்டு. 26—33.

தீரிபலாதி குளிகை :—த்ரிபலை, த்ரிகடு, சவியம், மோடி, சித்திரமூலம், தேவதாரு, சுத்தி செய்த பொன்னிமிளை,[3] இலவங்கப்பட்டை, மரமஞ்சள், கோரைக்கிழங்கு, வாய்விடங்கம் இவை ஒவ்வொன்றும் கால் பலம், இவை யனைத்துக்கும் இரு மடங்கு சுத்தி செய்த மண்டூரம் சேர்த்து, எல்லாவற்றை யும் எட்டு மடங்கு பசுமூத்திரத்திலிட்டு, அடுப்பிலேற்றி பக்குவம் செய்து, குளிகைகள் செய்யவும். 34—36½.

பிப்பல்யாதி குளிகை :—தேன் ஒரு பங்கு, நெய் இரண்டு பங்கு, திப்பிலி நாலு பங்கு, சர்க்கரை எட்டு பங்கு, பால் பதினாறு பங்கு, சதுர்

1. வ்யோஷம்—சரியூஷணம் அல்லாது த்ரிகடு.
2. வ்ருஷ்யம் :—வாஜீகரம் என்று கூறப்படும் குணம். மேத்யம்—புத்தியை வ்ருத்தி செய்யும் குணம்.
3. பொன்னிமிளை சுத்தி (ஸ்வர்ண மாக்ஷிகம் மண்டூர சுத்திமுதலிய வற்றைப்பற்றி 11-ம் அத்தியாயம் பார்க்க.

ஜாதகம் ஒரு பங்கு இவையனைத்தையும் சேர்த்து அக்னியிலேற்றி பக்குவம் செய்து மாத்திரைகளாக உருட்டவும் இந்த குளிகை தாதுக்களைப்பற்றிய ஸகல ஜ்வரங்கள், ச்வாஸகாஸம், பாண்டு ரோகம், தாதுக்களின் க்ஷீணம், அக்னிமாந்த்யம் இவற்றைப்போக்கும். 37—39.

சந்த்ரப்ரபா குளிகை :—கார்ப்போகரிசி, வசம்பு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீந்தில், தேவதாரு, மஞ்சள், அதிவிடயம், மரமஞ்சள், மோடி, சித்திரமூலம், தனியா, த்ரிபலை, சவ்வியம், வாய்விடங்கம், ஆனைத் திப்பிலி, த்ரிகடு, பொன்னிமிளை, க்ஷாரத்வயம், இலவணத்ரயம் இவற்றில் ஒவ் வொன்றும் சாணயெடையும், சிவதை வேர், நேர்வாளம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, ஏலம், மூங்கிலரிசி இவை ஒவ்வொன்றும் கால் பலமும், அயபஸ்மம் அரைபலமும், சர்க்கரை ஒரு பலமும், சிலாஜது இரண்டு பல மும், மைசாக்ஷி இரண்டு பலமும் சேர்த்து சூர்ணம் செய்து, சிறிது ஜலம் விட்டு அரைத்து மாத்திரைகள் செய்யவும்; 'சந்த்ரப்ரபா குளிகை' என் கிற இது ஸர்வ ரோகங்களையும் போக்கும்; விசேஷமாக இருபதுவித பிர மேஹங்கள், மூத்ரக்ருச்சிரம், மூத்ராகாதம், அச்மரீ ரோகம், மலபந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, மேஹரோக கிரந்திகள், அர்புதம், அண்டவ்ருத்தி, பாண்டுரோகம், காமாலை, ஹலீமகம், குடலிறக்கம், இடுப்பு வலி, ச்வாஸகாஸம், விசர்ச்சிகை யென்னும் சர்மவியாதி, குஷ்டம், அர்சஸ், சொறி, ப்லீஹரோகம், பகந்தரம், தந்தரோகம், நேத்ரரோகம், ஸ்த்ரீகளின் மாதவிடாய் வியாதிகள், புருடரின் சுக்லத்தைப் பற்றிய வியாதிகள், அக்னி மாந்த்யம், அரோசகம், ஸந்திபாத வியாதிகள் இவற்றைப் போக்கும். பல் யம், வ்ருஷ்யம், இரஸாயநம் என்கிற குணங்களும் இதற்கு உண்டு. இச் சந்சந்த்ர ப்ரபா குளிகையில் கர்ஷமென்கிற அளவு நான்கு சாணங் கொண்டதாம். 40—49.

காங்காயந குளிகை :—குராசாணியோமம், ஜீரகம், தனியா, மிளகு, வெண் காக்கட்டான், ஓமம், கருஞ்ஜீரகம் இவை ஒவ்வொன்றும கால் பலம், பெருங்காயம் ஆறு சாணம், க்ஷாரத்வயம், பஞ்சலவணம், சிவதைவேர் இவை தனித்தனியே அரைப்பலம், நேபாளம், கிச்சிலிக்கிழங்கு, அல்லிக் கிழங்கு, வாய்விடங்கம், மாதுளம்பழம், கடுக்காய், சித்திரமூலம், புளிவஞ்சி, சுக்கு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் சேர்த்து, நன்கு சூர்ணம் செய்து, கொடிமாதுளம்பழச்சாறும் சேர்த்து அரைத்து குளிகைகள் செய்யவும். நெய், பால், மத்தியங்கள், மோர் முதலிய புளிப்பான வஸ்துக்கள், உஷ்ண ஜலம் இவற்றில் ஏதேனும் ஒன்று இதற்கு அநுபானம். இந்த குளிகை 'காங்காயர்' என்கிற முனிவரால் செய்யப்பட்டு, குணத் திற் சிறந்ததென்று கூறப்பட்டுள்ளது. குன்மரோகங்களில் மிக உபயோக மானது. மத்தியங்களுடன் வாத குன்மத்திலும், பசும்பாலோடு பித்த குன்மத்திலும், பசு மூத்திரத்திடன் கப குன்மத்திலும், ஒட்டகப் பாலு டன் ஸ்த்ரீகளின் இரத்த குன்மத்திலும் உட்கொள்ளலாம். இருதய வியாதி கள், கிரஹணீ, வயிற்று நோய், வயிற்றுக் கிருமிகள், அர்சஸ் இவைகளும் தீரும். 50—55½.

யோகாராஜகுக்குலு:—சுக்கு, மோடி, திப்பிலி, சவ்வியம், சித்திரமூலம், பொரித்த காயம், ஓமம், கடுகு, ஜீரகம், கருஞ்ஜீரகம், அசோணகம், குடசப் பாலை, வட்டத்திருப்பி, வாய்விடங்கம், ஆனைத் திப்பிலி, கடுகரோகிணி,

அதிவிடயம், கண்டுபாரங்கி, மருளங்கிழங்கு, வசம்பு இவ்விருபது சரக்குகளில் ஒவ்வொன்றும் சாண அளவு; இவ்வனைத்துக்கும் இரண்டு மடங்கு த்ரிபலை; இவற்றைச் சூர்ணம் செய்து, இவற்றிற்கு ஸமயெடை மைசாக்ஷி சேர்த்து, அடுப்பிலேற்றி பக்குவம் செய்து பாகுபோல் வருகையில், வங்கபஸ்மம், நாகபஸ்மம், வெள்ளிபஸ்மம், காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம், மண்டூரபஸ்மம், இரஸவிந்தூரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் கலந்து, அனைத்தையும் ஒரு பிண்டமாகச் செய்து, நெய் வைத்த ஒரு பாத்திரத்தில் சேர்த்து, சிறிது ஆறியபின் ஒவ்வொரு சாண யெடையுள்ள மாத்திரைகளாக உருட்டவும்; 'யோகராஜ குக்குலு' என்கிற இது ஸந்நிபாத வியாதிகளைப் போக்கும்; இரஸாயந குணத்திலும் பெயர் போனது. இதையுபயோகிக்கையில் புணர்ச்சி, ஸாதாரண ஆஹாரவகைகள், பானவகைகள் இவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்கிற நியமமில்லை. ஸகல வாதரோகங்கள், குஷ்டரோகம், அர்சஸ், கிரந்நி, பிரமேஹம், வாதரக்தம், வயிற்று நோய், பகந்தரம், உதாவர்த்தம், க்ஷயம், குன்மம், அஸ்மரம், ஊரோக்கிரஹம், அக்னி மாந்த்யம், ச்வாஸகாஸம், அரோசகம், சுக்ல தோஷம், மரதவிடாய் தோஷம் இவற்றைத் தீர்க்கும்; மலட்டுத் தன்மையைப் போக்கிக் கருத்தரிக்கச் செய்யும்; புருடருக்கு ஆண்மைக் குறைவையும் அகற்றும். யோகராஜகுலுக்குலுவை ராஸ்நாதிக்வாதத்துடன் பல வாதரோகங்களிலும், காகோலீக்வாதத்துடன் பித்தரோகங்களிலும், ஆரக்வதாதி க்வாதத்துடன் கபரோகங்களிலும், தார்வ்யாதி க்வாதத்தோடு மேஹரோகங்களிலும், பசு மூத்திரத்தோடு பாண்டு ரோகத்திலும், தேனோடு மேதோரோகத்திலும், வேப்பம்பட்டைக் கஷாயத்துடன் குஷ்டரோகத்திலும், குடூச்யாதி க்வாதத்துடன் வாதத்திலும், பிப்பல்யாதி க்வாதத்தோடு சோகை வயிற்றுவலிகளிலும், பாடலாதி க்வாதத்துடன் எலி விஷத்திலும், த்ரிபலாக்வாதத்துடன் உக்கிரமான கண்ணோயிலும், புநர்நவாதி க்வாதத்துடன் ஸகல உதரரோகங்களிலும் உபயோகிக்கலாம். 56—69½.

கைதோரிக குக்குலு :—மூன்று பிரஸ்தம் த்ரிபலையையும், ஒரு பிரஸ்தம் சீந்திற்கொடியையும் நன்றாக இடித்து, இரும்புப் பாத்திரத்திலிட்டு, ஒன்றரை நிரோண அளவு ஜலம் சேர்த்து, அரைவாசி ஜலம் வற்றும் வரையில் காய்ச்சி வடிக்கட்டவும்; பிறகு அக்கஷாயத்தை அதே பாத்திரத்திலிட்டு ஒரு பிரஸ்தம் சுத்தமான மைசாக்ஷியைச் சேர்த்துக் கரண்டியினால் அடிக்கடியும் கிளறிக்கொண்டே காய்ச்சவும்; வெல்லப் பாகுபோல் குழைந்துவரும் ஸமயத்தில் இரண்டு பலம் த்ரிபலை, ஒரு பலம் சீந்திற் கொடி, ஒன்றரைப்பலம் த்ரிகடு, அரைப்பலம் வாய்விடங்கம், கால்பலம் நேபாளம், கால் பலம் சிவதை வேர் இவற்றை நன்கு சூர்ணம் செய்து சேர்த்து, அனைத்தையும் ஒன்றாகக் கிளறி உருட்டி, ஒரு நெய்ப்பாத்திரத்தில் சேர்த்து, சாணப்பிரமாணங்கொண்ட மாத்திரைகளாகச் செய்யவும். இந்த மாத்திரைகளை தோஷ நிலைமையறிந்து பெரும்பாலும் எல்லா வியாதிகளிலும் உஷ்ண ஜல அநுபானத்துடன் உட்கொள்ளலாம். 'கைசோரிக குக்குலு' எனப்படும் இந்த குளிகை ஸகல குஷ்டங்கள், ஸந்நிபாத வாதரக்தம், எல்லாவித விரணங்கள், குன்மங்கள், பிரமேஹபிடகைள், பிரமேஹம், உதரரோகம், அக்னிமாந்த்யம், காஸம், சோதை, பாண்டு இவற்றைத் தீர்க்கும். இதை தினந்தோறும் சிறிது உபயோகித்துவந்தால் இரஸாயநமாகவும் இருக்கும். சரீரத்திற்குக் காந்தியை தரும். வாஸாதி க்வாதத்துடன் நேத்திர ரோகங்களிலும், வருணாதிக்வாதத்துடன் விரணங்கள் குஷ்டங்கள் முதலானவற்றிலும் உட்கொள்ளலாம். மைஸாக்ஷி சேர்ந்த இவ்வித ஔஷதமுபயோகிக்கும் போது புளிப்பான பதார்த்தங்கள், தீக்ஷ்ண பதார்த்தங்கள், அஜீர்ணம் செய்யும் பதார்த்தங்கள், புணர்ச்சி, சிரமமுண்டாக்கக் கூடிய வேலைகள், வெயில், மத்தியம், கோபம் இவற்றை விலக்கவேண்டும். 70—81.

த்ரிபலாதி குக்குலு :—த்ரிபலா சூர்ணம் மூன்று பலம், திப்பிலி சூர்ணம் ஒரு பலம், மைசாக்ஷி ஐந்து பலம் இவற்றை ஒன்றாக இடித்து, குளிகைகளாய் உருட்டி, அவரவரது ஜாடராக்கினியின் பலத்திற்குத் தகுந்தவாறு உபயோகிக்க பகந்தரம், குன்மம், சோதை இவை தீரும். 82—83.

கோக்ஷுராதி குக்குலு :—இருபத்தெட்டு பலம் நெரிஞ்சியை ஆறு மடங்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சி, பாதி ஜலம் வற்றிப்போனதும் வடிக்கட்டி, அக்கஷாயத்தில் எழு பலம் மைசாக்ஷி சேர்த்து பக்குவம் செய்து, வெல்லப் பாகுபோல் வரும்பொழுது த்ரிகடு, த்ரிபலை, கோரைக்கிழங்கு ஒவ்வொன்றையும் எழு பலம் எடை சூர்ணஞ்செய்து, அதில் கலந்து, மாத்திரைகளாய் உருட்டியுட்கொள்ள, பிரமேஹம், மூத்திரக்ருச்சிரம், பெரும்பாடு, மூத்திராகாதம், வாதரக்தம், வாதரோகங்கள், சுக்ல தோஷம், அச்மரீ இவை குணமாகும். 84—87.

த்ரி பலாதி குளிகை இரண்டாவது :—த்ரிபலை எட்டு பலம், சுத்தமான சோரங்கொட்டை நான்கு பலம், கார்ப்போகரிசி ஐந்து பலம், வாய்விடங்கம் நான்கு பலம், அயபஸ்மம், சிவதைவேர், மைசாக்ஷி, சிலாஜது இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், அல்லிக்கிழங்கு எட்டு பலம், சித்திரமூலம் அரைப் பலம், மிளகு அரைக்கால் பலம், சுக்கு, திப்பிலி, கோரைக் கிழங்கு, இலவங்கப் பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, குங்குமப்பூ ஒவ்வொன்றும் சாணயெடை; இவ்வனைத்தையும் சூர்ணம் செய்து, இவற்றிற்கு ஸமயெடை கற்கண்டை பாகு செய்து, அதில் மேற்கூறிய சூர்ணத்தைப் போட்டு, நன்றாகக் கிளறி மாத்திரைகளாய் உருட்டி அவரவரது சரீரக் கூறுபாட்டுக்கேற்றவளவு உபயோகித்து வர அகில குஷ்டங்கள், ஸந்நிபாத வியாதிகள், பகந்தரம், பிலீஹவ்ருத்தி, குன்மம், நாக்கு உள் தவடை தொண்டை சிரஸ் நேத்திரம் புருவம் இவற்றிலுண்டாகும் ரோகங்கள், இடுப்புவலி முதலியவையும் தீரும். நாபிக்குக் கீழுள்ள அவயவங்களில் வியாதி கண்டால் ஆஹாரமுண்பதற்கு முன்பும், வயிற்றிலுண்டான வியாதிகளுக்கு உணவின் இடையிலும், மார்புக்கு மேற்புறத்து அவயவங்களில் வியாதி கண்டால் ஆஹார முண்டபிறகும் உட்கொள்ளவேண்டும். 88—94½.

காஞ்சநார குக்குலு :—செம்மந்தாரப்பட்டை இருபத்தைந்து பலம், த்ரிபலை ஆறு பலம், த்ரிகடு மூன்று பலம், மாவலிங்கம் பழம் ஒரு பலம், ஏலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி இவை ஒவ்வொரு கர்ஷமும் சேர்த்து சூர்ணம் செய்து, அனைத்துக்கும் ஸமயெடை மைசாக்ஷி கூட்டி

1. மைசாக்ஷி யென்னும் குங்கிலியம் சேர்த்து செய்யப்படும் குளிகைகள் 'குக்குலு' என்று வழங்கப்படும்.

2. இங்கு குறிப்பிட்டுள்ள கஷாய வகைகளின் விவரங்களை 'க்வாத கல்பனை' அத்தியாயத்திற் பார்க்க.

யிடித்து, சாணமெடையில் குளிகைகள்செய்து, தினந்தோறும் காலையில் உட்கொண்டுவரலாம். உக்கிரமான கண்டமாலை, அபசி, அர்புதம், கிரந்திகள், விரணங்கள், குன்மம், குஷ்டம், பகந்தரம் இவை போகும். கொட்டைக் கரந்தையின் க்வாதத்தையாவது, கருங்காலி மரப்பட்டையின் க்வாதத்தை யாவது, கடுக்காயின் கஷாயத்தையாவது, உஷ்ண ஜலத்தையாவது அநுபான மாகக் கொள்ளலாம். 95—100.

மாஷாதி குளிகை:—உளுந்து, கோதுமை, திப்பிலி, வாற்கோதுமை, சம்பா அரிசி இவற்றை உமி நீக்கித் தனித்தனியே சூர்ணம் செய்து, ஒவ் வொன்றிலும் ஒவ்வொரு பலம் எடுத்து ஒன்றுகக் கலந்து, அனைத்தினும் அரைவாசி நெய் சேர்த்துப் பொரித்து, பிறகு சூர்ணமனைத்துக்கும் ஸமமாக கற்கண்டையும், இரண்டு மடங்கு ஜலத்தையும் சேர்த்து, சிறுகச் சிறுகத் தீயிட்டு நன்றுகப் பக்குவம் செய்து, பின்பு மாத்திரைகளாய் உருட்டவும். இதில் ஒவ பலம் மருந்தை நான்கு மடங்கு பாலுடன் மாலை நேரத்தில் தினந் தோறும் உட்கொண்டு வர ஆண்மை யதிகரிக்கும்; சிற்றின்பங்களில் மிக முயன்றலும் பலங்குன்றாது. இவ்வௌஷதமுபயோகிக்கையில் உப்பையும், புளிப்பையும் விலக்கவேண்டும். 101—105.

எட்டாம் அத்தியாயம்

லேஹ்ய கல்பனை

லேஹ்யமும் அதன் பரிமாணமும்:—க்வாதம் முதலியதை [1] மீண்டும் காய்ச்சி பக்குவம் செய்வதால் திரண்டு கனமாக வரும் பாகமானது லேஹ்ய மெனப்படும்; இதற்கே ரஸக்ரியை, அவலேஹம், லேஹம் என்றும் பெயர். லேஹ்யங்களை உட்கொள்ளுவதற்குப் பொது அளவு ஒரு பலமாம். 1.

லேஹ்யத்தில் சேர்க்கவேண்டிய வஸ்துக்களின் பிரமாணங்கள்:—லேஹ்யத்தில் சர்க்கரை அதில் உபயோகிக்கப்படும் சூர்ணத்தைக்காட்டிலும் நான்கு மடங்கும், வெல்லமானால் இரு மடங்கும், திரவதார்த்தங்கள் [2] நான்கு மடங்கும் உபயோகிக்கப்படவேண்டும், லேஹ்ய பாகங்களுக்கு எங்கும் இதுவே பொதுப் பிரமாணமாகும். 2.

லேஹ்ய பாகத்தின் அறிதறிகள்:—லேஹயம் நன்கு பக்குவமாகிற நிலைமைக்கு வந்தால், அதன் இளகிய பாகானது நூல்போல் இழுபடும்; அதை ஜலத்திலிட்டால் அமிழ்ந்துவிடும்; விரல்களால் அழுத்தினால் சிறிது உரப்பாயிருப்பதுடன், அதில் அங்குலிகளிலுள்ள இரேகைகளின் முத்தி ரையும் பதியும்; அதில் சேர்க்கப்படும் சரக்குகளுக்குள்ள சுவையும், மண மும், நிறமும் நன்கு உணரப்படும். 3.

லேஹ்யத்திற்ற அநுபானங்கள்:—பால், கருப்பஞ்சாறு, பஞ்சமூல கஷாயத்தினுலான யூஷம், [3] வாஸாக்வாதம் [4] இவை பொதுவாக லேஹ்யங் களுக்குச் சிறந்த அநுபானங்களாகும். 4.

---

1. இங்கு க்வாதம் முதலியது என்று ஸ்வரஸம், கல்கம், க்வாதம், பாண்டம், ஹிமம் என்கின்ற ஐத்துவித கஷாயங்களும் குறிக்கப்படுகின்றன.
2. திரவபதார்த்தங்கள் பால், தேன், நெய் முதலியவை.
3. பஞ்சமூலம்—81-ம் பக்கத்திலும், யூஷம் 80-ம் பக்கத்திலும் விவரம் காண்க.
4. வாஸா க்வாதம் 'கேவல வாஸா க்வாதம்' 74-ம் பக்கம்பார்க்க.

கண்டகார்யாதி அவலேஹம்:—ஒரு திரோண அளவு ஜலத்தில் நூறு பலம் கண்டங்கத்திரியைச் சேர்த்து க்வாதம் காய்ச்சவும்; சேர்த்த ஜலத்தில் நாலிலொரு பாகம் மிகுந்திருக்கையில், இச் சரக்குக்களைச் சூர்ணம் செய்து சேர்க்கவேண்டும்:—சீந்திற்கொடி, சவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, கர்க்கடசிருங்கி, திரிகடு, காஞ்சொறி, கண்டுபாரங்கி, சிற்றரத்தை, கச்சோ ரம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம்; சர்க்கரை இருபத்தைந்து பலம்; நெய், நல்லெண்ணெய், தனித்தனி எட்டு பலம்; இவற்றைச் சேர்த்து லேஹ்யமாகச் செய்து ஆறிய பிறகு தேன் எட்டு பலமும், திப்பிலிப் பொடி நான்கு பலமும் சேர்த்து, நல்ல மட்பாத்திரத்தில் வைத்திருக்கவும். இது விக்கல், ச்வாஸரோகம் இவற்றை நன்றுகப்போக்கும். 5—9.

தீயவநப்ராசாவலேஹம்:—பாதிரி, அகில், பெருங்குமிழன், பில்வம், பெருமரம், நெரிஞ்சில், சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்திரி, சிறுகழு நீனை, திப்பிலி, கர்க்காடகசிருங்கி, திராக்ஷை, சீந்தில், கடுக்காய், சிற்ற முட்டி, கீழாநெல்லி, ஆடாதோடை, முத்தி, ஜீவந்தீ, கச்சோரம், ஜீவகம், ரிஷபகம், கோரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, சிறுகோவை, நரிப்பயறு, பெருவீடுகொள்ளி, நிலப்பூசுணிக்கிழங்கு, சாறடை, காகோலீ, தாமரை, மேதா, மஹாமேதா, சிற்றேலம், அகருக்கட்டை, சந்தனம் இவற்றில் ஒவ் வொரு பலமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்தில் திரோணபரிமாணம் ஜலத்தில் சேர்த்து, இவற்றுடன் ஐந்நூறு நெல்லிக்கனிகளையும் போட்டு பக்குவம் செய்து, எட்டிலொரு பங்காகச் சுண்டும்படி கஷாயம் காய்ச்சி, அதிலுள்ள நெல்லிக்கனிகளைப் பிளந்து கொட்டைகளை யெடுத்து, வஸ்தி ரத்திலிட்டு நன்றுகப்பிழிந்து, அந்தத் திப்பியை எழு பலம் நெய்யில் சேர்த்து, சிறுகச் சிறுக அக்கினியில் வறுத்தெடுத்து, முற்கூறிய க்வாதத்தை வடிக் கட்டி இதில் சேர்த்து, ஐம்பது பலம் கற்கண்டையும் அத்துடன் கூட்டி லேஹ்யபாகமாகச் செய்யவேண்டும்; அப்பால் திப்பிலி இரண்டு பலம், மூங்கிலுப்பு நான்கு பலம், இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம் ஒவ்வொன்றும் மூன்று சாணமெடை; இவற்றை நன்கு சூர் ணம் செய்து, மேற்கூறிய லேஹ்யத்தில் சேர்த்துக் கலந்து, ஆறு பலம் தேனையும் விட்டுக் கிளறவேண்டும். ச்யவனர் என்கிற இருஷியினால் கூறப்பட்ட இந்த லேஹ்யம் 'ச்யவனப்ராசம்' என்று வழங்கப்படுகிறது. க்ஷயரோகத்தினால் பீடிக்கப்படுபவர், தமது ஜீர்ண சக்திக்கேற்றவாறு தகுந்த அளவுகளில் இதை இரஸாயனமாக உட்கொள்ளலாம்; இதை பாலர், வயது முதிர்ந்தவர், உரஸ்தரோகிகள், ஸ்த்ரீ ஸம்பந்தத்தினால் தாதுக்ஷீணமடைந்தவர், இருதயரோகமுள்ளவர், ஸ்வரம் க்ஷீணித்தவர் இவர்களும் உபயோகிக்க நற்குணமுண்டாகும்; காஸம், ச்வாஸம், நாவ றட்சி, வாதரக்தம், உரோக்ரஹம், வாதபித்த தோஷம், சுக்ரமூத்திர தோஷம் இவற்றைப் போக்கும். இதை உபயோகிப்பவனுக்கு புத்தியும் தீக்ஷ்ணமாகும்; ஞாபகசக்தி அதிகரிக்கும்; புருஷனுக்குவேண்டிய தாது வும் புஷ்டியடையும்; சரீர நிறத்திற்கு ஒருவித தெளிவும் காந்தியும் உண் டாகும்; அஜீர்ணமென்பது உண்டாகாது. 10—21½.

கூஷ்மாண்ட லேஹ்யம்:—நீற்றுப்பூசணிக்காயை உடைத்து விதை களை விலக்கி, நூறுபலம் கதுப்பை யெடுத்து, சிறு துண்டுகளாக நறுக்கி, இரு மடங்கு ஜலம் சேர்த்து, ஜலம் பாதி சுண்டிப்போமளவும் காய்ச்சி,

பூசுணித் துண்டுகளை கனமான வஸ்திரத்திலிட்டுப் பிழிந்து, வெயிலில் சிறிது உலர்த்தி, முத்தி மூனையிலுல் அவற்றை நன்முகக் கொத்தி, வாயகன்ற தாமிர பாத்திரத்தில் சேர்த்து, எட்டு பலம் நெய் ஊற்றி சிறிது வறுக்கவும்; பிறகு முன் பிழிந்தெடுத்த பூசுணிச்சாற்றையும் இதில் ஊற்றி, நூறு பலம் கற்கண்டையும் சேர்த்து, அனைத்தையும் ஒன்முகப் பக்குவம் செய்ய நன்கு பக்குவமாய் வரும் ஸமயத்தில் திப்பிலி, சுக்கு, ஜீரகம் இவற்றை இரண்டிரண்டு பலமும், தனியா, இலவங்கப்பத்திரி, ஏலம், மிளகு, இலவங்கப்பட்டை ஒவ்வொன்றையும் அரைப்பலமும் கூட்டி செய்த சூர்ணத்தையும் நான்கு பலம் தேனையும் சேர்த்து, நன்முகக் கிளறிவிடவும். 'கூஷ்மாண்டாவலேஹம்' எனப்படும் இதை அவரவரது ஜீர்ணசக்திக் கேற்ற அளவில் உட்கொள்ள இரக்தபித்தம், க்ஷயம், ஜ்வரம், சீர இளைப்பு, நாவறட்சி, தலைச்சுற்றல், வாந்தி, ச்வாஸகாஸம், க்ஷதகாஸம் இவை தீரும்; பாலரும் விருத்தருங்கூட இதை உட்கொள்ளலாம். மார்புக் குத் தளர்ச்சியைப் போக்கி வன்மையு முண்டுபண்ணும்; வீருவ்ஷயம், ப்ருஹ்மணம், பல்யம் என்கிற குணங்களும் இதற்குண்டு. 22—28½.

ஸோம லேஹ்யம்:—கூஷ்மாண்ட லேஹ்யத்திற்குக் கூறிய முறைப் படியே காருங்கருணைக் கிழங்கையும் சமைத்து லேஹ்யம் செய்யலாம்; இது அர்சஸ், ஆமவாதம், அக்னிமாந்த்யம் இவற்றைப் போக்கும். 29½.

அகஸ்த்திய ஹரீதகீ லேஹ்யம்:—சிறந்த கடுக்காய்கள் நூறு, வாற் கோதுமை ஓர் ஆடகம், தசமூலம் இருபது பலம், சித்திரமூலம், யானைத் திப்பிலி, காயுருவி, கச்சோரம், காஞ்சொறி, சங்கங்குப்பி, கண்டுபாரங்கி, மோடி, சிற்றரமுட்டி, தாமரைக்கிழங்கு இவை இரண்டிரண்டு பலம்; இவற்றை ஐந்து ஆடகம் ஜலத்தில் சமைத்து, அதில் யவதானியம் நன்கு சமையலானதும் கஷாயத்தை வடிகட்டி, கடுக்காய்களை எடுத்து விதை நீக்கி, மீண்டும் இக்கஷாயத்தில் சேர்த்து, நெய் எட்டு பலமும், நல்லெண்ணெய் எட்டு பலமும், நூறு பலம் வெல்லமும் கூட்டி பக்குவம் செய்து, லேஹ்ய பாகத்தில் இறக்கி, அதில் தேன் நாலு பலமும், திப்பிலியின் சூர்ணம் நாலு பலமும் சேர்த்திடவும். இந்த லேஹ்யத்துடன் அதிலடங்கிய கடுக்காயையும் ஒவ்வொன்று தினந்தோறும் புஜித்து வர க்ஷயம், காஸம், ஜ்வரம், ச்வாஸம், விக்கல், அர்சஸ், அரோசகம், பீநஸம், சிரஹணீ இவை நீங்கும்; தேஹத் தளர்ச்சி, மயிர் நரைத்தல் இவையுமுண்டாகாவண்ணம் தேஹத்திற்கு வன் மையும், அழகிய நிறமும் ஏற்படும்; இது புருடருக்குச்சிறந்த இரஸாயனம். பெரும்பாலும் ஸர்வரோகங்களையும் நீக்க அகஸ்திய முனிவரால் இது செய்யப்பட்டதாம். 30—37.

(1) **தடஜாவலேஹம்:**—நூறு பலம் வெட்பால மரப்பட்டையை ஒரு திரோணம் ஜலத்தில் சேர்த்து நான்கில் ஒரு பாகம் ஜலம் மிகுமாறு காய்ச்சி வடிகட்டி, முப்பது பலம் வெல்லம் சேர்த்துப் பாகுபோல் வருமள வும் கிளறிக்கொண்டு மீண்டும் காய்ச்சி, இரஸாஞ்ஜனம்,[1] இலவம் பிசின், த்ரிகடு, த்ரிபலை, நறுவிலி, சித்திரமூலம், வட்டத்திருப்பி, பில்வம், வெட்பா லரிசி, வசம்பு, சேராங்கொட்டை, அதிவிடயம், வாய்விடங்கம், உலர்ந்த முள்ளங்கி இவற்றை ஒவ்வொரு பலம் சூர்ணம் செய்து, மேற்கூறிய அவலே ஹத்தில் சேர்த்து, அத்துடன் நாலு பலம் நெய்யையும் ஊற்றி பகுவம்

1. இரஸாஞ்ஜனம்:—76-ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.

செய்து இறக்கி, சிறிது ஆறியதும் நான்கு பலம் தேன் சேர்த்துக் கலக்கவும்; இந்த லேஹ்யத்தால் அர்சோரோகங்களும், அர்சஸ்ஸாலுடண்டாகிற இதர ரோகங்களும், அதிஸாரம், அரோசகம், சிரஹணீ, பாண்டுரோகம், இரக்த பித்தம், காமாலை, அம்லபித்தம், சோதை, சீர இளைப்பு, சீதபேதி இவைக ளும் தீரும். இதற்கு அநுபானமாக நெய், மோர், பால், தயிர் இவற்றை யாவது, நெய் ஜலம் இவ்விரண்டையுமாவது உபயோகிக்கலாம். உட் கொண்ட ஔஷதம் நன்கு ஜீர்ணமானதும் சரீரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவுகளை உசிதப்படி புஜித்துவரவேண்டும். (2) **தடஜாவலேஹம்:**—நூறு பலம் பசுமையான வெட்பாலப் பட்டையை ஒரு திரோணம் ஜலத்தில் காய்ச்சி அது நான்கில் ஒரு பாகமாகக் காய்ந்ததும் வடிக்கட்டி, பிறகு தொட்டாற்சுணங்கி, காட்டாத்திப்பூ, பில்வப் பட்டை, வட்டத்திருப்பி, இலவம் பிசின், கோரைக் கிழங்கு, அதிவிடயம் இவற்றை ஒவ்வொரு பலம் சூர்ணம் செய்து, கஷாயத்தில் சேர்த்து, மறுபடி கரண்டியில் குழம்பாகப் பற்றிக்கொள்ளும் வரையில் பக்குவம் செய்யவேண்டும். இந்த அவலே ஹத்தை, ஜலத்துடனுவது, ஆட்டுப்பாலுடனுவது, பாலேட்டோடாவது உட்கொள்ள, பற்பல நிறமானதும் வேதனை தருவதுமான கடுமையான அதிஸாரங்களும், ரக்தப்ரதரமென்னும் பெரும்பாடும், ஸகல அர்சோ ரோகக்களும், சீதபேதியும் தீரும். 38—48½.

ஒன்பதாம் அத்தியாயம்

[1] ஸ்நேஹ கல்பனை.

ஸ்நேஹபாகத்திற்கு ஸாமான்ய விதி:—க்ருதமாவது [2] தைலமாவது பக்குவம் செய்யவேண்டுமானுல், அதில் கல்கத்திரவ்யங்களினும் [3] க்ருதம் அல்லது தைலத்தை நான்கு மடங்கும், தைலம் அல்லது க்ருதத்தினும் ஜலத்தை நான்கு மடங்கும் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; இத் தைலத்தை அல்லது க்ருதத்தை ஒரு பலம் பரிமாணத்தில் உட்கொள்ளலாம்; அல்லது கஷாயத்திலிடவேண்டிய ஔஷதச் சரக்குகள் ஒரு பங்காஞல், அதற்கு நாலு பங்கு ஜலம் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அக் கஷாயத்திலும் ஸ்நேஹங்களைப் பக்குவம் செய்யலாம். 1—2.

ஸ்நேஹபாகத்தில் விசேஷ விதிகள்:—கஷாயமிடக்கூடிய சரக்குகள் அவற்றின் தன்மைகளைப்பற்றி மிருது பதார்த்தங்கள், கடின பதார்த்தங்கள், அதிகடின பதார்த்தங்கள், மத்யம பதார்த்தங்கள் என்று நாலுவிதமாகப் பகுக்கப்படும். அவற்றுள் மிருது பதார்த்தங்களிடவேண்டிய கஷாயத்தில் அப்பதார்த்தங்களினும் ஜலம் நாலு பங்கும், கடின பதார்த்தங்களுக்கு எட்டு பங்கு ஜலமும், அதி கடினபதார்த்தங்களுக்குப் பதினறு பங்கு ஜலமும்

1. ஸ்நேஹம்—நெய், தைலம், கொழுப்பு முதலிய எண்ணெய்ப் பொருட்களின் பொதுப் பெயர்.

2. க்ருதம்:—நெய்.

3. கல்கம்:—க்ருதம், தைலம் முதலியவற்றைக் கஷாயாதிகளில் பக்குவம் செய்கையில், அவற்றின் குணத்தை அதிகப்படுத்துவதற்காகத் தைலாதிகளில் சூர்ணமாகவோ அல்லது ஈரமாகவே இடித்தோ சேர்க்கப் படும் வஸ்துக்களின் கூட்டு.

சேர்க்க வேண்டும்; மிருதுவுமல்லாமல் கடின மூமாகாத மத்யம வஸ்துக்களுக்கும் எட்டு மடங்கு ஜலந்தான் வேண்டும். கஷாயத்தில் சேர்க்க வேண்டிய வஸ்துக்கள் கால் பலம் முதல் ஒரு பலத்திற்கு மேற்படாமலிருந்தால், ஜலத்தை அவற்றிற்குப் பதினாறு மடங்காகக் கூட்டவேண்டும்; ஒரு பலத்திற்கு மேல் நாலு பலத்திற்கு மேற்படாமலிருந்தால் எட்டு பங்கு ஜலமும், ஒரு பிரஸ்த்தம் முதல் ஒரு காரீவரையில் [1] நாலு பங்கு ஜலமும் வேண்டும். கேவலம் ஜலத்தைக் கொண்டோ, க்வாதங்களைக்கொண்டோ ஸ்நேஹம் பக்குவம் செய்ய வேண்டுமானால் அவற்றில் கல்கத்தை முறையே ஸ்நேஹத்தினும் நாலிலொரு பங்கு, ஆறிலொரு பங்கு, எட்டிலொருபங்கு இவ்வாறாகச் சேர்க்கவேண்டும். எந்த ஸ்நேஹபாகத்தில் தயி, பால், மாம்ஸ ரஸம், மோர் இவற்றில் எது சேர்க்கப்படுகிறதோ அதில் கல்கத்தை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும்; இவ்வாறு பால் முதலியவற்றாலேயே பக்குவம் பண்ணப்படும் ஸ்நேஹங்களில் கல்க பதார்த்தங்கள் நன்கு பக்குவமாவதற்கா நாலு பங்கு ஜலமும் சேர்ப்பது அவசியம். எந்த ஸ்நேஹங்களே ஐந்துவிதங்களுக்குக் குறையாத திரவபதார்த்தங்கள் சேர்த்து பக்குவம் பண்ணவேண்டுமென்று கூறப்படுகிறதோ, அவற்றில் ஒவ்வொரு திரவபதார்த்தமும் ஸ்நேஹத்திற்கு ஸமான அளவில் சேர்க்கவேண்டும்: திரவபதார்த்தங்கள் ஐந்து விதங்களுக்குக் குறைவாக இருந்தால், அவற்றை ஸ்நேஹத்தினும் நாலு மடங்காகச் சேர்க்கலாம். ஜலம் குறிப்பிடப்படாமல் வேறு திரவபதார்த்தத்தால் ஒரு ஸ்நேஹம் பக்குவம் பண்ணப்படுமாறு கூறியிருந்தால் ஸ்நேஹம் நன்கு பக்குவமாவதற்காக அதில் நாலு மடங்கு ஜலத்தைச் சேர்ப்பதுடன், கல்கத்தையும் ஜலம் விட்டுப் பிசைந்து உபயோகிக்கவேண்டும். ஒரு ஸ்நேஹபாகத்திற்கு க்வாதச் சரக்குகள் மாத்திரம் கூறப்பட்டு, கல்கம் முதலியது கூறப்படாமலிருந்தால், அதில் க்வாதத்திற்கு உபயோகித்த வஸ்துக்களையே கல்கமாகவும் சேர்க்கவேண்டும். கல்கமே சேர்க்காமல் ஸ்நேஹபாகம் செய்வதானால், அந்த ஸ்நேஹத்தை ஸ்வரஸம் முதலிய எதேனும் திரவ பதார்த்தத்தில் தனியாகப் பக்குவம் செய்யவேண்டும்; ஆனால் எதேனும் திரவபதார்த்தத்தால் மட்டும் பக்குவம் பண்ணப்படும் அவ்வித ஸ்நேஹபாகத்தில் ஏதாவது புஷ்பவகைகளையே கல்கமாக உபயோகிக்க வேண்டியிருந்தால், அந்த ஸ்நேஹத்தில் நாலு பங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் பண்ணவேண்டும்; அவ்வாறு ஸ்நேஹங்களில் புஷ்பகல்கம் சேர்க்க வேண்டுமானால், அதை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும். 3—11½.

ஸ்நேஹம் பக்குவமானதின் குறிகள்:—ஸ்நேஹத்திலிட்ட கல்கத்தில் சிறிதளவு எடுத்து விரல்களால் உருட்டினால் அக்கல்கம் திரிபோல் உருண்டு வரும்; அதை அக்னியிலிட்டால் சுடர் சப்தமிராது; ஸ்நேஹங்கள் பக்குவமாய் விட்டதற்கு இது பொதுக் குறி; மேலும் அதில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்நேஹம், கல்கத்திரவ்யங்கள் இவற்றிற்கு இயற்கையான மணம், நிறம், சுவை இவையும் ஸ்நேஹம் நன்கு பக்குவமான ஸமயத்தில் வெளிப்படையாகத் தெரியவரும். ஆனால் தைலபாகத்தில் நன்கு பக்குவமாகிற ஸமயத்தில் நுரையுண்டாய் தைலத்திற்கு வாஸனை முதலியது தோன்றும்; க்ருதம்

1. காரீ:—நாலாயிரத்துத் தொண்ணூற்றாறு பலம்.

பக்குவமாகும் ஸமயத்தில் நுரையுண்டாய், பிறகு அவை அடங்கி க்ருதம் தெளிவாகவும் வாஸனை முதலியதுடையதாகவும் காணப்படும். 12—13½.

மூன்றுவித ஸ்நேஹ பாகம்,—ஸ்நேஹபாகம் மிருது, மத்யமம், கடினம் என மூன்று விதம். அவற்றுள் சிறிது கஷாயமுதலியவற்றின் இரஸத்துடன் கூடிய கல்கமுள்ள ஸ்நேஹபாகம் மிருதுபாக மென்றும், இரஸமேயில்லாமல் சிறிது மெதுவான கல்க முள்ளது மிருதுபாகமென்றும், உரப்பான கல்கமுள்ளது கடினபாக மென்றும் கூறப்படும். 14—15½.

உபயோகிக்கத்தகாத ஸ்நேஹபாகங்கள்:— தக்தபாகமென்றும், ஆமபாகமென்றும் ஔஷதமாக உபயோகிக்கத்தகாத இரண்டு வித ஸ்நேஹபாகங்களுண்டு; கடினபாகத்திற்கு மேல் முறியுந்தன்மை யடைந்தால் அது தக்தபாகம் என்றும், மிருது பாகத்திற்கும் குறைவான பாகம் ஆமபாகம் என்றும் கருதப்படும். இவற்றுள் தக்தபாக மடைந்த ஸ்நேஹம் தாப முண்டாக்குவதுடன், பெரும்பாலும் பயனற்றதாகவுமிருக்கும்; ஆமபாகமான ஸ்நேஹம் வீர்யமற்றதாகவும், குருகுணமுள்ளதாகவும், ஆகவே அக்னி மாந்த்யமுண்டுபண்ணக் கூடியதாகவுமிருக்கும். 16½.

பாகபேதத்தினால் உபயோக பேதம்:—முற்கூறிய மூன்றுவித ஸ்நேஹபாகங்களுள் மிருதுபாகமாகச் செய்த ஸ்நேஹம் நஸ்யகர்மத்திலும், மத்யமபாகமான ஸ்நேஹம் அப்யங்கத்திலு முபயோகமாகும்; ரோகம் முதலியவற்றின் நிலைமைக்கேற்றவாறு இவற்றில் எது எவருக்கு ஏற்றதென்று வைத்தியர் நிச்சயிக்கவேண்டும். 17½.

ஸ்நேஹங்கள் பழகவேண்டும்:—க்ருதம், தைலம், லேஹ்யம் முதலானவற்றை ஒரு தினத்திலேயே பக்குவம் செய்து உபயோகித்து விடக்கூடாது; இவற்றைச் சில நாள் பழகவைத்து உபயோகிக்க விசேஷ குணமுண்டு. 18½.

க்ருதங்கள்:

பிப்பல்யாதி க்ருதம்:—திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, இந்துப்பு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் சேர்த்து ஒரு பிரஸ்த்தம் நெய்யை அதற்கு நாலு பங்கு பாலில் கலத்து பக்குவம் செய்யவும்; இந்த க்ருதம் ப்லீஹரோகங்கள், விஷமஜ்வரங்கள், அக்னிமாந்த்யம், அரோசகம் இவற்றைப் போக்கும். 19—20½.

சாங்கேரீ க்ருதம்:—திப்பிலி, மோடி, சித்திரமூலம், யானைத்திப்பிலி, நெரிஞ்சில், சுக்கு, தனியா, வட்டத்திருப்பி, பில்வவேர்ப்பட்டை, குரா சானியோமம் இவற்றை ஒவ்வொரு பலம் இடித்துச் சேர்த்து, அறுபத்தி நாலு பலம் நெய் ஊற்றி, நெய்க்கு நாலு மடங்கு புளியாரை ஸ்வரஸத்தையும், நாலு மடங்கு தயிரையும் சேர்த்து, சிறுகச் சிறுக பக்குவம் செய்யவும்; 'சாங்கேரீ க்ருதம்' எனப்படுகிற இது கபவாதங்கள், கிரஹணீரோகம், அர்சஸ், வயிற்றுப் பொருமல், குதம் நெகிழுதல், மூத்ர கருச்சிரம், சீதபேதி இவற்றைப் போக்குவதில் வெகு சிறந்தது. 21—24½.

மஹாரோதி க்ருதம்:—நூறு பலம் சிறு கடலைகீய ஒரு திரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்கு கஷாயமாகக் காய்ச்சி, பில்வவேர் எட்டு பலமும், நெய் பதினாறு பலமும் சேர்த்து பக்குவம் செய்யவும்; இது ஸகல அதிஸாரங்கள், கிரஹணீ, சீதபேதி இவற்றைப் போக்கும். 25—26½.

காமதேவ க்ருதம் :—அமுக்கிரங் கிழங்கு நூறு பலம், நெரிஞ்சில் ஐம்பது பலம், சிற்ரமுட்டி, சீந்திற்கொடி, சிறுமல்லி, நிலப்பனங் கிழங்கு, தண்ணீர்விட்டாங் கிழங்கு, சாறடை, அரசம்பட்டை, சுக்கு, குமிழம்பழம், தாமரைக் கிழங்கு, உளுந்து இவை ஒவ்வொன்றும் பத்து பலம், இவற்றை நான்கு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காக வற்றக் காய்ச்சி, அதில் ஜீவநீயகணம், கோஷ்டம், அல்லிக் கிழங்கு, செஞ்சந்தனம், இலவங்கப்பத்திரி, திப்பிலி, த்ராக்ஷை, காஞ்சொறிக்காய், கருநெய்தல், சிறுநாகப்பூ, நாட்டு நன்னாரி, சீமை நன்னாரி, சிற்ரமுட்டி, பேராமுட்டி. இவற்றைத் தனித்தனியே கால் பலம் இடித்து, இரண்டு பலம் சர்க்கரையும் கூட்டி, நாமக் கரும்பின் சாற்றில் ஓர் ஆடகமும், நெய் ஓர் ஆடகமும் சேர்த்து, சிறுகத் தீயிட்டு பக்குவம் செய்யவேண்டும். இந்த க்ருதம் இரத்த பித்தம், உரக்ஷதம், ஹலீமகம், பாண்டு, ஸ்வரபேதம், வாதரக்தம், மூத்ர க்ருச்ரம், பார்ச்வ சூலை, காமாலை, சுக்ரம் க்ஷீணித்தல், மாரெரிவு, சரீர மெலிவு, ஓஜஸ் க்ஷபித்தல் இவற்றைப் போக்கும்; ஸ்த்ரீகளுக்கு கருத் தரிக்கும் சக்தியையும், புருடருக்கு சுக்லத்தையும் உண்டுபண்ணும்; சிறந்த ரஸாயனம்; "காமதேவ க்ருதம்" என்று இதன்பெயர். 27—35.

த்ரிபலாதி கீருதம் :—த்ரிபலை, மஞ்சள், மரமஞ்சள், தக்கோலம், நாட்டு நன்னாரி, ஞரழல், சிறு மல்லிகை, பெருமல்லிகை, தேவதாரு, ஏலவாலுக மென்கிற கந்தத்ரவ்யம், கிரந்திதகம், தும்மட்டி, நேபாளம், மாதுளை, நாக கேஸரம், கருநெய்தல், ஏலம், மஞ்ஜிஷ்டி, வாய்விடங்கம், கோஷ்டம், அல்லிக் கிழங்கு, இலவங்கம், சந்தனம், தாளிசபத்திரி, கண்டங் கத்திரி இவ்வொன்றும் கால் பலம் இடித்துச் சேர்த்து, இவ்வனைத்திற்கும் நாலு மடங்கு ஜலம் சேர்த்து, கஷாயமாகப் பக்குவம் செய்து, ஒரு ப்ரஸ்தம் நெய்யை சேர்த்துக் காய்ச்சவேண்டும். இந்த க்ருதத்தை அபஸ்மாரம், ஜ்வரம், க்ஷயம், உன்மாதம், வாதரக்தம், காஸம், அக்னி மாந்த்யம், ப்ரதிச்யாயம், இடுப்புவலி, த்ருஷ்யகஜ்வரம், மூத்ர க்ருச்ரம், விஸர்ப்பம், சொறி, சிரங்குகள், பாண்டுரோகம், ஸ்த்தாவர ஜங்கமவிஷங்களாலுண்டாகும் தீங் குகள், ப்ரமேஹ ரோகங்கள் இவற்றில் உபயோகிக்கலாம்; ஸ்த்ரீகளுக்கு மலட்டுத் தன்மையைப் போக்கவும், பூதங்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர் இவற் ரலுண்டாகும் சங்கைகளை அகற்றவும் ஏற்றதாகும் 36—41.

அம்ருதாதி கீருதம் :—சீந்திற்கொடியைக் கஷாயமிட்டு, அக்கஷாயத் தில் அக்கொடியையே சூர்ணம் செய்து கல்கமாகச் சேர்த்து, பாலாற்றி, நெய்யையும் சேர்த்து பக்குவம் செய்யலாம். இந்த க்ருதம் எளிதில் வாத ரக்தத்தையும் முதிர்ந்தபோன குஷ்டத்தையும் சமனம் செய்யும். 42.

மஹாதிக்தக கீருதம் :—ஏழிலம்பாலை, அதிவிடயம், கொன்றை, கடுக ரோஹிணி, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், த்ரிபலை, பர்ப் பாடகம், பேய்ப்புடல், வேம்பு, மஞ்ஜிஷ்டி, திப்பிலி, அல்லிக்கிழங்கு, கிச்சி லிக்கிழங்கு, சந்தனம், காஞ்சொறி, தும்மட்டி, பேய்த்தும்மட்டி, மஞ்சள், மரமஞ்சள், சீந்தில், நாட்டு நன்னாரி, பெருங்குரும்பை, ஆடாதோடை, தண்ணீர்விட்டாங்கிழங்கு, கழற்சிக்காய், வாலுளுவை, அதிமதுரம், நில வேம்பு இவை ஒவ்வொன்றும் கால்பலமெடை; நெய் இவையனைத்தினும் நாலு பங்கு; நெல்லிக்கனியின் ஸ்வரஸம் நெய்யைக்காட்டிலும் இரண்டு மடங்கு; ஜலம் எட்டு பங்கு; இவ்விதம் மேற்படி வஸ்துக்களைச் சேர்த்து

பக்குவம் செய்த க்ருதம் வாதரக்தம், குஷ்டம், இரத்தபித்தம், இரத்தார் சஸ், பாண்டுரோகம், இருதயரோகம், குன்மம், விஸர்ப்பம், பெரும்பாடு, கண்டமாலை, க்ஷுத்ரரோகங்கள், ஜ்வரங்கள் இவற்றிலுபயோகிக்கலாம். இதற்கு 'மஹாதிக்தக க்ருதம்' எனப் பெயர். 43—48.

காஸீஸாதி கீருதம் :—அன்னபேதி, மஞ்சள், மரமஞ்சள், கோரைக் கிழங்கு, தாளகம், மனச்சிலை, கம்பில்லகம், கந்தகம்,[1] வாய்விடங்கம், குங்கி லியம், தேன்மெழுகு, வெண்கடுகு, இரஸாஞ்ஜனம், வஜ்ரம், கருங்காலி, வேப்பிலை, புங்கையிலை, நன்னாரி, வசம்பு, மஞ்ஜிஷ்டி, அதிமதுரம், ஜடா மாம்ஸி, காட்டுவாகை, வெள்ளிலோத்ரி, அல்லிக்கிழங்கு, கடுக்காய், தகர விதை இவ்வொவ்வொன்றும் கால்பலம் கூட்டி சூர்ணம் செய்து, அதை ஒரு தாமிர பாத்திரத்திலிட்டு, மூப்பது பலம் நெய் சேர்த்து, வெயிலில் ஏழு நாள் வைத்திருக்கவும். இந்த க்ருதத்தை குஷ்டம், த்த்ரு என்னும் படை, சொறி சிரங்குகள், குகதோஷங்கள், விஸர்ப்பம், வாதரக்தத்திலுளான கொப்புளம், மண்டை வெடிப்பு, உபதம்சம், நாடீவ்ரணம், கெட்டுப்போன இதர விரணங்கள், வீக்கம், பகந்தரம், லூதா என்னும் சிலந்தியிலுண்டா கும் விரணங்கள், இவற்றைப் போக்க உபயோகிக்கலாம்; இது விரணங்க ளில் தோஷங்களையகற்றி அவற்றை சீக்கிரம் ஆறவும் செய்யும்; சர்மத்திற்கு நல்ல நிறத்தையும் தரும். 49—55.

ஜாத்யாதி கீருதம் :—ஜாதிக்காய், வேம்பு, பேய்ப்புடல், மஞ்சள், மர மஞ்சள், கடுகரோகிணி, மஞ்ஜிஷ்டி, அதிமதுரம், தேன்மெழுகு, புங்கை, வெட்டி வேர், நன்னாரி, மயில்துத்தம் இவற்றைப் பொடித்து நெய்யிற் கலக்கி, அக்நியிலேற்றி பக்குவம் செய்யவும். மர்மஸ்தானங்களில் உண் டாகுபவையும், தூர்நீரைப் பெருக்குபவையும், வெகு ஆழமாக வியாபித்தி ருப்பவையும், மிக வலியுண்பெண்ணுபவையுமான விரணங்கள் யாவும் இந்த க்ருதத்தைப் பூசுவதால் ஆறிவிடும். 56—57½.

பிந்து கீருதம் :—சித்திரமூலம், சங்கங்குப்பி, கடுக்காய், கம்பில்லம், கருஞ்சிவதை, வெண்சிவதை, கடற்பாலை, கொன்றை, வாளம், பீர்க்கு, தேவதாளி, அவுரி, வெண்காக்கணம், பொன்னுலங்காய், மோடி, வாய்விடங் கம், கடுகரோகிணி, பிரம்மதண்டு இவற்றில் கால்கால் பலம் பொடித்தெடுத்து எருக்கம் பால் இரண்டு பலம், கள்ளிப் பால் ஆறு பலம், நெய் பதினாறு பலம் சேர்த்து பக்குவம் செய்து, இதை ஒவ்வொரு பலமாக உபயோகிக்க குன்மம், குஷ்டம், சூலம், உதாவர்த்தம், வீக்கம், வயிற்றுப்பொருமல், பகந்தரம, எட்டுவித உதரரோகங்கள் இவை தீரும்; பசும் பால், ஒட்டகப் பால், கொள்ளுக்கஷாயம், உஷ்ணஜலம் இவற்றுள் ஏதேனுமொன்றை அநுபானமாக உபயோகிக்கலாம்; இதில் ஒவ்வொரு பிந்து உட்கொள்ள ஒவ்வொரு முறை விரேசனமாகும். பிந்து க்ருதமெனப்படும் இதை நாபியில் தடவினாலும் பேதியாகும். 58—63½.

த்ரிபலாக்ருதம் இரண்டாவது :—த்ரிபலையின் கஷாயம், ஆடாதோ டையின் ஸ்வரஸம், கரிசலாங்கண்ணிச்சாறு, ஆட்டுப்பால், நெய் இவை

1. இங்கு கூறப்பட்டுள்ள தாளகம் முதலியதை சுத்தி செய்து சேர்க்க வேண்டும். இவற்றின் சுத்திமுறை முதலியவற்றைப்பற்றி இதே கண்டத் தில் 11-வது அத்தியாயத்தில் காண்க.

ஒல்வொரு பிரஸ்த்தம் சேர்த்து, அதில் த்ரிபலை, திப்பிலி, திராக்ஷை, சந்தனம், இந்துப்பு, சிற்றமுட்டி, காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மஹாமேதா, மிளகு, சுக்கு, சர்க்கரை, வெண்தாமரை, செந்தாமரை, சாறடை, மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம் ஒவ்வொன்றையும் கால்பலம் எடை இடித்து கல்கமாகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இதனால் இரவில் கண் தெரியாமை, நகுலாந்த்யம், சொறி சிரங்கு, பில்லம், கண்ணில் நீர்வடிதல், படலம், திமிரம், அஜகம்[1] முதலான கொடிய கண்ணோய்களும் தீரும்; இது பருகவும், நஸ்யமிடவும் மிக்க உபயோகமானது. 64—69.

கௌராதி கிருதம் :—மஞ்சள், மரமஞ்சள், சிற்றமல்லி, மருளங்கிழங்கு, நன்னாரி, வெண்சந்தனம், செஞ்சந்தனம், சீந்தில், அதிமதுரம், அல்விக்கிழங்கு, நாககேஸரம், தாமரை, நெய்தல், வெட்டிவேர், மேதா, த்ரிபலை, பஞ்சவல்கலங்கள்[2] இவற்றை சூர்ணம் செய்து, ஒவ்வொன்றிலும் கால்பலமெடுத்து, ஒரு பிரஸ்த்தம் நெய் பக்குவம் செய்யவும். இதனால் விஸர்ப்பரோகம், ஸ்தானவெண்ணும் சிலந்தி விரணம், கோப்புளங்கள், விஷப் பற்றுகள், குளவி கொட்டுவதாலுண்டாகும் விரணங்கள் முதலியவை தீரும்; இது 'கௌராதி க்ருதம்' எனப்படும். 70—72.

பலாதி கிருதம் :—சிற்றமுட்டி, அதிமதுரம், சிற்றரத்தை, தசமூலம், த்ரிபலை இவற்றில் இரண்டிரண்டு பலமெடுத்து, ஒரு திரோண ஜலத்தில் சேர்த்து, மயிலின் இறகுகள், பித்தம், குடல், கல்லீரல், கால்கள், மூக்கு இவற்றை விலக்கி மற்ற உடல்களையும் அதில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, ஸமபாகம் பால் சேர்த்து, ஒரு படி நெய்யையும் ஜீவநீயகண வஸ்துக்களைத் தனித்தனியே கால் பலம் கல்கமாகவும் சேர்த்து பக்குவம் செய்யவும். இந்த க்ருதம் தலைநோய், மன்யாஸ்தம்பம், இடிப்புவலி, அர்திதம், காது நாசி நேத்திரம் நாக்கு தொண்டை இவற்றின் நோய்களையும் போக்கும்; இந்த க்ருதம் பருகுவதற்கும், நஸ்யமிடுவதற்கும், அப்யங்கத்திற்கும், காதிலிடுவதற்கும் உபயோகிக்கக்கூடியது. ஹேமந்தருது, சிசிருருது, வஸந்தருது இவ்விந சீதகாலங்களில் உபயோகிக்கத்தகுந்தது. 73—76½.

பலகிருதம் :—த்ரிபலை, அதிமதுரம், கோவ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணி, வாய்விடங்கம், திப்பிலி, கோரைக்கிழங்கு, தும்மட்டி, சிறுதேக்கு, வசம்பு, மேதா, மஹாமேதா, காகோலி, க்ஷீரகாகோலி, நாட்டு நன்னாரி, சீமை நன்னாரி, ஞாழல், சதகுப்பை, காயம், சிற்றரத்தை, வெண்சந்தனம், இரத்தசந்தனம், இலவங்கம், மூங்கிலுப்பு, தாமரை, சர்க்கரை, ஓமம், வாளம், கண்டங்கத்திரி வேர் இவற்றைப் பொடித்து கல்கமாகச் செய்து, உயிருடனுள்ள கன்றுக்குட்டியுடன் கூடியதும் ஒரே நிறமானதுமான பசுவின் பாலினின்றுமெடுத்த நெய்யில் ஒரு பிரஸ்த்த பரிமாணமும், அதற்கு நாலு மடங்கு பாலும் ஒரு மட்பாத்திரத்திலாவது தாமிர பாத்திரத்திலாவது சேர்த்து, நல்ல திதியில், புஷ்யநக்ஷத்திரத்துடன் கூடிய சுபதினத்தில், காட்டு வரட்டிகளைக்கொண்டு தீயிட்டெரிக்கவேண்டும். அப்பால் நல்ல

1. நகுலாந்த்யம் முதலிய நேத்திர ரோக விவரங்களைப்பற்றி 50-முதல் 53-ம் பக்கம் வரையில் நேத்திரரோக வகைகளைப் பார்க்க.

2. ஆல், அத்தி, அரசு, பூவரசு, கல்லால் இவற்றின் பட்டைகள் 'பஞ்சவல்கலம்' எனப்படும்.

தினத்தில் இதை உட்கொண்டால் புருஷருக்கும் ஸ்த்ரீகளுக்கும் தாதுபுஷ்டியுண்டாகும்; மலட்டுத்தனமும் நிவர்த்தியாகும்; மதியும் மேன்மையடையும்; அடிக்கடி அற்பாயுளான குழந்தைகளைப் பெறுபவள் இவ்வௌஷதத்தை யுட்கொண்டாரல் சதாயுஸ்ஸாக ஜீவிக்கக்கூடியவனும் மிக மேதாவியுமான புத்திரனைப் பெறுவள்; பரத்வாஜ முனிவரால் மொழியப்பட்ட இந்த க்ருதம் 'பலருக்தம்' என்று வழங்கப்படும். 77 84½.

வ்ருஷாதி கிருதம் :—ஆடாதோடை, வேம்பு, சீந்தில், கண்டங்கத்திரி, பேய்ப்புடல், இவற்றைக் கஷாயமிட்டு வடிக்கட்டி, நெய் சேர்த்து, மேற்கூறிய கஷாய சரக்குகளையே கல்கமாகவும் சேர்த்து பக்குவம் செய்து உட்கொள்ள விஷமஜ்வரங்கள், பாண்டுரோகம், குஷ்டம், விஸர்ப்பம், வயிற்றுக்கிருமிகள், அர்சோரோகம் இவை தீரும். 85—86.

பல கிருதம் இரண்டாவது :—மருதோன்றி, செங்குறிஞ்சி, த்ரிபலை, சீந்திற்கொடி, சாறடை, பலாசு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, மேதா, தண்ணீர்விட்டான் இவற்றைக் கல்கமாக இடித்துச் சேர்த்து, ஒரு பிரஸ்தம் நெய்யை நாலு மணங்கு பாலில் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்கலாம். யோநிசூலை, பரிப்லுதம், உபப்லுதம், வாமகம், அந்தர்முகம், பித்தயோநி, விப்லுதம், ஷண்டிதம்[1] ஆகிய கோளாறடைந்த யோநிகள் இயற்கை நிலைமையடைந்து மீண்டும் ஸ்த்ரீ கர்ப்பந்தரிக்கத் தகுந்தவளாவாள். இந்த இரண்டாவது 'பலக்ருதம்' யோநிதோஷங்களைப் போக்குவதற்காகவே ஏற்பட்டது. 87—90.

தைலங்கள்.

லாக்ஷா தைலம் :—ஓர் ஆடகம் செவ்வரக்கை, நாலு பங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்கு மிகும்படிக் காய்ச்சிய க்வாதத்தில் ஒரு பிரஸ்த்தம் நல்லெண்ணெயும், ஓர் ஆடகம் பசுந்தயிரின் தெளிவு நீரும் சேர்த்து, சதகுப்பை, அமுக்கிரங்கிழங்கு, மஞ்சள், தேவதாரு, கடுகரோகிணி, அரேணுகம், மருளங்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், கோரைக்கிழங்கு, சிற்றரத்தை இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் பலமெடுத்து சூர்ணம் செய்து மேற்படி தைலத்தில் சேர்த்து, சிறுகச் சிறுக தீயிட்டெரிக்கவும். இந்த தைலத்தை வடிக்கட்டி அப்யங்கம் செய்துவர ஸகல விஷமஜ்வரங்களும், காஸம், ச்வாஸம், பிரதிச்யாயம், கழுத்துப்பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, வாதரோகங்கள், பித்தரோகங்கள், அபஸ்மாரரோகம், உன்மாதம், யக்ஷராக்ஷஸர்களாலான காற்று சங்கைகள், சொறி சிரங்குகள், வயிற்று நோய், அங்கங்களில் பல காரணங்களாலுண்டாகும் துர்நாற்றம், அவயவங்களில் திடீரென்றுண்டாகும் துடிப்புகள் முதலியவையும் நிவர்த்தியாகும்; கர்ப்பிணிகள் இதை அப்யங்கம் செய்துகொண்டால் அவர்களுடைய கர்ப்பம் நன்கு புஷ்டியடையும். 91—96.

அங்காக தைலம் :—பெருங்குரும்பை, அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், மஞ்ஜிஷ்டி, தும்மட்டி, கண்டங்கத்திரி, இந்துப்பு, கோஷ்டம், சிற்றரத்தை, ஜடாமாம்ஸி, தண்ணீர் விட்டான் இவற்றில் ஒவ்வொன்றையும் ஒரு பலம் சேர்த்து, இவற்றை ஓர் ஆடகம் காடியில் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் தைலத்

1. பரிப்லுதம் முதலிய யோனி விகாரங்களைப் பற்றி 51-55-ம் பக்கம் பார்க்க.

தைக் காய்ச்சி யெடுக்கவும்; 'அங்காரக தைலம்' எனப்படும் இது ஸகல ஜ்வரங்களையும் போக்கும். 97—98.

நாராயண தைலம் :—அமுக்கிரங்கிழங்கு, சிற்றமுட்டி, பில்வ வேர், பாதிரி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெருஞ்சில், பேராமுட்டி, வேம்பு, பெருவாகை, சாறடை, முதியார் கூந்தல், அகில் இவற்றைத் தனித் தனியே பத்து பலமெடுத்து, நாலு திரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி வடிக்கட்டி, அதில் ஓர் ஆடகம் நல்லெண்ணெயும், தண்ணீர்விட்டாங்கிழங்கின் சாறு ஓர் ஆடகமும், தைலத்திற்கு நாலு பங்கு பாலும் சேர்த்து, அப்பால் கோஷ்டம், எலம், சந்தனம், பெருங்குரும்பை, வசம்பு, ஜடாமாம்ஸி, இந்துப்பு, அமுக்கிரங்கிழங்கு, சிற்றரத்தை, சிற்றமுட்டி, சதகுப்பை, தேவதாரு, சிறுமல்லிகை, பெமருல்லிகை, கிரந்திதகரம் இவற்றில் இரண்டிண்டு பலம் பொடித்து கல்கமாகச் சேர்த்து, தைலம் பக்குவம் செய்யவும். அத்தைலத்தை நஸ்யமிடுவதற்கும், அப்யங்கத்திற்கும், பாநம் பண்ணுவதற்கும், வஸ்தி செய்வதற்கும் உபயோகிக்கலாம். இதனால் பார்ச்வவாயு, ஹநுஸ்தம்பம், மந்யாஸ்தம்பம், களக்ரஹம், பொட்டைத்தலை, செவிட்டுத்தனம், கால் நடக்க முடியாமற்போய்விடுதல், கடிக்ரஹம், சரீரம் மெலிவுறுதல், இந்த்ரியங்கள் மந்தமாய்விடுதல், ரக்தக்ஷயம், சுக்ரக்ஷயம், க்ஷயரோகம், ஜ்வரம், அந்த்ரவ்ருத்தி, அண்டரோகம், தந்தரோகங்கள், சிரோக்ரஹம், பார்ச்வசூலை, மொண்டியாய்விடுதல், புத்தி மந்தப்படுதல், க்ருத்ரஸீ இவை முதலிய அநேகவித வாதரோகங்களும் சாந்தமாகும்; இதன் பிரபாவத்தினால் மலட்டுத்தன்மையும் நீங்கி ஸ்த்ரீ குழந்தையைப் பெறுவள். இத்தைலத்தை யுபயோகித்து வந்தால் மனிதர் மட்டுமேயல்ல, யானை, குதிரை முதலிய மிருகஜாதிகளும் மேற்கூறிய பிணிகளிலிருந்து விடுபட்டு ஸௌக்கியமடையும். துஷ்ட அஸுரரை நாராயணன் நாசமாக்கியதுபோல், வாதரோகங்களை அடியோடு அகற்றுவதற்கு இத்தைலம் உத்தமௌஷத மாகும். 99—108½.

வாருணீ தைலம் :—அருகம் புற்களின் வடபுறமாயோடும் வேர்களைக் களைந்து, அதில் மூன்று பலமெடுத்து இடித்து, பன்னிரண்டு பலம் தைலத்தை அதில் சேர்த்து ஒரு க்ஷணநேரம் காய்ச்சவும். பன்னிரண்டு உளுந்தெடை தைலத்தைச் சேர்த்துக்கொண்டு புஜித்துவர கைநடுக்கம், தலை நடுக்கம், மந்யாவென்னும் கழுத்திலுள்ள நாடியின் தளர்ச்சியாலுண்டாகும் கழுத்தின் நடுக்கம் இவையனைத்தும் தீரும். 109—110½.

பலா தைலம் :—சிற்றமுட்டி வேர்க்கஷாயம், தசமூல க்வாதம், கொள்ளுக்கஷாயம், யவதானிய க்வாதம், இலந்தங்கொட்டையின் க்வாதம், பால் இவற்றில் ஒவ்வொன்றையும் எவ்வெட்டு பாகமும், தைலம் ஒரு பாகமும் சேர்த்து, ஜீவநீயகணம், தண்ணீர்விட்டான், தேவதாரு, மஞ்ஜிஷ்டி, கோஷ்டம், கல்மரம், கிரந்திதகரம், அகில், இந்துப்பு, வசம்பு, சாறடை, ஜடாமாம்ஸி, நாட்டு நன்னாரி, சீமை நன்னாரி, இலவங்கப்பத்திரி, சதகுப்பி, அமுக்கிரங்கிழங்கு, எலம் இவற்றையெல்லாம் இடித்து கல்கமா யுபயோகித்து, தைலத்தை பக்குவம் செய்யவும். கருத்தரிக்காத ஸ்த்ரீகளுக்கும், சுக்ரம் க்ஷீணித்த புருடருக்கும், அதிக தேஹப் பயிற்சியினால் மெலிந்துபோனவருக்கும், பிரஸவித்த ஸ்த்ரீகளுக்கும், ஸுகிகளுக்கும்

அரசருக்கும் இத்தைலம் ஏற்றது; ஸகல வாத ரோகங்களையும் போக்கும். இதற்கு 'பலாதைலம்' எனப் பெயர். 111—116.

பாஸாரிணீ தைலம் :—நூறு பலம் முதியார் கூந்தலை ஒரு திரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அதற்கு ஸமமாகத் தயிரும், தைலமும், காடியும், தைலத்தினும் நாலு பங்கு பாலும் சேர்த்து, அதிமதுரம், மோடி, சித்ரமூலம், இந்துப்பு, வசம்பு, முதியார்கூந்தல், தேவதாரு, சிற்றரத்தை, யானைத்திப்பிலி, சேராங்கொட்டை, சதகுப்பி, ஜடாமாம்ஸி இக்கல்கத்திரவ்யங்களை இடித்துத் தைலத்தினும் எட்டிலொரு பங்கு சேர்த்து பக்குவம் செய்யவும். இது வாதரோகங்கள், கபரோகங்கள், கூன்விழுதல், முடவனாகுதல், க்ருத்ரவஸி, அர்தி தம், ஹநுஸ்தம்பம், இடுப்பு வலி, கழுத்துப்பிடிப்பு, மற்றுமுள்ள விஷமமான வாத ரோகங்கள் இவையனைத்தையும் சீக்கிரத்தில் போக்கும். 117—121½.

மாஷ தைலம் :—உளுந்து, யவதானியம், ஆழிவிதை, கண்டங்கத்திரி, பூனைக்காலி, மருதோன்றி, நெரிஞ்சில், பெருவாகை இவ்வொவ்வொன்றையும் எவ்வேழு பலமெடுத்து, நாலு மடங்கு ஜலம் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி யெடுக்கவும். பருத்திக்கொட்டை, இலந்தங்கொட்டை, சணல்விதை, கொள் ஒவ்வொன்றையும் பதினான்கு பலமாக நாலு பங்கு ஜலத்திலிட்டு, நாலிலொரு பங்கு மிரும்படி காய்ச்சி யெடுக்கவும்; ஒரு பிரஸ்தத்தம் ஆட்டிதைச்சியை அறுபத்திநாலு பலம் ஜலத்தில் போட்டு, அதையும் நாலிலொரு பாகம் குறையுமாறு பக்குவம் செய்தெடுக்கவும்; இந்த க்வாதங்களை யெல்லாம் கூட்டி, ஒரு பிரஸ்தம் நல்லெண்ணெய் சேர்த்து, சீந்தில், கோஷ்டம், சுக்கு, சிற்றரத்தை, சாறடை, ஆமணக்கு, திப்பிலி, சதகுப்பை, சிற்றமுட்டி, முதியார் கூந்தல், ஜடாமாம்ஸி, கடுகரோஹிணி இவ்வொவ்வொன்றிலும் அரைப்பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்படி தைலத்திலிட்டு சிறுகச் சிறுகத் தீயிட்டெரித்து பக்குவம் செய்யவும். இத்தைலம் க்ரீவாஸ்தம்பம், அபபாஹுகம், பார்ச்வவாயு, ஆக்ஷேபகம், ஊருஸ்தம்பம், அபதானகம், கை கால்களின் நடுக்கம், தலை நடுக்கம், விச்வாசி முதலிய வாத ரோகங்களைப் போக்கும். இதற்கு 'மாஷதைலம்' எனப் பெயர். 122—130.

சதாவரீ தைலம் :—தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்றமுட்டி, பேராமுட்டி, சிறுமல்லி, பெருமல்லி, ஆமணக்கு, அமுக்கிரங்கிழங்கு, நெரிஞ்சில், பில்வவேர், காவட்டம்புல், மருதோன்றி இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒன்றரைப் பலமெடுத்து, அனைத்தையும் நாலு பங்கு ஜலத்தில் சேர்த்து, நாலிலொரு பங்காகக் காய்ச்சி, அதில் ஒரு பிரஸ்தம் தைலமும், ஒரு பிரஸ்தம் பாலும், ஒரு பிரஸ்தம் தண்ணீர்விட்டாங்கிழங்கின் சாறும், ஒரு பிரஸ்தம் ஜலமும் சேர்த்து, தண்ணீர்விட்டாங்கிழங்கு, தேவதாரு, ஜடாமாம்ஸி, கிரந்திதகம், சந்தனம், சதகுப்பை, சிற்றமுட்டி, கோஷ்டம், எலம், கல்மரம், நெய்தல், ருத்தி, மேதா, அதிமதுரம், காகோலீ, ஜீவகம் இவற்றை கால் கால் பலமெடுத்து சூர்ணம் செய்து கல்கமாகச் சேர்த்து, பசுஞ்சாணத்தினாலான வறட்டிகளிட்டு எரித்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தை யுபயோகித்தால் புருடனுக்கு வீர்யவ்ருத்தி யுண்டாகும்; ஸ்த்ரீகளுக்கும் கருப்பையைப்பற்றிய கோளாறுகள கழித்து கருத்தரிக்கும் சீலையுமேற்படும்; யோனி சூலையும் நிவ்ருத்தியாகும்; மேலும் சரீரம் முடியவுமுண்டாகும் வலியும் தலைவலியும் போகும்; காமாலை, பாண்டுரோகம், க்ருத்ரிமவிஷ ஸம்பந்

தத்திஞலுண்டாகும் வியாதிகள், க்ருத்ராஸீ, ப்லீஹரோகம், கூயம், மேஹ ரோகங்கள், தண்டாபதானகம், தாபத்துடன் கூடிய வாதரக்தம், வாதபித் தம், அர்திதம், இரக்தப்பிரதரமென்னும் பெரும்பாடு, வயிற்றுப் பொருமல், இரத்தபித்தம் இவற்றையும் நிவருத்தி செய்யும். 'சதாவரீ தைலம்' என் னும் இம்முறை கிருஷ்ணத்ரேயரால் கூறப்பட்டது. தைலம் பக்குவம் செய்வதற்கு முன், 'ஓம் நாராயண்யை ஸ்வாஹா' என்கிற மந்திரத்தைச் சொல்லி, வடக்கு முகமாய் நின்றுகொண்டு கருங்காலி மரத்தினுல் செய்த கோடரியைக்கொண்டு மூலிகைகளை வெட்டி யெடுக்கவும்; "ஓம் ஸர்வ வ்யாதிவிநாசிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தையும் சொல்லிக் கொண்டே மூலிகைகளைப் பிடுங்கவும். "ஓம் குமார ஜீவிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தை யோதி ஓஷதிகளைப் பக்குவம் செய்யவும். 131—139.

காஸீஸாதி தைலம் :—அன்னபேதி, நீர்த்திப்பிலி, கோஷ்டம், சுக்கு, திப்பிலி, இந்துப்பு, மனச்சிலை, அலரி, வாய்விடங்கம், சித்திரமூலம், ஆடா தோடை, நேபாளம், பீர்க்கம் விதை, நாககேஸரம், தாளகம் இவற்றின் கால் பலமெடை யெடுத்து இடித்து, கல்கமாகச் செய்து ஒரு பிரஸ்தம் தைலம் பக்குவம் செய்யவும்; இதில் கள்ளிப்பால் இரண்டு பலமும், எருக்கம்பால் இரண்டு பலமும், தைலத்திற்கு நாலு மடங்கு பசு மூத்திரமும் சேர்த்து எரித்துத் தைலம் தயார் செய்யவும். அர்சஸ்ஸுகளை அகற்ற காஸாதன் என்பவரால் இத்தைல முறை கூறப்பட்டது; இதை அர்சஸ்ஸென்னும் மூல மூலைகளின்மேல் தடவ, அவை க்ஷாரத்தினுல் எரிக்கப்பட்டவை போல் உதிர்ந்துவிடும்; ஆனுல் இது குதத்திலடங்கிய சர்மம் முதலியவற்றிற்கு எத் தீங்கையு முண்டுபண்ணுமல், க்ஷாரத்தினுல் நிறைவேற்றப்படும் குணங் களை யுண்டுபண்ணி பிணியாளிக்கு ஸௌக்கியத்தைத் தரும். 140—143½.

பிண்ட தைலம் :—மஞ்ஜிஷ்டி, நன்னரி, மட்டிப்பால், அதிமதுரம், தேன்மெழுகு இவை ஒவ்வொரு பலம், ஆமணக்கெண்ணெய் இருபது பலம் சேர்த்துத் தைலத்தைப் பக்குவம் செய்யலாம்; இது 'பிண்ட தைலம்' எனப்படும்; இத்தைலம் வாத ரக்தத்தைப் போக்கும். 144½.

அரீக்க தைலம் :—எருக்கிலைச் சாற்றில் மஞ்சள் பொடியையும், கடு கெண்ணெயையும் கூட்டி பக்குவம் செய்த தைலத்தைத் தடவிவந்தால் சிரங்கு, அரைக்கடுவான், சொறி முதலிய சர்ம வியாதிகள் நீங்கும். 145½.

மரீசாதி தைலம் :—மிளகு, தாளகம், சிவதைவேர், செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, மனச்சிலை, ஜடாமாம்ஸி, மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, தும்மட்டி, அலரி, கோஷ்டம், எருக்கம்பால் ஒவ்வொன்றும் கால் பலமும், அரைப்பலம் நாபியும், ஒரு பிரஸ்தம் கடுகெண்ணெயும், இவ்வனைத்துக் கும் இரு மடங்கு பசு மூத்திரமும், இரு மடங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் செய்து, வெண்குஷ்டம், குஷ்டம், புண்டரீகமென்னும் படை, தலையிலுண் டாகும் சிரங்குகள், ஸாதாரண சிரங்குகள், இரத்த தோஷத்தினுலான சர்ம வியாதி, சொறி இவற்றில் உபயோகிக்கலாம். இது 'மரிசாதி தைலம்' எனப்படும். 146—150.

தீரிபலாதி தைலம் :—த்ரிபலை, வேம்பு, நிலவேம்பு, மஞ்சள், மரமஞ் சள், செஞ்சந்தனம் இவற்றுல் பக்குவம் செய்த தைலத்தை சிரஸ்வினுண் டாகும் சில விரணங்களைப் போக்க அப்யங்கம் செய்துகொள்ளலாம். 151.

நிம்ப தைலம்:--வேப்பங் கொட்டைகளை முதலில் கரிசிலாங்கண்ணிச் சாற்றிலும் பிறகு தினிசையிலைச் சாற்றிலும் பாவனை செய்து, அவ்வித்துக் களை ஆட்டி எடுக்கப்படும் தைலத்தை நஸ்யமா யுபயோகிக்க அகாலத்தினுண் டாகும் நரைத்தல் போகும்; இத்தைலமுபயோகிக்கையில் பாலையும் அன்னத்தையுமே ஆஹாரமா யுட்கொள்ளவேண்டும். 152½.

யஷ்ட்யாதி தைலம் :— அதிமதுரம், பால், புதிய நெல்லிக்கனி இவற்றின் க்வாதத்தில் தைலம் பக்குவம் செய்து, நஸ்யகர்மத்தி லுபயோ கிக்கத் தலை மயிர்களையும், தாடி மீசைகளையும் கருநிறமாகச் செய்யும். 153½.

காஞ்ஜாதி தைலம் :—புங்கை, சித்திரமூலம், ஜாதிக்காய், அலரி இவற் றின் க்வாதத்தில் தைலம் பக்குவம் செய்யலாம். மேற் கூறிய பதார்த்தங் களையே இதில் கல்கமாகவும் உபயோகிக்கவேண்டும். இத்தைலத்தை அப் யங்கம் செய்துகொள்ள இந்த்ரலுப்தம் என்னும் மயிர்களுதிரும் ரோகம் தீரும். 154½.

நீலிநீயாதி தைலம் :—அவுரி, தாழைவேர், கரிசிலாங்கண்ணி, மரு தோன்றி, மருதம்பூ, வேங்கைமரத்தின் புஷ்பம், திப்பிலி, எள், கிரந்தித கரம், தாமரைக் கிழங்கு கொடி இலை புஷ்பம், அயபஸ்மம், ஞாழல், மாதுளை யின் பட்டை, சீந்தில், த்ரிபலை, தாமரையோடையின் உலர்ந்த சேறு இவை ஒவ்வொன்றும் கால் பலமெடை கல்கமாகச் சேர்த்து முதலில் த்ரிபலாதி க்வாதத்திலும், கரிசிலாங்கண்ணிச் சாற்றிலும் தைலத்தைக் காய்ச்சி, பிறகு அவுரி முதலியதாலான கல்கத்தை அதில் சேர்த்து பக்குவம் செய்யவேண் டும். இத்தைலம் மயிர்களை உதிரவிடாமல் கருநிறமாகச் செழிக்கச் செய் யும்; அகால நரைத்தலையும், தலையில் வெடிப்புகளையும், உபஜிஹ்வா ரோகத்தையும் போக்கும். 155—158½.

பீநங்காஜ தைலம் :—கரிசிலாங்கண்ணிச் சாற்றுடன் தைலம் சேர்த் துக் காய்ச்சி, அதில் இருப்புக்கிட்டம், த்ரிபலை, நன்னரி இவற்றைக் கல்க மாகச் சேர்த்து பக்குவம் செய்த தைலத்தால் வெடிப்பு, அகாலத்திலேற் படும் நரைத்தல், சொறி, சிரங்கு, மயிருதிர்தல் இவை தீரும். 159--160.

ஹரிமேதாதி தைலம் :—நூறு பலம் வெள்ளெலம்பட்டையை இடித்து, ஒரு திரோணம் ஜலத்தில் சேர்த்து நாலில் ஒருபாகமாகச் சுண்டக் காய்ச்சி, வடிக்கட்டி, அதில் இரண்டு பிரஸ்தம் தைலத்தைச் சேர்த்து, பிறகு வெள் ளெலம்பட்டை, இலவங்கம், காவிக்கல், அகில், தாமரைக் கிழங்கு, மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்ரி, இலுப்பை, செவ்வரக்கு, ஆல், கோரைக் கிழங்கு, இலவங் கப்பட்டை, ஜாதிக்காய், கர்ப்பூரம், தக்கோலம், கருங்காலி, சந்தனம், காட் டாத்திப்பூ, சிற்றேலம், நாககேஸரம், சிறுதேக்கு ஒவ்வொன்றிலும் கால் பலம் கல்கமாகச் சேர்த்து பக்குவம் செய்த தைலத்தை யுபயோகிக்க வாயிலுண்டாகும் புண்கள், தசைகள் கெட்டுப்போதல், நரைத்தல், பல் சொத்தைப் பிடித்தல், பல்லில் த்வாரம் விழுதல், பல் கருநிறங்கொள்ளல், பல் சிலிர்த்தல், பல்லில் சீழ்க்கட்டியுண்டாதல், பற்களில் கிருமியுண்டா தல், பற்களில் துர்நாற்ற மேற்படுதல், நாக்கு, தவடை, உதடுகள் இவற்றி லுண்டாகும் வியாதிகள் இவையனைத்தும் தீரும். 161—165½.

ஜாதிபல்லவாதி தைலம் :—ஜாதி, வேம்பு, பேய்ப்புடல், பச்சிலை இவற்றின் தளிர்கள், தேன் மெழுகு, அதிமதுரம், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோகிணி, மஞ்ஜிஷ்டி, தாமரைக்கிழங்கு, வெள்ளிலோத்ரி,

கடுக்காய், கருநெய்தல், மயில்துத்தம், நன்னாரி, பச்சிலையின் வித்து இவற்றை ஸமயெடை சேர்த்து இடித்து கஷாயம் செய்து, அதில் தைலம் பக்குவம் செய்யவும். நாடீவ்ரணம், கொப்புளம், சொறி, சிரங்கு, ஸத்யோவிரணம், நகம் பற்கள் இவை தாக்குவதாலுண்டாகும் விரணம், மற்றும் கெட்டுப்போன விரணங்கள் இவற்றில் உபயோகமாகும். 166—169½.

ஹிங்கீவாதி தைலம் :—காயம், தும்பில்,[1] சுக்கு இவற்றைக் கடுகெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சவும்; இத்தைலத்தைக் காதில் விட்டு வந்தால் காதுவலி நிவ்ருத்தியாகும். 170½.

பாலபில்வ தைலம்:—பில்வத் தளிர்களைப் பசுமூத்ரத்தில் அரைத்து, அக்கல்கத்தையும், ஆட்டுப்பாலையும், ஜலத்தையும் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தைக் காதில் விட்டு வந்தால் செவிட்டுத்தனம் தீரும். 171½.

பாலமூலகாதி தைலம் :—இளம் முள்ளங்கிக் கிழங்கு, கடலை முதலிய இரட்டைப்பிளவான பருப்புகளுள்ள சில தானியங்கள் இவற்றை எரித்தெடுக்கப்படும் க்ஷாரங்கள், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், பஞ்சலவணங்கள், பெருங்காயம், முருங்கை, சுக்கு, தேவதாரு, வசம்பு, கோஷ்டம், சதகுப்பி, மரமஞ்சள், கிரந்திநகரம், கோரைக் கிழங்கு இவற்றில் கால் கால் பலம் கல்கம் செய்து, ஒரு பிரஸ்த்தம் தைலத்திற் கலந்து, வாழை மரச்சாறு, மாதுளஞ்சாறு, மதுஸுக்தமென்னும் காடி இவற்றைத் தைலத்தினும் நான்கு மடங்கு அதிகமாகச் சேர்த்துத் தைலம் காய்ச்சவும். காதில் சீழ் வடிதல், காதிரைச்சல், காது வலி, செவிட்டுத்தனம், காதில் கிருமியுண்டாதல், மற்றுமுள்ள காதைப்பற்றிய வியாதிகள், முகத்திலுண்டாகும் நோய்கள் இவ்வனைத்தையும் இத்தைலம் நிவ்ருத்தி செய்யும். [எலுமிச்சம்பழ ரஸம் ஒரு பிரஸ்த்தம், தேன் நான்கு பலம், திப்பிலிப் பொடி ஒரு பலம் இவற்றை ஒரு மட்பாத்ரத்தில் ஒன்றுகச் சேர்த்து, பாத்ரத்தின் வாயை மூடி, தானியக் களஞ்சியத்தில் ஒரு மாதகாலம் வைத்தெடுத்தால் அது மதுஸுக்தம் எனப்படும்.] 172—177.

பாடாதி தைலம் :—வட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், பெருங்குரும்பை, திப்பிலி, ஜாதிமல்லித் தளிர், நேபாளம் இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த தைலத்தை நஸ்யமிட்டால் நாட்பட்ட பீநஸரோகம் தீரும். 178½.

துஷ்டாதி தைலம் அல்லது கீருதம் :-கோஷ்டம், பில்வவேர், திப்பிலி, சுக்கு, திராக்ஷை இவற்றைக் கஷாயமிட்டு, இப்பதார்த்தங்களையே கல்கமாகவும் சேர்த்து, தைலமாவது க்ருதமாவது பக்குவம் செய்து, அத்தைலம் அல்லது க்ருதத்தை நஸ்யமிட ஜலதோஷத்தினுலுண்டாகும் அதிகதும்மல் தணிந்துவிடும். 179½.

வ்யாக்ரியாதி தைலம்:--கண்டங்கத்திரி, நேபாளம், வசம்பு, முருங்கை, துளஸி, த்ரிகடு, இந்துப்பு இவற்றைக் கல்கமாகச் சேர்த்து செய்யப்படுகிற தைலத்தை நஸ்யமாக உபயோகித்தால் மூக்கில் சீழ்வடிந்து தீர்நாற்றமெடுப்பது நிவ்ருத்தியாகும்; இதனல் குடலின் பாசகசக்தியும் நிவ்ருத்தியாகும். 180½.

1. தும்பில் என்பது அசோகமரத்தைச் சேர்ந்த ஒரு ஜாதி.

கிருஹதூமாதி தைலம் :—ஓட்டடை, திப்பிலி, தேவதாரு, யவக்ஷாரம், மஞ்சள், இந்துப்பு, நாயுருவி விதை இவற்றால் பக்குவம் செய்த தைலம் நாஸார்சஸ் என்னும் நாசியின் வித்ரதியைப் போக்கும். 181½.

வஜ்ர தைலம் :—கள்ளிப்பால், எருக்கம்பால், ஊமத்தையிலைச்சாறு, சித்ரமூலச் சாறு, எருமைச் சாணிப்பால் இவற்றைச் சமயெடை யெடுத்து, அனைத்துக்கும் ஸமமாக நல்லெண்ணெய் சேர்த்து, தைலம் மட்டும் மிகும்படி காய்ச்சி யெடுத்து, மறுபடியும் அதை அதற்கு நாலு மட்ங்கு பசு மூத்ரத்தில் சேர்த்து, தைலம் மிகுமாறு பக்குவம் செய்யவும். பிறகு கந்தகம், சித்ரமூலம், மனச்சிலை, தாளகம், வாய்விடங்கம், அதிவிடயம், வத்ஸநாபி, பேய்ச்சுரை, கோஷ்டம், கசம்பு, ஜடாமாம்ஸி, த்ரிகடு, மரமஞ்சள், அதிமதுரம், ஸர்ஜக்ஷாரம், ஜீரகம், தேவதாரு இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் பலம் சூர்ணம் செய்து எண்ணெயில் சேர்த்து பக்குவம் செய்த இதற்கு "வஜ்ர தைலம்" எனப் பெயர். இதை அப்யங்கம் செய்துவந்தால் ஸகல குஷ்டங்களும் தீரும். 182—186.

காவீராதி தைலம் :—அலரிவேர், நேபாளம், சிவதைவேர், பீர்க்கு இவற்றை—வாழமரத்தை யுலர்த்தி எரித்தெடுத்த க்ஷாரம் கரைத்த ஜலத்தில் சேர்த்து, அதில் தைலம் காய்ச்சி, அத்தைலத்தை மயிர்களை உதிர்ப்பதற்கு உபயோகிக்கலாம். 187.

லாக்ஷா சந்தனாதி தைலம் :—சந்தனம், வெட்டிவேர், நகமென்னும் கந்தத்ரவ்யம், மரமஞ்சள், அதிமதுரம், கல்மரம், தாமரைக் கிழங்கு, மஞ்ஜிஷ்டி, ஸரளமரப்பட்டை, தேவதாரு, குருவேர், ஏலக்காய், புங்கை, நாககேஸரம், இலவங்கப் பத்திரி, முறமென்கிற வாஸனை வஸ்து, ஜடாமாம்ஸி, தக்கோலம், கோரைக் கிழங்கு, மஞ்சள், நன்னாரி, கடுகரோகிணி, இலவங்கம், அகில், குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, அரேணுகம், நளி யென்னும் கந்தத் த்ரவ்யம் இவற்றை ஸமபாக மெடுத்துப் பொடித்து, தயிரின் தெளிவு நீரில் தைலத்தையும் முற்கூறிய வஸ்துக்களின் கல்கத்தையும் சேர்க்கவேண்டும்; தயிரின் தெளிவு நீர் தைலத்தினும் நாலு மடங்கு அதிகமாயிருக்கவேண்டும்; அத்தைலத்திற்கு ஸமான பாகம் செவ்வரக்குக் கஷாயமும் சேர்க்கவேண்டும். இத்தைலம் கிரஹ தோஷங்களைப் போக்கும்; பலத்தை விருத்தி செய்யும்; அபஸ்மாரம், ஜ்வரம், உன்மாதம், பேய் பிசாசு முதலியவற்றையும் அகற்றும்; ஆயுளை விருத்திசெய்யும்; சரீரத்திற்கு புஷ்டியைத் தரும்; வசீகரணம் செய்வதில் உத்தமௌஷதம்; விசேஷமாக க்ஷயரோகம், இரத்தபித்தம் இவற்றைப் போக்கும். 188-191½.

வசாதி தைலம்:—வசம்பு, கச்சோரம், மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, சுக்கு, கடுக்காய், அதிவிடயம், கோரைக் கிழங்கு, வரலுருவை இவை ஒவ்வொன்றும் பத்து பலமாக நான்கு திரோணம் ஜலத்தில் க்வாதம் செய்யவும்; இதில் தகரயிலைச் சாற்றையும் கடுகெண்ணெயையும் ஊற்றிச் சிறுகச் சிறுக எரித்து, நாலில் ஒரு பங்காக வற்றச் செய்து, சிறிதளவு வின்தூரம் சேர்த்து இறக்கிவிடவும். இத்தைலம் கடுந்துயரளிக்கும் கண்டமாலையை நிவ்ருத்தி செய்யும். 192—194½.

நீர்தும்ப்யாதி தைலம் :—கருநொச்சியிலைச் சாற்றில் தைலம் காய்ச்சி, அதில் சிவனர் கிழங்கைப் பொடித்து கல்கமாகச் சேர்த்துப் பக்குவம்

செய்யவும். இத்தைலத்தை நஸ்யமாக உபயோகித்தால் மிகவும் வருத்தந் தரும் கண்டமாலே தீரும். 195½.

பத்தாம் அத்தியாயம்

ஸந்தாந விதி

ஸந்தாந முறை :—ஓஷதி வகைகளைச் சில திரவபதார்த்தங்களில் சில நாட்களளவும் ஊறவைத்து, அப்பதார்த்தங்களிலிருந்து ஸத்துவங்களைக் கூட்டும் முறை 'ஸந்தாநம்' எனப்படும்; அவ்வித ஸந்தாந முறையினால் ஆஸவம், அரிஷ்டம் முதலிய பல வேறு மதுவகைகள் ஔஷதமாய் உபயோகப்படுமாறு பக்குவம் செய்யப்படும். 1

ஆஸவாரிஷ்டங்களின் பேதமும் பிரமாணமும் :—ஓஷதி முதலியவற்றையும் ஜலத்தையும் காய்ச்சாமலே, அப்படியே சேர்த்துப் பக்குவம் செய்யப்படும் மது 'ஆஸவம்' என்றும், ஓஷதிகளை ஜலத்தில் சேர்த்து க்வாதம் செய்து பக்குவம் செய்யப்படுவது 'அரிஷ்டம்' என்றும் வழங்கப்படும். இவற்றை உட்கொள்வதற்குப் பொது அளவு ஒரு பலமாம். 2.

ஆஸவாரிஷ்டங்களில் வஸ்துக்களைச் சேர்க்க பொதுப் பிரமாணம் :—ஆஸவாரிஷ்டங்களில் வஸ்துக்கள் சேர்க்கவேண்டிய அளவு கூறப்படாத விடத்து, திரவ பதார்த்தம் ஒரு திரோணமானால் வெல்லம் நூறு பலம், தேன் ஐம்பது பலம், மற்ற கல்க வகைகள் வெல்லத்தில் பத்திலொரு பங்கும் சேர்க்க வேண்டும். 3

சீதாஸ சீது:—இனிய சுவையுள்ள மூலிகை முதலியவக்ற காய்ச்சாமலே ஜலத்தில் ஊறவைத்து பக்குவம் செய்யப் படும் மது 'சீதாஸ சீது' எனப்படும். 3½.

பக்வாஸ சீது:—நன்றாகச் சமையல் செய்த இனிய சுவையுள்ள மூலிகைகளாலும் திரவ பதார்த்தத்தாலும் பக்குவம் செய்யப்படும் மது 'பக்வரஸ சீது' எனப்படும். 4.

ஸுரை:—அரிசியினாலான அன்னத்தை மீண்டும் சமைத்து அதிலிருந்து இறக்கப்படும் ஒருவித மதுவை 'ஸுரை' என்று கூறுவர். 4½.

பீரஸந்நா, காதம்பரீ, ஜகலம், மேதகம், கிண்வகம்:—ஸுரையினுடைய மேற்புறத்தில் தெளிவாக வருவது 'ஸுராமண்டம்' அல்லது 'ப்ரஸந்நா' என்றும், ஸுராமண்டத்தை வேறொரு பாத்திரத்தில் இறுத்துக் கொண்டால் அதற்கடியில் சிறிது தடிப்பாயிக்கும் பாகம் 'காதம்பரீ' என்றும், அதற்கும் அடியில் சிறிது குழம்பாயிருக்கும் திரவபாகம் 'ஜகலம்' என்றும், அதற்கும் கீழ் மிகவும் கனமாகத் தங்கிபிருப்பது 'மேதகம்' என்றும், மேதகத்தைப் பக்குவஞ்செய்து ஸாரத்தை நீக்கியபின் அடியில் தங்குகிற திப்பியான பாகம் 'கிண்வகம்' என்றும் கூறுப்படும். 5—6.

வாருணீ:—பனை, பேரீச்சு முதலியவற்றின் சாற்றைக் கொண்டு ஸந்தாநம் செய்வதாலுண்டாகும் மதுவை 'வாருணீ' என்பார்கள். 6½.

---

1. மூலிகை முதலியவற்றை ஏதேனும் ஏற்ற திரவ பதார்த்தங்களில் சேர்த்து வெகு நாள் புளிக்கவைத்தும், அல்லது வாலே முதலியவற்றின் மூலம் ஆவியாக இறக்கியும் பலவகைகளில் செய்யப்படும் மது இனங்களின் பாக முறை 'ஸந்தாநவிதி' என்று கூறப்படும்.

ஸுக்தம் :—ஏதேனும் திரவத்தில் கிழங்குகள், வேர்கள், கனிவர்க்கங்கள் முதலியவற்றையும், ஸ்நேஹ வர்க்கங்களையும், உப்பு வகைகளையும் சேர்த்து பக்குவம் செய்யப்படும் மது 'ஸுக்தம்' எனப்படும். 7½.

சுக்ரம் :—தேனுவது, இனிய சுவையுள்ள வேறு திரவபதார்த்தமாவது பதனிழந்து புளித்துப் போனபின்பு அதை மத்யம்போல் ஸந்தாநம் செய்தெடுத்தால் அது 'சுக்தம்' எப்படும். 8½.

குடஸுக்தம் முதலியது :—வெல்லம் கலந்த ஜலம், தைலம், கிழங்குகள், வேர்கள், கனிவர்க்கங்கள் இவற்றைச் சேர்த்து ஸந்தாநம் செய்த புளிப்பான மதுவுக்கு 'குடஸுக்தம்' என்றும், இவ்விதமே கருப்பஞ் சாற்றால் செய்யப்படுவதற்கு 'இக்ஷுஸுக்தம்' என்றும், திராக்ஷையால் செய்யப்படுவதற்கு 'திராக்ஷாஸுக்தம்' என்றும் பெயர். 9—10.

துஷாம்பு :—யவதானியத்தை உடைத்து, உமியுடன் சமைக்காமல் நீரில் ஊறவைத்து ஸந்தாநம் செய்வதை 'துஷாம்பு' என்பர். 10½.

ஸௌவீரம் :—யவதானியத்தை உடைத்து உமிநீக்கி சமைத்து ஸந்தாநம் செய்ய 'ஸௌவீரம்' என்கிற மது உண்டாகும். 11.

காஞ்ஜிகம் :—பெருங்கடலை, தனியா இவற்றை க்வாதம் செய்து, அதின்மேல் படரும் எடு முதலியவற்றை யெடுத்து ஸந்தாநம் செய்து 'காஞ்ஜிகம்' என்கிற மது பக்குவம் செய்யப்படும். 11½.

சண்டாகீ :—முள்ளங்கி, கடுகு முதலியவற்றைச் சேர்த்து ஸந்தாநம் செய்து 'சண்டாகீ' என்கிற மத்யம் உண்டாக்கப்படும். 12.

உசீராஸவம் :—வெட்டிவேர், குருவேர், அல்லிக்கிழங்கு, பெருங்குமிழன், கருநெய்தல், ஞாழல், தாமரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி, மஞ்ஜிஷ்டி, காஞ்சொறி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, கடுகரோகிணி, ஆல், அத்தி, கச்சோரம், பர்ப்பாடகம், வெண்தாமரை, பேய்ப்புடல், நாககேஸரம், நாவல் பிசின், இலவம்பிசின் இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பலமெடுத்து நன்கு சூர்ணம் செய்து, இருபது பலம் திராக்ஷை, பதினாறு பலம் காட்டாத்திப்பூ இவற்றையும் இரண்டு திரோணம் ஜலத்தில் சேர்த்து, சர்க்கரை நூறு பலமும், தேன் நூறுபலமும் கூட்டி ஜாடாமாம்ஸி, பிளகு இவற்றை யெரித்துண்டாகும் புகையினால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட ஒரு மட்பாத்திரத்தில் அதை ஊற்றி, ஒரு மாதகாலம் மூடிவைத்து, பிறகு எடுத்து வடிக்கட்டி உபயோகிக்கவும். 'உசீராஸவம்' எனப்படும் இது இரத்தபித்தம், பாண்டு, குஷ்டம், பிரமேஹம், அர்சஸ், கிருமிரோகம், சோகை இவற்றைப்போக்க ஏற்ற ஔஷதமாகும். 13—17½.

குமார்யாஸவம் :—பூச்சி முதலியவற்றால் எறிக்கப்படாமல் நன்கு வளர்ந்த சோற்றுக் கற்றாழைகளை யிடித்து ஸ்வரஸம் பிழிந்து, அதில் ஒரு திரோணம் சாற்றை நெய்யிட்டுப் பழகிய கல் அல்லது மண் பாத்திரத்தில் ஊற்றி, தேன் ஐந்து பலமும், சுத்திசெய்த அயம் ஐம்பது பலமும் அதில் கலக்கவேண்டும்; த்ரிகடு, இலவங்கம், சதுர்ஜாதம், சித்திரமூலம், மோடி, வாய்விடங்கம், யாவனித்திப்பிலி, சவியம், கொட்டைக்கரந்தை, தனியா, கமுகு, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு, த்ரிபலை, சிற்றரத்தை, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், பெருங்குரும்பை, திராக்ஷை, நேபாளம், தாம

ரைக்கிழங்கு, சிற்றரமூட்டி, பேராமூட்டி, பூனைக்காலி, த்ரிகண்டகம்[1] சதகுப்பி, இங்குபத்ரி, அக்காரகாரம், சென்னெல், இங்குணப்பட்டை, சாறடை, வெள்ளைச்சாறடை, வெள்ளிலோத்தி, பொன்னீலி இவற்றில் ஒவ்வொறிலும் அரைப்பலமும், காட்டாத்திப்பூ எட்டு பலமும் கூட்டி ஆஸவம் பக்குவம் செய்யவும். இதைச் சரீரகூறுபாடு, வயதின் அளவு ஆகியவற்றைக் கவளித்து இரண்டு பலமாவது, ஒரு பலமாவது, அரைப் பலமாவது உட்கொள்ளலாம். இது பலம், பசி, தேஹ நிறம் இவற்றை விருத்தி செய்யும். ப்ருஹ்மணம், ரோசகம், வ்ருஷ்யம் என்கிற குணங்கள் இதற்கு அதிகமாயுண்டு. பரிணாமசூலை, எட்டு வித உதரரோகங்கள், உக்கிரமான கூய ரோகம், இருபது வித மேஹரோகங்கள், உதாவர்த்தம், அபஸ்மாரம், மூத்திரக்ருச்சிரம், சுக்ரதோஷம், அச்மரீரோகம், க்ருமிரோகம், இரக்தபித்தம் இவற்றை நிச்சயமாய் நிவ்ருத்திசெய்யும். 18—27½.

பிப்பல்யாத்யாஸவம் :—திப்பிலி, மிளகு, சவியம், மஞ்சள், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், கமுகு, வெள்ளிலோத்தி, வட்டத்திருப்பி, நெல்லிக்கனி, சிற்றேலம், வெட்டிவேர், சந்தனம், கோஷ்டம், இலவங்கம், சிரந்திதகரம், ஜடாமாம்ஸி, இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, ஞாழல், நாககேஸரம் இவற்றில் ஒவ்வொன்றையும் அரைப்பலமெடுத்து சூர்ணம் செய்து, இரண்டு திரோணம் ஜலத்தில் சேர்த்து, மூன்னூறு பலம் வெல்லம், பத்து பலம் காட்டாத்திப்பூ, அறுபது பலம் திராக்ஷை இவற்றை ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்து, அப்பதார்த்தங்களின் ஸத்துவம் அனைத்தும் ஜலத்தில் கலந்துவிட்டதாகத் தெரிந்ததும் வடிக்கட்டி, வைத்தியர் ரோகிகளின் ஜீர்ணசக்தியறிந்து ஏற்ற அளவில் இதை உபயோகிக்கவேண்டும். பிப்பல்யாத்யாஸவமெனப் படும் இதை கூய ரோகம், குன்மம், மஹோதரம், சரீரமெலிவு, கிரஹணி, பாண்டுரோகம், அர்சஸ் இவற்றில் உபயோகிக்க நற்குணம் பிறக்கும். 28—33.

லோஹாஸவம் :—நன்கு சூர்ணம்செய்த அயம், த்ரிகடு, த்ரிபலை, குராசானியோமம், வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, சித்திரமூலம் ஒவ்வொன்றும் நான்கு பலம், காட்டாத்திப்பூ இருபது பலம், வெல்லம் நூறு பலம், ஜலம் இரண்டு திரோணம் இவ்வனைத்தையும் நெய் வைத்துப் பழகிய மட்பாத்திரத்தில் சேர்த்து, வாயை மட்டும் சீலைசெய்து ஒருமாத காலம் வைத்திருக்கவும்; 'லோஹாஸவம்' எனப்படும் இது நன்கு பசியை உத்தீபநம் செய்யும்; பாண்டு, உடல் வீக்கம், சொறி, இருமல், சுவாஸம், பகந்தரம், அரோசகம், கிரஹணி, இருதய வியாதிகள் இவற்றையும் நிவ்ருத்தி செய்யும். 34—38.

திராக்ஷாரிஷ்டம் :—நூறு பலம் திராக்ஷையை நான்கு திரோணம் ஜலத்தில் க்வாதம் காய்ச்சி, ஜலம் ஒரு திரோணமாக வற்றியபின், அதை ஆற்றி வடிக்கட்டி, நெய் வைத்தப்பழகிய ஒரு பாண்டத்தில் ஊற்றி அடியில் வரும் கல்கங்களைச் சேர்க்கவேண்டும்:—தேன் நூறு பலம், தக்கோலம், இலவங்கம், ஜாதிக்காய், மிளகு, இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், திப்பிலி, சித்திரமூலம், சவியம், மோடி, அரேணுகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் இடித்து மேற்கூறிய கஷாயத்தில் சேர்க்க

1. கண்டங்கத்திரி, சிறுகாஞ்சொறி, நெரிஞ்சில் இம்மூன்றுக்கும் த்ரிகண்டகம் எனப் பெயர்.

வம்; இதை வைத்துப் பக்குவம் செய்வதற்கு உபயோகப்படும் பாத்தினை சந்தனம், அகில் இவற்றில் புகையிட்டு, கர்ப்பூரம் தடவியும் ஸம்ஸ்காரம் செய்வது நலம். இது கிரஹணீ ரோகத்தைப் போக்கி அக்னி தீபனம் செய்யும்; அர்சஸ், உதாவர்த்தம், குன்மம், வயிற்றுக் கிருமிகள், குஷ்டம், பற்பலவித விரணங்கள், நேத்ரரோகம், தலைவலி முதலிய சிரோ வியாதிகள், தொண்டை வியாதிகள் இவற்றைப் போக்கும். 39—43½.

தாடிமாரிஷ்டம் :—வெட்பாலை வேர் நூறு பலம், திராக்ஷை ஐம்பது பலம், இலுப்பைப்பூ பத்து பலம், பெருங்குமிழம்பூ பத்து பலம் இவற்றை நான்கு திரோணம் ஜலத்தில் காய்ச்சி, ஜலம் நாலில் ஒரு பங்காக வற்றிய பிறகு, இருபது பலம் காட்டாத்திப் பூவையும் நூறு பலம் வெல்லத்தையும் சேர்த்து, மட்பாத்திரத்தில் ஒரு மாதகாலம் வைத்திருந்து எடுக்கவும். "தாடிமாரிஷ்டம்" எனப்படும் இது ஸகல ஜ்வரங்களிலும் உபயோகிக்க நல்ல ஔஷதம்; அக்னி தீபநமும் செய்யும். 44—46½.

விடங்காரிஷ்டம் :—வாய்விடங்கம், சிரந்திதகரம், சிற்றரத்தை, வெட்பாலரிசி, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், வட்டத்திருப்பி, சிற்றேலம், நெல்லிக்கனி இவற்றில் ஒவ்வொன்றிலும் ஐந்து பலம் எடுத்துப் பொடித்து, எட்டு திரோண ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி, அக்கஷாயத்தை எட்டில் ஒரு பாகமாகச் சுண்டவைத்து வடிக்கட்டி, ஆறிய பின்பு, முன்னூறு பலம் தேன், இருபது பலம் காட்டாத்திப்பூ, இரண்டு பலம் த்ரிஜாதகம், ஞாழல், நாககேஸரம், வெள்ளிலோத்தி ஒவ்வொரு பலம், த்ரிகடு எட்டு பலம் இவற்றைச் சூர்ணம் செய்து, மேற்கூறிய கஷாயத்தில் சேர்த்து, இவையனைத்தையும் நெய் வைத்துப் பழகிய பாண்டத்தில் சேர்த்து, ஒரு மாதகாலம் மூடிவைத்து, அப்பால் வடிகட்டி எடுத்து, மிகத் தன்பமளிக்கும் வித்ரதி, ஊருஸ்தம்பம், அச்மரீ, மேஹம், ப்ரத்யஷ்டீலா, பகந்தரம், கண்டமாலை, ஹ்ருதஸ்தம்பம் இவற்றில் உபயோகிக்க நற்குணமுண்டாகும். இதற்கு 'விடங்காரிஷ்டம்' எனப் பெயர். 47—52.

தேவதாரவாத்யரிஷ்டம் :—தேவதாரு ஐம்பது பலம், ஆடாதோடை இருபது பலம், மஞ்ஜிஷ்டி, வாலுளுவை, நேபாளம், கிரந்திதகரம், மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, காட்டிவாகை, கருங்காலி, மருதை இவற்றில் ஒவ்வொன்றும் பத்து பலம், குராசானியோம், வெட்பாலரிசி, சந்தனம், சீந்தில், கடுரோகிணி, சித்திரமூலம் இவை ஒவ்வொன்றும் எட்டு பலம், இவையனைத்தையும் எட்டு திரோணமாகக் காய்ச்சி, வடிக்கட்டி, ஆறியபின் காட்டாத்திப்பூ பதினாறு பலம், தேன் முன்னூறு பலம், த்ரிகடு இரண்டு பலம், த்ரிஜாதம் நான்கு பலம், ஞாழல் நான்கு பலம், நாககேஸரம் இரண்டு பலம் இவையனைத்தையும் சூர்ணம் செய்து கஷாயத்தில் சேர்த்து, அவற்றை நெய் வைத்துப் பழகிய பாண்டத்தில் ஒரு மாதம் வைத்திருந்து, பிறகு வடிக்கட்டி உபயோகிக்கவும்; இது கஷ்டஸாத்யமான பிரமேஹரோகம், வாதரோகங்கள், கிரஹணி, அர்சஸ், மூத்திரக்ருச்சிரம், சொறி, சிரங்கு, குஷ்டம் இவற்றைப் போக்கும். இதற்கு 'தேவதார் வாத்யரிஷ்டம்' எனப் பெயர். 53—59.

கதிராரிஷ்டம் :—கருங்காலிப்பட்டை ஐம்பது பலம், தேவதாரு ஐம்பது பலம், ஆட்லாங்கொடி பன்னிரண்டு பலம், மரமஞ்சள் இருபது பலம், த்ரிபலை இருபது பலம், இவற்றை எட்டு திரோணம் ஜலத்தில் சேர்த்து

ஒரு திரோணமாகக் காய்ச்சி, வடிக்கட்டி, ஆறியபிறகு இருநூறு பலம் தேன் சேர்த்து, ஐம்பது பலம் சர்க்கரை, இருபது பலம் காட்டாத்திப்பூ, தக்கோலம், நாககேஸரம், ஜாதிக்காய், இலவங்கம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவை ஒவ்வொரு பலம், திப்பிலி நான்கு பலம், இவற்றை நெய் வைத்துப் பழகிய ஒரு மட்பாத்திரத்தில் ஒரு மாதம் வைத்திருந்து பிறகு உபயோகிக்கலாம். இதனுல் மஹாகுஷ்டம், இருதயத்தைப் பற்றிய வியாதிகள், பாண்டுரோகம், அர்புதம், குன்மம், கிரந்தி, கிருமிரோகம், காஸம், ச்வாஸம், ப்லீஹ வீக்கம் இவை நிவ்ருத்தியாகும். இது 'கதிராநிஷ்டம்' எனப்படும். 60—65.

பப்பூலாரிஷ்டம் :—இரு நூறு பலம் கருவேலம் பட்டையை நான்கு திரோணம் ஜலத்தில் சேர்த்து, ஒரு திரோணம் மிகும்படியாகக் காய்ச்சவும். பிறகு அக்கஷாயம் ஆறியபிறகு முன்னூறு பலம் வெல்லம், பதினாறு பலம் காட்டாத்திப்பூ, திப்பிலி, ஜாதிக்காய், தக்கோலம், ஏலம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி இவை வகைக்கு இரண்டு பலம், நாககேஸரம், இலவங்கம், மிளகு இவை ஒவ்வொரு பலம், இவ்வனைத்தையும் ஒரு மாதம் மட்பாத்திரத்தில் வைத்திருந்து, அப்பால் எடுத்து வடிக்கட்டி யுபயோகிக்கலாம். இதனுல் க்ஷயம், குஷ்டம், அதிஸாரம், ப்ரமேஹம், ச்வாஸ காஸம் இவை தீரும். 66—68½.

திராக்ஷாரிஷ்டம் இரண்டாவது :—ஐம்பது பலம் திராக்ஷையை இரண்டு திரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்கு மிகும்படி க்வாதம் செய்து வடிக்கட்டி ஆறியபிறகு, வெல்லம் இருநூறு பலம், இலவங்கப் பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், ஞாழல், மிளகு, திப்பிலி, வாய்விடங்கம் இவை ஒவ்வொரு பலம் சூர்ணம் செய்து, அனைத்தையும் மேற் கூறிய க்வாதத்தில் கூட்டி, நன்றாகக் கலக்கி, ஒரு மாதம் மூடிவைத்து, வடிக்கட்டி உட்கொள்ளலாம். இது உரக்ஷதம், க்ஷயம், காஸ ச்வாஸம், தொண்டை வியாதிகள் முதலியவற்றைப் போக்கும்; சரீரத்தில் சேரும் மலங்களையும் வெளிப்படுத்தும்; தேஹத்திற்கு வன்மை யுண்டாக்கும். இதற்கு 'திராக்ஷாரிஷ்டம்' எனப் பெயர். 69—72½.

ரோஹிதகாரிஷ்டம் :—நூறு பலம் செம்மரப் பட்டையை நான்கு திரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலிலொரு பங்கு மிகும்படியாகக் காய்ச்சி, ஆற்றி வடிக்கட்டிய பின், வெல்லம் இருநூறு பலம், காட்டாத்திப்பூ பதினாறு பலம், பஞ்சகோலம், த்ரிஜாதம, த்ரிபலை இவை ஒவ்வொரு பலம், இவற்றைச் சூர்ணம் செய்து க்வாதத்தில் சேர்த்து, ஒரு மாதம் வைத்திருந்து அப்பால் வடிக்கட்டி யுபயோகிக்கவும்; இதனுல் அர்சஸ், கிரஹணீ, பாண்டு, இருதய வியாதி, ப்லீஹரோகம், குன்மம், மஹோதரம் முதலிய வியாதிகளைப் பற்றிய ரோகங்கள், குஷ்டம், சோகை, அரோசகம் இவை நிவ்ருத்தியாகும். இது 'ரோஹிதகாரிஷ்டம்' எனப்படும். 73—76½.

தசமூலாரிஷ்டம் :—சிறு மல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, நெரிஞ்சில், பில்வம், தழுதாழை, வாகை, பாதிரி, பெருங்குமிழ் இவை தசமூலம் எனப்படும். இத்தசமூலத்தில் வகைக்கு ஐந்து பலம், சித்திரமூலம் இருபத்தைந்து பலம், தாமரைக் கிழங்கு இருபத்தைந்து பலம், வெள்ளிலோத்தி இருபது பலம், சீந்தில் இருபது பலம், நெல்லிக்கனி பதினாறு பலம், காஞ்சொறி பன்னிரண்டு பலம், கருங்காலி, உளுந்து,

கடுக்காய் வகைக்கு எட்டு பலம், கோஷ்டம், மஞ்ஜிஷ்டி, தேவதாரு, வாய்விடங்கம், அதிமதுரம், கண்டுபாரங்கி, விளாம்பழம், தான்றிக்காய், வெள்ளைச் சாறடை, சவ்வியம், ஜடாமாம்ஸி, ஞாழல், கன்னரி, கருஞ்ஜீரகம், சிவதைவேர், அரேணுகம், சித்ரரத்தை, திப்பிலி, கமுகு, கச்சோரம், மஞ்சள், சதகுப்பி, அல்லிக் கிழங்கு, நாககேஸரம், கோரைக் கிழங்கு, வாலுளுவை, கர்க்காடகச்ருங்கி, ஜீவகம், ரிஷபகம், மேதா, மஹாமேதா, காகோலி, ருத்தி, வ்ருத்தி இவை வகைக்கு இரண்டு பலம்; இவற்றை எட்டு மடங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்கு மிகும்படியாகக் காய்ச்சி, ஒரு மட்பாத்திரத்தில் சேர்க்கவும்; அறுபத்து நான்கு பலம் திராக்ஷையை அதற்கு நாலு மடங்கு ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி, முக்கால் பாகமாக வற்றவைத்து ஆற்றி முற்கூறிய கஷாயத்துடன் கலக்கவும்; பிறகு முப்பத்திரண்டு பலம் தேனையும், நானூறு பலம் வெல்லத்தையும் அதில் கூட்டிக் கலக்கி, முப்பது பலம் காட்டாத்திப்பூ, தக்கோலம், வெட்டிவேர், சந்தனம், ஜாதிக்காய், இலவங்கம், இலவங்கப் பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம், திப்பிலி இவற்றை வகைக்கு இரண்டு பலம் சூர்ணமாக்கி அதையும், ஒரு சாணமெடை கஸ்தூரியையும் சேர்க்கவும். இவை யடங்கிய பாண்டத்தை பூமியில் புதைத்துவைத்து, பதார்த்தங்களின் ஸத்துவம் கஷாயத்தில் ஊறிய பிறகு, பாத்திரத்தை எடுத்து, அதிலுள்ள திரவபாகத்தை வடித்து, அதில் தேற்றாங் கொட்டையைச் சிறிது தேய்த்து, கலக்கமான பாகம் அடியில் தங்கிவிட, மேலே நிற்கும் தெளிவான பாகத்தை வடித்தெடுத்து கிரஹணீ ரோகம், ச்வாஸம், காஸம், அரோசகம், குன்மம், பகந்தரம், வாத வியாதிகள், க்ஷயம், வாந்தி, பாண்டு, காமாலை, குஷ்டம், அர்சஸ், மேஹரோகங்கள், அக்னிமாந்த்யம், மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய ரோகங்கள், சர்க்கரையென்னும் சிறு கல்லுகளுண்டாகும் மூத்ரரோகம், மூத்ரக்ருச்சிரம், தாதுக்கள் க்ஷீணமாவது இவ்வித வியாதிகளில் உபயோகிக்கலாம்; மெலிந்து போனவருக்கு புஷ்டியைத் தரும்; மலட்டுத் தனத்தையும் நிவ்ருத்தி செய்யும்; சரீர நிறம் அல்லது ஒளியையும், தேஹ பலத்தையும், சுக்லதாதுவையும் செழிப்பிக்க வல்லது. இது 'தாசமூலாரிஷ்டம்' எனப்படும். 77—82.

பதினாராம் அத்தியாயம்

தாது சுத்தி முறை [1]

ஸப்த தாதுக்கள் :—பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, நாகம், வங்கம் அல்லது வெள்ளீயம், இரும்பு அல்லது எஃகு இவ்வேழும் 'ஸப்த தாதுக்கள்' ஆம். இவற்றைச் சுத்தி செய்து ஔஷதங்களில் உபயோகிக்கவேண்டும். 1.

பொன் முதலியவற்றின் சுத்தி :—பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, இரும்பு இவற்றை வெகு மெல்லிய தகடுகளாய் அடித்து, அக்னியிலிட்டுப்

1. பொன், வெள்ளி, செம்பு முதலிய லோஹங்கள் 'தாதுக்கள்' என்றும் கூறப்படும். கந்தகம், சிலாஜது முதலிய கனிஜ வர்க்கங்களும் தாதுவர்க்கத்தில் சேர்ந்தவை என்று சிலர். ஆகிலும் அவற்றை சார்ங்கதரன் முதலியவர் இரஸவர்க்கங்களிலேயே சேர்த்திருக்கின்றனர்.

பழுக்கக் காய்ச்சி, நல்லெண்ணெய், மோர், காடி, பசு மூத்திரம், கொள்ளுக் கஷாயம் இவற்றில் ஒவ்வொன்றிலும் மும் மூன்று முறை தோய்த்தெடுக்கவும். பொன் முதலிய லோஹங்கள் இவ்வாறு செய்ய சுத்தியாகும். 2--3.

நாக வங்கங்களின் சுத்தி :—நாகம், வங்கம் இவ்விரண்டையும் தனித் தனியாக உருக்கி எருக்கம்பாலில் மூன்று முறை தோய்த்தெடுக்க அவை சுத்தமாகும். 4.

ஸ்வர்ண பஸ்ம முறைகள் :—(1) ஒரு பங்கு பொன்னையும் இரண்டு பங்கு பாதரஸத்தையும் [1] சிறிது காடிவிட்டு அரைத்து, குளிகையாக உருட்டி, ஒரு அகலில் இக்குளிகையை வைத்து, ஸமயெடை கந்தகத்தை இதற்குக் கீழும் மேலும் சேர்த்து, மற்றொரு அகலால் மூடி, சுற்றிலும் சீலை மண்ணிட்டு, மூப்பது வறட்டிகளைக் கொண்டு புடம்போடவும்; இவ்வாறு பதிஞன்கு முறை செய்ய ஸ்வர்ணம் நிருத்தமாக [2] பஸ்மமாய்விடும்; ஒவ்வொரு முறை புடம்போடுகையிலும் முன்மாதிரியே கந்தகம் சேர்ப்பது அவசியம். (2) பொன்னை உருக்கி, அதற்குப் பதிஞறில் ஒரு பங்கு நாகம் சேர்த்து சூர்ணம் செய்து, காடி விட்டு அரைத்து, குளிகையாக உருட்டி, அக்குளிகைக்கு ஸமயெடை கந்தகத்தைக் கீழும் மேலும் சேர்த்து, ஓர் அகலில் வைத்து, மேலே மற்றொரு அகலை மூடி, சுற்றிலும் சீலைமண் செய்து, மூப்பது வறட்டிகளைக் கொண்டு புடமிடவும்; இவ்வாறு ஏழு புடங்களிட ஸ்வர்ணம் நிருத்தமாக பஸ்மமாய்விடும். (3) இரஸம், கந்தகம் இரண்டையும் ஸமயெடை சேர்த்து, செம்மந்தாரையின் சாற்றால் அரைத்து, அந்த கஜ்ஜளியை [3] வெகு மெல்லிய ரேக்குளாகச் செய்து, ஸ்வர்ணத்தின்மேல் ரேக்குகள் எவ்வளவு கனமோ அவ்வளவு கனமாகத் தடவி, செம்மந்தாரைப் பட்டையை அரைத்து அதனால் இரண்டு மூசைகள் செய்து, இவற்றுள் கஜ்ஜளி தடவிய பொன் ரேக்குகளை அடைத்து, பிறகு மண்ணுலாகிய மூசைக்குள் மேற் கூறிய மூசையை அடக்கி, சுற்றிலும் சீலைமண் செய்து உலர்த்தி, வறட்டிகளைக் கொண்டு கடுந்தீயிட்டெரிக்கவும். இவ்விதமே மூன்று புடங்கள் போட ஸ்வர்ணம் நன்கு பஸ்மமாகும். இந்தப் பஸ்மத்தை எவ்வித ரோகங்களிலும் உபயோகிக்கலாம். (4) செம்மந்தாரையைப் போல் சிவனார் கிழங்கைக் கொண்டும், பெருங்குரும்பையைக் கொண்டும், மனச்சிலையைக் கொண்டும் புடம்போட ஸ்வர்ணம் பஸ்மமாகும். (5) மனச்சிலை, ரஸவிந்தூரம் இரண்டையும் ஸமயெடை யெடுத்து, எருக்கம்பாலை விட்டுக் குழம்பாய் அரைத்து, பாவனை செய்துகொண்டு, வெயிலில் உலர்த்தி, இவ்வாறு ஏழு முறை பாவனை செய்த பிறகு, இந்த கல்கத்திற்கு ஸமயெடை

1. ஸ்வர்ணம் முதலியதை பஸ்மம் செய்யவும், வேறு விதமாகப் பக்குவம் செய்யவும் உபயோகிக்கப்படும் இரஸம் கந்தகம் முதலியதையும் சுத்தி செய்தே உபயோகிக்கவேண்டும். இவற்றின் சுத்தி முறைகளை அடுத்த 12-ம் அத்தியாயத்தில் காணலாம்.

2. நிருத்தம் என்றால்—பஸ்மமாகச் செய்யப்பட்ட தாதுவை எவ்வுபாயத்தினாலும் அந்த நிலைமையிலிருந்து பிரித்தெடுக்கக் கூடாமை; இதுவே அபுநர்ப்பவம் என்றும் கூறப்படும்.

3. இரஸம், கந்தகம் இரண்டையும் சேர்த்து அரைத்தால் கறுத்த மைபோல் மாறிவிடும்; அது கஜ்ஜளி யெனப்படும்.

ஸ்வர்ணத்தை உருக்கிச் சேர்த்து, ஸ்வாணமும் கல்கமும் ஒன்றாகக் கூடி உருகும்படி மறுபடியும் கடுந் தீயிட்டு எரிக்கவேண்டும்; இவ்விதமே அதே விதமான கல்கத்தை மூன்று முறை சேர்த்து ஸ்வர்ணத்தை உருக்கிவர பஸ்மமாகும். (6) மாடப்புறுவின் அல்லது கோழியின் மலத்தைத் தங்க ரேக்குகளில் நன்றாகப் பூசி, ரேக்குகளுக்கு அடியிலும் மேலும் ஸமயெடை கந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து, ஓர் அகலில் வைத்து, மற்றொரு அகலால் மூடி, சீலைமண் செய்து, ஐந்து வறட்டிகளைக் கொண்டு குக்குடபுடம் [1] போடவும். இவ்வாறு ஒன்பது குக்குட புடங்களிட்ட பிறகு, மூப்பது வறட்டிகள் வைத்து மஹா புடம் [2] ஒரு முறை போட ஸ்வர்ணம் பஸ்மமாய்விடும். 5—19.

ஸ்வர்ணத்தின் குணங்கள்:—முற் கூறியவாறு ஏதேனும் ஒரு வகையில் பக்குவம் செய்த ஸ்வர்ணத்திற்கு இனிப்பு அல்லது கசப்பான சுவையும், ஸ்நிக்தம், சீதம், குரு, விஷக்நம், இரஸாயநம், என்கிற குணங்களும், புத்தி, ஞாபகசக்தி முதலியவற்றை விருத்தி செய்யும் தன்மையும் உண்டு. 20.

ராஜத பஸ்ம முறைகள்:—(1) மெல்லிய தகடுகளாக அடித்த ஒரு பங்கு வெள்ளியின்மேல் ஏதேனும் அம்லத்தினால் ஒரு யாம காலம் ஆட்டிய மூன்று பங்கு தாளக கல்கத்தைத் தடவி, அவற்றை மூசைகளினுள் அடைத்து, மூப்பது வறட்டிகளைக் கொண்டு புடமிடவும். புடத்திலிருந்தெடுத்து மறுபடியும் தாளக கல்கத்தை முன்போலவே தடவி மூசையிலிட்டு புடம் போடவும்; இவ்வாறு பதிஞன்கு புடங்களிட வெள்ளி பஸ்மமாய்விடும். (2) பொன்னிமிளையைக் கள்ளிப்பால் விட்டு அரைத்து, வெள்ளிரேக்குகளில் தடவி, தாளகத்தைக்கொண்டு புடமிட்டது போலவே பதிஞன்கு முறை புடம்போட பஸ்மமாகும். [3] 21—24.

தாம்ர பஸ்மம்:—தாம்ரத்தை மெல்லிய ரேக்குகளாக அடித்து, ஏதேனும் புளிப்பு வகைகளில் சேர்த்து, மூன்று நாட்கள் எரித்து ஆவியில் பாகம் செய்து, பிறகு அத்தகடுகளைக் கல்வத்திலிட்டு, அவற்றிற்கு நாலில் ஒரு பங்கு இரஸம் சேர்த்துக் காடிவிட்டு அரைக்கவும்; பிறகு எலுமிச்சம் பழரஸம் முதலிய ஏதேனும் அம்லத்தினால் அரைத்த இரு மடங்கு கந்தகத்தை அத்தகடுகளின்மேல் பூசி, அவற்றை கோளம்போல் உருட்டவும்; பிறகு பொன்னுங்கண்ணியையாவது அரைத்து, அக்கல்கத்தைத் தாம்ர

1. பதிஞறு அங்குல அகலமும், பதிஞறு அங்குல நீளமும், பதிஞறு அங்குல ஆழமுமுள்ள பள்ளத்தில், கீழும் மேலும் வறட்டிகளை அடுக்கி, நடுவில் புடமிடவேண்டிய வஸ்துவை வைத்துப் போடப்படும்புடம் குக்குடபுடம்.

2. இரண்டு கஜம் அகலம், இரண்டு கஜம் நீளம், இரண்டு கஜம் ஆழமுமுள்ள பள்ளத்தில், ஆயிரம் வறட்டிகளுக் கிடையில் போடப்படுவது மஹாபுடம்.

3. கீழே ஸ்வர்ணத்திற்கு புடம் முதலியது கூறியபிறகு, அதன் குணங்களும் சுருக்கமாய் விவரிக்கப்பட்டன; அதுபோலவே வெள்ளி முதலிய சில வற்றிற்கும் குணம் கூறப்படவில்லை யாதலால், டிப்பணியில் அவ்வித தாதுக்களின் குணங்கள் கூறப்படுகின்றன:—

வெள்ளிக்கு—ஸ்நிக்தம், துவர்ப்பு அல்லது புளிப்பு, ஜீர்ணமான பின்பு மதுரமாக மாறுதல், வாத பித்த ஹரம், சரீரத்திற்கு வன்மையைத் தருதல், விஷக்நம் முதலியவை குணங்களாம்.

கோளத்தின்மேல் சுற்றிலும் ஒரு அங்குலம் கனம் பூசவேண்டும்; அது சிறிது உலர்ந்ததும், ஒரு சிறிய மட்பாத்திரத்தினுள் வைத்து, அப்பாத்திரத்தை மற்றொரு பெரிய பாத்திரத்தினுள் வைத்துச் சுற்றிலும் மணலைப் பரப்பி, பாத்திரத்தின் வாயை ஒரு அகலால் மூடி, சாம்பர் உப்பு இவ்விரண்டையும் ஜலம் விட்டரைத்து, அதனுல் அப்பாத்திரத்திற்கும் அகலுக்கும் இடையிலுள்ள சந்துகளை அடைத்து, அடுப்பில் ஏற்றி, முதலில் சிறு தீயிட்டு கிரமமாக அதைக் கடுந்தீகொண்டு நான்கு யாம காலம் எரித்துத் தீயிலிருந்து இறக்கி, ஆறிய பிறகு உள்ளடங்கிய தாம்ரம் முதலியதை யெடுத்து, கரூணைக் கிழங்கின் சாற்றைவிட்டு ஒரு நாள் அரைத்து, கோளமாகச் செய்து, அந்த கோளத்தினுள் அரைவாசி கந்தகத்தைச் சிறிது நெய்விட்டு அரைத்து, ஒரு மூசையில் அடைத்து, கஜபுடம் [1] இட்டு எரிக்க வேண்டும். அது தானுகவே ஆறியபின்பு மூசையிலடங்கிய தாம்ர பஸ்மத்தை யெடுத்துக் கொள்ளவும். இது ரோகிகளுக்கு உபயோகிக்கக் கூடியவாறு ஹித்தமா யிருக்கும். ஸாதாரண தாம்ரத்தைப்போல் இது வாந்தி, தலைச்சுற்றல், தளர்ச்சி, மயக்கம் முதலிய தூர்குணங்களைச் சிறிது முண்டு பண்ணுது. [2] 25—32.

ஆர பஸ்மமும் காம்ஸ்ய பஸ்மமும் [3]:—காடி முதலியவற்றுல் சுத்தி செய்த பித்தளையை வெகு மெல்லிய ரேக்குகளாகச் செய்து, அதற்குச் சமயெடை கந்தகத்தை எருக்கம்பால் விட்டு அரைத்து, அதைப் பித்தளை ரேக்குகளின்மேல் தடவி, அத்தகடுகளை ஒரு மூசையிலடைத்து கஜபுடத்தில் எரிக்கவும்; இவ்வாறு இரண்டு முறை புடம்போட பித்தளை பஸ்மமாகும். [4] பித்தளைக்குக் கூறிய முறைப்படியே வெண்கலத்தையும் புடம்போட்டு பஸ்மம் செய்யலாம் [5]. 33—34½.

தாம்ரம் பித்தளை வெண்கலம் இவற்றை **பஸ்மம் செய்ய போது முறை**:—தாம்ரம், பித்தளை, வெண்கலம் இவற்றின் தகடுகளின்மேல், அவற்

1. அகலத்தில் $13\frac{3}{4}$-கஜமும், நீளத்தில் $13\frac{3}{4}$-கஜமும், ஆழத்தில் $13\frac{3}{4}$-கஜமு முள்ள ஒரு குண்டத்தில், முக்கால் பாகம் வரையில் வறட்டிகளை அடுக்கி, அதன் மேல் புடம் போடவேண்டிய பாண்டத்தை அமர்த்தி, அதன் மேல் பள்ளத்தின் வாயளவும் வறட்டிகளிட்டு போடப்படுவது கஜபுடம் எனப்படும். சிலர் இரண்டு முழ கன விஸ்தீர்ணமுள்ள பள்ளத்திலிடப் படுவதை கஜபுடம என்பார்கள்.

2. தாம்ரபஸ்மத்தின் குணங்கள்:—சிறிது இனிப்பும் துவர்ப்புமுள்ளது; வயிற்றில் ஜீர்ணமாகும்போது கசப்பு அல்லது காரப்பாக மாறும்: கபம், பித்தம் இவற்றுலுண்டாகும் கோளாறுகள் நிவருத்தியாகும்; குன்மம், குஷ்டம், மூலரோகம், சோகை, பாண்டு, மஹோதரம், பித்தமயக்கம் முதலியதைப் போக்கும். பலமுடுபண்ணும்.

3. ஆரம்—பித்தளை. காம்ஸ்யம்—வெண்கலம்,

4. பித்தளை பஸ்ம குணங்கள்:—ரூக்ஷம், க்ருமிஹரம், விஷஹரம், வ்ருஷ்யம், இரஸாயநம் என்னும் குணங்களும், வாதரோகங்கள், பாண்டு, ப்லீஹரோகம் இவற்றைப் போக்கும் தன்மையும் உண்டு.

5. வெண்கலத்தின் குணங்கள்:—பஸ்மமானபின் கசப்பாயிருக்கும்; உஷ்ணவீர்யம்; வாந்தி யுண்டுபண்ணும். நேத்ரரோகங்களில் உபயோகிக்க உதவும். தீபநமாகவும் பாசநமாகவும் வேலை செய்யும்.

றிற்குச் சமயெடை கந்தகத்தை எருக்கம்பால், ஆலம்பால், கொச்சியிலைச் சாறு, பழமுண்ணிப் பாலியின் சாறு இவற்றுல் அரைத்துத் தடவி முன்போல் புடமிட்டால் அம்மூன்று லோஹங்களும் பஸ்மமாகும். 35½.

நாக பஸ்ம முறைகள்:—(1) சுத்தமான நாகத்தின்மேல் வெற்றிலைச் சாற்றுலரைத்த மனச்சிலையைத் தடவி, மூப்பத்திரண்டு புடம்போட நிருத்தமாக பஸ்மமாகும். (2) சுத்தமான நாகத்தை ஒரு மட் பாத்திரத்திலிட்டு உருக்கி, அரசம்பட்டை, புளியம்பட்டை இவற்றை நாகத்திற்கு நாலில் ஒரு பங்கு சேர்த்து இரும்புத் துடுப்பால் கிளற, ஒரு யாமநேரத்தில் நாகம் அப்பட்டைகளின் சாம்பரோடு கலந்து சூர்ணமாய்விடும். பிறகு நாகத்திற்குச் சமயெடை மனச் சிலை சேர்த்து, காடிவிட்டு அரைத்துப் புடம்போடவும்; புடம் ஆறிய பின்பு நாகத்தை யெடுத்து மீண்டும் அவ்விதமே மனச்சிலை சேர்த்து காடி விட்டரைத்து புடம் போடவேண்டும். இவ்விதமாக அறுபது புடமிட்டால் நாகம் பஸ்மமாகும் [1]. 36—39½.

வங்கபஸ்மம்:—ஒரு மட்பாத்திரத்தில் வங்கத்தை உருக்கி, அதற்கு நாலில் ஒரு பங்கு புளியம்பட்டையும் அரசம் பட்டையும் கூட்டி, இரும்புத் துடுப்பால் கிளறிவர, இரண்டு யாமத்தில் பொடியாகும். பிறகு அச்சூர்ணத்திற்கு ஸமயெடை சாளகம் கூட்டி, காடி விட்டு அரைத்து, அகல்களில் வைத்து சீலமண் செய்து, கஜபுடத்தில் எரிக்கவும்; மறுபடியும் அதில் பத்திலொரு பங்கு சாளகம் சேர்த்துக் காடியினுல் ஒரு யாமம் ஆட்டி புடமிடவும். இவ்வாறு பத்து புடங்களிட வங்கம் [2] பஸ்மமாகும். 40—43.

அயபஸ்ம முறைகள்:—(1) சுத்தி செய்த மெல்லிய அயப்பொடிகளைச் சீந்திற் கொடியின் சாறு விட்டரைத்து, மூன்று புடமும், சோற்றுக் கற்றுழையின் சாற்றுல் அவ்விதமே அரைத்து மூன்று புடமும், வெள்ளைச் சாறடைச் சாற்றுல் மீண்டும் அரைத்து ஆறு புடங்களுமிட, அயம் அல்லது எஃகு பஸ்மமாய்விடும். (2) எஃகு அல்லது அயப் பொடிக்குப் பன்னீரண்டில் ஒரு பாகம் லிங்கம் சேர்த்து, சோற்றுக் கற்றுழைச் சாற்றுல் இரண்டு யாமம் அரைத்து புடமிடவும். இவ்விதம் ஏழு புடங்களிட அயம் அல்லது எஃகு பஸ்மமாகும். (3) வெள்ளைச் சாறடைச் சாற்றுலும், சீந்திற்கொடியின் சாற்றுலும், மூலைப்பாலாலும், எருக்கம்பாலாலும் அயத்தை அரைத்து முன்போலவே புடம்போட நன்கு பஸ்மமாகும். (4) ஒரு பங்கு இரஸமும், இரண்டு பங்கு கந்தகமும் ஒன்றுகக் கலந்து அரைத்து கஜ்ஜலிசெய்து, இவ்வீரண்டுக்கும் ஸமயெடை அயச் சூர்ணம் சேர்த்து, சோற்றுக் கற்றுழைச் சாற்றுல் இரண்டு யாமம் அரைத்து, ஒரு கோளம் போல் உருட்டி, ஒரு தாம்ரபாத்திரத்தில் வைத்து வெயிலில் சற்று நேரம் உலர்த்தி, ஆமணக்கிலைகளால் அதைக் சுற்றி, மீண்டும் அரை யாமகாலம் வெயிலில் வைக்க நன்கு சூடுகொள்ளும்; பிறகு அதை அப்படியே தானியக் களஞ்சியத்தில் புதைத்து, அதன்மேல் ஒரு அகலை மூடி, அதற்குமேல் தானியத்தைப் பரப்பி,

1. நாகத்தின் குணங்கள்:—உஷ்ணவீர்யம், கபவாதஹரம், குரு குணம், லேகநம், இரஸாயநம், சுக்ரலம்; ஆகவே சரீரபலத்தை விருத்தி செய்யக் கூடியது. [நாகம்—காரீயம் அல்லது லீஸம்.]

2. வங்கத்தின் குணங்கள்:—சிறிது உப்பும் காரமும் கசப்பும் கலந்த சுவையுள்ளது; ரூக்ஷம், கபஹரம், பித்தஹரம், க்ருமிஹரம்; பாண்டு,

மூன்று நாட்கள் கழித்து, எடுத்து கல்வத்தில் அரைத்து, வஸ்திரகாளிதம் செய்ய ஜலத்தில் மிதக்குமாறு அயம் பஸ்மமாகும். [1] 44—51.

எல்லா தாதுக்களையும் புடமிட போது முறை :—அயபஸ்மத்தைப் பக்குவம் செய்வதற்குக் கூறிய நான்காவது முறையை யனுஸரித்து, ஸ்வர்ணம் முதலிய எல்லா லோஹங்களையுமே பஸ்மம் செய்யலாம். மேலும் மனச்சிலை, கந்தகம், எருக்கம்பால் இம் மூன்றையும் அரைத்து ஸ்வாணம் முதலிய எந்த தாதுக்களின்மேலும் தடவி பன்னிரண்டு புடங்களிட அவை பஸ்மமாய்விடும். $52\frac{1}{2}$.

உபதாதுக்கள்.

ஸப்த உபதாதுக்கள்:—கிமிஸை, மயில்துத்தம், அப்ரகம், நீலாஞ்ஜனம், மனச்சிலை, தாளகம், ரஸகம் என்கிற இவ்வேழும் உபதாதுக்கள் என்று கூறப்படுகின்றன. $53\frac{1}{2}$.

ஸ்வர்ணமாக்ஷிக சுத்தி :—பொன்னிமிஸை மூன்று பாகம், இந்துப்பு ஒரு பாகம் இவற்றைக் கொடி மாதுளம் பழச் சாற்றிலாவது, எலுமிச்சம் பழச் சாற்றிலாவது சேர்த்து, அடுப்பிலேற்றி பக்குவம் செய்யவும். இதை ஒரு இரும்புப் பாத்திரத்தில் சேர்த்து நன்றாகக் கிளறிக்கொண்டே பக்குவம் செய்யவேண்டும். பாத்திரம் சிவந்துவரும் ஸமயத்தில் இறக்கிவிடலாம். இவ்விதம் செய்தால் ஸ்வர்ண மாக்ஷிக மென்னும் பொன்னிமிஸை சுத்தியாய்விடும். 54—$55\frac{1}{2}$.

ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் :—சுத்தியான பொன்னிமிஸையைக் கொள்ளின் கஷாயத்திலாவது, எண்ணெயிலாவது, மோரிலாவது, வெள்ளாட்டு மூத்திரத்திலாவது அரைத்துப் புடம் போட பஸ்மமாகும். [3] $56\frac{1}{2}$.

துத்த சுத்தி :—துத்தத்தை வெள்ளரிக்காயின் சாற்றிலும், சிறுகுறிஞ்சாவின் சாற்றிலும், எலுமிச்சம் பழ ரஸத்திலுமும் ஒவ்வொரு நாள் பாவனை செய்து, கடும் வெயிலில் வைத்து ஸூர்யபுடம் போட்டால் சுத்தமாகும். அல்லது பூனை, புறு, இவற்றின் மலத்திலில் மயில் துத்தத்தை அரைத்துவிட்டால் சுத்தமாகும். 57, 58.

துத்த பஸ்மம் :—அவ்விதம் சுத்தி செய்த மயில்துத்தத்துடன் பத்தில் ஒரு பங்கு வெண்காரம் சேர்த்து அரைத்து ஒரு புடமிடவும்; பிறகு

மேஹரோகம் இவற்றைப் போக்கும்; லேகனம், ரஸாயகம் என்கிற குணங்களுமுண்டு; [வங்கம்—வெள்ளீயம் அல்லது தகரம்.]

1. அயத்தின் குணங்கள் :—சுவையில் துவர்ப்பு; சில முறைகளில் கசப்பாயுமிருக்கும்; உஷ்ண வீர்யம், ரூக்ஷம், கப-பித்த ஹரம்; சோகை, பாண்டு, குஷ்டம், அர்சஸ், பிரமேஹம், வயிற்றுவலி முதலியதைப் போக்கும்; சிறந்த இரஸாயனமாகவும் உபயோகப்படும்.

2 பொன்னிமிஸை, வெள்ளிமிஸை, மயில்துத்தம், வெண்கலம், ஈயம், வங்கரம், சிலாஜது இவற்றை ஸப்த உப தாதுக்கள் என்றும் சிலர்

3. மாக்ஷிகத்தின் குணங்கள் :—சுவையில் முதலில் மதுரமாயும் அப்பால் சிறிது காரமும் கசப்பும் கலந்ததாயும் இருக்கும்; உஷ்ண வீர்யம்; கபஹரம்; அர்சஸ், சோகை, மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய வியாதிகள், மூத்திர வியாதிகள், அக்னிமாந்த்யம் முதலியவற்றில் உபயோகிக்கக் கூடியது. விஷஹரம், வ்ருஷ்யம் என்கிற குணங்களுமுண்டு.

தயிரால் ஆட்டி ஒரு புடமும், தேன்விட்டு அரைத்து ஒரு புடமும் போட துத்தம் நன்கு பஸ்மமாகும். [1] 59.

அப்ரக சுத்தி :—கிருஷ்ணாப்ரகம் என்கிற கருநிறமான அப்ரகத்தை அக்னியிலிட்டு ஊதி யெடுத்து, பாலில் சேர்த்து, அதை மெல்லிய தளங்களாகப் பிளந்து, முள்ளுக்கீரையின் சாற்றிலும், காடியிலும் தனித் தனியே எட்டு யாமம்வரையில் பாவனை செய்ய அது சுத்தமாகும். 60.

அப்ரக பஸ்மமுறைகள்:—(1) அப்பால் அதை தான்யாப்ரகம் செய்து [2] உலர்த்தி, பிறகு எருக்கம்பால் சேர்த்து ஒரு நாள் முழுவதும் அரைத்து, எல்லாவற்றையும் சக்கரம்போல் அடை தட்டவும். அதை எருக்கிலைகளால் சுற்றி கஜபுடத்தில் எரிக்கவும். இவ்விதமே மறுபடி அரைத்து ஏழு முறை புடம் போடவும். பிறகு ஆலம் விழுதுகளின் க்வாதத்திலில் மூன்று முறை அரைத்து மூன்று புடம் போட அப்ரகம் நன்கு பஸ்மமாகும். இதை அநுபானங்களின் முறைகளைக் கொண்டு பலவித ரோகங்களில் உபயோகிக்கலாம். இவ்வித அப்ரக பஸ்மம் சீக்கிரம் கிழ்தனமுண்டாகாமல் சரீரத்தை திடமாகச் செய்யும். (2) சுத்தமான தான்யாப்ரகத்தையும், அதற்கு ஆறிலொரு பங்கு சுக்கையும். அவ்வளவு கோரைக் கிழங்கையும் சேர்த்து, காடி விட்டு ஒருநாள் அரைக்கவேண்டும். மற்றொரு நாள் சித்திரமூல ஸ்வரஸம் அல்லது சித்திரமூலக் கஷாயத்திலுல் அதை அரைத்து கஜபுடமிடவும். அதை யெடுத்து மீண்டும் த்ரிபலாக்வாதத்திலுல் மூன்று முறை அரைத்து முன்போல் மூன்று முறை புடம் போடவும். பிறகு சிற்றாமுட்டி, பசு மூத்திரம், நிலப் பனங்கிழங்கு, துளவி, கருணைக் கிழங்கு, இவற்றின் சாற்றில் தனித்தனி மூன்று முறை ஆட்டி மும்மூன்று புடங்களிடவேண்டும். இவ்விதம் செய்ய அப்ரகம் நன்றாக பஸ்மமாகும். [3] 61-$67\frac{1}{2}$.

நீலாஞ்ஜனம் முதலியவற்றின் சுத்தி :—நீலாஞ்ஜனக் கற்களை சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழ ரஸத்தில் சேர்த்து ஒரு நாள் வெயிலில் வைத்து பாவனை செய்ய, அவை சுத்தமாகும். இவ்விதமாகவே கைரிகமென்னும் காவிக்கல், அன்னபேதி, வெண்காரம், பலகறை, துவரீ அல்லது

---

1. துத்தத்தின் குணங்கள் :—துவர்ப்பும் சிறிது காரமுமான சுவையுள்ளது: உஷ்ண வீர்யம்; லேகனம், ஆகவே வமனமுண்டாக்கும்; விஷ ஸம்பந்தமான தோஷங்களில் ப்ரயோகிக்கத் தகுந்தது. வெண்குஷ்டம், நேத்ரரோகம் இவற்றிலும் உபயோகமாகும்.

2. அப்ரகத்தை நன்கு பொடித்து, சுணையுள்ள நெல்லுடன் கலந்து ஒரு வஸ்திரத்திற் கட்டி, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் ஏதேனும் காடி அல்லது புளித்த அரிசி கழுவிய நீரை வார்த்து, அதில் அப்ரகப் பொடியும் நெல்லுமடங்கிய வஸ்திரத்தின் மேற் புறத்தைப் பிசைந்து அலசவும்; அப் பொழுது வெகு நுண்ணிய பொடிகளாக அப்ரகம் வஸ்திரத்தின் த்வாரங்களால் வெளிவரும். அதுதான் தான்யாப்ரகம் எனப்படும். மிக்க மிருதுவான (வெண்ணெய் போன்ற) தான்யாப்ரகமே நவநீதாப்ரகம் எனப்படும்.

3 அப்ரகபஸ்ம குணங்கள்:—பிரமேஹம், கூயம், பாண்டு, கிரஹணி இவற்றிலும் அந்தந்த அநுபானங்களைக் கொண்டு குஷ்டம், ச்வாஸம், காஸம், மஹோதரம் முதலிய ரோகங்களிலும் உபயோகிக்கக்கலாம்.

ஸௌராஷ்ட்ர ம்ருத்திகை, சங்கு, கங்குஷ்டமென்னும் ஒருவித காவி இவைகளையும் சுத்தி செய்யலாம். 68—69½.

மனச்சிலா சுத்தி :—மனச்சிலையை டோலாயந்திரத்தில்[2] கட்டி, மூன்று நாட்கள் வெள்ளாட்டு மூத்திரங்கொண்டு பாகம் செய்து, பிறகு ஆட்டின் பித்த நீரில் ஒரு தடவை பாவனை செய்ய மனச்சிலை சுத்தியடையும்.[3] 70½.

தாளக சுத்தி :—தாளகத்தை நன்கு சூர்ணம் செய்து டோலா யந்திரத்தில் கட்டி, காஞ்ஜிகமென்னும் காடியிலிட்டு ஒரு யாமம் பக்குவம் செய்து, அப்பால் பூசுணிக்காய் ரஸத்திலும், பிறகு நல்லெண்ணெயிலும், பிறகு த்ரிபலா க்வாதத்திலும் அவ்விதமே பக்குவம் செய்ய அது சுத்தமாகும்.[4] 71—72½.

இரஸக சுத்தி :—இரஸகமென்னும் ஒரு வகை வெண் தாதுவைப் பக மூத்திரத்தில் ஏழு நாள் டோலாயந்திரத்தைக்கொண்டு சுத்தி செய்து[5], பிறகு எல்லா வேலைகளிலும் உபயோகிக்கலாம். 73½.

தாதுக்களின் ஸ்தூலபாதநம்:—செவ்வரக்கு, மத்வியம், ஆட்டுப்பால், வெண்காரம், மான் கொம்பு, எள்ளுப் பிண்ணாக்கு, கடுகு, முருங்கப்பட்டை, குன்றுமணிவேர், வெல்லம், இந்துப்பு, கம்பளம், வாற் கோதுமை, கடுகரோகிணி, நெய், தேன் இவற்றுள் கிடைக்கக்கூடிய பதார்த்தங்களுடன் முற்கூறிய உபதாதுக்களைக் கலந்து, அவற்றை மூசையில் சேர்த்துக் கடுஞ்

1. கைரிகம் முதலியவற்றின் பாக விஷயங்களை இச்சிறு ஸங்கிரஹ கிரந்தத்தில் விவரிக்காவிடினும், நீலாஞ்ஜனத்தைப் போலவே சுத்தி செய்யக்கூடியவை யென்கிற ஒரு ஸம்பந்தத்தைக் கொண்டு அவையும் இங்கு கிரஹிக்கப் பட்டனவாம். [நீலாஞ்ஜனத்தை பஸ்மம் செய்வதில்லை; ஆகிலும் மனச்சிலையிலிருந்து ஸத்துவமெடுப்பதுபோல் இதிலிருந்தும் ஸத்துவ மெடுக்கலாம். நீலாஞ்ஜனத்தின் குணங்கள்:—சீதவீர்யம், நேத்ர ரோகங்களில் உபயோகிக்கக் கூடியது, விஷஹரம், கபவாதஹரம்.]

2. டோலா யந்திரம்:—சுத்தி செய்யவேண்டிய வஸ்துவை ஒரு வஸ்திரத்தில் கட்டி, ஏதேனும் திரவ பதார்த்தத்துடன் கூடிய ஒரு பாத்திரத்தின் முகத்தில் குறுக்காக ஒரு கொம்பை வைத்து அதில் அவ்வஸ்திரத்தைக் கட்டி பாத்திரத்தினுள் தொங்கவிட்டு, எரித்தல் போட்டு அதிலிருந்தெழும் ஆவியில் அவ்வஸ்துக்களைக் சுத்தி செய்வதற்கான வகை.

3. மனச்சிலை முதலியவற்றிலிருந்து ஸத்துவவெடுக்கும் முறை பிறகு சுருக்கமாகக் கூறப்படுகிறது. மனச்சிலையின் குணங்கள்:—காரமும் கசப்புங் கலந்த சுவையுள்ளது; உஷ்ணவீர்யம், விஷஹரம்; சர்மரோகங்களைப் போக்கும்; கபஹரம்; வாதஹரம்; அக்னிமாந்தியத்தையும் அகற்றும்.

4. தாளக குணங்கள்:—காரமான சுவையுள்ளது; உஷ்ணவீர்யம், ஸ்நிக்த்தம், குஷ்டஹரம், விஷஹரம், சர்மரோகங்களை நீக்கும், வாதரோகங்களைப் போக்கும்.

5. இரஸகத்தின் குணங்கள்:—ஸகல மேஹங்களிலும், நேத்ர ரோகங்களிலும் உபயோகிக்கலாம்.

சூட்டில் எரிக்க அவற்றிலிருந்து வெகு துல்லியமான ஸத்துவம் வெளியாகும்.[1] 74—76.

இரத்தினங்கள்.

வஜ்ரசுத்தி :—வஜ்ரம் அல்லது வைரமென்னும் இரத்தினத்தை கண்டகத்திரி வேரைப் பிளந்து அதனுள் மறைத்து வைத்து, ஒரு வஸ்திரத்தில் கட்டி, கொள், கோத்ரவம் இவற்றின் கஷாயத்தில் டோலா யந்திரத்தைக் கொண்டு மூன்று நாட்கள் பிறகு பக்குவம் செய்து, அதைக் காய்ச்சிக் காய்ச்சிக் கழுதை மூத்திரத்திற்போடவும்; அவ்விதம் இருபத்தோரு முறை செய்ய வஜ்ரம் நன்கு சுத்தமாகும். 77—78.

வஜ்ர பஸ்மம் :—(1) சிறிது தாளகத்தை மூட்டுப் பூச்சிகளின் இரத்தத்தால் அரைத்து, கோளமாகச் செய்து, அதனுட்புறத்தில் சுத்தி செய்த வஜ்ரத்தை மறைத்து வைத்து, அக்கினியில் வைத்து ஊதவும்; அந்த கோளம் நன்கு எரிந்து அக்னிவர்ணமாயிருக்கையில், குதிரையின் சிறுநீரில் தோய்க்கவும். மீண்டும் முன்போலவே தாளகத்தை கோளம் செய்து அதில் வஜ்ரத்தை யடக்கி புடம் போடவேண்டும். இவ்விதம் இருபத்தோரு முறை எரித்தெடுக்க வஜ்ரம் பஸ்மமாகும். (2) அல்லது பெருங்காயம், இந்துப்பு, கொள் இவற்றை ஜலத்தில் காய்ச்சி, வஜ்ரத்தை பழுக்கக் காய்ச்சி, மேற்கூறிய கஷாயத்தில் தோய்த்தெடுக்க வஜ்ரம் பஸ்மமாகும். (3) அல்லது ஒரு வெண்கலப் பாத்திரத்தில் தவளையைப் பிடித்துவைக்க, அது பயத்தினால் மூத்திரமிடும்; அதில் வஜ்ரத்தைக் காய்ச்சிக் காய்ச்சி பலமுறை தோய்க்க பஸ்மமாகும்[2] 79—83.

வைக்ராந்த சுத்தி முதலியது :—வைக்ராந்தத்தையும் வஜ்ரத்தைப் போலவே சுத்தி செய்யலாம். கடருப் பச்சைக் கல்லையும் வைரியத்தையும் இவ்விதமே சுத்தி செய்யலாம். அதை மறுபடியும் அக்னியில் காய்ச்சிக் காய்ச்சி குதிரை மூத்திரத்தில் தோய்க்கவும்; இவ்விதம் பதினொன்று முறை செய்து, அப்பால் சிறுகுறிஞ்சாவின் வேர், இலை, தண்டு, புஷ்பம், காய் இவ்வனைத்தையும் கல்கம்போல் அரைத்து, அக்கல்கத்தினுள் அவ்வைக்ராந்தத்தை மறைத்து, மூசையினுள் அடக்கம் செய்து, புடம் போடவும்; இவ்வாறு ஏழு தடவை புடம்போட வைக்ராந்தம் பஸ்மமாகும். இந்த பஸ்மத்தை வஜ்ரபஸ்மத்திற்குப் பதிலாகவும் உபயோகிக்கலாம்[3]. 84—85½.

நல்முத்து முதலியவற்றின் சுத்தி :—தழுதாழை ஸ்வரஸத்தில் நல்முத்து, பவளம், மற்றுமுள்ள இரத்தினங்கள் இவற்றை டோலாயந்திரத்திற் கட்டி ஒரு யாமகாலம் ஆவியிற் பக்குவம் செய்ய அவை நன்கு சுத்தியாகும். 86½.

1. ஸத்துவம்:—பஸ்மத்தினும் அதிக வீர்யமுள்ள ஒருவித பாகம்; வெண்மையாகவும், தளதளப்பாகவும்இருக்கும்.

2. வஜ்ரத்தின் குணங்கள்:—பல்யம், ஆயுஷ்யம், வ்ருஷ்யம், இரஸாயநம், பருஹ்மணம்; அதிகமாஞல் விஷகுணத்தைக் காட்டும்.

3. வைக்ராந்தத்தின் குணங்கள் :—மேஹரோகம், க்ஷயம், க்ரஹணி, காஸம் முதலியவற்றைப் போக்கும்; வ்ருஷ்யம், இரஸாயனம், பல்யம், தீபநம், வஜ்ரத்திற்குக் கூறிய மற்ற குணங்களும் இதற்குண்டு. [வைக்ராந்தம் என்பது ஸ்படிகம்போன்ற ஒருவித கடினமான கல்.]

நல்முத்து முதலியவற்றின் பஸ்மம் :—சோற்றுக் கற்றாழையின் சாறு, முள்ளங்கீரையின் சாறு, மூலைப்பால் இவற்றைக்கொண்டு நல்முத்து, பவளம் முதலிய இரத்தினங்களை நன்றாக அரைத்து ஏழு தடவை புடம்போட, அந்தந்த இரத்தினமும் அததற்கேற்ற நிறத்துடன் பஸ்மமாகும். இதற்கு முன் ஸ்வர்ணமாக்ஷிகத்திற்குக் கூறிய விதம் நல்முத்து முதலியவற்றையும் பஸ்மம் செய்யலாம். அல்லது வஜ்ரத்தைப்போலவே ஸகல இரத்தினங்களையும் சுத்தி செய்து பஸ்மம் செய்யலாம். [1] 87—89½.

சிலாஜது சுத்தி :—கோடை காலங்களில் மலைப்பிராந்தங்களிலிருந்து உருகி வெளிவரும் சிலாஜதுவை எடுத்துவந்து, பசும்பால், த்ரிபலாக்வாதம், கரிசிலாங்கண்ணிச்சாறு இவற்றுல் ஒவ்வொரு நாள் அரைத்து வெயிலில் உலர்த்தி யுலர்த்தி யெடுத்தால் சிலாஜது சுத்தமாகும். 90—91.

சிலாஜது பஸ்மம் :—சில யுருவமான சிலாஜதுவைச் சிறு சிறு துண்டுகளாகப் பொடித்து, மிகவும் சூடான ஜலத்தில் ஒரு யாமகாலம் வைத்திருந்து, அப்பால் நன்றாக அரைத்துக் கடைந்து, வடிக்கட்டி, அந்த ஜலத்தை ஒரு மட்பாத்திரத்தில் எடுத்து வெயிலில் வைத்திருக்கவும்; பிறகு அதன் மேற்புறத்திலுள்ள குழம்பான பாகத்தை வடித்தெடுத்து மீண்டும் வெயிலில் வைக்கவேண்டும். இவ்வாறு இரண்டு மாத காலம் மேன்மேலும் வடித்து வெயிலில் வைத்து வந்தால் ஔஷதமாய் உபயோகிக்கத்தகுந்த நிலைமை சிலாஜதுவுக்கு உண்டாகும். இவ்வித சிலாஜதுவை நெருப்பில் சேர்த்தால் லிங்கம்போல் உருகி மேலெழுந்துவரும்; புகை சிறிதும் இராது; பாத்திரத்தின் அடியில் தங்கியிருக்கும் அம்சத்தையும் அநேகமுறை ஜலத்தில் கலக்கி வெயிலில் வைத்துவர அதுவும் ஔஷத முறைக்கு உபயோகமாகும். [2] 92—96½.

மண்டூரம் :—தான்றிமரக் கட்டைகளிட்டு எரிக்கப்படும் அக்னியில் இரும்புக்கிட்டத்தைப் பழுக்கக் காய்ச்சி, பசுமூத்திரத்தில் தோய்க்கவும். இவ்விதம் ஏழு தடவை செய்தபின் அதை நன்றாகப் பொடி செய்து, இருமடங்கு த்ரிபலாக்வாதத்தில் சேர்த்துக் கலக்கி, அப்பால் தீயிலேற்றி வறுக்க, அக்கிட்டம் கருஞ்சிவப்பான விந்தூரமாய் மாறும். இதை 'மண்டூரம்' என்பார்கள். [3] 97—98½.

---

1. **நல்முத்தின் குணங்கள் :**—சுவையில் மதுரம், சீதவீர்யம், நேத்திர ரோகங்களைப் போக்கும்; விஷஹரம்; க்ஷயரோகம், வாயிலுண்டாகும் புண் முதலியவற்றையும் போக்கும்; பலம் தேஹபுஷ்டி இவற்றையும் தரும்; பித்தத்தையும் போக்கும். **பவளத்தின் குணங்கள் :**—கபம் முதலிய தொஷங்களை நெகிழச் செய்து வெளிப்படுத்தும்; நேத்திர தோஷங்கள், க்ஷயம், இரத்த பித்தம், காஸம் இவற்றை நிவ்ருத்தி செய்யும்; தீபகம், பாசநம் என்கிற குணங்களுமுண்டு.

2. **சிலாஜது குணங்கள் :**—சுவையில் கைப்பும் சிறிது காரமும் கலந்திருக்கும்; உஷ்ண வீர்யம், இரஸாயநம்; மேஹம், உன்மாதம், அச்மரீ, வீக்கம், அபஸ்மாரம், க்ஷயம், மஹோதரம், அர்சஸ், மூத்ரிரப் பையிலுண்டாகும் வியாதிகள் இவற்றை நிவ்ருத்தி செய்யும்.

3. **மண்டூரத்தின் குணங்கள்:**—பாண்டு, மேஹம், ஆமவாதமென்னும் கீல்வாயு, வாதரக்தம், குன்மம், வயிற்றுக் கிருமிகள், சோகை இவற்றை

க்ஷார கல்பனை.

இரண்டுவித க்ஷார முறை :—க்ஷாரம் செய்வதற்கு உபயோகமான விருக்ஷங்களின் கட்டைகளை உலர்த்தி நெருப்பிட்டு எரிக்கவும்; அக்னி அவிந்துபோனதும் அவற்றின் பஸ்மங்களை யெடுத்து ஒரு மட்பாத்திரத்தில் நாலு பங்கு ஜலமிட்டு, அதில் அந்தச் சாம்பரைச் சேர்த்துக் கடைந்து ஓர் இரவெல்லாம் அவ்விதமே வைத்திருந்து, மறு நாட் காலையில் மேலே தெளிந்திருக்கும் ஜலத்தை மட்டும் வடித்துக்கொண்டு, ஜலம் முடியவும் சுண்டிப்போகும் வரையில் காய்ச்சவேண்டும்; பிறகு பாத்திரத்தினுள் சுற்றிலும் படிந்திருக்கும் வெண்ணிறமான சூர்ணம் போலிருக்கும் உப்பு களைச் சுரண்டி யெடுத்துக் கொள்ளவும். அடியில் படிந்து நிற்கும் குழம்பு போன்ற ஒருவித உப்புநீரையும் மற்றொரு பாத்திரத்தில் பிரத்தியேகமாய் எடுத்துவைக்கவும். இவ்விருவித க்ஷாரங்களில் சூர்ணம் போலிருப்பது சில வியாதிகளில் சர்மம் முதலியவற்றைச் சுடுவதற்கும், திரவமான க்ஷாரம் அவசியமான ஸமயங்களில் ஜலம் முதலியவைகளில் கலக்கி உட்கொள்வதற்கும் ஏற்றவைபாம். விஷயமறிந்த வைத்தியர்கள் அத்தந்த ரோகங்களில் இவ்விரு க்ஷாரங்களையுமுபயோகிக்கலாம். [1] 99—102.

பன்னிரண்டாம் அத்தியாயம்

இரஸங்கள்.

பாதத்தின் பிரபாவம் :—பாதரஸம் எனப்படும் பாரதம் ஸர்வ ரோகங்களையும் போக்க வல்லது; சரீரத்திற்குப் புஷ்டியுண்டுபண்ணும் என்று முனிவர்களால் மதிக்கப் பட்டிருக்கிறது. இரஸசாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்த பண்டிதரால் முறை தவறுமல் இரஸம் பக்குவம் செய்யப் படுமானுல், அதை யுபயோகிப்பவர் தேஹவித்தி [2] யடையவும், எளிதில் லோஹவித்தியை [3] நிறைவேற்றவும் கூடும். 1.

நிவ்ருத்தி செய்யும்; சரீரத்திற்கு வன்மையை யுண்டாக்கிக் கிழத்தனத்தினுல் நேரிடும் பலக்குறைவையும் தடுக்கும்.

1. க்ஷாரம் என்றுல் நீரடிமுத்து மரம் முதலியவற்றின் இலைதழைகளுடன் கூடிய கிளைகளை எரித்து, அவற்றின் சாம்பரை ஜலத்திற் கரைத்துக் காய்ச்சி யெடுக்கப்படும் மிகவும் தீக்ஷ்ணமான உப்பு. சுணையுள்ள யவதானியம் முதலியவற்றின் மூள் முதலானதையும் எரித்து க்ஷாரமென்னும் உப்பு எடுப்பதுண்டு. இவ் வுப்புகளை காரமென்றும் கூறுவர். [தாதுக்களை ஔஷதமாய் உபயோகிப்பதற்கு அவற்றை பஸ்மம் செய்து உபயோகிப்பது போல, க்ஷாரமுறையிலும் சில மரங்களையும் சுணையுள்ள தானியம் முதலியவற்றையும் எரித்து பஸ்மமாக்கி அவற்றிலிருந்து ஔஷதத்திற்கு உபயோகமான க்ஷாரம் என்னும் ஸத்து எடுக்கப்படுவதால் க்ஷார முறையும் இங்கு கூறப்படுகிறது.]

2. தேஹவித்தி-யோகத்தினுல் உண்டாகக்கூடிய அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என்கிற அஷ்டவித்திகள்.

3. லோஹவித்தி—லோஹவர்க்கங்களை பஸ்மமாகவும் ஸத்துவ மாகவும் செய்வதற்கும், அவற்றைக்கொண்டு தாதுவாதம் முதலியதைச் செய்வதற்கும் ஏற்ற முறை.

இரஸம் முதலியவற்றிற்குப் பலவித பெயர்கள் :—(1) இரஸேந்த்ரம், பாரதம், ஸூதம், ஹாரஜம், ஸூதகம், இரஸம், ரஸகுந்தம் என்று ஔஷத முறைகளில் பாதரஸத்திற்குப் பல பெயர்கள் வழங்கப்படும். (2) மேலும் இந்தப்பிரகரணத்தில் தாம்ரம், வெள்ளி, பித்தளை, நாகம், ஸ்வர்ணம், வங்கம், வெண்கலம், காந்தம் என்கிற ஒன்பது லோஹங்களும் சூர்யன், சந்திரன், அங்காரகன், புதன், பிருஹஸ்பதி, சுக்ரன், இராகு, கேது என்னும் ஒன்பது கிரஹங்களுடைய பெயர்களால் முறையே வழங்கப்படும். 2—3½.

பாத சுத்தி :—கடுகு, வெள்ளுள்ளி இவற்றைக் கல்கமாக அரைத்து, அதனால் மூசை செய்து, அம்மூசையினுள் பாரதத்தைச் சேர்த்து, மற்றொரு மூசையினால் மூடி, வஸ்த்ரத்தில் கட்டி, டோலா யந்திரமாகக் காடியில் தொங்கவைத்து, மூன்று நாட்கள் தீயிட்டு அதன் ஆவியில் இரஸத்தைப் பக்குவம் செய்து, சோற்றுக்கற்றாழையின் சாற்றில் அதை ஒரு நாள் அரைக்கவும்; அப்படியே சித்திரமூலக்கஷாயத்தில் ஒரு தினமும், மணத்தக்காளியின் ஸ்வரஸத்தினால் ஒரு தினமும், த்ரிபலாக்வாதத்தினால் ஒரு தினமும் தனித்தனியே அரைத்து, பிறகு காடிகளைச் சேர்த்து நன்றாகக் கழுவி, இரஸத்தை மட்டும் தனியாகப் பிரித்தெடுக்கவேண்டும். அப்பால் அப்பாரதத்தை கல்வத்திலிட்டு, பாதியளவு இந்துப்பையும் சேர்த்து, எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு நாள் முடிய இடைவிடாது அரைக்கவும். பிறகு வெள்ளுள்ளி, கடுகு, இந்துப்பு, நவஸாரம் இவற்றில் ஒவ்வொன்றையும் இரஸத்திற்கு ஸமம் கூட்டி, காஞ்ஜிக மென்னும் காடியினால் அரைத்து, அதை ஒரு சக்கரம் போல் தட்டி, வெயிலில் உலர்த்தி, பெருங்காயத்தை அரைத்து அதன்மேல் தடவி, அதை ஒரு பாத்திரத்தில் வைத்து உப்பை நிரப்பி, மற்றொரு பாத்திரத்தை அதன்மேல் கவிழ்த்து மூடி, சுற்றிலும் ஈரமண் செய்து உலர்த்தி, அடுப்பிலேற்றி சிறுகச் சிறுகத் தீயிட்டு எரிக்கவும். அவ்வாறு எரிக்கையில் மேலே கவிழ்த்துள்ள பாத்திரத்தின் மீது குளிர்ந்த ஜலத்தை அடிக்கொரு முறை விட்டு வரவேண்டும். இரமமாக அக்கினியையும் கடுஞ் ஜ்வாலையுடன் இவ்வாறு மூன்று யாமகாலம் எரித்து வர, இரஸம் ஆவியாய் மேலேயுள்ள பாத்திரத்தின் உட்புறத்தில் படியும்; இவ்விதம் செய்ய இரஸம் சுத்தமாகும் பிறகு மேல் பாத்திரத்தை யெடுத்து அதனுள் படிந்திருக்கும் பாதரஸத்தை வழித்தெடுத்துக் கொள்ளவும்[1] 4-12½.

கந்தக சுத்தி :—வாயகன்ற ஓர் இரும்புப் பாத்திரத்தில் நெய் ஊற்றிக் காய்ச்சி, நெய் உருகியதும் அதற்கு ஸமையடை கந்தகத்தைப் பொடித்துச் சேர்த்து; அது நன்றாக நெய்யுடன் கலந்து உருகிய பிறகு மெதுவாகப் பாலில் ஊற்ற கந்தகம் சுத்தமாகும். 13, 14.

லிங்கத்திலிருந்து இரஸமெடுக்கும் முறை :—லிங்கத்தை[2] ஆட்டுப்பாலிலும், எலுமிச்சம்பழச்சாறுமுதலிய அம்லங்களிலும் தனித்தனி ஏழு முறை

---

1. அடிப்பாத்திரத்தில் இரஸம் முதலியதை வைத்து ஆவியாக்கி, மேற்பாத்திரத்தில் படியச்செய்வதற்கான உபாயம் **ஊர்த்வபாதந யந்த்ரம்** எனப்படும்.

2. லிங்கம்—இது ஹாலண்டு என்னும் உலாந்தர தேசத்திலுண்டாவதால் **உலாந்தாலிங்கம்** என்றும், பவளம்போல் சென்னிறமாயிருப்பதால் **பவளமனச்சிலை** யென்றும், ஜாதிலிங்கம் என்றும் வழங்கப்படும்; ஸம்ஸ்

பாவனை செய்ய அது நன்கு சுத்தியாகும். பிறகு எலுமிச்சம்பழ ரஸத்திலாவது, வேப்பிலைசாற்றிலாவது, ஒரு யாமகாலம் ஆட்டி சிறிது உலர்த்தி, மூன்பு பாதரஸத்திற்குக் கூறிய விதம் ஊர்த்வபாதந யந்திரத்தில் எரிக்க, மேற்பாத்திரத்தினுள் சுத்தமான பாரதம் முன்போல் படிந்திருக்கும். அதை எடுத்து ஔஷதமுறைகளில் உபயோகிக்கலாம். 15—17.

நவ விஷங்கள் :—காலகூடம்,[1] வத்ஸநாபம், சிருங்கம், ப்ரதீபகம், ஹாலாஹலம், ப்ரஹ்மபுத்ரம், ஹாரித்ரம், ஸக்துகம், ஸௌராஷ்ட்ரிகம்[1] என்பவை 'நவ விஷங்கள்' எனப்படும். 18½.

ஸப்த உபவிஷங்கள் :—எருக்கு, இலக்ஷ்ணி, ஊமத்தை, சிவனார் கிழங்கு, அலரி, குன்றுமணி, அபினி இவ்வேழும் 'ஸப்த உபவிஷங்கள்' எனப்படுகின்றன. 19½.

பாரதத்திற்கு தாதுகரண ஸக்தி :—மேற்கூறிய விஷவர்க்கங்களைச் சேர்த்து பாரதத்தை அரைக்க, அதில் சேர்ந்துள்ள கலப்பு தோஷங்கள் விலகி, அதற்கு ஒருவகை முகமென்னும் தன்மையுண்டாய், எளிதில் தாதுவர்க்கங்களை கிரஹிக்கும் குணமும் உண்டாகும்.[2] அல்லது த்ரிகடு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கடுகு, பஞ்சலவணம், வெள்ளுள்ளி, நவஸாரம், முருங்கை,

---

கிருதத்தில் தரதம் என்றும், ஹிங்குளம் என்றும் கூறப்படும். இதிலிருந்து எடுக்கப்படும் பாரதம் ஹிங்குளாகிருஷ்டரஸம் எனப்படும்.

1. (1) **காலகூடம்**—இது ஒரு விஷவிருக்ஷத்தின் பிசின்; அவ்விருக்ஷம் அரசமரம்போன்ற உருவமுள்ளது. சிருங்கபேர க்ஷேத்ரத்திலும், கொங்கணதேசத்திலும், மலயபர்வதப்பிராந்தியங்களிலும் உற்பத்தியாகும். இதை கிழங்கு என்று சிலர். (2) **வத்ஸநாபம்**—வத்ஸநாபியைப்போன்றது; ஆவாரயிலை போன்ற இலைகளுள்ளது; வத்ஸநாபச் செடியின் அருகில் இதர மரங்கள் விருத்தியாகமாட்டா. இதை இந்த்ரநாபம் என்று சிலர். (3) **சிருங்கம்**—இதுவும் நாபியைப்போன்றதோர் கிழங்கு. இவ்விஷக் கிழங்கைப் பசுவின் கொம்பில் கட்டினால் அதன் பால் சென்னிறமாக அல்லது இரத்தமாக மாறிவிடுமெனப்படுகிறது. (4) **ப்ரதீபகம்**—நிறத்தில் மிகச்சிவந்து அக்கினியைப்போல் பிரகாசமுள்ளதும், மிகவும் அழற்சியுண்டு பண்ணுவதுமான ஒரு கிழங்கு. (5) **ஹாலாஹலம்**—இவ்விருக்ஷத்தின் இலைகள் பனையோலையைப்போலிருக்கும்; புஷ்பங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கும்; பசுவின் மூலையைப்போல் காய்கள் காய்க்கும். இவ்விருக்ஷத்தின் கடுமையான வேக்காட்டினால் அருகிலுள்ள மரங்களும் புற்பூண்டுகளும் எரிந்துவிடும். இவ்விருக்ஷம் கிஷ்கிந்தையிலும், ஹிமாலயத்திலும், தென்கடற்கரையின் சில பாகங்களிலும், கொங்கணத்திலும் உற்பத்தியாகுமாம். (6) **ப்ரஹ்மபுத்ரம்**—இப்பெயர்கொண்ட கிழங்கு உள்ளும் புறமும் கபில நிறமானது. மலயபர்வதச்சாரலில் உற்பத்தியாகும். 7) **ஹாரித்ரம்**—மஞ்சளைப்போன்ற ஒரு கிழங்கு. (8) **ஸக்துகம்**—பலவாறு முடிபோன்ற கணுக்களுடன் கூடிய இவ்விஷக் கிழங்கை உடைத்தால் உட்புறம் ஒரு மாப்பசைபோன்ற ஸத்துக்கள் நிரம்பியிருக்கும். (9) **ஸௌராஷ்ட்ரிகம்**—இதுவும் நாபியைப்போன்றதாய் ஸௌராஷ்ட்ர தேசத்தில் உற்பத்தியாகக் கூடிய மிகக் கொடிய விஷக் கிழங்கு.

2. ஸ்வர்ணம் முதலிய லோஹவர்க்கங்களை உறிஞ்சிக் கவர்ந்து தன்னுடன் லயப்படுத்தும் தன்மையை **ரஸகர்ஷணம்** என்பார்கள்.

இவற்றை ஸமயெடை சேர்த்து, ஒருமிக்க சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழச் சாற்றையாவது, கொடிவேலுமிச்சம்பழ ரஸத்தையாவது, காடிகளையாவது அதில் விட்டு, அக்னியின் மேலேற்றி, நன்றாகக் காய்ச்சிய கல்வத்தில் அனைத்தையும் மூன்று நாள் அரைத்து வந்தால் இரஸத்திற்கு தாதுக்களை கிரஹிப்பதற்கேற்ற முகமென்னும் தன்மையுண்டாகும். 20—24.

கரீஷபாதீதாழம் கந்தக ஜாரணமும்:—கந்தகத்துக்கு ஜாரணமும்[1] அதற்கான கக்ஷபுடாதி முறையும் கூறப்படுகிறது. ஒரு பெரிய மட்பாத்திரத்தின் உட்புறத்தில் சுற்றிலும் சிறிய வரம்பு எற்படுத்தி, அதற்கடியில் ஜலம் சேர்த்து, அவ்வரம்பின்மேல் நிற்குமாறு ஓர் அகன்ற மண் அகலை இடையில் மூடியைப்போல் அமைத்து, அகலும் விளிம்பும் வரம்பின் முனையும் சேருமிடத்தில் சுற்றிலும் த்வாரத்தைச் சுண்ணம் பூசி அடைத்து, அவ்வகலின்மேல் இரஸத்தைச் சேர்த்து இரஸத்திற்கு ஸமயெடை கந்தகத்தை அதன்மெல் பொடித்துச் சேர்க்கவேண்டும். பிறகு கீழுள்ள அகலுக்கு ஸமமாக அகன்ற மற்றொரு அகலை அதன்மேல் கவிழ்த்து மூடி, அதன் மேல் சாம்பரைப் பரப்பி, நாலைந்து வறட்டிகளை அதன்மேல் அடுக்கி, அக்னி மூட்டி புடம்போடவும். அக்னி தானே அவிந்துபோனதும் சாம்பர் முதலியவற்றை விலக்கி ஜாரணமான கந்தகம் ஸம்பந்தித்த இரஸத்தையெடுத்து, மறுபடியும் முன்போலவே அவ்வளவு கந்தகத்துடன் கலந்து, இவ்விதமே புடம்போடவும். இவ்விதம் ஆறு முறை கந்தகம் சேர்த்துப் பக்குவம் செய்ய, ஆறு மடங்கு கந்தகமும் இரஸத்துடன் ஒருமிக்கக் கலந்து விடும். இதை கந்தக ஜாரணம் என்பார்கள். இவ்வாறு கந்தகம் ஜாரணமான பாரதம் அக்னிதீபனம் செய்யவும், மற்றும் பல முறைகளில் உபயோகிக்கவும் தகுந்தது. இவ்விதம் பக்குவம் செய்யப்பட்ட பாரதம் ஷட்குண பலி ஜாரித ரஸம் எனப்படுகின்றது. 25—28½.

இரஸ பஸ்ம முறைகள்:—(1) தாமஸாரமென்னும் ஒட்டடை, இரஸம், உழமண்ணுப்பு, கந்தகம், கவஸாரம் இவற்றை ஸமபாகம் சேர்த்து, எதேனும் புளிப்பு வஸ்துவால் ஒரு யாமம் அரைத்து, அவற்றை ஒரு கண்ணுடிக் குப்பியில் சேர்த்து சீலமண் செய்து, அதன் வாயையும் மூடி மண் பூசி உலர்த்தவும்; ஒரு மட்பானையின் அடியிற் சிறிய த்வாரமிட்டு, அதில் குப்பியை வைத்து, அக்குப்பியைச் சுற்றிலும் அதன் கழுத்து வரையில் மணலை நிரப்பி, அடுப்பிலேற்றி, சிறுகச் சிறுகத் தீயிட்டெரிக்கவும். பிறகு கிராமமாகக் கடுத்தீயிட்டு பன்னிரண்டு யாமம் எரிக்க இரஸம் பஸ்மமாய் விடும். பிறகு தானே ஆறிய பின்பு அக்குப்பியை உடைத்து, அதனுட்புறத்தில் மேற்புறமாகப் படிந்திருக்கும் கந்தகத்தின் அம்சங்களைப் பரிஹரித்து, அடியிலுள்ள இரஸ பஸ்மத்தையெடுத்து, அவசியமான காரியங்களில் உபயோகிக்கலாம். (2) நாயுருவி விதைகளையரைத்து இரண்டு மூசைகள் செய்யவும் அந்த மூசையினுள் இரஸத்தைச் சேர்த்து, பேயகத்தியின் பாலையும் அதில் கலந்து, தும்பைப்பூக்களையும், வாய்விடங்கத்தையும், கருங்காலிப் பட்டையையும் சூர்ணம் செய்து, இரஸத்திற்குக் கீழும் மேலும் சேர்த்து,

1. ஜாரணம்:—ஒரு பதார்த்தத்திலுள்ள ஸாராம்சங்களை மற்றொரு பதார்த்தம் கவர்ந்துகொள்வது; ஸ்வர்ணம் முதலியதைக் கிரஹித்து அதன் ஸத்துவங்களை இரஸம் கவர்ந்து கொள்வது ஜாரணமாகும்.

மேலே மற்றொரு மூசையை மூடி, இடையிலுள்ள த்வாரத்தை மண்பூசி மறைத்து, மற்றொரு பெரிய மண்மூசையினுள் அதை வைத்து மூடி, அதற்கும் சீலை மண் செய்து உலர்த்தி, அப்பால் கஜபுடத்தில் எரிக்க ஒரு புடத்தில் பாரதம் பஸ்மமாகும். (3) பேயத்திப்பால் விட்டு அரைத்த பெருங்காயத்தினுல் இரண்டு மூசைகள் செய்து, இரஸத்தையும் பேயத்திப்பாலால் ஆட்டி, ஒரு மூசைக்குள் வைத்து, அதை மற்றொரு மூசையினுல் மூடி, அதைச் சுற்றிலுமுள்ள த்வாரங்களை அடைத்து, அதை மற்றொரு பெரிய மண் மூசையினுள் வைத்து சீலமண் செய்து, மெதுவான ஒரு புடம் போட பாதரஸம் பஸ்மமாய்விடும்.(4) பாதாஸத்தை வெற்றிலைச்சாற்றிலாட்டி, அதை வெள்ளெருவின் கிழங்கு அல்லது வேரின் உள்ளே அடக்கி, மண் மூசையினுள் வைத்து ஒரு முறை புடம் போட பஸ்மமாகும்.[1] 29—41.

ஜ்வராங்குச ரஸம் முதலாவது:—மான் கொம்பைப் பொடித்து அதற்குச் சம பாகம் பாரதம் சேர்த்து, சித்திர மூலரஸத்தினுல் ஆட்டி, ஒரு மட்பாத்திரத்தில் சேர்த்து, அடுப்பிலேற்றி இரண்டு யாமம் எரிக்கவும். பிறகு மான் கொம்புக்கு எட்டில் ஒரு பங்கு த்ரிகடு சூர்ணம் சேர்த்து, அனைத்தையும் கல்வத்தில் அரைத்து வைத்துக்கொள்ளவும். இதில் நிஷ்கப்பிரமாணம் வெற்றிலைச்சாறுடன் உட்கொண்டு வர வாதஜ்வரம், பித்த ஜ்வரம், மற்றும் அநேக வகை ஜ்வரங்களும் தீரும்; இதற்கு 'ஜ்வராங்குச ரஸம்' எனப் பெயர். 42—43½.

ஜ்வராரி ரஸம்:—பாதரஸம், இரஸகம், தாளகம், மயில்துத்தம், வெண்காரம், கந்தகம் இவ்வனைத்தையும் சுத்தமாய் ஸமயெடை கிரஹித்து, பாகலிலைச்சாற்றுல் ஒரு நாள் அரைத்து, அக்கல்கத்தை ஒரு தாம்ர பாத்திரத்தில் வைத்து, அதன் முகத்தை மூடி, வாலுகாயந்திரத்தில்[2] எரிக்க வேண்டும். அப்பாத்திரத்தின் முகத்தில் எதேனும் தானியங்களை வைத்து அவை பொரியுமாகில், அப்பொழுது குப்பியிலிருக்கும் ஔஷதம் பக்குவமானதாய் அறிக. அப்பால் அக்கினியை அவித்துவிட்டு, அப்பாத்ரமும் அதனுள்ளிருக்கும் ஔஷதமும் தானுகவே ஆறிய பிறகு, பாத்திரத்தினுட்புறத்திலிருந்து ஔஷதத்தைச் சுரண்டியெடுத்துக் கொள்ளவும். 'ஜ்வராரி' எனப்படும் அதில் ஒரு மாஷப்பிரமாணம் வெற்றிலையினுள்

1. பாரத பஸ்மத்தின் உபயோகம்—கிருமிஹரம், குஷ்டஹரம், ஆயுஷ்யம், பல்யம், மற்றும் அநேக வியாதிகளை அந்தந்த பதார்த்தங்களின் சேர்க்கையினுல் போக்கக்கூடியது. வாதரோகங்களில் பாலுடனும், பித்தரோகங்களில் சர்க்கரையுடனும், கபரோகங்களில் திப்பிலி அல்லது சுக்குக் கஷாயத்துடனும், ஸாதாரண ஜ்வரங்களில் எலுமிச்சம் பழரஸத்தோடும், இரத்தப் பெருக்குகளில் தேனுடனும், அதிஸாரங்களில் சிறுகீரையின் சாறு அல்லது தயிரோடும், கண்டுபாரங்கியின் சூர்ணத்துடன் வயிற்றுளைத்தல் முதலான வற்றிலும் இரஸபஸ்மத்தை உபயோகிக்கலாம்.

2. வாலுகாயந்திரம்:—இரஸம் முதலிய தாதுவர்க்கங்களை ஔஷதமாகச் செய்வதற்கு அவற்றை ஒரு குப்பியில் சேர்த்து, ஒரு மட்பாத்திரத்தில் அடியில் சிறிது மணலைப் போட்டு, அதன்மேல் குப்பியை வைத்து, சுற்றிலும் கழுத்து வரையில் மணல் சேர்த்து, மட்பானையின் அடியில் தீயிட்டு எரிப்பதற்கேற்ற உபகரணம் வாலுகாயந்திரம் என்றும், ஸிகதாயந்திரம் என்றும் கூறப்படும்.

வைத்து புஜிக்க அங்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் முதலான விஷம ஜ்வரங்கள் தீரும். 44—48½.

சீதாரி ரஸம்:—தாளகம், மயில்துத்தம், செம்புப்பொடி, இரஸம், கந்தகம், மனச்சிலை இவற்றில் ஒவ்வொரு கர்ஷம் எடுத்து, த்ரிபலா க்வாதத்தினால் இவற்றை நன்றாய் அரைத்து, உருட்டி மூசைகளிற் சேர்த்து புடம் போடவும். பிறகு எருக்கம்பால், கள்ளிப்பால், நேபாளகஷாயம், கருஞ்சிவதைக் கஷாயம் இவற்றில் தனித்தனியே எவ்வேழு முறை பாவனை செய்யவும். ஐம்பது மிளகுகள், வெல்லம் ஒரு கர்ஷம், இரண்டு துளஸியிலைகள் இவற்றுடன் மேற்கூறிய பஸ்மத்தைக் கலந்து மூன்று தினங்கள் உட்கொள்ளவும். இதற்குப் பாலும் அன்னமும் கலந்து பத்தியமாயுபயோகிக்கலாம். முதலில் குளிர் வந்து அதன் பிறகுண்டாகும் ஜ்வரமும், முதலில் சூடு அதிகரித்து பிறகு சைத்யத்துடன் விருத்தியாகும் ஜ்வரமும், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்கிற ஜ்வரங்களும் நிவருத்தியாகும். இதற்கு 'சீதாரிரஸம்' எனப் பெயர். 49—54.

ஜ்வராங்குச குடிகா:—சுத்த ரஸம் ஒரு பாகம், சிற்றேலம், திப்பிலி, கடுக்காய், அக்காரகாரம், கடுகெண்ணெயினால் சுத்தம் செய்த கந்தகம், பேய்த்தும்மட்டிக்காய் இவை ஒவ்வொன்றும் நான்கு பாகம் கூட்டி சூர்ணம் செய்து, பேய்த்தும்மட்டியின் சாற்றால் ஒருமிக்க அரைத்து, உளுந்துபோன்ற மாத்திரைகளாய் உருட்டி, சீந்திற்கொடிச்சாற்றுடன் உபயோகித்து வர, ஸர்வ ஜ்வரங்களும் நீங்கும். இது 'ஜ்வராங்குச குடிகா' எனப்படும். 55—57.

(1) லோகநாதரஸம் முதல்:—சுத்தமானதும் ஜாரணம் செய்து முகமுண்டாக்கப்பட்டதுமான பாரதம் இரண்டு பங்கு, சுத்த கந்தகம் இரண்டு பங்கு, இரண்டையும் சேர்த்து கஜ்ஜலி செய்து, அக்கஜ்ஜலியை இரஸத்தினும் நான்கு மடங்கு அதிக அளவான பலகறைகளில் நிரப்பி, ஒரு பாகம் வெண்காரம், உடைத்துப் பொடியாக்கிய சங்கு எட்டு பங்கு இவ்வனைத்தையும் பசும்பாலில் ஆட்டி, உலர்த்தி, இச்சூர்ணமனைத்தையும் ஓர் அகலில் சேர்த்து, மற்றோர் அகலால் மூடி சீலை மண் செய்து, ஒரு முழம் ஆழமுள்ள பள்ளத்தில் கஜபுடம் போடவும். ஆறியபிறகு எடுத்து, அவற்றை அறைத்து, கிரமமாக இருபத்தொன்பது மிளகுகளுடன் ஆறு குஞ்ஜா ப்ரமாணங்கொண்ட இவ்வௌஷதத்தை நெய்யிற் கலந்து வாதரோகங்களிலும், வெண்ணெயிற் கலந்து பித்தரோகங்களிலும், கபத்தினுலுண்டாகும் வியாதிகளில் தேனுடும் கலந்து உட்கொண்டு வரலாம். அதிஸாரம், க்ஷயம், அரோசகம், கிரஹணி, தேகமெலிவு, அக்னிமாந்த்யம், காஸ ச்வாஸங்கள், குன்மம் இந்த ரோகங்களிலும் உபயோகிக்க நற்குணம் பிறக்கும். இவ்வௌஷதத்தை யுட்கொண்டதும் நெய்யும் அன்னமும் கலந்து மூன்று கவளம் புஜித்துவிட்டு, தலையணை யில்லாமல் மஞ்சத்தின் மீது சிறிது நேரம் மல்லாந்துப் படுத்திருக்கவும். பிறகு புளிப்பு ஸம்பந்தப்படாத ஆகாங்களைப் புஜிக்கலாம்; அதாவது நெய், புளிக்காத தயிர், மதுர பதார்த்தங்கள், நெய்யிற் பச்சுவம் செய்த ஜாங்கல மாம்ஸம் இவ்வித உணவுகள் உபயோகிக்கக் கூடியவையாம். பசியுண்டானால், மாலை நேரத்தில் பாலும் அன்னமுமாய் உட்கொள்ளலாம். பயற்றம் பருப்பாலாகிய வடகங்களை நெய்யிற் பொறித்து அன்னத்திற்கு வியஞ்ஜனமாய் உபயோகிக்கலாம். நெய் தேய்த்து அப்யங்கம் செய்யலாம். அப்பொழுது எள்ளுப்பிண்ணாக்கு, நெல்லிப்பருப்பு,

இவற்றைத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்; இளஞ்சூடான ஜலத்தையே ஸ்நானத்திற்கு உபயோகிப்பது நலம். எண்ணெயை உபயோகிக்கவே கூடாது மேலும் பில்வம், பாகல், கத்திரி, மத்வியம், புளி, மது பானம், மற்றும் ஸந்தாநம் செய்த பானவகைகள், காயம், சுக்கு, உளுந்து, சிறுகடலை, பூசுணி, கரு, காஞ்சிகமென்னும் காடி இவை முதலிய பதார்த்தங்களும், கிலம்பப்பயிற்சி முதலியதும், புணர்ச்சி, அகால நித்திரை, வெண்கலப் பாத்திரத்தில் போஜனம் இவை முதலியவைகளைப் பரிஹரிப்பதும் இதற்கான பத்திய முறையாம். இது 'லோகநாத ரஸம்' எனப்படும். பௌர்ணமி திதியில், அல்லது சுக்லபக்ஷத்தில், வாரமும் நக்ஷத்திரமும் சுபமாயிருக்கையில் லோகநாதனைப் பூஜித்து, கன்னிகைக்கு அன்னமளித்து, சக்திக்கியன்றவாறு தானமும் செய்த பிறகு, காலையில் லோகநாத மென்னும் இவ்வுத்தம ரஸௌஷதத்தை உட்கொள்ளவேண்டும். இதை யுபயோகிப்பதால் சரீரத்தில் தாபம் அதிகரிப்பதாகத் தோற்றுமாயின் அப்பொழுது சிந்திற்கொடியின் ஸத்துவத்தைச் சர்க்கரையோடு கலந்து உட்கொள்ளலாம். மூங்கிலுப்பையும் பொடித்து அத்துடன் உபயோகிப்பது நலம். கர்ஜூரப் பழம், மாதுளம்பழம், திராக்ஷை, கரும்பு இவற்றையும் உண்ணலாம். லோகநாத ரஸத்தை அந்தந்த ரோகங்களில் அடியிற் கூறப்படும் அநுபானங்களுடன் உபயோகிக்கலாம்:—நாக்கு அரோசகமுள்ளதா யிருந்தால் கொத்தமல்லி விதையை நெய்யில் வறுத்து, சர்க்கரையுடன் அநுபானமாகக் கொடுக்கலாம். ஜ்வரத்தில் கொத்தமல்லி விதை, சிந்திற்கொடி இவற்றை க்வாதம் செய்தாவது, வெட்டிவேர், ஆடாதோடை இவற்றைக் கஷாயமிட்டாவது அநுபானமாகக் கொடுக்கலாம். இக் கஷாயங்களுடன் சர்க்கரையும் சேர்க்க வேண்டும். அக்கஷாயங்களையே இரக்தபித்தம், கபரோகம், ச்வாஸம், காஸம், தொண்டைக்கம்மல் இவற்றிலும் அநுபானமாய் உபயோகிக்கலாம். நித்திரையின்மை, அதிஸாரம், கிரஹணி, அக்னிமாந்த்யம் இவற்றில் கஞ்ஜாவை வறுத்து சூர்ணம் செய்து தேனில் கலந்து இரவில் லோகநாதத்துடன் உட்கொள்ளச் செய்யலாம். வயிற்று வலி, அஜீர்ணம் இவற்றில் அட்டுப்பு, கடுக்காய், திப்பிலி, இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்துடன் உபயோகிக்கலாம். ஜ்வரத்தில் திப்பிலிப் பொடியையும் தேனையும் கலந்து உட்கொள்வது நலம். ப்லீஹோதரம், வாதரக்தம், சர்த்தியென்னும் வாந்தி, அர்சஸ், நாசியில் இரத்தம் கசிதல் என்னும் இவ்வியாதிகளில் மாதுளம்பூ ரஸத்தை உட்கொள்ளக் கொடுக்கலாம். நாசியிலுண்டாகும் வியாதிகளில் லோகநாதத்துடன் சர்க்கரையையும் அருகம்புல் ரஸத்தையும் கலந்து நஸ்யமிடலாம். இலந்தங்கொட்டை, திப்பிலி, மயிலிறகு பஸ்மம் இவற்றைப் பொடித்துக் கூட்டி சர்க்கரையும் சேர்த்துத் தேனுடன் கலந்துட் கொள்ள வாந்தி, விக்கல் இவை நிவருத்தியாகும். மேற்கூறிய முறைகள் யாவும் லோகநாதத்திற்கு அநுபானமாவது போல மிருகாங்கம், ஹேமகர்ப்பம், மௌக்திகம் முதலிய போடலீ ரஸங்கள் அனைத்திற்குமே ஏற்றவையாம். அகில வியாதிகளையும் 'லோகநாதம்' என்னும் இம் முறை விலக்கும். (2) லோகநாதம் இரண்டாவது:—பலகறை பஸ்மத்தையும் மண்டூரத்தையும் நெய்யில் பாகம் செய்தெடுத்து, அவற்றிற்குச் சமயெடை மிளகுப் பொடி சேர்த்து, வெற்றிலைச் சாற்றில் பாவனை செய்து, அச்சூர்ணத்தில் ஒரு மாஷப்பிரமாணம் தேனுடனாவது வெண்ணெயுடனாவது

ஒவ்வொரு யாமந்தோறும் உட்கொண்டு வந்தால், ஒரு மண்டலத்தில் க்ஷய ரோகம் தீரும். இதுவும் 'லோகநாதம்' என்றே கூறப்படும். 58--84½.

மிருகாங்க போடலீ ரஸம்:—பூர்ஜமரப் பட்டையைப்போல் மெல்லிய தகடுகளாய் அடித்த ஸ்வர்ணத்தையும் ஸமயெடை பாரதத்தையும் கல்வத்தி லிட்டு, மலையகத்தியின் ஸ்வரஸத்திலாவது, சித்திரமூல ஸ்வரஸத்திலாவது, சிவனார் கிழங்கின் சாற்றிலாவது பிஷ்டம் போலாகும் வரையில் அரைத்து, ஸ்வர்ணத்திற்கு நாலில் ஒரு பங்கு வெண்காரமும், இரண்டு பங்கு நன்றாக அரைத்த நல்முத்துச் சூர்ணமும் கூட்டி, எல்லாச் சரக்கு களுக்கும் ஸமயெடை கந்தகமும் கலந்து, அனைத்தையும் ஒருமிக்க அரைத்து, ஒரு உருண்டையாகச் செய்து வஸ்திரத்தில் வைத்துச் சுற்றி, அதன்மேல் மண் பூசி உலர்த்தி, ஓர் அகலில் வைத்து மற்றொரு அகலால் மூடி சீலை மண் செய்யவும். பிறகு அந்த ஸம்புடத்தை ஒரு விசாலமான மட்பாத்தி ரத்தில் வைத்து, சுற்றிலும் உப்பைக் கொட்டி, அப்பாத்திரத்தின் முகத்தை மூடி, சீலை மண்ணால் முத்திரையிட்டு, உலர்த்தி அநேகம் வறட்டிகளிட்டுப் புடம்போடவும். பின்னர் அப்பாத்திரம் முதலியது தானாகவே ஆறியதும் ஸம்புடத்திலுள்ள இரஸம் முதலியவற்றை யெடுத்து, அதில் சேர்த்த பாதரஸத்திற்குச் சமயெடை கந்தகம் சேர்த்து, முன்போலவே கல்வத்தி லிட்டு அரைத்து, அவ்விதமே கஜபுடத்தில் எரிக்கவேண்டும். ஆறிய பிறகு ஔஷதத்தைப் புடத்திலிருந்து எடுத்து, இரண்டு குஞ்ஜாப்பிரமா ணத்தில் எட்டு மிளகுகளோடாவது மூன்று திப்பிலிகளுடனாவது வாத பித்த கபாதிகளின் நிலைமைகளையும், மற்றும் பிணியாளியின் தன்மைகளை யும் அறிந்து ஏற்றவாறு உபயோகிக்கச் செய்யவும். மனதிற் கவலையின்றி அமைதியாகவும் பரிசுத்தமாகவும் இருந்துகொண்டு லோகநாதரஸத்திற்குக் கூறிய பத்தியமுறைகளை யநுஸரித்தே இவ்வௌஷதத்தையும் உபயோகிக்க வேண்டும். கபத்தினாலுண்டாகும் கோளாறுகள், சிரஹணி, காஸம், ச்வாஸம், க்ஷயம், அரோசகம், சரீரமெலிவு, பலமின்மை இவ்வனைத்தையும் தீர்க்கும். இதற்கு 'மிருகாங்க போடலீ' என்று பெயர். 85—95.

(1) **ஹேமகர்ப்ப போடலி ரஸம்**:—பாரதம் ஒரு பங்கு, ஸ்வர்ணத் தகடு கால் பங்கு இரண்டையும் சேர்த்து பிஷ்டம் போல் அரைக்கவும். பிறகு அவற்றிக்கு இரண்டு பங்கு கந்தகம் சேர்த்து மலையகத்தி ஸ்வரஸத் தினால் ஆட்டி, கோளம்போல் செய்து, மூசைகளுக்குள் வைத்துச் சுற்றிலும் சுண்ணங்களை யடைத்து, மூன்று நாட்கள் பூதராயந்திரத்தில் [1] எரிக்கவேண் டும். பிறகு மூசையிலிருந்து அவையனைத்தையும் எடுத்து, அவற்றிற்குச் சம யெடை கந்தகம் மறுபடியும் சேர்த்து, இஞ்சி ஸ்வரஸத்தினாலும், சித்திர மூல ஸ்வரஸத்தினாலும் அரைத்து, சிறிது மஞ்சள் நிறமான பருத்த பல கறைகளுக்குள் அவற்றை அடைத்து, அச்சோழிகளில் நிரம்பியுள்ள சரக்கு களுக்கு எட்டில் ஒரு பங்கு வெண்காரமும், அதில் பாதி நாபியும் சேர்த்து, கள்ளிப்பால் விட்டு அரைத்து, அக்கல்கத்தினால் சோழிகளிலுள்ள த்வாரங் களை மூடி, ஒரு மட்பாத்திரத்தினுள் சுண்ணம் பூசி, அச்சோழிகளை அத னுள் வைத்து, அப்பாத்திரத்தின் வாயை மூடியிட்டுச் சீலைமண் செய்து,

1. இரஸம் முதலிய சரக்குகளடங்கிய பாத்திரம் அல்லது மூசையை ஒரு சிறிய பள்ளத்தில் வைத்து, அதை முற்றிலும் மணலால் மூடி, சுற்றி லும் தீயிட்டு எரிக்கப்படும் முறைக்கு பூதராயந்திரம் எனப் பெயர்.

இதை ஓர் ஆழமான பள்ளத்தில் வைத்து கஜபுடம் போட்டு, ஆறியபிறகு ஔஷதத்தை யெடுத்துப் பிணியாளியின் தன்மை முதலியவற்றை யறிந்து, லோகநாத ரஸத்தைப்போல் கொடுக்கவேண்டும். மிருகாங்க ரஸத்திற்குக் கூறிய பத்தியங்களே இவ்வௌஷதத்திற்கும் ஏற்றவையாகும்; மேலும் மூன்று நாட்கள் மட்டும் உப்பு உபயோகிக்கக்கூடாது; இவ்வௌஷத முபயோகிக்கையில் வாந்தியுண்டானால் சீந்திற்கொடியின் கஷாயத்தைத் தேனுடன் உட்கொள்ளலாம்; கபம் அதிகரித்திருந்தால் இஞ்சியும் வெல்லமும் கலந்தண்ணலாம். மலப்போக்கு அதிகமானால் கஞ்ஜாவைப் பொரித்து தயிரிற் கலந்து உட்கொள்ளலாம். இவ்வௌஷதம் காஸம், ச்வாஸம், சிரஹணி, அரோசகம், கபவாதங்களின்கோளாறு இவற்றைப் போக்கும்; அக்னிதீபனமும் உண்டாக்கும். இது 'ஹேமகர்ப்ப போடலீ ரஸம்' எனப்படும். (2) **ஹேமகர்ப்பபோடலீ ரஸம்**:—இரஸம் நாலு பங்கு, தகடுகளாகச் செய்த ஸ்வர்ணம் நாலு பங்கு இரண்டையும் அரைத்து பிஷ்டம்போல் செய்து, பன்னிரண்டு பங்கு கந்தகம் சேர்த்து கஜ்ஜலி செய்து, பதினாறு பங்கு நல்முத்தும், இருபத்தி நான்கு பங்கு சங்கமும், ஒரு பங்கு வெண்காரமும் கூட்டி அனைத்தையும் நன்றாகப் பழுத்த கொடி எலும்பிச்சம் பழ ஸ்வரஸத்தினால் அரைக்கவும். பிறகு அவற்றை ஒரு கோளம்போல் செய்து, மூசைகளுக்குள் வைத்துச் சுற்றிலும் கவசமிட்டுவரட்டிகளிட்டு கஜபுடமிடவும். ஆறிய பிறகு ஔஷதத்தை யெடுத்து பொடிசெய்து, நாலு குஞ்ஜாப் பிரமாணத்தில் பத்தொன்பது மிளகுகளைப் பொடி செய்து அத்து டன் பசுவின் நெய்யையும் கலந்து உட்கொள்ளலாம். இதைக் கலந்து உபயோகிப்பதற்கு வெள்ளிப்பாத்திரமாவது, மட்பாத்திரமாவது, காச பாத்திரமாவது ஏற்றதாகும். அமைதியாக லோகநாதத்திற்குக் கூறியுள்ள பத்தியமுறைகளை யனுஸரித்து இதையும் உபயோகிக்கவேண்டும். இதனால் காஸம், ச்வாஸம், க்ஷயம், வாத ரோகங்கள், கபரோகங்கள், சிரஹணி, அதி ஸாரம் இவை தீரும். இதுவும் 'ஹேமகர்ப்ப போடலீ ரஸம்' என்றே கூறப்படும். 96—112.

ஜ்வராங்குசரஸம் இரண்டாவது:—இரஸம், நாபி, கந்தகம் ஒவ்வொன் றையும் சுத்தம்செய்து, ஒவ்வொன்றிலும் சாணப்பிரமாணம் எடுத்துக்கொள் ளவும்; ஊமத்தைவிதை மூன்று சாணம், பிரம்மதண்டு விதை அனைத்திற்கும் இரண்டு பங்கு; இவற்றை அரைத்து சூர்ணம் செய்யவும்; இரண்டு குஞ்ஜா அளவில் இச்சூர்ணத்தை எலுமிச்சம்பழத்தின் உட்புறத்துச் சோற்றில் கலந்து உபயோகிக்கலாம்; இஞ்சி ஸ்வரஸத்துடனாவது உட்கொள்ளலாம். ஸந்திபாத ஜ்வரம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்னும் விஷமஜ்வரங்கள் ஆகியவை இதனால் தீரும். இதற்கு 'ஜ்வராங்குச ரஸம்' எனப் பெயர். 113—115½.

ஆனந்த பைரவ ரஸம்:—லிங்கம், நாபி, மிளகு, வெண்காரம், திப் பிலி இவற்றைச் சமயெடை சூர்ணம் செய்யவும். இது 'ஆனந்த பைரவ ரஸம்' எனப்படும். இதில் ஒன்று அல்லது இரண்டு குஞ்ஜா அளவு தேனோடு கலந்து அவரவருடைய சரீர பலத்தையறிந்து உபயோகிக்கலாம். வெட்பா லரிசி, இலவங்கப்பட்டை இவ்விரண்டையும் சூர்ணம்செய்து, இத்துடன் மேற்கூறிய ரஸத்தைக் கலந்து கர்ஷப்பிரமாணம் உபயோகிக்க ஸந்நிபாத அதிஸாரம் நிவ்ருத்தியாகும். இதற்கு பத்தியம் தயிரும் அன்னமும் கலந்து

புழிக்கலாம்; பசுவின் நெய், மோர் இவற்றையும் உபயோகிக்கலாம். அதிக நாவறட்சியுண்டானால் குளிர்ந்த ஜலம் பருகலாம். நன்றாக நித்திரை யுண்டாகாலிட்டால் சிறிது கஞ்ஜாவை உபயோகிக்கலாம். 116—119.

ஸுசிகாபாண ரஸம்:—நாபி ஒரு பலம், இரஸம் சாணப்பிரமாணம் இரண்டையும் ஒன்றாகச் சூர்ணம் செய்து, ஒரு அகலில் வைத்து மற்றோர் அகலால் மூடி, சீலை மண் செய்து உலர்த்தி, அடுப்பில் ஏற்றி இரண்டு யாமம் சிறுகச் சிறுகத் தீயிட்டெரித்து, பிறகு புடத்தை திறந்து, மேல் அகலின் உட்புறத்திற் படிந்திருக்கும் பஸ்மத்தைச் சுறண்டியெடுத்து, காற்றுப் படாமலிருக்க உடனே ஒரு குப்பியில் வைக்கவேண்டும். குப்பியிலிருந்து ஊசியினால் எடுத்து, அவ்வூசி முனையில் எவ்வளவு நிற்குமோ அவ்வளவு ஔஷதம் மூர்ச்சையிலும், ஸந்நிபாதத்தினாலான அபாய நிலைமையிலும் உட் கொள்ளக் கொடுக்கலாம். கூறிய கத்தியினால் தலையில் சிறிதளவு கீண்டு இவ்வௌஷதத்தை அவவிடத்தில் தேய்க்க, இரத்தத்தில் ஔஷதம் நேராக ஸம்பந்திக்க மூர்ச்சையுற்ற அபாய நிலைமையிலிருப்பவனும் ஜீவித்துவிடு வான். இங்ஙனமே மரிக்கும் நிலைமையிலிருக்கும் ஸர்ப்பந் தீண்டிய மனிதனுக்கும் செய்யப் பிழைத்துவிடக்கூடும். தாபம் அதிகரிக்குமானால் அவனுக்கு உடனே மதுரமான வஸ்துக்களைக் கொடுத்துத் தாபத்தைத் தணித்து விடலாம். 120—125½.

ஜலசூட ரஸம்:—பாரதபஸ்மமும் கந்தகமும் ஸமயெடை, அதற்கு நாலில் ஒரு பங்கு மனச்சிலையும், அதே அளவு பொன்னிமிலை, திப்பிலி, த்ரிகடு இவற்றையும் கூட்டி நன்றாகப் பொடித்து, மத்வியம் மயில் இவற் றின் பித்தங்களில் தனித் தனியே ஏழு முறை பாவனை கெய்து, உலர்த்தி இரண்டு குஞ்ஜாப்பிரமாணம் உட்கொள்ளலாம். இதற்கு சதகுப்பியின் ஸ்வரஸத்தையாவது, பஞ்சகோலக்வாதத்தையாவது அநுபானமாய் உப யோகிக்கலாம். ஜலசூடரஸம் என்கிற இது ஸந்நிபாததோஷத்தைப் போக் கும். இதை உட்கொள்கையில் ஜலத்தில் கைகால்களை வைத்திருப்பது நலம். அதனால் ஔஷதத்தின் வீர்யமும் அதிகமாகும். 126—129.

பஞ்சவக்த்ர ரஸம்:—இரஸம், நாபி, கந்தகம், மிளகு, வெண்காரம் இவற்றை ஊமத்தையிலைச் சாற்றால் ஒருநாள் முடிய அரைத்து உலர்த்தவும். 'பஞ்சவக்த்ர ரஸம்' எனப்படும் இதை இரண்டு குஞ்ஜா அளவில் உட்கொள்ள ஸந்நிபாதம் நிவருத்தியாகும். இதற்கு எருக்கன் வேரின் கஷாயத்தில், த்ரிகடு சூர்ணத்தையும் சோத்து அநுபானமாய் உபயோகிக்கலாம். தயிரும் அன்னமும் பத்தியமாகும். பிணியாளியை ஜலத்தில் சிறிது நேரம் இருக்கச் செய்வது நலம். இதை தேனுடன் கலந்து உட்கொள்ள கபக்கோளாறு விலகும். ஜாடராக்னி விருத்தியாவதற்கு இதை தேன், இஞ்சிஸ்வரஸம் இவற்றுடன் உட்கொள்க; இதை யுபயோகிக்கையில் நெய்யும் மாம்ஸமும் சாப்பிடுவதால் ஜாடராக்னி மேன்மேலும் விருத்தியாகும். 130—133.

உன்மத்த ரஸம்:—ஸமயெடை இரஸமும், கந்தகமும் ஊமத்தங்காயின் சாற்றால் ஒரு தினம் அரைத்து, த்ரிகடு சூர்ணம் ஸமமாகக் கலந்து நஸ்யமிட ஸந்நிபாத தோஷம் தீரும். இது 'உன்மத்த ரஸம்' எனப்படும். 134½.

நேபாள ரஸம்:—நேபாள விதையைத் தோல் நீக்கி, பத்து நிஷ்கப் பிரமாணம் எடுத்து, மிளகு, திப்பிலி, பாதரஸம் இவற்றை ஒவ்வொரு நிஷ்கம்

சேர்த்து எலிமிச்சம்பழச் சாற்றில் ஒரு வாரம் பாவனை செய்யவும். இதை அஞ்ஜனமிட ஸந்நிபாதம் தீரும். 135—136½.

நாராச ரஸம்:—இரஸம், வெண்காரம், மிளகு இவை ஒவ்வொரு பங்கு; கந்தகம், திப்பிலி, சுக்கு இவை தனித்தனியே இரண்டு பங்கு; தோல் நீக்கிய நேபாள விதை அனைத்திற்கும் ஸமமெடை; இச்சரக்குகளைச் சேர்த்து சூர்ணம் செய்து இரண்டு குஞ்ஜா அளவில் உட்கொள்ள, நன்றாக விரேசனமாகும்; இதனால் வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல், உதாவர்த்தம் இவை நிவருத்தியாகும். இது 'நாராச ரஸம்' எனப்படும். 137—139.

ரோக ரஸம்:—லிங்கம், வெண்காரம், சுக்கு, திப்பிலி இவை கால் கால் பலம்; பிரம்மத்தண்டு விதையும் நேபாள விதையும் ஒவ்வொரு பலம்; அனைத்தையும் ஒன்றாக அரைத்து, பசும்பாலுடன் மூன்று குஞ்ஜாப்பிரமா ணத்தில் இதை மலபந்தம் வயிற்றுப்பொருமல்களில் மலம் கழிவதற்காக உட் கொள்ளலாம். 140—114.

வஸந்த குஸுமாகர ரஸம்:—ஸ்வர்ண பஸ்மம் இரண்டு பங்கு, அப்ரக பஸ்மம் இரண்டு பங்கு, அய பஸ்மம் மூன்று பங்கு, பவள பஸ்மம் இரண்டு பங்கு, முத்து பஸ்மம் இரண்டு பங்கு; இவையனைத்தையும் ஒன்றாக அரைத்து, ஆடாதோடையின் ஸ்வரஸம், மஞ்சளின் ஸ்வரஸம், வாழைக்கிழங்கின் சாறு, தாமரையின சாறு, ஜாதி மல்லிகையின் சாறு இவற்றால் தனித்தனியே அரைத்து, பசும்பாலில் அவ்வனைத்தையும் பாவனை செய்யவும். பிறகு துளஸி ஸ்வரஸத்தில் பச்சைக்கர்ப்பூரம் கலந்து, அதில் கஸ்தூரியை பாவனை செய்து, அக்கஸ்தூரியையும் மேற்கூறிய சரக்குகளுடன் நன்றாகக் கலந்து விடவும். 'வஸந்த குஸுமாகரம்' என்கிற இதை எவ்வித மேஹரோகங்களிலும் இரண்டு குஞ்ஜாப் பிரமணத்தில் தேனில் கலந்து உட்கொள்ளலாம். அம்லபித்தம் முதலியதைப் போக்குவதற்கும் அதே அள வாகச் சர்க்கரை சந்தனம் இவற்றுடன் கலந்து உபயோகிக்கலாம். 142-146½.

ஔஜ மிருகாங்க ரஸம்:—இரஸபஸ்மம் மூன்று பாகம், ஸ்வர்ண பஸ்மம் ஒரு பாகம், அப்ரக பஸ்மம் ஒரு பாகம், மனச்சிலை, கந்தகம், தாள கம் இம்மூன்றும் தனித்தனி இரண்டிரண்டு பாகம்; இவ்வனைத்தையும் கூட்டி சூர்ணம் செய்து, இதைப் பலகறைகளின் த்வாரங்களில் அடைத்து விடவும். பிறகு வெண்காரத்தை ஆட்டுப்பால் விட்டு அரைத்து இதனால் அப்பலகறைகளின் த்வாரங்களை மூடி, ஒரு மட்பாத்திரத்தில் அவற்றை வைத்து, அப்பாத்திரத்தின் முகத்தையும் மூடி சீலை மண் செய்து உலர்த்தி கஜபுடமிடவும்; ஆறிய பிறகு பாத்திரத்தை வெளியிலெடுத்து, அதிலுள்ள ஔஷதத்தைக் கிரஹித்து சூர்ணம் செய்து கொள்ளவும். 'ஔஜ மிருகாங் கம்' எனப்படும் இதில் நான்கு குஞ்ஜாப்பிரமாணம் உட்கொள்ள கூஷ ரோகம் தீரும். பத்துத் திப்பிலி, இருபத்தொன்பது மிளகு இவற்றைப் பொடித்துத் தேனிற் கலந்து இதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். ஆஹாரங்களில் அவசியமானவளவு நெய் சேர்த்து உட்கொள்ளலாம். ஸ்திரீ ஸம்பந்தம், அதிக கோபம், அக்னிக்குச் சமீபத்திலிருத்தல், சரீரத்திற்கு ச்ரமமுண்டாகும் காரியங்கள் இவற்றைப் பரிஹரிக்கவும். 147—151½.

ஸித்தயோக ரஸம்:—ஒரு பங்கு பாரதமும், இரண்டு பங்கு கந்தக மும் கல்வத்திலிட்டு கஜ்ஜலி செய்து, அவற்றிற்குச் சமமெடை ஸைன்ஹ பொடியைச் சேர்த்து, சோற்றுக் கற்றுழைச் சாற்றால் அனைத்தையும் இரண்டு

யாமம் ஆட்டி, கோளமாகச் செய்து, தாம்பிர பாத்திரத்தில் வைத்து. அதனுள் ஆமணக்கிலைகளைப் போட்டு மூடி, அரை யாமம் கழித்துப் பார்க்க, அப்பாத்திரத்தில் அதிக உஷ்ணமுண்டாயிருக்கும் பிறகு தானியக் களஞ்சியத்தில் அதைப் புதைத்து வைத்து, ஒரு நாள் கழிந்ததும் எடுத்து சூர்ணம் செய்து, வஸ்திர காளிதம் பண்ணியெடுக்க, அவ்வெயஷ்டம் கன்கு ஜலத்தில் மிதக்குமாறு பக்குவமா யிருக்கும். பிறகு சோற்றுக் கற்றாழை, கரிசிலாங்கண்ணி, மணத்தக்காளி, மருதேன்றி, ச்ராவணீ யென்னும் ஓஷதி, வெள்ளைச் சாறடை, சீந்திற் கொடி, நொச்சி, சித்திரமூலம் இவற்றின் சாறுகளில் தனித்தனி ஏழு முறை பாவனை செய்து, வெயிலில் உலர்த்தி யெடுக்கவும். வித்தர்களுடைய அநுபவத்தில் பயனுண்டானதாகக் கூறப்பட்டு, வித்தயோகம் எனப்படும் இது அநேகம் வியாதிகளைப் போக்கக் கூடியது. எஃகு அல்லது அயத்தைப் பொடித்து மேற் கூறிய விதம் செய்தால் பஸ்மமாகும். அது போலவே ஸ்வர்ணம் முதலியவற்றையும் செய்ய பஸ்மமாகும். எந்த ரோகங்களிலும் த்ரி பலா க்வாதம், தேன் இவற்றுடன் கலந்துட்கொள்ளலாம். 155—158.

அக்னி ரஸம்:—த்ரிகடு, த்ரிபலை, எலக்காய், ஜாதிக்காய், இலவங்கம் இவை ஒவ்வொன்றும் ஒன்பது பங்கு, சுத்த ரஸம் இவற்றிற்குச் சமயெடை சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு, இரண்டு நிஷ்கம் தேனில் கலந்து உட்கொள்ளலாம். 'அக்னி ரஸம்' எனப்படும் இது க்ஷயங்களைப் போக்கும். 159—160½.

அம்ருதார்ணவ ரஸம்:—பாரதம், கந்தகம், லோஹபஸ்மம், வெண்காரம், சிற்றரத்தை, வாய்விடங்கம், த்ரிபலை, தேவதாரு, த்ரிகடு, சீந்திற் கொடி, தாமரைக் கிழங்கு, தேன், சுக்கு இவ்வனைத்தையும் ஸமயெடை சேர்த்து அரைத்து, மூன்று குஞ்ஜா அளவில் உட்கொள்ள எவ்வித காஸமும் தீரும். இது 'அம்ருதார்ணவம்' எனப்படும். 161—162½.

ஸுர்யாவர்த்த ரஸம்:—பாதரஸம் ஒரு பங்கு, கந்தகம் அரைப் பங்கு இரண்டையும் சோற்றுக் கற்றாழை சாற்றால் ஒரு யாமம் அரைத்து, அவற்றிற்குச் சமயெடையான செப்புத் தகடுகளில் அக்கல்கத்தைத் தடவி, ஒருநாள் ஸ்தாலீ யந்திரத்தில்[1] எரித்து, சூர்ணம் செய்து, இரண்டு குஞ்ஜா அளவு உட்கொள்ளலாம்; இது ச்வாஸ ரோகத்தைப் போக்கும், இதற்கு 'ஸுர்ய வர்த்த ரஸம்' என்று பெயர். 163—164½.

ஸ்வச்சந்த பைரவ ரஸம்:—சுத்தி செய்த பாரதம், அய பஸ்மம், பொன்னிமிலை, கந்தகம், தாளகம், கடுக்காய், அகில், கருநொச்சி, த்ரிகடு, வெண்காரம், நாபி இவற்றைச் சமயெடை எடுத்து, கருநொச்சிச் சாற்றால் ஒரு தினமும், கொட்டைக் கரந்தைச் சாற்றால் ஒரு தினமும் அரைத்து, இரண்டு குஞ்ஜா அளவில் குளிகைகள் உருட்டி உலர்த்தி வைத்து, வாத ரோகங்களால் வருந்துபவர் உபயோகிக்கலாம். 'இது ஸ்வச்சந்த பைரவம்' எனப்படும். சிற்றரத்தை, சீந்தில், தேவதாரு, சுக்கு, ஆமணக்குவேர் இவற்றின் கஷாயத்தை அகில் சிறிது மஹிஷாக்ஷி பொடித்துச் சேர்த்து இளஞ்சூடாக அநுபானமாய் உட்கொள்ளலாம். 165—168.

1 ஒரு சிறு கலசத்தில் ஔஷதச் சரக்குகளைச் சேர்த்து, அதன் வாயை ஒரு அகலால் மூடி, அடுப்பிலேற்றி எரிக்கவேண்டும்; இவ்வகையான உபகரணத்திற்கு ஸ்தாலீயந்த்ரம் எனப்பெயர்,

ஹம்ஸ போடலீ ரஸம்:-நன்றாக எரித்தெடுத்த பலகறையின் சூர்ணம், த்ரிகடு, வெண்காரம், நாபி, கந்தகம், இரஸம் இவற்றைச் சமயெடை எடுத்து, எலுமிச்சம் பழச்சாற்றால் ஆட்டி, ஒரு மாஷஅளவு மிளகுப் பொடி யோடும் நெய்யொடும் கலந்து உட்கொள்ள கிரஹணீ ரோகம் போகும். இதற்கு மோரும் அன்னமும் கலந்துபயோகிப்பது பத்தியமாம். 169—170.

த்ரிவிக்ரம ரஸம்:-தாம்ர பஸ்மத்தை அதற்குச் சமபாகம் வெள்ளாட்டுப் பாலில் கலந்து தீயிலேற்றி ஜலபாகம் சுண்டும் வரையில் பக்குவம் செய்து, இரஸம், கந்தகம் இவற்றை அதற்குச் சமயெடை சேர்த்து, கருநொச்சிச் சாற்றால் ஒரு நாள் அரைத்து, கோளம் செய்து, ஒரு யாமம் வாலுகா யந்திரத்தில் பக்குவம் செய்து, இரண்டு குஞ்ஜா பிரமாணம் உபயோகிக்கலாம்; கொடிமாதுளையின் வேரைக் கஷாயமிட்டு அநுபானமாய் உட்கொள்ளலாம். 'த்ரிவிக்ரம ரஸம்' என்கிற இதை ஒருமாதம் உபயோகிக்க அச்மரீ யென்னும் மூத்திர வியாதி நிவ்ருத்தியாகும். 171—173.

மஹாதாளேச்வர ரஸம்:—தாளகம், பொன்னிமிலை, மன்சிலை, பாதரஸம், இந்துப்பு, வெண்காரம் இவை ஒவ்வொரு பாகம்; கந்தகம், தாம்ர பஸ்மம் இவ்விரண்டும் தனித்தனியே இரண்டு பாகம்; இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றால் ஐந்து நாட்கள் அரைத்து மூசைகளில் அடைத்து, பூதயந்திரத்தில்[1] புடமிடவும்; இவ்விதமே ஒவ்வொரு முறையும் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து ஆறு புடம் போடவேண்டும். புடமிட்ட இச்சரக்கு ஆறு பலம், தாம்ர பஸ்மம் இரண்டு பலம், அய பஸ்மம் நான்கு பலம்; இவ்வனைத்தையும் எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு நாள் அரைத்து ஒரு புடம் போடவும். பிறகு அத்துடன் மூப்பதில் ஒரு பாகம் நாபி சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து எடுக்கவும்; இதை இரண்டு மாஷம் எடை ஏறுமை நெய்யுடன் கலந்து உட்கொள்ளவேண்டும். உலர்ந்த ஆட்லாங் கொடியைச் சூர்ணம் செய்து, கர்ஷப்பிரமாணம் சூர்ணத்தைத் தேன் அல்லது நெய்யோடு கலந்து மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உபயோகிப்பது நலம். 'மஹாதாளேச்வர ரஸம்' என்னும் இவ்வௌஷதம் பலவகையான குஷ்டங்களையும் போக்கும். 174—178½.

குஷ்டகுடார ரஸம்:—இரஸ பஸ்மம், கந்தகம், அய பஸ்மம், தாம்ர பஸ்மம், மஹிஷாக்ஷி சுக்குலு, த்ரிபலை, வேம்பு, சித்திரமூலம், சிலாஜது இவற்றைத் தனித்தனியே சூர்ணம் செய்து, ஒவ்வொன்றிலும் பதினாறு சாணமெடை யெடுத்துக் கொள்ளவும். புங்கங்கொட்டையின் சூர்ணம் அறுபத்து நான்கு சாணமும், அப்ரக பஸ்மம் அறுபத்து நான்கு சாணமும் கலந்து, தேன் நெய் இவற்றைப் போதுமான அளவு சேர்த்துக் குழைத்து, நெய் வைத்துப் பழகிய மட்பாத்திரத்தில் இம்மருந்தைச் சேர்த்து வைக்கவும். 'குஷ்ட குடார ரஸம்' என்கிற இது அவயவங்களைச் சிதைக்கச் செய்யும் கொடிய குஷ்டரோகங்களையும் போக்கவல்லது. 179—182.

உதயாதித்ய ரஸம்:—சுத்த ரஸம் ஒரு பங்கு, கந்தகம் இரண்டு பங்கு; இவற்றைச் சோற்றுக் கற்றாழைச் சாற்றால் ஒரு நாள் அரைத்து, கோள

1. இரஸௌஷதக்சரகுகள் அடங்கிய ஒரு குப்பியை மற்றொரு மட்பானையினுள் அடக்கி, அப்பானையில் ஔஷதக்குப்பி மறையுமாறு மணலை நிரப்பி, ஒரு குழியில் அதை அமர்த்தி வைத்து, அதன் மேலும் சுற்றுப்புறங்களிலும் தீயிடவேண்டும்; இது பூதாயந்த்ரம் எனப்படும்.

மாக உருட்டி, மட்பாத்திரத்தில் வைத்து, இரஸத்திற்குச் சம எடையுள்ள ஒரு தாம்ரபாத்திரத்தை ஔஷத முறைக்கு ஏற்றவாறு சுத்தம் செய்து, இப்பாத்திரத்தைக் கவிழ்த்து மட்பாத்திரத்தின்மேல் மூடவேண்டும்; அத் தாம்ரபாத்திரத்தைச் சுற்றிலும் சாம்பரைக் கனமாகத் தூவி, மட்பாத்திரத் திற்கு அடியில் கடுந்தீயிட்டெரித்துக்கொண்டே, தாம்ரபாத்திரத்தின் மேல் பசுஞ் சாணங்கலந்த குளிர்ந்த நீரைச் சிறுக விட்டு வரவேண்டும்; இவ்வி தம் இரண்டு யாமகாலம் எரித்து தீயை நிறுத்திவிடவும். பிறகு பேயகத்தி, சித்திரமூலம், த்ரிபலை, கொன்றை இவற்றின் பட்டை, வாய்விடங்கம், வாலுளுவை இவற்றை இடித்து ஜலம் சேர்த்து க்வாதம் காய்ச்சி, இக்கஷா யத்தில் மேற்கூறிய ஔஷதத்தை ஒரு நாள் முடிய பாவனை செய்யவும். 'உதயாதித்ய ரஸம்' என்கிற இது இரண்டு குஞ்ஜா அளவில் உட்கொள்ள விசர்ச்சிகா யென்னும் சர்மரோகத்தையும், தத்ரு குஷ்டம் என்னும் படை யையும், வாதரக்தத்தையும் நிவர்த்தி செய்யும். கருங்காலிப் பட்டையின் கஷாயத்தில் வாலுளுவைப் பொடியைச் சேர்த்துக் காய்ச்சி வடிக்கட்டி, அதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். வெண்குஷ்டரோகி மூன்று சாணமெடை உதயாதித்ய ரஸத்தைப் பசும்பாலுடனுவது, த்ரிபலா க்வாதத்துடனுவது உட்கொண்டுவர, மூன்று நாட்கள் அல்லது ஏழு நாட்கள் கழித்து அவனுக்கு உடலில் எங்கும் கொப்புளங்கள் உண்டாகும். (1) அப் பால் அவரிவேர், குன்றிவேர், ஊமத்தைவேர், செருப்படை, வல்லாரை, புளியரனை இந்த மூலிகைகளையும் அன்னபேதியையும் ஒன்றுக அரைத்து, ஏழு நாள் அக்கொப்புளங்களின் மேல் தடவிவர அவை சாந்தமாகும். எவ் வித வெண்குஷ்டமும் இதனுல் நிவர்த்தியாகும். சுவித்ரத்தின்மேல் உப யோகிப்பதற்கு வேறுவிதமான லேபங்களும் வைத்தியர்களுடைய அநுப வத்தில் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது:—(2) குன்றிமணி, சித்திரமூலம் இவ்விரண்டையும் அரைத்து மேலே பூசி வந்தாலும், (3) மனச்சிலை, நாயுருவிச்சாம்பர் இவற்றை ஜலத்தினுல் அரைத்துத் தடவினுலும் வெண் குஷ்டம் விலகும். 183—192½.

ஸர்வேச்வர ரஸம்:—இரஸம் ஒரு பலம், கந்தகம் நான்கு பலம் இரண்டையும் ஒன்றுகச் சேர்த்து ஒரு யாமகாலம் அரைக்கவும்; பிறகு தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம், அய பஸ்மம், லிங்கம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம்; ஸுவர்ணம், வெள்ளி இவ்விரண்டும் பிரத்தியேகம் பத்து நிஷ்கங்கள்; வஜ்ர பஸ்மம் ஒரு மாஷமெடை; சுத்த தாளகம் இரண்டு பலம்; இவ்வனைத்தையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றுல் ஒரு நாள் அரைக்கவும்; அவ்விதமே ஊமத்தையிலை, ஆடாதோடை, இலைக்கள்ளி, எருக் கிலை, அலரியிலை இவற்றின் சாறுகளையும் எட்டிக் கொரட்டையின் கஷாய மும், சேர்த்து ஒவ்வொரு நாளாக ஏழு நாட்கள் அரைத்த பின்பு உருட்டி வஸ்திரத்தினுல் கவசமிட்டு வாலுகாயந்திரத்தில் மூன்று நாட்கள் இளந் தீயிட்டு எரித்து பக்குவம் செய்து, பிறகு அப்புடத்தை யுடைத்து, அதி லுள்ள மருந்துடன் ஒரு பலம் நாபியையும், இரண்டு பலம் திப்பிலியையும் பொடித்துச் சேர்த்து ஒன்றுகக் கூட்டவும். 'ஸர்வேச்வர ரஸம்' எனப் படும் இதை இரண்டு குஞ்ஜா அளவில் தேனில் கலந்து உட்கொள்ளலாம். பரிச உணர்ச்சி யிழந்த குஷ்டரோகத்திலும், படைபோன்றுள்ள குஷ்டத்தி லும் இதை உட்கொள்ளலாம். வாலுளுவை, தேவதாரு இவ்விரண்டையும்

சூர்ணம் செய்து, கால் பலம் சூர்ணத்தை ஆமணக்கெண்ணெயுடன் கலந்து இவ்வௌஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்ள நற்குணமுண்டாகும். 193—199.

ஸ்வர்ணகூஷ்மீ ரஸம்:—ஐந்து பலமெடை பிரம்மதண்டு விதையை ஒரு திரோணம் மோரில் சேர்த்து பக்குவம் செய்யவும்; மோர் முடியவும் வற்றிய பின்பு ஒரு திரோணம் பால் கூட்டிக் கொதிக்கவைத்து, பால் அனைத்தும் வற்றிய பிறகு அவ்விதைகளை யெடுத்துக் கழுவியுலர்த்தி, சூர்ணம் செய்து, அச்சூர்ணம் ஐந்துபலமும், பிளகுப்பொடி இரண்டு பல மும், இரஸபஸ்மம் ஒரு பலமும் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு, ஒரு வேளைக்கு நிஷ்கம் அளவு உட்கொள்ளலாம். பரிசவுணர்ச்சியைப் போக்கும் குஷ்டத்தில் இதனுல் நற்குண முண்டாகும். இதற்கு 'ஸ்வர்ணகூஷ்மீ ரஸம்' என்று பெயர். 200—202.

மஹா மேஹபத்ர ரஸம்:—இரஸபஸ்மம், காந்த பஸ்மம், மண்டூரம், சிலாஜது, சுத்தமான பொன்னிமிளை, மனச்சிலை, த்ரிகடு, த்ரிபலை, இலந்தங் கொட்டை, விளாம்பழம், மஞ்சள் இவற்றில் சூர்ணம் செய்யக்கூடியவற் றைப் பொடித்து, இருபது முறை கரிசிலாங்கண்ணிச் சாற்றில் பாவனை செய்யவும்; பிறகு அச்சூர்ணத்தையும் உலர்த்தி, நிஷ்கப்பிரமாணம் தேனில் கலந்து உட்கொள்ள எவ்வித மேஹரோகங்களும் போகும். 'மஹாமேஹபத்ரரஸம்' என்று இதற்குப் பெயர். நன்கு முதிர்ந்த வேப்ப மரத்தின் ஐந்து வித்துகளைச் சூர்ணம் செய்து, ஒரு பலமெடை அரிசி கழு வின நீரில் சேர்த்து, மேற்கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உட் கொள்ளலாம். அல்லது இரண்டு நிஷ்கமெடை நெய்யில் கலந்தாவது உப யோகிக்கலாம். வெகு நீடித்த காலமாயுள்ள மேஹரோகம் அனைத்தும் இதனுல் தீரும். 203—206.

மஹாவஹ்நி ரஸம்:—இரஸம் நாலு பங்கு, கந்தகம் எட்டு பங்கு, மஞ் சள், த்ரிபலை, கோரோசனை இவை பிரத்தியேகம் இரண்டு பாகம், கருஞ்சி வதை, சித்திரமூலம் இவை ஒவ்வொன்றும் எட்டு பாகம்; இவற்றை ஒரு மிக்கப் பொடித்து, காஞ்ஜிக மென்னும் காடியிலும், கள்ளிப்பாலிலும், கரிசிலாங்கண்ணிச்சாற்றிலும், சித்திரமூலக்கஷாயத்திலும், ஆமணக் கெண்ணெயிலும் தனித்தனியே எவ்வேழு முறை பாவனை செய்யவும். 'மஹா வஹ்நி ரஸம்' என்கிற இதை நிஷ்கம் உஷ்ண ஜலத்துடன் உட் கொள்ள நன்கு விரேசநமாகும். இதை யுபயோகிப்பவர் மாலைப் பொழு தில் இந்துப்பும் மோரும் கலந்த அன்னத்தைப் பத்தியமாய் உட்கொள்வது நலம். குளிர்ந்த ஜலம் உபயோகிக்கக் கூடாது. வயிற்றைப் பற்றி யுண்டா கும் வியாதிகளையும், ஆமவாதம், ஊருஸ்தம்பம் முதலியவற்றையும் இது நிவர்த்தி செய்யும். 207—211.

விதாரி ரஸம்:—கந்தகம், தாளகம், பொன்னிமிளை, தாம்ர பஸ்மம், மனச்சிலை, இரஸம் இவ்வனைத்தையும் சூர்ணம் செய்து, திப்பிலிக் கஷாயத் தில் ஒரு தினமும், கள்ளிப்பாலில் ஒரு தினமும் பாவனை செய்து, அரை நிஷ்கமெடை யெடுத்துத் தேனுடன் கலந்து உட்கொள்ள குன்மமும், மண் ணீரல் வீக்கமும் நீங்கும். இதற்குப் பசு மூத்திரம் அநுபானம். இது 'விதாரி ரஸம்' எனப்படும். 212—213½.

த்ரிநேத்ர ரஸம்:—வெண்காரம், மான் கொம்பு, ஸ்வர்ணம், தாம்ர பஸ்மம், இரஸம் இவற்றை இஞ்சிஸ்வரஸத்தினுல் ஒரு நாள் அரைத்து,

அகல்களில் வைத்துச் சீலமண் செய்து புடம்போடவும். இது 'த்ரிநேத்ர ரஸம்' எனப்படும். இதை மாஷப் பிரமாணம் நெய், தேன் இவற்றில் கலந்து உட்கொள்ளலாம். பிறகு இந்துப்பு, ஜீரகம், பெருங்காயம் இம் மூன்றையும் பொடித்து, தேன், நெய் இவற்றில் குழைத்து அநுபானமாய் உபயோகித்துவர பரிணமசூல யென்னும் வயிற்றுவலி தீரும். 214---216.

கஜகேஸரி ரஸம் :—ஒரு பங்கு பாதரஸத்தையும், இரண்டு பங்கு கந்தகத்தையும் ஒரு யாமம் நன்றாய் அரைக்கவும்; இரண்டுக்கும் ஸம யெடையாக தாம்ரபஸ்மத்தையும் சேர்த்து ஓர் அகலில் வைத்து, மற்றொரு அகலால் மூடி சீலை மண்யெய்து, ஒரு மட்பாத்திரத்தில் வைத்து, அதற்குள் கீழும் மேலும் உப்பைச் சேர்த்து, கஜபுடத்தில் எரித்து, தனக்குத்தானே ஆறிய உள்ளிருக்கும் ஔஷதத்தை எடுத்து சூர்ணம் செய்து வைத்துக் கொள்ளவும். இதை இரண்டு குஞ்ஜாப்பிரமாணத்தில் வெற்றிலையில் மடித்து மென்றுவிடவும்; பிறகு பெருங்காயம், சுக்கு, ஜீரகம், வசம்பு, மிளகு இவற்றின் சூர்ணத்தில் கால் பலம் எடை உஷ்ண ஜலத்துடன் அநுபானமாய் உட்கொள்ளலாம். 'கஜகேஸரி ரஸம்' என்கிற இது அஸாத்தியமான வயிற்று வலிகளையும் போக்கக் கூடியது. 217—220.

அக்னிதுண்டீவடி (அல்லது ஸுதாதீவடி) :— பாரதம், நாபி, கந்தகம், ஓமம், த்ரிபலை, ஸர்ஜ க்ஷாரம், யவக்ஷாரம், சித்திரமூலம், இந்துப்பு, ஜீரகம், அட்டுப்பு, த்ரிகடு இவை ஒவ்வொரு பங்கும், இவ்வனைத்துக்கும் ஸமபாகம் எட்டிக்கொட்டையும் கூட்டி சூர்ணம் செய்து, எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து, மிளகுகளைப்போல் மாத்திரைகள் செய்யவும். அக்னி மாந்தியத்திற்கு இது சிறந்த ஔஷதம். 221—222½.

அஜீர்ண கண்டக ரஸம் :—பாரதம், நாபி, கந்தகம் இவற்றைச் சம யெடை யெடுத்து, இவ்வனைத்துக்கும் ஸமமாக மிளகுப் பொடியையும் சேர்த்து, கண்டங்கத்திரிக்காயின் ஸ்வரஸத்தினால் ஆட்டி, அந்த ஸ்வரஸத்தி லேயே இருபத்தோரு முறை பாவனை செய்து, மூன்று குன்றுமணி யெடையில் மாத்திரைகள் செய்யவும்; 'அஜீர்ண கண்டக ரஸம்' என்கிற இவ்வௌஷதம் அகில அஜீர்ணத்தையும் விஷூசிகையையும் போக்கக் கூடியது. 223—225.

மந்தாக பைரவ ரஸம்:—இரஸ பஸ்மம், தாம்ர பஸ்மம், பெருங்காயம், தாமரைக்கிழங்கு, இந்துப்பு, கந்தகம், தாளகம், கடுகரோகிணி இவற்றைச் சமயெடை யெடுத்து சூர்ணம் செய்து, வெள்ளைச்சர்றடை, தேவதாளி, கருநொச்சி, மூள்ளுக்கீரை, பேய்ச்சுரை இவற்றின் ஸ்வரஸத்தினால் தனித் தனியாக ஒவ்வொரு நாள் ஆட்டி, உளுந்து அளவாக மாத்திரைகள் செய்யவும். இதைத் தேனுடன் கலந்து உபயோகிக்கலாம். இதற்கு வேப்பம் பட்டைக்வாதத்தை அநுபானமாய் உட்கொள்ளலாம். கபவியாதிகளை நிவர்த்திக்க வல்லது. இது 'மந்தாக பைரவ ரஸம்' எனப்படும். 226—228.

வாதநாசக ரஸம் :—பாரதம், ஸ்வர்ணம், வஜ்ரம், தாம்ரம், அயம், பொன்னிமிளை, தாளகம், நீலாஞ்ஜனம், துத்தம், அபினி, பஞ்சலவணம் இவற்றை ஸமபாகம் எடுத்து, கள்ளிப்பாலிட்டு ஒரு நாள் அரைத்து, அகல் களில் வைத்து சீலமண்செய்து, பூதாயந்திரத்தில் பக்குவம் செய்து, ஒரு மாஷாப்பிரமாணம் இஞ்சி ஸ்வரஸத்தில் கலந்து உட்கொள்ள வேண்டும். மோடியையும் திப்பிலியையும் பொடித்துச் சேர்த்து செய்த

க்வாதத்தை இதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம் ஆக்ஷேபகம் முத லான எல்லா வாத ரோகங்களையும் போக்கும். 229-231½.

ரோகஹர ரஸம் :—ஸ்வர்ணம் எட்டு சாணமெடை, இரஸம் பன்னி ரண்டு சாணம், அப்ரகம் நான்கு சாணம், கந்தகம் பன்னிரண்டு சாணம், தாம்ரம் இரண்டு சாணம், பொன்னிமிளை இரண்டு சாணம், வங்கம் இரண்டு சாணம், ஸௌவீரம் மூன்று சாணம், அயம் எட்டு சாணம், நாபி மூன்று சாணம், நிலப்பனங்கிழங்கு ஒரு பலம்; இவற்றை நன்றாகப் பொடி செய்து, எலுமிச்சம்பழம் முதலிய புளிப்பான பழங்களின் சாறுகளை விட்டு ஒரு நாள் அரைத்துப் புடம்போடவும். அப்பால் அதை யெடுத்து, கல்வத்தில் அரைத்து வைத்துக்கொள்ளவும் 'ரோகஹர ரஸம்' என்கிற இவ்வௌஷதத்தை உக்ரமான ஸந்நிபாதம், வெண் குஷ்டம், குஷ்டம், விஸர்ப்பம், பகந்தரம், ஜ்வரம், அஜீர்ணம், கிருத்ரிமவிஷப் பிரயோகத்தினா லுண்டாகும் கோளாறுகள் இவ்வற்றிற்கு ஒரு மாஷமெடையில் இஞ்சி ஸ்வரஸத்துடன் கலந்து உபயோகிக்கலாம். 232—237.

ஸந்நிபாத பைரவ ரஸம் :—இரஸம், கந்தகம் ஒன்வொன்றும் முக் கால் பலம்; வெள்ளி, அப்ரகம், தாம்ரம், வங்கம், அபினி இவை கால் கால் பலம்; முருங்கப்பட்டை, சித்திரமூலம், முள்ளுக்கீரை இற்றின் ஸ்வரஸங்க ளால் ஒவ்வொரு யாமம் அச் சரக்குகளை அரைத்து, கோளமாகச் செய்து வஸ்திரத்தினால் கவசம் செய்து, ஒரு காசக்குப்பியில் வைத்து, கீழும் மேலும் உப்பை நிரப்பி, இக்குப்பியை மற்றொரு மட்பாத்திரத்தில் வைத்து, அதனுள் மணலை நிரப்பி, இரண்டு யாமம் எரிக்க வேண்டும். அப்பால் அக்கோளத்தை யெடுத்து சூர்ணம்செய்து, அத்துடன் கால் பலம் பொடி யெய்த பவளமும், சாணமெடை நாபியும் சேர்த்து, கிருஷ்ண ஸர்ப்பத்தின் விஷத்தில் இரண்டு நாள் பாவனை லெய்யவும். கிரந்திதகரம், அமுக்கிரங் கிழங்கு, ஜடாமாம்ஸி, பிரம்மதண்டு, நீர்வஞ்சி, திப்பிலி, அவுரி, இலவங்கப்பத்திரி, ஏலம், சித்திரமூலம், கறுப்புக் கஞ்சாங்கோரை, சத குப்பி, தேவதாளி, ஊமத்தை, அகத்தி, கொட்டைக் கரந்தை, இலுப்பை, ஜாதிக்காய், மருக்காரை இவற்றின் கஷாயநீரால் தனித்தனியே ஒவ்வொரு நாள் அரைத்து, உலர்த்தி வைத்து ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். இதை இரண்டு குஞ்ஜாப் பிரமாணம் உட்கொள்ளலாம். பதினாறு மிளகுகளைப் பொடி செய்து, கொம்மட்டி மாதுளையின் சாறு, இஞ்சிஸ்வரஸம் இவற்றுடன் சேர்த்து அநுபானமாய் உபயோகிக்கலாம். 'ஸந்நிபாதபைரவரஸம்' எனப்படும் இதை ஸந்நிபாத ரோகங்களில் பிர யோகிக்கலாம். 238—246.

கிராஹணீ கபாட ரஸம் :—வெள்ளி, கல்முத்து, ஸ்வர்ணம், யவக்ஷாரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாகம்; கந்தகம் இரண்டு பங்கு; பாதரஸம் மூன்று பங்கு; இவற்றை விளாம்பழ ரஸத்தினால் அரைத்து, மான் கொம் புக்குள் அடைத்து, சீலமண் செய்து புடம் போடவும். அதை ஆறிய பிறகு எடுத்து, சிற்றாமுட்டியின் ஸ்வரஸத்தினால் ஏழு நாட்களும், நாயுருவிச் சாற்றால் மூன்று நாட்களும் அரைத்து, பிறகு வெள்ளிலோத்திப்பட்டை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, காட்டாத்திப்பூ, வாலுளுவை, சிந்தில் இவற்றின் ஸ்வரஸங்களால் தனித் தனியே மும்மூன்று முறை பாவனை செய்ய வேண்டும். மிளகுப்பொடி, தேன் இவற்றுடன் மேற்கூறிய ஔஷத

தத்தை ஒரு மாஷாப்பிரமாணம் உட்கொள்ள எவ்வித அதிஸாரமும், கிரஹணீரோகமும் தீரும். அக்னிதீபனமும் உண்டாகும். இது 'கிரஹணீ கபாட ரஸம்' எனப்படும். 247—251.

வஜ்ர கபாட ரஸம் :—பாரதபஸ்மம், அப்ரகபஸ்மம், கந்தகம், யவக்ஷாரம், வெண்காரம், அகில், வசம்பு இவற்றைச் சமபாகமெடுத்து, காடி, எலுமிச்சம்பழ ரஸம், கரிசிலாங்கண்ணி ரஸம் இவற்றால் ஒவ்வொரு நாள் ஆட்டி, ஒரு கோளமாக உருட்டி உலர்த்தி, ஒரு இரும்புப பாத்திரத்தில் வைத்து ஓர் அகலால் மூடி சீலமண்ணிட்டு, அதன் அடியில் சிறுகச் சிறுக அரை யாமகாலம் தீயிட்டெரிக்கவேண்டும். பிறகு அதை யெடுத்து அதற்குச் சமமாக அதிவிடயம், இலவம்பிசின் இரண்டையும் பொடித்துச் சேர்த்து, விளாம்பழம், கஞ்ஜா இவற்றின் கஷாயங்களில் ஏழு முறை பாவனை செய்யவேண்டும்; பிறகு காட்டாத்திப்பூ, வாலுளுவை, கோரைக் கிழங்கு, வெள்ளிலோத்தி, பில்வம், சீந்தில் இவற்றின் கஷாயங்களில் ஒவ்வொரு நாள் பாவனை செய்து உலர்த்தவும். 'வஜ்ர கபாட ரஸம்' என்று கூறப்படும் இதை சாணப்பிரமாணமாகத் தேனில் கலந்துபயோகிக்கலாம். சித்திரமூலம், சுக்கு, கறப்புப்பு, பில்வக்காய், கறியுப்பு இவற்றைச் சமமாகச் சூர்ணம் செய்து, உஷ்ண ஜலத்துடன் மேற் கூறிய ஔஷதத்திற்கு அநுபானமாய் உட்கொள்ளவேண்டும். இது ஸகல தோஷங்களாலும் ஸம்பவிக்கும் கிரஹணீ ரோகத்தைப் போக்கும். 252—257½.

தாராதி ரஸம் :—வெள்ளி ஒரு பங்கு, வஜ்ரம் இரண்டு பங்கு, ஸ்வர்ணம் மூன்று பங்கு, தாம்ரம் நான்கு பங்கு, இரஸம் ஐந்து பங்கு, கந்தகம் ஆறு பங்கு, அயம் ஏழு பங்கு; இவற்றைச் சோற்றுக் கற்றாழையின் சாற்றால் அரைத்து, காசிக் குப்பியில் அடைத்து, ஒரு பானையில் இந்துப்பைக் கொட்டி, அதன்டையில் அக்குப்பியை வைத்து, பானையின் வாயை மூடி, சீலை செய்து அடுப்பிலேற்றி, ஒரு நாள் சிறுகச் சிறுக அக்னியை வளர்த்தி, அப்பால் தீயை நிறுத்திவிடவேண்டும். ஆறிய பிறகு குப்பியிலிருந்து ஔஷதத்தை எடுத்து, எருக்கம்பாலிலும், அமுக்கிராங்கிழங்கின் சாற்றிலும், காகோலீ, பூனைக்காலி, நிலப்பனங்கிழங்கு, யானை நெருஞ்சி, தண்ணீர் விட்டான் இவற்றின் ஸ்வரஸத்திலும், தாமரைக் கிழங்கு, பத்மமுஸ்தையென்னும் முத்தக்காசு, ஞாழல் இவற்றின் ஸ்வரஸத்திலும் தனித்தனி மும்மூன்று நாட்கள் பாவனை செய்து பிறகு கஸ்தூரி, த்ரிகடு, பச்சைக் கர்ப்பூரம், தக்கோலம், ஏலம், இலவங்கம் இவற்றை முற்கூறிய சூர்ணத்தில் எட்டிலொரு பங்காகச் சேர்த்து, அனைத்துக்கும் ஸமையடை சர்க்கரை கலந்து வைத்து, ஒரு சாணமளவில் இரண்டு பலம் பசும்பாலுடன் உட்கொள்ளலாம். இதற்கு மதுரமான உணவுகளையே பத்தியமாகக் கொள்ளவேண்டும். இதன் பிரபாவத்தினால் தேகத்தில் அழகும், வன்மையும், ஒளியும் செழிக்கும். சுக்ல தாதுவும் மிக விருத்தியடையும். 258—265½.

கந்தர்ப்ப ஸுந்தர ரஸம் :—பாரதம், வஜ்ரம், நாகம், நல்முத்து, வெள்ளி, ஸ்வர்ணம், கிருஷ்ணாப்ரகம் இவ்வெவ்வொன்றையும் கால் பலமெடுத்து, கருங்காலிப் பட்டைச் சாற்றால் ஆட்டி, பவளப்பொடி, கந்தகம் ஒவ்வொன்றையும் கால்பலமெடை கலந்து, அமுக்கிராங்கிழங்கு ஸ்வரஸத்தால் அனைத்தையும் அரைத்து, மான்கொம்புக்குள் அடைத்து ஒரு முறை புடம்போடவும். பிறகு கர்ட்டாத்திப்பூ, காகோலீ, அதிமதுரம்,

ஜடா மாம்ஸி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சுரைக்காய், தாமரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, இங்குணப் பட்டை, திராக்ஷை, திப்பிலி, புல்லுருவி, சிறு மல்லிகை, மேர்மல்லிகை, பெருமல்லிகை, நாய்ப்பயறு, ஈச்சம் பழம், சிறு கோரைக்கிழங்கு, இலுப்பை, பூனைக்காலி இவற்றின் ஸ்வரஸங்களில் பாவனை செய்து உலர்த்தி, எலக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, ஜடாமாம்ஸி, இலவங்கம், அகில், நாககேஸரம், கோரைக்கிழங்கு, திப்பிலி, வெட்டிவேர் இவற்றைத் தனித்தனியே சாணமெடை சேர்த்து, அனைத்தையும் சூர்ணம் செய்து, பிறகு ஒரு சாணம் கஸ்தூரியையும், ஒரு சாணம் பச்சைக் கற்பூரத்தையும் அதில் கலந்துகொள்ளவும் இது 'கர்தர்ப்ப ஸுந்தர ரஸம்' என்று சொல்லப்படும். நெல்லிக்கனி, நிலப்பனங் கிழங்கு, சர்க்கரை இவற்றைப் பொடித்து அதில் கால் பலமெடுத்து, இவ்வௌஷதத்தை ஒரு சாணப் பிரமாணம் கலந்து, கால்பலம் நெய்விட்டுக்குழைத்து, இரவில் உட்கொள்ளலாம். அதற்கு இரண்டு பலம் பாலையும் அநுபானமாகக் கொள்ளலாம். இதனால் சரீரவன்மையும், சுக்ல விருத்தியும் உண்டாகும். ஆகவே இவ்வௌஷதம் சிறந்த வருஷ்யகுணமுள்ளதாம். 266-273½.

லோஹ ரஸாயனம் :—சுத்த ரஸம் ஒரு பங்கு, சுத்த கந்தகம் இரண்டு பங்கு இவ்விரண்டையும் அரைத்து கஜ்ஜலி செய்து, கஜ்ஜலிக்குச்சமமெடை உருக்கிரும்புத்தூளைச் சேர்த்து, ஒரு யாமம் அரைத்து, இச்சூர்ணத்தில் சோற்றுக்கற்றாழையின் சாற்றை விட்டு வெயிலில் வைத்து மூன்று நாட்கள் ஆட்டவும். பிறகு கிரமமாக இதில் உஷ்ணமுண்டாய் விசேஷ தூமமும் கிளம்பும். அப்பொழுது இதைக் கெட்டியாகப் பிண்டம்பேரல் உருட்டி ஒரு தாம்ரபாத்திரத்தில் வைத்து, அதிக சுணையுள்ள தானியக் களஞ்சியத்திற் புதைத்து வைத்து, மூன்று நாட்களுக்குப் பிறகு, கல்வத்திலிட்டு ஒரு நாள் வெயிலில் வைக்கவும்; பிறகு சீந்திற்கொடியின் ஸ்வரஸத்தில் மூன்று முறை பாவனைசெய்து வெயிலில் உலர்த்தி, மறுபடி த்ரிகடு க்வாதத்திலும், ஆடாதோடை, சித்திரமூலம் இவற்றின் ஸ்வரஸத்திலும் தனித்தனியே மும்மூன்று முறை பாவனைசெய்து, அப்பால் இரும்புப் பாத்திரத்தில் இதைச் சேர்த்து, த்ரிபலாக்வாதத்திலும், கருநொச்சி, மாதுளம் பட்டை, தாமரைக்கிழங்கு, கரிசிலாங்கண்ணி, மருதோன்றி, பலாசம் பட்டை, வாழைப்பட்டை இவற்றின் சாறுகளிலும், வேங்கம்பட்டையின் கஷாயத்திலும், அவுரிச்சாற்றிலும், வரள்ச்சுண்டி சாற்றிலும், கருவேலங்காய்ச் சாற்றிலும், பேராமுட்டி, தண்ணீர்விட்டாங்கிழங்கு, நெருஞ்சி, சீந்தில் இவற்றின் ஸ்வரஸங்களிலும் தனித்தனி மும்மூன்று முறை பாவனை செய்யவும். ஆனால் இவற்றுள் கிடைக்கக்கூடிய ஔஷதிகளின் ஸ்வரஸம் அல்லது க்வாதங்களில் மட்டும் பாவனை செய்தால் போதுமானது. இவ்வௌஷதத்தை கோலப்பிரமாணமாக நெய்யிலும் தேனிலும் கலந்து காலையில் உட்கொண்டு வரலாம். ஒரு பலம் சிற்றாமுட்டிக் கஷாயத்தை இதற்கு அநுபானமாய் உபயோகிக்கலாம். இதை மூன்று மாதங்களளவும் உபயோகிக்க நரை திரைகள் நீங்கும். திப்பிலிப்பொடி, தேன் இவற்றைக் கலந்து அநுபானமாயுட்கொண்டால் அக்னிமாந்தியம், ச்வாஸ காஸம், பாண்டு ரோகம், மற்றும் வாத கபங்களால் கேரிடும் கோளாறுகள் இவை நிவ்ருத்தியாகும். சீந்திற்கொடியின் ஸத்துவம், தேன் இவற்றிற் கலந்து உபயோகிக்க வாதரக்தம், கிரஹணீ, அர்சஸ், மூத்திரரோகங்கள், அண்டவ்ருத்தி

இவை தீரும். சரீரவன்மையையும், நிறத்தையும் இது விருத்தி செய்யும் 'லோஹாரஸாயனம்' என்கிற இவ்வௌஷதம் வ்ருஷ்யம், ஆயுஷ்யம் என்கிற குணங்களில் மிகச் சிறந்தது. அயத்திலுலான ஔஷதத்தை யுபயோகிப்பவர் பூசுணிக்காய், நல்லெண்ணெய், உளுந்து கலந்த அன்னம், கடுகு, மதுபானம், புளிப்பு இவற்றை உபயோகிக்கக் கூடாது. 274—278.

விஷ மூலிகை சுத்தி.

நேபாள சுத்தி :—நேபாளத்தின் மேற்றோலையும், மூளையையும், மூனையிலுள்ள மூக்குபோன்ற பாகத்தையும் நீக்கி, அவ்வித்துக்களைப் பசுஞ் சாணத்தில் மூன்று நாட்கள் புதைத்துவைத்து, அப்பால் உஷ்ணஜலத்தில் கழுவியெடுத்து, கல்வத்திலிட்டு அரைத்து, புதிய மட்பாத்திரத்தில் அக்கல்கத்தைத் தடவிவிடவும் அதிலுள்ள எண்ணெய்ப்பசை உறிஞ்சப்பட்டு வறண்டுபோய், சூர்ணம்போலிருக்கும் நிலைமையில் அதை யெடுத்து எலும்பிச்சம்பழ ஸ்வரஸத்தில் அநேக முறை பாவனை செய்யவேண்டும். இவ்விதம் பக்குவம் செய்த நேபாளம் சுத்தமாகவும், குணத்திற் சிறந்ததாகவும் இருக்கும். 1.

நாபி சுத்தி :—வத்ஸநாபியைச் சிறு துண்டுகளாகச் செய்து, ஒரு துண்டு வஸ்திரத்திற் கட்டி பசுமூத்திரத்தில் போட்டு மூன்று நாட்கள் வெயிலில் வைத்திருக்கவும்; ஆனால் ஒவ்வொரு நாளும் முதல் நாள் சேர்த்த கோமூத்திரத்தைக் கொட்டிவிட்டுப் புதிதாக மீண்டும் பசுமூத்திரம் சேர்க்க வேண்டும். மூன்று நாட்கள் சென்றதும் அத்துண்டுகளை யெடுத்து வெயிலில் உலர்த்தி, மிக மிருதுவாக அரைத்தெடுக்க நாபி சுத்தமாகும் இவ்வாறு சுத்தி செய்த நாபியை அவசியமான வியாதிகளில் உபயோகிக்கலாம். மற்றொரு விதத்திலும் நாபியைச் சுத்தம் செய்யக்கூடும். அக்கிழங்கை முன்போலவே துண்டுகளாகச் செய்து, வஸ்திரத்திற் கட்டி, வெள்ளாட்டுப் பாலில் டோலாயந்திரமாக வைத்து ஒரு யாமகாலம் எரித்தல் போட சுத்தமாகும். வெள்ளாட்டுப்பால் கிடைக்காவிட்டால் பசும்பாலைக்கொண்டு சுத்தி செய்யலாம்.[1] 2—5.

---

1. நேபாள சுத்தி, நாபி சுத்தி இம்முறைகள் மேலே அவசியமாயிருந்தும் கூறப்படவில்லை யென்பதைக் கருதி, இதர கிரந்தத்திலிருந்து எடுத்து ஸம்ஸ்கிருதத்தில் வெளியாயிருக்கும் சார்ங்கதர ஸம்ஹிதையில் இப்பிரகரணத்தில் "சார்ங்கதரனுல் கூறப்படாதவை" என்று குறிப்பிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இங்கு 1-முதல் 5 வரையிலுள்ள பத்தியங்கள் சார்ங்கதர ஸம்ஹிதைக்குச் சேராதவை யென்று கருதப்படுகின்றன.

உத்தர கண்டம்

முதல் அத்தியாயம்.

ஸ்நேஹ பான விதி

நான்குவித ஸ்நேஹங்கள் :—க்ருதம், தைலம், வஸா, மஜ்ஜா என்று ஸ்நேஹம் நான்கு விதம்.[1] நான்குவித ஸ்நேஹங்களும் ஸ்த்தாவரம், ஜங்கமமென்னும் இரண்டு மூலங்களிலிருந்து உற்பத்தியாகின்றன. ஸ்த்தாவர ஸ்நேஹங்களுள் நல்லெண்ணெயும், ஜங்கமஸ்நேஹங்களுள் நெய்யும் சிறந்தவையாம். ஸ்நேஹபானம் செய்ய ஸூர்யோதயம் சிறந்த காலமாகும். 1, 2.

ஸ்நேஹங்களின் சேர்க்கைக்கான பரிபாஷைகள் :—மேற்கூறிய நாலுவித ஸ்நேஹங்களுள் எதேனும் இரண்டை ஒன்று சேர்த்தால் அதற்கு யமகம் என்றும், மூன்றைச் சேர்த்தால் த்ரிவ்ருதம் என்றும், நான்கைச் சேர்த்தால் மஹத். என்றும் பெயர். நிலைமைகளுக்கேற்ற ஸ்நேஹத்தை மூன்று நாள், நாலு நாள், ஐந்து நாள், ஆறு நாளுமாக முறையே உபயோகிக்கலாம். ஏழு நாட்களுக்குமேல் ஸ்நேஹ பானம் செய்தால் அது சரீரத்திற்கு ஸாத்மியமாய்விடும்.[2] 3½.

ஸ்நேஹபானத்திற்கான அளவுகளும் உபயோகங்களும் :—ஸ்நேஹபானம் செய்வதற்கு ஹ்ரஸ்வமாத்திரை, மத்யமமாத்திரை, உத்தமமாத்திரை என்று மூன்றுவித அளவுகள் உண்டு. வாத பித்த கபங்கள், காலபேதங்கள், வயதின் வேற்றுமைகள் இந்நிலைமைகளை யனுஸரித்து ஸ்நேஹங்களைக் கொடுக்க வேண்டிய அளவுகளையும் தீர்மானிக்கவேண்டும். அளவுகளில் லாமலும், காலநியமமின்றியும், உண்டிவினை பத்தியக்ரமமில்லாமலும் ஸ்நேஹங்களை யுட்கொண்டால் சரீரவீக்கம், அர்சஸ், சோம்பல், அதிகநித்திரை, உணர்ச்சிக்குறைவு இவையுண்டாகும். நல்ல அக்னிதீபனமுள்ள மனிதருக்கு ஒரு பலம் ஸ்நேஹமும், மத்யமமான ஜீர்ண சக்தியுள்ளவருக்கு முக்கால் பலம் ஸ்நேஹமும், ஜீர்ணசக்தியில்லாதவருக்கு அரைப்பலம் ஸ்நேஹமும் கொடுக்கலாம். அல்லது ஸ்நேஹ பானத்திற்கு அகிலவைத்தியராலும் அங்கீகரிக்கப்பட்ட வேறுவித மூன்று அளவுகள் உண்டு. அவை : எவ்வளவு ஸ்நேஹத்தை பானம் பண்ணினுல் அது ஓர் இராப்பகலில் ஜீர்ணமாகக்கூடுமோ அந்த அளவு உத்தம மாத்திரையாகும்; ஒரு முழுப்பகலில் ஜீர்ணமாகக் கூடிய அளவு மத்யம மாத்திரையாகும்; அரைப்பகலில் ஜீரணமாகக் கூடியது ஹ்ரஸ்வமாத்திரையாம். அவற்றுள் ஹ்ரஸ்வமாத்திரையே ஸுகந்தரத்தக்கது. அது தீபனம் வ்ருஷ்யம் என்கிற குணங்களுடையது. தோஷங்கள் சிறிது கோளாறடைந்திருக்கையில் ஸ்நேஹத்தை ஹ்ரஸ்வமாத்திரையி லுபயோகிப்பதே நலம். ஸ்நேஹங்கள் மத்யம மாத்தி

---

1. க்ருதம்—நெய்; தைலம்—எண்ணெய் வகைகள்; வஸா—நிணம் அல்லது கொழுப்பு; மஜ்ஜா—எலும்புகளுக்குள்ளிருக்கும் ஒரு வகை பசை.

2. ஸாத்மியம்—உபயோகிக்கப்படும் ஔஷதங்கள் சரீரத்தில் அவ்வவற்றின் குணங்களுக்கேற்ற செயல்களைக் காட்டும்; ஆனால் ஔஷதம் அல்லது தனிச் சரக்கு எதேனும் நீடித்து உபயோகிக்கப்பட்டால் அது விசேஷகுணங்களைக் காட்டாமல் சரீரத்திற்கு உரிய பதார்த்தம்

ரையி லுபயோகிப்பதால் சரீரம் நன்கு ஸ்நிக்த்தமாகும்;[1] பிரம மென்னும் தலைசுற்றல் முதலியதும் நீங்கும்; அதனால் ப்ருஹ்மண குணமுமுண்டாகும். உத்தம மாத்திரையிலுபயோகிப்பதால் குஷ்டம், விஷதோஷம், உன்மாதம், கிரஹபீடை, அபஸ்மாரம் இவை தீரும். 4—9½.

க்ருதபானத்திற்கான நிலைமைகள்:—பித்த வியாதிகளில் க்ருதத்தைத் தனியாகவும், வாதரோகங்களில் இலவணங்களைச் சேர்த்தும், கபம் மிகுதியான வியாதிகளில் த்ரிகடு க்ஷாரங்களுடன் கூட்டியும் உபயோகிக்கலாம். மேலும் ருக்ஷ சரீரிகள், விரணம் விஷப்பற்று வாத பித்த வியாதி இவற்றால் வருந்துபவர், அறிவு ஞாபகசக்திகளிற் குன்றியவர் இவர்களுக்கெல்லாம் க்ருத பானம் சிறந்ததாகும். 10—11½.

தைலபானத்திற்கான நிலைமைகள்:—குடல்களில் கிருமிகளுண்டாயிருக்கையிலும், வாதரோகங்களிலும், கபம் கொழுப்பு இவை விருத்தியாயிருக்கையிலும், சரீரத்தை வன்மையாக்க வேண்டிய நிலைமையிலும் தைலத்தை யுபயோகிக்கலாம்; மேலும் எவருக்குத் தைலமே ஸாத்மியமாயிருக்கின்றதோ அவர்களும் தைலத்தை யுபயோகிப்பது நலமே. 12½.

வஸாபானத்திற் தூரியவர்:—அதிக சரீர உழைப்பினால் மெலிவடைந்தவர்களும், சுக்லம் இரத்தம் முதலிய தாதுக்கள் சுஷ்கமானவரும், மஹத்தான வியாதிகளால் வருந்துபவரும், அதிக சரீர வலிவுள்ளவரும், ஜீர்ணம் செய்துகொள்ளக்கூடிய அக்னி பலமுடையவரும், வாதப் பிரகோபத்தினால் பிணியுண்டவரும் வஸாயென்னும் ஸ்நேஹத்தை உபயோகிப்பத்தற்கு உரியவராவர். 13½.

மஜ்ஜாபானத்திற்தூரியவர்:—க்ரூரகோஷ்ட முள்ளவரும், க்லேசங்களைத் தாங்குபவரும், வாதாதி தோஷங்களால் பீடிக்கப்பட்டுபவரும், அதிக அக்னி தீபனமுடையவரும் மஜ்ஜா என்னும் ஸ்நேஹத்தை அருந்துவதற்கு உரியவர். மேலும் முற்குறித்த எல்லாப் பிணியாளிகளுமே க்ருதபானமும் செய்யலாம். 14½.

ஸ்நேஹபானத்திற்குரிய காலங்கள்:—சீதகாலங்களில் பகலும், உஷ்ண காலங்களில்[2] இரவும் பொதுவாக ஸ்நேஹபானத்திற்கேற்ற காலங்களாம்; ஆனால் வாத பித்தங்களின் பிரகோபத்தினாலுண்டான வியாதிகளில் இரவிலும், வாத கபங்களின் பிரகோபத்தினாலுண்டான வியாதிகளில் பகலிலும் ஸ்நேஹபானம் செய்வது உசிதமாகும். 15½.

நஸ்யம் முதலியவற்றிற்குரிய ஸ்நேஹங்கள்:—நஸ்யம், அப்யஞ்ஜனம், கண்டூஷம், மூர்த்த தர்ப்பணம், கர்ணதர்ப்பணம், நேத்ர தர்ப்பணம் என்னும் கிரியைகளில்[3] வாத பித்த கபங்களுக்குள்ள பலாபலங்களையறிந்து க்ருதத்தையாவது, தைலத்தையாவது தக்கபடி உபயோகிக்கலாம். 16½.

போல் ஆய்விடும். அவ்விதம் சரீரத்திற்கு ஸஹஜமாய் விடுவது தான் ஸாத்மியம்.

1. ஸ்நிக்த்தம்-எண்ணெய்ப் பசையுடன் கூடிய வழுவழுப்புத் தன்மை.

2. ஹேமந்தருது, சிசிரருது, வஸந்தருது இவை சீத காலங்கள்; மற்ற மூன்று ருதுக்களும் உஷ்ண காலங்கள்.

3. நஸ்யம், அப்யஞ்ஜனம் முதலியவற்றைப் பற்றி பின் வரும் அத்தியாயங்களில் விவரம் காண்க.

ஸ்நேஹத்திற்கு அநுபானங்கள்:—க்ருதபானம் செய்ததும் இளஞ் சூடான ஜலத்தையும், தைலபானத்தில் யூஷத்தையும், வஸா, மஜ்ஜா இவற்றுடன் மண்டத்தையும் அநுபானமாய் உட்கொள்வது நலம். 17½.

ஸ்நேஹபானத்தை அருவருப்பவருக்குச் செய்யவேண்டிய உபாயம்:-ஸ்நேஹபானத்தில் வெறுப்புள்ள சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், ஸுகுமாரதேகிகள், மெலிந்துபோனவர், நாவ்றட்சுயுள்ளவர் இவர்களுக்கு ஆஹாரங்களிற் கலந்து ஸ்நேஹங்களைக் கொடுப்பது நலம். உஷ்ணகாலங்களில் அனைவருக்குமே இவ்விதந்தான் செய்யவேண்டும். இவர்களுக்கேற்ற ஸ்நேஹந குணமுள்ள உணவுகள் பல. அதிக எள்ளும் சொற்ப அரிசியும் சேர்த்து பக்குவம் செய்த நெய் கலந்த யவாகுவென்னும் கஞ்சியை இளஞ் சூடாக உட்கொண்டால் உடனே தேகம் ஸ்நிக்த்தமாகும். ஒரு பாத்திரத்தில் சர்க்கரையும் நெய்யும் சேர்த்து, அதில் பசும்பாலைக் கறந்து உஷ்ணத்துடன் பருகினால் சரீரம் உடனே ஸ்நிக்த்தமாகும். 18-20½.

முறைதவறின ஸ்நேஹ பானத்தினாலுண்டாதும் தீமையும் பரிஹாரமும்:—பித்யாசரணையினாலும்,[1] மிதமிஞ்சிய ஸ்நேஹபானத்தினாலும் எவருக்கு உட்கொண்ட ஸ்நேஹம் ஜீர்ணமாவதில்லையோ, வயிற்றுப் பொருமலுடன் அஜீர்ணத்தையு முண்டுபண்ணுமோ அவரை உஷ்ண ஜலம் குடிக்கச் செய்து வாந்தி செய்விக்க வேண்டும். உட்கொண்ட ஸ்நேஹம் நன்றாக ஜீர்ணமாகவில்லை யென்கிற சங்கையிருந்தால் உடனே அந்த நோயாளி சிறிது வெந்நீரைக் குடித்தால் ஸ்நேஹம் ஜீர்ணமாய், வயிற்றிலேயே ஸ்நேஹம் தங்கியிருப்பதற்கு அறிகுறியாக உண்டாய்க் கொண்டிருந்த ஏப்பம் முதலியதும் நிவ்ருத்தியாகும்; உணவுண்பதில் இச்சையும் உண்டாகும். பித்தப்பிரக்ருதிக்கு அல்லது பித்தரோகமுள்ளவனுக்கு ஸ்நேஹபானத்தினால் ஜாடராக்னி மிகவும் கிளறப்பட்டு நாவறட்சி யேற்பட்டால் அந்நிலைமைக்கு எதிரிடையான சிகித்ஸை செய்யலாம்; அதாவது குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கச்செய்ய நாவறட்சி நீங்கும். 21—24.

ஸ்நேஹபானம் செய்யத்தகாதவர்கள்:—அஜீர்ணரோகி, அரோசகமுள்ளவன், உதரரோகி, தருணஜ்வரமுடையவன்[2], தூர்ப்பலன், ஸ்த்ரீலதேஹி, மூர்ச்சையினால் வருந்துபவன், வெறியன், வஸ்தி விரேகம் வமநம் இவை செய்துகொண்டவர், நாவறட்சி சிரமம் இவற்றால் வருந்துபவர், அகாலத்தில் முறைகேடாகப் பிரஸவித்தவள் ஆகியவர் ஸ்நேஹபானத்திற்குத் தகாதவராவர்; மாரி காலத்தில் எவருக்குமே ஸ்நேஹபானம் உற்றதல்ல. 25-26.

ஸ்நேஹபானத்திற்குரியவர்கள்:—ஸ்வேத சிகித்ஸை செய்ய வேண்டியவர், வேறு வகையான சோதநசிகித்ஸைக்குரியவர், மதுபானம் செய்பவர், சிற்றின்பத்தில் அதிகப்பற்றுள்ளவர், அதிக வியாயாமம் செய்பவர்,

---

1. சீதகாலங்களில் உஷ்ணகாலத்திற்கேற்ற ஆசரணைகளும், உஷ்ண காலங்களில் சீதகாலாசரணைகளும், குருபோஜனத்திற்குப் பதிலாய் இலகுவும், இலகுவுக்குப் பதிலாய் குருவும்-இவ்வாறு நேர் எதிரிடையான ஆசரணைகள் மித்யாசாரங்கள் எனப்படும்.

2. தருணஜ்வரம்:—முதிர்ச்சி பெறாத ஜ்வரம். [எட்டு நாட்களுக்குப் பிறகு ஜ்வரம் பக்குவமாவதாகவும், அதற்கு முன் அது தருண ஜ்வரம் அல்லது ஆமஜ்வரம் என்றும் கூறப்படும்.]

சிந்தையுள்ளவர், கிழவர், பாலர், இளைத்துப்போனவர், ரூக்ஷதேகமுள்ளவர், இரத்தம் க்ஷீணித்தவர், சுக்ல க்ஷீணமுள்ளவர், வாதரோகத்தினால் பீடிக்கப் படுபவர், திமிரமென்னும் நேத்திர ரோகத்தினால் வருந்துபவர் இவர்களுக் கெல்லாம் ஸ்நேஹபானம் சிறந்ததாகும். 27, 27½.

சரீரம் **ஸ்நிக்தித்தமானதற்கு அறிகுறிகள்** :—வாததோஷம் கோளாற டைந்த நிலைமையை விட்டு இயற்கை நிலைமையடைவது, ஜாடராக்னி விருத்தியாவது, மலம் இளகலாய் எண்ணெய்ப் பசையுடன் வெளியாவது, சரீரம் மிருதுவாகவும் ஸ்நிக்தமாகவும் ஆவது, சரீரத்தில் சிறிது களைப் புண்டாவது, ஸ்நேஹத்தில் அருவருப்பு ஏற்படுவது, தேகம் இலகுவாதல், இந்திரியங்கள் யாவும் அததற்குண்டான இயற்கைச்சக்தியைப் பெறுதல் இவை ஸ்நேஹபானம் செய்து சரீரம் நன்கு ஸ்நிக்தமாயிற்றென்பதற்கு அறிகுறிகளாம். ஸ்நிக்தமாகாமல் ரூக்ஷகுணம் மேலிட்டிருந்தால் மேற் கூறிய குறிகளுக்கு நேர் விரோதமான குணங்களுண்டாயிருக்கும். 28, 29.

அதிஸ்நிக்தமானதற்குக் குறிகள் :—அன்னத்வேஷம், வாயில் நீர் சுரத்தல், குதத்தில் எரித்தல், ஆஸனக்கடுப்பு, சோம்பல், அதிஸாரம், சரீரம் வெளிறிப்போதல் இவை மிதமிஞ்சிய ஸ்நிக்த குணங்களாம். 30.

அதிஸ்நிக்த நிலைமையிலும் ரூக்ஷநிலைமையிலும் செய்யவேண்டிய சிகித்ஸை :—(1) மிகவும் வறட்சியுண்ட சரீரமுள்ளவன் ஸ்நேஹ பதார்த் தங்களை யுபயோகித்து சரீரத்தை ஸ்நிக்தமாக்கிக்கொள்ளவேண்டும். (2) அதிஸ்நிக்தமாக ஆய்விட்டால் சாமை, கடலை இவற்றின் கஷாயம், மோர், பிண்ணாக்கு, மாப்பண்டங்கள் இவற்றை யுபயோகித்து சரீரத்தை ரூக்ஷ மாக்க வேண்டும். 31.

ஸ்நேஹோபயோகத்தினாலுண்டாதும் குணங்கள் :—ஸ்நேஹங்களை யுபயோகிப்பவருக்கு ஜாடராக்னி நன்றாக விருத்தியாகும்; குடல் சுத்தமா கும்; தாதுக்கள் புஷ்டியடையும்; புலன்கள் யாவும் பலம் பெற்று நல்ல நிலைமையிலிருக்கும்; தேகத்திற்கு வன்மையும் அழகிய நிறமும் உண்டாகும்; சிழத்தனம் சீக்கிரமேற்படாது. 32.

ஸ்நேஹங்களை யுபயோகிக்கையில் பரிஹரிக்க வேண்டியவை :—ஸ்நேஹமுபயோகிக்கையில் வியாயாமம், மாம்ஸ போஜனம், சீதள வஸ்து, வேக நிரோதம்,[1] அதிக கண் விழித்தல், பகல்நித்திரை, வாயிலும் குடலிலும் திரவங்களை அதிகமாகச் சுரக்கச் செய்யும் பதார்த்தங்களின் உபயோகம், ரூக்ஷமான உணவு இவற்றை விலக்கவேண்டும். 33

இரண்டாம் அத்தியாயம்

ஸ்வேத விதி.

நான்குவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும் :—'தாப ஸ்வேதம்,' 'ஊஷ்ம ஸ்வேதம்,' 'உபநாஹ ஸ்வேதம்' 'திரவ ஸ்வேதம்' என்று ஸ்வேதமுறை நான்கு. ஸ்வேதமுறை யாவும் பெரும்பாலும் வாத ஹரம்; சில ஸமயம் வேறு குணங்களையு முண்டுபண்ணும். அதாவது:

1. வேகநிரோதம்:—மலவிஸர்க்கம், மூத்திரவிஸர்க்கம், அபானவாயு, தும்மல், நித்திரை, பசி, தாஹம் முதலியவை வேகங்கள்; அவற்றை இயற்கைக்கு மாறுகத் தடுத்தல் வேகநிரோதமாகும்.

தாபஸ்வேதம் ஊஷ்மஸ்வேதம் இவை கபஹரமாகவும், உபநாஹஸ்வேதம் வாத ஹரமாகவும், திரவஸ்வேதம் பித்தஹரமாகவும் பயன்படும். 1—2.

மூன்றுவித ஸ்வேதங்களும் அவற்றின் உபயோகங்களும் :—முற் கூறிய நான்கு ஸ்வேதமுறைகளையும் 'மஹா ஸ்வேதம்', 'மத்யம ஸ்வே தம்', 'துர்ப்பல ஸ்வேதம்' என்று மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். அவற் றுள் மிகவும் பலிஷ்டருக்கும், மஹத்தான வியாதிகளால் வருந்துபவருக்கும், சைத்திய பாதையினால் பீடிக்கப்படுபவருக்கும் மஹாஸ்வேதமும், மத்யம பலமுள்ளவருக்கும், மத்யம பலமுள்ள வியாதிகளால் வருந்துபவருக்கும் மத்யம ஸ்வேதமும், துர்ப்பலர்களுக்கும், ஸாமான்ய வியாதிகளுடையவருக் கும் துர்ப்பல ஸ்வேதமும் உற்றதாகும். 3.

நிலைமைகளுக்குத் தகுந்த வேவ்வேறு ஸ்வேத முறைகள் :—கபம் பிரகோபமடைந்திருந்தால் ரூக்ஷபதார்த்தங்களால் செய்யப்படும் ஸ்வேத மும், கபம் வாதம் இரண்டும் கோளாறடைந்திருந்தால் ரூக்ஷமும் ஸ்நிக்தமு மான பதார்த்தங்களாலான ஸ்வேதமும், வாதம் கபத்தாலும் மேதஸ்ஸாலும் கவரப்பட்டிருந்தால் சிறிது கதகதப்பான வீட்டில் வஸிப்பது, ஸ்நேஹ்யகிர ணங்களைப் பரிசிக்கச் செய்வது, கைச்சண்டை, வழிநடத்தல், கனமான போர்வை, சிந்தை, அதிக வியாயாம், பாரங்களைச் சுமத்தல் முதலிய காரியங்களும் பிணிதீர ஸ்வேத முண்டாக்கும் முறைகளாம். 4—5.

முதலில் ஸ்வேத சிகித்ஸைக்கு உரிய பிணியாளிகள் :—நஸ்யம், வஸ்திகள், இதர சோதநசிகித்ஸை[1] இவற்றைச் செய்து கொள்ள வேண்டியவர் முதலில் ஸ்வேத சிகித்ஸை செய்துகொள்வது அவசியம். மேலும் பகந்தரரோகி, மூலரோகி, அச்மரீரோகி இம்மூவருக்கும் சஸ்திர சிகித்ஸைக்கு முன்பும் ஸ்வேதம் செய்வது அவசியம். 6—7.

ஸ்வேத சிகித்ஸைக்குப் பிறகு கெய்ய வேண்டிய காரியம் :—சரீரத் திற் பிரவேசித்த சல்யங்களை வெளிப்படுத்திய பிறகும், மூட கர்ப்பத்தில்[2] வயிற்றிலுள்ள சிசுவை வெளியிற் கொண்டு வந்த பிறகும், காலப்பிரஸவ மாகவோ அகாலப் பிரஸவமாகவோ ஸ்த்ரீகள் பிரஸவித்த பிறகும் ஸ்வே தம் செய்யவேண்டும். 8

ஸ்வேதத்திற்குரிய நிலைமையும் காலமும் :—ஸ்வேத சிகித்ஸைக்குரிய வர்களை அதிக காற்றோட்டமில்லாத விடங்களில் இருக்கச்செய்து, அதற்கு முன் புஜித்துள்ள உணவு ஜீர்ணமான பிறகு அவர்களுக்கு ஸ்வேத விதியை நிறைவேற்றவேண்டும். 8½.

ஸ்வேத சிகித்ஸையைப் பயன்படச் செய்யுமுபாயம் :—ஸ்வேதம் செய்வதால் தாதுக்களில் வியாபித்துள்ள தோஷங்கள் திரவமாகப் போய் குடல் முதலியவற்றில் வந்து சேரும். இவ்விதம் ஸ்வேதம் செய்தான வுடன் சிறிது ஸ்நேஹங்களை யுட்கொண்டால் அத்தோஷங்கள் விரேக மூலமாய் வெளிப்பட்டுவிடும். ஸ்வேத சிகித்ஸையினால் சரீரம் வியர்க்கை யில் சீதளமான பதார்த்தங்களால் இருதயத்திற்கு அருகில் மார்பைப் பரி சிக்கவேண்டும். ஆனால் அதற்கு முன் சரீரத்தை ஸ்நேஹங்களால் மெதுப்

1. வமநம், விரேசநம், நஸ்யமம், முதலியவை சோதந சிகித்ஸைகள்.
2. மூடகர்ப்பம்:—பிரஸவ காலத்தில் சிசு கருப்பையில் இயற்கைக்கு மாறுகத் திரும்பி வயிற்றில் சிக்கிக்கொள்வதால் உண்டாகும் கோளாறு.

படுத்தவேண்டும். கண்களையும் சீதளமான வஸ்துக்களால் மூடிவிட்டு அவற்றிற்கு அருகில் ஸ்வேதம் செய்யலாம். 9—10½.

ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவர்:—அஜீர்ணம், தூர்ப்பலம், மேஹ ரோகம், கூதகூஷ்ணம், ரக்தபட்சி, அதிஸாரம், ரக்தபித்தம், பாண்டு, மஹோதரம் முதலிய வயிற்று வியாதிகள், வெறி இவற்றால் வருந்துபவரும், கர்ப்பிணியும் ஸ்வேத சிகித்ஸைக்கு உரியவரல்லர். 11—12.

மிருது ஸ்வேதத்திற்குரிய நிலைமை:—ஆனால் முற்கூறியவர்களுக்கும் ஸ்வேத சிகித்ஸை செய்ய அவசியமேற்பட்டால், தூர்ப்பல ஸ்வேதமென்கிற மிருதுஸ்வேதம் செய்வது நலம். மேலும் இருதயம், பீஜங்கள், கண்கள் இவ்விடங்களிலும் மிருது ஸ்வேதமே செய்யவேண்டும். 13.

அளவு மீறிய ஸ்வேதத்தினால் உண்டாகும் தீமையும் பரிஹாரமும்:—ஸ்வேதசிகித்ஸையை மிதமிஞ்சி செய்து விட்டால் மூட்டுகளில் வேதனை, ரக்தபட்சி, தேக அழற்சி, சரீரவாட்டம், தலைச்சுற்றல், ரக்தபித்தம், பிடகைகளென்னும் வ்ரணங்கள், கோபம் இவை உண்டாகும். இவை நேர்ந்தால், சீதோபசாரம் செய்து இவற்றைத் தணிக்கலாம். 14.

தாபஸ்வேதம்:—மணல், வஸ்த்ரம், கரங்கள், ஓடுகள், பந்துகள் இவற்றைக் காய்ச்சியும், தழல்கள் உள்ளடங்கிய பாத்திரங்கள் முதலியவற்றைக் கொண்டும் ஒற்றடம் கொடுப்பது தாபஸ்வேதம். மணல் முதலியவற்றில் எந்தெந்த வஸ்து எந்தெந்த நிலைமைக்கு உற்றதென்பதை வைத்தியர்கள் உற்றுணர வேண்டும். 15.

ஊஷ்மஸ்வேத முறைகள்:—(1) இரும்புக் குண்டுகள், செங்கல், கற்கள் முதலியவற்றை அக்னியிலிட்டுக் காய்ச்சி, காடியில் சேர்த்து, அதிலிருந்து கிளம்பும் ஆவி சரீரமெங்கும் படும்படி வஸ்த்ரங்களால் காடியடங்கிய அப்பாத்திரத்தையும் உடம்பையும் சேர்த்து போர்த்துக்கொண்டு செய்யப்படும் சிகித்ஸா முறை ஊஷ்ம ஸ்வேதம் எனப்படும். (2) ஒரு குடத்தின் ஒரு பாரிசத்தில் சிறிது த்வாரம் செய்து, மாம், மூங்கில், லோஹ வகைகள் முதலிய ஏதேனும் ஒன்றால் கோபுச்சம்போல் செய்த இரண்டு முழம் நீளமுள்ள குழாயை அந்த த்வாரத்தில் அமைத்து, அதில் வாதஹரமான திரவியங்களாகிய க்வாதங்கள், ஸ்வரஸங்கள் முதலானவற்றைக் கொதிக்கும் நிலைமையில் நிரப்பி, அதன் வாயை மூடிவிடவும். ஸ்வேதம் செய்துகொள்ள வேண்டிய பிணியாளிக்கு முதலில் அப்யங்கம் செய்வித்து, அவனுடம்பை கனமான போர்வைகளால் போர்த்து ஓர் ஆஸனத்தில் அல்லது வேறு இடத்தில் ஸுகமாயுட்காரவைத்து, துதிக்கையைப் போன்ற அக்குழாய் மூலமாய் வரும் ஆவியை அவனுடம்பில் படியச் செய்யவும். நாடீஸ்வேதம் என்கிற இது விசேஷமாக வாத ரோகிக்கு குணம் தரத்தக்கது. (3) பூமியில் ஒரு புருஷப் பிரமாணம் அகல நீளமும் சிறிது ஆழமுமுள்ள பள்ளம் தோண்டி, அதில் கருங்காலிக் கட்டைகளையிட்டு எரித்து, அப்பால் அதிலுள்ள நெருப்பை அப்புறப்படுத்தி, அப்பள்ளத்தில் பால், காடி, ஜலம் இவற்றைத் தெளித்து, வாதஹரமான இலை தழைகளால் அதை மூடி, அதன்மேல் தழைகளைக் கொண்டு படுக்கையிட்டு, அதன்மேல் பிணியாளியைப் படுக்கச் செய்தால் சரீரம் நன்கு வியர்க்கும். இவ்விதமாகவே உளுந்து முதலியவற்றையும் வேகவைத்து அவற்றால் சயனமேற்படுத்தி, அதில் மனிதனைப் படுக்கச்செய்து ஸ்வேதம் செய்விக்கலாம். 16-21.

உபநாஹஸ்வேதம்:—முதலில் வாதஹரமான ஔஷதங்களை பால், மாம்ஸரஸம், காடிகள், உப்பு, ஸ்நேஹவர்க்கங்கள் இவற்றைச் சேர்த்து அரைத்து, சிறிது சூடேற்றி வாதரோகத்தினால் வருந்துபவருடைய தேகத்தில் பூசவேண்டும். கிராமங்களுக்கு அருகில் நீர்ப்பாங்கான இடங்களில் ஸஞ்சரிக்கும் மிருக பக்ஷிகளின் மாம்ஸம், ஜீவநீயகணத்திற் கூறப்பட்டுள்ள ஔஷதச் சரக்குகள், தயிறு, காடி, க்ஷாரங்கள், வீரதராதி கணத்திற் கூறிய[1] சரக்குகள், கொள், உளுந்து, கோதுமை, ஆளிவிதை, எள், கடுகு, சதகுப்பி, தேவதாரு, கருகொச்சி, ஜீரகம், ஆமணக்கு வேர், அமணக்கு விதை, சிற்றரத்தை, முள்ளங்கி; முருங்கை, ஜடாமாம்ஸி, திப்பிலி, கஞ்சாங்கோரை, உப்புகள், அம்லபதார்த்தங்கள், முதியார்கூந்தல், அமுக்கிரங்கிழங்கு, சிற்றாமுட்டி, தசமூலம், சீந்தில், பூனைக்காலிவிதை இவற்றுள் கிடைத்தவைகளை இடித்து, வதக்கி, வஸ்த்ரத்திற் கட்டி ஒற்றடம் கொடுப்பதுபோல் ஸ்வேதகம் செய்யலாம். இந்த உபநாஹ ஸ்வேதமுறை மஹாகால்வணம் எனப்படும். இது ஸகல ரோகங்களையும் அகற்றும். 22—27½.

தைலஸ்வேதம்:—தைலம் முதலானதைக்கொண்டு பிணியாளியின் சரீரத்தை ஸ்நிக்தமாக்கி, அவனை வாதஹரதிரவ்யங்களாலான கஷாயம் நிரம்பிய தொட்டியில் அல்லது பாலில், காபிக்குமேல் ஆறு அங்குலம் சரீரம் அமிழ்ந்திருக்குமாறு உட்காரச்செய்து, அதே க்வாதத்தை இளஞ்சூடாக இரு தோள்களிலும் தாரைபோல் விடவேண்டும். இவ்விதமே தைலத்தினாலும், பாலாலும், நெய்யாலும் ஸ்வேதசிகித்ஸை செய்யலாம். ஸ்நேஹங்களில் அமிழ்ந்து செய்யும் ஸ்வேதசிகித்ஸையை ஒன்று அல்லது இரண்டு நாள் இடையில் விட்டுவிட்டுச் செய்வது நலம். தைலம் முதலிய ஸ்நேஹவகைகளில் மூழ்கி ஸ்வேதம் செய்துகொண்டால், மயிர்க்கால்களாலும், வியர்வைகளின் மூலமாகவும், தமநிகள் மூலமாகவும் அந்த ஸ்நேஹங்கள் சரீரத்தினுள் வியாபித்து தேஹத்திற்கு வன்மைதரும். விருக்ஷத்தின் வேர்களில் ஊற்றிய ஜலத்தினால் இலைகளும் பூக்களும் செழித்து வளருவதுபோலவே, ஸ்நேஹத்தில் அமிழ்ந்து ஸ்வேதப் செம்து கொள்வதால் சரீரதாதுக்கள் விருத்தியடையும். வாதவிகாரங்களைப் போக்க இதினும் சிறந்த உபாயம் வேறில்லை. 28—33.

ஸ்வேத சிகித்ஸையை நிறுத்தும் ஸமயம்:—சைத்யமும், வலியும், அவயவப் பிடிப்பும், பாரமும் நீங்கி, அக்னி தீபனமுண்டாய், தேகமும் மிருதுவானால் ஸ்வேதசிகித்ஸையை நிறுத்திவிடவேண்டும். 34.

ஸ்வேத முடிவில் செய்யவேண்டிய காரியம்:—நன்கு ஸ்வேதசிகித்ஸை செய்து முடிந்ததும், சரீரந்தை நன்றாகப் பிடித்து விடவேண்டும். பிறகு உஷ்ணஜலத்தில் ஸ்நானம் செய்து, அபிஷ்யந்தியல்லாத ஆஹா

1. வெட்டிவேர், அகில், ஈச்வரமல்லி, ஆடாதோடை, கல்லுருவி, நெரிஞ்சி, ஞரழல், இக்கடகாயென்னும் ஒரு சிவந்த மூலிகை, மருதோன்றி, கருங்குறிஞ்சி, சீந்தில், சவுட்டுக்கோரை, சர்ப்பம், காவட்டம்புல், பேய்க்கரும்பு, பெருவாகை, விழுதி, வாடாக்குறிஞ்சி, உத்தாமணி, மருதை இவை வீரதாதி கணம் எனப்படும்.

ரத்தை மெதுவாகப் புஜிப்பது நலம். ஸ்வேத சிகித்ஸை செய்துகொண்டவன் உடனே வியாயமம் [1] செய்யக்கூடாது. 35.

மூன்றாம் அத்தியாயம்.

வமந விதி.

வமந விரேசநங்களுக்கேற்ற காலங்கள் :—சரத்ருது, வஸந்தருது, வர்ஷருது இக்காலங்களில் பிணியாளருக்கு விஷயமறிந்த வைத்தியர்கள் வமநம், விரேசநம் [2] இவற்றைச் செய்விக்கலாம். 1.

வமநத்திற்கு உரியவர் :—வலிவுள்ளவர், கபப்பிரகோபத்தால் வருந்துபவர், இருதயத்தைப்பற்றிய வியாதியினால் பீடிக்கப்படுபவர், வமநசிகித்ஸையை ஹிதமாகக் கொண்டவர், மனோநியமமுள்ளவர் இவ்வித மனிதர் அந்தந்த ரோகங்களில் வமந சிகித்ஸைக்கு உரியவராகின்றனர். 2.

வமநம் செய்வதற்கான வியாதிகள் :—விஷக் கோளாறுகள், ஸ்தன்ய ரோகம், அக்னிமாந்த்யம், யானைக்கால், அர்புதம், இருதயரோகம், குஷ்டம், விஸர்ப்பம், மேஹரோகம், அஜீர்ணம், தலைச்சுற்றல், விதாரிகா என்னும் சிலந்தி, அபசீ என்னும் புண், காஸம், ச்வாஸம், பீனஸம், அண்டவ்ருத்தி, அபஸ்மாரம், ஜ்வரம், உன்மாதம், இரத்தாதிஸாரம், நாஸாபாகம், தாடையிலுண்டாகும் புண், உதட்டிலுண்டாகும் புண், காதில் சீழ்வடிதல், உள்நாக்கு வீங்குதல், களசுண்டியென்னும் தொண்டைச் சிலந்தி, அதிஸாரம், பித்தரோகங்கள், கபரோகங்கள், மேதோரோகம், அருசி இந்த ரோகங்களில் வமநம் செய்விக்கலாம். 3—5½.

வமநத்திற்குத் தகாதவர்கள் :—திமிரமென்னும் நேத்ர வியாதி, குன்மம், மஹோதரம் முதலிய உதர வியாதிகள், தேகம் இளைத்துப்போதல், மிகவும் முதிர்ந்த வயது, கர்ப்பம் தரித்தல், மிகவும் ஸ்தூலித்த தேகம், க்ஷத காஸமென்னும் இரத்தகாஸம், வெறி அல்லது மதம், க்ருசசரீரம், பசி, உதார்த்தம், கஷ்டப்பட்டு வாந்திசெய்யும் நிலைமை, வாத தோஷத்தினாலேயே உண்டான கோளாறு, பாண்டுரோகம், க்ருமிரோகம், படிப்பதால் தொண்டை வறட்சியுறுதல் இவ்வியாதிகளால் வருந்துபவரும், நிரூஹ வஸ்தி [3] செய்துகொண்டவரும், சிறு குழந்தைகளும் வமநத்திற்கு உரியவரல்லர். 6—7½.

வமநத்திற்குத் தகாதவர்களில் சில விலக்கு :—ஆனால் பாண்டுரோகி, வயிற்றில் கிருமியிள்ளவன், படித்ததால் தொண்டை வறண்டவன் இவர்களுக்கு அஜீர்ணமும் தொடருமானால் அப்பொழுது விஷமுண்டவனுக்குச் செய்வது போலவே வமநம் செய்விக்கவேண்டியது அவசியமாம். 8½.

அதிமதுராக்வாதத்தினால் வமநம் :—பாண்டு ரோகம், கிருமி, தொண்டை வறட்சி இவ்வியாதிகளுள்ளவர்களுக்கும், வமநத்திற் குரிய விஷமுண்டவர் முதலியவருக்கும், கபப்பிரகோபத்தினால் வருந்துபவருக்கும் அதிமதுராத்தை க்வாதம் செய்து உட்கொள்ளக் கொடுத்து வமநம் செய்விக்கவேண்டும். 9.

---

1. வியாயமாம்—தேகவுழைப்பு.
2. வமநம்—வாந்தி செய்வித்தல்; விரேசநம்—மலத்தைத் திரவமாக்கி வெளிப்படுத்தும் சிகித்ஸை.
3. நிரூஹவஸ்தி—இந்த கண்டம் ஆறும் அத்தியாயம் பார்க்க.

பாலர் முதலிய·ஸுதமா தேஹிகளுக்கு ஏற்ற வமந முறை :—ஸுகுமாரதேஹிகள், சரீரம் மெலிந்தவர், பாலர், கிழவர், பயசாலிகள் இவர்களுக்கு வமநம் செய்விக்கக் கூடாது; ஆனால் அவசியமாக இருந்தால் யவாகூவையாவது, பாலையாவது, தயிரையாவது, மோரையாவது வயிறு நிரம்ப மேலே எதிர்த்து வரும்படி அதிகமாய் உட்கொள்ளச் செய்து வமநம் செய்விக்கலாம்; மேலும் வழக்கத்திலில்லாதவையும் கபத்தை விருத்தி செய்யத் தகுந்தவையுமான ஆஹாரபதார்த்தங்களைக் கொடுத்து நோயாளியின் சரீரத்தினுள் சேர்ந்திருக்கும் தோஷங்களை கல்லிவிட்டு, ஸ்நேஹ சிகித்ஸையும் ஸ்வேதசிகித்ஸையும் செய்துவைத்தபின் வமநம் செய்வித்தால் குடலிலிருந்து தோஷங்கள் நன்றாக வெளிவந்துவிடும் 10. 11.

வமநத்திற்கு உபயோகிக்கும் சாக்குகள் :—எவ்விதமான வமந சிகித்ஸைகளிலும் வமநமூண்டுபண்ண இந்துப்பு அல்லது தேன் உபயோகிக்கத் தகுந்ததாம். ஆனால் வமநம் சில ஸமயம் பார்க்க வழங்காத துன்பத்தைத் தரும்; அவ்வித வமந சிகித்ஸையை விரும்பாதவருக்கு அசற்கு மாறுகவிரேசநம் செய்விப்பது நலம். 12.

வமநத்திற்கு க்வாதம் பக்குவம் செய்யுமுறை :—க்வாதம் செய்வதற்கான வஸ்துக்கள் நான்கு பலமிருந்தால், அவற்றிற்கு ஓர் ஆடகம் ஜலம் சேர்த்து, அரைவாசி மிகும்படிக் காய்ச்சியெடுக்கவும். வமநசிகித்ஸைக்கு உபயோகிக்கக் கஷாயங்களைப் பெரும்பாலும் இவ்வாறே பக்குவம் செய்யவேண்டும். 13.

வமநத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்குப் பொது அளவு :—வமநத்திற்காக க்வாதங்களை உபயோகிக்க வேண்டுமானால் அதில் ஜ்யேஷ்ட மாத்திரை யென்றும், மத்யம மாத்திரை யென்றும், கநிஷ்டமாத்திரை யென்றும் மூன்று அளவுகள் உண்டு. [1] அவற்றுள் ஒன்பது பிரஸ்த்தம் அளவில் கொடுக்கப்படுவதை ஜ்யேஷ்ட மாத்திரை யெனவும், ஆறு பிரஸ்த்தம் அளவில் கொடுப்பதை மத்யம மாத்திரை யென்றும், மூன்று பிரஸ்த்தம் அளவில் கொடுப்பதை கநிஷ்ட மாத்திரை யென்றும் கூறுவர் மேலும் கல்கம், சூர்ணம், லேஹ்யம் இவற்றை வமநத்திற்காக உபயோகிக்க வேண்டுமானால், அவற்றிற்கு மூன்று பலம் ஜ்யேஷ்ட மாத்திரையாகவும், இரண்டு பலம் மத்யமமாத்திரையாகவும், ஒரு பலம் கநிஷ்ட மாத்திரையாகவும் கருதப்படும். இது வமநத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்கான பொதுப் பிரமாணமாகும். 14—15.

வமநாதிகளில் பிரஸ்த்தத்தின் பரிமாணம் :—வமநத்திற்காகவும், விரேசநத்திற்காகவும், இரக்தமோக்ஷணம் [2] செய்விப்பதற்காகவும் ஔஷதங்களுபயோகிப்பதற்கான அளவுகளில் பிரஸ்த்தம் என்கிற பரிமாணம் கூறப்

---

1. நடிப்பிராயமும் பலமும் வாய்ந்தவருக்குக் கொடுப்பது ஜ்யேஷ்ட மாத்திரை (பெரிய அளவு). குழந்தைகளுக்கும் தர்ப்பலர்களுக்கும்கொடுப்பது கநிஷ்ட மாத்திரை (சிறிய அளவு). மத்யம வயதினருக்கும் மத்யம பலமுள்ளவருக்கும் கொடுப்பது மத்யம மாத்திரை (மத்திம அளவு).
2. இரக்தமோக்ஷணம்—இரத்தத்தை நரிகளிலிருந்து குத்தி வெளிப்படுத்தல்.

படுமாஞல், அந்த பிரஸ்த்தம் பதின்மூன்றரைப் பலம் அளவுள்ளதெனக் கருதப்படுமாம்.[1] 16.

வமநத்திற்கான அளவுகள்:—மவநத்திற்காக ஔஷதமுட்கொண்ட வருக்கு எட்டு முறை வாந்தியாஞல் அல்லது பித்த நீர் வெளிப்படுமாஞல் அது உத்தம அளவென்றும், ஆறுமுறை வாந்தியாஞல் மத்யமமென்றும், நான்கு முறையாஞல் சிறிய (கனிஷ்ட) அளவெனவும் கூறப்படும். 17.

தனித்தனியே வாத பித்த கபங்களாலான வியாதிகளில் வமநத்திற் தரிய போருட்கள்:—கடுரஸமும் தீக்ஷ்ணகுணமுமுள்ள பதார்த்தங்களால் கப வியாதிகளிலும், மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய வஸ்துக்களால் பித்த வியாதிகளிலும், மிகவும் மதுரமும் இலவணமும் அம்லமும் உஷ்ண வீர்யமுமுள்ள பதார்த்தங்களால் கபம் வாயு இவற்றுலான வியாதிகளிலும் வமநம் செய்விக்கவேண்டும். 18.

கபம் முதலியவற்றுலான வியாதிகளுக்கேற்ற வமநௌஷதங்கள்:—(1) கபப்பிரகோபத்தில் அல்லது கபத்தினுலான வியாதியில் திப்பிலி, மருக்காரை, இந்துப்பு இவற்றைப் பொடித்து உஷ்ண ஜலத்தில் கூட்டி உட்கொள்ளலாம். (2) பித்தத்தினுலான வியாதிகளில் அல்லது பித்தப்பிர கோபத்தில் பேய்ப்புடல், ஆடாதோடை, வேம்பு இவற்றைக் குளிர்ந்த நீருடன் உபயோகிக்கலாம். (3) கபம் வாதம் இவ்விரண்டாலுமுண்டான வியாதிகளில் அல்லது அவ்விரண்டும் ஒரு மிக்க பிரகோபித்த நிலைமையில் மதன பலத்தைப் பாலுடன் பருகலாம். (4) அஜீர்ணத்தில் இந்துப்பை உஷ்ணஜலத்துடன் உட்கொண்டு வமநம் செய்யலாம். 19, 20.

வமநோப்சாரம்:—வமந சிகித்ஸைக்குரிய ரோகியை முழங்காலளவு உயரமுள்ள ஓர் ஆஸனத்தில் உட்காரச்செய்து, வமநத்திற்கான ஔஷதங் களை உட்கொள்ளப்பண்ணி, வைத்தியன் மெல்லிய ஆமணக்கந் தண்டினுல் ரோகியின் தொண்டையைப் பரிசித்து வாந்தி யுண்டாக்கலாம். வமநம் பண்ணும்போது அப்பிணியாளியின் கன்னங்களைப் பற்றிக்கொண்டு அவனுக்கு உத்ஸாஹ மூட்டவேண்டும். 21½.

துச்சர்த்தி:—வமநம் தருந்தவாறு செய்விக்கபடாமல் உள்ளே தங்கி யிருக்கும் தோஷங்கள் முற்றிலும் வெளிவராமற் போனுல் அப்பொழுது வாயில் நீர் சுரக்கும்; மார்பில் ஒருவித அடைப்பும், குடலில் அரிப்பு அல்லது வேதனையும் தோன்றும். இக்குறிகளால் வேண்டியவளவு வாந்தியுண்டாக வில்லை யென்றறியலாம். இது 'துச்சர்த்தி'[2] எனப்படும். 22.

அதிவமநம்:—மிதமிஞ்சி வாந்தி செய்யப்படுமாஞல் காவறட்சி, விக் கல், ஏப்பம், மயக்கம், நாக்குத்துவளல், கண் புரளுதல், முகவாய்க்கட்டைப் பிடிப்பு, இரத்தவாந்தி, உமிழ்நீர் அதிகமாயூரல், தொண்டைக்குள் வேதனை இக்குறிகள் ஸம்பவிக்கும். 23½.

அதிவமநத்தினுலான கோளாறுகளை விலக்கு முபாயம்:—வமநம் மித மிஞ்சி யுண்டாஞல் மிருதுவாக விரேசநமாக உபாயம் செய்ய வேண்டும். அதிக வமநத்தினுல் நாக்கு இழுக்கப்பட்டு சுருக்கங் கொண்டால் இருதயத் திற்கு வன்மை தருமாறு பக்குவம் செய்த ஸ்நிக்த்தமும் அம்லமும் இலவண

1. ஸாதாரணமாய் 16-பலங்கொண்டது ஒரு பிரஸ்த்தம்.
2. சர்த்தி—வாந்தி; துச்சர்த்தி-நன்கு வாந்தியாகாமை.

ரஸமுமுள்ள க்ருதம், பால், மாம்ஸ ரஸம் இவற்றுல் கபளக்ரஹம்[1] செய்ய வேண்டும்; ஆனுல் கபளக்ரஹம் செய்வதற்கு முன் புளிப்பான கனிகளைப் புஜிப்பது நலம்; நாக்கு வெளியில் தூவளுமாயின், எள் திராக்ஷை இவற் றைக் கல்கம் செய்து நாக்கில் தடவி, மெதுவாகச் சுருங்கி உட்செல்லுமாறு செய்ய வேண்டும். கண்கள் பிதுங்கவொட்டாமல் மெதுவாக நேத்ரங்களில் நெய் விட்டுக் கட்டலாம். முகவாய்க்கட்டையின் பிடிப்பு அல்லது தளர்ச்சி யில் ஸ்வேத சிகித்ஸையும், வாதரபங்களின் கோளாறுகளை யகற்றக் கூடிய நஸ்ய சிகித்ஸையும் செய்யலாம். வாந்தியில் இரத்தம் வருமாஞல் இரத்த பித்தத்திற்குக் கூறப்பட்டுள்ள சிகித்ஸை செய்வது நலம். மேலும் நெல்லிக்கனி, இரஸாஞ்ஜனம், வெட்டிவேர், நெற்பொரி, சந்தனக் குழம்பு இவற்றை மந்தமாகச்[2] செய்து, அதில் நெய், தேன், சர்க்கரை இவற்றையும் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம்; இதைப் பருகுவதால், அதிவமநத்தினு லான நாவறட்சி முதலிய உபத்திரவங்கள் நீங்கி விடும். 24—29.

முறைப்படி வாந்தியானதன் குறிகள்:—மார்பின் உட்புறம் அல்லது இருதயம், தொண்டை, சிரஸ் இவை சுத்தமாதல், நன்கு பசியெடுத்தல், சரீரத்திற்கு இலாகவமுண்டாதல், கப-பித்தங்கள் ஒழிதல் ஆகிய இவையே முறைப்படி வாந்தியானதன் குறிகளாகும். 30.

வமநத்திற்கான பத்தியம்:—முறைப்படி வாந்தியான பின்பு, பகற் பொழுது சாய்ந்ததும் அக்னி தீபநமுண்டாயிருப்பதை யறிந்து பயறு, காரிசி, சம்பா, இருதயத்திற்கு பலந்தரக்கூடிய மாம்ஸ ரஸம் இவற்றுல் யூஷம் செய்து ரோகிக்குக் கொடுக்கலாம். 31.

வமநத்தினுல் தீர்க்கக்கூடிய வியாதிகள்:—சோம்பல், அதிநித்திரை, வாயில் துர்நாற்றம், உடலில் அரிப்பு, கிரஹணி, விஷம் இவற்றுலுண்டா கும் நோய்களை நன்கு வமநம் செய்வதால் தீர்க்கக்கூடியவையாம். 32.

வமந சிகித்ஸையில் விலக்கவேண்டியவை:—அஜீர்ணமுண்டாகக் கூடிய உணவு, குளிர்ந்த ஜலம், வியாயாமம், புணர்ச்சி, தைலாப்யங்கம், அதிக சினமுண்டாதல் இவற்றை வமந சிகித்ஸை செய்து கொண்டவர் ஒரு நாள் மூடிய விலக்கவேண்டும். 33.

நான்காம் அத்தியாயம்

விரேசந விதி

விரேசநத்திற்கு முன் செய்யவேண்டிய சிகித்ஸை:—முதலில் ஸ்நே ஹங்களால் சரீரத்தை ஸ்நிக்த்தமாக்கி, பிறகு முறைப்படி ஸ்வேதம் செய் வித்து, வமநத்தையும் நிறைவேற்றி, பிறகு நன்கு விரேசநமும் செய்விக்க வேண்டும். வமநமின்றியே விரேசநம் செய்வித்தால், ஆமாசயத்திற்கு மேலுள்ள கபம் கீழ்நோக்கிச் சென்று கிரஹணி யென்னும் த்வாரத்தை மூடி விடும்; அல்லது அக்னிமாந்தியம், சரீரம் பாரமாயிருப்பது போன்ற கோளாறு, ஆஸனக் கடுப்பு இவை உண்டாகும். அல்லது பாசன ஔஷதங்க ளால் அபக்குவமான தோஷங்களையும், கபத்தையும் பக்குவம் செய்து,

1. கபளக்ரஹம் — இந்தகண்டத்தில் 10-வது அத்தியாயத்தில் இதைப்பற்றிய விவரங்களைப் பார்க்கவும்.
2. மந்தம்—83-ம் பக்கத்தைப் பார்க்க.

ஸ்நேஹ வர்க்கங்களால் சரீரத்தை ஸ்நிக்தமாக்கி, ஸ்வேத சிகித்ஸையும் செய்து, அப்பால் விரேசநமும் செய்விக்கலாம். 1—2½.

விரேசநத்திற்கேற்ற காலம்:—சரத் ருதுவிலும் வஸந்த ருதுவிலும் தேகம் சுத்தியாவதற்காக விரேசநம் செய்விப்பது நலம்; ஆனல் ஆபத்தான ஸமயங்களில் வேறு காலங்களிலும் விரேசநம் செய்விக்கலாம். 3½.

விரேசநம் செய்விக்கக் கூடிய கோளாறுகள்:—பித்தக் கோளாறுகள், ஆமதோஷ வியாதிகள், உதர ரோகங்கள், வயிற்றுப் பொருமல் இவற்றில் குடலைச் சுத்தம் செய்ய விரேசநம் செய்விக்கவேண்டும். 4½.

விரேசநத்தின் மேன்மை:—லங்கநம், பாசநம் என்கிற சிகித்ஸைகளால் தோஷங்கள் தணிந்தாலும் சில ஸமயம் அவை மீண்டும் பிரகோப மடையும்; விரேசநம் முதலிய சோதந சிகித்ஸைகளால் எவர் சுத்தம் செய்யப்படுகின்றனரோ அவர்களுக்கு அத்தோஷங்கள் மீண்டும் மேலெழுந்து தன்பம் விளைவிப்பதில்லை. 5½.

விரேசநத்திற்குத் தகாதவர்கள் :—அதிக வேலை முதலியவற்றால் களைப்புற்றவர், நாவறட்சியினல் கஷ்டப்படுபவர், ஸ்தூலதேஹிகள், கர்ப்பிணிகள், ஸவஜ்வரிகள், புதிதாகப் பிரஸவித்த ஸ்த்ரீ, அக்னிமாந்த்யமுள்ளவர், மதாத்யய ரோகிகள், சரீரத்தில் சல்யம் புகுந்து வருந்துபவர், ரூக்ஷதேஹிகள்[1] இவர்கள் விரேகத்திற்குத் தகாதவர்கள். 6—7½.

விரேகத்திற்குத் தகுந்த ரோகிகள் :—ஜீர்ண ஜ்வரிகளும்[2], க்ருத்ரிம விஷம் பரவிய சரீரமுடையவர்களும், வாதரக்தம், பகந்தரம், அர்சஸ், பாண்டு, உதரரோகம், கிரந்திகள், இருதயவியாதிகள், அரோசகம், யோநி ரோகம், பிரமேஹம், குன்மம், ப்லீஹரோகம், விரணங்கள், வித்ரதி, வாந்தி, கொப்புளங்கள், விஷூசி, குஷ்டம், காதுநோய், நாசியைப்பற்றிய ரோகம், சிரோரோகம், வாய்ப்புண் முதலிய முகத்தைப்பற்றிய நோய்கள், ஆண்குறி ஸம்பந்தமான வியாதிகள், நேத்ரரோகம், சோபையென்னும் சோகை, கிருமிரோகம், வாத தோஷம் கூஷீணித்தல், வயிற்றுவலி, மூத்ர அடைப்பு இவ்வியாதிகளால் வருந்துபவரும் விரேகத்திற்கு உரியவராவர். 8—11.

குடல்களின் குணபேதங்களும் விரேகம் செய்விக்க ஔஷத மாத்திரைகளும் :—எவருடைய குடலில் பித்தம் அதிகரித்திருக்குமோ அவர் மிருதுகோஷ்டிகள் என்றும், கபம் அதிகரித்திருக்குமானல் மத்யம கோஷ்டிகள் என்றும், வாதம் மேலிட்டு வறண்டிருந்தால் க்ரூரகோஷ்டிகள்[3] எனவும் கூறப்படுவர். இவர்களுள் க்ரூர கோஷ்டிகளுக்கு ஸாதாரண ஔஷதங்களால் விரேசந முண்டாக்குவது கடினம். மிருது கோஷ்டமுடையவருக்கு சிறிய அளவுகளிலும், மத்யம கோஷ்டமுள்ளவருக்கு மத்யமமான அளவுகளிலும், க்ரூர கோஷ்டிகளுக்குப் பெரிய அளவுகளிலும் ஔஷதங்களைப் பிரயோகிக்க வேண்டும்; அவ்வௌஷதச் சரக்குகளும்

1. ரூக்ஷதேஹிகள்—வறட்சியுள்ள சரீரமுடையவர்.

2. ஜீர்ண ஜ்வரி—ஆமஜ்வர நிலைமை நீங்கியவன்; நாட்பட்ட ஜ்வரத்தினல் வருந்துபவன் எனவும் கூறலாம்.

3. மிருது கோஷ்டிகள் :—இளகிய குடல் உடையவர்கள். மத்யம கோஷ்டிகள் :—அதிக இளகலுமல்லாமல் அதிக கடினமு மல்லாத குடல் உடையவர். க்ரூர கோஷ்டிகள் :—கற்குடலுள்ளவர்.

வீர்யத்தில் முறையே மிருது—மத்யமம்—தீக்ஷ்ணம் என்கிற குணங்களுள்ளவையாயிருப்பது அவசியம். 12, 13.

குடல்களின் தன்மைக்கேற்ற விரேகௌஷதங்கள் :—(1) மிருது கோஷ்டிகளுக்கு திராக்ஷை, பால், ஆமணக்கெண்ணெய் இவற்றாலேயே விரேசநமுண்டாகலாம். (2) மத்யம கோஷ்டிகளுக்குச் சிவதைவேர், கடுகரோகிணி, கொன்றை இவற்றால் விரேசநமுண்டாகும். (3) க்ரூர கோஷ்டிகளுக்குக் கள்ளிப்பால், கூகை நீறு, நேபாளம் முதலியவற்றால் தான் விரேசநமுண்டாகும். 14½.

விரேகத்தில் உத்தம மத்யம ஹீந யோகங்கள் :—மூப்பது முறை விரேசநமாய் இறுதியான விரேகத்தில் கபமும் வெளிவந்தால் அது உத்தம யோக மென்றும், இருபது முறை விரேசந மானல் அது மத்யம யோக மென்றும், பத்து முறை ஆனல் ஹீந யோகமென்றும் கூறப்படும். 15½.

விரேகத்திற்குக் கஷாயங்களின் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள்:—விரேகத்திற்காகக் கஷாயவகைகளை உபயோகித்தால் அவற்றை இரண்டு பலம் அளவில் உபயோகித்தால் உத்தம மாத்திரை யென்றும், ஒரு பலமானல் மத்யம மாத்திரை யென்றும், அரைப் பலமானல் ஹீந மாத்திரை யென்றும் கூறப்படும். 16½.

விரேகத்தில் கல்கம் முதலியவற்றின் அளவு :—கல்கங்கள், மோதகம் அல்லது குடிகைகள், சூர்ணங்கள் இவ்வுருவங்கொண்ட விரேசந ஔஷதங்களை வயது, வியாதி முதலியவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு கால் பலம் அளவிலோ, அரைப்பலம் அளவிலோ, ஒரு பலம் அளவிலோ உபயோகிக்கலாம். 17½.

வாதாதி தோஷங்களுக்கேற்ற விரேகௌஷதங்கள் :—பித்தம் பிரகோபித்து உண்டாகும் வியாதிகளில் விரேகத்திற்காகச் சிவதை வேரின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதம் முதலியதுடன் கலந்து உட்கொள்ளலாம். கபத்தினல் வருந்துபவன் த்ரிபலாக்வாதம் கோமூத்ரம் இவற்றுடன் த்ரிகடு சூர்ணத்தைச் சேர்த்துப் பருகலாம். சிவதை வேர், இந்துப்பு, சுக்கு இவற்றின் சூர்ணத்தை ஏதேனும் காடிகளுடனாவது, ஜாங்கலமாம்ஸ ரஸத்துடனாவது வாத வியாதிகளில் விரேகத்திற்காக உபயோகிக்கலாம். 18—19½.

எளிய விரேசநௌஷதம் :—ஆமணக்கெண்ணெயை அதற்கு இரு மடங்கு த்ரிபலாக்வாசத்துடனாவது, பாலுடனாவது கலந்து உட்கொண்டால் சீக்கிரத்தில் விரேசகமாகும். 20½.

அந்தந்த நதுக்களுக்கேற்ற விரேசநௌஷதங்கள் :—சிவதை வேர், வெட்பாலரிசி, திப்பிலி, சுக்கு இவற்றைப் பொடித்து திராக்ஷாதி க்வாதம், தேன் இவற்றில் கலந்து வர்ஷ நதுவில் விரேசந ஔஷதமாக உபயோகிக்கலாம். சிவதை வேர், காஞ்சொறி, கோரைக் கிழங்கு, சர்க்கரை, வெட்டிவேர், சந்தனம், அதிமதுரம் இவற்றின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதத்துடன் கூட்டி குளிரச் செய்து சாத்துநுவிலும், சிவதை வேர், சித்திரமூலம், வட்டத்திருப்பி, ஜீரகம், கருஞ்சிவதை, வசம்பு, கூகை நீறு இவற்றின் சூர்ணத்தை உஷ்ண ஜலத்தோடு ஹிமந்தநதுவிலும், திப்பிலி, சுக்கு, இந்துப்பு, சிவதை, கருஞ்சிவதை இவற்றின் சூர்ணத்தைத் தேனிற் கலந்து சிசிரநதுவிலும், வஸந்தநதுவிலும், சிவதை வேரைப் பொடித்து சர்க்

கரையுடன் ஸமபாகமாகக் கலந்து க்ரீஷ்ம ருதுவிலும் விரேசநத்திற்காக முறையே உட்கொள்ளலாம். 21—25.

அபயா மோதகம்:—கடுக்காய், மிளகு, சுக்கு, வாய்விடங்கம், நெல்லிப் பருப்பு, திப்பிலி, மோடி, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, கோரைக் கிழங்கு இவற்றைச் சமபாகமாகவும், வாளம் இரண்டு பங்கும், சிவதை வேர் எட்டு பங்கும் கூட்டி, நன்கு சூர்ணம் செய்து, ஆறு பங்கு சர்க்கரையும் கலந்து, தேன் கூட்டி கால் பலமெடையில் குளிகைகள் செய்து, ஒரு குளிகையை காலையில் குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்ள, நன்கு விரேசநமாகும். விரேசநம் குறைவாயிருந்தால் குளிர்ந்த ஜலத்தை மேன்மேலும் பருகலாம்; விரேசநம் அதிகமாஞல் உஷ்ண ஜலத்தைக் குடிக்க பேதி நின்றுவிடும். உணவுகளே புண்படுதிலும், பானங்களைப் பருகுவதிலும், மற்ற வேலை விளையாட்டுகளைச் செய்வதிலும் இவ்வௌஷத முபயோகிக்கையில் நியமமொன்றுமில்லை. இதஞல் விஷம ஜ்வரம், அக்னிமாந்தியம், பாண்டு, காஸம், பகந்தரம், அர்சஸ், குஷ்டம், குன்மம், களகண்டம், சலிச்சுற்றல். உதர ரோகங்கள், தேக அழற்சி, ப்லீஹ ரோகங்கள், மேஹம், க்ஷயம், நேத்திர வியாதிகள், வாத ரோகங்கள், வயிற்றுப் பொருமல், மூத்ரக்ருச்ரம், அச்மரி, முதுகுவலி, பக்கவலி, துடையிலுண்டாகும் நோய், இடுப்புவலி, வயிற்றுவலி இவை தீரும்; அவசியமான ஸமயங்களில் இதை யுபயோகித்துவர கிழத்தன்மையும் சீக்கிரமுண்டாகாது. 'அபயாமோதகம்' என்கிற இது சிறந்த ரஸாயனமாகவும் கருதப்படுகிறது. 26–32½.

விரேசநௌஷதமுட்கொண்டபின் செய்ய வேண்டிய விதி:—விரேசநத்திற்காக ஔஷத முட்கொண்டதும் குளிர்ந்த ஜலத்திஞல் கண்களைத் துடைத்துக்கொண்டு, சிறந்த பரிமளவஸ்துக்களைச் சிறிது முகர்ந்து, தாம்பூலம் தரிக்கலாம். அதிக காற்றோட்டமில்லாத பிரதேசத்தில் இருந்து கொண்டு, விரேசநமாகும்போலிருந்தால் அதை அடக்கிக்கொள்ளாமல் அப்போதைக்கப்போது மலபாதையை நிவ்ருத்தி செய்யவேணும்; படுத்துறங்காமலும் குளிர்ந்த ஜலம் பரிசிக்காமலுமிருப்பது நலம்; இளஞ் சூடான ஜலத்தை அடிக்கடி பருகலாம். வமந சிகித்ஸையில் கபமும், ஔஷதமும், பித்தமும், அப்பால் வாயுவும் முறையே வெளிவருவதுபோல, முறை தவறாத விரேகத்திலும் மலமும் பித்தமும், ஔஷதமும், அப்பால் கபமும் முறையே வெளிப்படும். 33—35½.

துர்விரேகக் குறிகளும் சிகித்ஸையும்:-தருந்த அளவு விரேகம் ஆகாமற் போஞல் அது 'துர்விரேகம்' எனப்படும். அப்பொழுது நாபியில் தடிப்பும், வயிற்றுவலியும், மலம், வாயு இவற்றின் சிக்கலும், குடல்களில் வேதனையும், தேகத்தில் தழும்புகளும், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும், தேக அழற்சியும், அரோசகமும், வயிற்றுப் பொருமலும், தலைச் சுற்றலும், வாந்தியும் உண்டாகும். இக்குறிகளுண்டானவனுக்கு பாசநகுணமுள்ள ஸ்நேஹ வர்க்கங்களால் வயிற்றிலுள்ள மலாதிகளைப் பக்குவம் செய்து, குடல்களை ஸ்நிக்தமாக்கி மீண்டும் விரேசநமாகும்படி உபாயம் செய்யவேண்டும். அவ்விதம் செய்ய அவ்வுபத்ரவங்கள் ஒழிந்து, அக்னி தீபனமுண்டாய், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும் தீர்ந்து ஸுகமுண்டாகும். 36—38.

அதிவிரேகத்தின் குறிகளும் சிகித்ஸையும்:—மூர்ச்சை, குதம் நழுவிப் போதல், வயிற்றுவலி, அதிக கபம் வெளி வருதல், மாம்ஸம் கழுவிய நீர் போன்றதும் கொழுப்பு அல்லது தண்ணீரைப் போன்றதுமான மலம் கழிதல், அல்லது இரத்தமே வெளிப்படுதல் என்னும் இவை மிதமிஞ்சிய விரேகத்திற்கு அறிகுறிகளாகும். அம்மனிதனுக்குச் சரீரத்தைக் குளிர்ந்த ஜலத்திஞல் துடைத்து, குளிர்ந்த அரிசி கழுவிய நீரையும் தேனையும் கலந்து குடிக்கச் செய்து, மெதுவாக வமநம் செய்விக்கவேண்டும். மாம்பட்டையைத் தயிர் சேர்த்தாவது காடி சேர்த்தாவது அரைத்து கல்கமாகச் செய்து, நாபியின் மேல் தடவிஞல் அதிகமாய் பேதியாவதைத் தடுக்கும். அல்லது வெள்ளாட்டுப் பால், விஷ்கிரமென்னும் வகுப்பைச் சேர்ந்த பக்ஷிகளுடைய மாம்ஸ ரஸம்,[1] அல்லது மானின் மாம்ஸரஸம் இவற்றில் ஏதேனுமொன்றுடன் சம்பா அரிசியிஞல் அல்லது காரிசியிஞலான அன்னத்தையாவது, சிறு கடலையைச் சமைத்தாவது கலந்து சிறிது புஜிக்கச் செய்யலாம். மேலும் க்ராஹியென்னும் குணத்திற் சிறந்தவையும் குளிர்ந்தவையுமான தகுந்த பதார்த்தங்களால் மலத்தைக் கட்டுவதற்கு வைத்தியன் உடனே முயல வேண்டும். 39—43.

முறைப்படி விரேகமானதின் குறிகளும் பிந்திய உபசாரங்களும்:—தேகம் இலகுவாகவும், மனது மிகத் தெளிவுற்றுமிருந்து, வாயுவும் அதற்குற்ற மார்க்கத்திஞல் கீழ்நோக்கி வருமாஞல் அப்பொழுது அப்பிணியாளிக்கு முறைப்படி விரேகமுண்டாய் ஸுகமுண்டானதாகக் கருதவேண்டும். அதன் பிறகு குடலில் மிகுந்துள்ள ஆம தோஷம் முதலியவற்றைப் பக்குவம் செய்ய பாசன ஔஷதங்களை இரவிற் பருகச் செய்வது நலம். 44.

விரேகத்தின் உபயோகம்:—விரேசநமாகும்படி அப்போதைக்கப் போது ஔஷத முபயோகித்து வருவதால் இந்த்ரியங்களுக்கு பலமும், புத்திக்குத் தெளிவும், அக்னி தீபனமும், தாதுக்களுக்கு வன்மையும், ஆயுளபிவிருத்தியும் உண்டாகும். 45.

விரேகௌஷத முபயோகித்தவர் விலக்க வேண்டியவை:—பெருங் காற்று வீசுமிடங்களில் இருப்பது, குளிர்ந்த ஜலம், தைலாப்யங்கம், அஜீர்ண முண்டாக்கும் உணவு, வியாயாமம், புணர்ச்சி இவற்றை விரேசநௌஷத முட்கொண்டவர் விலக்கவேண்டும். 46.

விரேகத்தில் பத்தியம்:—சம்பா அரிசி, காரிசி, பயறு இவை முதலியவற்றுல் பக்குவம் நெய்த யவாகூவென்னும் கஞ்சியை விரேகமான பின் உட்கொள்வது நலம்; அல்லது ஜாங்கலமாம்ஸ ரஸத்துடனுவது, விஷ்கிரமென்னும் பக்ஷியினங்களின் மாம்ஸ ரஸத்துடனுவது சம்பா அரிசியிஞலான அன்னத்தைக் கலந்து புஜிப்பது ஹிதமாகும். 47.

---

1 விஷ்கிரங்கள்:—லாவங்கள், விச்சுளி, குயில், செங்குருவி, சக்ரவாகப்புள், நிலாமுக்கி, அழுகுரல் பக்ஷி, தித்திரி, இராஜாளி, கோழி, கொக்கு முதலிய பக்ஷிகள் விஷ்கிர கணத்தைச் சேர்ந்தவையாம்.

ஐந்தாம் அத்தியாயம்
வஸ்தி விதி.

இரண்டுவித வஸ்திகள் :—'அநுவாஸநம்', 'நிரூஹம்' என்று வஸ்தி[1] இரு வகைப்படும்; ஸ்நேஹவர்க்கங்களால் செய்யப்படுவது 'அநுவாஸநவஸ்தி' என்றும், கஷாயம் பால் தைலம் முதலியவற்றைச் சேர்த்து செய்யப்படுவது 'நிரூஹவஸ்தி' என்றும் கூறப்படும். வஸ்தி யென்னும் உருப்பினால் செய்யப்படுவதால்[2] இச்சிகித்ஸை 'வஸ்தி' என்று வழங்கப் படுகின்றது. 1—2.

மூன்று வஸ்திகள் செய்யப்படும் க்ரமம் :—அவற்றுள் 'அநுவாஸந வஸ்தி' யென்பது முதலிற் கூறப்படும்; அதன் பிறகு 'நிரூஹவஸ்தி' விவரிக்கப்படும்; நிரூஹவஸ்திக்கு உத்தரத்தில்[3] செய்யக்கூடிய வஸ்தி யானது 'உத்தரவஸ்தி' என்று வழங்கப்படும். 3½.

மாத்ராவஸ்தி :—அநுவாஸந வஸ்தியிலேயே 'மாத்ராவஸ்தி'[4] யென் றொரு வஸ்தியுண்டு. 'மாத்ராவஸ்தி' யென்பது அவ்வஸ்திகர்மத்திற்காக உபயோகிக்கப்படும் ஔஷதங்களில் அல்லது செய்கைகளிலுள்ள பேதத்தி னால் ஏற்படுத்தப்படாமல், அவ்வௌஷதங்களின் அளவுகளிலுள்ள பேதத்தி னாலேயே ஏற்பட்டதாகும். அநுவாஸநவஸ்தியில் ஒன்று அல்லது இரண்டு பலம் அளவாகத் தைலம் முதலியது உபயோகிக்கப்படுமானால் அது 'மாத்ராவஸ்தி' எனப்படும். 4½.

அநுவாஸநத்திற்கு உரியவரும் தகாதவரும் :—(1) ரூக்ஷசரீரமும், மிதமிஞ்சிய பசியும், மிகவும் அதிகரித்த வாத தோஷமுமுடைய மனிதன் அநுவாஸந வஸ்திக்கு ஏற்றவனாவான். (2) குஷ்டரோகி, மேஹரோகி, ஸ்தூலித்த தேகமுடையவன், மஹோதரம் முதலிய உதரரோகங்களால் வருந்துபவன் இவர்கள் அநுவாஸநவஸ்திக்குத் தகாதவர்கள். 5½.

இரண்டு வஸ்திகளுக்கும் தகாதவர் :—அஜீர்ணம், உன்மாதம், நாவறட்சி, மனநோய், மூர்ச்சை, அரோசகம், பயம், ச்வாஸம், காஸம் இவற்றால் வருந்துபவர் ஆஸ்தாபநவஸ்தி[5] அநுவாஸந வஸ்தி இரண் டுக்கும் தகுந்தவரல்லர். 6½.

---

1. ஏதேனும் கருவியினால் ஆஸனத்வாரமூலமாய் தைலம் முதலிய வற்றைச் செலுத்தி குடலைக் கழுவுவதற்கான உபாயம் வஸ்தியெனப்படும்.

2. வஸ்தியென்று மூத்திரப்பைக்கு பெயர். [முற்காலங்களில் மிரு கங்களின் கனமான மூத்திரப் பைகளைப் பீச்சாங்குழல்களுக்குப் பதிலாக குதமார்க்கத்தினால் ஔஷதாதிகளைப் பீச்சிட உபயோகித்து வந்தனர்.]

3. உத்தரவஸ்தி—அநுவாஸநத்திற்கும் நிரூஹத்திற்கும் உத்தரத்தில் (பிறகு) செய்யப்படுவதால் இப்பெயர் வந்தது. இவ்வஸ்தி மூத்ர மார்க் கத்தையும் கருப்பையையும் சுத்தம் செய்ய உபயோகிக்கப்படுவது.

4. இரண்டு யாமங்களில் ஜீர்ணமாகக் கூடிய அளவில் ஸ்நேஹத்தை உபயோகித்துச் செய்யப்படுவது அல்லது ஒன்றரை பலமளவிலுபயோகிக் கப்படுவது மாத்ராவஸ்தி முறையென்று சிலரது கொள்கை.

5. ஆஸ்தாபநவஸ்தி— நிரூஹவஸ்திக்கே மற்றொரு பெயர். [இதையே கஷாயவஸ்தி யென்றும் கூறுவர். அவ்விதமே அநுவாஸநத் திற்கும் ஸ்நேஹவஸ்தியென்று பெயர் வழங்கப்படும்.]

நேத்திரத்தின் விவரணம் :—பொன் முதலிய லோஹங்களாலாவது, மரம் அல்லது மூங்கில் முதலிபவற்றாலாவது, த்வாரமுள்ள வேறுவித மான தண்டுகளாலாவது, தந்தத்தினாலாவது, மாடு முதலிய மிருகங்களின் கொம்பு முனைகளாலாவது, இரத்தினங்களாலாவது வஸ்தியில் சேர்ப்பதற் கான நேத்திரம்[1] செய்யப்படவேண்டும். ஒன்று முதல் ஆறு வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு உபயோகிப்பதற்கு நேத்திரம் ஆறு அங்கு லம் நீளமாகவும், அதற்குமேல் பன்னிரண்டு வயது வரையில் எட்டு அங்கு லம் நீளமாகவும், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமே பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும் செய்யப்பட்டவேண்டும். அவற்றில் ஆறு அங்குலமுள்ள நேத்திரத்திற்கு ஒரு பயறு புகும்படியாகவும், எட்டு அங்குலமுள்ள நேத்திரத்திற்குச் சிறு கடலை பிரவேசிக்கக் கூடியதாகவும், பன்னிரண்டு அங்குலமுள்ளதற்கு இலக்ஷங்கொட்டை நுழையும்படியும் த்வாரம் அமைக்கப்படவேண்டும். நேத்திரத்தை வழவழப்பாகவும், அடி பருத்து நுனி சிறுத்ததாகவும் செய்யவேண்டும். அவற்றின் அடி பாகம் பிணியாளியின் பெருவிரலளவாகவும், முனை சுண்டுவிரலளவாகவும், குளிகைபோல் சிறிது உருண்டு வழவழப்பான முகமுடையதாகவும் இருக்க வேண்டும். நேத்திரங்களின் அடிப்புறத்தில் நாலு பாகங்களுக்குமேல் ஒரு கணுவும், முனையில் நாலு பாகத்திற்குக் கீழ் ஒரு கணுவும் ஏற்படுத்தி, அவற்றின் அடிப்புறத்துக் கணுவரையில் வஸ்தியை நுழைத்து நன்றாகக் கட்டிவிடவும். 7—12.

வஸ்தி யென்னும் கருவிக்கான வஸ்துக்கள் :—மான், ஆடு, பசு, பன்றி, எருமைக்கிடா இவற்றுள் ஏதேனும் ஒரு மிருகத்தின் மூத்திரப் பையை யெடுத்து வஸ்தியென்னும் கருவிபாகச் செய்து கொள்ளலாம். அம் மூத்திரப்பை கிடைக்காவிடின், ஏதேனும் சர்மத்தினால் வஸ்தியை நிர் மித்துக்கொள்ளலாம். இதற்காக உபயோகிக்கப்படும் மூத்திரப்பை முதலியவற்றை முதலில் துவர்ப்பான வஸ்துக்களாலான கஷாயங்களில் தோய்த்து, ஒருவித வர்ணமும் நிஷ்நிஷ்பும் மெதுத்தன்மையும் வன்மையும் உண்டாகும் வண்ணம் பதன் செய்யவேண்டும். 13½.

விரணவஸ்தியின் நேத்திரம் :—விரணங்களைக் கழுவுவதற்கு உபயோக மாகும் வஸ்திக்கு எட்டு அங்குலம் நீளமுள்ளதும், வழவழப்பாயிருப்பது மான நேத்திரத்தை வஸ்தியில் இணைக்க வேண்டும்; அந்த நேத்திரம் கழு கென்னும் பக்ஷியினுடைய இறகுத்தாளின் பருமனுள்ளதாகவும், பயறு நுழையக்கூடிய த்வார முடையதாகவும் அமைக்கப்படவேண்டும். 14½.

வஸ்தியின் மஹிமை :—வஸ்தியை முறை தவறாமல் உபயோகித்து வந் தால் சரீரம் செழித்து வளரும்; அழகிய நிறங்கொள்ளும்; தேகம் வன்மை யடைந்து, ஆரோக்கியம் விருத்தியாய், ஆயுளும் வளரும். 15½.

அநுவாஸநத்திற் கேற்ற காலங்கள் :—வஸந்தகாலத்தில் ஸாயங்கால வேளையில் அநுவாஸநவஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். க்ரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது இவற்றில் இராத்ரி காலங்களில் அதைப் பிரயோகிப் பது உசிதமாம். 16½.

---

1. நேத்திரம்—தோல் அல்லது மூத்திரப்பையாலான வஸ்தியில் இணைக்கப்பட்டு, குதத்தினுள் பிரவேசிப்பித்து மருந்துகளைப் பீச்சிடுவதற்கு உபயோகமான குழல்.

முறைதவறிய அநுவாஸநத்தினுலான தீங்குகள் :—மிகவும் எண்ணெய்ப் பசையுள்ள உணவுகளைப் புஜிக்கச் செய்து அநுவாஸநம் செய்விக்கக் கூடாது; இரண்டு முறையாக ஸ்நேஹநங்களை யுபயோகிப்பதால் [1] மனிதனுக்கு ஒருவித வெறியும் மூர்ச்சையும் உண்டாகக்கூடும். அதிக ரூக்ஷமான உணவுகளை யுண்டவனுக்கும் உடனே அநுவாஸநம் செய்தால் சரீர வன்மையும் நிறமும் குறையும். அநுவாஸந வஸ்தியையாவது நிரூஹ வஸ்தியையாவது குறைந்த அளவில் செய்தால், அவை போதுமாறு பயன் படமாட்டா. அளவு மிஞ்சி உபயோகித்தால், அவ்வஸ்திகளால் வயிற்றுப் பொருமல், சோர்வு, அதிஸாரம் இக்கோளாறுகளுண்டாகும். 17—19.

அநுவாஸநத்தில் உத்தம மத்யம ஹ்ரீநமாத்திரைகள் :—அநுவாஸனத்தில் ஸ்நேஹநம் முதலியபற்றை ஆறு பலம் அளவில் உபயோகித்தால் 'உத்தம மாத்திரை' யென்றும், மூன்று பலமாளுல் 'மத்யம மாத்திரை' யென்றும், ஒன்றரைப் பலமளவாயின் 'ஹ்ரீநமாத்திரை' யென்றும் கருதப்படும். 20.

சதாஹ்வா தைல விரேகமும் அநுவாஸநத்திற்கேற்ற நிலைமையும் :—சதகுப்பி, இந்துப்பு இவற்றைச் சூர்ணம் செய்து எண்ணெயில் சேர்த்து, வஸ்தி செய்வதற்கு முன் விரேசநமாவதற்காகக் கொடுக்கவேண்டும். அச் சூர்ணத்தை உத்தமமாத்திரையில் ஆறு மாஷமும், மத்யமமாத்திரையில் நான்கு மாஷமும், ஹ்ரீநமாத்திரையில் இரண்டு மாஷ எடையும் எண்ணெயிற் சேர்த்து உபயோகிக்கவேண்டும். இதையுபயோகித்து விரேசநமான பின்பு ஏழு நாட்கள் சென்றதும், சரீரத்தில் பலமும் சிறிது உண்டாயிருந்தால், அநுவாஸநத்திற்கு ஏற்ற மற்ற நிலைமைகளையும் பெற்ற மனிதருக்கு ஆஹாரமுட்கொண்டபின் அவ்வஸ்தியைச் செய்யவேண்டும். 21, 22.

அநுவாஸநம் செய்யவேண்டிய முறை :—அப்பால், அநுவாஸந வஸ்திக்குரிய மனிதனுக்கு முதலில் அப்யங்கம் செய்வித்து, உஷ்ண ஜலத்தினுல் ஸ்வேதமுண்டாக்கி, விதிப்படி போஜனமும் செய்வித்து, சிறிது இங்குமங்கும் உலாவி வரச்செய்து, அபானவாயு மலம் மூத்திரம் இவற்றை வெளியிடப்பண்ணி, பிறகு ஸ்நேஹ வஸ்தியைச் செய்யவேண்டும். இடது புறம் சாய்ந்து, இடது காலை நீட்டி மற்றொரு காலை மடக்கியவாறு பிணியாளியைப் படுக்கச்செய்து, குதத்தில் சிறிது எண்ணெயைத் தடவி, வஸ்தியின் நேத்திரத்தை மெதுவாக குதத்தினுள் செலுத்தவேண்டும். இதற்காக முன்பாகவே வஸ்தியையும் நேத்திரத்தையும் நன்றாக நூலேக்கொண்டு இணைத்துக் கட்டி ஆயத்தமாய் வைத்துக்கொள்வது அவசியம். வஸ்தியினுள் ஸ்நேஹத்தை ஊற்றி, வைத்தியன் தனது இடது கையால் நேத்திரத்தைப் பிடித்து பிணியாளியின் குதத்திற்குள் செலுத்தி, மற்றொரு கையால் வஸ்தியென்னும் பையைச் சிறிது வேகமாக அழுத்தவேண்டும். வஸ்தியைச் செய்து

1. எண்ணெய்ப் பசையுள்ள உணவுகள் ஒரு ஸ்நேஹமாகவும், அநுவாஸநத்தில் பிரயோகிக்கப்படுவது மற்றொரு வகையான ஸ்நேஹமாகவும் இருப்பதால் இரண்டுவித ஸ்நேஹங்கள் என்று குறிக்கப்பட்டதாம்.

2. மூப்பது மாத்திரைகள்—சற்றேறக்குறைய மூப்பது விநாடிகள். [முழங்காலேக்சுற்றிலும் சுடிக்கைப் போட்டுக்கொண்டே மெதுவாகக் கையானது ஒருமுறை சுழன்றுவர எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் ஒருமாத்திரை என்று கூறப்படுகிறது.]

கொண்டிருக்கையில் கொட்டாவி, இருமல், தும்மல் இவை வராமல் அமைதியாயிருந்து மூப்பது மாத்திரைகள் கொண்ட காலத்தில் ஒரு முறை வஸ்தியைச்செய்து முடிக்கவேண்டும். இவ்விதம் ஸ்நேஹத்தை உட்செலுத்தியபின், அப்பிணியாளி மல்லாந்து சயனித்தவாறு சற்றேறக் குறைய நூறு எண்ணிக் கைகள் எண்ணும் வரையில் அசையாமலிருக்கவேண்டும். நோயாளியை உடலினத்தையும் நன்றாக நீட்டிக்கொண்டு படுக்கச்செய்து, அவனுடைய இரு கால்களையும் மூன்று முறை மெதுவாக மடக்கி பூமியின் மீது உதைக்கச் சொல்லவேண்டும்; இடுப்புக்குக் கீழும் இடுப்பின் இரு புறங்களிலும் தட்டிக்கொடுத்து, படுக்கையின்மேல் இடுப்பைத் தூக்கித் தூக்கி அசைக்கச் செய்வது நலம்; இதனுல் ஸ்நேஹம் சரீரத்தில் வியாபிப்பதுமல்லாமல், குடலிலிருந்து மலங்களும் எளிதாகக் கழிய வகையுண்டாகும். இவ்விதம் வஸ்தி செய்து முடிந்த பின்னர், நோயாளி தன் விருப்பப்படி ஸுகமாக நித்திரை செய்யலாம். 23—30.

அநுவாஸநம் நன்கு நிறைவேறியதன் குறிகள்:—வஸ்தியினுல் பிரயோகித்த ஸ்நேஹம் அபானவாயுவோடும் மலத்தோடும் கலந்து கஷ்டமுண்டுபண்ணுமல் சீக்கிரம் வெளிவந்தால் அநுவாஸநம் நன்கு நிறைவேறியதாகக் கருதப்படலாம். 31.

அநுவாஸநத்திற்குப் பிறகு கொடுக்கத்தகுந்த உணவு:—முன்னுல் புஜித்த ஆஹாரம் நன்கு ஜீர்ணமாய், வஸ்தியின் மூலமாய்ப் பிரயோகித்த ஸ்நேஹம் முதலியது வெளிவந்த பிறகு மாலை நேரத்தில் பசியும் நன்கு உண்டாயிருந்தால், அவனுக்கு மறுபடியும் இலகுவான ஆஹாரத்தை வேண்டியளவு கொடுக்கலாம். 32.

ஸ்நேஹம் தடலில் தங்கி கெடுதி செய்யாமலிருக்க உபாயம்:—அநுவாஸநவஸ்தி செய்து கொண்டவனுக்கு மறுநாள் இளஞ்சூடான ஜலத்தையாவது, கொத்தமல்லி விதை சுக்கு இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சிய கஷாய ஜலத்தையாவது உட்கொள்ளக் கொடுப்பது நலம்; இவ்விதம் செய்வதால் வஸ்தியினுற் செலுத்திய ஸ்நேஹத்தில் எதேனும் சிறிது பாகம் குடலில் தங்கிக் கெடுதி செய்யாமலிருக்கும். 33.

எத்தனை முறை அநுவாஸநம் செய்ய வேண்டும்?:—மேற் கூறிய முறைப்படி ஆறு முறையோ, ஏழு முறையோ, எட்டு முறையோ, ஒன்பது முறையோ ஸ்நேஹவஸ்தியைச் செய்யலாம்; ஆனுல் ஒவ்வொரு முறை அனுவாஸநம் செய்ததும் இடையில் அப்போதைக் கப்போது நிருஹவஸ்தியைச் செய்து வரவேண்டும். 34.

ஒவ்வொரு ஸ்நேஹ வஸ்தியினுலும் ஏற்படும் குணங்கள்: —முதலிற் செய்யப்படும் வஸ்தியினுல் தடைகளின் இடையிலுள்ள பாகங்களும், மூத்திரப்பையும் ஸ்நிக்தமாகின்றன. இரண்டாவது முறையும் வஸ்தியை நன்றாகச் செய்து முடித்தால் சிரஸ்ஸைப் பற்றியுள்ள வாததோஷம் தீரும். மூன்று முறை உபயோகித்த வஸ்தியினுல் பலமும் தேகநிறமும் விருத்தியாகும். நான்காம் முறையும் ஐந்தாம் முறையும் பிரயோகித்த வஸ்திகளால் இரஸம், இரத்தம் என்னும் இரண்டு தாதுக்களும் ஸ்நிக்தமாகும். ஆறும் வஸ்தியினுல் மாம்ஸமும், ஏழாம் வஸ்தியினுல் மேதஸ்ஸும், எட்டாம் ஒன்பதாம் வஸ்திகளால் முறையே எலும்பும் மஜ்ஜாதாதுவும் ஸ்நிக்தமாகும். இவ்விதமாகவே மீண்டும் ஒன்பது தடவை ஸ்நேஹ வஸ்தியைப் பிரயோகித்

தால் சுக்லத்திலுள்ள தோஷங்களையும் நன்முகப் போக்கி விடலாம். இங்ஙனம் முன்னூற்று இருபத்திஞலு முறை இவ்வஸ்தியைச் செய்துகொள்பவர், ஒரு யானைக்குண்டான வன்மையைப் பெறுவரென்றும், குதிரை முதலியவைகளை வென்று அடக்கும் சக்தியைப் பெறுவரென்றும், தேவதைகளுக்கேற்ற தேஜஸ்ஸை அடைவரென்றும் கருதப்படுகிறது. 35-38½.

தினந்தோறும் அநுவாஸந நிருஹங்களுக்கு உரியவர் :—வாதம் மிகவும் அதிகரித்து, ரூக்ஷத்தன்மை மேலோங்கியுமுள்ள சரீரமுடையவருக்கு நாள் தோறும் வைத்தியன் அநுவாஸந வஸ்தியைக் கொடுத்து வரலாம். இதற்கு மாருக கபம் அதிகரித்தும், ஸ்நிக்தத் தன்மை மேலோங்கியுமிருக்கின்ற தேகமுள்ளவர்களுக்கு நிருஹ வஸ்தியை அவ்விதமே செய்ய வேண்டும். 39½.

நீடித்த காலம் அநுவாஸநத்திற் குரியவர்:—ரூக்ஷதேகிகளுக்கு ஹ்ரஸ்வ மாத்திரையில் ஸ்நேஹ வஸ்தியை வெகு நாட்கள் செய்து வருவது நலம். அவ்விதமே மிகவும் ஸ்நிக்தமான மனிதருக்கு ஹ்ரஸ்வமாத்திரையில் கஷாய வஸ்தி செய்து வருவது நலம். மேலும் எவருக்கு ஸ்நேஹவஸ்தியைச் செய்ததும் உடனே அந்த ஸ்நேஹம் அப்படியே வெளிப்படுமோ அவனுக்கு மறுபடியும் அப்பொழுதே சிறிய அளவில் அநுவாஸந வஸ்தியைப் பிரயோகிப்பது அவசியம்; ஒருவருடைய சரீரம் மிக ஸ்நிக்தமாயிருந்தால் அவர் உடலில் ஸ்நேஹம் தங்காமலிருப்பது இயல்பு. 40—41½.

அநுவாஸநத்தினுல் மலம் சுத்தியாகாவிடில் செய்யக் கூடிய பரிஹாரம் :—அசுத்தமான மனிதனுக்கு அநுவாஸநம் செய்தும், உட்செலுத்திய ஸ்நேஹம் மலங்களுடன் வெளி வராமற்போனுல், சரீரம் சோர்வுறுதல், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, பெருமூச்செறிதல், பக்வாசயமென்னும் சிறுகுடலுக்குள் பாரமான உணர்ச்சி இவை உண்டாகும்; அப்பொழுது தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களாலான பலவர்த்தியையாவது[1] குதத்தில் செலுத்தலாம். அபாநவாயு, மலம், உட்செலுத்திய ஸ்நேஹம் இவை கீழ் நோக்கி வெளிவருமாறு தீக்ஷ்ண நஸ்யமும் விரேசநமும் பிரயோகிப்பது நலம். வஸ்தியினுல் செலுத்திய ஸ்நேஹம் எவருக்கு வெளி வராமலிருந்தும் ஒருவித கெடுதியையும் செய்வதில்லையோ, அவருக்கு சரீரம் ரூக்ஷமாயிருப்பதாகவும் காணப்பட்டால், அந்த ஸ்நேஹத்தை வெளிப்படுத்த முயற்சி அவசியமில்லை; சரீரம் மிக ரூக்ஷமாயிருந்தால் உட்செலுத்திய ஸ்நேஹம் அனேத்துமோ ஒரு பகுதியோ உடலில் ஊறிவிடுவது இயல்பு. ஸாதாரணமாய் மற்றவருக்கு வஸ்தியினுல் செலுத்திய ஸ்நேஹம் ஒரு நாள் முடிய வெளிவராமலிருப்பின் மறுநாள் விரேகம் முதலிய சோதந சிகித்ஸையினுல் அந்த ஸ்நேஹத்தை வெளிப்படுத்திவிடவேண்டும். ஆனுல் ஸ்நேஹ வஸ்தியில் முதலிற் பிரயோகித்த ஸ்நேஹம் வெளிவராமலிருந்தால் மறுபடியும் ஸ்நேஹத்தைக்கொண்டே சோதநம் செய்வது பிசகு. 42—46½.

தூர்ச்சியாதி தைலம் :—சிந்திற்கொடி, ஆமணக்கு, புங்கு, கண்டுபாரங்கி, ஆடாதோடை, காவட்டம்புல், தண்ணீர்விட்டான். மருதோன்றி, சிறுகோவை இவை ஒவ்வொரு பலம்; யவதானீயம், உளுந்து, ஆளிவிதை,

1. பலவர்த்தி—மருக்காரை யென்னும் மதனபலம் முதலியவற்றுல் செய்யப்படும் சிறிது நீண்ட குளிகை; இவ்வித வர்த்திகளை குதத்தில் செலுத்தினுல் உடனே மலங்கள் வெளியிற் கழியும். இதற்கு குதவர்த்தி என்றும் பெயர்.

இலந்தங்கொட்டை, கொள் இவை இரண்டு இரண்டு பலம்; இவற்றை காலு திரோணம் நீரில் சேர்த்து ஒரு திரோணமாகச் சுண்டக் காய்ச்சி, அதில் ஒரு ஆடகம் தைலம் கூட்டி, ஜீவநீயகண பதார்த்தங்களை அதில் கல்கமாக இடித்துச் சேர்த்து பக்குவம் செய்யவும்; ஸகல வாதரோகங்களிலும் அநுவாஸநவஸ்தி செய்வதற்கு இத்தைலம் ஏற்றது. 47—49½.

முறைதவறின அநுவாஸநத்தினுலுண்டாகும் தீங்குகள் :—வஸ்தி கர்மம் முறைப்படி நிறைவேறுமற்போனுல், எழுபத்தாறு வித தீங்குகள்[1]

1. அநுவாஸந தோஷங்கள் எழுபத்தாறு :—வஸ்தியினுடைய நேத்திரம் ஒழுங்கீனமாயிருப்பதாலான கெடுதிகள் பதினேன்று :—(1) மிகப் பருமன், (2) மிகக் கடினம், (3) வக்ரித் தன்மை, (4) மிக மெல்லிதாயிருத்தல், (5) பிளந்திரித்தல், (6) கர்ணிகை யென்னும் கட்டு அருகில் இருத்தல், (7) அது தூரத்திலிருத்தல், (8) மெல்லிய த்வாரம், (9) வெகு விசாலமான த்வாரம், (10) மிகவும் நீண்டிருத்தல், (11) மிகவும் குறுகியிருத்தல். நேத்திரம் உட்செல்லுகையில் கெடுதி ஆறு. (1) அசைதல், (2) புரளல், பாரிசத்திற் பொத்துதல், (4) குறுக்காகப் பாய்தல், (5) குதத்தின் அடிப்புறத்தைத் தாக்கல், (6) அதன் மேற்புறத்தைத் தாக்கல். வஸ்தி தோஷங்கள் ஐந்து—(1)மிகப் பெரிது, (2) மிகச் சிறிது, (3) தகாதவிடங்களில் த்வாரமுள்ளது, (4) மிக வீரிக்கது, (5) நன்கு கட்டிமுடியாதது. வஸ்தியை அமுக்குவதில் கெடுதி நான்கு—(1) வெகு பலமாய் அமுத்தல், (2) வெகு மெல்லென அமுத்தல், (3) அடிக்கடியும் மெல்ல அமுத்தல், (4) தாமதித்து அமுத்தல். திரவ்யங்களைப்பற்றிய தோஷங்கள் பதினேன்று. (1) பக்வமாகாதவை, (2) அளவிற் குறைந்தவை, (3) அளவில் மிகவும் அதிகமானவை, (4) மிகக் குளிர்ந்தவை, (5) மிகச் சூடானவை, (6) மிகவும் தீக்ஷ்ணமானவை, (7) மிகக் குறைந்த வீர்யமுள்ளவை, (8) மிக்க ஸ்நிக்தமானவை, (9) மிக ரூக்ஷமானவை, (10) மிகவும் கனமானவை, (11) மிகத்திரவமானவை. சயனத்தினுலுண்டாகும் தோஷங்கள் ஏழு—(1) தலை கவிழ்ந்துப் படுத்தல், (2) தலையை நிமிர்ந்துப் படுத்தல், (3) கூனிக் கொண்டு படுத்தல், (4) உட்கார்ந்திருத்தல், (5) உடலை வளைத்துப் படுத்தல், (6) தலை தாழ்ந்து இடுப்பு உயர்ந்திருத்தல், (7) வலது புறமாக ஒருச்சாய்ந்துப் படுத்தல். இத்த 44 கோளாறுகளும் வைத்தியருடைய கவனக்குறைவால் நேரிடக் கூடியவை. நோயாளியின் முறைதவறின செய்கைகளால் பதினேந்து தோஷங்களுமுண்டு—(1) சரீரத்திற்கு ஆயாஸமுண்டாக்கிக் கொள்ளுதல், (2) மனவருத்தப்படுதல், (3) புணர்ச்சி, (4) பகலில் நித்திரை யுறுதல், (5) உரத்துப் பேசுதல், (6) வாஹனங்களில் ஏறிச் செல்லுதல், (7) வெகு நேரம் உட்கார்ந்திருத்தல், (8) ஸ்நானம் செய்தல், (9) அதிகமாய் நடமாடுதல், (10) குளிர்ந்த ஜலத்தை யுபயோகித்தல், (11) அபத்திய உணவுகளைப் புஜித்தல், (12) வழக்கமில்லாத போஜனங்களை யுபயோகித்தல், (13) காற்றுக்கு எதிரிலிருத்தல், (14) வெயிலில் தங்குதல், (15) அமிதமாக உண்பது. வைத்தியர் பிணியாளி இருவருடையவும் அஜாக்கிரதையினுல் உண்டாகக்கூடிய தோஷங்கள் பத்து—(1) வாதம் கோளாறடைதல், (2) பித்தம் கோளாறடைதல், (3) கபம் கோளாறடைதல், (4) ஆஹார தோஷத்தினுல் அநுவாஸநம் விகாரமுறுதல், (5) மலம் சிக்கிக்கொள்ளுதல், (6) ஸ்நேஹம் குடலுக்குள் வெகுநேரம் பிரவேசித்தல், (7) ஸ்வேத சிந்தி

ஸம்பவிக்கும். அக்கோளாறுகளுக்கு ஸுச்ருத ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கும் உபாயங்களை அநுஸரித்து [1] சிகித்ஸை செய்யவேண்டும். 50½.

அநுவாஸநத்திற்குப் பிறகு அன்னபாநாதிகளின் முறை :—அநுவாஸநம் முடிந்ததும் பாநம், ஆஹாரம், விஹாரம் இவற்றையும் மற்றும் பரிஹரிக்க வேண்டியவைகளையும் ஸ்நேஹபான விதியில் கூறப்பட்டுள்ள விதமாகவே ஸந்தேஹமின்றி நிறைவேற்றி விடலாம். 51½.

ஆறும் அத்தியாயம்

நிரூஹவஸ்தி விதி.

நிரூஹம் அல்லது ஆஸ்த்தாபந வஸ்தியும் அதன் பேதங்களும் :—அநேக முகாந்தரங்களைக் கொண்டு 'நிரூஹவஸ்தி' பலவிதமாகப் பிரிக்கப்பட்டு அததற்கேற்றவாறு முனிவர்கள் பெயர்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். நிரூஹத்திற்கே 'ஆஸ்த்தாபநம்' என்று மற்றொரு பெயருண்டு; கோளாறடைந்த தோஷங்களையும் தாதுக்களையும் மீண்டும் அததற்குள்ள ஸ்த்தாநங்களில் ஸ்த்தாபிக்கும் தன்மை இவ்வஸ்திக்கு உண்டானதால் இது ஆஸ்த்தாபநம் என்று வழங்கப்படுகிறது. 1—2.

நிரூஹத்தில் கஷாயாதிகளின் அளவுகளுக்குப் போது விதி :—நிரூஹவஸ்தியில் ஒன்றேகால் பிரஸ்த்தமளவில் கஷாயம் முதலியவற்றை உட்செலுத்தினால் அது உத்தம மாத்திரை யென்றும், ஒரு பிரஸ்த்தமளவு உட்செலுத்தினால் அது மத்யம மாத்திரை யென்றும், மூன்று குடவப்பிரமாணம் செலுத்தினால் ஹீநமாத்திரை யென்றும் கருதப்படும். 3.

நிரூஹவஸ்தி கூடாதவர்கள் :—மிகவும் ஸ்நிக்த்தமான தேகமுடையவர், குடல் முதலியவற்றில் கல்லிவிடப்பெற்ற தோஷங்களுடன் கூடியவர், உரஸ்தோஷி, இளைத்துப்போனவர், வயிற்றுப்பொருமல், வாந்தி, அர்சஸ், இருமல், ச்வாஸம், குதத்தின் வீக்கம், அதிஸாரம், விஷூசி, குஷ்டம், மதுமேஹம், ஜலோதரம் இவற்றால் பீடிக்கப்படுபவரும், கர்ப்பிணியும், ஆஸ்த்தாபநவஸ்திக்கு உற்றவராகார். 4—5.

நிரூஹத்திற்கு உரியவர் :—வாதரோகங்கள், உதாவர்த்தம், வாதரக்தம், விஷமஜ்வரம், மூர்ச்சை, நாவறட்சி, மஹோதரம் முதலிய வயிற்றைப் பற்றிய நோய்கள், வயிறு வீக்கம், மூத்ரக்ருச்சிரம், அச்மரி, அண்டவ்ருத்தி, பெரும்பாடு, அக்னிமாந்த்யம், பிரமேஹம், சூலை, அம்லபித்தம், இருதய

ஸையில்லாமல் அநுவாஸநம் செய்தல், (8) உடல் குளிர்ச்சியாயிருப்பது, (9) பட்டிணியாயிருப்பவனுக்கு அநுவாஸநம் செய்தல், (10) மிகவும் சொற்ப அளவில் புஜித்தவனுக்கு அநுவாஸநம் செய்தல். வைத்தியருடைய கவனக்குறைவாலுண்டாகும் தோஷங்கள் இன்னும் ஏழு உண்டு. (1) வேண்டியளவு அநுவாஸநம் செய்யாமை, (2) வயிற்றுப்பொருமல், (3) ஆஸனக் கடுப்பு, (4) ஆஸன த்வாரத்திலிருந்து ஏதேனும் தோஷமுள்ள திரவம் கசிதல், (5) வயிற்றுக் கடுப்பு, (6) ஹ்ருதயம் படபடத்து அடித்தல், (7) உடற்பிடிப்பு. இவை முறைதவறுன 76 தோஷங்கள்.

1. ஸுச்ருத ஸம்ஹிதை சிகித்ஸா ஸ்த்தாநம் 'நேத்ரவஸ்திவ்யாபத் சிகித்ஸை' என்னும் அத்தியாயம் பார்க்கலாம்.

ரோகம் இவ்வியாதிகளில் விஷயமுணர்ந்த வைத்தியர் விதிப்படி நிரூஹவஸ்தியைச் செய்யலாம். 6—7.

நிரூஹம் செய்யும் க்ரமம்:—மல-மூத்ர-வாயுக்கள் நன்கு வெளியான பிறகு, ஸ்நேஹகர்மங்களாலும் ஸ்வேதவிதிகளாலும் சரீரத்தை முதலில் மிருதுவாகச் செய்து, போஜனத்திற்கு முன்பாகவே நடுப்பகலில், பிணியாளியை வீட்டிற்குள் இருக்கச் செய்து, அநுவாஸநவஸ்தியைப் போலவே அவரவருடைய நிலைமைக்கும் வியாதிகளுக்கும் தகுந்தவாறு நிரூஹவஸ்தியைச் செய்துமுடித்து, உட்செலுத்திய ஔஷதமும் மலமும் வெளியாவதற்காக ஒரு முகூர்த்த நேரம் சுகாஸனமாக உட்கார்ந்திருக்கவேண்டும். அதற்குள் மலம் முதலியது வெளிப்படாமற்போனால் மலத்தை வெளிப்படுத்துங்குணமுள்ள க்ஷாரங்கள், பசு மூத்திரம், புளிப்பான பதார்த்தங்கள், இந்துப்பு இவற்றைக்கொண்டு மறுபடியும் நிரூஹம் செய்தே அவற்றை வெளிப்படுத்த வேண்டும். 8—10½.

நிரூஹம் நன்கு நிறைவேறியதற்கும் நிறைவேறாததற்கும் குறிகள் :—(1) எவருக்கு முதலில் மலமும், பிறகு பித்தமும், அப்பால் சுபமும், அதன் பிறகு அபாநவாயுவும் க்ரமமாக வெளியாகின்றனவோ, சரீரம் இலகுவாகவும் ஆய்வீடுகிறதோ அவருக்கு நிரூஹம் நன்முகப் பிரயோகிக்கப்பட்டதாய் அறிக. (2) உட்செலுத்திய ஔஷதம் மெள்ள மெள்ளவும், அல்லது மிகவும் சொற்பமாகவும் வெளிவருமானால், மலமும் அபாநவாயுவும் வெளிப்படாமலும் இருந்தால், அந்த நிரூஹம் நன்கு பிரயோகிக்கப்படவில்லை யென்றறிக. 11—12½.

நிரூஹ-அநுவாஸந வஸ்திகள் நன்கு நிறைவேறியதன் போதுக் குறிகள் :—மனக்கவலை யொழிந்து களிப்பு அதிகரித்தல், சரீரம் ஸ்நிக்த்தமாதல், வியாதிகள் நீங்கிப்போதல் என்னும் இவை ஆஸ்த்தாபந வஸ்தியும் அநுவாஸநவஸ்தியும் நன்கு நிறைவேறியதற்கு முக்கிய பொதுக் குறிகளாம். வஸ்தியைப் பிரயோகிப்பதில் நன்கு அநுபவம் பெற்ற வைத்தியர் இவ்வாறு அதை நிறைவேற்றவேண்டும். ஒரு முறை பிரயோகித்த வஸ்தியினால் பயனில்லாவிட்டால் இரண்டு முறையோ அல்லது நான்கு முறையோ உசிதப்படி அதைப் பிரயோகிக்கலாம். 11—14½.

வாத-பித்த-கபரோகங்களில் நிரூஹவஸ்தி முறை :—வாதரோகங்களில் ஒரு அநுவாஸநவஸ்தியையும் ஒரு நிரூஹவஸ்தியையும் பிரயோகிக்கலாம். பித்தவியாதிகளில் பாலையும் கலந்து இரண்டு நிரூஹவஸ்திகளை யுபயோகிக்கவேண்டும். கபரோகங்களில் துவர்ப்பும் காரமும் ரூக்ஷமுமாயுள்ள வஸ்துக்களைக்கொண்டு இளஞ்சூடாக மூன்று முறை வஸ்தியைக் கொடுக்கவேண்டும். வாத-பித்த-கபங்களென்னும் மூன்று தோஷங்களும் கோளாறடைந்துண்டாகும் வியாதிகளில் பால், யூஷம், மாம்ஸரஸம் இவற்றில் ஏதேனுமொன்றை நோயாளிக்கு முறையே பத்தியமாகக் கொடுக்கவேண்டும். நிரூஹவஸ்தியைச் செய்து முடித்ததும் பிறகு அநுவாஸந வஸ்தியையும் பிரயோகிப்பது அவசியம். 15—16½.

மிருது வஸ்தி கூடாதவர் :—ஸுகுமாரமான தேகமுள்ளவருக்கும், கிழவர்களுக்கும், பாலர்களுக்கும் மிருதுவஸ்தியையே [1] பிரயோகிக்க வேண்

---

1. மிருது வீர்யமுள்ள வஸ்துக்களால் சொற்ப அளவில் பிரயோகிக்கப்படும் வஸ்தி மிருது வஸ்தி யெனப்படும்.

டும்; தீக்ஷ்ணவஸ்தியைப் பிரயோகித்தால் அவர்களுடைய தேகபலத்தையும் ஆயுளையும் அது அழிக்கக்கூடும். 17½.

உத்தரலேசாதி வஸ்திகளைப் பிரயோகிக்கும் நியமம் :—முதலில் உத்தரலேசவஸ்தியையும்,[1] இடையில் தோஷஹரவஸ்தியையும்,[2] இறுதியில் சமனவஸ்தியையும்[3] பிரயோகிக்கவேண்டும். உத்தரலேசனவஸ்தி முதலியவற்றில் உபயோகிக்கக்கூடிய பதார்த்தம் முதலியவை பின்வருமாறு. 18½.

உத்தரலேசனாதி வஸ்திகளுக்குரிய சாக்ஷகள் :—(1) ஆமணக்கு விதை, அதிமதுரம், திப்பிலி, இந்துப்பு, கொட்டைக் கரந்தையின் தோல், வசம்பு இவை உத்தரலேசகுணமுள்ளவை; என்றல் தோஷங்களைக் கல்லிவிடுங் குணமுடையன. (2) சதகுப்பி, அதிமதுரம், பில்வப்பழம், வெட்பாலைக்கனி இவற்றைக் காடியுடனுவது பசு மூத்திரத்தோடாவது கலந்து வஸ்தி செய்தால் தோஷங்களை ஹரிக்கும். (3) ஞாழல், அதிமதுரம், கோரைக்கிழங்கு, இரஸாஞ்ஜனம் இவற்றைப் பாலுடன் கலந்து வஸ்தி செய்ய சமனமுண்டாகும். 19—21½.

சோதனவஸ்தி :—மலங்களைக் கழியச் செய்யுங் குணமுடைய பதார்த்தங்களைக்கொண்டு [4] பக்குவம் செய்த க்வாதங்களையும், அதே வஸ்துக்களாலான கல்கங்களையும், இந்துப்பையும் ஒன்றுகச் சேர்த்து, தூடுப்பால் ஒன்று சேரக் கிளறி, அப்பால் அதை வஸ்தியாக உபயோகிக்கலாம்; இது சோதனவஸ்தி யெனப்படும். 22½.

லேகனவஸ்தி :—த்ரிபலாக்வாதம், பசுவின் மூத்திரம், தேன், யவக்ஷாரம் இவற்றையும், உஷகாதிகணத்தில் [5] அடங்கிய வஸ்துக்களின் கல்கத்தையும் சேர்த்து வஸ்திகள் பிரயோகிக்கலாம்; இது லேகனவஸ்தி எனப்படும். 23½.

பிருஹ்மண வஸ்தி :—ப்ருஹ்மணகுணமுள்ள பதார்த்தங்களால் ஆகிய க்வாதத்தையும், இனிப்பான வஸ்துக்களின் கல்கத்தையும், நெய், மாம்ஸரஸம் இவற்றையும் சேர்த்து வஸ்திகள் கொடுக்கலாம்; இவ்விதம் செய்யப்படுவது பிருஹ்மணவஸ்தி எனப்படும். 24½.

பிச்சிலவஸ்தி :—இலந்தம்பழம், நரிநாவல், நறுவிலி, முள்ளிலவம் பட்டை, காஞ்சொறி, சுக்கு இவற்றைப் பசும்பாலில் பக்குவம் செய்து, தேன் சேர்த்து கலந்து வஸ்தி செய்யலாம். இதற்கு பிச்சிலவஸ்தி [6]

1. உத்தரலேசன வஸ்தி—குடல் முதலியவற்றில் சேர்ந்துள்ள தோஷங்களைக் கிளப்பி விடக்கூடிய வஸ்தி.

2. தோஷஹரவஸ்தி—தோஷங்களை வெளிப்படுத்தும் வஸ்தி.

3. சமனவஸ்தி—தோஷங்களைக் குறைத்து (வெளிப்படுத்தாமல்) கோளாறடைந்த தாது முதலியவற்றை இயற்கை நிலைமைக்குக் கொண்டு வரும் வஸ்தி.

4. சிவதை வேர், ஆமணக்கு, நேபாளம் முதலியவை சோதன குணமுள்ள (மலங்களைக் கழியச் செய்யும்) சரக்குகளாகும்.

5. ஊஷகாதி கணம்—உவர்மண்ணுப்பு, (ஊஷகம்—மிளகு என்று சிலர்) மயில் துத்தம், பெருங்காயம், அன்னபேதி, புஷ்பகாஸீஸமென்னும் அன்னபேதி, சிலாஜது இவற்றின் கூட்டுக்குப் பெயர்.

6. பிச்சிலவஸ்தி—சரீரதாதுக்களுக்குக் களிப்புத் தன்மையை யுண்டாக்கும் வஸ்தி; இதை பிச்சாவஸ்தி என்றும் கூறுவர்,

என்று பெயர். வெள்ளாடு, செம்மறியாடு, மான் இவற்றின் உதிரத்தையும் மேற்கூறிய வஸ்திச்சரக்குடன் கூட்டி உபயோகிக்கலாம். பிச்சில வஸ்தியில் பன்னிரண்டு பலம் ஒனஷதத்தை உட்செலுத்தலாம். 25, 26½.

மதுதைலக வஸ்தி :—முதலில் கால் பலம் இந்துப்பையும் நாலு பலம் தேனையும் நான்கு பலம் தைலத்தில் கூட்டிக் கலக்கவும்; இதில் பிறகு கூறப்படும் சதகுப்பியின் கல்கத்தை நான்கு பலம் சேர்த்து, அதுவும் தைலத்துடன் ஒன்றுகக் கூடிய பிறகு, இதில் கூறப்படும் ஆமணக்கன் வேரின் கஷாயத்தையும் எட்டு பலம் கூட்டி, வைத்திய நிபுணர் இதனால் வஸ்தி செய்விக்கலாம். இந்த நிரூஹவஸ்திக்கு இந்த அளவில் வஸ்துக்களைச் சேர்ப்பது பொது விதியாகும். இதில் விசேஷ விதிகளும்உண்டு:—வாத ரோகங்களுக்கான வஸ்தியில் தேன் நான்கு பலமும் ஸ்நேஹம் ஆறு பலமும், பித்தத்திற்குத் தேன் நான்கு பலமும் ஸ்நேஹம் இரண்டு பலமும், கபத்திற்கு ஆறு பலம் தேனும் நான்கு பலம் ஸ்நேஹமும் கலக்க வேண்டும். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து—தேன் தைலம் இரண்டும் எவ்வெட்டு பலம், அதற்கு ஸம அளவு ஆமணக்கன் வேரின் கஷாயம், சதகுப்பியின் கல்கம் அரைப் பலம், இந்துப்பு அரைப் பலம் சேர்த்தும் இவ் வெளஷதத்தைப் பக்குவம் செய்யலாம். இது மதுதைலக வஸ்தி எனப்படும்.[1] இதை முதலில் தூடுப்பால் நன்றுகக் கலக்கி விட்டு வஸ்தி செய்யவேண்டும். இவ் வஸ்தியினால் மேதோரோகம், குன்மம், கிருமிரோகம், ப்லீஹவ்ருத்தி, குடலில் மலம் சேர்ந்துவிடுதல், உதாவர்த்தம் இவை நீங்கி, சரீர பலம், காந்தி இவையும் விருத்தியாகும்; வ்ருஷ்யம், தீபகம், ப்ருஹ்மணம் என்கிற குணங்களும் இதற்கு உண்டு. 27—33.

தீபனவஸ்தி :—தேன், நெய், பால், எண்ணெய் ஒவ்வொன்றும் இரண்டு பலம்; சிவக்கரந்தையும் இந்துப்பும் தனித்தனி கால் பலமெடை; இவற்றாலான கஷாயத்தினால் பிரயோகிக்கப்படும் வஸ்தி தீபனவஸ்தி எனப்படும்.[2] 34

யுக்தரத வஸ்தி :—ஆமணக்கன் வேரின் கஷாயம், தேன், எண்ணெய், இந்துப்பு, வசம்பு, திப்பிலி, மருக்காரை இவற்றைக் கூட்டி வஸ்தியாகப் பிரயோகிக்கலாம்; இதற்கு யுக்தரத வஸ்தி எனப் பெயர். 35.

ஸித்த வஸ்தி :—பஞ்சமூல க்வாதம், தைலம், திப்பிலி, தேன், இந்துப்பு, அதிமதுரம் இவற்றை ஒன்றுகக் கூட்டி வஸ்தி செய்யலாம். இது ஸித்தவஸ்தி எனப்படும்.[3] 36

நிரூஹத்திற்குப் பிறகு பத்தியக் கிரமம் :—நிரூஹவஸ்தி செய்துகொண்டபின் உஷ்ண ஜலத்தினாலேயே ஸ்நானம் செய்யவேண்டும். பகலில் நித்திரை செய்தலையும், அஜீர்ணமுண்டாக்கும் உணவுகளையும் விலக்க

1. தேன், தைலம் இரண்டும் இவ்வஸ்தியில் பிரதானமாகையால் இது மதுதைலகவஸ்தி யெனப்படுகிறது.

2. தீபனவஸ்தி—அக்னிமாந்தியத்தைப் போக்கி ஜாடராக்னியை விருத்தி செய்யக்கூடிய வஸ்தி.

3. ஸித்தவஸ்தி—இந்த வஸ்தியைப் பிரயோகித்து வருவதால் ரோகங்கள் நிவ்ருத்தியாவதும், தேகபலம் ஸ்திரப்படுவதும் கை கண்ட விஷயமென்றெண்ணி இப்பெயர் கொடுக்கப்பட்டது.

வேண்டும். மற்ற பத்திய விதிகளெல்லாம் அநுவாஸந வஸ்தியிற் கூறப் பட்டவிதமே. 37.

ஏழாம் அத்தியாயம்

உத்தரவஸ்தி விதி.

உத்தரவஸ்தியில் நேத்திர அளவு:—இனி உத்தரவஸ்தி யென்னும் விஷயம் கூறப்படுகிறது:—இந்த வஸ்தி செய்வதற்கான கருவியில் நேத்திரம் பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும், இடையில் ஒரு கட்டுடன் கூடியதாகவும், முல்லைமொட்டுபோன்ற முனையுடையதாகவும், ஒரு கடுகு நுழையக்கூடிய த்வாரமுள்ளதாகவும் அமைக்கப்படவேண்டும். $1\frac{1}{2}$.

(1) உத்தரவஸ்தியில் ஔஷதம் பிரயோகிக்க பொதுவிதி:—இருபத்தைந்துக்குக் குறைந்த வயதினருக்கு ஸ்நேஹத்தை இரண்டு கர்ஷமளவு கவும், அதற்கு மேற்பட்ட வயதினருக்கு ஒரு பல மளவாகவும் உத்தரவஸ்தியில் உட்செலுத்தலாம். (2) உத்தரவஸ்தியைப் பிரயோகிக்கும் முறை:—இருபத்தைந்துக்குக் குறைந்த வயதினருக்கு இரண்டு கர்ஷப்பிரமாணம் ஸ்நேஹத்தையும், அதற்கு மேற்பட்ட வயதினருக்கு ஒரு பலம் ஸ்நேஹத்தையும் உத்தரவஸ்தியில் பிரயோகிக்கலாம். இவை சாஸ்திரமறிந்தவரின் கொள்கை. நிரூஹவஸ்தியினால் நோயாளியை சுத்தம் செய்த பிறகு, ஸ்நானம் போஜனம் இவற்றால் தகுந்தவாறு திருப்தி செய்வித்து, முழங்கால் உயரமுள்ள ஆஸனத்தில் உட்காரச் செய்து, ஏற்றதோர் சலாகையில் எண்ணெய் முதலியவற்றைத் தடவி, அதை ஆண் குறியினுள் மெதுவாக நுழைத்து, அந்த த்வாரத்தைச் சுத்தம் செய்து, அப்பால் வஸ்தியின் நேத்திரத்தில் நெய்யைத் தடவி, மூத்திரமார்க்கத்தினுள் மெள்ள மெள்ள ஆறு அங்குலம் நுழைத்து, உடனே வஸ்தியை அழுத்திவிட்டு, மெதுவாக நேத்திரத்தை வெளியில் இழுக்கலாம். பிறகு உட்செலுத்திய ஸ்நேஹம் வெளிவந்துவிடுமானால், அநுவாஸகவஸ்திக்குப் பிறகு செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ள உபசாரங்களே இதற்கும் நிறைவேற்றவேண்டும். 2—$5\frac{1}{2}$.

ஸ்த்ரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உத்தரவஸ்தியின் பிரமாணம் முதலியது:—ஸ்த்ரீகளுடைய கர்ப்பாசயத்தைச் சுத்தி யெய்ய உபயோகிக்கும் வஸ்தியின் நேத்திரம் சுண்டுவிரல் கனமாகவும், பத்து அங்குல நீளமாகவும், பயறு நுழையக்கூடிய த்வாரமுள்ளதாகவும் அமைக்கப்படவேண்டும்; அதை யோனியில் நாலு அங்குலம் செலுத்தலாம்; மூத்திர மார்க்கத்தில் உபயோகிக்கும் நேத்திரம் புருஷர்களுக்கேற்ற நேத்திரம் போலவே மெல்லிதா யிருக்கவேண்டும். அதை இரண்டு அங்குலமே உட்செலுத்தலாம். பாலர்களுக்கு மூத்திரக்ருச்சிரம் முதலிய சில வியாதிகளில் மட்டும் உத்தர வஸ்தி செய்யவேண்டிவரும்; அவர்களுடைய மூத்திரமார்க்கத்தில் மெல்லிய நேத்திரத்தை ஒரு அங்குலம் நீளமே ஜாக்கிரதையாய் கை நடுங்காமல் மெதுவாக உட்செலுத்தவேண்டும். ஸ்த்ரீகளுடைய கர்ப்பாசய த்வாரத்தில் ஸ்நேஹங்களே இரண்டு பலம் அளவிலும், மூத்திரமார்க்கத்தில் ஒரு பலம் அளவிலும், பாலர்களுக்கு இரண்டு கர்ஷப் பிரமாணத்திலும் பிரயோகிக்க வேண்டும் 6—9.

ஸ்த்ரீகளுக்கு உத்தரவஸ்தி செய்யு முறை:—ஸ்த்ரீகளே முழங்கால்கள் மேலெழுந்து நிற்குமாறு கால்களே மடித்துக்கொண்டு மல்லாந்துப் படுக்கச் செய்து, அப்பால் அவர்களுக்கு உத்தர வஸ்தியைப் பிரயோகிக்க வேண்டும். முதலில் பிரயோகித்த ஔஷதம் முதலியது வெளிவராமற் போனால் மறுபடியும் சோதந குணமுள்ள[1] வஸ்துக்களால் வஸ்தியைப் பிரயோகிப்பது நலம்; அல்லது சோதநத் திரவ்யங்களே தூல்களால் சுற்றிச் செய்யப்பட்ட பலவர்த்தியையாவது ஸ்நேஹங்களில் தோய்த்து யோனிமார்க்கத்தில் திடமாய் நிற்குமாறு சிறிது நேரம் அடைத்திருக்கலாம். மூத்திரப்பை முதலியவற்றில் எரிச்சலுண்டானால் அப்பொழுது பாலுள்ள விருக்ஷங்களின் பட்டைகளைக் கஷாயமிட்டு ஆறிய பிறகு அதைக்கொண்டாவது, பாலினாலாவது உடனே உத்தரவஸ்தியைக் கொடுப்பது அவசியமாம். 10—$12\frac{1}{2}$.

உத்தரவஸ்திக்கு ஏற்ற ரோகிகளும் தகாதவர்களும்:—புருடர்களுக்கு சுக்ல ஸம்பத்தமான வியாதிகளையும், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாய் ஸம்பந்தமான ரோகங்களையும் பரிஹரிப்பதற்கு உத்தரவஸ்தி ஏற்ற சிகித்ஸையாகும். ஆனால் ப்ரமேஹத்தினால் வருந்துபவருக்கு எப்பொழுதும் உத்தரவஸ்தியைப் பிரயோகிப்பது உசிதமல்ல. $13\frac{1}{2}$.

உத்தரவஸ்தி நன்கு நிறைவேறியதற்கும் நிறைவேறுததற்கும் குறிகள்:—அநுவாஸகம் நன்கு நிறைவேறியதாலும் முறைதவறி செய்யப்படுவதாலும் ஏற்படும் குணங்களும் தீமைகளும் முறையே உத்தரவஸ்தி நன்கு நிறைவேறியதற்கும் நிறைவேறுததற்கும் ஸம்பவிக்கக்கூடிய குணகுணங்களாகக் கருதப்படும். மேலும் உத்தரவஸ்தியினுலுண்டாகும் தீமைகளே ஸ்நேஹவஸ்தியைப் பிரயோகித்துச் சமநம் செய்ய வேண்டும். $14\frac{1}{2}$.

பலவர்த்தி:—ரோசந குணமுள்ள ஔஷதச் சரக்குகளால் பிணியாளியின் பெருவிரலின் அளவுள்ளதாகச் செய்யப்பட்டு குதத்தினுள் வைத்து விரேசநம் செய்விப்பதற்கான நீண்ட குளிகை 'பலவர்த்தி' எனப்படும். இதை நெய்யால் ஸ்நிக்தமாகச் செய்து குதத்தில் செலுத்தவேண்டும். $15\frac{1}{2}$.

எட்டாம் அத்தியாயம்

நஸ்யவிதி.

நஸ்யமும் அதன் பிரிவுகளும்:—நாசியின் வழியாகச் செய்யப்படும் ஔஷதப் பிரயோகம் 'நஸ்யம்' எனப்படுகிறது; அதற்கே நாவநம் என்றும் பெயர். ரேசநம், ஸ்நேஹநம் என்று நஸ்யம் இரு வகைப்படும்; தோஷங்களே வெளிப்படுத்தி தாதுக்களே இலேக்கச் செய்வதற்கான சிகித்ஸை ரேசநம் என்றும், தாதுக்களைப் போஷிக்கச் செய்வது ஸ்நேஹநம் என்றும் கருதப்படும். இவற்றை முறையே கர்ஷண நஸ்யம், ப்ருஹ்மண நஸ்யம் என்றும் கூறுவர். 1, 2.

நஸ்யத்திற்கேற்ற காலமும் தகாத காலமும்:—சிலேஷ்மக கோளாறுகளுண்டாகும் வியாதிகளில் காலைவேளையிலும், பித்த வியாதிகளில் நடுப்பகலிலும், வாதரோகங்களில் மாலைப் பொழுதிலும் நஸ்யம் பிரயோகிக்கலாம்; இவ்வாறு பகற்பொழுதிலேயே நஸ்ய முபயோகிக்கலாம்; ஆனால் வியாதி உக்ரமாயிருந்தால் இரவிலும் பிரயோகிக்கலாம். போஜனம் செய்தவுடனே நஸ்யகர்மம் செய்யக்கூடாது; மேலும் மாரிகாலத்திலும்,

1. சோதநம்—இதுவே தேஹஸம்சோதநம் எனப்படும்; 13-ம் பக்கம் பார்க்க.

இலங்கநம் அல்லது விரேசநம் முதலிய கர்ஷண சிகித்ஸைகள் செய்திருக்கும்போதும் நஸ்யம் பிரயோகிக்கக்கூடாது. 3, 3½.

நஸ்யத்திற்குத் தகாதவர்கள் :—புதிதாக பிரதிச்யாயத்தினால் [1] பீடிக்கப்படுபவர், கர்ப்பிணிகள், கிருத்ரிமவிஷத்தினால் துன்பப்படுபவர், அஜீர்ண ரோகிகள், வஸ்தியை அப்பொழுதே பிரயோகித்துக்கொண்டவர், ஸ்நேஹங்களையாவது ஜலத்தையாவது ஆஸவம் முதலிய மதுவகைகளையாவது உட்கொண்டவர்கள், அதிக சினங்கொண்டவர், மனத்துயரமுள்ளவர், நாவறட்சியுள்ளவர், கிழவர்கள், குழந்தைகள், மலஜலாதிகளை அடக்கிக் கொண்டிருப்பவர், ஸ்நானம் செய்தவர், ஸ்நானம் செய்யப்போகிறவர் இவர் யாவரும் நஸ்ய சிகித்ஸைக்கு உற்றவராகார். 4—5½.

நஸ்யத்திற்கு ஏற்ற வயது :—எட்டு வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதினருக்கு நஸ்யம் பிரயோகிக்கலாம்; ஆனால் எண்பதுக்கு மேற்பட்ட வயதினருக்கு நஸ்ய சிகித்ஸை நன்மை செய்யாது. 6½.

விரேசந நஸ்யத்திற்கான ஔஷதங்கள் :—மிகவும் தீக்ஷ்ண வீர்யமுள்ள தைலங்களைக்கொண்டாவது, தீக்ஷ்ணவீர்யமுள்ள சரக்குகளால் பக்குவம் செய்த ஸ்நேஹங்கள், க்வாதங்கள், ஸ்வரஸங்கள் இவற்றுளாவது விரேசந நஸ்யம் பிரயோகிக்கலாம். 7½.

விரேசந நஸ்யத்தின் மாத்திரைகள் :—நாசியின் த்வாரங்களில் விரேசந நஸ்யத்திற்கான ஔஷதம் எட்டுத் துளிகளை விட்டால் உத்தம மாத்திரை, ஆறு துளிகளை விட்டால் மத்யம மாத்திரை, நான்கு துளிகள் விட்டால் ஹீநமாத்திரை யென்று கூறப்படும். 8½.

நஸ்யௌஷதத்திற்கான சரக்குகளின் போது அளவுகள் :—நஸ்யத்திற்காகப் பக்குவம் செய்யப்படும் ஔஷதங்களில் தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதச்சரக்குகள் ஒரு சாணம், காயம் ஒரு யவப்பிரமாணம், இந்துப்பு ஒரு மாஷ அளவாகவும் சேர்க்கப்படவேண்டும்: மேலும் திரவப்பெருளான பாலை எட்டு சாணமும், ஜலத்தை மூன்று கர்ஷமும், மதுர ரஸமுள்ள வஸ்துக்களை ஒரு கர்ஷ மெடையாகவும் சேர்க்கலாம். 9—10½.

விரேசந நஸ்யம் இரண்டு விதம் :—சிரோவிரேசந நஸ்யமானது [2] 'அவபீடம்', 'ப்ரதமநம்' என்று இரு வகைப்படும்; இந்த நஸ்யங்களை அததற்கேற்ற பிணியாளிகளையறிந்து உபயோகிக்கவேண்டும். (1) கல்கமாகச் செய்த ஔஷதச் சரக்குகளை நன்றாகப் பிழிந்து வரும் சாற்றை அவ்வாறே நாசியினுள் செலுத்துவது 'அவபீட நஸ்யம்' [3] எனப்படும்; அவ்வாறு சாறு பிழிவதற்கான மூலிகை தீக்ஷ்ணகுணமுள்ளதாயிருக்கவேண்டும். (2) அடியில் ஆறு அங்குலம் நீளமுள்ளதாகவும், முனையில் இரண்டு கிளையாகப் பிரிந்து இரண்டு முகங்களுடையதாகவும் செய்யப்பட்ட ஒரு குழாயினுள் தீக்ஷ்ணகுணமுள்ள ஔஷதச் சரக்குகளாலான சூர்ணத்தை ஒரு கோலப்பிரமாணம் சேர்த்து, குழாயின் இரண்டு முனையுள்ள பாகங்களைப் பிணியாளியினுடைய நாசியின் இரண்டு த்வாரங்களிலும் செலுத்தி,

1. பிரதிச்யாயம்—49-ம் பக்கம் பார்க்க.

2. விரேசந நஸ்யத்தினால் சிரஸ்ஸிலும் அதற்கு ஸமீபத்திலுமுள்ள தோஷங்கள் வெளிவருவதால் அது சிரோவிரேசநம் எப்படும்.

3. பச்சிலை முதலியவற்றின் சாற்றைப் பிழிந்து இந்த நஸ்யம் செய்யப்படுவதால் இது அவபீடம் எனப்படுகிறது.

அதன் அடிப்புறத்தை வைத்தியன் தனது வாயினால் ஊதி, அக்குழாயினுள்ளடங்கிய சூர்ணத்தை ரோகியின் மூக்குக்குள் செலுத்தவேண்டும்; இது 'ப்ரதமந நஸ்யம்' [1] எனப்படும். 11—13½.

விரேசந நஸ்யத்திற்குரிய ரோகங்கள் :—தோள்களுக்கு மேலுள்ள அவயவங்களைப்பற்றிய வியாதிகள், கப ரோகங்கள், தொண்டைக்கம்மல், அரோசகம், பிரதிச்யாயம், தலைவலி, பீநஸம், சோகை, அபஸ்மாரம், குஷ்டம் இவ்வியாதிகளில் விரேசந நஸ்யம் தகுந்ததாம். 14—15.

பாலர் முதலியவருக்கேற்ற நஸ்யம் :—பயந்தவர், ஸ்திரீகள், சரீரம் மெலிந்தவர்கள், பாலர்கள் இவர்களுக்கு நஸ்யம் செய்யவேண்டியிருந்தால் ஔஷதத்தை ஏதேனும் ஸ்நேஹத்துடன் கலந்துபயோகிக்கவேண்டும்; என்றால் ப்ருஹ்மண நஸ்யம் செய்யவேண்டும். 15½.

அவபீட நஸ்யத்திற்கேற்ற வியாதிகள் :—தொண்டையைப் பற்றிய வியாதிகள், கிருமி ரோகங்கள், ஸந்நிபாதம், அதிக நித்திரை, விஷமஜ்வரம், மஹா வியாதிகள் இவற்றில் அவபீட நஸ்யம் ஏற்றதாகும். 16½.

ப்ரதமந நஸ்யத்திற்கேற்ற பிணிகள் :—இவ்வௌஷதம் மற்ற நஸ்யங்களைப் பார்க்கினும் அதிக தீக்ஷ்ண வீர்யமுள்ளதாகையால் மிகவும் உக்ரமான வியாதிகளிலும், மூர்ச்சை யடைந்திருக்கையிலும், தைர்யசாலியான வைத்தியர்களால் சூர்ணத்தைக்கொண்டு ப்ரதமந நஸ்யம் பிரயோகிக்கத் தகுந்தது. 17½.

சுண்டீயாதி நஸ்யம் :—சுக்கு, வெல்லம், திப்பிலி, இந்துப்பு, இவற்றை ஜலம் விட்டு அரைத்து, இரஸம் பிழிந்து நஸ்யமிட நேத்ர வியாதிகள், காது நோய்கள், நாசியைப்பற்றிய கோளாறுகள், சிரஸ்ஸைப் பற்றிய ரோகங்கள், முகவாய்க்கட்டைப் பிடிப்பு, மன்யாஸ்தம்பம், களக்கிரஹம், கைகளிலும் தேகத்தின் பாரிசங்களிலும் ஸம்பவிக்கும் பிணிகள் இவை சாந்தமாகும். 18—19.

மதூகபுஷ்பாதி நஸ்யம் :—இலுப்பைப் பூவின் சாறு, திப்பிலி, வசம்பு, மிளகு, இந்துப்பு இவற்றை உஷ்ண ஜலம் விட்டு அரைத்து நஸ்யம் செய்ய மூர்ச்சை முதலியவை நிவருத்தியாய், புத்திக்குத் தெளிவு முண்டாகும்; அபஸ்மாரம், உன்மாதம், ஸந்நிபாதம், அபதந்த்ரக இவையும் நீங்கும். 20½.

ஸைந்தவாதி நஸ்யம் :—இந்துப்பு, வெள்ளைமிளகு, கடுகு, கோஷ்டம் இவற்றைச் செம்மறியாட்டின் மூத்ரத்தினால் ஆட்டி சாறு பிழிந்து நஸ்யமிட சோம்பல் நிவருத்தியாகும். 21½.

ப்ரதமந நஸ்யௌஷதம் :—ரோஹித மென்கிற செங்கல்மீனுடைய பித்தத்தில் பாவனை செய்த இந்துப்பு, வசம்பு, மிளகு, திப்பிலி, சுக்கு, தக்கோலம், வெள்ளுள்ளி, குங்குலியம், சிறுதேக்கு இவற்றைச் சூர்ணம் செய்து, ப்ரதமந நஸ்யமாக உபயோகிக்கலாம். 22—23.

இரண்டுவித ப்ருஹ்மண நஸ்யம் :—ப்ருஹ்மணமென்னும் ஸ்நேஹந நஸ்யமானது 'மர்சம்' 'ப்ரதிமர்சம்' என்று இரு வகைப்படும். 24.

மர்ச நஸ்யத்தின் மாத்திரைகள் :—எட்டு சாணம் அளவில் நஸ்யௌஷதம் உபயோகிக்கப்படுமானால் அது மர்சநஸ்யத்தின் உத்தம மாத்திரை;

1. வாயால் ஊதி ஔஷதத்தை உட்செலுத்துவதால் இது ப்ரதமநம் எனபபடுகிறது.

இதற்கே தர்ப்பணமாத்திரை யென்றும் பெயர். அது நான்கு சாணமளவில் பிரயோகிக்கப்பட்டால் மர்சத்தின் மத்யமமாத்திரையாகும். ஒரு சாணப் பிரமாணமாஞல் அது ஹீநமாத்திரையாகும். அந்தந்த ரோகியினுடைய சரீரத்தின் தோஷக்கூறுகளையும் பலாபலங்களையும் அறிந்து இம் மூன்று அளவுகளில் ஏதேனும் ஒன்றையனுஸரித்து நாசியின் ஒவ்வொரு த்வாத்திலும் அவ்வளவு ஔஷதத்தையும் இரண்டு மூன்று வேளை பிரயோகிப்பது நலம். 25, 26.

மர்சம் செய்யவேண்டிய நாட்களின் முறை:—ஒன்று விட்டு ஒரு நாளாவது, இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது, மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது, நான்கு நாட்களுக்கு ஒரு தடவையாவது, ஐந்து அல்லது ஏழு தினங்களுக்கு ஒரு முறையாவது மர்ச நஸ்யம் செய்யலாம். 27.

மர்ச-விரேசந நஸ்யங்களாலான தீங்கும் பரிஹாரமும்:—(1) மர்ச நஸ்யத்தைப் பிரயோகிக்கையில் மற்றொரு மனிதன் பிணியாளியைப் பிடித்துக்கொண்டிருப்பது அவசியம்; ஏனெனில் உள்ளடங்கிய தோஷங்கள் மர்ச சிகித்ஸையினுல் மிகவும் கிளப்பப்படுகின்றனவாதலின், இதில் ஆபத்துக்கள் அநேகவிதமாய் நேரிடுவதுண்டு. இவ்விதமாகவே சிரோவிரேசமென்கிற ரேசநநஸ்யத்திலும் அபாயங்கள் ஸம்பவிக்கும். (2) மர்ச நஸ்யத்தைப் பிரயோகிப்பதால் தோஷங்கள் கிளப்பிவிடப்பட்டு நேரிடும் தீங்குகளை நிவ்ருத்தி செய்ய வமந சிகித்ஸையும், விரேசந நஸ்யமும் செய்வது நலம். அவ்விதமே ரேசந நஸ்யத்தினுல் ஸம்பவிக்கும் தோஷக்ஷயத்தைக் காரணமாகக் கொண்டு உண்டாகிற தீங்குகளில் நிலைமைக்கு ஏற்றவாறு ஆலோசித்து ப்ருஹ்மண நஸ்யம் செய்யவேண்டும். 28—29.

ப்ருஹ்மணநஸ்யத்திற்குரிய பிணிகள்:—சிரஸ்ஸைப் பற்றிய வியாதிகள், நாசியைப்பற்றிய வியாதிகள், நேத்ர ரோகங்கள், ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேதம், பல் நோய், பலக்குறைவு, மர்யாஸ்தம்பம், கைகளையும் தோள்களையும் பற்றிய வியாதிகள், நாக்கு வறண்டுபோதல், காதிரைத்தல், வாத வியாதி, தந்த வியாதி, அகாலத்தில் தலை நரைத்தல், தலை மயிர்களும் மீசை முதலியவைகளும் உதிர்ந்துவிடுதல் இவற்றில் ஸ்நேஹங்களாலாவது, மதுரமான வேறு பதார்த்தங்களாலாவது ப்ருஹ்மணநஸ்யம் செய்யவேண்டும். 30—31½.

ஸூர்யாவர்த்தம் முதலியவற்றில் ப்ருஹ்மணநஸ்யம்:—குங்குமப்பூவை நெய்யிற் பொரித்து அத்துடன் ஸம அளவு சர்க்கரையும் சேர்த்து, பாலில் குழைத்து நஸ்யமிட புருவம், கன்னம், நேத்ரம், சிரஸ், காது இவற்றைப்பற்றி வாதரக்தத்தினுல் உண்டாகும் ஸூர்யாவர்த்தம், ஒற்றைத்தலைவலி முதலிய நோய்கள் நிவ்ருத்தியாகும். அல்லது அணு தைலத்தினுலாவது,[1] நாராயண தைலத்தினுலாவது, மாஷதைலத்தினுலாவது, அந்தந்த ஔஷதிகளைச் சேர்த்து பக்குவம் செய்த க்ருதங்களினுலாவது மேற்கூறிய ரோகங்களில் நஸ்யமிடலாம். 32—34,

1. அநேகம் சரக்குகளைச் சேர்த்து நஸ்யமிடுவதற்கென்று பக்குவம் செய்யப்படும் ஒருவித தைலம். [சிறுபாலை, வெட்டிவேர், தேவதாரு, கோரைக் கிழங்கு, இலவங்கப்பட்டை, நன்னாரி, சந்தனம், மரமஞ்சளின் பட்டை, அதிமதுரம், பெருங்கோரைக்கிழங்கு, அகிற்கட்டை, திரிபலை, வறள்தாமரை, பில்வம், கருநெய்தல், கண்டங்கத்திரி, பெருமல்லிகை, ஆனை

வாத-பித்த-கபங்களில் தனித்தனியே உபயோகிக்கக்கூடிய நஸ்யங்கள்:—கபஸம்பந்தமான வியாதிகளிலும் மற்றத் தோஷங்களுடன் கலந்து பிரகோபமடைந்த வாததோஷத்தினுலுண்டாகும் வியாதிகளிலும் தைலத்தையும், வாததோஷத்தினுலேயே ஸம்பவிக்கும் ரோகங்களில் கொழுப்பையும், பித்தரோகங்களில் நெய் அல்லது மஜ்ஜையையும் நஸ்யமாயுபயோகிப்பது நலம். 35,

மாஷாதி நஸ்யம்:—உளுந்து, காஞ்சொறி, சிற்றரத்தை, சிற்றாமுட்டி, ஆமணக்கு, காவட்டம்புல், அமுக்கிராங்கிழங்கு இவற்றை ஸமபாகம் சேர்த்து க்வாதம் செய்து, அதில் சிறிது காயமும் இந்துப்பும் சேர்த்து, அந்த க்வாதத்தை யெடுத்து, இளங்சூடாயிருக்கையிலே நஸ்யமிட்டால் நடுக்கலுடன் கூடிய பார்ச்வ வாயு, அர்திதவாதம், மன்யாஸ்தம்பம், அபபாஹுகம் இவ்வித வாதவியாதிகள் நிவ்ருத்தியாகும். 36, 37.

மர்ச-ப்ரதிமர்சங்களின் பேதங்கள்:—பெரும்பாலும் மர்ச நஸ்யத்திற்கான ஔஷதங்களைக் கொண்டே ப்ரதிமர்சமும் செய்யப்படும். ஆனுல் இரண்டுக்கும் ஔஷதப் பிரயோகத்தின் அளவில்தான் பேதம். ப்ரதிமர்சத்தில் ஸ்நேஹௌஷதங்களை ஒவ்வொரு நாசித்வாரத்திலும் இரண்டிரண்டு பிந்துக்கள் விடவேண்டும். ஸ்நேஹ வஸ்துவில் ஆள்காட்டி விரலை இரண்டு கணுக்கள் மட்டும் சோய்த்து எடுக்க அவ்விரலிலிருந்து எவ்வளவு ஸ்நேஹம் விழக்கூடுமோ அது ஒரு பிந்து என்பதுகிறது. இவ்வித பிந்துக்கள் எட்டு சேர்ந்தால் ஒரு சாணப்பிரமாணமாம். மர்ச நஸ்யத்தில் ஸ்நேஹங்களை சாணப்பிரமாணமும், ப்ரதிமர்சத்தில் இரண்டு பிந்துக்களும் உபயோகிக்க வேண்டும். 38—40.

ப்ரதிமர்சத்திற்கேற்ற ஸமயங்கள்:—ப்ரதிமர்சத்திற்கென்று பதினுன்கு காலங்கள் சல்ஸ்த்ரவல்லோரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அவை:—(1) விடியற்காலம், (2) பற்களைச் சுத்தி செய்த பிறகு, (3) வீட்டிலிருந்து வெளியிற் புறப்படும் நேரம், (4) வ்யாயாமம் முடிந்த பிறகு, (5) வழி நடந்த பிறகு, (6) புணர்ச்சிக்குப் பிறகு, (7) மலவிஸர்க்கத்திற்குப் பிறகு, (8) மூத்ர விஸர்க்கத்திற்குப் பிறகு, (9) நேத்ரங்களுக்கு அஞ்ஜனம் உபயோகித்த பிறகு, (10) கடலக்ரஹம்[1] முடிந்த பிறகு, (11) போஜனம் செய்த பிறகு, (12) பகலில் நித்திரைக்குப் பிறகு, (13) வாந்தி செய்த பிறகு, (14) மாலைநேரம் என்பவையாம். 41-42½.

ப்ரதிமர்சமாத்திரையறியு முபாயம் முதலியது:—மூக்கினுள் பிரயோகித்த ஸ்நேஹ வஸ்து சிறிது உறிஞ்சும் பொழுது வாயினுள் வருமாஞல், அப்பொழுது அதை ப்ரதிமர்சத்தின் ஒரு மாத்திரை யென்று கூறலாம்.

வணங்கி, சிறு மல்லிகை, சிறுவழுதுணை, வாய்விடங்கம், இலவங்கப் பத்திரி, சிற்றேலம், அரேணுகம், தாமரையின் தாது இச்சரக்குகளை ஸமபாகமெடுத்து, அவற்றில் நூறு மடங்கு ஜலம் சேர்த்துக் காய்ச்சி வடிக்கட்டி, இக்கஷாயத்தில் பத்திலொரு பாகம் தைலம் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். இவ்வாறு பத்துத்தடவை இதே கஷாயத்தினுல் அத்தைலத்தைக் காய்ச்சி, பத்தாவது தடவையில் அத்தைலத்திற்கு ஸமபாகம் வெள்ளாட்டுப்பாலையும் ஊற்றி, இறுதியில் தைலம் மாத்திரம் மிகும்படி காய்ச்சி யிறக்கி விட வேண்டும். இது அணுதைல முறையாம்.]

மூக்கினுல் உறிஞ்சும்போது வாயில் வரும் நஸ்யௌஷதம் முதலியதை அப் படியே துப்பிவிட வேண்டும். 43, 44.

ப்ரதிமர்சத்தின் உபயோகங்கள்:—தேகம் மெலிந்தவர்களுக்கும், நாவ றட்சி யுள்ளவருக்கும், பாலருக்கும், வயது சென்றவர்களுக்கும் ப்ரதிமர்சம் ஏற்றது. தோளுக்கு மேலுள்ள அவயவங்களின் பெரும் பான்மையான வியாதிகளுக்கும் ப்ரதிமர்சமே ஏற்ற நஸ்யமாகும்; இதை முறைப்படி செய்துவந்தால் நரை திரை முதலியதை யுண்டாக்கும் கிழத்தனமும் சீக்கிர முண்டாகாது; நேத்திரம் முதலிய இந்த்ரியங்களும் பலம் பெறும். 45½.

விபீதகாதி நஸ்யம்:—தான்றிக்காய், வேம்பு, பெருங்குமிழன், கடுக் காய், நறுவிலி, காகோலீ இவை ஒவ்வொன்றிலும் தனித்தனியே தைலம் காய்ச்சப்பட்டு நஸ்யமிடப் படுமானுல் மயிர்கள் நரைப்பதைத் தடுக்க லாம். 46½.

நஸ்யம் செய்யு முறை:—நஸ்யம் நிறைவேற்றும் முறை இங்கு கூறப் படுகின்றது:-நஸ்யம் செய்வதற்கான இடம் அதிக வாயு வீசாததாகவும், புழுதி முதலியவை படியாததாகவும் இருக்கவேண்டும். பிணியாளி பற்களை முன்னதாய்த் துலக்கிக் கொண்டு, சோதந சிகித்ஸையினுல் உடலை நிர்மல மாக வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு வைத்தியன் தூமபானத்தினுல் தொண்டையைச் சுத்தி செய்து, முகத்தையும் வியர்க்கப்பண்ணி, பிணி யாளியை மல்லாந்துப் படுக்கவைத்து, தலையைப் பின்புறமாகச் சாய்க்கச் சொல்லி, கை கால்களையும் நன்றாக நீட்டிக்கொள்ளச் செய்யவும்; பிறகு வைத்தியன் கோயாளியின் கண்களை வஸ்திரத்தினுல் மறைத்துக் கட்டி, மூக்கின் முனையை உயரத் தூக்கி நஸ்யத்தைப் பிரயோகிக்க வேண்டும்; இளஞ் சூடான ஔஷதத்தைப் பொன் வெள்ளி முதலியவற்றுலான சிறிது நீண்ட சிப்பியினுலாவது, முத்துச் சிப்பியினுலாவது, பஞ்சு முதலியவற்றில் தோய்த்துக் கொண்டாவது, வேறுவித யுக்தியினுலாவது ஒரு தடவையில் மூக்குக்குள் தாரையாக விடவேண்டும். நஸ்யங்கள் பிரயோகிக்கப் படுகையில் தலையை அசைத்தல், கோபித்தல், பேசுதல், மூக்கை உறிஞ்சுதல், சிரித்தல் இவை கூடா; இவற்றைச் செய்தால், மூக்கில் பிரயோகித்த ஸ்நேஹம் உட் செல்லாது; அதனுல் இருமல், பிரதிச்யாயம், தலைநோய், கண்ணோய் முதலிய வைகளும் ஸம்பவிக்கும். தொண்டைக்கு மேற்புறத்திலும் மூக்கின் அடி த்வாரத்திலுமுள்ள சிருங்காடகம்[1] என்கிற பாகத்தை ஔஷதம் நன்றாகப் பரிசித்து ஈரமாக்குமளவும் அதை நாசியினுள் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்; அதை விழுங்கக் கூடாது; அவரவர்களுடைய சக்திக்கியன்ற வாறு ஐந்து மாத்திராகாலமோ, ஏழு மாத்திராகாலமோ, பத்து மாத்திராகாலமோ ஔஷதத்தை நாசியினுள் வைத்துக் கொண்டிருந்து நாசி, முகம் இவற்றுள் சேர்ந்துள்ள கபம் முதலிய தோஷங்களை உட்கார்ந்து கொண்டு காறித்துப்பி விடவும்; மூக்கின் வலது புறத்தைப் பிடித்துக் கொண்டு இடது மூக்கை இடது பக்கவாட்டிலும், இடது நாசியை அழுத்திக் கொண்டு வலது நாசியை வலது பக்கவாட்டிலும் நன்றாகச் சிந்தவேண்டும்; ஆனுல் தனக்கு நேர் எதிரில் சிந்தக்கூடாது. நஸ்யம் நிறைவேறியவுடனே மனவருத்த முண்டாவதையும், இரஜோகுணம் முதலியவற்றின் எழுச்சி

1. சிருங்காடகம்:—மூக்கின் உட்புறத்து த்வாரமும், காது தொண்டை இவற்றின் த்வாரங்களும் ஒன்று கூடும் இடம்.

யால் கோபம் நேரிடுவதையும் விலக்க வேண்டும்; நூறு நிமிஷங்களளவும் நித்திரையின்றி மல்லாந்து படித்துக் கொண்டிருக்கவும். விரேசந நஸ்யம் செய்த பிறகு கூட இவ்விதம் பண்ண வேண்டியதுடன் தூமபானமாவது, கபளக்ரஹமாவது செய்வதும் நலம். 47—56.

நஸ்யம் நன்கு செய்ததன் முக்கியக் குறிகளும் பிறகு செய்யவேண் டிய உபசாரங்களும்:—முறைப்படி நஸ்யமிடப்பட்டதற்கு மூன்று முக்கிய மான குறிகளை சாஸ்திரஞ்ஞர் கூறுவர்; அவை—சுத்தியோகம், ஹீந யோகம், அதியோகம் என்பவையாம். (1) மனது இலகுவாயிருப்பதாக உணர்ச்சியுண்டாதல்; நாசி, செவி, நேத்திரம், தொண்டை முதலிய த்வா ரங்கள் சுத்தமாதல்; தீர்க்கவேண்டிய வியாதி சாந்தமாதல்; மனதும் இந்த்ரி யங்களும் தெளிவடைதல்; ஆக இவை சிரஸ்ஸு சுத்தியானதன் குறிகளாம். (2) கண்டத்திற்கு மேலுள்ள அவயவங்களில் ஒருவித அரிப்பு, அவ்வவயங் களில் எதேனும் கசிவுகளுண்டாதல், பாரமாயிருப்பதுபோலத் தோற்றுதல், கண் முதலிய இந்த்ரிய த்வாரங்களிலிருந்து கபம் மிகக் கசிதல் என்பவை சிரஸ்ஸு சுத்தியாகாமலிருப்பதை—என்றுல் ஹீநயோகத்தை—அறிவிக் கும் குறிகளாம். (3) உருகிய மூளை போன்ற பதார்த்தம் மூக்கு முதலானதி லிருந்து வெளி வருதல், வாயு விருத்தியாதல், இந்த்ரியங்கள் ப்ரகாசியடை தல், சிரஸ்ஸு சூரியமயமாயிருப்பது போன்ற உணர்ச்சி என்னும் இவை அதியோகக் குறிகளாம். சிரஸ்ஸு நன்கு சுத்தமாகாமலிருந்தால் கபஹர மான சிகித்ஸையும், மிதமிஞ்சி சுத்தி செய்திருந்தால் வாதஹரமான சிகித் ஸையும் அனுகூலமாயிருக்கும்; சுத்தியாயிருந்தால் க்ருத ஸம்பந்தமான ஔஷதத்தை நஸ்யமாக உபயோகிப்பது நலம். 57—61.

நஸ்யத்தில் அதிஸ்நிக்தத்தைக் குறிகளும் அதன் பரிஹாரமும்:—மிதமிஞ்சி ஸ்நேஹ நஸ்யத்தைப் பிரயோகிப்பதால் கபம் அதிகமாகக் கசியும்; சிரோ பாரமுண்டாகும்; இந்த்ரியங்கள் விகாரங்கொள்ளும். இக் குறிகள் கண் டால் ரூக்ஷணமான நஸ்யம் பிரயோகிக்கவேண்டும்; சரீரத்திற்கு ஸ்நிக்தத் தன்மை யுண்டாக்காத ஆஹாரங்களையும் கொடுத்து, நஸ்யத்திற்குப் பிறகு செய்யவேண்டிய இதர உபசாரங்களையும் செய்யவேண்டும். 62½.

பஞ்ச கர்மங்கள்:—இதுவரையிலும் வமநம், விரேசநம், நிரூஹவஸ்தி, அநுவாஸநவஸ்தி, நஸ்யம் என்று சரீரத்தைச் சுத்தி செய்வதற்கேற்ற ஐந்து வித சிகித்ஸாக்ரமங்கள் கூறப்பட்டன; இவ்வைந்தையும் முனீச்வரர்கள் 'பஞ்சகர்மங்கள்' என்பார்கள். 63½.

ஒன்பதாம் அத்தியாயம்.

தூமபான விதி.

ஆறுவித தூமங்கள்:—வியாதிகளில் பிரயோகிக்கப்படும் தூமமானது சமநம், ப்ருஹ்மணம், ரேசநம், காஸஹரம், வாமநம், வ்ரணதூபநம் என்று ஆறுவிதமாகக் கூறப்படுகிறது. சமநமென்னும் தூமத்திற்கு மத்யம தூமம், ப்ராயோகிக தூமம் என்று வேறிரண்டு பெயர்களுண்டு. அவ்விதமே ப்ருஹ்மணத்திற்கு ஸ்நேஹந தூமம், மிருது தூமம் என்றும் வேறு இரண்டு பெயர்கள் வழங்கப்படும். ரேசநதூமத்திற்கும் சோதந தூமம், தீக்ஷ்ண தூமம் என்று வேறு பெயர்கள் உண்டு. 1—2½.

தூமபானத்திற்குத் தகாதவர்கள் :—மிகவும் சோர்ந்துபோனவர், பயந்தவர், துயரமுள்ளவர், அப்பொழுதே வஸ்தி செய்துகொண்டவர், விரேசிகித்ஸை செய்துகொண்டவர், இரவில் கண்விழித்தவர், நாவறட்சியுள்ளவர், சரீரதாபமுள்ளவர், வாயுலர்ந்து வருந்துபவர், மஹோதரம் முதலிய உதரரோகமுள்ளவர், சிரஸ்ஸில் தாபமதிகரித்தவர், திமிர மென்னும் நேத்திரரோகமுடையவர், வாந்தி செய்பவர், வயிற்றுப்பொருமலுள்ளவர், உரகூத வியாதியினால் வருந்துபவர், பிரமேஹரோகி, பாண்டு ரோகி, கர்ப்பிணி, ரூக்ஷ சரீரமுள்ளவர், தேகம் மெலிந்தவர், பால்-தேன்-நெய் ஆஸவம் முதலிய மதுவகைகள், அன்னம்-தயிர்-மத்வியம் ஆகியவற்றை உட்கொண்டவர், சிறுவர், கிழவர் ஆகிய இவர்கள் தூமபானத்திற்கு உரிய வாகார். 3—6.

முறைதவறிய தூமபானத்திற்குப் பரிஹாரங்கள் :—காலம் தவறியும் அளவு மீறியும் தூமமுட்கொள்வதால் அநேகம் தீங்குகள் தோன்றும். அத்தீங்குகளில் க்ருதபானம் செய்தல், நஸ்யமிடுதல், அஞ்ஜனமிடுதல், தர்ப்பண சிகித்ஸை இவற்றை உபயோகிக்கவேண்டும்; மேலும் க்ருதம், கருப்பஞ்சாறு, திராக்ஷை, சர்க்கரை சேர்த்து செய்த பானகம், பால் இவற்றில் ஏதேனும் ஒன்றையாவது, மதுரரஸமுள்ள வேறு பதார்த்தங்களையாவது, புளிப்பான பதார்த்தங்களையாவது அக்கோளாறுகளைத் தணிப்பதற்கு உபயோகிக்கலாம். 7—8.

தூமபானத்திற்கேற்ற வயது :—தூமபானம் பன்னிரண்டாம் வயது முதல் உபயோகிக்கக்கூடியது; எண்பது வயதுக்குப் பிறகு அதை உபயோகிக்கக்கூடாது. 8½.

தூமபானத்தின் பொதுவான உபயோகங்கள் :—தூமத்தை முறைதவறுமல் பிரயோகித்தால் காஸம், ச்வாஸம், பிரதிச்யாயம், மன்யாஸ்தம்பம், ஹநுஸ்தம்பம், தலைவலி, வாதரோகங்கள், கபரோகங்கள் இவை தீருமென்று பொதுவாகக் கூறலாம். தூமத்தைத் தகுந்தவாறு பிரயோகித்து வருபருக்கு நேத்திரம் முதலிய இந்த்ரியங்களும் மனதும் தெளிவுறும்; வாக்கும் ஸ்பஷ்டமாகும்; தலைமயிர் மீசை பற்கள் இவை திடப்படும்; முகமும் ஸுகந்தமுள்ளதாயிருக்கும். 9—10½.

தூம நாடியின் உருவம் :—தூமபானத்திற்குபயோகமான குழாய் 'தூம நாடி' எனப்படும். தூமநாடியில் மூன்று கணுக்களை ஏற்படுத்தி அதை மூன்று பாகமாக்க வேண்டும். அது ஒரு சுண்டுவிரல் பருமனுடையதாகவும், அதன் த்வாரம் ஒரு கடலை நுழையக்கூடியதாகவும் அமைக்கவேண்டும். சமநதூமத்திற்கான தூமநாடியை ரோகியின் விரல்களால் நாற்பது அங்குலம் நீளமுடையதாகச் செய்யவேண்டும்; மந்ததூமத்திற்கு முப்பத்திரண்டு அங்குலம் நீளமாகவும், தீக்ஷ்ணதூமத்திற்கு இருபத்து நான்கு அங்குலமுடையதாகவும், காஸஹரமான தூமத்திற்குப் பதினாறு அங்குலமுள்ளதாகவும், வமநதூமத்திற்கும் வ்ரணதூபனத்திற்கும் பத்து அங்குலம் நீளமாகவும் செய்யப்படவேண்டும். அதன் பருமன் பெருங்கடலையின் சுற்றளவுக்கு ஸமமாகவும், அதன் த்வாரம் ஒரு கொள் நுழையக்கூடியதாகவும் இருக்கவேண்டும். 11—14.

தூமவர்த்தியும் அதன் உபயோகங்களும் :—தூமம் செய்வதற்கான ஔஷதச் சரக்குகளை நன்கு அரைத்து, கால் பலம் கல்கத்தை பன்னிரண்டு அங்குலம் நீளமுடைய வழுமுண்ட ஓர் ஈர்க்கின்மேல் எட்டு அங்குலமளவும் தடவி, நிழலில் உலர்த்தி, அதனுள் அடங்கியுள்ள ஈர்க்கை மெதுவாகக் கழற்றிவிட்டு, குழாய்போன்ற வர்த்தியை மட்டும் எடுத்துக்கொள்ளவும். பிறகு அந்த வர்த்தியை ஏதேனும் தகுந்த ஸ்நேஹத்தில் நனைத்து, அதன் முனையை அக்ளியிற் காட்டிப் பற்றவைத்து, மற்றொரு முனையை முற்கூறிய நாடியாகும் நேத்திரத்தில் உட்செலுத்தி, அதிலிருந்து வரும் தூமத்தை வாயால் உட்கொண்டு, அத்தூமத்தை வாயாலேயே வெளியிடவேண்டும். பிறகு நாசிகளால் உட்கொண்டு அதையும் வாயாலேயே வெளியிடவேண்டும். 15—17½.

தூமமுபயோகிக்க மற்றொருவித கருவி:—ஓர் அகன்ற அகலில் விரணங்களுக்கு தூமம் போடுவதற்கு உபயோகமான ஔஷதச் சரக்குகளைக் கல்கமாகச் செய்து வைத்து, நெருப்புத்தழல்களையும் போட்டு, அதன் மேல் நடுவில் த்வாரத்துடன் கூடிய மற்றொரு அகலை மூடவேண்டும்; பிறகு அந்த த்வாரத்தில் தூமநாடியின் ஒரு முனையை நுழைத்து, அக்குழாயினூடே வரும் புகையைக்கொண்டே விரணங்களுக்குத் தூபமிடவேண்டும். 18½.

அந்தந்த தூமத்திற்குத் தகுந்த கல்க த்ரவ்யங்கள் :—சமநதூமத்திற்கு ஸ்நேஹம் கலந்த ஏலாதிகண கல்கமும்[1], மந்ததூமத்திற்கு ஸர்ஜரஸமும், தீக்ஷ்ணதூமத்திற்கு மிளகு, காஸஹர தூமத்திற்கு மிளகு, காட்டுத்திப்பிலி இவற்றின் கல்கமும், வமநதூமத்திற்கு ஸ்நாயு வென்னும் ஒருவித வன்மையான தசை, சர்மம் முதலியதின் கல்கமும், வ்ரணஹரமான தூபத்திற்கு வேம்பு வசம்பு முதலிய பொருட்களின் கல்கமும் தகுந்தவையாம். 19—20½.

கிருஹங்களில் தூபம் போடுவதற்கேற்ற வஸ்துக்கள் :—ரோகங்களை விலக்க கிருஹங்களில் தூபம் போடுவதற்கேற்ற சரக்குகளாவன :—மயிலிறகு, வேப்பிலை, கண்டங்கத்திரிக்காய், மிளகு, பெருங்காயம், ஜடாமாம்ஸி, பரித்திக்கொட்டை, ஆட்டு மயிர், பாம்புத்தோல், பூனையின் மலம், யானையின் தந்தம் இவற்றைச் சூர்ணம் செய்து, நெய்யிற் கலந்து, வீடுகளில் தூபம் போட ஸகல பாலக்ரஹங்களும் தீரும்; பிசாசங்களையும், ராக்ஷஸர்களையும், ஸகல ஜ்வரங்களையுங்கூட போக்குவதற்கு இவ்வித தூபங்கள் ஏற்றவையாம். 21—24.

தூமபானத்தினாலான தீங்குகளின் பரிஹாரமுறை :—தூமபானத்தினால் நேரிடும் தீங்குகளில் ரேசந நஸ்யத்திற்குக் கூறிய பரிஹார முறைகளையே உபயோகிக்கவேண்டும். 24½.

தூம நாடிக்கேற்ற வஸ்துக்கள் :—தூமபானத்திற்கான நாடிகளை அல்லது நேத்திரங்களைச் செய்வதற்குப் பலவிதமான லோஹங்களையும் சவுட்டுக்கோரை அல்லதுமூங்கில் முதலியவற்றையும் உபயோகிக்கலாம். 25.

---

1 ஏலாதிகணம்—ஏலம், சிற்றேலம், வாஸனைப்புல், கோஷ்டம், ஜடாமாம்ஸி, வெட்டிவேர், காவட்டம்புல், நாகப்பூ, கச்சோரம், கருவாப்பட்டை, இலவங்கப்பத்திரி, கிரந்திதகரம், சாரமந்தி, போளம், புலியுகிரென்னும் வாஸனை வஸ்து, தேவதாரு, அகில், ஸாளவிருக்ஷம், குங்குமப்பூ,

பத்தாம் அத்தியாயம்

கண்டூஷாதி விதி [1].

நான்குவித கண்டூஷ கபளக்ரஹங்கள் :—(1) ஸ்நேஹந கண்டூஷம், சமந கண்டூஷம், சோதந கண்டூஷம், ரோபணகண்டூஷம் என்று கண்டூஷ விதி நான்கு வகை. (2) கபளக்ரஹமும் அவ்விதமே ஸ்நேஹம் முசலான நான்குவித பேதங்களுடையதாம். 1

கண்டூஷங்களுக்கான வஸ்துக்களும் வியாதிகளும் :—வாதரோகங்களில் ஸ்நிக்தமும் உஷ்ணமுமான திரவியங்களால் ஸ்நேஹந கண்டூஷமும், பித்தரோகங்களில் மதுரமும் சீதளமுமான வஸ்துக்களைக்கொண்டு சமநம் அல்லது ப்ரஸாதநம் என்கிற கண்டூஷமும், கபரோகங்களில் காரம் புளிப்பு உப்பு இவ்வித சுவையுடன் கூடியவையும், உஷ்ண வீர்யமுள்ளவையுமான பதார்த்தங்களால் சோதந கண்டூஷமும், விரணங்களில் துவர்ப்பு கசப்பு மதுரம் இச்சுவையுள்ள வஸ்துக்களால் இளஞ்சூடாக ரோபண கண்டூஷமும் செய்யவேண்டும். 2½.

கண்டூஷ கபளங்களின் பேதம் :—நான்குவித கண்டூஷங்களும், கபளக்ரஹங்களும் கூறப்பட்டன. வாய் நிரம்பவும் அசைக்க முடியாமல் ஏதேனும் திரவவஸ்துவைச் சேர்த்து செய்யப்படும் முறை 'கண்டூஷம்' என்றும், அசைவதாயிருந்தால் அதுவே 'கபளம்' என்றும் வழங்கப்படும்; ஆனால் கண்டூஷம் திரவ வஸ்துக்களாலும், கபளக்ரஹம் கல்கத்தினாலும் செய்யவேண்டியவை. மேலும் கண்டூஷமாக உபயோகிக்கப்படும் திரவ வஸ்துக்களில் கோலப் பிரமாணம் சூர்ணமும், கபளக்ரஹத்தில் கர்ஷப் பிரமாணம் கல்க வஸ்துவும் சேர்க்கவேண்டும். 3—5.

கண்டூஷம் செய்யும் முறை முதலியது :—கண்டூஷம், கபளம் முதலியவை ஐந்தாவது வயது முதற்கொண்டு செய்யத்தகுந்தவை. நெற்றிக்கட்டு, தொண்டை முதலியவற்றில் ஸ்வேதநம் செய்துகொண்டு, ஆஸனத்தில் நன்றாக உட்கார்ந்தவாறு கண்டூஷம் செய்துகொள்ளவேண்டும். வாத வியாதிகளில் மூன்று முறையும், பித்த வியாதிகளில் ஐந்து முறையும், கபவியாதிகளில் ஏழு முறையும் கண்டூஷம் செய்யவேண்டும். மேலும் எப்பொழுது வாயில் கபம் நிரம்பவும் சுரந்துவிடுகின்றதோ, தோஷமாவது நிதைவுற்று ஸௌக்கியமுண்டானதாகத் தோற்றுகின்றதோ, நேத்ரத்திலிருந்தும் நாசியிலிருந்தும் கபம் முதலியது கசிந்து வெளிவருகின்றதோ அதுவரையில் கண்டூஷத்ரவத்தைக் கொப்புளிக்காமல் வாயில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும். கண்டூஷத்தைப் பிரயோகிப்பதற்கு இவை பொது விதிகளாம். 6—7½.

சில வியாதிகளுக்கேற்ற கண்டூஷங்கள் :—எள்ளுப் பிண்ணுக்குக் கரைத்த ஜலம், பால், ஏதேனும் ஸ்நேஹம் இவற்றுள் ஏதாவது ஒன்று ஸ்நேஹகண்டூஷம் செய்வதற்கு ஏற்றதாகும். எள், கருநெய்தல், நெய், சர்க்கரை, பால் இவற்றில் ஏதாவது ஒன்றை ஸம அளவான தேனோடு

கருங்கச்சோரம், குங்கிலியம், ஸர்ஜரஸம், குந்துருகம், சர்க்கொன்றை, நாககேஸரம் இவற்றின் சேர்க்கை.

1. கண்டூஷம்:—ரோகபரிஹாரத்திற்காண ஏதாவது திரவ வஸ்துவை வாயில் வைத்துக்கொண்டு கொப்புளிக்க உபயோகிக்கும் முறை.

கலந்து கண்டூஷமாக உபயோகித்தால் வாயிலுண்டான எரித்தல் தணியும். தேனோமாத்திரம் கண்டூஷமாக உபயோகித்தால் முகம் நிர்மலமாகும். வாயிலுண்டான விரணங்களும், எரித்தலும், நாவறட்சியும் நீங்கும். விஷ தோஷங்களிலும், க்ஷாரம் அக்னி இவற்றாலான அழற்சிகளிலும் நெய்யையாவது பாலையாவது கண்டூஷமாக உபயோகிக்கலாம். பற்கள் பலஹீனமடைந்து ஆட்டங்கொள்ளுமானால் அதில் தைலம், இந்துப்பு இவற்றைக் கலந்து கண்டூஷம் செய்வது நலம். நாவறட்சி, அரோசகம் இவற்றில் காஞ்ஜிகமென்னும் காடியை கண்டூஷம் செய்ய அவை சாந்தமாகும். கபம் பிரகோபித்திருந்தால் இந்துப்பு, த்ரிகடு, வெண்கடுகு, இஞ்சி இவற்றைச் சேர்த்து கண்டூஷம் செய்யலாம். கபம் பிரகோபித்திருக்கையிலும், இரத்தபித்த ரோகத்திலும் த்ரிபலை, தேன் இவை சேர்ந்த கண்டூஷம் சிறந்தது. மரமஞ்சள், சீந்தில், த்ரிபலை, திராக்ஷை, ஜாதிபத்ரி, பூனைக்காலி இவற்றை க்வாதம் செய்து ஆறியபிறகு, அதில் ஆறில் ஒரு பங்கு தேனையும் கலந்து கண்டூஷமாக உபயோகித்தால் ஸந்நிபாதத்தினாலான வாய்ப்புண் தீரும். 8—14.

ப்ரதிஸாரண-கபளக்ரஹங்கள் :—எந்த ஔஷதங்களால் கண்டூஷம் செய்யப்படுகிறதோ அதே ஔஷதங்களால் 'ப்ரதிஸாரணமும்[1]' 'கபளக்ரஹமும்' செய்யலாம். 15.

மாதுலுங்காதி கபளக்ரஹம் :—கொடிமாதுளையின் சோறு, இந்துப்பு, மிளகு இவற்றைச் சேர்த்து கபளக்ரஹம் செய்ய, உணர்ச்சியின்மையும் கபவாதங்களாலுண்டாகும் அரோசகமும் நீங்கும். 16.

ப்ரதிஸாரணம் மூன்று விதம் :—கல்கம், லேஹ்யம், சூர்ணம் என்று ப்ரதிஸாரணம் மூன்று வகைப்படும். முகத்திலுண்டாகும் விரணங்களைப் போக்குவதற்கே ப்ரதிஸாரணத்திற்கான ஔஷதங்களை விரல்முனையில் எடுத்து முகத்தினுள் அந்தந்த வியாதிகளுக்கேற்றவாறு தடவவேண்டும். 17.

கோஷ்டாதி ப்ரதிஸாரணம் :—கோஷ்டம், மரமஞ்சள், மஞ்ஜிஷ்டி, வட்டத்திருப்பி, கடுகரோகிணி, சதகுப்பி, பெருங்குரும்பை, கோரைக்கிழங்கு, வெள்ளிலோத்தி இவற்றைச் சூர்ணம் செய்து ப்ரதிஸாரணம் செய்தால், வாயிலுண்டாகும் இரத்தப் பெருக்கு, பல்வலி, வீக்கம், எரித்தல் முதலியவை நிவ்ருத்தியாகும். 18½.

கண்டூஷத்தின் மூன்று யோகங்கள்:—(1) கண்டூஷத்தை வேண்டிய அளவு செய்யாவிட்டால் அது ஹீநயோகம் எனப்படும்; ஹீநயோகத்தினால் கபம் அதிகம் சுரக்கும், சுவையறியமுடியாமற்போம், அரோசகமும் உண்டாகும். (2) அளவு மீறி செய்யப்படுமானால் அது அதியோகம் எனப்படும்; அதனால் வாயில் புண்களும், நாவறட்சியும், தாஹமும், சோர்வும் ஸம்பவிக்கும். (3) கண்டூஷத்தினால் தோஷங்கள் நன்றாக வெளிப்பட்டு ஆரோக்கியமுண்டானால் அது ஸம்யக்யோகம் எனப்படும்; அப்பொழுது வியாதி நிவ்ருத்தியாகும்; மனதுக்கு திருப்தியுண்டாம்; முகம்

---

1. ப்ரதிஸாரணம்—வாயினுட்புறத்தில் முக்கியமாய் தொண்டையினுள் கபம் அதிகரித்துண்டாகும் வீக்கம் அல்லது விரணம் முதலியவற்றைப் போக்குவதற்குப் பூசப்படும் ஔஷதம்.

நிர்மலமாவதுடன் தனது காரியங்களை எளிதில் செய்வதற்கேற்ற வல்லமையும் எற்படும்; [1] இந்திரியங்களெல்லாம் தெளிவுறும்; 19—20½.

பதினோராம் அத்தியாயம்

லேபநாதி விதி.

லேபநமும் முன்றுவித முகலேபநமும்:—லேபநத்தையே [2] லேபம் என்றும், ஆலேபநம் என்றும் கூறுவர். அதில் முகத்தில் பூசப்படுவது 'முகலேபநம்' என்று சொல்லப்படும்; முகலேபமானது தோஷஹரம், விஷஹரம், வர்ண்யம் என்று மூன்று வகைப்படும். அந்த லேபநத்தை அரை அங்குலம் கனமாகவும், அதில் மூன்றிலொரு பங்கு கனமாகவும், அல்லது அதில் நான்கில் ஒரு பங்கு களமுள்ளதாகவும் முகத்திற் பூசவேண்டும். முகலேபநம் ஈரமாக இருக்கும் வரையிலும் அது வியாதிகளை அகற்றும்; உலர்ந்துவிட்டால் முகத்தின் பொலிவைப் போக்கிவிடும். 1, 2.

புநர்நவாதி லேபம்:—வெள்ளைச்சாறடை, மரமஞ்சள், சுக்கு, வெண்கடுகு, முருங்கைப் பட்டை இவற்றைக் காடிவிட்டு அரைத்து லேபநம் செய்ய ஸகல சோதைகளும் தீரும். 3.

விபீதபனமஜ்ஜா லேபநம்:—தான்றிக்காயின் விதையை அரைத்து லேபநம் செய்ய முகத்திலுண்டாகும் அழற்சி, வேதனை முதலியவை நிவருத்தியாகும். 3½.

தசாங்க லேபநம்:—காட்டுவாகைப்பூ, அதிமதுரம், கிரந்திதகரம், இரததசந்தனம், எலக்காய், ஜடாமாம்ஸி, மஞ்சள், மரமஞ்சள், கோஷ்டம், வெட்டிவேர் இப் பத்துச் சரக்குகளின் சேர்க்கைக்கு 'தசாங்கம்' எனப் பெயர்; இவற்றை வெகு நுண்மையாகப் பொடி செய்து, ஐந்தில் ஒரு பங்கு நெய் கலந்து, ஜலமும் சேர்த்து லேபமாகச் செய்யலாம். இதனால் விஸர்ப்பங்கள், விஷ ஸம்பந்தமான கொப்புளங்கள், வீக்கங்கள், மற்றும் கெட்டுப்போன புண்கள் இவை நீங்கும். 4—6.

தீலாதி லேபங்கள்:—(1) எள், ஆட்டுப்பால் இரண்டையும் அரைத்து, அத்துடன் வெண்ணெயையும் கலந்து லேபமாக உபயோகித்தால் சேராங் கொட்டைப் பாலாலுண்டான வீக்கம் தீரும். (1) கருத்த மண், எள் இவற்றை அரைத்து வெண்ணெயைக் கலந்தும் இவ்வீக்கத்தின் மேலுபயோகிக்க நற்குண முண்டாகும். 7

லாங்கல்யாதி லேபம்:—நலப்பைக் கிழங்கு [3], அதிவிடயம், சுரைவேர், புடலம்வேர், கொடிமாதுளை இவற்றை கன்றுகக் காஞ்ஜிநம் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினால், பூச்சிக்கடிகளாலுண்டாகும் கொப்புளங்கள் சாந்தமாகும். 8.

---

1. வாயில் கபம் அதிகரித்து விரணங்களோ வீக்கமோ உண்டாயிருந்தால் வாயை அசைப்பதற்கும், உணவுகளை மெல்லுவதற்கும் முடியாதல்லவா? கண்டூஷத்தை நன்கு நிறைவேற்றிய பிறகு அவ்வித கஷ்டம் நிவாரணமாவதால், முகம் தனது வேலையை நன்கு நிறைவேற்றவல்லதாகிற தென்று கூறப்பட்டதென்க.

2. லேபநம்—பூச்சு மருந்து; களிம்பு முதலியது.

3. லாங்கலீ—இதை தேங்காய் என்று சிலரும், கலப்பைக் கிழங்கென்று சிலரும், நீர்த்திப்பிலியென்று சிலரும் வழங்குவர்.

ரக்தசந்தனாதி லேபம்:—இரக்தசந்தனம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கோஷ்டம், ஞாழல், ஆலமரமொட்டுகள், சிறுகடலை இவற்றை லேபமாகச் செய்து உபயோகித்தால் வ்யங்கமென்னும் வங்கு குணமாவதுடன் முகத்திற்கு ஒருவித காந்தியும் உண்டாகும். 9.

மாதுலுங்கமூலாதி லேபம்:—கொம்மட்டி மாதுளையின் வேர், மனச்சிலை, நெய், சாணிப்பால் இவற்றை லேபமாகச் செய்து உபயோகிக்க வ்யங்கம், கட்டிகள், காலமென்னும் கறுப்பான், மற்றும் சர்ம வியாதி இவை தீருவதுடன் முககாந்தியும் உண்டாகும். 10.

லோத்ராதி லேபநம்:—வெள்ளிலோத்தி, கொத்துமல்லி விதை, வசம்பு இவற்றின் லேபத்தினால் யௌவனப் பருவத்துப் பருக்கள் போய்விடும். மிளகையும் கோரோசனையையும் சேர்த்தும் முகப்பருக்களில் லேபமாக உபயோகிக்கலாம். 11.

ஸித்தார்த்தகாதி லேபம்:—வெண்கடுகு, வசம்பு, வெள்ளிலோத்தி, இந்துப்பு இவற்றையாவது, மருதம்பட்டையைத் தேனில் இழைத்தாவது, மஞ்ஜிஷ்டியைத் தேனில் இழைத்தாவது, வெள்ளைக் குதிரையின் குளம்பை எரித்து அக்கரியை வெண்ணெயிற் கலந்தாவது வ்யங்கங்களில் உபயோகிக்கலாம். 12½.

அர்க்கக்ஷீராதி லேபம்:—மஞ்சளைப் பொடி செய்து எருக்கம் பாலோடு கலந்து லேபநம் செய்வதால், முகத்தில் வெகு நாட்களாயுண்டாயிருக்கும் கருநிறம் நிச்சயமாய் நிவருத்தியாகும். 13½.

வடபத்ராதி லேபம்:—பழுத்த ஆலிலை, குருக்கத்திப்பூ, இரத்த சந்தனம், கோஷ்டம், மரமஞ்சள், வெள்ளிலோத்தி இவற்றை லேபமாகச் செய்து உபயோகிக்க யுவாநபிடகா, வ்யங்கம், நீலிகா என்னும் பரு இவை தீரும். 14—15.

பிண்யாகாதி லேபம்:—பழைய எள்ளுப் பிண்ணாக்கு, கோழியின் மலம் இவ்விரண்டையும் பசுவின் மூத்திரத்தில் அரைத்து, லேபமாக உபயோகிக்க அரும்ஷிகா என்கிற விரணங்கள் நீங்கும். 16.

கதிராதி லேபம்:—கருங்காலிப்பட்டை, வேப்பம்பட்டை, நாவல் பட்டை இவற்றைப் பசு மூத்திரத்தினால் அரைத்து, அல்லது குடமல் விதைப்பட்டை, இந்துப்பு இவ்விரண்டையும் சேர்த்து அரைத்து லேபமாக உபயோகிக்க அரும்ஷிகா சாந்தமாகும். 17.

பீரியாள பீஜாதி லேபம்:—முற்றளம் விதை, அதிமதுரம், கோஷ்டம், உளுந்து, இந்துப்பு, தேன் இவற்றின் லேபத்தை கபாலத்தின்மேல் சர்மம் வெடித்துப் போகும்போது உபயோகிக்கலாம். 18.

காகஸலேபமும் ஆம்ராபீஜாதி லேபமும்:—கசகசா விதையைப் பால் சேர்த்து அரைத்து லேபமாகப் பூசினால் கபாலசர்மத்தின் வெடிப்பு குணமாகும். அல்லது மாங்கொட்டையின் உட்பருப்பையும் கடுக்காயையும் ஸமபாகமாகச் சூர்ணம் செய்து, பாலில் கலந்து லேபமாக உபயோகித்தாலும் மிகக் குரூரமான வெடிப்பு நிவருத்தியாகும். 19½.

தீக்தபடோலாதி லேபம்:—பேய்ப்புடலின் சாற்றைச் சிரஸ்ஸில் லேபமாக உபயோகித்து வந்தால் இந்த்ரலுப்தம் என்கிற தலைமயிர் உதிர்தல் மூன்று தினங்களில் நிவருத்தியாய்விடும். 20½.

ப்ருஹதீரஸாதிலேபம் முதலியன :—கண்டங்கத்திரியின் சாற்றையும் தேனையும் கலந்து சிரஸ்வில் பூசுவதாலும், குன்றுமணியின் வேர் அல்லது காயையாவது சேராங்கொட்டையின் சாற்றோடு கலந்து லேபநம் செய்வ தாலும் மயிர் உதிர்தல் நின்றுவிடும். 21½.

கோகூஷுராதி லேபம் :—நெரிஞ்சல், எள்ளுப்பூ, இவற்றை ஸம யெடை தேன் நெய்களோடு கலந்து சிரஸ்வில் லேபநம் செய்ய தலைமயிர் நன்றாக வளரும். 22½.

கஜதந்தமஷீ லேபம் :—யானையின் தந்தத்தை எரித்து மையாகச் செய்து, அத்துடன் இரஸாஞ்ஜனம் ஆட்டுப்பால் இவற்றையும் சேர்த்துக் குழைத்து லேபநம் செய்ய உள்ளங்கை முதலான விடங்களிலும் மயிர்கள் முளைக்கக்கூடும். 23½.

யஷ்டீயாதி லேபம் :—அதிமதுரம், நெய்தல், திராக்ஷை, எண்ணெய், நெய், பால் இவற்றை ஒருமிக்க அரைத்தெடுத்து, சிரஸ்வில் தடவிவந்தால் மயிருறுர்தல் நின்றுபோய் அவை செழிப்பாகவும் திடமாகவும் வளர ஆரம் பிக்கும். 24½.

ரோமஸாதஜந்ய லேபம் :—நாற்கால் ஜந்துக்களுடைய [1] சர்மம், ரோமம், நகம், கொம்பு, எலும்பு இவற்றை பஸ்மம் செய்து அந்த பஸ்மத்தை எண்ணெயிற் கலந்து பூசிவந்தால் தலைமயிர் நன்றாக வளரும். 25.

இந்த்ரவாருணீ தைல லேபம் :—பேய்த்தும்மட்டி விதையின் எண் ணெயைச் சிரஸ்வில் தினந்தோறும் தேய்த்து வந்தால், தலைமயிர் வண்டு போல் நன்றாக வளரும். 26½.

அயோரஜஸ்காதி லேபம்:--இரும்புத்தூள், கரிசிலாங்கண்ணி, த்ரிபலை, கறுத்த மண் இவற்றை ஒரு மாதகாலம் கருப்பஞ்சாற்றில் ஊறவைத்து, சிரஸ்வில் தேய்த்து வந்தால் நரைத்த மயிர்கள் கறுநிறங்கொள்ளும் 27½.

தாத்ரீபலாதிலேபம் :—நெல்லிக்கனி மூன்று, கடுக்காய் இரண்டு, தான்றிக்காய் ஒன்று, மாம்பருப்பு ஐந்து, இரும்புத் தூள் ஒரு கர்ஷம் இவ் வனைத்தையும் ஒரு இரும்புப் பாத்திரத்தில் சேர்த்துப் பிசைந்து, இரவில் பனியில் வைத்தெடுக்கவேண்டும். இந்த லேபநம் அகாலத்தில் உண்டா கும் அதிக நரைத்தலையும் சீக்கிரம் போக்கும். 28—29½.

த்ரிபலாதி லேபம் :—த்ரிபலை, அவுரியிலை, அயம், கரிசிலாங்கண்ணி இவற்றை ஸமபாகம் சேர்த்துப் பொடிசெய்து, செம்மறியாட்டின் மூத்திரத் தினால் அரைத்து லேபம் செய்து உபயோகித்தால் தலைமயிர்கள் நன்கு கறுநிறங்கொள்ளும். 30½.

மஹா த்ரிபலாதி லேபம்:—த்ரிபலை, இரும்புத்தூள், மாதுளம்பட்டை, தாமரைக் கிழங்கு இவற்றைத் தனித்தனியே ஐந்து பலம் எடுத்து ஒருமிக் கச் சூர்ணம் செய்து, பதினாறு பிரஸ்தம் கரிசிலாங்கண்ணிச் சாற்றில் கலந்து, ஓர் இரும்புப் பாத்திரத்தில் அனைத்தையும் சேர்த்து பூமிக்குள் ஒரு மாதகாலம் அடக்கம் செய்திருக்கவேண்டும்; பிறகு அதை யெடுத்து வெள்ளாட்டுப்பால் சேர்த்துக் குழைத்து, ஒரு கூர்ச்சத்தில் எடுத்து சிரஸ் வில் இராத்திரியில் தடவி, ஆமணக்கிலைகளால் தலை மயிர்களைச் சுற்றிக் கொண்டு படுக்கவும்; பிறகு காலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிடவும்.

1. இங்கு மஹாம்ருகங்கள் குறிக்கப்படுகின்றன: அவை பன்றி, எருமை, தலை கவிழ்ந்தோடும் ஆண் மான், கறுப்புச்சாரஙள்ள கலைமான், ரோஹித மென்னும் மான், யானை, சவுரிமான், பெரிய சவுரிமான், கட்கமிருகம், பசு போன்ற மான் இவை நாற்கால் ஜந்துக்கள்; இவை மஹா மிருகங்கள்.

இவ்வாறு மூன்று முறை லேபநம் செய்ய நரைத்தல் நிச்சயமாக நிவருத்தி யாகும். 31—34½.

சங்கசூர்ணாதி லேபம் :—சங்க சூர்ணம் இரண்டு பாகம், தாளகம் ஒரு பாகம், மனச்சிலை அரை பாகம், ஸர்ஜக்ஷாரம் ஒரு பாகம் இவற்றை ஜலம் சேர்த்து அரைத்து, தலைமயிர்களை எடுத்துவிட்டுத் தடவி வந்தால், ஏழு வேளைகளில் க்ஷுபணக ஸங்கியாவலியின் [1] சிரஸ்ஸைப்போல் தலையிலுள்ள மயிர்கள் யாவும் உதிர்ந்துவிடும். 35—37

தாளகாதி லேபம் :—தாளகம் இரண்டு சாணம், சங்க சூர்ணம் ஆறு சாணம், பலாசக்ஷாரம் இரண்டு சாணம் இவற்றைச் சேர்த்து, வாழைத் தண்டின் சாற்றாலாவது, எருக்கிலைச் சாற்றாலாவது ஆட்டி, சிரஸ்வில் மயிர்களை சிரைத்துவிட்டு ஏழு முறை லேபநம் செய்து வந்தால் மயிர்கள் முற்றிலும் உதிர்ந்துவிடும். 38, 39.

ஸ்வர்ணபுஷ்பீயாதி லேபம் :—பொன்னுவிதை, அன்னபேதி, வாய் விடங்கம், மனச்சிலை, கோரோசனை, இந்துப்பு இவற்றை அரைத்து லேபம் செய்து வந்தால் வெண் குஷ்டம் தீரும். 40.

வாயஸ்யாதி லேபம் :—மணத்தக்களி, தகரவிதை, கோஷ்டம், திப் பிலி இவற்றை அரைத்து ஆட்டு மூத்திரத்திற் குழைத்துத் தடவிவந்தால் வெண்குஷ்டம் நிவாரணமாகும். 41.

இரண்டாவது தாளகாதி லேபம் :—தாளகம் ஒரு சாணமெடை, வாலுளுவை நான்கு சாணமெடை இரண்டையும் சூர்ணம் செய்து, பசு மூத்திரத்தில் அரைத்துத் தடவ வெண்குஷ்டம் நிவருத்தியாகும். 42.

வாதக்ரீயாதி லேபம்:-கார்ப்போகரிசி, நீர்வஞ்சி, அரக்கு, பேயகத்தி, திப்பிலி, இரஸாஞ்ஜனம், இரும்புத்தூள், எள் இவற்றை ஸமபாகமா யெடுத்து, சூர்ணம் செய்து, பசுக்களின் பித்த நீரால் அரைத்து, உடம்பில் தடவி வர சீக்கிரம் வெண்குஷ்டம் போய்விடும், 43, 44.

இரண்டாவது தாத்ரீயாதி லேபம் :—நெல்லிக்கனி, மட்டிப்பால், யவ க்ஷாரம் இவற்றை அரைத்துக் கலந்து, காடிவிட்டு ஆட்டி, லேபமாக உப யோகிக்க வித்மமென்னும் தேமல் நீங்கும். 45

தார்வ்யாதி லேபம் :—மரமஞ்சள், முள்ளங்கி விதை, தாளகம், தேவ தாரு, வெற்றிலை இவை தனித்தனியே கர்ஷப்பிரமாணம், சங்குப்பொடி ஒரு சாணமெடை இவற்றை ஜலம் விட்டு அரைத்து லேபம் செய்ய எவ்வித தேமலும் தீரும். 46—47.

ஹரீதக்யாதி லேபம் :—கடுக்காய், இந்துப்பு, காவிக்கல், இரஸாஞ்ஜ நம், கறுப்புப்பு இவற்றை ஜலத்தினால் அரைத்து லேபமாகச் செய்து உப யோகிக்க ஸகல நேத்ரரோகங்களும் நிவாரணமாகும். 48.

இரஸாஞ்ஜனாதி தடிகா லேபம் :—இரஸாஞ்ஜனம், த்ரிகடு இவற்றை அரைத்து குளிகை செய்து, நேத்ரங்களுக்குப் போட்டுவந்தால் எரித்த லோடும் தினவோடும் கூடிய அஞ்ஜநாமிகா என்கிறவியாதி நீங்கும். 49.

1. க்ஷுபணக ஸங்கியாவலிகள்—ஜைன ஸங்கியாவலிகள். [அந்த ஸங்கி யாவலிகள் தலைமயிரை வேருடன் பிடுங்கித் தலையை வழுக்கையாக வைத் திருப்பது வழக்கம்].

பாபுத்நாடபிஜாதி குடிகா லேபம் :—தகரவிதை, வாலுளுவை, கடுகு, எள், கோஷ்டம், மரமஞ்சள், கோரைக் கிழங்கு இவற்றைச் சூர்ணம்செய்து மோர்விட்டரைத்துப் பூசுவதால் தத்ரு என்னும் படர்தாமரை, சொறி, விசர்ச்சிகா இவை நீங்கும். 50½.

ஹேமகூடீயாதி லேபம் :—பிரும்மதண்டு விதை, வாய்விடங்கம், லிங்கம், கந்தகம், தகாவிதை, கோஷ்டம், விந்தூரம் இவற்றைச் சூர்ணம் செய்து, ஊமத்தையிலைச் சாற்றிலும், வேப்பிலைச் சாற்றிலும், வெற்றிலைச் சாற்றிலும் தனித்தனியே ஆட்டி லேபம் செய்ய, சிரங்கு, படர்தாமரை, விசர்ச்சிகா, சொறி, ரகஸம் இவை சீக்கிரம் தீரும். 51—53.

தூர்வாதி லேபம் :—(1) அறுகம்புல், கடுக்காய், இந்துப்பு, தகாவிதை, கருங்கஞ்சாங்கோரை இவற்றை மோர் சேர்த்து அரைத்து லேபம் செயதால் சொறியும், படர்தாமரையும் தீரும். (2) அல்லது அறுகம்புல்லையும் மஞ்சளையும் சேர்த்தரைத்துத் தடவி வந்தால் சொறி, சிரங்கு, கிருமிரோகம், படர்தாமரை, சீதபித்தம் இவை நிவ்ருத்தியாகும். 54—55.

ஸித்தார்த்தகாதி லேபம் :—வெண்கடுகு, மஞ்சள், கோஷ்டம், தகாவிதை, எள் இவற்றைக் கடுகெண்ணெயிலுல் ஆட்டி லேபமாக உபயோகித்தால் படர்தாமரை நீங்கும். 56.

ராஸ்நாதி லேபம் :—சிற்றரத்தை, கருநெய்தல், தேவதாரு, வெண் சந்தனம், அதிமதுரம், சிற்றாமுட்டி இவற்றைப் பொடித்து நெய்யையும் பாலையும் சேர்த்து லேபமாகச் செய்து உபயோகிக்க வாததோஷத்திலு லுண்டாகும் விஸர்ப்பம் தீரும். 57.

மிருணாளாதி லேபம் :—தாமரைத்தண்டு, சந்தனம், வெள்ளி லோத்ரம், வெட்டிவேர், தாமரைப்பூ, நெய்தல், நன்னாரி, நெல்லிக்காய், கடுக்காய் இவற்றின் லேபம் பித்த விஸர்ப்பத்தைப் போக்கும். 58.

மூன்றும் த்ரிபலாதி லேபம் :—த்ரிபலை, தாமரைக் கிழங்கு, வெட்டிவேர், வறள்ச்சுண்டி, அலரி, கொறுக்கைவேர், அறுகம்புல் இவற்றை அரைத்து லேபம் செய்ய கபவிஸர்ப்பம் நிவ்ருத்தியாகும். 59.

ஜடாமாம்ஸ்யாதி லேபம்:—ஜடாமாம்ஸி, ஸர்ஜரஸம் என்னும் பிசின், வெள்ளிலோத்ரம், அதிமதுரம், அரேணுகம், பெருங்குரும்பை, கருநெய்தல், தாமரை, காட்டுவாகைப்பூ இவற்றை சததௌதக்ருதத்திலுல் [1] ஆட்டி லேபம் செய்ய இரத்தபித்தமும், வாதரக்தமும் தீரும். 60½.

ஆமலக லேபம் :—நெய்யிற் பொரித்த நெல்லிக்கனிகளைக் காடிகளால் அரைத்து சிரஸ்ஸில் தேய்த்துவந்தால் நாசியிலிருந்து இரத்தங்கசிதல் நிவ்ருத்தியாகும். 61½.

கோஷ்டலேபமும் முசுகுந்தலேபமும்:-(1)கோஷ்டத்தைப் பொடித்து, காடிவிட்டு அரைத்து, ஆமணக்கெண்ணெயிலுல் குழைத்து, சிரஸ்ஸில் தேய்க்க தலைவலி ஸ்வஸ்த்தமாகும். (2)அவ்வாறே கொக்குமந்தாரப் பூவையும் அவ்வியாதியில் லேபமாக உபயோகிக்கலாம். 62½.

தேவதார்வாதி லேபம் :—தேவதாரு, கிரந்திதகரம், கோஷ்டம், விளாமிச்சைவேர், சுக்கு இவற்றைச் சிதைத்து, காடியிலுல் அரைத்து, எண்ணெய் கலந்து தடவ, வாததோஷத்திலுலான தலைவலி நீங்கும். 63½.

1. சததௌத க்ருதம்—நூறு தடவை ஜலத்தில் அல்லது வ்ரண்யமான கஷாயம் முதலியவற்றில் கடைந்து பக்குவம் செய்த நெய்.

சந்தனாதி லேபம் :—சந்தனம், வெட்டிவேர், அதிமதுரம், சிற்றாமுட்டி, புலியுகிரென்னும் வாஸனைத் திரவ்யம், கருநெய்தல் இவற்றைப் பாலில் அரைத்து லேபனம் செய்தால் இரக்தபித்தம், தலைவலி இவை ஸ்வஸ்த்தமாகும். 64½.

மூன்றும் தாத்ரியாதி லேபம் :—நெல்லிக்கனி, முத்தக்காசு, வெட்டிவேர், தாமரை, அல்லிக்கிழங்கு, சந்தனம், அறுகம்புல், விளாமிச்சை, விழல் வேர் இவற்றிலுலான லேபத்தை உபயோகிக்க பித்தத்திலுலுண்டான தலைவலியும், இரக்தபித்த ஸம்பந்தமான நோயும் தீரும். 65, 66.

ஹரேணுகாதி லேபம் :-அரேணுகம், கிரந்தி தகரம், கல்மரப்பட்டை, கோரைக்கிழங்கு, எலம், அகிற்கட்டை, தேவதாரு, ஜடாமாம்ஸி, சிற்றரத்தை, ஆமணக்கிலை இவற்றை லேபம் செய்து சிறிது இளஞ்சூடாயிருக்கையிலே உபயோகிக்க சிலேஷ்மநோய் நிவ்ருத்தியாகும். 67.

சுண்டீயாதி லேபம் :—சுக்கு, கோஷ்டம், தகாவிதை, தேவதாரு, காவட்டம்புல் இவற்றைப் பசு மூத்திரத்திலுல் அரைத்துப் பூச கபத்திலுலுண்டாகும் தலைவலி நீங்கும். 68.

சாரிபாதி லேபம் :—நன்னாரி, கோஷ்டம், அதிமதுரம், வசம்பு, கருநெய்தல் இவற்றைக் காடியிலுல் ஆட்டி, பிறகு எண்ணெயை விட்டுக் குழைத்துத் தடவிலுல் ஸூர்யாவர்த்தம், அர்த்தாவபேதம் என்னும் தலைநோய்கள் தீரும். 69.

சதாவர்யாதி லேபம் :—தண்ணீர்விட்டான், கருநெய்தல், அறுகம்புல், எள், சாறடை இவற்றின் லேபமானது சங்கசம், அனந்தவாதம் என்கிற சிரஸ்ஸைப்பற்றிய வலிமுதலானவற்றைப் போக்கும். 70.

ப்ரலேபமும் ப்ரதேஹமும்.

ப்ரலேப-ப்ரதேஹங்கள் :—இதன் பிறகு அறிஞரது கொள்கையின்படி இன்னும் சில லேபவிதங்கள் கூறப்படுகின்றன. ப்ரலேபம் என்றும், ப்ரதேஹம் என்றும் லேபம் இரண்டுவிதமாகும். ஈரமான எருமைத் தோலவ்வளவு கனமாக ப்ரலேப ப்ரதேஹங்களைச் செய்யவேண்டுமென்பது பொது விதியாகும். குளிர்ச்சியாகவும், அதிக கனமில்லாமலும், உலர்ந்து விடக் கூடியதாகவும் செய்யப்படுவது ப்ரலேபம் எனப்படும். ஈரமாகவும், சிறிது கனமாகவும், உஷ்ணமாகவும் செய்யப்படும் லேபம் ப்ரதேஹம் என்று சொல்லப்படும். இவற்றுள் ப்ரதேஹம் கப—வாதங்களாலுண்டாகும் கோளாறுகளைப் போக்கக்கூடியதாம் [1]. 71—72½.

ப்ரதேஹ-ப்ரலேபங்களில் சில நியமங்கள் :—ப்ரலேப-ப்ரதேஹங்களை மயிர்க்கால்களினூடே பரவுமாறு லேபனம் செய்தால், அவற்றின் வீர்யம் மயிர்க்கால்களாலும், இரத்தக் குழாய்கள் மூலமாயும் சரீரமெங்கும் சீக்கிரத்திற் பரவும். உலர்ந்துவரும் ப்ரலேபனத்தை எடுத்துவிடவேண்டும். ஆனால் ப்ரதேஹம் பூசப்பட்டுள்ள பாகம் உலர்ந்து அவ்விடத்தில் இரவு கண்டு அப்பூச்சு சிறிது உலருமளவும், அதை வைத்திருக்கலாம். இரவில் மயிர்க்கால் முனைகளில் தேகச்சூடு தங்கியிருந்து சூரிய வெளிச்ச மின்மையினால் தானே வெளிவந்து விடுமாகையால் இரவில் லேபனம் செய்யக் கூடாது.

1. ப்ரலேபம் அல்லது லேபம் என்றால் ஸாதாரணமான எந்தப் பூச்சு மருந்தையும் குறிக்கும்; ப்ரதேஹமென்றால் பற்றுப்போடுதல்.

ஆனல் விஷயமுணர்ந்த நிபுணர்கள் அவசியமென்றறிந்தால் இரவிலும் ப்ர லேபநம் முதலியதைச் செய்யலாம். 73—76.

விரணங்களே லேபாதிகளால் ஆற்றும் க்ரமம்:—இரத்தம் கபம் இவற்றின் கோளாருலான வீக்கம் பழுக்காமலும் வெகு ஆழமாக வியாபித்து மிருந்தால், அதற்கு முதலில் வீக்கத்தைக் குறைப்பதற்கான சோதஹராம் என்கிற லேபமும், இரண்டாவது இரத்த மோக்ஷணமும், மூன்ருவது உப நாஹஸ்வேதமும், நான்காவது சஸ்த்ரத்தினல் கீண்டு தோஷங்களே வெளிப் படுத்தும் முறையும், ஐந்தாவது அவ்விரணத்தைக் கழுவியோ வேறு விதமாகவோ சோதநம் என்கிறமுறையும், ஆருவது ரோபணம் என்னும் விரணத்தை ஆறச்செய்வதும், ஏழாவது விரணமுண்டான விடத்திற்கு மீண்டும் பழைய நிறமுண்டாகப் பண்ணுவதும் க்ரமமாக விரணங்களுக்கு அவசியம் செய்யவேண்டிய சிகித்ஸா முறைகளாம். 77—78½.

மீஜபூழலாதி லேபம்:—கொடிமாதுளே வேர், ஜடாமாம்ஸி, தேவ தாரு, சுக்கு, சிற்றரத்தை, முன்னே வேர் இவற்றை அரைத்து லேபம் செய்ய வாததோஷத்தினுலான வீக்கம் தீரும். 79½.

மதுகாதி லேபம்:—அதிமதுரம், வெண்சந்தனம், பெருங் குரும்பை, நெட்டக்கோரையின் வேர், அல்லிக் கிழங்கு, வெட்டிவேர், விளாமிச்சை வேர், தாமரைப்பூ இவற்றைப் பித்தத்தினுலுண்டாகும் வீக்கங்களில் லேபமாயுபயோகிக்கலாம் 80½.

கிருஷ்ணுதி ப்ரதேஹம்:—திப்பிலி, பழைய எள்ளுப்பிண்ணுக்கு, முருங்கப்பட்டை, மணல், கடுக்காய் இவற்றைப் பசு மூத்திரத்தில் அரைத்து கொதிக்க வைத்து இளஞ்சூடாக ப்ரதேஹம் செய்தால் கபத்தினு லுண்டாகும் வீக்கம் நிவாரணமாகும். 81½.

நிசாதி லேபம்:—மஞ்மள், மரமஞ்சள், வெண்சந்தனம், செஞ்சந்தனம், கடுக்காய், அறுகம்புல், வெள்ளேச்சாறடை, வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, வெள்ளிலோத்தி, காவிக்கல், இரஸாஞ்ஜனம் இவற்றை அரைத்து வெளிக் காரணங்களாலும், இரத்த தோஷத்தினுலும் உண்டாகும் வீக்கங்களில் லேபமாயுபயோகிக்கலாம். 82, 83.

சணபர்ண்யாதி லேபம்:—சேப்பங்கிழங்கு, முள்ளங்கி, முருங்கக் காய், எள், கடுகு, ஸக்து என்னும் காடிச் சத்து, கிண்வமென்கிற மத்யச் சக்கை, ஆளிவிதை இவற்றின் லேபநத்தினுல் வீக்கங்கள் பழுத்து வரும். 84.

தந்த்யாதி லேபம்:—நேபாளம், சித்திரமூலப்பட்டை, கள்ளிப்பால், எருக்கம்பால், வெல்லம், சோறுங்கொட்டை, அன்னபேதி, இந்துப்பு இவற்றின் லேபநம் 'தாரணகுணம்'[1] உள்ளதாம். 85.

சிரிபில்வாதி லேபம்:—புங்கம்பட்டை, நேபாளம், சித்திரமூலம், அலரிவேர், மாடப்புறுவினுடையவும் பருந்தினுடையவும் கழுகினுடையவும் மலங்கள் ஆகியவற்றை அரைத்து லேபம் செய்ய 'தாரணம்' என்னும் வேலையைச் செய்யும். 86.

ஸர்ஜக்ஷாராதி லேபம்:—ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம் இவற்றின் லேபநம் வீக்கங்களே சீக்கிரம் உடைத்துவிடும். அவ்விதமே பிரம்மதண்டு விதையையும் விரணம் முதலியவை உடைவதற்கு மேலே லேபமாக உப யோகிக்கலாம். 87½.

1. தாரணம்—கட்டிகளே உடையச் செய்யும் குணம்.

இரண்டாம் திலாதி லேபம்:—எள், இந்துப்பு, அதிமதுரம், வேப்பிலே, மஞ்சள், மரமஞ்சள், சிவதை வேர் இவற்றை இடித்து நெய் விட்டுக் கலந்து, விரணங்களின் மேல் லேபநம் செய்ய அவை சுத்தமாகும். 88.

நிம்பபத்ராதி லேபம்:—வேப்பிலே, தேன், நெய், மரமஞ்சள், அதி மதுரம், எள் இவற்றை ஒருமிக்க அரைத்து லேபநம் செய்ய விரணம் சுத்தி யாவதுடன் சீக்கிரம் ஆறியும் வரும். 89.

காஞ்ஜாதி லேபம்:—புங்கம் வேர், வேப்பிலே, நொச்சியிலே இவற்றை அரைத்துத் தடவினுல் விரணத்திலுண்டாகும் கிருமிகள் அழியும். 89½.

லகூநாதி லேபம்:—வெள்ளுள்ளியின் கல்கத்தையாவது, வேப்பிலே யையும் காயத்தையும் சேர்த்து அரைத்த கல்கத்தையாவது விரணக் கிருமி களைப் போக்க லேபமாக உபயோகிக்கலாம். 90.

இரண்டாவது நிம்ப பத்ராதி லேபம்:—வேப்பிலே, எள், நேபாளம், சிவதை வேர், இந்துப்பு, நிலினே இவற்றின் லேபமானது கெட்டுப்போன விரணங்களைச் சுத்தம் செய்யவும் ஆற்றவும் அடியோடு அவற்றைப் போக்கவும் உபயோகமாகும். 91.

மதநபலாதி ப்ரதேஹம்:—மருக்காரையையும், கடுகரோகிணியையும் காடியினுல் ஆட்டி, கொதிக்கவைத்து நாபியின்மேல் சிறிது சூடாயிருக்கும் போதே லேபநம் செய்ய வயிற்றுநோய் நிவ்ருத்தியாகும். 92.

சீக்ருத்வகாதி ப்ரதேஹம்:—முருங்கைவேரின் பட்டை, வெண் ணெய்சியிலை, ஆமணக்குவேர், வாற்கோதுமை, கோதுமை, பயறு இவற்றை அரைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூடாக வாததோஷத்தினுலுண்டா கும் வித்ரதியில் லேபம் செய்யலாம். 93½.

லாஜாதி லேபமும் பயஸ்யாதி லேபமும்:—(1) நெற்பொரி, அதி மதுரம், சர்க்கரை இவற்றை நெய்விட்டு அரைத்து, பித்ததோஷத்தினு லுண்டாகும் வித்ரதியில் லேபநம் செய்யலாம். (2) அல்லது க்ஷீரகா கோலி, வெட்டிவேர், வெண் சந்தனம் இவற்றையாவது லேபநம் செய்ய லாம். 94.

இஷ்டகாதி ப்ரதேஹம்:—செங்கற்பொடி, மணல், இரும்புச் சட்டத் தின் தூள், பசுஞ்சாணம் இவற்றைக் கோமயம் சேர்த்து ஆட்டிக் கொதிக்க வைத்து கபவித்ரதியில் சிறிது சூடாக ப்ரதேஹம் செய்யலாம். 95.

இரண்டாம் ரக்தசந்தனாதி லேபம்:—செஞ்சந்தனம், மஞ்ஜிஷ்டி, மஞ் சள், அதிமதுரம், காவிக்கல் இவற்றைப் பொடி செய்து பாலில் குழைத்து இரத்த வித்ரதியிலும், ஆகந்துகமென்னும் வெளிக் காரணங்களாலுண்டா கும் வித்ரதியிலும் லேபநம் செய்யலாம். 96.

நிகுளாதி ப்ரதேஹம்:—நீர்க்கடம்பு, முருங்கைவிதை, தசமூலம் இவற்றை அரைத்து பக்குவம் செய்து இளஞ்சூடா யிருக்கையில் வாத தோஷத்தினுலுண்டாகும் கட்டிகளின்மேல் ப்ரதேஹம் செய்யலாம். 97.

தேவதார்வாதி ப்ரதேஹம்:—தேவதாருவையும், பேய்த்தும்மட்டிக் காயையும் அரைத்து உஷ்ணமாக்கி, கபதோஷத்தினுலுண்டாகும் கட்டி களில் ப்ரதேஹம் செய்யலாம். 97½.

ஸர்ஷபாதி லேபம்:—(1) கடுகு, வேப்பிலே, சேராங்கொட்டை இவற்றை எரித்து, ஆட்டி மூத்திரத்தில் ஆட்டி அபசி யென்னும் விரணத் தின்மேல் லேபநம் செய்யலாம். (2) ஸர்ஷபாதி லேபம்:-கடுகு, முருங்கை

விதை, சணல் விதை, ஆளிவிதை, யவதானியம், மோடி இவற்றைப் புளித்த மோர் விட்டு அரைத்து கண்டமாலை, அர்புதம், கண்டமென்னும் கட்டி இவற்றின் மேல் லேபமாக உபயோகிக்க அவை குணமாகும். 98—100.

தஞ்ஜாபலாதி ப்ரதேஹம் :—வாததோஷத்தினால் மட்டும் ஓர் அவயவம் மிகவும் பீடிக்கப்படுமானால், அவ்வவயத்தில் கூர்மையான ஒரு கத்தியினால் இரத்தம் வருமாறு கீறி, குன்றுமணிகளை அரைத்து ப்ரதேஹம் செய்ய, அபபாஹுகம், விச்வாசீ, க்ருத்ரவீ இக்கோளாறுகளும், மற்றும் வாத தோஷ ஸம்பந்தமான வியாதிகளும் சீக்கிரம் தீரும். 101, 102.

தத்தூராதி லேபம் :—ஊமத்தை, ஆமணக்கு, கருங்கொச்சி, சாறடை, முருங்கை இவற்றின் இலைகளையும் கடுகையும் சேர்த்து அரைத்து கல்கம் போல்செய்து லேபநமாக உபயோகிக்க நாட்பட்ட கடுமையான யானைக்கால் நோயைத் தீர்க்கும். 103.

அஜாஜ்யாதி லேபம் :—ஜீரகம், சிவக்கரந்தை, கோஷ்டம், ஆமணக்கிலை, இலந்தை இவற்றைக் காடிவிட்டு அரைத்து லேபநம் செய்ய கீல்வாதம் நிவாரணமாகும். 104.

காவீரழல லேபம் :—அலரிவேரை ஜலம்விட்டு ஆட்டி லேபநம் செய்ய, ஆண்குறியிலுண்டாகும் அஸாத்தியக் குறிகளைப் பெற்ற வலியும் கிவ்ருத்தியடையும். 105.

நான்காம் தீரிபலாதி லேபம் :—த்ரிபலையை ஒரு சட்டியில் எரித்து, அக்கரியைப் போதிய தேன் விட்டுக் குழைத்து, உபதம்சத்தால் சர்மத்திலுண்டாகும் விரணங்களின்மேல் பூசிவர, சீக்கிரம் ஆறிவிடும். 106, 107.

துகாக்ஷீரியாதி லேபம் :—மூங்கிலுப்பு, பூவரசம்பட்டை, சந்தனம், காவி, சீந்திற்கொடி, இவற்றை அரைத்து, நெய் விட்டுக் குழைத்து, அக்னி ஸம்பந்தத்தினாலுண்டாகும் விரணங்களின்மேல் பூச அவை ஆறிவிடும். 108.

திந்துகியாதி லேபம் :—தும்பை, இலவங்கப்பத்திரி இரண்டையும் க்வாதம் செய்து, அக்கஷாயத்தில் நெய்யையும் கலந்து எரிப் புண்களின் மேல் லேபநம் செய்ய அவை குணமாகும். 108½.

யவாதி லேபம் :—யவதானியங்களை எரித்து மையாகச் செய்து, எண்ணெயிற் கலந்து எவ்வித எரிப்புண்களின் மேலும் லேபநம் செய்துவர அவை சீக்கிரம் ஆறும். 109½.

பலாசபலாதி லேபம் :—பலாசங்காய், அத்திக்காய் இவற்றை நன்கு கல்கம்போல் அரைத்து, தேனையும் நல்லெண்ணெயையும் சேர்த்துக் குழைத்து யோனிமார்க்கத்திற் பூசினால் அவ்விடம் பலங்கொள்ளும். 110½.

மாகந்தாதி லேபம் :—மாம்பிஞ்சையும், கர்ப்பூரத்தையும், தேனையும் சேர்த்து ஆட்டி, கல்கமாகச் செய்து, யோனியில் தடவிவருவதால், யௌவனப் பருவம் கழிந்த ஸ்த்ரீகளுக்கும் அவ்வவயவம் கெட்டியாகும். 111½.

மரிசாதி லேபம் :—மிளகு, இக்குப்பு, திப்பிலி, இரந்திதகம், கண்டங்கத்திரி, நாயுருவி, எள், கோஷ்டம், வாற்கோதுமை, உளுந்து, கடுகு, அமுக்கிரங்கிழங்கு இவற்றைச் சூர்ணம் செய்து தேனுடன் கலந்து ஸ்தநம் லிங்கம் முதலியவற்றில் லேபநம் செய்ய அவை பலப்படும்; புஜம் முதலிய அவயவங்களும் நன்றாகப் பெருக்கும். 112—114.

ஸிதாதி லேபம் :—சர்க்கரை, அமுக்கிரங்கிழங்கு, இக்குப்பு, ஆட்டுப்பால் இவற்றைச் சேர்த்து, க்ருதம் பக்குவம் செய்து, முன்போலவே உபயோகப்படுத்த அவ்வவயவங்களுக்கு நல்ல வலிமையுண்டாகும். 115.

இரண்டாம் இந்த்ராவாருண்யாதி லேபம்:—பேய்த்தும்மட்டிச் சாற்றையும் பாதரஸத்தையும் கலந்து, செவ்வலரியின் கட்டையினால் அடிக்கடியும் ஆட்டி, இரண்டையும் கலந்து மூன்போலவே அவ்வவயவத்தில் உபயோகிக்க நற்குணமுண்டாகும். 116½.

தாம்பூலாதி லேபம் :—வெற்றிலைச் சருகையும், கோஷ்டத்தையும், கடுக்காயையும் சூர்ணம் செய்து ஜலத்தில் குழைத்து, சரீரமெங்கும் தடவி வர தேஹத்திலுண்டாகும் துர்காற்றம் போய்விடும். 117½.

தளுத்தாதி லேபம் அல்லது தூள் :—மிக நுண்மையாகப் பொடித்த கொள்ளையும், கோஷ்டம், ஜடாமாம்ஸி, வெண் சந்தனம் இவற்றின் சூர்ணத்தையும், கடலைமாவையும், இலவங்கப்பட்டையின் சூர்ணத்தையும் ஒன்றாகக் கலந்து, தேகத்தில் தூவுவதால், வியர்வையினாலுண்டாகக்கூடிய துர்நாற்றம் நிவர்த்தியாகும். 118, 119.

வசாதி லேபம் :—வசம்பு, அட்டுப்பு, கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், மிளகு இவற்றைப் பொடித்து நீரிற் கலந்து செய்யப்படும் லேபம் ஸ்த்ரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் வசமாவதற்கு உத்தம ஔஷதமாம். 120.

சிரோ வஸ்தி.

மூர்த்த தைலங்கள் :—மூர்த்த தைலமென்னும் சிரஸ்ஸில் இடப்படும் தைலமுறை அப்யங்கம், பரிஷேகம், பிசு வஸ்தி என்று நான்கு வகைப்படும்; அப்யங்காதி நான்கு முறைகளுள் ஒவ்வொன்றும் மேன்மேலும் வீர்யத்தில் முறையே சிறந்தவையாம். அவற்றுள் அப்யங்கம், பரிஷேகம், பிசு என்னும் மூன்றுவித தைலப்பிரயோகங்களும் பிரஸித்தமானவை;[1] இங்கு அறிவிற் சிறந்த வைத்தியர்களின் கொள்கைப்படி சிரோவஸ்தியென்னும் மூர்த்த தைல முறைமட்டும் விவரிக்கப்படுகின்றது. 121, 122.

சிரோவஸ்தி முறை :—பன்னிரண்டு அங்குலம் நிகளமுள்ளதும் இரண்டு தளைகளுள்ளதுமான சர்மத்தைத் தலையைச் சுற்றிக் கட்டவும்; உளுந்தை நன்றாகப் பொடி செய்து ஜலம் விட்டுப் பிசைந்து, தோல் கட்டியிருக்கும் பாகத்தில் நெற்றியைச் சேர்ந்தாற்போல் தடவிவிடவேண்டும்; அதற்குமேலேயும், சர்மம் பரவிய பாகம் வரையிலும் அதைப் பூசிவிடலாம். இவ்வாறு சிரஸ்ஸைச் சுற்றிலும் பாத்தியைப்போல் ஓர் சுவரெடுத்து பாத்தி நிரம்பவும் இளஞ்சூடான ஸ்நேஹத்தை ஊற்றவேண்டும். பிறகு நாசி, செவி இவற்றிலிருந்து ஜலம் ஊறும் வரையிலுமாவது, குறிப்பிட்ட வியாதியினாலான துன்பங்கள் நீரும் வரையிலுமாவது, ஆயிரம் மாத்திராகாலமாவது[2] தலையில் அத்தைலத்தை ஊறவைக்கவேண்டும். ஆஹாரமுண்பதற்கு முன்பே சிரோவஸ்தி செய்வது நலம். இதை ஐந்து அல்லது ஏழு நாட்கள் தொடர்ந்து செய்யவேண்டும். சிரவிலுள்ள ஸ்நேஹத்தை வடித்து, வஸ்தியையும் அவிழ்த்துவிட்டு, தோள் முதல் தலைவரையிலும் நாற்புறமும் நன்றாகப் பிடித்து விட்டு, பிறகு சிறிது சூடான ஜலத்தில் ஸ்நானம் செய்யவும். எளிதில் தீர்க்கக்கூடாத தலை நடுக்கம் முதலிய

1. அப்யங்கம்—தைலம் முதலியதை சிரஸ்ஸு முதலிய அவயவங்களில் தேய்த்துக்கொள்ளுதல்; பரிஷேகம்—எண்ணெய் முதலியவற்றைச் சிரஸ்ஸின்மேல் தாரைபோல் ஊற்றுதல்; பிசு—சூடான எண்ணெய் முதலியவற்றில் துணி முதலியதை நனைத்து ஒற்றடம் செய்தல்.

2. மாத்திராகாலம்—266—வது பக்கம் பார்க்க.

பல வாதரோகங்கள் இம்முறையினால் நிவாரணமாகும்; இதை எல்லா காலங்களிலும் பிரயோகிக்கலாம். 123—127½.

கர்ண பூரணம்[1]

கர்ணபூரண முறை:—நோயாளியை ஒருச்சாய்ந்து படுக்கச்செய்து, சிறிது சூடான பசுமூத்திரம் அல்லது இதர மிருகங்களின் மூத்திரங்களாலாவது, ஸ்நேஹவஸ்துக்களாலாவது, ஏதேனும் ஸ்வரஸங்களாலாவது நோய்கொண்ட செவிக்கு முதலில் ஸ்வேத சிகித்ஸை செய்து, பிறகு தகுந்த ஸ்நேஹம் முதலியவற்றால் கர்ணபூரணம் செய்யலாம். செவியினுள் இவ்வாறு நிரப்பிய ஔஷதத்தை நூறு அல்லது ஐந்நூறு அல்லது ஆயிரம் மாத்திராகாலம் அப்படியே வைத்திருக்கவும். காது, தொண்டை, சிரஸ்ஸு இவற்றிலுண்டாகும் வியாதிகளில் இவ்விதம் கர்ணபூரணம் செய்வது நலம்[2]. எதேனும் ஸ்வரஸம் முதலானதால் கர்ணபூரணம் செய்வதானால், அதை ஆஹாரமுண்பதற்கு முன்பே செய்வது நலம்; தைலம் முதலானதால் செய்வதானால் ஸூர்யன் மறைந்த பின் செய்யவேண்டும். 128—131½.

அர்க்கபத்ர ஸ்வரஸம்:—பழுத்த எருக்கிலையை நெய் தடவி, சிறிது அக்னியில் வதக்கிப் பிழிந்து ஸ்வரஸமெடுத்து, அதைக் கர்ணத்தில் விட்டால் காதுவலி நிவ்ருத்தியாகும். 132½.

பஸ்தமூத்ராதி கர்ணபித்து:—செம்மறியாட்டின் சிறுநீரில் சிறிது இந்துப்பைச் சேர்த்துக் கலக்கி, செவியில் ஊற்றிவர பலமான காதுவலியும், காதினுள் உண்டாகும் விரணம் முதலியவைகளும் தீரும். 133½.

சீருங்கபோராஸாதி கர்ணபூரணம்:—இஞ்சி ஸ்வரஸம், அதிமதுர ரஸக்ரியை, தேன், இந்துப்பு, நெல்லிக்காய், செஞ்சந்தனக்குழம்பு இவற்றின் ஸ்வரஸம், நல்லெண்ணெய், வெண்காரம், புளிநாரத்தை ஸ்வரஸம் இவற்றை ஒன்றுகக் கலக்கி, சிறிது சூடாக்கி, கர்ணபூரணமாக உபயோகிக்கக் காது வேதனை தீரும். 134—135.

கபித்தஸ்வரஸாதி கர்ணபூரணம்:-விளாம்பழம், கொடிமாதுளம்பழம், புளி, இஞ்சி இவற்றின் ஸ்வரஸத்தைப் பிழிந்து வடிக்கட்டி, சிறிது காய்ச்சி, இளஞ்சூடாகக் காதுகளில் விட்டால் காதுவலி நீங்கும். 136.

அர்க்காங்குராதி புடபாகம்:—எருக்கந்தளிர்களைக் காடியைச் சேர்த்து அரைத்து, உப்பையும் எண்ணெயையும் சேர்த்துக் குழைத்து, கள்ளித் தண்டைப் பிளந்து அதனுள் அக்கல்கத்தை அடைத்து, பிறகு எருக்கிலைகளால் மூடி முறைப்படி புடபாகம்[3] செய்யவும்; பிறகு அதை வெளியிலெடுத்து ஸ்வரஸம் பிழிந்து, இளஞ்சூடாயிருக்கையிலேயே கர்ணபூரணம் செய்ய தாங்கமுடியாத காதுவலி யாவும் நிவ்ருத்தியாம். 137, 138.

மஹாபஞ்சமூல[4] **தீபிகா தைலம்**:—எவ்வெட்டி அங்குலம் நீளமுள்ள மஹாபஞ்சமூலத் தண்டுகளைப் பட்டுத்துணியில் சுற்றி, தைலத்தில் நனைத்து, அக்னியிற் காட்ட அதிலிருந்து வடியும் தைலத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்தவும்; இது தீபிகா தைலம் எனப்படும். இதை இளஞ்சூடாயிருக்கையில் காதினுள் ஊற்ற காதுவலி உடனே தீரும். 139, 140.

1. கர்ணபூரணம்—காதில் ஔஷதம் ஊற்றுதல்.
2. இங்கு மாத்திரா காலத்தைப்பற்றிய ஒரு ச்லோகம் விலக்கப்பட்டது; அவ்விஷயம் முன்பே விவரிக்கப்பட்டது.
3. புடபாகம்—65-வது பக்கம் பார்க்க.
4. மஹாபஞ்சமூலம்—பில்வம், குமிழன், பெருவாகை, பாதிரி, சிறுவழுதுணை இவ்வைந்தின் வேர்களாம்.

கோஷ்டாதி தீபிகா தைலம்:—மஹா பஞ்சமூல தீபிகாதைலம் பக்குவம் செய்யும் விதமாகவே கோஷ்டம், தேவதாரு, பெருவாகை வேர் இவற்றையும் சிறு தீயில் எரித்து தீபிகாதைலம் இறக்கலாம். இத்தைலத்தை கர்ணபூரணமாயுபயோகிக்க ஸந்நிபாத ஸம்பந்தமான கோளாறும் சீக்கிரம் நிவ்ருத்தியாகும். 141½.

ஸ்ரீகாவஸாதி கர்ணபூரணம்:—அதிமதுரம், காகோலீ, உளுந்து, கொத்தமல்லிவிதை இவற்றை அரைத்து, க்வாதமாகக் காய்ச்சி, அக்கஷாயத்தில் பன்றிக் கொழுப்பைப் பக்குவம்செய்து, கர்ணபூரணம் செய்ய காதிரைத்தலும், காதுவலியும் தீரும். 142½.

ஸ்வர்ஜிகாதி தைலம்:—சவுட்டுப்பு, உலர்ந்த முள்ளங்கி, பெருங்காயம், திப்பிலி, சதகுப்பி இவற்றையும், தைலத்தையும், தைலத்திற்கு நான்கு மடங்கு ஏதேனும் ஸ்ரீக்தத்தையும் சேர்த்து பக்குவம் செய்து, தைலத்திற்கு நாலில் ஒரு பங்கு பாதரஸம் கலந்து, கர்ணபூரணம் செய்ய, கர்ணநாதம், கர்ணசூலை, செவிட்டுத்தன்மை, சீழ்வடிதல் இவை தீரும். 143, 144.

அபாமார்க்கக்ஷார தைலம்:—நாயுருவியின் க்ஷாரத்தை ஜலத்தில் கரைத்து, வடிக்கட்டி, மீண்டும் அந்த க்ஷாரத்தையே சிறிது கல்கமாகச் சேர்த்து, எண்ணெயையும் ஊற்றி, பக்குவம் செய்யவும். இத்தைலம் செவிட்டுத் தன்மையையும், காதிரைத்தலையும் போக்கும். 145.

சம்பூக தைலம்:—நத்தைகளின் மாம்ஸத்தைக் கடுஞ்சண்ணெயுடன் கலந்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தைக் காதிலுண்டாகும் குழிப்புண்களை ஆற்றுவதற்கு உபயோகிக்கலாம். 146.

பஞ்சகஷாயாதி கர்ணபூரணம்:—பஞ்சகஷாயமென்னும் ஐந்து விதசாரக்குகளைச் சூர்ணம் செய்து, விளாம்பழரஸத்தில் கலக்கி, தேன் கலந்து நன்றாகக் குழைத்து, கர்ணபூரணமாக உபயோகிக்க, காதிலிருந்து சீழ்வடிதல் நின்றுவிடும். [தும்பை, கடுக்காய், வெள்ளிலோத்தி, மஞ்ஜிஷ்டி, நெல்லி இவ்வைந்தும் இங்கு 'பஞ்சகஷாயங்கள்' என்று[1] கூறப்படுகின்றன.] 147, 148.

ஸ்வர்ஜிகாதி கர்ணபூரணம்:—சவட்டுப்புப் பொடியைக் கொடிமாதுளைச் சாற்றில் சிறிது கலந்து, காதில் உபயோகிக்க, காதிலிருந்து சீழ் வடிதல், காதுநோய், காதெரிச்சல் முதலியவை எளிதில் தீரும். 149.

ஆம்ராம்பாவளாதி கர்ணபூரணம்:—மாந்தளிர், நாவல்தளிர், இலுப்பைத்தளிர், ஆலந்தளிர் இவற்றை இடித்துச் சேர்த்து எண்ணெய் ஊற்றி பக்குவம் செய்து வடிக்கட்டி உபயோகித்துவர, சீழ்வடிதலுடன் கூடிய காதுநோய் தீரும். 150.

ஹரிதாளாதி கர்ணபூரணம்:—நன்கு சுத்திசெய்த தாளகத்தைப் பொடித்து, கோமூத்திரத்தில் சிறிதளவு கலக்கி, கர்ணபூரணமாய் உபயோகித்தாலும், கடுகெண்ணெயைச் சிறிது ஊற்றினாலும் காதுக்குள்ளிருக்கும் சிருமி முதலியது அழிந்துவிடும். 151.

சீக்ருமூலஸ்வரஸாதி கர்ணபூரணம்:—முருங்கைவேரின் ஸ்வரஸம், தொழுகண்ணியென்னும் அரவாட்டிப்பச்சையின் ஸ்வரஸம், காஞ்சொறி

1. ஐந்து துவர்ப்பான சாரக்குகள் எனப் பொருள்.

வேரின் ஸ்வரஸம் இம்மூன்றையும் சேர்த்து, தரிகடுவையும் சூர்ணம்செய்து கலக்கி, காதிலுண்டான அல்லது காதில் புகுந்துள்ள கிருமி முதலான ஜந்துக்களை அழிக்க உபயோகிக்கலாம். 152½.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

இரக்தமோக்ஷணவிதி.

இரக்தமோக்ஷணத்தின் அளவு முதலியது :—பிராணியினுடைய வியாதியின் கூறுபாடுகளையும் தேக நிலைமைகளையும் உற்றுநோக்கி இரத்தத்தை ஒரு பிரஸ்தம் அளவாவது, அரை பிரஸ்தமாவது, கால் பிரஸ்தமாவது வடியச்செய்யலாம். ஸாதாரணமாய் சரத்ருதுவில் இரக்தமோக்ஷணம்[1] செய்வது உசிதம். இரக்தமோக்ஷணம் செய்வதால் சர்மவியாதிகளும் கிரந்திகளும், வீக்கம் முதலானவைகளும் உண்டாகமாட்டா. 1, 2.

இரக்தத்தின் இயற்கை லக்ஷணங்கள்:—இரத்தம் சுவையில் மதுரமாகவும், நிறத்தில் சிவப்பாகவும், நடுத்தர உஷ்ணநிலைமையைப் பெற்றதாகவும், குருகுணமுடையதாகவும் இருக்கிறது. இரத்தம் எதாவது காரணத்தால் முறிவடைந்தால் பித்தப் பிரகோபத்தினாலுண்டாகும் கோளாறுகள் தோன்றும். சவர்நாற்றம், திரவத்தன்மை, சிவப்பு, அசைந்தோடும் ஸ்வபாவம், ஆவியாகக் கரைதல் என்னும் இவ்வைந்து குணங்களும் இரத்தத்திலிருப்பதால், அது முறையே ப்ருதிவி, அப், தேஜஸ் வாயு, ஆகாயம் இவற்றின் குணங்களுள்ளதாகக் கருதப்படுகிறது. 3, 4.

இரத்த தோஷக் குறிகள் :—இரத்தம் தூஷிக்கப்பட்டால் சரீரத்தில் வேதனையும், அழற்சியும், எரித்தலும், இரத்தவர்ணமான தடிப்புகளும், அரிப்பும், வீக்கமும், கொப்புளங்களும் உண்டாகும். 5.

இரத்தம் அதிகரித்தால் காணக்கூடிய குறிகள் :—இரத்தம் மிதமிஞ்சி விருத்தியாஞல் சரீரம் முழுமையும் விசேஷமாக நேத்திரமும் மிகச் சிவந்து விடும் ; வரிசைகளென்னும் இரத்தக்குழாய்கள் எப்பொழுதும் நிரம்பியிருக்கும் ; தேகம் பாரமாயிருப்பதாகத் தோற்றும் ; நித்திரை அதிகமாய் உண்டாகும் ; மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிக்கும் ; உடலில் அழற்சியும் உண்டாகும். 6.

இரத்தம் க்ஷயிக்கத்தால் காணக்கூடிய குறிகள் :—இரத்தம் க்ஷயமடைந்தால் புளிப்பு இனிப்பு என்னும் சுவைகளில் விருப்பமும், மூர்ச்சையும், சர்மத்தில் வறட்சியும், வரிசைகளின் தளர்ச்சியும், வாதம் பிரகோபித்து தன் ஸ்தானத்தை விட்டு வேறிடங்களிற் பிரவேசிப்பதும், இன்னும் இத்தகைய வேறு விகாரங்களும் தோன்றும். 7.

கோளாறடைந்த தோஷங்களால் இரத்தத்திற்குண்டாகும் குறிகள் :—(1) கருஞ்சிவப்பு, நுரைத்தல், வறட்சி, வன்மை, அளவிலும் குணத்திலும் மெலிவுறுதல், வேகம் அதிகரித்தல், உறையுந்தன்மை குறைதல், ஊசியால் குத்தப்படுவதுபோல் வேதனை இவை வாததோஷத்தினால் இரத்தம் கோளாறடைந்ததன் குறிகளாகும். (2) பித்தத்தினால் இரத்தம் தூஷிக்கப்பட்டால் அது நிறத்தில் மஞ்சளாகவும், அல்லது இலேப்பசுமையாகவும், சில ஸமயம் கறுப்பு அல்லது நீல நிறமாகவும் காணப்படும் ; சவர்நாற்ற

1. இரக்த மோக்ஷணம்—வரிசைகளென்னும் இரக்தக்குழாய்களிலிருந்து தோஷமுள்ள இரத்தத்தை வெளிப்படுத்தும் முறை.

முள்ளதாகவும், உறையக்கூடாததாகவும், இயற்கையினும் அதிக உஷ்ணமாகவும் இருக்கும் ; ஈ, எறும்பு முதலான ஜந்துக்கள் அவ்வித இரத்தத்தை விரும்பமாட்டா. (3) கபத்தினால் கோளாறடைந்த இரத்தம் குளிர்ந்தும், அளவில் அதிகரித்தும், பசையுள்ளதாகவும், காவிக்கல் கரைத்த ஜலத்திற்கு ஒப்பாகவும், சிதைவுண்ட தசைநார்களுக்கேற்ற நிறமுடையதாகவும், எளிதில் உறையுந் தன்மையதாகவும், வெகு மந்தமான ஓட்டமுள்ளதாகவும் இருக்கும். (4) இரண்டிரண்டு தோஷங்களால் தூஷிக்கப்பெற்ற இரத்தம் அந்தந்த தோஷங்களின் கலப்பான குறிகளுடன் கூடியதாயிருக்கும். (5) மூன்று தோஷங்களாலும் தூஷிக்கப்பெற்றிருந்தால், அந்த இரத்தம் துர்நாற்றமுள்ளதாகவும், காஞ்ஜிகமென்னும் காடிக்கு ஒப்பாகவும், மூன்று தோஷங்களின் மற்றக் குறிகளைப்பெற்றதாகவும் இருக்கும். 8—11.

விஷதுஷ்டமான இரத்தத்தின் குறிகள் :—எதேனும் விஷத்தினால் கோளாறடைந்த இரத்தம் கறுநிறமாகவும், நாசி முதலியவற்றின் மூலமாக அடிக்கடி வடியுந்தன்மையதாகவும், சவர்நாற்றமுள்ளதாகவும், காடியைப் போன்றதாகவும், ஸர்வ குஷ்டங்களையுமுண்டாக்குவதற்குக் காரணமாகவும் இருக்கும். 12.

இரத்தத்தின் இயற்கை நிலைமை :—எவ்விகாரமுமின்றி இயற்கைத் தன்மையிலிருக்கும் இரத்தம் இந்த்ரகோபமென்னும் தம்பலப்பூச்சியின் நிறமுடையதாகவும், தோய்ந்துவிடாத அல்லது மிகத் தடித்துவிடாத நிலையுள்ளதாகவும் காணப்படும். 12½.

இரத்த மோக்ஷணத்திற்கேற்ற வியாதிகள் :—எதாவது வீக்கம், எரித்தல், தேக அழற்சி, உடலில் இரத்த நிறம் அதிகரித்தல், இரத்தக் கசிவு காணல், வாதரக்தம், குஷ்டம், மிகத்துன்பமளிப்பதும் கஷ்ட ஸாத்யமுமான வாதரோகம், கையிலுண்டாகக் கூடிய சொறி சிரங்கு முதலிய வியாதிகள், யானைக்கால், விஷங்களால் இரத்தம் தூஷிக்கப்படுதல், கிரந்தி, அர்புதம், அபசி, க்ஷுத்ர ரோகங்கள், இரத்தக் சோளாருல் காணும் அதிமந்தம், விதாரிகா, ஸ்தன ரோகங்கள், சரீரம் இளைத்துப் போதல், சரீரம் மிகவும் பருத்துப்போதல், அபிஷ்யந்தம், திமிர், நாசி வாய் முதலிய அவயவங்கள் துர்நாற்ற முறுதல், கல்லீரலையும், மண்ணீரலையும் பற்றிய வியாதிகள், அக்கிவிரணம், வித்ரதி, இரத்தக் கட்டிகள், காது உதடுகளில் புண் உண்டாதல், நாசி அழன்றுபோதல், வாய்ப் புண், கலேநோய், உபதம்சம், இரக்தபித்தம் இவற்றில் வைத்தியர் சிருங்கங்களாலாவது[1], அட்டைகளைப் பிரயோகித்தாவது, சுரைக்குடுக்கைகளாலாவது, வரிசைகளைக் கீறியாவது இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். 13—18.

இரத்தமோக்ஷணத்திற்குத் தகாதவர்கள் :—மிகவும் இளைத்தவர், அதிகமாய் அடிக்கடியும் புணருபவர், பேடி, பயப்படுந்தன்மையர், கர்ப்பிணி, பிரஸவித்தவள், பாண்டுரோகி, பஞ்ச கர்மங்களால் விரித்தியடைந்தவர், ஸ்நேஹபானம் செய்தவர், அர்சஸ்ஸால் வருந்துபவர், சரீரமெங்கும் வீக்கங் கொண்டவர், உதரரோகி, ச்வாஸ-காஸ ரோகிகள், வாந்தியினாலும் அதிஸாரத்தினாலும் துன்பப்படுபவர், ஸ்வேத சித்தஸையினால் மிகவும் வியர்த்தவர், பதினாறு வயதுக்கு உட்பட்டவர், எழுபதுக்கு மேற்பட்ட வயதினர்,

1. சிருங்கம்—பீச்சாங்குழல், [சிருங்கமே வரிஞ்ஜ் (Syringe) என்று வழங்கப்படுகிறது.]

காயம் முதலிய அபிகாதத்தினால் இரத்தப் பெருக்குள்ளவர் இவர்களுக்கு இரக்த மோக்ஷணம் செய்யக்கூடாது. ஆனால் மேற்கூறியவர்களுக்கு அபாயகரமான நிலைமை நேரிட்டால் அட்டைகளைப் பிரயோகித்து இரத்தத்தை வெளிப்படுத்தலாம், சரீரத்தில் விஷம் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு விரையைக் கீறி இரத்தத்தை வெளியேவிடுவது நலம். 19—22½.

வாத-பித்த-கபங்களால் துஷ்டமான இரத்தத்தை வெளிப்படுத்தல்-வாததோஷத்தினால் தூண்டிக்கப்பெற்ற இரத்தத்தைப் பசுவின் கொம்பினாலான சுருங்கத்தினாலும், பித்ததுஷ்டமான இரத்தத்தை அட்டைகளாலும், கபதுஷ்ட மானதைச் சுரைக் குடுக்கைகளைக் கொண்டும் கற்றறிந்த வைத்தியர் வெளிப்படுத்தவேண்டும். த்வந்த்வ தோஷங்களாலும் ஸந்நிபாதத்தினாலும் கோளாறடைந்த இரத்தத்தை மதியூகத்துடன் விராமோக்ஷணம் செய்தும்[1], பதங்களாலும் வெளிப்படுத்தி விடலாம். 23—24½.

சீருங்கம் முதலியவற்றின் பிரயோகத்தால் இரத்தம் சுத்தியாவதில் தாரதம்யம் :—சருங்கம் என்னும் கருவியினால் இரத்தமோக்ஷணம் செய்தால் அவ்விதம் செய்யப்படும் பிரதேசத்திலிருந்து பத்து அங்குல தூரம் வரையிலுள்ள இரத்தத்தை வலிய உறிஞ்சலாம். அட்டையானால் ஒரு முழம் தூரத்திலுள்ள இரத்தத்தை இழுக்கலாம். சுரைக் குடுக்கையைப் பிரயோகித்தால் பன்னிரண்டு அங்குலம் தூரம் வரையிலுள்ள இரத்தத்தை ஆகர்ஷணம் செய்யலாம். பதங்களைக் கொண்டு ஒரு அங்குலம் தூரத்திலுள்ள இரத்தத்தை மட்டும் வெளிப்படுத்தலாம். விராமோக்ஷணத்தால் சரீரம் எங்கும் வியாபித்துள்ள இரத்தத்திலிருக்கிற தோஷங்களை வெளிப்படுத்தி தேகத்தைச் சுத்தமாக்கி விடலாம். 25, 26.

இரத்தம் வெளிவர முடியாத நிலைமை :—குளிர் அதிகரித்த காலங்களிலும், ஆஹாரமுட்கொள்ளாமலிருக்கையிலும், மூர்ச்சையிலும், அதிக நித்திரையிலும், பயந்திருக்கையிலும், ஆயாஸமுண்டான நிலைமையிலும், மல மூத்திரங்கள் வெளிப்படாமலிருக்கும்போதும் இரக்தமோக்ஷணம் செய்ய முயன்றால் இரத்தம் நன்கு வெளிப்படாது. 27.

இரத்தம் வெளிவராவிடில் செய்யவேண்டிய உபாயம் :—இரத்தம் தகுந்தவாறு வெளிவராமற் போகையில் கோஷ்டம், த்ரிகடு, இந்துப்பு இவற்றைப் பொடிசெய்து, இரக்தமோக்ஷணம் செய்வதற்காகக் கீறி விரண முண்டாக்கிய இடத்தில் தேய்க்க இரத்தம் நன்றாகக் கசியத் தொடங்கும். 28.

இரத்த மோக்ஷணத்திற்கு ஏற்ற அல்லது ஏற்காத காலம் :—ஆகையினால் குளிர் காலங்களிலும், அதிக உஷ்ண காலத்திலும், ஸ்வேத சிகித்ஸையைச் செய்யாமலிருக்கையிலும், அதிகமாய் ஸ்வேதனம் முதலியவற்றால் வேக்காடு அடைந்திருக்கையிலும் இரக்தமோக்ஷணம் செய்யக்கூடாது. விஷயமுணர்ந்த வைத்தியர் பிணியாளியை யவாகூ என்னும் ஆஹாரத்தை உட்கொள்ளச்செய்து அவன் திருப்தி யடைந்திருக்கையில் இரத்தத்தை வெளிப்படுத்தலாம். 29.

---

1. விரா—காரிரத்தக் குழாய்; மோக்ஷணம்—அதைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தல்.

2. பதம்—ஏதேனும் கூர்மையான கருவியினால் இரத்தம் வடியும்படி ஆங்காங்கு கொத்துதல் அல்லது கீறுதல்.

இரத்தம் அதிகமாகப் பெருகுவதற்குக் காரணமும் பரிஹாரமும் :—ஸ்வேத சிகித்ஸையை மிதமிஞ்சி உபயோகிப்பதாலும், காலம் மிக உஷ்ணமாயிருந்தாலும், விரைகளை அளவுமீறி கீறிவிடுவதாலும் இரத்தம் மிகுதியாக வெளிப்படும். அந்த நிலைமையில் அதைத் தடுப்பதற்கு வெள்ளிலோத்ரம், ஸர்ஜரஸம் என்னும் பிகிள், நீலாஞ்ஜநம் இவற்றை விரணத்தின் முகத்தில் பூசலாம். யவதானியம், கோதுமை இவற்றின் சூர்ணத்தையாவது, மூங்கிலுப்பு, காவி இவற்றின் சூர்ணத்தையாவது, பாம்புத் தோலின் சூர்ணத்தையாவது, பட்டு அல்லது வஸ்திரத்தை எரித்த பஸ்மத்தையாவது இரத்தப் பெருக்குடன் கூடிய விரணத்தின் முகத்தில் தூவிவிடலாம்; அல்லது விரணத்தின் முகத்தை நன்றாகக் கட்டி சீதளமான வஸ்துக்களை அதன்மேல் தடவுவதுடன், அப்பிணியாளிக்கு வேறு சீதோபசாரங்களையும் செய்யலாம்; அல்லது எந்த விரை கீறப்பட்டதோ அதே விரையை மூதலிற் கீறப்பெற்ற இடத்திற்கு மேலே மறுபடியும் கீறிலிடலாம்; அன்றேல் அந்த இடத்தை க்ஷாரத்தினாலாவது அக்னியினாலாவது சுடுவது நலம். துவர்ப்பான வஸ்துக்கள் விரணத்தின் முகத்தை மூடி இரத்தத்தை நிறுத்தும்; சீதளமான பதார்த்தங்கள் இரத்தத்தை உறையச் செய்து அதைப் பெருகவிடாமல் தடுக்கும்; க்ஷாரங்கள் என்னும் காரவகைகள் விரண முகத்தைப் பக்குவப்படுத்தி இரத்தத்தைத் தடுக்கும்; விரையிலுண்டான விரண முகத்தைச் சுட்டால் அந்த இரத்தக் குழாய் சுருங்கி இரத்தப்பெருக்கு நின்றுவிடும். 30—33½.

அண்டவீக்கத்தில் ஸிராதாஹம் :—இடது பீஜம் வீங்கியிருந்தால் வலது கையின் பெருவிரலுக்கு அடியிலுள்ள விரையைச் சுடுவதும், வலது அண்டம் வீங்கினால் இடது கரத்தின் பெரு விரலின் விரையைச் சுடுவதும் முறை; இவ்வாறு அவ்வவயவங்களிலுள்ள விரைகளைச் சுடுவதினால் பிரபாவத்தினால் பீஜ வீக்கம் நிவாரணமாகும். 34, 35.

விஷூசியில் ஸிராதாஹம் :—விஷூசிரோகத்தில் குதிகால்களைச் சுடுவதால் ஜாடராக்னி அதிகரித்து இஸதாதுவும் கபமும் நெகிழ்ந்தோடுவதற்கான குழாய்கள் சுருக்கங் கொள்வதால் தீபன சக்தியும் ஏற்படுகின்றது. அதனால் விஷூசி என்னும் வாந்திபேதி தணியும். 36.

கல்லீரல்-மண்ணீரல்களின் வீக்கத்தில் ஸிராதாஹம் :—சிறுவர்களுடைய வயிற்றில் கல்லீரலும் மண்ணீரலும் இரத்ததோஷம் அதிகரிப்பதால் வீங்கிவிடும்போது, அவ்வவயவங்களுக்கு நேராக வயிற்றின் மேல் சுடுவதால், அங்குள்ள ரத்தக் குழாய்கள் சுருக்கங்கொண்டு அவ்வவயவங்களின் வீக்கமும் நிவர்த்தியாகும். 37.

இரத்தத்தை அதிகமாக வெளிப்படுத்தலாகாது :—இரத்தத்தில் தோஷம் சிறிது தங்கியிருந்தாலும், அதனால் வியாதி மறுபடியும் ஸம்பவித்து விடாது; ஆகவே தோஷத்துடன் கூடிய இரத்தம் சிறிது மிகுந்திருக்குமாறு விட்டுவிடுவது நலமேயன்றி, அதை அளவுமீறி வடியச் செய்வது சரீரத்திற்கு ஹிதமல்ல. 38.

அளவு மீறிய இரக்தமோக்ஷணத்தினாலுண்டாகும் கெடுதிகள் :—இரத்தம் அளவுமீறி வடியுமானால் நேத்ரம் கெட்டுப்போதல், ஆகூபகமென்னும் இசிவு, நாவறட்சி, திமிர்மென்னும் கண்ணோய், தலைவலி,

பார்ச்வவாயு, ச்வாஸ காஸம், விக்கல், தேக அழற்சி, பாண்டு இவை ஸம்ப விக்கும்; அல்லது மரணந்தமான ஆபத்தும் நேரிடும். 39½.

ஜாத்தத்தின் அருமை :—இரத்தத்திலுலேயே தேகம் உற்பத்தியாய், அதிலுலேயே போஷிக்கப்பட்டு ஜீவித்து வருகின்றது; இரத்தமில்லையேல் சரீரத்தினின்றும் ஜீவன் போய்விடும்; ஆகவே கற்றறிந்த வைத்தியர் இரத்தத்தைக் காப்பதிலேயே கருத்தா யிருக்கவேண்டும். 40½.

ஜரக்த மோக்ஷணத்தில் சீதோபசாரத்தினுலான வீக்கத்திற்குப் பரி ஹாரம் :—இரக்தமோக்ஷணம் செய்த பிறகு சீதோபசாரம் செய்து அதனுல் வாயு பிரகோபமடைந்து வலியுடன் அவ்விடம் வீக்கங் கொள்ளுமாயின், இளஞ்சூடான நெய்யினுல் அவ்விடத்தில் ஒற்றடம் கொடுக்கலாம். 41.

ஜரத்தமோக்ஷணத்தினுல் பலஹீனமானவனுக்கு உசிதமான உணவு:- இரக்த மோக்ஷணத்தினுல் இளைத்துப் போனவனுக்குக் கலைமான், முயல், செம்மறியாடு, கறுத்த மான், வெள்ளாடு இவற்றின் மாம்ஸரஸமாவது, பாலாவது பானம் செய்வதற்கு ஏற்றவையாகும்; காரரிசியினுலான அன்னத்தையும் உபயோகிப்பது நலம். 42½.

ஜரக்தமோக்ஷணம் நன்கு நிறைவேறியதன் குறிகள் :—சரீரத்தி லிருந்த துன்பங்கள் நிவருத்தியாதல், வியாதி குறைதல், தோஷப்பிரகோ பங்கள் அல்லது உபத்திரவங்கள் சாந்தமாதல், மனது ஸுகமடைதல் என் னும் இக்குறிகள் இரக்தமோக்ஷணம் என்கிற இச்சிகித்ஸை நன்கு நிறை வேற்றப்பட்டதன் குறிகளாம். 43½.

ஜரக்தமோக்ஷணத்திற்குப் பிறகு பத்தியக்கிரமம் :—வ்யாயாமம், புணர்ச்சி, சினம், குளிர்ந்தஜல ஸ்நானம், அதிக காற்றில் வஸித்தல் அல் லது உலாவுதல், ஒரு வேளையே உணவுண்பது, பகலில் நித்திரைபோதல், க்ஷாரவகைகள் ஸம்பந்தப்பட்டதும் புளிப்புள்ளதும் காரமுமான உணவுகளை யுண்பது, மனத்துயரம், வாதாடுதல், அஜீர்ணமுண்டாக்கும் உணவு இவை தேகம் பலம் பெறும் வரையில் தகாதவைகளாம். 44, 45.

பதின்மூன்றும் அத்தியாயம்

நேத்திர சிகித்ஸை.

பலவித நேத்திரோபக்ரமங்கள் :—ஸேகம், ஆச்சியோதகம், பிண்டிகா, பிடாலகம், தர்ப்பணம், புடபாகம், அஞ்ஜநம் இவை முதலிய கல்பங்களைக் கொண்டு நேத்திரவியாதிகளுக்கு சிகித்ஸை செய்யவேண்டும். 1.

ஸேகம்.

ஸேகம் செய்யு முறை :—ஸேகம் செய்துகொள்ளவேண்டிய மனி தனை நேத்திரங்களை மூடச் செய்து, அவற்றின்மேல் நான்கு அங்குலம் உயரத்திலிருந்து தாரைபோல் ஒளஷத குணமுள்ள திரவங்களைப் பிரயோ கிப்பது "ஸேகம்" அல்லது "பரிஷேகம்" எனப்படும். 2.

மூன்றுவித ஸேகங்களும் அவற்றின் கால நியமங்களும் :—நேத்திர ஸேகம் மூன்று விதம்: அவற்றுள் "ஸ்நேஹம்" என்கிற ஸேகம் வாத வியாதியிலும், "ரோபணம்" என்பது இரத்தம் அல்லது பித்த ஸம்பந்தி மான வியாதிகளிலும், "லேகநம்" என்பது கபவியாதியிலும் பிரயோ

கிக்கக்கூடியனவாம் [1]. இம்மூன்றையும் பிரயோகிக்கும் கால அளவு பின் வருமாறு: சற்றேறக் குறைய அறுனூறு மாத்திராகாலம் ஸ்நேஹ ஸேகத் தையும், நானூறு மாத்திராகாலம் ரோபண ஸேகத்தையும், முன்னூறு மாத்திராகாலம் லேகந ஸேகத்தையும் பிரயோகிப்பது முறையாம். ஸேக மென்னும் இச் சிகித்ஸை செய்வதற்கு ஏற்றது பகல் வேளையே; ஆபத் தான அல்லது அதிதீக்ஷ்ணத்தில் சிகித்ஸை செய்யவேண்டியதான வியாதி யில் இரவிலும் ஸேகம் செய்யலாம். 3—4½.

பலவித ஸேரநௌஷதங்கள் :—(1) வெள்ளாட்டுப்பாலை ஆமணக் கின் வேர்-இலை-பட்டை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி நேத்திரத்தில் வாதாபிஷ்யந்தம் [2] என்னும் நோயைப் போக்குவதற்கு இளஞ்சூடாக ஸேகம் செய்வது நலம். (2) இந்துப்பைச் சேர்த்துக் காய்ச்சிய பாலையா வது, மஞ்சள், மரமஞ்சள், இந்துப்பு இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த பாலையாவது அவ்விதமே வாதாபிஷ்யந்தம், வாதவிபர்யயம் என்னும் நேத் திர ரோகங்களில் பரிஷேகம் செய்வது ஹிதமாயிருக்கும்; இந்த ஸேகமே சுஷ்காக்ஷிபாகம் என்கிற நேத்திர வியாதியிலும் எப்பொழுதும் உபயோக முள்ளதாம். (3) வெள்ளிலோத்திப் பட்டையையும் அதிமதுரத்தையும் ஸம பாகம் சேர்த்து, நெய்யிற் பொரித்து, நுண்மையாகப் பொடி செய்து, அப்பொடியை வெள்ளாட்டுப் பாலில் சேர்த்துக் காய்ச்சி அதைக் கண்களின் மேல் தாரையைப்போல் ஊற்றிவந்தால் பித்தத்தினுலும் இரத்தத்தினுலும் உண்டாகும் அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (4) த்ரிபலை, வெள்ளிலோத்தி, அதிமதுரம், சர்க்கரை, சிறுகோரைக் கிழங்கு இவற்றைக் கல்கமாகச் செய்து குளிர்ந்த ஜலத்தில் கலக்கி ஸேகம் செய்தாலும் இரத்த ஸம்பந்த மான அபிஷ்யந்தம் தீரும். (5) செவ்வரக்கு, அதிமதுரம், மஞ்ஜிஷ்டி, வெள்ளிலோத்தி, கருஞ்சந்தனம், வெண்தாமரை இவற்றின் கல்கம் கலந்த குளிர்ந்த ஜலத்தை ஸேகம் செய்தாலும் இரக்தாபிஷ்யந்தம் சாந்த மாகும். (6) வெள்ளிலோத்திப் பட்டையை நெய்யிற் பொரித்து சூர்ணம் செய்து வஸ்திரகாளிதம் பண்ணி, உஷ்ண ஜலத்தில் கரைத்து ஸேகம் செய்ய நேத்திரத்திலுண்டான சூலம் அல்லது வலி நிவருத்தியாகும். 5-11½.

ஆச்சியோதகம்.

ஆச்சியோதக முறைகள் :—கண்களைத் திறந்து திருஷ்டியின் மத்தி யில் திரவமான ஔஷதத்தை இரண்டு அங்குலம் உயரத்திலிருந்து தளித் தளியாக விடுவதற்கான முறையே 'ஆச்சியோதகம்' எனப்படும்; இச் சிகித்ஸையை இராக்காலத்தில் செய்யக்கூடாது. ஆச்சியோதகம் என்னும் முறையும் லேகநம், ஸ்நேஹநம், ரோபணம் [3] என்று மூவகைப்படும்.

---

1. ஸ்நேஹந ஸேகம்—நெய், பால் முதலிய பதார்த்தங்களால் செய் யப்படும் ஸேகம்; ரோபணஸேகம்—அழற்சி அல்லது விரணம் முதலிய வற்றை ஆற்றுவது; லேகந ஸேகம்—தோஷங்களைக் கரைத்து வெளிப் படுத்தும் ஸேகம்.

2. இவ்வத்தியாயத்தில் வரும் நேத்திர ரோகங்களைப் பற்றிய விவ ரங்களை 50-முதல் 53-ம் பக்கம் வரையிலும் மூலத்திலும், டிப்பணியிலும் பார்த்துக்கொள்க.

3. ஆச்சியோதகத்தில் லேகநம், ஸ்நேஹநம், ரோபணம் என்கிற முறைகள் ஸேக விதியில் கூறப்பட்ட விதமேயாம்.

ஆச்சியோதனத்திற்கான ஔஷதத்தை லேகந சிகித்ஸையில் எட்டுத் துளிகளாகவும், ஸ்நேஹந சிகித்ஸையில் பத்துத் துளிகளாகவும், ரோபணத்தில் பன்னிரண்டு துளிகளாகவும் பிரயோகிக்கவேண்டும். இவ்வௌஷதத்தைச் சீதள காலங்களில் சிறிது உஷ்ணமாகவும், கோடை காலங்களில் குளிர்ச்சியாகவும் உபயோகிக்கவேண்டும்; இம்முறை எல்லாவிடத்திலும் பெரும்பாலும் பொதுவென்றே கருதப்படும். 12—14.

வாதாதி தோஷங்களுக்கேற்ற ஆச்சியோதந ஔஷதங்கள்:—வாத ஸம்பந்தமான நேத்திர ரோகத்தில் கசப்பும் ஸ்நிக்தமுமான ஔஷதத்தை ஸேசநத்திற்கு உபயோகிப்பது நலம்; பித்த வியாதிகளில் மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய ஔஷதங்களையும், கபரோகங்களில் கசப்பும் உஷ்ண வீர்யமும் வறட்சியுமுள்ள ஔஷதங்களையும் உபயோகிக்கவேண்டும். எல்லா ஆச்சியோதந ஔஷதங்களையுமே நூறு மாத்திராகாலம் நேத்திரத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். 15—16½.

பலவித ஆச்சியோதநௌஷதங்கள்:—(1) பில்வாதி பஞ்ச மூலங்களையும், கண்டங்கத்திரி, ஆமணக்கு இவற்றின் வேரையும், முருங்கப்பட்டையையும் க்வாதமாகக் காய்ச்சி வடிக்கட்டி, இளஞ் சூடாயிருக்கையில் ஆச்சியோதநம் செய்ய வாததோஷ ஸம்பந்தமான அபிஷ்யந்தம் தீரும். (2) வேப்பிலைகளைச் சிறிது ஜலம் விட்டு அரைத்து, வெள்ளிலோத்திப் பட்டையின்மேல் அக்கல்கத்தைப் பூசி, நெருப்பில் நன்றாக வதக்கி, அப்பட்டையையும் கல்கம்போல் நசுக்கிப் பிழிந்த சாற்றை நேத்திரத்தில் ஊற்ற வாத தோஷத்தினாலும் இரக்தபித்தத்தினாலும் உண்டான அபிஷ்யந்தம் நிவாரணமாகும். (3) த்ரிபலையை க்வாதம் செய்து ஆச்சியோதநம் செய்தாலும் எல்லா அபிஷ்யந்தங்களும் போய்விடும். (4) மூலைப்பாலை நேத்திரங்களில் விட்டுவந்தால் இரக்தபித்த ஸம்பந்தமான வியாதிகளையும், வாத வியாதிகளையும் போக்கலாம். (5) பாலில் சேர்த்துக் காய்ச்சிய கூஷ்மாண்டீப்பிஸ் என்னும் க்ருதத்வத நேத்திரத்தில் ஆச்சியோதநம் செய்து, அதைச் சிறிது நேரம் துடைக்காமல் வைத்துக்கொண்டிருந்தாலும் வாத-ரக்த ஸம்பந்தமான வியாதி நிவ்ருத்தியாகும். 17—20½.

பிண்டிகா.

பிண்டிகையின் முறை:—நேத்திர ரோகங்களில் உபயோகிக்கக்கூடிய ஔஷதச் சரக்குகளைக் கல்கம்போல் செய்து, பட்டு முதலிய வஸ்திரங்களால் அக்கல்கத்தை நேத்திரங்களின்மேல் வைத்துக் கட்டும்முறையே பிண்டீ அல்லது கவலிகை என்று வழங்கப்படும்; இதை நேத்திரத்திலுண்டாகும் அபிஷ்யந்த வியாதியிலும், விரணங்களிலும் கட்டுவதற்கு உபயோகிக்கலாம். 21½.

அபிஷ்யந்தத்தில் பிண்டிகை உபயோகிக்கும் க்ரமம்:—கபம் கோளாறாய் அதனால் அபிஷ்யந்தமும் அதிமந்தமும் உண்டானால், முதலில் பிணியாளியின் சிரஸ்ஸுக்கு ஸ்நேஹ சிகித்ஸையும், ஸ்வேத சிகித்ஸையும் செய்து முடித்து, தீக்ஷ்ணவீர்யமுள்ள ஔஷதங்களைக்கொண்டு சிரோவிரேசம் செய்விக்க வேண்டும். பிறகு எல்லாவித அதிமந்தங்களிலும் நெற்றியிலுள்ள விரையைக் கீறி இரக்த மோக்ஷணம் செய்வது முறை; அதனால் அதிமந்தம் நீங்காவிட்டால், புருவங்களுக்குமேல் தாஹசிகித்ஸை செய்ய

வேண்டும். அவ்வாறே கற்றறிந்த வைத்தியர் எவ்வித அபிஷ்யந்த ரோகத்திலும் கண்களின்மேல் பிண்டிகையைக் கட்டுவது முறையாம். 22—24.

பலவித பிண்டிகைகள்:—வாதாபிஷ்யந்தத்தைப் போக்க ஸ்நிக்தமானதும், உஷ்ணமுமான பிண்டிகை உபயோகமானது. (1) ஆமணக்கின் வேரையும் இலையையும் பட்டையையும் பிண்டிகையாகச் செய்து வாதாபிஷ்யந்தத்தில் பிரயோகிக்கலாம். (2) நெல்லிக்கனியின் பிண்டிகை பித்தாபிஷ்யந்தத்தைப் போக்கி ஸுக முண்டுபண்ணும்; வெகு நாட்பட்ட வேப்ப மரத்தின் காய்களாவது பித்தாபிஷ்யந்தநோயைப் போக்க பிண்டிகையாக உபயோகிக்கலாம். (3) முருங்கயிலைகளால் செய்த பிண்டிகை கபாபிஷ்யந்தத்தைப் போக்கும். (4) வேப்பிலைகளால் செய்த பிண்டிகை கப-பித்தங்களாலான அபிஷ்யந்தங்களை அகற்றும்; த்ரிபலையின் பிண்டிகையும் கபபித்தங்களாலான அபிஷ்யந்தங்களைத் தீர்க்கும். (5) வெள்ளிலோத்திப் பட்டையைக் காடியில் அரைத்து, நெய்யிற் கிளறி நேத்திரங்களில் கட்ட இரத்தாபிஷ்யந்தம் தீரும். (6) சுக்கையும், வேப்பிலையையும், சிறிது இந்துப்பையும் சேர்த்து அவற்றைக் கல்கமாய் அரைத்து வதக்கி இளஞ்சூடாக நேத்திரங்களிற் கட்டினால் அவற்றின் வீக்கம், அரிப்பு, வலி இவை நீங்கும். 25—29½.

பிடாலகம்.

பிடாலக முறை:—கண்களைச் சுற்றிலும் வெளியில் இமைகளிற் படாமல் பூசப்படும் லேபம் 'பிடாலகம்' எனப்படும். அந்த லேபத்தை முகலேபந விதிப்படி அவ்வளவு கனமாக உபயோகிக்கவேண்டும். பிடாலகப் பிரயோகத்திற்கேற்ற முறைகள் சில அடியிற் கூறப்படுகின்றன. 30½.

பலவித பிடாலகங்கள்:—(1) அதிமதுரம், காவி, இந்துப்பு, மரமஞ்சள், இரஸாஞ்ஜனம் இவற்றை ஸம அளவாக எடுத்து, ஜலம் சேர்த்து ஆட்டி, கண்களுக்கு வெளியில் அவற்றைச் சுற்றிலும் லேபநம் செய்ய ஸகல நேத்திர ரோகங்களும் தீரும். (2) இராஸாஞ்ஜனத்தையும் கடுக்காயையும் சுக்கையும் பச்சிலையையும் கல்கம்போல் அரைத்தாவது பிடாலகமாக உபயோகிக்கலால். (3) சோற்றுக் கற்றாழை, சித்திரமூலம், பச்சிலை, மாதுளந் தளிர் இவற்றின் கல்கத்தையும் அவ்வாறு லேபநம் செய்யலாம். (4) வசம்பு, மஞ்சள், வேப்பம் பட்டை இவற்றையும் பிடாலகமாக உபயோகிக்கலாம். (5) சுக்கையும் காவியையும் அரைத்தும் அவ்விதம் செய்யலாம் (6) வெள்ளிலோத்திப் பட்டையையும் இந்துப்பையும் எரித்து, தேன்மெழுகைச் சேர்த்து நெய்யில் அவற்றை நுண்மையாகப் பொடித்துக் கலந்து அஞ்ஜநமாகவாவது பிடாலகமாகவாவது உபயோகிக்க கண்வலி உடனே தீரும். (7) வேப்பங்காயை இடித்து இரஸம் பிழிந்து, ஒரு சுத்தமான இரும்புப் பாத்திரத்தில் ஊற்றி நன்றாகக் குழப்பவும்; அது சிறிது குழம்புபோல் ஆனபிறகு அதைக் கண்களைச் சுற்றிலும் லேபநம் செய்ய, கண்வலி சாந்தமாகும். (8) மிளகைப் பொடி செய்து, கரிசிலாங்கணணிச் சாற்றில் அரைத்து நேத்திரத்தைச் சுற்றிலும் லேபநம் செய்ய அர்மங்கள் என்னும் வியாதிகள் அடியோடு தூலையும். (9) அஞ்ஜநகாமிகா என்னும் ரோகத்தில் முதலில் ஸ்வேதசிகித்ஸையினால் அதைக் கரைத்து, அப்பால் மனச்சிலை, ஏலம், நதம் என்கிற வாஸனைத் திரவ்வியம், இந்துப்பு இவற்றைப் பொடி செய்து தேன் விட்டுக் கூட்டி லேபநமாக உபயோகிக்கலாம். 31-37.

தர்ப்பணம்.

தர்ப்பணமும் அதற்கேற்ற கண்ணோயீகளும் :-அப்பால் 'தர்ப்பணம்' என்னும் மற்றொரு நேத்திர சிகித்ஸை கூறப்படுகிறது; கண்களுக் குண்டா கும் சில கோளாறுகளைப் போக்கி அவற்றிற்கு வேண்டிய வன்மையைக் கொடுத்து த்ருப்தி யுண்டாக்கும் முறையே 'தர்ப்பணம்' எனப்படுகின்றது. எவருடைய நேத்திரம் ரூக்ஷமாகவும்,[1] வறட்சி யுடையதாகவும், வக்கிரமாக வும், கலங்கியதாகவும், இமை மயிர்களுதிர்ந்ததாகவும், ஹிரோத்பாதம் க்ருச்சிரோன்மீலனம் திமிரம் அர்ஜுனம் சுக்லம் அபிஷ்யந்தம் அதிமந்தம் சுஷ்காக்ஷிபாகம் வாதவிபர்யயம் என்னும் ரோகங்களுடையதாகவும், வீக் கங் கொண்டதாகவும் இருக்கின்றதோ அவர்களுடைய கண்களுக்கு 'தர்ப்பணம்' என்னும் இச்சிகித்ஸை எற்றதாகும்; நேத்திர ரோகங்களை யறிவதில் நிபுணராயிருப்பவர் அவ்வித நோய்களில் இம்முறையைப் பிரயோகிக்க வேண்டும். 38—40.

தர்ப்பணத்திற்குத் தகாத காலம் முதலியது :—மாரி காலத்திலும், அல்லது மேகத்தினால் சூரியன் மறைக்கப்பட்ட நாட்களிலும், கோடை காலத்திலும், அல்லது மிகச் சூடான ஸமயங்களிலும், குளிர் காலத்திலும், பிணியாளிக்கு மனக்கவலை தேகத்தில் அசதி தலைச்சுற்றல் இவை உண்டாயிருக்கும்போதும், உபத்திரவங்கள்[2] அடங்காமலிருக்கையிலும் தர்ப்பண சிகித்ஸையைச் செய்வது உசிதமல்ல. 41.

நேத்திர தர்ப்பண முறை :—அதிக காற்றோட்ட மில்லாததும், வெயில் தும்பு தூசி முதலியவை யற்றதுமான ஒரு பிரதேசத்தில் பிணியாளியை மல்லாந்து சயனிக்கச் செய்து, ஜலம் விட்டுப் பிசைந்த உளுத்தமாவைக் கொண்டு இரண்டு கண்களைச் சுற்றிலும் தனித்தனியே இரண்டு வரம்பு களைச் சிறிது உயரமாகவும், கெட்டியாகவும், ஒன்றுக்கொன்று ஸம்பந்தப் படாதவையாகவும், மேடுபள்ளமில்லாமல் ஸம உயரமுடையனவாகவும், வட்டமாகவும் கட்டவேண்டும். ஆடையில்லாத நெய்யை இளஞ்சூடான ஜலத்தில் வைத்து உருக்கி, அதை அவ்வரம்புகளுக்குள் ஊற்றலாம்; அல் லது சததௌத க்ருதத்தையாவது, பாலைச் சிலுப்பியெடுத்த வெண்ணெயா லாகிய நெய்யையாவது அக்கண்களின் மெல் ஊற்றலாம்; முதலில் கண் களை மூடிக்கொள்ளச் செய்து, அவற்றின் மேல் இரெப்பைகள் அமிழும் வரையில் அவ்வாறு நெய்யை ஊற்றுவது முறை; பிறகு மெல்ல மெல்ல கண்களைத் திறக்கவேண்டும். 42—44½.

தர்ப்பணௌஷதம் ஊறவேண்டிய கால அளவு :—வர்த்ம ரோகங் களில் நூறு மாத்திராகாலமும், கபதோஷம் கலந்து அது சுத்தமான நிலைமையிலும் நேத்திரஸந்திகளைப்பற்றிய வியாதிகளிலும் ஐன்னூறு மாத்திராகாலமும், அதிமந்தத்தில் ஆயிரமாத்திராகாலமும் க்ருதம் முதலிய தர்ப்பணௌஷதங்களை நேத்திரங்களில் ஊறி நிற்கும்படி வைத்திருக்க தர்ப்பணம் என்னும் க்ரியை நிறைவேற்றப்பட்டதாகும். 45—47.

தர்ப்பணத்தினால் பிரகோபித்த கபத்தைக் கழித்தல் :—ஸ்நேஹத் தின் வீர்யத்தால் கிளப்பிவிடப்பெற்ற கபத்தை அப்பிணியாளியின் அவ்வவ

1. வறட்சி என்றால் ஜலப்பசையற்றது; ரூக்ஷம்-என்றால் எண் ணெய் அல்லது கொழுப்புப் பசையற்றிருப்பது.
2. உபத்திரவம்—31-வது பக்கம் பார்க்க.

யவத்திலிருந்து பிறகு வெளிப்படுத்த முயலவேண்டும்; அதற்காக யவதானி யத்தைச் சமைத்து, அவ்வன்னத்தினால் சுடச் சுடக் கண்களைச் சுற்றிலும் ஸ்வேத சிகித்ஸையைச் செய்யலாம்; அல்லது தூமபானம் செய்வித்தா வது அக்கபத்தைக் கழிக்கலாம். 48.

எத்தனை நாட்கள் தர்ப்பணம் செய்யவேண்டும்? :—நேத்திரங்கள் ஆரோக்கியநிலைமையைப் பெறுமளவும் இச்சிகித்ஸையைச் செய்யவேண்டும்; அவை ஒரே தினத்தில் ஸுகமடைந்தாலும் இச்சிகித்ஸையை நிறுத்திவிட லாம்; இல்லாவிடில் மூன்று நாட்களாவது ஐந்து நாட்களாவது தர்ப்பண சிகித்ஸை செய்து வரவேண்டும்; அதற்குமேல் செய்யக்கூடாது. 48½.

தர்ப்பணம் நிறைவேறியதன் குறிகள் :—நேத்திரங்கள் தர்ப்பண சிகித்ஸையினால் திருப்தியடைந்தனவென்பதற்கு அடியிற் கூறப்படுபவை குறிகளாகும் :—ஏற்ற காலங்களில் ஸுகமாக நித்திரையுண்டாய், தகுந்த நேரத்தில் விழிப்புமுண்டாகும்; கண்கள் நிர்மலமாய் இயற்கை நிறங் கொள்ளும்; தொந்தரவுகள் நிவ்ருத்தியாய் கண்கள் ஸுகம் பெற்றிருக் கும். 49, 50.

முறை தவறிய தர்ப்பணக் குறிகளும் பரிஹாரங்களும் :—இனி முறை தவறிய தர்ப்பண சிகித்ஸையினாலான குறிகள் கூறப்படுகின்றன :—அளவு மீறி தர்ப்பண சிகித்ஸை செய்யப்படுமானால் கண்களில் நீர் கசியும்; அவை கனத்துத் தோற்றும்; மிகவும் ஸ்நிக்தமாயிருக்கும். வேண்டியளவு தர்ப்பண சிகித்ஸை செயயப்படாவிடில் கண் ரூக்ஷமாயிருக்கும்; கண்ணீர் அடிக்கடிக் கசிந்து நேத்திரம் கலக்கங் கொள்ளும்; வியாதி நிவ்ருத்தியாகா மல் வலியுடன் கூடியதாகவுமிருக்கும். அளவு மீறிய தர்ப்பணத்தினாலான கோளாறுகளுக்கு உடனே ரூக்ஷகுணமுண்டாகும் சிகித்ஸையையும், வேண் டியவளவு செய்யப்படாத ஹீனதர்ப்பணத்திற்கு அதற்கு மாறுக ஸ்நிக்த குணந்தரும் சிகித்ஸையையும் செய்வது அக்கோளாறுகளைப் போக்கும் பரி ஹாரமுறையாம். 51½.

புடபாகம்.

புடபாக ஔஷத முறை :—இனி புடபாகம் செய்யும் க்ரமத்தைக் கூறுவோம் :—[1] இரண்டு பலம் மாம்ஸத்தை யெடுத்து, நெய் முதலிய ஸ்நேஹவஸ்துக்களையும் சிறிது சேர்த்து, நன்றாக அரைத்து இரண்டு ஸம அளவான பிண்டங்களாக உருட்டவும். இப்புடபாக கல்பனையில் கடின பதார்த்தங்கள் ஒரு பலமளவு சேர்க்கவேண்டுமானால், அவற்றை இடித்து ஆட்டுவதற்கான த்ரவ பதார்த்தங்களை நான்கு பலம் சேர்க்கவேண்டுமென் பது பொது விதியாம். அவ்வாறு ஆட்டியெடுத்த வஸ்துக்களை ஒன்றாகச் சேர்த்து உருட்டி, ஏதேனும் இலைகளால் அவற்றைச் சுற்றி மூடி, புடபாக முறைப்படி அக்னியிற் பக்குவம் செய்து, அதையெடுத்துப் பிழிந்து, அதன் ஸ்வரஸத்தைக் க்ரஹிக்க வேண்டும். 52—54.

புடபாக ஸ்வரஸத்தை நேத்திரத்தில் ஊற்றவேண்டிய முறை :—மேற்கூறியபடி க்ரஹித்த அப்புடபாக ஸ்வரஸத்தைக்கொண்டு தர்ப்பண சிகித்ஸையில் கூறியவிதம் முறை தவறாமல் நேத்திரங்களுக்குச் சிகித்ஸை

1. மத்யமகண்டம் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பலவித புடபாக முறைகளைப்பார்க்கவும்.

செய்யவேண்டும்; என்முல் பிணியாளியை மல்லாந்துப் படுக்கச்செய்து, த்ருஷ்டியின்[1] நடுவில் அந்த ஸ்வரஸத்தை விடவேண்டும். இச் சிகித்ஸையை அவசியமான வரையில் தினந்தோறும் செய்துவருவது நலம். 55.

மூவகைப் புடபாகௌஷதங்கள்:—இப்புடபாகௌஷதம் ஸ்நேஹநம், லேகநம், ரோபணம் என்று மூவகைப்படும். அவற்றுள் மிக்க ரூக்ஷத் தன்மை யடைந்த நேத்ரத்திற்கு ஸ்நேஹநமும், மிகவும் ஸ்நிக்தத் தன்மையைப் பெற்ற நேத்ரத்திற்கு லேகநமும் ஏற்றதாகும்; வேறொரு ரோபணபுடபாகௌஷதமானது பித்த தோஷத்தினுலுண்டான கோளாறுகளையும், இரத்தவிகாரங்களையும், விரணங்களையும், வாத தோஷத்தையும் போக்குவதுடன், த்ருஷ்டியின் சக்தியையும் அதிகரிக்கச் செய்ய வல்லது. நெய், மாம்ஸம், நிணநீர், மஜ்ஜை, கொழுப்பு, இனிய சுவையுள்ள வேறு வித ஔஷதங்கள் இவற்றைக்கொண்டு பக்குவம் செய்யப்பட்ட புடபாகௌஷதம் **ஸ்நேஹந புடபாகம்** ஆகும். இவ்வித ஔஷதத்தை நேத்ரங்களில் இருநூறு மாத்ராகாலம் ஊறும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஜாங்கல பூமியில் வஸிக்கும் மிருகங்களுடைய கல்லீரல், மாம்ஸம் இவற்றை லேகநகுணமுள்ள பதார்த்தங்களுடன் சேர்த்துக் கலக்கவும்; பீறகு உருக்கிரும்பின் பொடி, செம்புப் பொடி, சங்கின் பொடி, பவளப் பொடி, இந்துப்பு, கடல் நுரை, அன்னபேதி, ஸ்ரோதோஞ்ஜனம்[2] இவற்றையும் பொடித்து, தயிரின்மேலுள்ள ஆடையினுல் அவ்வனைத்தையும் கல்வத்தினுல் ஆட்டி, முன்போல் பிண்டம் செய்து, புடபாகம் பண்ணி யெடுத்தபிறகு அதன் ரஸத்தை லேகநமாக நேத்ரங்களில் இடலாம். லேகநௌஷதத்தை நேத்ரங்களில் நூறு மாத்ராகாலம் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். முலேப்பால், ஜாங்கல தேசமிருகங்களின் மாம்ஸம், தேன், நெய், கசப்பான ஔஷதிகள் இவற்றைக்கொண்டு புடபாக முறைப்படி பக்குவம் செய்த ஔஷதம் ரோபணமாக உபயோகிக்கப்படலாம். இதில் லேகநத்தைவிட மூன்று மடங்கு காலம் ஔஷதத்தை நேத்ரங்களில் ஊறும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். 56—60½.

முறை தவறிய புடபாகௌஷத சிகித்ஸைக்குப் பரிஹாரம்:—புடபாகௌஷதங்களைக் கொண்டு செய்யப்படும் சிகித்ஸையானது தர்ப்பணத்திற்கு ஏற்ற முறையாகவே இருப்பதால், இதில் முறை தவறிய சிகித்ஸைகளால் கோளாறுகள் நேர்ந்தால், அவற்றிற்கும் தர்ப்பணத்திற்குக் கூறிய பரிஹார முறைகளே தகுந்தனவாம். 61.

அஞ்ஜநம்.

அஞ்ஜநப் பிரயோகத்திற்கேற்ற காலம்:—முற்கூறிய சிகித்ஸாக்ரமங்களால் நேத்ர தோஷங்கள் ஒருவாறு பக்குவநிலைமைக்கு வந்த பிறகு, முறைப்படி தகுந்த வேளையில் அஞ்ஜநவிதியை நிறைவேற்றவேண்டும். ஹேமந்த ருதுவிலும், சிசிரருதுவிலும் பகல் நேரத்தில் அஞ்ஜநம் பிரயோகிக்கவேண்டும்; க்ரீஷ்மருதுவிலும், சரத் ருதுவிலும் காலையிலிரவது

1. த்ருஷ்டி—கண்களில் கருவிழிகளின் நடுவிளுள்ள பாபா (pupil) எனப்படும் பாகம்.

2. ஸ்ரோதோஞ்ஜனம்—இதை ஹிந்தி முதலான பாஷையில் 'ஸுர்மா' என்று வழங்குகின்றனர்; சிலர் தமிழில் இதை நீலாஞ்ஜனம் என்பார்கள்; ஆங்கிலத்தில் Sulphurate of antimony என்பார்.

மாலையிலாவது அஞ்ஜநகர்மம் செய்யலாம்; வர்ஷருதுவில் ஆகாயம் மேகத்தினுல் மூடப்பட்டிருக்கையிலும், அதிக வெயில் காயும்போதும் அஞ்ஜநமிடுவது பிசகு: வஸந்த ருதுவில் இதை எந்த நேரத்திலும் செய்யலாம். 62, 63.

குணத்தில் மூவகைப்பட்ட அஞ்ஜநங்கள்:—அஞ்ஜநமானது லேகநம், ரோபணம், ஸ்நேஹநம் என்று மூன்று விதமாம். அவற்றுள் லேகநாஞ்ஜநம் க்ஷாரங்களாலும், தீக்ஷ்ணவீர்யமுள்ள வேறு பதார்த்தங்களாலும், அம்லரஸமுள்ள வஸ்துக்களாலும் செய்யப்படும். ரோபணாஞ்ஜநமென்பது துவர்ப்பும், கசப்புமான வஸ்துக்களால் செய்யப்படுவதாம்.[1] ஸ்நேஹநாஞ்ஜநம் மதுரரஸமுடையதாகவும், விசேஷ ஸ்நேஹஸம்பந்தமுடையதாகவும் இருக்கவேண்டும்; அதுவே ப்ரஸாதநாஞ்ஜநமாகவும் கருதப்படும். 64, 65.

